
# எபேசியர்

## விளக்கவுரை

**- EPHESIANS COMMENTARY -**



"கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்;
இது உங்களால் உண்டானதல்ல,
இது தேவனுடைய ஈவு" (எபே 2:8).

**Dr. பி.வி.தியாகராஜ்**

# எபேசியர்

- விளக்கவுரை -

# EPHESIANS

COMMENTARY

பி.வி. தியாகராஜ்

**Ephrath Publications**

54/A, Lakshmi Apartments,
Sangam Colony, Kottivakkam, Chennai - 600 041.
Phone: 044-24485464, Mobile: 0-98415 85547
Email: pv_thiagaraj@yahoo.com

**Frist Edition :** April 2010

**Reprint :** September 2018

**Printed by :**
Captain Press
Chennai - 600 041.

**Typeset by :**
Smart Fonts
Chennai - 600 041

**Price : Rs. 230/-**

# அர்ப்பணம்

தகுதியற்ற எங்களை
தமது கிருபையினால் இரட்சித்து
ஆச்சரியமாய் வழிநடத்தி, ஆசீர்வதித்து,
வேதத்தின் மகத்துவங்களை வெளிப்படுத்தி
அதைப் போதிக்கவும், எழுதவும் தகுதிப்படுத்திய
ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு
இந்நூலை குடும்பமாக அர்ப்பணிக்கிறோம்.

P.V. தியாகராஜ், M.A.,
பிரிசில்லா தியாகராஜ், B.A.,

நிஷா ஜார்ஜ், M.A., M.Phil.,
ஜார்ஜ் V. K. அய்ரூர், M.A.,

T. அமல்நாத் வேதா, M.A.,
நவீனா அமல்நாத், M.C.A.,

T. பிரேம்நாத் வேதா, B.Sc., M.B.A.,
ஷீபா பிரேம்நாத், M.A.,

அபிஷேக், ஜாஷ்வா,
எரிக், பிரிஷா,
கெவின் பிரேம் வேதா

## ஆசிரியரின் பிற நூல்கள்

| | விலை ரூ. |
|---|---|
| கிருபையின் மேல் கிருபை | 90.00 |
| பரிசுத்த ஆவியானவர் | 100.00 |
| மலைப்பிரசங்கம் | 200.00 |
| ரோமர் - விளக்கவுரை | 400.00 |
| வெளிப்படுத்தின விசேஷம் - விளக்கவுரை | 350.00 |
| எபிரெயர் - விளக்கவுரை | 400.00 |
| உனக்காக நான் மரித்தேன் | 250.00 |
| 1&2 தெசலோனிக்கேயர் | 275.00 |
| 1 யோவான் - வேதபாடம் | 45.00 |
| விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் | 10.00 |
| பத்துக் கற்பனைகள் | 20.00 |
| உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக | 25.00 |
| உலகின் ஒளி இயேசு | 100.00 |

The Revelation - Commentary in English (தயாரிப்பில்)

## ஆசிரியர் உரை

"நிருபங்களின் அரசி" என்று அழைக்கப்படும் எபேசியர் நிருபம் வேதபண்டிதர்களினாலும், விசுவாசிகளினாலும், ஊழியக்காரர்களினாலும் அதிகமாக விரும்பப்படும் வேத புத்தகங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

தமிழ் வேதாகமத்தில் எபேசியர் முதல் வசனத்தில் "எபேசுவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறதாவது" என்று சொல்லப்பட்டிருந்தாலும், முதல் இரண்டு நூற்றாண்டுகளின் கிரேக்க மொழியில் உள்ள நிருபத்தில் "எபேசுவிலே" என்ற வார்த்தை காணப்படவில்லை. தேசமெங்கிலுமுள்ள எல்லா திருச்சபைகளுக்கும் பவுல் எழுதிய கடிதமாகவே இது கருதப்படவேண்டும் (கொலோ 4:16).

இது ஒரு நிருபத்தைப் போல் இல்லாமல் ஆவிக்குரிய மூல உபதேசங்கள் அடங்கிய ஒரு பிரசங்கத்தைப் போலவும், ஒரு ஆழமான ஜெபத்தைப் போலவும், தேவனைப் புகழும் துதிபாடலைப் போலவும் அமைந்திருப்பதைப் பார்க்கிறோம். மற்ற நிருபங்களில், பவுல் தனிப்பட்ட நபர்களை வாழ்த்துதல், விசாரித்தல், சக ஊழியரை அறிமுகப்படுத்துதல், குறிப்பிட்ட சபைகளில் காணப்படும் குறைபாடுகளைக் குறித்துப் பேசுதல் ஆகியவை காணப்படும். எபேசியர் நிருபத்தில் இத்தகைய குறிப்புகள் எதுவும் இல்லை என்பதினால், கிறிஸ்துவின் வருகைவரை உலகமெங்கும்

உருவாகவிருக்கும் சபைகளை மனதில் கொண்டு பவுல் இந்த நிருபத்தை எழுதியிருப்பதாக எடுத்துக் கொள்ளலாம்.

சத்திய உபதேசங்கள் அடங்கிய நிருபத்தின் முதல் பகுதியில் மனித இனத்தைக் குறித்த தேவனுடைய நித்திய தீர்மானம் என்ன என்பதை பவுல் அறிவிக்கிறார். அதை அவர் தன் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக யூதர்களையும் புறஜாதியாரையும் உள்ளடங்கிய திருச்சபையை ஸ்தாபித்து, அதை எவ்வாறு செயல்படுத்துகிறார் என்பதை நாம் தொடர்ந்து அறிந்து கொள்கிறோம். இந்த இரகசியம் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுக்கு மறைக்கப்பட்டதாக இருந்தது.

இந்த மகத்துவமான வெளிப்பாட்டினிமித்தம், சபையார் தங்கள் குடும்பத்திலும், வேலை ஸ்தலம் மற்றும் சமுதாய அமைப்புகளில் ஒருவரோடொருவர் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்ற ஆலோசனை நிருபத்தின் பின்பகுதியில் அறிவிக்கப்படுகிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் எதிர்கொள்ளும் ஆவிக்குரிய போராட்டத்தில் வெற்றிபெறுவது எப்படி என்பதை அறிவித்தபின், சபையாரை வாழ்த்தி பவுல் நிருபத்தை நிறைவு செய்கிறார்.

“கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு” (எபே 2:8) என்ற மகத்துவமான அறிவிப்பு இந்த நிருபத்தில் காணப்படுகிறது.

கி.பி. 60-63ல் ரோமாபுரி பட்டணத்தில் சிறைப்பட்டிருந்த நாட்களில் அப்போஸ்தலனாகிய பவுல் எழுதிய எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர், பிலெமோன் ஆகிய நான்கு நிருபங்களும் “சிறைச்சாலை நிருபங்கள்” என்று அழைக்கப்படுகின்றன. எபேசியரில் சொல்லப்பட்ட பல காரியங்களை கொலோசெயரிலும் பவுல் எழுதியிருக்கிறார் என்பது மட்டுமல்ல, தீகிக்கு என்ற சகஊழியரே அவைகளை சபைகளுக்குக் கொண்டுவருகிறார் (எபே 6:21, கொலோ 4:7).

எபேசியர் நிருபத்தை சபைகளிலும், என்னுடைய வீட்டில் வியாழக்கிழமைகளில் நடக்கும் கூட்டங்களிலும் வேதபாடமாக எடுக்கும் கிருபையை தேவன் எனக்கு வழங்கியமைக்காக அவருக்கு நான் நன்றி சொல்கிறேன். அதற்கென்று நான் சேகரித்த குறிப்புகளை புத்தகவடிவில் கொண்டுவந்தால் பலருக்கும் ஆசீர்வாதமாக இருக்கும் என்று நினைத்தேன்.

2006ல் இந்த முயற்சியை மேற்கொண்டேன் என்றாலும், தொடர்ச்சியாக எழுதமுடியாதபடி பல தடைகள் உண்டாயின. மிகுந்த மனச்சோர்வுடன் என்னுடைய எழுத்து ஊழியத்தை நிறுத்திவைத்து விட்டேன். 2008ல் என்னுடைய பேத்தி பிரிஷாவுக்கு செய்யப்பட்ட அறுவைச் சிகிச்சையில் தேவன் அவளுக்குக் கொடுத்த தெய்வீக சுகத்தினிமித்தம், ஒரு பொறுத்தனையாக இந்த விளக்கவுரையை எழுதிமுடிக்க தீர்மானம் செய்தேன்.

ஆனால் எபேசியர் 6-வது அதிகாரத்தை எழுதிக்கொண்டிருந்த வேளையில் மாரடைப்பு காரணமாக ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டேன். இருதயத்தில் பதினொரு அடைப்புகள் இருந்ததையும், ஒரு இருதய வால்வு முற்றிலுமாக பழுதடைந்திருப்பதையும் வைத்தியர்கள் கண்டுபிடித்து அக்டோபர் 15, 2009ல் அறுவைச் சிகிச்சை (artery bypass graft surgery with aortic valve replacement) செய்தார்கள். மருத்துவர்கள் ஆச்சரியப்படும்படியாக உபா 30:20ன்படி தேவனே எனக்கு ஜீவனும் தீர்க்காயுசுமானவராய் இருந்தார். அவர் எனக்கு நியமித்த இந்த எழுத்து ஊழியத்தை தொடர்ந்து செய்ய என்னை உயிர்ப்பித்து, பெலன் தந்து, சாட்சியாக நிறுத்தினார். அவருடைய மகத்துவமான நாமம் மகிமைப்படுவதாக.

நான் உடல்நிலை முற்றிலும் பாதிக்கப்பட்டு ஆறுமாதங்கள் படுக்கையில் இருந்தநிலையில், எனக்கும் குடும்பத்தாருக்கும் ஆற்றவேண்டிய பணிசிரமங்களுக்கு மத்தியிலும், ஆண்டவருடைய இந்த எழுத்துஊழியத்தைத் தனது ஆலோசனையினாலும், அறிவினாலும் ஜெபத்தினாலும் தாங்கி, நான் எழுதிய ஆயிரக்கணக்கான பக்கங்களை வாசித்து, அச்சுப்பிரதிகளில்

பொறுமையுடன் பிழைத்திருத்தம் செய்து புத்தகவடிவில் கொண்டுவர பெரிதும் ஒத்தாசையாக இருந்துவரும் என் அன்பு மனைவி பிரிசில்லாவுக்காக நான் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.

இந்தப் புத்தகத்தை டைப்செட் செய்து கொடுத்த ஸ்மார்ட் பாண்ட்ஸ் நிறுவனத்திற்காகவும், சிறந்த முறையில் அச்சிட்டுக் கொடுத்த கேப்டன் பிரஸ் நிறுவனத்திற்காகவும் நான் தேவனுக்கு நன்றி சொல்கிறேன். எனக்காகவும், என் குடும்பத்தாருக்காகவும், ஊழியங்களுக்காகவும், ஜெபத்தில் தாங்கிய சகோதர சகோதரிகளை தேவன் ஆசீர்வதிப்பாராக.

*தேவனுடைய அளவற்ற அன்பினாலும் மாறாத கிருபையினாலும் எபிரெயர், தெசலோனிக்கேயர் புத்தகங்களின் விளக்கவுரை, மற்றும் உனக்காக நான் மரித்தேன் போன்ற புத்தகங்கள் வெளியிட தேவன் உதவிசெய்தார். அவருடைய பரிசுத்த நாமம் மகிமைப்படுவதாக.*

**P.V. *தியாகராஜ்***

*54/A, லட்சுமி அபார்ட்மெண்ட்ஸ்,*
*சங்கம் காலனி, கொட்டிவாக்கம்,*
*சென்னை–600041.*
*போன் : 0–98415 85547*

# பொருளடக்கம்

ஆசிரியர் உரை . . . . . . . . . . . . . . . . . . . . vii

அதிகாரம் 1 . . . . . . . . . . . . . . . . . . . . . 1

அதிகாரம் 2 . . . . . . . . . . . . . . . . . . . . . 64

அதிகாரம் 3 . . . . . . . . . . . . . . . . . . . . 125

அதிகாரம் 4 . . . . . . . . . . . . . . . . . . . . 175

அதிகாரம் 5 . . . . . . . . . . . . . . . . . . . . 256

அதிகாரம் 6 . . . . . . . . . . . . . . . . . . . . 328

முடிவுரை . . . . . . . . . . . . . . . . . . . . 375

# அதிகாரம் 1

## பவுலின் வாழ்த்துதல் (1:1,2)

**தேவனுடைய சி த்தத்தினாலே இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுல், எபேசுவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறதாவது: (எபே 1:1)**

அப்போஸ்தலனாகிய பவுல், தன்னுடைய வழக்கத்தின்படி, நிருபத்தின் ஆரம்பத்திலேயே, எழுதுகிற தன்னை, வாசகர்களுக்கு அறிமுகப் படுத்துவதைப் பார்க்கிறோம். "தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுல்" என்ற வாக்கியம் "Paul, an apostle of Christ Jesus, through the will of God" என்று ஆங்கிலத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நாட்களில் கடிதங்கள் (நிருபங்கள்) எழுதுபவர்கள் துவக்கத்திலேயே தங்கள் பெயர்களைக் குறிப்பிடும் பழக்கம் இருந்தது. 1கொரிந்தியர், 2கொரிந்தியர், கலாத்தியர், பிலிப்பியர், கொலோசெயர், 1தெசலோனிக்கேயர், 2தெசலோனிக்கேயர், பிலேமோன் ஆகிய நிருபங்களில் பவுல் தன்னுடைய உடன் ஊழியக்காரர்களின் பெயர்களையும் தனது பெயரோடு இணைத்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம்.

தேவனுடைய அழைப்பைப் பெற்றுக்கொண்டபின் எபிரெய மொழியில் தன்னுடைய பெயரான சவுல் என்பதை பவுல்

பயன்படுத்தவில்லை. "தேவனுடைய சித்தத்தினாலே (1கொரி 1:1, 2 கொரி 1:1) இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுல்" என்பதே தன்னைக்குறித்த அவருடைய அறிமுகம். மற்றபடி அப்போஸ்தல ஊழிய அழைப்பைப் பெற அவருக்கு எந்தத் தகுதியும் இல்லை (1கொரி 15:9, கலா 1:13-15, 1தீமோ 1:12-16). எந்த மனிதனும் தன்னுடைய சித்தத்தின்படி ஊழியத்துக்கு வரக்கூடாது. எந்த சபையும் தன்னிச்சையாக ஒருவனை ஊழியத்துக்கு நியமிக்கக்கூடாது. பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் துரோகம் செய்து மரித்தபோது ஆதி அப்போஸ்தல சபை மத்தியா என்ற சீஷனை அவனுடைய இடத்தில் அப்போஸ்தலனாக நியமித்தது (அப் 1:26). அந்த சபை செய்த முதல் தவறு இதுவாகத்தான் இருக்கவேண்டும். அதனால்தான் வேதத்தில் வேறெந்த இடத்திலும் அவரைக் குறித்துச் சொல்லப்படவில்லை. இந்த நாட்களிலும் பல திருச்சபைகள் தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ளாமலேயே செயல்படுவதைப் பார்க்கிறோம்.

பவுல் தேவனுடைய சித்தத்தின்படி, அவரால் அழைக்கப்பட்டு நியமிக்கப்பட்ட ஊழியன். தமஸ்கு பட்டணத்து அனனியா என்ற சீஷனிடம் கிறிஸ்து சொல்கிறார், "அவன், (பவுல்) புறஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான்" (அப் 9:15). அதனால்தான் பவுல் தைரியமாகச் சொல்கிறார், "மனுஷராலுமல்ல, மனுஷன் மூலமாயுமல்ல, இயேசு கிறிஸ்துவினாலும், அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின பிதாவாகிய தேவனாலும் அப்போஸ்தலனாயிருக்கிற பவுல்" (கலா 1:1). தமஸ்கு பட்டணத்துக்குப் போகும் வழியில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவரைச் சந்தித்தபோது பவுல் பேசிய முதல் வார்த்தை "ஆண்டவரே, நீர் யார்?" இரண்டாவது வார்த்தை, "ஆண்டவரே, நான் என்ன செய்யச்சித்தமாயிருக்கிறீர்" (அப் 9:5,6). தேவனுடைய சித்தத்தின்படி அழைக்கப்பட்டு, அவருடைய சித்தத்தை மட்டுமே நிறைவேற்ற ஆயத்தமாயிருந்த பவுல் தேவனால் வல்லமையாக பயன்படுத்தப்பட்டதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

"என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" *(மத் 26:39)* என்ற கிறிஸ்துவின் அறிக்கை, பிதாவின் சித்தத்துக்கு அவர் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார் என்பதை வெளிப்படுத்துகிறது. மத்தேயு *12:50*-ல் அவர் சொல்கிறார், "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான்". இந்த விளக்கவுரையை வாசிக்கும் நீங்கள் ஊழியம் செய்கிறவர்களாக இருக்கலாம், விசுவாசிகளாக இருக்கலாம், உங்களுடைய காரியங்கள் ஒவ்வொன்றும் தேவனுடைய சித்தத்தின்படி இருக்கிறதா என்பதை ஆராய்ந்து பாருங்கள். "கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள்" *(எபே 5:17)*. எபேசியர் 6:6-ல் பவுல் சொல்கிறார், "மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்". இந்த கடைசி நாட்களில் பார்வைக்கு ஊழியம் செய்யும் ஊழியக்காரர்கள் பெருகிவருகிறார்கள்.

தான் தேவனுடைய சித்தத்தின்படியே, அவருடைய அப்போஸ்தலனாக செயல்படுவதை பவுல் அடுத்ததாக குறிப்பிடுகிறார். ரோமர் *1:1*-ல் தன்னை "அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவன்" என்கிறார். "புறஜாதிகளுக்கு நான் அப்போஸ்தலன்" என்கிறார் *(ரோமர் 11:13)*. "நான் அப்போஸ்தலனென்று பேர்பெறுவதற்குப் பாத்திரன் அல்ல" என்று *1* கொரி *15:9*-ல் சொன்னாலும் 2 கொரி *11:5*-ல் "மகா பிரதான அப்போஸ்தலரிலும் நான் ஒன்றிலும் குறைவுள்ளவனல்லவென்று எண்ணுகிறேன்" என்கிறார். பவுல் தன்னுடைய அனைத்து நிருபங்களிலுமே முதல் வசனத்தில் தன்னுடைய அப்போஸ்தல அழைப்பைப் பற்றிக் குறிப்பிடத் தவறுவதில்லை *(ரோமர், 2 கொரி, கலா, எபே, கொலோ, 1 தீமோ, 2 தீமோ)*. தேவனால் அழைக்கப்பட்ட அவர் அவருடைய ஊழியத்தை நிறைவேற்றும்படியாக தேவனால் அனுப்பப்பட்டார். அப்போஸ்தலர் என்ற வார்த்தை அனுப்பப்பட்டவர் என்று பொருள்படும். யோவான் *8:42*-ல் இயேசு

சொல்கிறார், "நான் சுயமாய் வரவில்லை, அவரே என்னை அனுப்பினார்".

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் பிதாவாகிய தேவனால் இந்த பூமிக்கு வந்து, ஊழியம் செய்யும்படியாக அனுப்பப்பட்டவர் (யோ 4:34, 6:57, 10:36, 17:3) என்பதால் எபி 3:1-ல் இயேசு அப்போஸ்தலர் என்று அழைக்கப்பட்டார். தன்னுடைய ஊழியத்தைத் துவங்கியதும் தன்னுடைய சீஷர்களில் "பன்னிரண்டு பேரைத் தெரிந்துகொண்டு அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார்" (லூக்கா 6:13). "பிரசங்கம் பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பினார்" (மாற்கு 3:14). தன்னுடைய பிதாவிடம் அவர் சொல்கிறார், "நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்" (யோ 17:18). மரித்து, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்த இயேசு தன் அப்போஸ்தலர்களிடம் சொல்லுகிறார், "பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்" (யோ 20:21). ரோமர் 1:6,7; 1 கொரி 12:28 வாசித்து அப்போஸ்தல ஊழியத்தின் மேன்மையை அறிந்துகொள்ளுங்கள்.

தன்னை அறிமுகப்படுத்திய பவுல் அடுத்ததாக தன்னுடைய நிருபம் யாருக்கு எழுதப்பட்டது என்பதை அறிவிக்கிறார். எபேசு பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற (pistoi) பரிசுத்தவான்களுக்கு (hagioi) பவுல் இந்த நிருபத்தை எழுதுகிறார். எபேசு பட்டணத்தில் பவுல் நடப்பித்த மகத்துவமான ஊழியங்கள் அப் 18:18-21, 19:2-41, 20:17-35 ஆகிய மூன்று இடங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது. மூன்று வருடங்களுக்கு மேல் பவுல் எபேசுவில் தங்கியிருந்தார் என்று பாக்கிறோம். சில மூலப்பிரதிகளில் "எபேசுவிலே" என்ற வார்த்தை சொல்லப்படவில்லை என்பதால், உலகமெங்கும், பல்வேறு காலகட்டங்களில் செயல்படும் எல்லா சபைகளுக்கும் பவுல் இந்த நிருபத்தை எழுதியிருப்பதாக எடுத்துக்கொள்ளலாம்.

ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்கள் அத்தனை பேருக்குமே இந்த நிருபம்

எழுதப்பட்டிருக்கிறது. "கிறிஸ்துவுக்குள்" என்ற வார்த்தையை சுமார் 160 முறைகள் பவுல் பயன்படுத்தியுள்ளதாக கணக்கிட்டிருக்கிறார்கள். "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்" *(கொலோ 1:27)* என்று இந்த அனுபவம் சுட்டிக்காட்டப்படுகிறது. "நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்" *(எபே 5:30)* என்பதே கிறிஸ்துவுக்குள் இருக்கும் மேன்மை. அதன் விளைவாக "உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது" என்று இந்த அனுபவத்தைக் குறித்து கொலோசெயர் சபையாருக்கு பவுல் தெரியப்படுத்துகிறார் *(3:3)*.

"விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்கள்" என்று பவுல் குறிப்பிடுவதைக் கவனியுங்கள். கிறிஸ்து இரத்தம் சிந்தி தன்னை இரட்சித்தார் என்பதை விசுவாசிக்கிறவனே விசுவாசி. தன்னுடைய நிகழ்கால, வருங்கால நம்பிக்கையை கிறிஸ்துவின் மேலும் அவருடைய வார்த்தையின்மேலும் வைத்திருப்பவனே விசுவாசி. **தன்னுடைய விசுவாசத்தை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின்மேல் மட்டும் வைத்திருக்கிறவனே விசுவாசி.** தன்னுடைய இரட்சிப்பை அவருடைய கரங்களில் ஒப்புக்கொடுத்திருப்பவனே விசுவாசி. "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" *(பிலிப் 1:21)* என்று சொல்லுபவனே விசுவாசி. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டவனையே விசுவாசி என்று அழைக்கிறோம்.

இவ்வாறு கிறிஸ்துவை விசுவாசித்து, அந்த விசுவாசத்தில் நிலைத்திருக்கும் ஒருவன் பரிசுத்தவானாய் கருதப்படுவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஒரு காரியத்தை மட்டும் நன்றாய் அறிந்து கொள்ளுங்கள். **விசுவாசியாயிராதவன் பரிசுத்தவானாய் இருக்கமுடியாது. பரிசுத்தவானாயிராதவன் விசுவாசி-யாயிருக்க முடியாது.** கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கும் ஒருவனால்தான் விசுவாசியாகவும், பரிசுத்தவானாகவும்

இருக்கமுடியும். பரிசுத்தவான் என்ற வார்த்தை உலகில் இருந்து தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை உடையவர்களைக் குறிப்பிடுகிறது. *"கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவசபை" (1கொரி 1:2)* என்று கொரிந்து சபையைப் பற்றி பவுல் குறிப்பிடுவதைக் கவனியுங்கள்.

**நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக (எபே 1:2)**

தனது வழக்கத்தின்படி நிருபத்தின் துவக்கத்திலேயே தன்னுடைய அப்போஸ்தல அதிகாரத்தை உரிமையோடு பவுல் வற்புறுத்தி, தன் நிருபத்தை வாசிக்கும் எபேசு சபையாருக்கு கிருபை, சமாதானம் என்ற இரண்டு ஆசீர்வாதங்களைக் கட்டளையிட்டு ஜெபிக்கிறார். கிறிஸ்துவின் சுவிசேஷம் இந்த இரண்டு ஆசீர்வாதங்களையும் உள்ளடங்கியதாய் இருக்கிறது. அவற்றை பிதாவாகிய தேவனும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் அவர்களுக்கு அருளிச் செய்திருப்பதாக சொல்கிறார்.

யாக்கோபு *1:17* சொல்கிறது, "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது". அவரே சகல ஆசீர்வாதங்களுக்கும் ஊற்றாக இருக்கிறார். வானத்தையும் பூமியையும், அதிலுள்ள சகல ஜீவராசிகளையும் தன்னுடைய வார்த்தையினால் சிருஷ்டித்த சர்வ வல்லமையுள்ள தேவனை "நம்முடைய பிதா" என்று உரிமையோடும் பாசத்தோடும் பவுல் அழைப்பதைக் கவனியுங்கள். "கர்த்தாவே, நீர் எங்களுடைய பிதா" என்கிறார் ஏசாயா *(64:8)*. மல்கியா *2:10* சொல்கிறது, "நம்மெல்லாருக்கும் ஒரே பிதா இல்லையோ?", "தம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்திலிருக்கிற தேவன், திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பனும், விதவைகளுக்கு நியாயம் விசாரிக்கிறவருமாயிருக்கிறார்" *(சங் 68:5)*.

பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் தேவனை தங்களுடைய தகப்பனாக அறிந்திருந்தாலும், அவரை பிதா என்று அழைப்பதற்கு மிகுந்த பயமுள்ளவர்களாய்க் காணப்பட்டார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே அவரை பிதாவாக, ஒரு அன்பு நிறைந்த தகப்பனாக இஸ்ரவேலர்களுக்கு அறிமுகப்படுத்தினார். அவர் பூமியில் இருந்த நாட்களில் மத்தேயு 27:46 தவிர மற்ற எல்லா இடங்களிலும் அவரை பிதா என்றுதான் அழைத்தார். விசுவாசிகள் "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே" (மத் 6:9) என்று உரிமையோடு அவரை அழைக்கும் அதிகாரத்தையும் கொடுத்தார். ஆனாலும் கிறிஸ்துவை விசுவாசித்து, அவரை தங்கள் ஆண்டவராகவும் இரட்சகராகவும் அங்கீகரித்தவர்களுக்கு மட்டுமே பிதா தகப்பனாகிறார். "ஒரே பிதா எங்களுக்குண்டு" என்று வீண் பெருமையோடு பேசும் யூதர்களிடம் இயேசு சொல்கிறார், "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்" (யோவான் 8:44).

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் எபேசு சபையாரை ஆசீர்வதிப்பதாக பவுல் குறிப்பிடுகிறார். திருத்துவத்தின் இரண்டாவது நபராகிய இயேசு கிறிஸ்து பிதாவுக்கு இணையானவர் என்று நாம் அறிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகவே பவுல் அவரை கர்த்தர் (Adonai) என்று அவரைக் குறிப்பிடுகிறார். "பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக்கூடாது" (1கொரி 12:3). யோவான் 1:18 சொல்கிறது "தேவனை ஒருவனும் ஒருக்காலுங் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான, குமாரனே அவரை வெளிப்படுத்தினார்". கர்த்தர் என்ற முறையில் அவர் நம்முடைய எஜமான் ஆகிறார். இயேசு என்ற முறையில் நம்முடைய இரட்சகராகிறார். "இயேசு" (எபிரெய மொழியில் யஷ்ஷுவா - யோசுவா) என்ற பெயரைத்தான் பிதாவாகிய தேவன் தன்னுடைய குமாரனுக்கு சூட்டினார் என்பதை அறிவோம் (லூக்கா 1:31). கிறிஸ்து என்ற முறையில் அபிஷேகிக்கப்பட்ட தீர்க்கதரிசியாகவும், ஆசாரியனுமாகிறார்.

பிதாவும் குமாரனும் இணைந்து கிருபை, சமாதானம் என்ற

இரண்டு ஆசீர்வாதங்களை எபேசு சபைக்கு வழங்குகிறார்கள். பிதாவாகிய தேவன் தன்னுடைய ஒரே பேறான குமாரனை மனித இனத்தின் மீட்புக்காக சிலுவை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்ததின் விளைவாகவே கிருபையும் சமாதானமும் உண்டாகிறது. **தகுதி இல்லாத மனிதன்மேல் தேவன் பாராட்டும் அன்பும் இரக்கமுமே கிருபை.** பாவ மனிதனுக்கு கிருபையை வழங்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம் தேவனுக்குக் கிடையாது. தேவனுக்குப் பிரியமான காரியங்களைச் செய்வதினால் ஒருவன் கிருபையைப் பெறுகிறான் என்பதல்ல. தேவகிருபையின் செயலாற்றலினால்தான் இரட்சிப்பு உண்டாகிறது (அப் 15:11, ரோமர் 5:15, 11:6, தீத்து 2:11, 3:6). ரோமர் 3:23,24 சொல்கிறது, "எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்". கிருபையைப் பெற்றுக்கொண்டதாகச் சொல்லப்படும் முதல் மனிதன் நோவா (ஆதி 6:8).

கிருபை என்பதற்குப் பயன்படுத்தப்படும் Charis என்ற கிரேக்க பதம் புதிய ஏற்பாட்டில் 155 இடங்களில் வருவதாகவும், அதில் பவுல் நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் குறிப்பிடுவதாகவும் கணக்கிட்டிருக்கிறார்கள். நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போது (ரோமர் 5:6), அக்கிரமக்காரர்களாய் இருந்தபோது (ரோமர் 5:6), பாவிகளாயிருக்கும்போது (ரோமர் 5:8) தேவனுக்குச் சத்துருக்களாய் இருக்கும்போது (ரோமர் 5:10) தேவகிருபை வெளிப்பட்டதின் விளைவாகவே சமாதானம் என்ற ஆசீர்வாதத்தைப் பெறுகிறோம். சமாதானத்துக்கு உபயோகப்படுத்தப்படும் Shalom என்ற எபிரெய பதம் சண்டை சச்சரவற்ற நிலையை மட்டும் குறிப்பிடாமல், பாவ மனிதன் கிறிஸ்து மூலமாய் தேவனுடன் ஒப்புரவாகும் மேன்மையையும் குறிப்பிடுகிறது. "நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது" (ஏசாயா 53:5) என்று வாசிக்கிறோம். கிறிஸ்து மூலமாக தேவகோபாக்கினை மனிதனிடமிருந்து விலக்கப்படுகிறது. கிருபையும் சமாதானமும் ஒன்றோடொன்று இணைந்தது என்பதால்

பேதுரு ஜெபிக்கிறார், "தேவனையும், நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது" *(2பேதுரு 1:2)*.

## ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் (1:3-14)

**நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் (எபே 1:3).**

*எபேசியர் 1:3 முதல் 14 வரையுள்ள வசனங்கள் கிரேக்க மொழியில் ஒரே வாக்கியமாக அமைந்திருக்கிறது. தமிழ் மொழியில் அது ஆறு வாக்கியங்களாக பிரித்து மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்த முழு வேத பகுதியும் ஒரு ஸ்தோத்திர பாடலாகவும், அப்போஸ்தலனாகிய பவுலின் ஜெபமாகவும் கருதப்படுகிறது. எபேசியர் நிருபத்தின் 1வது அதிகாரம் 15 முதல் 19 வரையுள்ள வசனங்களில் பவுலின் இரண்டாவது ஜெபமும், 3வது அதிகாரம் 14 முதல் 21 வரையுள்ள வசனங்களில் மூன்றாவது ஜெபமும் காணப்படுகிறது.*

*பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரிக்கும் பவுல், அவரை "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதா" என்று உரிமையோடு அழைக்கிறார். "நம்முடைய" என்று சொல்லி பவுல் தன்னுடைய வாசகர்களை கிறிஸ்துவுடன் மிகவும் நெருக்கமான உறவுக்குள் கொண்டுவந்து, ஐக்கியப்படுத்துகிறார். தேவன் "பட்சிக்கிற அக்கினி" யாக (எபி 12:29) இருப்பதால், கிறிஸ்து வழியாக மட்டுமே நாம் அவரைக் கிட்டிச் சேரமுடியும். ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவன், யாக்கோபின் தேவன் என்று அழைக்கப்பட்டவர் இனி இயேசுகிறிஸ்துவின் பிதா என்று மட்டுமே அழைக்கப்பட வேண்டும். பிதா என்ற வார்த்தை மத்தேயுவில் 44 முறையும், மாற்குவில் 4 முறையும், லூக்காவில் 17 முறையும், யோவானில் 124*

முறையும் உபயோகப்படுத்தப்பட்டிருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். ரோமர் 15:5, 2 கொரி 1:3, 11:31 ஆகிய வசனங்களில் தேவன் "இயேசுகிறிஸ்துவின் பிதா" என்று குறிப்பிடப்படுகிறார்.

தன்னுடைய ஜெபத்தின் துவக்கத்திலேயே பவுல் தேவனை ஸ்தோத்திரிக்க ஆரம்பிக்கிறார். ஸ்தோத்திரிக்கிற ஒரு மனிதன் தேவனை ஆராதிக்கிறான், கனம் பண்ணுகிறான், மகிமைப் படுத்துகிறான், அவருடைய மேன்மையை அறிவிக்கிறான், தான் பெற்ற நன்மைகளுக்காக நன்றி செலுத்துகிறான். தாவீது சொல்கிறார், "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்" (சங் 34:1). "உங்கள் கைகளை பரிசுத்த ஸ்தலத்திற்கு நேராக எடுத்து, கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்" (சங் 134:1). பவுல் சொல்கிறார், "அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்" (ரோமர் 1:25).

தேவனை ஸ்தோத்திரிக்கும் பவுல் உடனடியாக தான் எதற்காக ஸ்தோத்திரிக்கிறார் என்பதை அறிவிக்கிறார். பிதாவாகிய தேவன் கிறிஸ்துவுக்குள் நம்மை உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் ஆசீர்வதித்திருக்கிறார் (eulogétos) என்கிறார். காரண காரியங்களை அறிவிக்காமல் ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம் என்று மட்டுமே சொல்லுவது அவ்வளவு நல்லதல்ல. தேவனிடமிருந்து தான் பெற்றுக்கொண்ட ஏழு ஆசீர்வாதங்களுக்காக பவுல் ஸ்தோத்திரிக்கிறார். அந்த ஆசீர்வாதங்களும் ஒன்றன்பின் ஒன்றாக 14-வது வசனம்வரை பட்டியலிடப்பட்டிருக்கின்றன.

*1. தெரிந்துகொள்ளப் படுதல் (வசனம் 4)*
*2. சுவீகார புத்திரர் (வசனம் 6)*
*3. பாவமன்னிப்பாகிய மீட்பு (வசனம் 7)*
*4. ஞானமும் புத்தியும் (வசனம் 8)*
*5. சித்தத்தின் வெளிப்பாடு (வசனம் 10)*
*6. சுதந்தரராக முன்குறித்தல் (வசனம் 12)*
*7. பரிசுத்த ஆவியின் முத்திரை (வசனம் 13)*

தேவன் ஒருவரே நம்மை ஆசீர்வதிப்பவர். சங்கீதக்காரன் சொல்கிறான், "தேவனாகிய எங்கள் தேவனே எங்களை ஆசீர்வதிப்பார்" *(சங் 67:6)*. மனிதர்களாகிய நாம் யாரையும் ஆசீர்வதிக்கும்போது இப்படிச் சொல்லக் கற்றுக்கொள்வோமாக. "கர்த்தருடைய ஆசீர்வாதம் உங்களுக்கு உண்டாவதாக; கர்த்தரின் நாமத்தினால் உங்களை ஆசீர்வதிக்கிறோம்" *(சங் 129:8)*.

இந்த ஆசீர்வாதங்கள் "கிறிஸ்துவுக்குள்" இருக்கிறது என்பதை பவுல் உடனடியாகத் தெளிவுபடுத்துகிறார். கிறிஸ்துவுக்குள் என்ற வார்த்தையை பவுல் இந்த அதிகாரத்திலேயே பத்துமுறைக்கும் மேலாக பயன்படுத்துகிறார். இரண்டாவது ஆதாம் *(1கொரி 15:45, 47)* கிறிஸ்துவுக்குள் அடங்கியிருப்பதின் மூலமாக மட்டுமே நாம் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். அவருக்குள் இல்லாத நிலையில் நம்மால் ஒன்றுமே நடப்பிக்கமுடியாது என்பது மட்டுமல்ல, நாம் ஒன்றும் இல்லாதவர்களாய் மாறிவிடுவோம். அவருக்குள்ளோ நாம் பரிபூரணமுள்ளவர்களாகிறோம் *(கொலோ 2:10)*.

இந்த ஆசீர்வாதங்கள் எங்கே இருந்து வருகிறது என்பதையும் பவுல் அறிவிக்கத் தவறவில்லை. உன்னதங்களில் (in heavenly places, en tois epouraniois) : ஏனென்றால் எபே 2:7 சொல்கிறபடி உன்னதங்களில் அவரோடே கூட நாம் உட்கார்ந்திருக்கிறோம். பரலோகமே நம்முடைய குடியிருப்பு *(பிலி 3:20)*. உன்னதங்களிலிருந்து நாம் பெறும் ஆசீர்வாதங்கள் உலகத்திற்கு ஏற்புடையதாக இருக்கமுடியாது, அவை ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் என்பதும் உடனடியாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. தேவன் "தீயோர் மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்" *(மத் 5:45)* என்பது உண்மைதான். இத்தகைய பொதுவான ஆசீர்வாதங்களை தேவன் எல்லா மனிதர்களுக்கும் வைத்திருக்கிறார். உலகப்பிரகாரமான சகல ஆசீர்வாதங்களாலும் இஸ்ரவேலை தேவன் நிரப்பியிருக்கிறார் என்பதும் உண்மைதான்.

கிறிஸ்தவர்களாகிய நாமோ பரம அழைப்புக்குப் பங்கு உள்ளவர்கள் *(எபி 3:1)*. எனவே கானானின் உலகத்து ஆசீர்வாதங்கள் நமக்கு வேண்டாம். உலகப்பிரகாரமான மற்றும் சரீரப்பிரகாரமான ஆசீர்வாதங்கள் நிரந்தரமானவையல்ல, தற்காலிகமானவையே.

ஏனெனில் நம் கண்களால் காணக்கூடிய உலகரீதியான ஆசீர்வாதங்களை சாத்தானோ, நம்முடைய எதிரிகளோ நம்மிடமிருந்து அபகரித்துக்கொள்ளக்கூடும். ஆனால் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களோ யாராலும் அபகரித்துக்கொள்ள முடியாததாக இருக்கிறது. ஏனெனில் அவை நமக்கு மட்டுமே சொந்தமானது. 2கொரி 4:18 சொல்கிறது,"காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்".

நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் என்று சொல்வதைக் கவனியுங்கள். ஊழியக்காரர் என்ற முறையில் தன்னை வித்தியாசப்படுத்தி, மேன்மைப்படுத்தாமல் தன்னையும் வாசகர்களோடு இணைத்துக் கொள்வதையும் கவனியுங்கள்.

**இந்த வசனம் அறிவிக்கும் காரியங்கள்:**

| | | |
|---|---|---|
| யாரை ஆசீர்வதித்திருக்கிறார் | : | விசுவாசிகளாகிய நம்மை |
| எத்தனை ஆசீர்வாதம் | : | சகல (எல்லா) |
| எத்தகைய ஆசீர்வாதம் | : | ஆவிக்குரிய |
| எங்கே ஆசீர்வதிக்கப்படுகிறோம் | : | உன்னதங்களில் |

**தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்பே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே (எபே 1:4)**

பிதாவாகிய தேவன் நம்மைத் தெரிந்துகொண்டிருக்கிறார் (Election) என்பதே கிறிஸ்தவர்களாகிய நாம் பெற்றுக்கொண்ட முதலாவது ஆவிக்குரிய ஆசீர்வாதம். இந்த உலகத்தை

சிருஷ்டிப்பதற்கு முன்பாகவே, தன்னுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்குள் இருக்கும்படியாகவும், அவர்கள் பரிசுத்தமுள்ளவர்களாயும், குற்றமில்லாதவர்களாக, நித்திய நித்தியமாக அன்புள்ளவர்களாயும் இருக்கும்படியாக ஒருகூட்ட ஜனங்களைத் தெரிந்து கொண்டிருக்கிறார். அந்தக் கூட்டத்தில் நாமும் இருக்கிறோம் என்பதே நாம் பெற்றிருக்கும் முதலாவது ஆசீர்வாதம். நாம் பெறக்கூடிய சகல ஆசீர்வாதங்களுக்கும் இதுவே அஸ்திபாரமாக அமைகிறது என்கிறார் கால்வின். யோவான் *15:16*, 2தெச *2:13*, 1பேதுரு *1:2* வாசித்துப் பாருங்கள். இது எவ்வளவு ஆச்சரியமான காரியம் என்பதை யோசித்துப் பாருங்கள். நாம் அவரோடு இருக்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார். பாவத்தினாலோ, கவலையினாலோ, வேதனையினாலோ, துக்கத்தினாலோ, மரணத்தினாலோ நாம் அவரை விட்டு பிரிந்துவிடக்கூடாது என்று விரும்புகிறார்.

தேவனால் முதலாவது தெரிந்துகொள்ளப்பட்டவர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து என்பதை அறிந்துகொள்ளவேண்டும். "இதோ நான் ஆதரிக்கிற என் தாசன், நான் தெரிந்துகொண்டவரும் என் ஆத்துமாவுக்குப் பிரியமானவரும் இவரே" என்கிறார் பிதாவாகிய தேவன் (ஏசாயா *42:1*). மத்தேயு *12:18* இதை உறுதிப்படுத்துகிறது. கிறிஸ்துவுக்குள் கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகிறோம். அதனால்தான் "தமக்கு முன்பாக" தெரிந்துகொள்ளப்பட்டதாக இந்த வசனம் துவங்குகிறது. ஆபிரகாமுக்குள் அவருடைய சந்ததியரான இஸ்ரவேலர் எவ்வாறு ஆசீர்வதிக்கப்பட்டார்களோ (ஆதி *12:13*) அவ்வாறே நாமும் கிறிஸ்துவுக்குள் தெரிந்துகொள்ளப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம்.

நாம் எப்போது தெரிந்து கொள்ளப்பட்டோம் என்பதையும் பவுல் அறிவிக்கிறார். "உலகத்தோற்றத்துக்கு முன்பே". "உலகத்தோற்றமுதல் தேவனுக்குத் தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது" *(அப் 15:18)* என்பதன் அடிப்படையில் நாம் தெரிந்துகொள்ளப்பட்டோம். "ஆதி முதல் தேவன் உங்களைத் தெரிந்துகொண்டபடியினாலே, நாங்கள் உங்களைக்குறித்து

எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" *(2தெச 2:13)*. *1தெச 1:3,4* வாசித்துப் பாருங்கள். நித்தியத்தில் தேவன் நம்மைத் தெரிந்துகொண்டார் என்று சொல்லும்போது நம்முடைய நற்செயல்களின் நிமித்தம் நாம் இரட்சிக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. ஏசாயும் யாக்கோபும் அவர்களது தாயின் வயிற்றில் இருக்கும்போதே யார் யாரை சேவிப்பார்கள் என்ற தேவ ஆலோசனை வெளிப்படுத்தப் பட்டது *(ஆதி 25:23)*. "பிள்ளைகள் இன்னும் பிறவாமலும், நல்வினை தீவினை ஒன்றும் செய்யாமலுமிருக்கையில், தேவனுடைய தெரிந்துகொள்ளுதலின்படியிருக்கிற அவருடைய தீர்மானம் கிரியைகளினாலே நிலைநிற்காமல் அழைக்கிறவராலே நிலைநிற்கும்படிக்கு, மூத்தவன் இளையவனுக்கு ஊழியஞ்செய்வான் என்று அவளுடனே *(ரெபெக்காளுக்கு)* சொல்லப்பட்டது. அப்படியே, யாக்கோபைச் சிநேகித்து, ஏசாவை வெறுத்தேன் என்றும் எழுதப்பட்டிருக்கிறது" *(ரோமர் 9:11-13)*. தெரிந்துகொள்ளப்பட்டவர் யாக்கோபு. தெரிந்துகொள்ளப்படாதவர் ஏசா.

நம்முடைய இரட்சிப்பைக்குறித்து பேசும்போது, குறிப்பிட்ட நாளில் நாம் ஆண்டவராகிய இயேசுவை இரட்சகராக தெரிந்துகொண்டதால் இரட்சிக்கப்பட்டதாக சொல்கிறோம். நாம் **அவரைத் தெரிந்துகொண்டோம் என்பது உண்மைதான். ஆனால் நித்தியத்தில் தேவன் நம்மைத் தெரிந்து கொண்டதால் மட்டுமே இது சாத்தியமாயிற்று**. ஒரு மனிதன் சொந்தத் திறமையினாலோ, ஞானத்தினாலோ, பெலத்தினாலோ, செயலாற்றலினாலோ தேவனிடத்தில் திரும்புவதில்லை என்பதை அறிந்துகொள்ளுங்கள். தேவன் நம்மில் நடப்பித்த கிரியையின் விளைவாகவே நாம் தேவனண்டை இழுத்துக்கொள்ளப்படுகிறோம். அதனால்தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொல்கிறார், "நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை. நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்" *(யோவான் 15:16)*.

தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும், குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு தேவனால் தெரிந்துகொள்ளப் பட்டிருக்கிறோம். மனிதர்களுக்கு முன்பாக அல்ல, தேவனுக்கு

முன்பாக தேவனுடைய தெரிந்துகொள்ளுதல் நம்மை பரிசுத்த குலைச்சலான மற்றும் பாவமுள்ள வாழ்க்கைக்கு அனுமதிப்பதில்லை. பரிசுத்தம் என்பதற்கு பயன்படுத்தப்படும் Hagious என்ற கிரேக்க பதம் தேவனுடைய பிரத்தியேகமான உபயோகத்துக்கென்று பிரித்தெடுக்கப்படுவதைக் குறிப்பிடுகிறது. உபாகமம் *14:2*ல் மோசே சொல்கிறார், "நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தமான ஜனங்கள்; பூமியின் மீதெங்குமுள்ள எல்லா ஜனங்களிலும் உங்களையே கர்த்தர் தமக்குச் சொந்த ஜனங்களாயிருக்கத் தெரிந்துகொண்டார்".

அடுத்ததாக, குற்றமில்லாதவர்களாயிருப்பதற்கு (Blameless, amomous) தேவன் நம்மைத் தெரிந்துகொண்டதாக பவுல் அறிவிக்கிறார். "கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும் தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு" *(பிலிப் 2:15)* நாம் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறோம். அதற்காகவே, குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டிருக்கிறோம் *(1பேதுரு 1:19)*. எபே *5:27*, கொலோ *1:22* வாசித்துப் பாருங்கள்.

அன்பில் பரிசுத்தமுள்ளவர்களாயும், குற்றமில்லாதவர்களாயும் இருக்கும்படி தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறோம். இதன் விளைவாகத்தான் நாம் இரட்சிப்படைய தெரிந்துகொள்ளப் பட்டவர்களாகிறோம். அன்பு என்ற வார்த்தை இந்த நிருபத்தில் பத்து இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. (ரோமர் நிருபத்தில் *14* இடங்களில், *1*• யோவானில் *8*. இடங்களில்). "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" (ரோமர் *5:8*) என்று வாசிக்கிறோம். தன்னுடைய ஒரே பேறான குமாரனையே "தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் *3:16*). அந்த அன்பின் நிமித்தமாகவே தேவன் நம்மை பரிசுத்தமுள்ளவர்களாயும் குற்றமில்லாதவர்களாயும் தெரிந்து கொண்டதாகவும் எடுத்துக்கொள்ளலாம். எபே *3:17, 4:2, 16, 5:2* வாசித்துப் பாருங்கள்.

**பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக (எபே 1:5)**

தேவன் தன்னுடைய கிருபைகளை தந்தருளுகிறார் என்பது உண்மைதான். அந்த கிருபை மகிமையானதாயும், புகழ்ச்சியானதாயும் இருக்கிறது என்பதும் உண்மைதான். ஆனால் நம்முடைய தகுதியின் அடிப்படையில் நமக்கு கிருபை வழங்கப்படுவதில்லை என்பதையே இந்த வசனம் அறிவிக்கிறது. தேவன் தமக்குப் பிரியமானவருக்குள், அதாவது தமக்குப் பிரியமானவர் நிமித்தம் எந்தவிதத்திலும் தகுதியில்லாத நமக்கு கிருபையைத் தருகிறார். "பிதாவுக்கு பிரியமானவைகளை எப்பொழுதும் செய்கிறபடியால்" *(யோவான் 8:29)* இயேசு கிறிஸ்து பிதாவுக்கு பிரியமானவராகிறார். அவர் சொல்கிறார், "இதோ, நான் தெரிந்துகொண்ட என்னுடைய தாசன், என் ஆத்துமாவுக்குப் பிரியமாயிருக்கிற என்னுடைய நேசன்" *(மத் 12:18)*. *மத் 3:17, 17:5; மாற்கு 1:11, கொலோ 1:13, 2 பேதுரு 1:17* வாசித்துப் பாருங்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் சொல்கிறார், "நான் அவர் அருகே செல்லப்பிள்ளையாயிருந்தேன்; நித்தம் அவருடைய மனமகிழ்ச்சியாயிருந்து எப்போதும் அவர் சமுகத்தில் களிகூர்ந்தேன்" *(நீதி 8:30)*. பிதாவுக்குப் பிரியமானதைச் செய்வதே அவருடைய வாழ்க்கையின் குறிக்கோளாக இருந்தது.

அடுத்த வசனத்தின்படி தேவன் நம்மை தன்னுடைய சுவிகார புத்திரராக முன்குறித்திருக்கிறார் என்றால் அது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவன் நமக்கு அருளிச்செய்த கிருபையின் மகிமையை வெளிப்படுத்துவதற்காக மட்டுமே. தன்னுடைய அன்பு மகனின்மூலமாக மனித இனத்தை தேவன் மீட்டுக்கொண்டதின் நோக்கம் அதுவே. உலகத்தோற்றத்துக்கு முன்பிருந்தே பிதா குமாரனில் அன்பாயிருந்தார் *(யோவான் 17:24)*. *யோவான் 3:35* சொல்கிறது, "பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக்கொடுத்திருக்கிறார்". "இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்" *(ரோமர் 3:24)*.

ஒரு காரியத்தை அறிந்துகொள்ளுங்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, தன்னுடைய சிலுவை மரணத்தின் மூலமாக நமக்கென்று சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் சேகரித்து வைத்திருக்கிறார். அவற்றை நாம் சுதந்தரித்து அனுபவிக்கவேண்டும் என்று விரும்புகிறார். பிதாவாகிய தேவன் தன்னுடைய குமாரன்மேல் பிரியமானவராய் இருக்கிறபடியால், அவர் நிமித்தம் அந்த ஆசீர்வாதங்களைக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறார். ரோமர் *8:32* சொல்கிறபடி, "தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி".

**தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகாரப்புத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார். (எபே 1:6)**

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறோம் *(வசனம் 4)* என்பது நாம் பெற்றுக்கொள்ளும் முதல் ஆவிக்குரிய ஆசீர்வாதம் என்றால், தேவனால் சுவிகார புத்திரராக முன்குறிக்கப்படுதல் **இரண்டாவது** ஆசீர்வாதமாகிறது. முன்குறித்தல் என்றால் முன்னதாகவே தீர்மானிக்கப்படுதல் என்று பொருள்படும். நம்முடைய இரட்சிப்பு நித்தியத்தில் தீர்மானிக்கப்பட்ட ஒரு காரியம். தேவனுடைய தயவுள்ள சித்தத்தின்படி (eudokia) நியமிக்கப்பட்ட காரியம். நாம் தேவனுடைய சொந்தப்பிள்ளைகளாக, அவருடைய வாரிசுதாரராக முன்குறிக்கப்பட்டிருக்கிறோம் (Predestined, proorisas). இதையும் அவர் தமது சித்தத்தின்படி செய்கிறார் என்பது மட்டுமல்ல, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மூலமாக அவர் நடப்பிக்கிறார். *4*-வது வசனத்தின்படி யாரை கிறிஸ்துவுக்குள் தேவன் தெரிந்துகொண்டாரோ, அவர்களை தேவன் தெரிந்துகொண்டதோடு மட்டும் விட்டுவிடுவதில்லை என்பதை இந்த வசனம் அறிவிக்கிறது. அவர்களை தன்னுடைய சுவிகார பிள்ளைகளாக அங்கீகரித்து, அவருடையவைகளுக்கெல்லாம் நம்மை வாரிசுதாரர்களாக்குகிறார். தன்னுடைய பழைய பெற்றோருடன் கொண்டிருந்த உறவு மற்றும் உரிமைகளை இழந்தவர்களாய் தங்களை தத்தெடுத்த பெற்றோரின்

சகல உடைமைகளையும் இவர்கள் சுதந்தரித்துக்கொள்ளுகிறார்கள். ரோமர் 8:15,23ன் படி புத்திர சுவிகாரத்தின் ஆவியை இவர்கள் பெறுகிறார்கள்.

குழந்தைகள் இல்லாத பெற்றோர் தங்கள் உறவினர்கள் அல்லது மற்றவர்களின் பிள்ளைகளை தத்துப்பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டு, சட்டபூர்வமாக அங்கீகரித்து, பிள்ளைகளுக்குரிய அதிகாரங்களையும், சொத்து சம்பந்தமான உரிமைகளையும் அவர்களுக்கு வழங்கும் பழக்கம் இந்த நாட்களில் உலகமெங்கும் காணப்படுகிறது. ரோமர்கள் அரசாட்சி செய்த அந்த நாட்களிலும் இப்படிப்பட்ட சட்டமுறைகள் இருந்துவந்தன. லூக்கா 2:1ல் சொல்லப்படும் அகஸ்துராயன், ஜுலியஸ் சீசர் என்ற ரோமபேரரசனால் வளர்க்கப்பட்ட தத்துப்பிள்ளை என்பதை சரித்திரம் வாயிலாக அறிந்துகொள்ளுகிறோம். யாக்கோபு, யோசேப்பின் பிள்ளைகளான எப்பிராயீம், மனாசே ஆகியோரை தன்னுடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டதனால்தான் (ஆதி 48) அவர்கள் கோத்திரத் தலைவர்களாக நிலைநிறுத்தப்பட்டார்கள்.

இரட்சிக்கப்படுவதற்கு முன்பு நாம் யாருடைய பிள்ளைகளாயிருந்தோம் - நம்முடைய தகப்பன் யார் என்பதையும் வேதம் அறிவிக்கிறது. 1 யோவான் 3:8 சொல்கிறது, "பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்". "இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும்" (வசனம் 10). தன்னை ஏற்றுக்கொள்ளாத யூதர்களிடம் இயேசு சொல்கிறார், "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்" (யோவான் 8:44). மத்தேயு 13:38ல் சொல்கிறார், "நல்ல விதை ராஜ்யத்தின் புத்திரர். களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர்" (மத் 13:38). இவ்வாறு பிசாசின் பிள்ளைகளாயிருந்த நாம் தேவனுடைய பிள்ளைகளாகிறோம். யோவான் 1:12 சொல்கிறது, "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொர்ண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்".

ரோமர் *8:14* ல் இவ்வாறு வாசிக்கிறோம், "எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்". "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூட சாட்சி கொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே" *(வசனம் 16, 17)* தேவனுடைய சுவிகாரபுத்திரர் என்ற முறையில் தேவனுடைய "புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்துமூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்" *(கலா 4:6,7)*.

நாம் தேவனுடைய சுவிகாரபுத்திரராகும்படி முன்குறிக்கப் பட்டிருக்கிறோமானால் அது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மூலமாக மட்டுமே சாத்தியமாகிறது. நாம் இயேசுவை ஏற்றுக்கொண்டு அவரை விசுவாசிப்பதினால், தேவனுடைய தயவுள்ள சித்தம் அதில் செயல்பட்டு இந்த சிலாக்கியத்தை நமக்குத் தருகிறது. முன்குறித்தல் என்பதற்கு பயன்படுத்தப்படும் Proorizo என்ற வார்த்தை (Predestination / foreordination) இரண்டுமுறை இந்த அதிகாரத்திலும், இரண்டுமுறை ரோமர் *8:29,30*லும் பயன்படுத்தப்படுகிறது. தேவனுடைய ஆலோசனையும் முன்குறித்தவைகளும் நிச்சயமாகவே நிறைவேறும் *(அப் 4:27,28)*. ரோமர் *8:29,30* சொல்கிறபடி, "தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு தேவன் எவர்களை முன்னறிந்தாரோ, அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார். எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார், எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியு-மிருக்கிறார்".

**அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. (எபே 1:7)**

*பாவமன்னிப்பாகிய மீட்பு (redemption, apolutrosis) கிறிஸ்தவர்களாகிய நாம் பெற்றுக்கொள்ளும்* ***மூன்றாவது*** *ஆவிக்குரிய ஆசீர்வாதம். கொலோ 1:14 சொல்கிறது, "குமாரனாகிய அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது". ரோமர் 3:24 சொல்கிறது, "இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்". கிறிஸ்து மூலமாக மட்டுமல்ல, கிறிஸ்துவுக்குள் நாம் மீட்கப்பட்டிருக்கிறோம் என்பதை இந்த வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன. மத்தேயு 20:28, மாற்கு 10:45, எபி 9:12, யாத் 21:30 ஆகிய வசனங்களையும் வாசிப்பீர்களானால் மீட்பு என்ற வார்த்தை அடிமைத்தனத்திலிருந்து கிரையம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளப்பட்ட விடுதலையைக் குறிப்பிடுகிறதை அறிந்துகொள்ளலாம். "பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான்" (யோவான் 8:34) என்ற வசனத்தின்படி, நாம் ஒவ்வொருவரும் பாவத்தின் அடிமைகளாக இருந்தோம். "நானோ பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு மாம்சத்துக்குரியவனாயிருக்கிறேன்" (ரோமர் 7:14) என்கிறார் பவுல். அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்தோம் (எபே 2:1).*

*அடிமைத்தனத்தில் இருந்து ஒருவன் மீட்கப்படவேண்டுமானால் அதற்கான கிரையம் கொடுக்கப்படவேண்டும். அடிமையாயிருப்பவன் தன்னுடைய முயற்சியினால் தன்னை மீட்டுக்கொள்ள முடியாது. ஏனென்றால் அவனுக்குரிய சகலமும் அவனுடைய எஜமானனுக்கு சொந்தமாகிறது. கிரையம் கொடுத்து அடிமையை மீட்டுக்கொள்ள இன்னொருவன் முன்வரவேண்டும். "அவன் சகோதரரில் ஒருவன் அவனை மீட்கலாம்" (லேவி 25:48) என்று சொல்லப்பட்டிருக்கிறது.* ***பாவத்தின் அடிமைத்தனத்தில் இருக்கிற எந்தவொரு மனிதனும் தன்னைத்தானே மீட்டுக்கொள்ளமுடியாத***

நிலையில் இருக்கிறான். ஏனென்றால் "இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் (சாத்தான்) அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்" *(2 கொரி 4:4)* என்று சொல்லப் பட்டிருக்கிறது. நம்முடைய மனது குருடாக்கப்பட்ட நிலையில் நம்முடைய ஜெபம், உபவாசம், பரிசுத்தமான வாழ்க்கை, நீதியின் கிரியைகளினால் இரட்சிப்பு உண்டாவதில்லை. நம்மை விடுவிக்கும் விலைக்கிரையமாக சாத்தான் இவற்றை அங்கீகரிப்பதில்லை.

இந்த நிலையில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய கிருபையின் ஐசுவரியத்தின்படி தன்னுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தை கிரையமாக செலுத்தி சாத்தானின் அடிமைத்தனத்தில் இருந்து நம்மை மீட்டுக்கொள்ளச் சித்தமானார். ஐசுவரியம் என்ற வார்த்தை ஐந்து இடங்களில் இந்த நிருபத்தில் காணப்படுகிறது *(வசனம் 18, 2:4,6, 3:8, 19)*. "இரத்தஞ் சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது" *(எபி 9:22)*. லேவி 17:11 வாசித்துப் பாருங்கள். "அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே" *(1பேதுரு 1:18,19)* என்கிறார் பேதுரு. "இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்" *(1 யோ 1:7)* என்ற வசனத்தின்படி அவருடைய இரத்தத்தினால் பாவத்தின் அடிமைத்தனம் உடைக்கப்படுகிறது. "வெள்ளாட்டுக்கிடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகாபரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து நித்திய மீட்பை உண்டுபண்ணினார்" *(எபி 9:12)*. அவர் தரும் மீட்பு நித்தியமானது. ஏனென்றால் "நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம்" *(எபி 9:14)* கல்வாரி சிலுவையிலே சாத்தானை முற்றிலுமாக மேற்கொண்டது. "அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" *(மத் 20:28)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. ரோமர் 3:24, கொலோ 1:14 வாசித்துப் பாருங்கள்.

**அந்தக் கிருபையை அவர் சகல ஞானத்தோடும், புத்தியோடும் எங்களிடத்தில் பெருகப்பண்ணினார் (எபே 1:8)**

இதுபோன்ற ஒரு வசனம் *1 தீமோ 1:14*ல் வருகிறது. "நம்முடைய கர்த்தரின் கிருபை கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தோடும் அன்போடுங்கூட என்னிடத்தில் பரிபூரணமாய்ப் பெருகிற்று". இந்த இடத்தில் கிருபை என்ற வார்த்தை இயேசுவின் இரத்தத்தினால் உண்டாகும் பாவமன்னிப்பாகிய மீட்பைக் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளவேண்டும். இது பல ஆண்டுகளாக மறைக்கப்பட்டிருந்தது. பழைய ஏற்பாட்டு நாட்களில் பாவநிவாரண பலிகளைச் செலுத்தும்படியாக நியமிக்கப்பட்ட ஆசாரியர்களும், தேவனுடைய வார்த்தையை அறிவித்த தீர்க்கதரிசிகளும் அதைக் குறித்த வெளிப்பாடுகளை முழுமையாக அறிந்துகொள்ளாதவர்களாகவே இருந்தார்கள். தேவன் சபைக்குக் கொடுத்திருக்கும் இந்த ஞானமும் புத்தியும் நான்காவது ஆவிக்குரிய ஆசீர்வாதமாகக் கருதப்படுகிறது. "தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப் படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப் படாதவைகள்" (*ரோமர் 11:33*) என்று இது குறித்து பவுல் ஆச்சரியப்படுகிறார்.

தேவனுடைய கிருபை பெருக்கெடுத்து ஓடும் ஒரு நதியைப் போல இருக்கிறது. அந்த அளவற்ற கிருபையை எந்த மனிதனாலும் மட்டுப்படுத்தவோ, கட்டுப்படுத்தவோ முடியாது. அதை அறிந்துகொள்ளக்கூடிய ஞானத்தையும் (Wisdom) புத்தியையும் (Prudence) தன்னிடத்திலும் சகஊழியர்களிடமும் இந்த கடைசி நாட்களில் தேவன் பெருக்கப்பண்ணியிருப்பதாக பவுல் இந்த வசனத்தில் சற்றுப் பெருமையோடு அறிவிக்கிறார். தேவன் எதில் பிரியப்படுகிறார் என்பதை அறிந்துகொள்வதே மெய்யான ஞானம். தேவன் பிரியப்படும் காரியங்களைச் செய்வதே மெய்யான புத்தி. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிடம் மட்டுமே ஞானம் காணப்படுகிறது. அவரே நம்முடைய ஞானமும் மீட்புமானார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவரைத்தேடுகிற யாவரும் அந்த ஞானத்தைப் பெற்றுக்கொள்வார்கள் (*1கொரி 1:31, 2:10-16, யாக் 1:5*).

இந்த ஞானத்தை தங்களுடைய அனுதின வாழ்க்கையில் நடைமுறையில் செயல்படுத்துகிறவர்களே புத்திசாலிகள். இந்த ஞானமும் புத்தியும் ஊழியக்காரர்களுக்கு மட்டுமல்ல, விசுவாசிகளுக்கும் தேவைப்படுகிறது.

**காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும், பூலோகத்திலிருக்கிறவை-களுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று (எபே 1:9)**

"காலம் நிறைவேறினபோது ஸ்திரீயினிடத்தில் பிறந்தவர்" (கலா *4:5)* என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்து வாசிக்கிறோம். முன்தீர்மானிக்கப்பட்ட காலங்களில் (அப் *17:26*) அவர் செயல்படுகிறவராக இருக்கிறார். "காலம் நிறைவேறிற்று" (மாற்கு *1:15*) என்று அறிவித்து, இயேசு தன்னுடைய சுவிசேஷ ஊழியத்தை ஆரம்பிக்கிறார். "அவர் காலங்களையும் சமயங்களையும் மாற்றுகிறவர்" (தானி *2:21*) என்று அழைக்கப்பட்டாலும், "அவர் சகலத்தையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாக செய்திருக்கிறார்" (பிர *3:11*).

ஆனால் அவர் நியமித்து வைத்திருக்கும் காலங்களை அறிவிப்பதில்லை. இயேசு சொல்கிறார், "பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல" (அப் *1:7*).

"காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமம்" என்றால் என்ன என்பதை அறிந்துகொள்ளவேண்டியது அவசியமாயிருக்கிறது. தன்னால் சிருஷ்டிக்கப்பட்ட இந்த உலகத்தைக் குறித்து தேவன் ஒரு நித்தியமான தீர்மானத்தையும் திட்டத்தையும் வைத்திருக்கிறார். அவை சரியான விதத்தில், சரியான வேளையில் நிறைவேற்றப்படவேண்டும் என்பதில் கரிசனை உள்ளவராக இருக்கிறார். உலக சரித்திரம் அவருடைய ஆளுகைக்குட்பட்டதாக இருக்கிறது. எனவே தேவன்

நியமித்த சரியான காலகட்டத்தில் அவருடைய தீர்மானமும் திட்டமும் நிறைவேறியே தீரும்.

பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய சகலமும் கிறிஸ்து இயேசுவுக்குள் கூட்டப்படவேண்டும் என்பதே பிதாவின் நியமமாயிருக்கிறது (Dispensation, oikonomia). "பூலோகத்திலுள்ளவைகள், பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர்மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று" *(கொலோ 1:20)* என்று வாசிக்கிறோம். நாம் காண்கிறபடி பூலோகத்தில் எண்ணிக்கையில் அடங்காத பிரிவினைகளும், வேறுபாடுகளும், குழப்பங்களும் காணப்படுகின்றன. தேவனுக்கு விரோதமாக மனித இனம் பிரிந்திருக்கிறது *(எபே 2:1)*. மனிதனுக்கு விரோதமாக மனிதன் பிரிந்திருக்கிறான் *(எபே 2:11,12)*. கிறிஸ்தவர்களாகிய நம்மிலும் ஐக்கியம் காணப்படவில்லை *(எபே 4:2,3)*. கிறிஸ்தவர்கள் தேவனோடு ஐக்கியம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள் *(எபே 5:1)*. குடும்ப உறவில் கணவன் மனைவிக்குள் சீரான உறவு காணப்படவில்லை *(எபே 5:22)*. தகப்பன் பிள்ளைகளுக்குள் ஐக்கியம் இல்லை *(எபே 6:1,2)*. எஜமான் வேலைக்காரர்களுக்குள் அன்பு இல்லை *(எபே 6:5,6)*.

இந்தப் பிரிவினைகள் எல்லாம் நீக்கப்பட்டு கிறிஸ்துவுக்குள் கூட்டப்படவேண்டியது அவசியமாயிருக்கிறது. அவை எல்லாம் அவருடைய நேரடியான ஆளுகைக்குள்ளும் அரசாட்சிக்குள்ளும் வரவேண்டும். ஏனென்றால் "அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய, காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது" *(கொலோ 1:16)*. "எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது" *(கொலோ 1:17)*.

"சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டும்" (anakephalaiõsasthai) என்று சொல்லும்போது, யூதர், புறஜாதியார் என்று பிரிக்கப்பட்டிருந்த மனித இனத்தை ஒன்றாகக் கூட்டி, சபை என்ற அமைப்புக்குள் கொண்டுவரும் காரியத்தைக் குறிப்பிடுவதாகவும் எடுத்துக்கொள்ளலாம். பவுல் இந்த வசனத்தில் ஆயிரவருஷ அரசாட்சியை மனதில் வைத்துக்கொண்டு பேசுவதாக சில வேதபண்டிதர்கள் குறிப்பிடுகிறார்கள். சகலமும் கிறிஸ்து இயேசுவுக்குள் கூட்டப்படவேண்டுமானால், சகலமும் அவருடைய அதிகாரத்துக்குள் கொண்டுவரப்படவேண்டும். வானத்தையும், பூமியையும், ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தராகவும், "பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராகவும்" *(எபே 3:14)* கிறிஸ்து அரசாட்சி செய்வது ஆயிரவருஷ அரசாட்சியின்போதுதான் சாத்தியப்படும் என்பது இவர்களுடைய கருத்து.

"வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும்முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும் படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" *(பிலிப் 2:10-11)* என்ற வசனத்தின் நிறைவேறுதல் அந்த நாட்களில்தான் உண்டாயிருக்கும்.

**தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார். (எபே 1:10)**

தேவன் தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியம் (mystery, mustérion) என்ன என்பது முந்தின வசனத்தில் அறிவிக்கப்பட்டாயிற்று. விண்ணுலகிலும் மண்ணுலகிலுமுள்ள யாவற்றையும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தலைமையில் ஒன்றுசேர்த்து வைக்கவேண்டும் என்பதே அந்தத் திட்டம். தேவனுடைய சித்தம் எவ்விதத்திலும் தகுதியில்லாத மனிதர்களுக்காக அறிவிக்கப்பட்டது என்பதே **ஐந்தாவது** ஆவிக்குரிய ஆசீர்வாதமாகிறது. தேவனால் குறிக்கப்பட்ட நேரத்தில்

அந்த இரட்சிப்பின் திட்டம் நிறைவேறும் என்ற நிச்சயத்தை தேவன் அப்போஸ்தலனாகிய பவுலுக்கு அறிவித்ததாக இங்கே அவர் சொல்கிறார். தேவனுடைய திருவுளச்சித்தம் இதுவரை மறைவாக வைக்கப்பட்டிருந்தது என்பதையும் பவுல் ஒத்துக்கொள்கிறார். தேவன் அதை எங்களுக்கு அறிவித்தார் என்று சொல்லும்போது, பவுலுக்கு மட்டுமல்ல, இன்னும் பல தேவமனிதர்களுக்கும் அது அறிவிக்கப்பட்டிருக்கவேண்டும் என்பதும் புலனாகிறது.

ஆமோஸ் *3:7* சொல்கிறது, "கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்". இந்த இரகசியம் மனிதனுடைய ஞானத்துக்கு அப்பாற்பட்டதும், தேவனுடைய ஞானத்துக்கு உட்பட்டதும் ஆகும். *1*கொரிந்தியர் *2:7*ல் பவுல் சொல்கிறார், "உலகத்தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானத்தையே பேசுகிறோம்".

தான் பெற்றுக்கொண்ட மேன்மையினிமித்தம் பவுல் சற்றுப்பெருமையோடு சொல்கிறார், "எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரரென்றும் எண்ணிக்கொள்ளக்கடவன்" *(1 கொரி 4:1)*. தங்கள் தகுதியின் அடிப்படையில் அல்லாமல், தேவனுடைய கிருபையின் அடிப்படையில்தான் இந்த நாட்களிலும் பல ஊழியக்காரர்கள் தேவனுடைய வெளிப்பாடுகளைப் பெற்றுக் கொள்கிறார்கள். ஆனாலும் வெகுவிரைவில் அதைக் குறித்து தங்களைப் பெருமைப்படுத்திக்கொள்ள ஆரம்பிக்கிறார்கள். ஆகையினால் விரைவில் அவர்களது வீழ்ச்சியின் நாட்கள் ஆரம்பமாகிறது. எலியா தேவனால் வல்லமையாகப் பயன்படுத்தப்பட்ட தீர்க்கதரிசி என்பது உண்மைதான். அவன், "நான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருக்கிறேன்..." என்று சொன்னமாத்திரத்தில், "அவனுக்கு உண்டான தேவ உத்தரவு என்ன? பாகாலுக்கு முன்பாக முழங்காற்படியிடாத ஏழாயிரம்பேரை எனக்காக மீதியாக வைத்தேன்

என்பதே" *(ரோமர் 11:3,4)*. எலியாவின் ஊழியத்துக்கு ஒரு முடிவை தேவன் உடனடியாக ஏற்படுத்துவதைப் பார்க்கிறோம். *1இராஜா 19:18,19* வாசித்துப் பாருங்கள்.

கொலோ *1:25,26*ல் பவுல் சொல்கிறார், "ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியமாகிய தேவவசனத்தைப் பூரணமாய்த் தெரியப்படுத்துகிறதற்கு உங்கள் பொருட்டு தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே நான் அந்தச் சபைக்கு ஊழியக்காரனானேன்". தனக்கு தேவனால் வெளிப்படுத்தப்பட்ட இரகசியங்களைக் குறித்தும், அவற்றின் மேன்மையைக் குறித்தும் *1 கொரி 15:51,52*, எபே *5:32, 6:20*, ரோமர் *11: 25,26*, கொலோ *1:27, 4:3*, 2தெச *2:7*, 1தீமோ *3:16* வாசித்து அறிந்து கொள்ளுங்கள். **இரகசியங்கள் வெளிப்படுத்தப்படுவது தேவகிருபையின் செயலாற்றல்.** வெளிப்படுத்துகிறவர்களானாலும், வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொள்கிறவர்கள் ஆனாலும் சரி, அது குறித்து பெருமைபாராட்டிக்கொள்ள அவர்களில் ஒன்றும் இல்லை. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தன் சீஷர்களிடம் திட்டவட்டமாக சொல்கிறார், "பரலோகத்தின் இரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது. அவர்களுக்கோ அருளப்படவில்லை" *(மத் 13:11, மாற்கு 4:11, லூக்கா 8:10)*.

**மேலும் கிறிஸ்துவின்மேல் முன்னே நம்பிக்கையாயிருந்த நாங்கள், அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும்படிக்கு (எபே 1:11)**

முந்தின *10*-வது வசனத்தின்படி பரலோகத்திலும் பூலோகத்திலும் உள்ள யாவற்றையும் கிறிஸ்துவின் தலைமையில் ஒன்றுசேர்க்கவேண்டும் என்பது நித்தியத்தில் தீர்மானிக்கப்பட்ட தேவனுடைய சித்தம் என்றாலும், நாம் கிறிஸ்துவின்மேல் வைத்திருக்கும் நம்பிக்கை என்பது கடந்த காலத்தில் இருந்து, நிகழ்காலத்துக்கும், வருங்காலத்துக்கும் நம்மை நடத்திச்செல்வதாக

இருக்கிறது. அதுமட்டுமே அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும் என்ற உண்மை இங்கே சொல்லப்படுகிறது. அவருடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக தேவன் நம்மை தமக்கு சுவீகாரப் புத்திரராக முன்குறித்ததை எபே 1:5,6 வசனங்களில் தியானித்ததை நினைவுபடுத்திக்கொள்ளுங்கள். **நாம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின்மேல் வைக்கும் நம்பிக்கை கிறிஸ்துவின் மகிமைக்குப் புகழ்ச்சியாக அமைகிறது.** எந்த அளவுக்கு கிறிஸ்துவின்மேல் நாம் நம்பிக்கை வைக்கிறோமோ, அந்த அளவுக்கு பிதாவாகிய தேவன் மகிமைப்படுகிறார். இயேசுகிறிஸ்துவினால் உண்டாகும் இரட்சிப்பின் முழுநோக்கமும் தேவனை மகிமைப்படுத்துவதே என்பதை அறிந்துகொள்ளுங்கள். தன்னுடைய மகிமையின் மேன்மையை பறைசாற்றும்படியாகவே பாவமனிதர்களாகிய நம்மை இரட்சித்தார். மேலும் நித்திய நித்தியமாக புதிய வானத்தையும், புதிய பூமியையும் அனுபவிக்கும் சிலாக்கியத்தையும் தரப்போகிறார்.

"கிறிஸ்துவின்மேல் முன்னே நம்பிக்கையாயிருந்த நாங்கள்" என்று இந்த வசனத்திலும், "நாங்கள் முன்குறிக்கப்பட்டு" என்று அடுத்த வசனத்திலும் பவுல் சொல்லும்போது, யூத இனத்தைச் சேர்ந்த தன்னுடைய சகோதர சகோதரிகளை மனதிற்கொண்டு பேசுகிறார். வரப்போகிற மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசனங்களின் அடிப்படையில் சில யூதர்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின்மேல் நம்பிக்கையாயிருந்தார்கள். "நாங்கள்" என பவுல் சொல்லி, தன்னையும் இவ்வாறு குணப்பட்ட யூதர்களில் ஒருவராகச் சேர்த்துக் கொள்கிறார். பன்னிரண்டு அப்போஸ்தலரும் 120 சீஷர்களும் யூதர்களே. சுவிசேஷம் அறிவிக்கப்பட்டவர்களும் யூதர்களே (மத் 10:5,6, 15:24, அப் 11:19). புறஜாதியாரின் அப்போஸ்தலனாக நியமிக்கப்பட்ட பவுலுங்கூட யூதர்களுக்கே சுவிசேஷத்தை முதலாவதாக அறிவிக்க விரும்பினார் என்பது குறிப்பிடத்தக்கது (அப் 13:46). ஆனால் அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளாததன் நிமித்தமே பவுல் புறஜாதியாரைத் தேடிப்போகிறார்.

**தமது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம். (எபே 1:12)**

6வது வசனத்தில் சுவிகாரப்புத்திரராகும்படி முன்குறிக்கப்பட்டதைப் பற்றி இரண்டாவது ஆவிக்குரிய ஆசீர்வாதமாக பேசிய பவுல், இந்த வசனத்தில் முன்குறிக்கப்பட்டு தேவனுடைய சுதந்தரராகும்படி தெரிந்துகொள்ளப்பட்டதை ஆறாவது ஆவிக்குரிய ஆசீர்வாதமாகப் பேசுகிறார். இதையும் நாம் கிறிஸ்துவுக்குள்ளாகவே பெற்றுக்கொள்கிறோம். கிறிஸ்தவர்களாகிய நாம் பிதாவாகிய தேவனால் அவருடைய சுதந்தரராகும்படி தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். நம்மை முன்குறித்தவர் தேவன் என்பதை மட்டுமல்ல, அந்த முன்குறிப்பால் தேவனுடைய தீர்மானத்தின் மேன்மை என்ன என்பதையும் பவுல் அறிவிக்கத் தவறவில்லை, அது உலகத்தில் நடைபெறும் சகல காரியங்களையும் தேவனுடைய ஆலோசனைக்குத் தக்கவாறு நடப்பிக்கிறது.

"சுதந்தரம்" (inheritance, kléronomia உபா *4:20,9:29*) என்ற வார்த்தையை நாம் விளங்கிக்கொள்ளவேண்டும். ஒரு தகப்பனுடைய சொத்தில் உரிமை பாராட்டக்கூடிய அதிகாரமுடையவர்கள்தான் சுதந்தரர் என்று அழைக்கப்படுவார்கள். அவர்கள் பிறந்தபொழுதே அந்த சொத்துக்கு பங்காளிகளாய் இருந்தாலும், ஏற்ற காலத்தில் அவர்கள் முழு உரிமையையும் உடையவர்களாகிறார்கள். விசுவாசிகளின் நிலையும் அவ்விதமாகத்தான் இருக்கிறது. பிதாவாகிய தேவனுடைய சகல ஆசீர்வாதங்களும், கிறிஸ்துவுக்குள், அதாவது அவருடைய மரணத்துக்குள் நமக்குரியதாகிறது. இத்தகைய சுதந்தரவீதம் இஸ்ரவேலருக்கும் வழங்கப்பட்டிருந்தது. எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்ட இஸ்ரவேலரைப் பற்றி மோசே தேவனிடம் சொல்கிறார், "நீர் உமது மகாபலத்தினாலும், ஓங்கிய புயத்தினாலும் புறப்படப்பண்ணின இவர்கள் உமது ஜனமும் உமது சுதந்தரமுமாயிருக்கிறார்கள்" *(உபா 9:29)*. உபாகமம் *4:20, 14:2,*

7:6, யாத் 19:15 வாசித்துப் பாருங்கள். "கர்த்தருடைய ஜனமே அவருடைய பங்கு; யாக்கோபு அவருடைய சுதந்தர வீதம்" (உபா 32:9). இவ்வாறு அவர்கள் சுதந்தரவாளிகளாகக் கருதப்பட்டதனால்தான் கிறிஸ்துவின் சுவிசேஷம் முதலாவதாக யூதர்களுக்கே அறிவிக்கப்பட்டது.

இந்த சுதந்தரம் தற்செயலாக நடந்த ஒன்றல்ல, தேவனால் முன்குறிக்கப்பட்ட ஒரு காரியம். அதை பிதா தமது சொந்த தீர்மானத்தின்படியும், தமது ஆலோசனையின்படியும் தேவனே முடிவு செய்தார். எனவே அதில் எந்தத் தவறோ அல்லது மாற்றமோ இருக்கமுடியாது. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட சுதந்தரம் நிரந்தரமானதாகவும், நித்தியத்துக்கடுத்ததாகவும் இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. ஏனென்றால் அதை தேவனே தன்னுடைய மகிமை புகழ்பெற்று விளங்கும்பொருட்டு நடப்பித்தார்.

பொதுவாக ஒரு மரணத்துக்குப் பின்புதான் பிள்ளைகள் சுதந்தரவீதத்தைப் பெற்றுக்கொண்டு அனுபவிக்கிறார்கள். பிதாவாகிய தேவன் தன்னுடைய ஒரே பேறான குமாரனை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்ததின் விளைவாக நாம் சுதந்தரவாளிகளாக ஏற்றுக்கொள்ளப்படுகிறோம். இஸ்ரவேலர் தங்களுடைய சுதந்தரவீதத்தை கானானில் பெற்றுக்கொண்டார்கள் என்றால், கிறிஸ்தவர்களாகிய நாமோ பரமகானானில் அதை சுதந்தரித்துக்கொள்வோம்.

**நீங்களும், உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள். (எபே 1:13)**

பரிசுத்த ஆவியானவருக்குள் கிறிஸ்தவர்களாகிய நாம் பெற்றுக்கொள்ளும் முத்திரை நாம் பெற்றுக்கொள்ளக்கூடிய ஏழாவது ஆவிக்குரிய ஆசீர்வாதமாகிறது. முத்திரை என்ற வார்த்தை தேவன் நமக்குத் தரும் அங்கீகாரத்தையும், அதிகாரத்தையும் குறிப்பிடுகிறது.

பார்வோனின் முத்திரை மோதிரத்தைப் பெற்றுக் கொண்டதும் யோசேப்பு எகிப்தின் பிரதம மந்திரி ஆகிறார் அல்லவா (ஆதி *41:42,43*). இந்த முத்திரையிடப்படும் அனுபவத்தை பிதாவாகிய தேவன் ஏற்கனவே வாக்குபண்ணியிருக்கிறார். எசேக் *36:26*, *37:1-14*, யோவேல் *2:28*, லூக்கா *24:49*, அப் *1:4* வாசித்துப் பாருங்கள். இந்த முத்திரை நாம் பிதாவின் சொந்த ஜனம் என்ற அங்கீகாரத்தை நமக்குத் தருகிறது. இந்த அங்கீகாரம் எப்போது கொடுக்கப்படுகிறது என்பதையும் பவுல் இந்த வசனத்தில் அறிவிக்கிறார். இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்தியவசனத்தைக் கேட்கிறபோது நாம் இந்த முத்திரையைப் பெற்றுக்கொள்கிறோம்.

முந்தின இரண்டு வசனங்களிலுள்ள "நாங்கள்" என்ற வார்த்தை பிறப்பினாலும் வளர்ப்பினாலும் யூத இனத்தைச் சேர்ந்தவர்களாயிருந்து சத்தியத்தை ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவர்களாக மாறியவர்களைக் குறிப்பிடுகிறது என்று பார்த்தோம். நிச்சயமாகவே அவர்கள் கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரராகும்படி தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்தான். "நீங்கள்" என்று பவுலால் இந்த வசனத்தில் குறிப்பிடப்படுகிறவர்கள் யூதர்கள் அல்ல, புறஜாதியார். அவர்கள் கிரேக்கர், ரோமர் அல்லது மற்ற தேசத்தாராயிருக்கலாம். எபேசு சபை கூடுதலாக புறஜாதியார் அடங்கிய சபை என்பதை நாம் அறிவோம்.

இவர்கள் எவ்விதமாக பரிசுத்த ஆவியானவரால் அவருக்குள் முத்திரை போடப்பட்டார்கள்? புறஜாதியார் எவ்வாறு விசுவாசிகளானார்கள்? பவுல் மூலமாக தேவன் நடப்பித்த அதிசயங்களையும் அற்புதங்களையும் பார்த்ததாலா? அல்லது அவைகளைக் குறித்து கேள்விப்பட்டதாலா? அல்லது திரளான பிசாசுகளை மனிதர்களின் சரீரத்தில் இருந்து விரட்டி அவர்களுக்கு விடுதலை கொடுத்ததைக் கண்டதாலா? இப்படிப்பட்ட கிரியைகள் ஆசீர்வாதமானவைதாம், ஆனால் இவைமாத்திரம் எந்தவொரு மனிதனையும் இரட்சிப்பதில்லை. உலகத்து நன்மைகளுக்காகவும், ஆசீர்வாதங்களுக்காகவும் மட்டும் கிறிஸ்துவிடம் வருகிறவர்கள் அவரில் நீண்டகாலம் நிலைத்திருக்கமாட்டார்கள். *1*கொரி *15:19*

வாசித்துப் பாருங்கள். இரட்சிப்பின் சுவிசேஷமாகிய தேவனுடைய வசனத்தைக் கேட்பதில்தான் இரட்சிப்பு அடங்கியிருக்கிறது (ரோமர் *1:16*).

தேவனுடைய சுதந்தரராகும்படி ஒருவன் தெரிந்துகொள்ளப்பட வேண்டுமானால் அவன் செய்யவேண்டிய இரண்டு காரியங்கள் இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. முதலில் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்கவேண்டும். "அவ்வரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்" (*ரோமர் 10:14*) என்கிறார் பவுல். ஆனால் கேட்டால் மட்டும் போதாது. "ஆசியாவில் குடியிருந்த யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள்" (*அப் 19:10*). ஆனால் எல்லாரும் விசுவாசிக்கவில்லை. விசுவாசிக்கும்போது மட்டுமே பரிசுத்த ஆவியானவருக்குள் அவர்கள் முத்திரையிடப்படுகிறார்கள். ஆவியானவரின் ஆளுகைக்குள் வந்த அவர்கள் தேவனுக்குச் சொந்தமானவர்கள் என்ற அந்தஸ்தைப் பெறுகிறார்கள் (*ரோமர் 8:15, கலா 4:6*). "நான் உங்களுக்கு பிரசங்கித்த சுவிசேஷம்" (*1கொரி 15:1*) என்று பவுல் எதைக் குறிப்பிடுகிறார் என்பதைக் கவனியுங்கள். "நான் அடைந்ததும், உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்தார்" (*2-4*). இதை அறிவிப்பதே சுவிசேஷம் (நற்செய்தி).

இதுவே இரட்சிப்பின் சுவிசேஷம் என்று அழைக்கப்படுகிறது. இரட்சிப்பு என்ற வார்த்தை மூன்று காலங்களையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. கடந்த காலத்தில் நாம் செய்த பாவத்தினிமித்தம் ஆயத்தமாக்கப்பட்ட தண்டனையில் இருந்து இரட்சிக்கப்பட்டோம் (*லூக்கா 7:50*). நிகழ்காலத்தில் நம்முடைய அனுதின வாழ்க்கையில் பாவம் நம்மை மேற்கொள்ளாதபடி கிறிஸ்து நம்மில் ஜீவிப்பதினாலே இரட்சிக்கப்படுகிறோம் (*ரோமர் 5:10*). எதிர்காலத்தில் தேவனுடைய ராஜ்யத்துக்குள் பிரவேசித்தபிறகு நாம் எந்தவிதமான பாவமும்

இல்லாதிருப்போம் (*யோவான் 3:5*). இதுவே "கிறிஸ்துவின் சுவிசேஷம்" (*1கொரி 9:12*), "தேவனுடைய கிருபையின் சுவிசேஷம் (*அப் 20:24*). "ராஜ்யத்தின் சுவிசேஷம்" (*மத் 4:23*), "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம்" (*2தெச 1:7*) என்றும் இது அழைக்கப்படுகிறது.

இந்தக் கடைசி நாட்களில் உலகமெங்கும் இரட்சிப்பின் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுக் கொண்டு வருகிறது என்பது உண்மைதான். இதைக் கேட்கிறவர்கள் எல்லாருமே இரட்சிக்கப்பட்டதாக நாம் நினைத்துக் கொள்வோமேயானால் தவறு நம்முடையது. கிறிஸ்து தங்களுக்கு உலக ஆசீர்வாதங்களையும், நன்மைகளையும், வியாதியிலிருந்து சுகத்தையும், சத்துருவின் கட்டுகளிலிருந்துவிடுதலையையும் தரவேண்டும் என்பதற்காகவே பெரும்பான்மையோர் சபைகளுக்கும், கிறிஸ்தவக் கூட்டங்களுக்கும் வருகிறார்கள். கர்த்தரைத் தேடுகிற இவர்கள் கர்த்தருடைய வழிகளைத் தேடுகிறதில்லை. அதை ஊழியக்காரர்கள் போதிப்பதுமில்லை. அவர்கள் சத்தியவசனத்தைக் கேட்டு அதை விசுவாசிக்கும்போது மட்டுமே இரட்சிப்பு உண்டாகிறது. "விசுவாசம் கேள்வியினாலே வரும். கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (*ரோமர் 10:17*). தேவனுடைய வசனமே மனிதர்கள் எவ்வாறு மீட்கப்படவேண்டும், எவ்வாறு தேவனுடன் ஒப்புரவாகவேண்டும் என்ற நற்செய்தியை மனிதனுக்கு அறிவிக்கிறது.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள் என்கிறார் பவுல். பரிசுத்த ஆவியானவரை நமக்குத் தருவதாக பிதாவாகிய தேவன் நமக்கு வாக்குபண்ணியிருப்பதை பவுல் நம் நினைவுக்குக் கொண்டு வருகிறார். யோவேல் *2:28,29*ல் அவர் சொல்கிறார், "நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் ... ஊழியக்காரர் மேலும் ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்". எசேக்கியேல் *36:27*ல் அவர் சொல்கிறார், "உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும், என்

நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும் பண்ணுவேன்". இந்த பிதாவின் வாக்குத்தத்தங்களை முன்னிட்டு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் தன்னுடைய அப்போஸ்தலர்களிடம் சொல்கிறார், "நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்தய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தருவார் (யோவான் *14:16*). யோவான் *15:26, 16:13* வாசித்துப் பாருங்கள். மரித்து உயிர்த்தெழுந்த இயேசு தன்னுடையவர்களுக்குச் சொல்கிறார், "என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் (லூக்கா *24:49*). தான் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு சற்று முன்பும் சொல்கிறார், "என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்" *(அப் 1:5)*.

இவ்வாறு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியானவர் இரண்டு காரியங்களை ஒரு விசுவாசிக்குள் நடப்பிக்கிறார். முதலாவது அவர் முத்திரை போடுகிறார். அதாவது நம்முடைய இரட்சிப்பைக் குறித்த உள்ளான நிச்சயத்தைத் தருகிறார். அதுவே இந்த வசனத்தில் சொல்லப்படுகிறது. இரண்டாவது அவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார். இது குறித்து அடுத்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. *2*கொரிந்தியர் *1:22*ல் இந்த இரண்டு கிரியைகளும் இணைத்து சொல்லப்பட்டிருக்கிறது: "அவர் நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார்". ஒரு பொருள் அல்லது பத்திரத்தின்மேல் முத்திரை போட்டு அது நமக்குச் சொந்தமானது என்பதை உறுதிப்படுத்துகிறோம். அதின்மேல் நமக்குள்ள உரிமையையும் அதிகாரத்தையும் நிலைநிறுத்துகிறோம். எரேமியா *32:10,11* வாசித்துப் பாருங்கள். வெளிப்படுத்தின விசேஷம் 7-வது அதிகாரத்தில் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேர் உபத்திரவ காலத்தில் ஊழியம் செய்யும்விதத்தில் நெற்றியில் முத்திரை

போடப்பட்டு பாதுகாக்கப்படுவதைப் பாருங்கள் (7:2-4). இயேசுவின் கல்லறையை பத்திரப்படுத்தவும் முத்திரை போடப்பட்டது (மத் 27:65,66). ராஜாவின் முத்திரை அவரிடமிருந்து வரும் அதிகாரத்தை வெளிப்படுத்துகிறது. "அகாஸ்வேரு ராஜாவின் பேரால் எழுதப்பட்டு, ராஜாவின் மோதிரத்தினால் முத்திரை போடப்பட்டதைச் செல்லாமற் போகப்பண்ண ஒருவராலும் கூடாது" (எஸ் 8:8).

பரிசுத்த ஆவியானவர் முத்திரை போடுவதால் நம்முடைய இரட்சிப்பு நிலைநிறுத்தப்படுகிறது. எபேசு சபையார் ஆவியானவரால் முத்திரை போடப்பட்ட சம்பவம் அப் 19:1-6ல் சொல்லப்பட்டிருக்கிறது. சத்திய வசனத்தைக் கேட்டு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து நாம் பிதாவாகிய தேவனுக்குச் சொந்தமானவர்கள் என்பதை உறுதிப்படுத்தும்படியாகவே பரிசுத்த ஆவியானவர் என்ற முத்திரை நமக்குத் தந்தருளப்படுகிறது. நம்முடைய சரீர மீட்பின் நாள் வரை அது நமக்குப் பாதுகாப்பைத் தருகிறது என்பதால்தான் "நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள் (எபே 4:30) என்று சொல்லப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டு நாட்களில் இஸ்ரவேலர் தங்கள் சரீரத்தில் செய்துகொண்ட விருத்த சேதனம் அவர்களுக்கு பாதுகாப்பைக் கொடுக்கும் முத்திரையாகக் கருதப்பட்டது என்பதை ரோமர் 4:11,12ல் அறிந்து கொள்கிறோம். ஆனால் ஆபிரகாம் விசுவாசத்தினாலே பெற்றுக் கொண்ட நீதிக்கு சரீரப்பிரகாரமான அடையாளமாக மட்டுமே விருத்தசேதனம் கருதப்படவேண்டும்.

**அவருக்குச் சொந்தமானவர்கள், அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார் (எபே 1:14)**

சுதந்தரம் என்றால் என்ன என்பதைக் குறித்து 12-வசனத்தில் ஏற்கனவே தியானித்திருக்கிறோம். பரிசுத்த ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின், நாம் உறுதியாகவே பெற்றுக்கொள்ளவிருக்கும் ஆசீர்வாதத்துக்கு அச்சாரமாகவே (earnest, arrabon) இருக்கிறார் என்பது

கிறிஸ்தவர்களாகிய நாம் பெற்றுக்கொள்ளும் எட்டாவது ஆவிக்குரிய ஆசீர்வாதமாக இந்த வசனத்தில் சொல்லப்படுகிறது. *11, 12* வசனங்களில் "நாங்கள்" என்று சொல்லும்போது அப்போஸ்தலனாகிய பவுல் யூத இனத்தைச்சேர்ந்த கிறிஸ்தவர்களைக் குறிப்பிடுகிறார் என்றும், 13வது வசனத்தில் "நீங்கள்" என்று சொல்லும்போது புறஜாதி இனத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்களையும் குறிப்பிடுகிறார் என்றும் பார்த்தோம். இந்த வசனத்தில் "நம்முடைய" என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. இது யூதர்களையும் புறஜாதியாரையும் உள்ளடக்கிய கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபை என்ற அமைப்புக்குள் இருக்கும் கிறிஸ்தவர்களாகிய நம்மைக் குறிப்பிடுகிறது என்று பார்க்கிறோம். இது முதற்கொண்டு யூதர், புறஜாதியார் என்ற வித்தியாசம் இருப்பதில்லை. ரோமர் *3:30* சொல்கிறபடி, "விருத்தசேதனமுள்ளவர்களை விசுவாசத்தினாலும், விருத்தசேதனமில்லாதவர்களை விசுவாசத்தின் மூலமாயும் நீதிமான்களாக்குகிற தேவன் ஒருவரே". அல்லேலூயா.

"அவருக்குச் சொந்தமானவர்கள்" என்று இந்த வசனம் துவங்குகிறது. நாம் நமக்குச் சொந்தமானவர்கள் அல்ல என்ற சத்தியத்தை பவுல் பல இடங்களில் வலியுறுத்துகிறார். 1கொரி *3:23*ல் சொல்கிறார், "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்". ரோமர் *14:8*ல் சொல்கிறார், "பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம். நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? என்று *1*கொரி *6:19*ல் சொல்கிறார். அவருக்குச் சொந்தமானவர்களை சர்வ வல்லமையுள்ள தேவன் நிச்சயமாகவே மீட்பார் என்ற உறுதியை பவுல் இங்கே அறிவிக்கிறார். கிறிஸ்துவின் இரத்தத்தினாலே நாம் ஏற்கெனவே மீட்டுக்கொள்ளப்பட்டாயிற்று (எபே *1:7*). ஒவ்வொரு நாளும் பரிசுத்த ஆவியானவர் ஆவியின்படி நடக்கவைத்து கிறிஸ்துவின் சாயலை நம்மில் உருவாக்கிக் கொண்டே இருப்பதால் அனுதினமும் நாம் இரட்சிக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறோம் (ரோமர் *8:1-4*). கிறிஸ்துவின் வருகையின்போது நாம் பூரணமாக இரட்சிக்கப்படுவோம். ஏனென்றால் நாம் பாவமற்றவர்களாய் அவரைப்போல் மாறிவிடுகிறோம் (1யோவான்

*3:9,2).* மேலும் மனித இனத்தின் மீட்பு தேவனுடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கிறது என்பதை *11*-வது வசனத்திலேயே தியானித்திருக்கிறோம்.

நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாக பரிசுத்த ஆவியானவர் விளங்குகிறார் (Guarantee of our inheritance). சுதந்தரம் என்ற வார்த்தையைக் குறித்து *12*-வது வசனத்தில் விளக்கமாகப் பார்த்தோம். அச்சாரம் என்பதற்குப் பயன்படுத்தப்படும் arrabōn என்ற கிரேக்கபதம் தவணை முறையில் ஒரு பொருளை வாங்கும் ஒரு மனிதன் முதலாவது கொடுக்கும் முன்பணம் (advance), முதல் தவணை (down payment) அல்லது உத்திரவாதம் (guarantee) என்று மூன்று வகையில் பொருள்படும். இந்த முன்பணம் கொடுத்ததுமே அவர் அந்தப் பொருளின் உரிமைதாரராக அதை சுதந்தரித்துக் கொள்கிறார். மீதமுள்ள பணம் ஏற்ற சமயத்தில் செலுத்தப்படும் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் அச்சாரம் என்ற முன்பணம் செலுத்தப்பட்டு, அதுவும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. 2கொரி *1:22*ல் நாம் ஏற்கெனவே பார்த்தபடி, "அவர் நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார்". அதன் விளைவாக நாம் நமக்குச் சொந்தமானவர்கள் அல்ல, நாம் அவரால் கிரையத்துக்குக் கொள்ளப்பட்டவர்கள். கிரையத்துக்கான முதல் தவணை கொடுக்கப்பட்டாயிற்று. எனவே அவருக்குச் சொந்தமானவர்கள்.

## அப்போஸ்தலரின் ஜெபம் (1:15-23)

**ஆனபடியினாலே, கர்த்தராகிய இயேசுவின்மேலுள்ள உங்கள் விசுவாசத்தையும், பரிசுத்தவான்களெல்லார் மேலுமுள்ள உங்கள் அன்பையுங்குறித்து நான் கேள்விப்பட்டு (எபே 1:15)**

எபேசு சபையாருக்குக் கொடுக்கப்பட்ட ஏழு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை எபே *1:3-14*-ல் குறிப்பிட்டு தேவனை ஸ்தோத்திரித்துவிட்டு தொடர்ச்சியாக *15-23* வரையுள்ள வசனங்களில் சபைக்காக பவுல் ஜெபிக்க ஆரம்பிக்கிறார். இந்த வேதபகுதியும்

கிரேக்க மொழியில் 169 வார்த்தைகள் அடங்கிய ஒரே வாக்கியமாக அமைகிறது என்பது குறிப்பிடத்தக்கது. கொலோசெயரிலும் 1:9-11ல் ஒரே வாக்கியத்தில் அவருடைய ஜெபம் காணப்படுகிறது. அவருடைய நிருபங்களில் 2 கொரிந்தியர் மற்றும் கலாத்தியர் தவிர மற்ற எல்லாவற்றிலும் அவருடைய ஜெபம் இடம்பெறுகிறது.

"ஆனபடியினாலே" என்று இந்த வசனத்தைத் துவக்கி, எந்த பின்னணியில் இந்த ஜெபத்தை ஏறெடுக்கிறார் என்பதை பவுல் அறிவிக்கிறார். எபேசு சபையாரை தேவனாகிய கர்த்தர் ஆவிக்குரிய விதத்தில் ஆசீர்வதித்ததினாலே என்று பொருள்கொள்ள வேண்டும். ஆசீர்வாதங்களைப் பெற்ற அவர்களுக்கு இன்னும் ஆசீர்வாதங்கள் தேவையாயிருக்கிறது என்பதால் பவுல் ஜெபிக்கிறார் (எபே 3:1). சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக அவர் எபேசு பட்டணத்தில் ஊழியம் செய்த நாட்களில் அவர்களுடைய ஆவிக்குரிய நிலைமை எவ்வாறு இருந்தது என்பதை அவர் நன்றாகவே அறிந்திருக்கவேண்டும். எபேசு சபையின் ஸ்தாபகர் என்ற முறையில் அவர்களிடம் எப்படிப்பட்ட விசுவாசம் காணப்பட்டது, எத்தகைய அன்புள்ளவர்களாக இருந்தார்கள் என்பதை அவர் அறிவார். இப்பொழுது ரோமாபுரியில் கட்டப்பட்டவராயிருக்கும்போது அவர்களைக் குறித்த சில செய்திகளை பவுல் கேள்விப்படுகிறார். விசேஷமாக இரண்டு காரியங்களைக் குறித்து பவுல் கேள்விப்பட்டதாக அறிவிக்கிறார்.

1. இயேசுவின் மேலுள்ள அவர்களது விசுவாசம்.
2. பரிசுத்தவான்கள்மேல் அவர்களுக்கிருந்த அன்பு.

எபேசு சபையாரின் விசுவாசத்தையும் அன்பையும் குறித்து பவுல் கேள்விப்பட்ட பெலமான சாட்சிகளே இந்த விலையேறப்பெற்ற நிருபத்தை எழுதும்படியாகச் செய்தது. கிறிஸ்தவ வாழ்க்கையில் வளர்ச்சி என்பது அனுதினமும் இருக்கவேண்டிய ஒன்று. அவர்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களினிமித்தம் திருப்தி அடைந்து விட்டால் பின்தங்கிவிடக்கூடும் என்பதாலேயே அவர்களுக்காக கூடுதலாக ஜெபித்து உற்சாகப்படுத்துகிறார் (ரோமர் 1:9, பிலிப் 1:4,

கொலோ *1:9*, *1* தெச *1:2-4*, *2* தெச *1:12*, பிலே *5)*. தேவனை அறிவதிலும், அவருடைய வல்லமையை ருசிப்பதிலும் அவர்கள் முதிர்ச்சியடையவேண்டும் என்று விரும்புகிறார்.

கொலோசெயருக்கு எழுதின நிருபத்திலும் "கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள உங்கள் விசுவாசத்தையும், பரிசுத்தவான்களெல்லார் மேலுமுள்ள உங்கள் அன்பையுங் குறித்து நாங்கள் கேள்விப்பட்டு" என்கிறார் பவுல் (கொலோ *1:3*). ஒருமனிதன் தேவனை அறிந்திருக்கிறான் என்பதை உறுதிப்படுத்தும் காரியங்கள் விசுவாசமும் அன்பும் என்று சொன்னால் அது மிகையாகாது. "அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்" (கலா *5:6*) என்று சொல்லப்பட்டிருக்கிறது. தன்னுடைய இரண்டாவது ஜெபத்திலும் பவுல் விசுவாசத்தையும் அன்பையும் வலியுறுத்திப் பேசுவதைப் பாருங்கள் (எபே *3:17*). இன்னொரு காரியத்தையும் கவனியுங்கள். வெறுமனே "உங்கள் விசுவாசம்" என்று சொல்லாமல் "கர்த்தராகிய இயேசுவின் மேலுள்ள உங்கள் விசுவாசம்" என்கிறார் பவுல். அன்பைப் பற்றி பேசும்போது, இயேசுவின் மேலுள்ள உங்கள் அன்பு என்று சொல்லாமல், "பரிசுத்தவான்களெல்லார் மேலுமுள்ள உங்கள் அன்பு" என்கிறார்.

நாம் விசுவாசிக்கவேண்டிய முதல் காரியம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே கர்த்தர் என்பது. பழைய ஏற்பாட்டில் இந்த வார்த்தை யெகோவாவை மட்டுமே குறிப்பிடுகிறது. "நானே கர்த்தர், வேறொருவர் இல்லை" (ஏசாயா *45:5,6,18*) என்று வாசிக்கிறோம். ஆனால் பிலிப்பியர் *2:11* சொல்கிறது, "பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்".

கர்த்தராகிய இயேசுவின்மேல் எபேசு சபையார் வைத்திருக்கும் விசுவாசத்தைக் குறித்து பவுல் கேள்விப்படுகிறார். கிறிஸ்தவர்களாகிய நாம் குறிப்பாக ஒரு உபதேசத்தையோ, உபதேசத்தைப் போதிக்கும் ஊழியக்காரர்களையோ விசுவாசிப்பதில்லை. கிறிஸ்து என்ற

தனிப்பட்ட நபரை மட்டுமே விசுவாசிக்கிறோம். "நான் விசுவாசிக்கிறவர் இன்னார் என்று அறிவேன்" (2 தீமோ 1:12) என்கிறார் பவுல். "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே" (கலா 3:26) என்று வாசிக்கிறோம். "கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தையும் அடைவார்கள்" (1 தீமோ 3:13). 1 தீமோ 1:14, 2 தீமோ 3:15 வாசித்துப் பாருங்கள்.

தன்னுடைய எல்லா நிருபங்களிலுமே பவுல் விசுவாசத்தின் மேன்மையைக் குறித்துப் பேசுவதால் அவர் விசுவாசத்தின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்படுகிறார். இதுபோலவே யோவான் அன்பின் அப்போஸ்தலர் என்றும், பேதுரு நம்பிக்கையின் அப்போஸ்தலர் என்றும், யாக்கோபு கிரியைகளின் அப்போஸ்தலர் என்றும் அழைக்கப்படுகிறார்கள். "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" (ரோமர் 1:17) என்பதுதான் ரோமர் நிருபத்தின் அஸ்திபார சத்தியம். கிறிஸ்தவ மார்க்கத்தில் மிகப்பெரிய எழுப்புதல் உருவாக இந்த நிருபம் காரணமாக இருந்தது என்று சொன்னால் அது மிகையாகாது.

அடுத்ததாக பவுல் எபேசு சபையாரிடமிருந்த அன்பைக் குறித்து, தான் கேள்விப்பட்டதாகச் சொல்லுகிறார். "இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது. இவைகளில் அன்பே பெரியது" (1கொரி 13:13). "தேவன் அன்பாகவே இருக்கிறார்" (1 யோவான் 4:8,16) என்பதால் அன்பைவிட மேலானதொரு வல்லமை இருக்கமுடியாது. "உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக, என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும்" (கலா 5:14) என்கிறார் பவுல்.

யோவான் 13:35ல் இயேசு சொல்கிறார், "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்". கிறிஸ்துவின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் இருந்தால்மட்டும்

போதாது. யோவான் சொல்லுகிறபடி, "நாம் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமாயிருந்து, அவர் நமக்குக் கட்டளையிட்டபடி ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே அவருடைய கற்பனையாயிருக்கிறது" *(1 யோவா 3:23)*. அன்பின் மகத்துவத்தை அறிவிக்கும்படியாக ஒரு தனி அதிகாரத்தை எழுதிய பவுல், அதில் சொல்கிறார், "அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்து போம்" *(1கொரி 13:8)*. ஆனாலும் அன்பினிமித்தம் பாராட்டப்பட்ட எபேசு சபையைக்குறித்து வேதனையோடு வெளிப்படுத்தப்படுவதாவது, "நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு" *(வெளி 2:4)*. நம்முடைய அன்பு குறைவுபடாமல் பார்த்துக்கொள்வது நம்முடைய முழுப்பொறுப்பு ஆகும்.

சபையாரின் அன்பு யார்மேல் வைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் பவுல் சுட்டிக்காட்டுகிறார். தேவனால் தனக்கென்று பிரித்தெடுக்கப்பட்ட பரிசுத்தவான்கள்மீது அவர்கள் அன்பு பாராட்டுகிறார்கள். கிறிஸ்துவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப் பட்டவர்களாய், உலகத்தில் இருந்தும், அதன் சகல ஆசாபாசங்களில் இருந்தும் வேறுபிரிக்கப்பட்டு, தேவனுக்கென்று தங்களைப் பிரதிஷ்டை செய்துகொண்டவர்களே பரிசுத்தவான்கள். உலகத்து மனிதர்களால் இவர்கள்மேல் அன்புகூரவே முடியாது. கலாத்தியர் *5:13* சொல்கிறது, "அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்".

**இடைவிடாமல் உங்களுக்காக ஸ்தோத்திரம் பண்ணி, என் ஜெபங்களில் உங்களை நினைத்து, (எபே 1:16)**

எபேசு பட்டணத்திலிருந்து பல்லாயிரக்கணக்கான மைல் தூரத்தில் இருந்த பவுல், எந்த நேரத்திலும் தனக்கு எதிரான விசாரணை துவங்கி, அதன் முடிவில் ராயனால் மரணதண்டனைக்கு ஒப்புக்கொடுக்கப்படும் அபாயத்தில் தான் இருப்பதையும் அவர்

அறிவார். ஆனாலும் அவர் எபேசு சபையாருக்காக இடைவிடாமல் ஜெபிப்பதாக அறிவிக்கிறார். கொலோ 4:2ல் அவர் சொல்கிறார், "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்." 1தெச 5:17, எபே 6:18, ரோமர் 12:12 வாசித்துப் பாருங்கள். இரண்டு காரியங்களைச் செய்வதாக அவர் சொல்கிறார்.

1. இடைவிடாமல் ஸ்தோத்திரம் பண்ணுகிறார்

2. அவர்களுக்காக ஜெபிக்கிறார்.

நம்முடைய எல்லா ஜெபங்களிலும் ஸ்தோத்திரம் செய்வது, (தேவன் நமக்கு அருளிச் செய்த நன்மைகளுக்காக அவரைத் துதித்து நன்றி சொல்வது) ஒரு முக்கியமான பகுதியாக இருக்கவேண்டும் என்பதை இந்த வசனத்திலிருந்து அறிந்து கொள்கிறோம். மீனின் வயிற்றிலிருந்த யோனா நீண்ட ஜெபம் பண்ணுகிறான் (யோனா 2:1-7). ஒன்றும் நடந்ததாகத் தெரியவில்லை. கடைசியில் 9-ம் வசனத்தில் "நானோவெனில் துதியின் சத்தத்தோடு உமக்குப் பலியிடுவேன்" என்கிறார். அடுத்த வசனம் சொல்கிறது, "கர்த்தர் மீனுக்குக் கட்டளையிட்டார், அது யோனாவைக் கரையிலே கக்கிவிட்டது". ஸ்தோத்திர பலிக்கு அவ்வளவு வல்லமை உண்டு.

பல கிறிஸ்தவர்கள் தங்களுடைய ஆசீர்வாதங்களுக்காக தொடர்ந்து ஜெபிக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் அவர்கள் ஏற்கனவே கிறிஸ்துவுக்குள் சகல ஆசீர்வாதங்களையும் சுதந்தரித்திருப்பதை உணர்ந்துகொள்ளாமல் இருப்பதே அதற்குக் காரணம். ஜெபத்தோடு ஸ்தோத்திரத்தையும் இணைத்துக்கொள்ளும் கிறிஸ்தவர்கள் மட்டுமே அவருக்குள் பவுலைப்போல் ஆழமான ஆவிக்குரிய அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். "ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான்" (சங் 50:23) என்று சொல்லப்பட்டிருக்கிறது. தேவனை மகிமைப்படுத்துகிறவன் ஒருபோதும் அதற்கான பிரதிபலனை அடைந்து கொள்ளாமற்போவதில்லை.

*2தெச 2:13ல் பவுல் சொல்கிறார், "நாங்கள் உங்களைக் குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளா-யிருக்கிறோம்". சங் 34:1ல் தாவீது சொல்கிறார், "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்". தன்னுடைய நிருபங்களில் 26 இடங்களில் பவுல் தேவனை ஸ்தோத்திரிப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். ஸ்தோத்திரங்களோடு ஜெபம் இணையும்போது அது மிகுந்த வல்லமையோடும் வேகத்தோடும் பிதாவை வந்து சேருகிறது. அதனால்தான் பிலிப் 4:6ல் பவுல் இவ்வாறு ஆலோசனை தருகிறார், "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்". அதோடு உங்கள் வேலை முடிந்துவிடுகிறது. மீதியானதை அவர் பார்த்துக்கொள்வார். எபே 5:20, கொலோ 3:17, 4:2, 1தெச 5:18 வாசித்துப்பாருங்கள்.*

**நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும், மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத்தந்தருள வேண்டுமென்றும், (எபே 1:17)**

*அப்போஸ்தலனாகிய பவுலின் முதலாவது ஜெபக்குறிப்பு இந்த வசனத்தில் சொல்லப்படுகிறது. மனித இனத்தின் மிக முக்கியமான தேவை தன்னை சிருஷ்டித்த தேவனை அறிந்துகொள்வதுதான் என்பதில் சந்தேகமே இல்லை. ஏனென்றால் யோவான் 17:3 சொல்கிறபடி, "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பினவருமாகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்". தேவனைக் குறித்து நாம் கேள்விப்படலாம். அவரைக் குறித்த சில காரியங்களையும் அவருடைய செயல்பாடுகளையும் அறிந்துகொள்ளலாமேயொழிய, அதனால்மட்டும் நாம் தேவனை அறிந்துகொண்டவர்கள் என்று சொல்லமுடியாது. சுய ஞானத்தினாலே உலகம் தேவனை அறிந்துகொள்ளமாட்டாது (1 கொரி 1:21) என்று சொல்லப்பட்டிருக்கிறது.*

நாகமாத்தியானாகிய சோப்பார் யோபுவிடம் கேட்கிறார், “தேவனுடைய அந்தரங்க ஞானத்தை நீர் ஆராய்ந்து, சர்வவல்லவருடைய சம்பூரணத்தை நீர் அறியக்கூடுமோ? அது வானபரியந்தம் உயர்ந்தது; உம்மால் என்ன ஆகும்? அது பாதாளத்திலும் ஆழமானது, நீர் அறியக்கூடியது என்ன? அதின் அளவு பூமியைப்பார்க்கிலும் நீளமும், சமுத்திரத்தைப் பார்க்கிலும் அகலமுமாயிருக்கிறது” (யோபு 11:7-9). “அவருடைய புத்தி ஆராய்ந்து முடியாதது” (ஏசாயா 40:28). “தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை” (யோவான் 1:18). “கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமாயிருக்கிறார்; அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது” (சங் 145:3). மனித ஞானத்தினாலோ, அறிவினாலோ, திறமையினாலோ, முயற்சியினாலோ ஒருவனும் தேவனை அறிந்துகொள்ளமுடியாது என்பதால்தான் மார்ட்டின் லூத்தர் அவரை “மறைந்திருக்கும் தேவன்” (Hidden God, Deus Absconditus) என்கிறார்.

நம்முடைய ஜெபத்தைக் கேட்டு அதற்குப் பதில் கொடுக்கும் பிதாவாகிய தேவனை பவுல் கர்த்தராகிய தேவன் என்று முதலாவது குறிப்பிடுகிறார். தான் உலகத்தில் இருந்த நாட்களில் எல்லா வேளைகளிலும் கிறிஸ்து அவரை “பிதா” என்றுதான் அழைத்தார் என்றாலும் மத்தேயு 27:46ல் “என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்” என்கிறார். உலகத்தின் பாவங்கள் அவர்மேல் சுமத்தப்பட்ட நிலையில் பிதாவாகிய தேவன் அவரை இமைப்பொழுது கைவிட்டார் (ஏசாயா 54:7). ஏனென்றால் அவர் தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணன் (ஆபகூக் 1:13). இந்த நிலையில் திருத்துவத்தின் இரண்டாவது நபராகிய இயேசு கிறிஸ்துவுக்கு பிதா தேவனாகிறார். பிலிப்பியர் 2:6-8 வாசித்துப் பாருங்கள். “அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டார்” (எபி 5:7). குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டதாக அடுத்தவசனம் அறிவிக்கிறது.

இரண்டாவதாக தேவன் மகிமையின் பிதா (அப் 7:2, 1கொரி 2:8) என்று அழைக்கப்படுகிறார். மகிமை என்ற வார்த்தை (கிரேக்க மொழியில் Shekinah, எபிரெய மொழியில் Kaboel) தேவன் ஒருவருக்கே சொந்தமான மகத்துவம், பரிசுத்தம், ஞானம், பூரணத்துவம், வல்லமை போன்ற மேன்மைகளை உள்ளடக்கியதாக இருக்கிறது. சங் 24:7ல் தேவன் "மகிமையின் ராஜா" என்றும் 29:3ல் "மகிமையுள்ள தேவன்" என்றும் அழைக்கப்படுகிறார். "அவருடைய செயல்பாடுகள் மகிமையும் மகத்துவமுமுள்ளது" (சங் 111:3). "கர்த்தர் மகத்துவமானவர்" (ஏசாயா 63:11). அவர் "தமது மகிமையின் புயத்தினாலே" (ஏசாயா 63:12) இஸ்ரவேலை வழிநடத்தினார். அவருடைய மகிமை பூமிக்கும் வானத்திற்கும் மேலானது" (சங் 148:13). அதனால்தான் தாவீது சொல்கிறார், "உம்முடைய சிறந்த மகிமைப்பிரதாபத்தையும், உம்முடைய அதிசயமான கிரியைகளையுங் குறித்துப் பேசுவேன்" (சங் 145:5).

மகிமையின் பிதாவானவரிடம் குமாரன் இவ்விதமாக சொல்லுகிறார், "நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்கு (அவரை விசுவாசிப்பவர்களுக்குக்) கொடுத்தேன்" (யோவான் 17:22). ஆனாலும் அவருடைய மகிமை எவ்வளவு மகத்துவமானது என்றால் "பூமியெல்லாம் கர்த்தருடைடய மகிமையினால் நிறைந்திருக்கும்" (எண் 14:21). எனவே பிதாவானவரை அறிந்துகொள்ள ஞானத்தையும் (Wisdom, epignosei) தெளிவையும் (revelation) தேவன் எபேசு சபையாருக்குத் தரும்படியாக பவுல் ஜெபிக்கிறார். இந்த கிருபைகளை தேவன் பரிசுத்த ஆவியானவர் மூலமாகவே தந்தருளுகிறார் என்று ஏசாயா 11:2ல் பார்க்கிறோம். இத்தகைய ஜெபக்குறிப்பு கொலோ 1:9லும் காணப்படுகிறது. தேவனை அறிந்துகொள்வதே நித்திய ஜீவன் என்பதைப் பார்த்தோம் (யோவான் 17:3). அவரைக் கொஞ்சம் அதிகமாக அறிவதால் நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம் (பிலிப் 3:10). அவரை சம்பூரணமாக அறிந்துகொள்ளும்போது மகிமைப்படுத்தப் படுகிறோம் (1கொரி 13:9-12).

ஞானத்தையும் தெளிவையும் அறிகிற ஆவி தந்தருளப்படவேண்டும் என்று ஜெபிக்கும்போது பவுல் "ஆவி" என்று

பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிடுகிறாரா அல்லது ஞானமும் தெளிவுமுள்ள மனநிலையைக் குறிப்பிடுகிறாரா என்பதில் வேதபண்டிதர்களிடையே கருத்து வேறுபாடு காணப்படுகிறது. சகல சத்தியத்தையும் நமக்கு வெளிப்படுத்துகிறவர் பரிசுத்த ஆவியானவர்தான் என்பதில் சந்தேகமே இல்லை (*யோவான் 14:26, 16:13, 1கொரி 2:12*) ஆனாலும் *1 கொரி 4:21*ல் "நான் பிரம்போடு உங்களிடத்தில் வரவேண்டுமோ? அல்லது அன்போடும் சாந்தமுள்ள ஆவியோடும் வரவேண்டுமோ?" என்று கேட்கும்போது ஆவி என்ற வார்த்தை நிச்சயமாகவே பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிடவில்லை. எபேசு சபையாரும் கொரிந்து சபையாரும் ஏற்கனவே பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொண்டவர்கள். அவரால் முத்திரிக்கப்பட்டவர்கள் அல்லவா? ஆனாலும் ஆவி என்ற வார்த்தை வந்துவிட்டாலே உடனடியாக நாம் பரிசுத்த ஆவியானவரை மட்டுமே அங்கே பார்க்கிறோம், அவ்வாறு நாம் கற்பிக்கப்பட்டு விட்டோம், எதுவானாலும் ஞானத்தையும் தெளிவையும் நாம் பெற்றிருந்தால் மட்டுமே வேதத்தின் ஆழமான சத்தியங்களை நாம் அறிந்துகொள்ளமுடியும். மெய்தேவன் யார் என்பதைக் கண்டுகொள்ளமுடியும். அவரோடு நெருக்கமான உறவு கொள்வது எப்படி என்பதையும் அறியமுடியும். சத்தியத்தை அறிந்து அதைப்பயன்படுத்தி தேவசித்தத்தைக் கண்டுகொள்ளமுடியும். தேவனை மகிமைப்படுத்தக்கூடிய கனிகொடுக்கும் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளமுடியும்.

**தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும் (எபே 1:18)**

முந்தின வசனத்தில் எபேசு சபையார் பிதாவாகிய தேவனை அறிந்துகொள்ளத் தேவையான ஞானமும் தெளிவும் தந்தருளப்படவேண்டும் என்று ஜெபித்ததைப் பார்த்தோம். இந்த வசனத்தில் இரண்டு ஜெபக்குறிப்புகள் காணப்படுகின்றன. தேவனுடைய அழைப்பினிமித்தம் சபை பெற்றிருக்கும் நம்பிக்கையின்

மேன்மை என்ன என்பதையும், அந்த அழைப்பினிமித்தம் சபையார் மத்தியில் உண்டாயிருக்கிற சுதந்தரத்தின் மேன்மை என்ன என்பதையும் சபை உணர்ந்துகொள்ளவேண்டும் என்றும் பவுல் ஜெபிக்கிறார்.

எபேசு சபையார் நிச்சயமாகவே பிதாவாகிய தேவனிடமிருந்து ஒரு விலையேறப்பெற்ற அழைப்பைப் பெற்றிருக்கிறார்கள். அந்த அழைப்பு அவர்களுக்கு மிகப்பெரிய நம்பிக்கையைக் கொடுத்திருப்பதாக பவுல் சொல்லுகிறார். நம்முடைய தேவன் "மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல அழைக்கிறவர்" *(ரோமர் 4:17)*. "எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்" *(ரோமர் 8:30)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. "தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே" *(2 பேதுரு 1:3)* நாம் நிரப்பப்படவேண்டும். நம்முடைய அழைப்பின் உன்னதமான நோக்கத்தை நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். பவுல் சொல்கிறார், "தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்கவேண்டும்" *(1 தெச 2:11)*. "தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்" *(1கொரி 1:9)*. "நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்" *(1பேதுரு 5:10)* என்று அவர் அழைக்கப்படுகிறார்.

இந்த வசனத்தின்படி தேவன் நம்மை அழைத்ததால் நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை நித்திய மகிமை. நிகழ்காலத்தில் இன்று நாம் பெற்றுக்கொண்ட அழைப்பே வருங்காலத்தில் நம்மை நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்கும்படி செய்கிறது. "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" *(ரோமர் 8:28)* என்கிறார் பவுல். மேலும் சொல்கிறார், "எவர்களை முன்குறித்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ

அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்" *(வசனம் 30, 31)*. தேவனுடைய அழைப்பினால் மனித இனத்துக்கு உண்டான நம்பிக்கையின் மேன்மையை இந்த வசனங்கள் அறிவிக்கின்றன. அவர் துவங்கிய எந்தவொரு காரியத்தையும் நிறைவேற்றி முடிக்காமல் அவர் ஓய்திருப்பதில்லை.

பவுல் மேலும் சொல்கிறார், "அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கையல்ல; ஒருவன் தான் காண்கிறதை நம்பவேண்டுவதென்ன? நாம் காணாததை நம்பினோமாகில், அது வருகிறதற்குப் பொறுமையோடே காத்திருப்போம்" *(ரோம 8:24-25)*. "அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை" *(ஆப 2:3)*. "இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" *(எபி 13:8)* என்பதால், அவருடைய அழைப்பினால் உண்டாகும் நம்பிக்கை ஒருபோதும் மாறுவதில்லை. "அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது" *(எபி 6:19)*. தேவன் வாசமாயிருக்கும் மகாபரிசுத்த ஸ்தலத்துக்குள் நம்மைக் கொண்டுசேர்க்க அது போதுமானதாயிருக்கிறது.

தேவனுடைய அழைப்பினால் நாம் பெற்றுக்கொண்டிருக்கும் மேன்மையான நம்பிக்கையைக் குறித்து சபையார் அறிந்துகொள்ளவேண்டும் என்று ஜெபித்த பவுல் தன்னுடைய மூன்றாவது ஜெபக்குறிப்பையும் இந்த வசனத்தில் தொடர்ச்சியாக அறிவிக்கிறார். இந்த அழைப்பின் மூலமாக பிதாவாகிய தேவன் அவருடைய பரிசுத்தவான்களிடத்தில் ஒரு சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்கிறார் என்று அறிவித்து, அந்த சுதந்தரத்தின் மகிமையின் ஐசுவரியத்தைக் குறித்து சபையாரும் அறிந்துகொள்ளவேண்டும் என்றும் ஜெபிக்கிறார். 14வது வசனத்தில் பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறவர்களாகிய நாம் பெற்றுக்கொள்ளும் சுதந்தரமாகக் குறிப்பிட்டுப் பேசியதைப் பார்த்தோம். ஆனால் இந்த வசனத்தில் விசுவாசிகளாகிய நாம் பரலோகத்தில் அங்கீகரிக்கப்படும்போது தேவனுடைய சுதந்தரமாக அவருக்குச் சொந்தமானவர்களாக

ஏற்றுக்கொள்ளப்படுவோம் என்கிறார். அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் அவருக்குச் சொந்தமானவர்களாக நாம் கிரையத்துக்குக் கொள்ளப்பட்டவர்கள் என்பதால் நிச்சயமாகவே இந்த சுதந்தரம் அவருக்கு விலையேறப்பெற்றதாக இருக்கும். தேவனுடைய பரிசுத்தவான்களே அவருடைய சுதந்தரராகிறார்கள். அதை சபையார் அறிந்து கொள்ளவேண்டிய விதத்தில் அறிந்து கொள்ள தேவன் பிரகாசமான மனக்கண்களைக் கொடுக்கும்படியாக பவுல் ஜெபிக்கிறார்.

இந்த சுதந்தரம் அவருக்குரியது, அவருக்கு மட்டுமே சொந்தமானது. ஏனென்றால் அதைத் திட்டமிட்டதும், செயல்படுத்தியதும், நிறைவேற்றியதும் அவரே. கொலோ *1:12* சொல்கிறபடி, "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவர்" அவரே.

"சுதந்தரத்தின் மகிமையின் ஐசுவரியம்" என்று பவுல் குறிப்பிடுவதைக் கவனியுங்கள். ஐசுவரியம் என்ற வார்த்தை எண்ணிலடங்காத, கணக்கிடப்படமுடியாத, தேவைக்கும் அதிகமாக என்று பலவிதங்களில் பொருள்படும். "தாம் மகிமைக்காக எத்தனமாக்கின கிருபாபாத்திரங்கள்மேல் தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தைத் தெரியப்படுத்த சித்தமாய்" *(ரோமர் 9:23)* இருப்பதால் அவருடைய சுதந்தரம் தேவனுக்கு மகத்துவமானதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. "புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்" *(கொலோ 1:27)* என்று வாசிக்கிறோம். "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்" என்று தொடர்ச்சியாகச் சொல்லப்படுகிறது.

**தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே, விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும்,**

**நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக் கொள்ளுகிறேன். (எபே 1:19)**

இந்த வசனம் பவுலின் நான்காவது ஜெபக்குறிப்பை உள்ளடக்கியதாக இருக்கிறது. சற்று நீளமானதாக இருந்தாலும் எளிதில் விளங்கிக்கொள்ளலாம். சுருக்கமாகச் சொல்வதானால் பவுல் சொல்லும் காரியம் இதுதான். எபேசு சபையார் தேவனுடைய வல்லமை (dunamis, power) எவ்வளவு மேன்மையானது என்பதை அறிந்துகொள்ளக்கூடிய விதத்தில் அவர்களுடைய மனக்கண்கள் திறக்கப்படவேண்டும் என்று பவுல் ஜெபிக்கிறார். தேவனுடைய தெய்வீக வல்லமையால் அவர்கள் நடத்தப்படவேண்டும் என்று கேட்காமல் அதன் மகத்துவத்தை அவர்கள் அறிந்துணர வேண்டும் என்பதே அவருடைய நான்காவது மன்றாட்டாக அமைகிறது.

தேவனுடைய வல்லமையைக் குறித்த முக்கியமான வேதபகுதியை நாம் தியானிக்கவிருக்கிறோம். உலகின் கடைசி நாட்களில் வாழ்ந்துகொண்டிருக்கும் நமக்கு தேவனுடைய வல்லமை ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தி மிகுந்த ஆறுதலையும் உற்சாகத்தையும் தரும் என்பதில் சந்தேகமே இல்லை. இந்த வல்லமையை மனித இனத்துக்குக் கொடுப்பதற்கு தேவன் விருப்பமுடையவராய் இருக்கிறார். மெய்தேவனை அறிந்து, ஏற்றுக்கொள்வதன் மூலம் நாம் அதை இலவசமாகப் பெற்றுக்கொள்ளமுடியும். நாம் செய்யவேண்டியது எல்லாம் அந்த வல்லமையை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளவேண்டும். அதை உரிமையாக்கிக்கொள்ளவேண்டும். அந்த வல்லமையே கிறிஸ்துவை மரித்தோரில் இருந்து எழுப்பிற்று (வசனம் 19). அந்த வல்லமையே இம்மையில் மாத்திரமல்ல, மறுமையிலும் அவருடைய நாமத்தை உயர்த்தியது (வசனம் 20). பிதாவின் வலதுபாரிசத்திலே அமர்ந்திருக்கச்செய்தது (வசனம் 21). அந்த வல்லமையே எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தியது (வசனம் 22). அந்த வல்லமையே திருச்சபையின் பெருந்தலைவராக கிறிஸ்துவை நியமித்தது (வசனம் 23).

தேவனுடைய வல்லமையின் மேன்மையான மகத்துவம் எப்படிப்பட்டது என்பதை முதலில் நாம் அறிந்துகொள்ளவேண்டும் என்று பவுல் ஜெபிக்கிறார். "அறியும்படி" என்று பவுல் சொல்லும்போது, அந்த வல்லமையைக் குறித்த நிச்சயமுடையவர்களாய் இருக்கவேண்டும் என்று பவுல் விரும்புகிறார். **தோமாவைப்போல தேவனுடைய வல்லமையை சந்தேகிப்போமானால் நாம் அவரைக் கனம் பண்ணுகிறவர்களாக இருக்கமாட்டோம்.** தாவீது மிகுந்த நிச்சயத்தோடு சொல்கிறார், "தேவரீர் எல்லாவற்றையும் ஆளுகிறவர்; உம்முடைய கரத்திலே சத்துவமும் வல்லமையும் உண்டு" *(1 நாளா 29:12)*. யோபு சொல்லுகிறார், "அவர் தம்முடைய வல்லமையினால் சமுத்திரக் கொந்தளிப்பை அமரப்பண்ணி, தமது ஞானத்தினால் அதில் மூர்க்கத்தை அடக்குகிறார்" *(26:12)*, "திரளான தண்ணீர்களின் இரைச்சலைப் பார்க்கிலும், சமுத்திரத்தின் வலுமையான அலைகளைப் பார்க்கிலும் கர்த்தர் உன்னதத்திலே வல்லமையுள்ளவர்" *(சங் 93:4)*. அவர் "பெலத்தில் பராக்கிரமமுள்ளவர்" *(யோபு 9:4)*. தேவதூதன் மரியாளிடம் சொல்கிறார், "தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை" *(லூக்கா 1:37)*. யோபு சொல்கிறார், "தேவரீர் சகலத்தையும் செய்யவல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்" *(யோபு 42:2)*. அவருடைய வல்லமையை விவரிக்கும் நூற்றுக்கணக்கான வசனங்களை வேதத்தில் வாசிக்கமுடியும்.

தன்னுடைய பிள்ளைகளில் தேவன் துவக்கிவைத்த நற்கிரியைகளை நிறைவேற்றும்படியாக அவர்களைப் பாதுகாக்கவும், நிலைநிறுத்தவும், பெலப்படுத்தவும் அவருடைய வல்லமை தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டே இருக்கிறது என்பதை அவர்கள் அறிந்திருக்கவேண்டும் என்று பவுல் விரும்புகிறார். அதன்மூலமாக மட்டுமே தாங்கள் பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும், சாத்தானின் தந்திரங்களிலிருந்தும் தாங்கள் விடுதலை பெறமுடியும் என்ற நம்பிக்கை அவர்களிடம் உருவாகும் என்பதே பவுலின் நம்பிக்கை. புதிய ஏற்பாட்டில் தேவனைக் குறித்த புகழ்பாடல்களில் எல்லாம்

அவருடைய வல்லமை குறிப்பிடப்படுகிறது (1தீமோ 6:16, 1பேதுரு 4:11, 5:11, யூதா 24, வெளி 1:6, 5:13).

எபேசு சபையாரிடம் இருந்த அவிசுவாசம், அவநம்பிக்கை போன்ற பெலவீனங்கள் அந்த வல்லமையின் விளைவாக மாறவேண்டும் என்று பவுல் வாஞ்சிக்கிறார். பலத்த சத்துவத்தின் வல்லமையையும் அதின் மகாமேன்மையான மகத்துவத்தையும் சரியாக விளங்கிக்கொள்ளாததினிமித்தம் 1 சாமு 27:1 ல் தாவீது இவ்விதமாகச் சொல்கிறார், "நான் எந்த நாளிலாகிலும் ஒரு நாள் சவுலின் கையினால் மடிந்து போவேன்". இப்படிப்பட்ட அவிசுவாசமான வார்த்தைகள் தேவனை மகிமைப்படுத்தாது என்பது மட்டுமல்ல, நமக்கு தோல்வியையும் கொண்டுவரும் என்பதால் நாம் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்கவேண்டும். **தவறான அறிக்கைகள் நமக்குத் தோல்வியையே கொண்டுவரும்.**

பிதாவாகிய தேவன் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பிய சத்துவத்தின் வல்லமையை விசேஷமாகக் குறிப்பிட்டு பவுல் பேசுகிறார் (பிலிப் 3:10). பழைய ஏற்பாட்டு நாட்களில் தேவன் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்க செங்கடலைத் திறந்து அழைத்துவந்தது, பார்வோனின் ராணுவங்களை நிர்மூலமாக்கியது போன்றவை அவருடைய வல்லமையான கிரியைகளாகக் கருதப்பட்டன (ஏசாயா 43:16-18, 51:9,10, மீகா 7:15). ஆனால் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் செங்கடலைவிட கிறிஸ்துவின் காலியான கல்லறையே அவருடைய மகத்துவமான வல்லமைக்கு சாட்சியாக இருக்கிறது. அப் 2:24 சொல்கிறபடி "தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது". மரித்து, மூன்றாம்நாள் உயிர்த்தெழுந்தார் என்ற கிறிஸ்துவின் சாட்சியே மகிமையானதாகவும், வல்லமை நிறைந்ததாகவும் வேதத்திலெங்கும் குறிப்பிடப்படுகிறது. அப் 2:32, 3:15, 3:26, 10:40, 13:34, 17:31, ரோமர் 4:25, 8:34, 1 கொரி 15:3-5, 1பேதுரு 1:4, 1 தெச 4:14 வாசித்துப் பாருங்கள்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை மரித்தோரில் இருந்து எழுப்பிய அதே வல்லமை விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடமும் வெளிப்படும் (எபே *3:20*) . மரணத்தை ஜெயித்த அந்த வல்லமை நம்மிடத்திலும் வெளிப்படும் என்பதே பவுல் அறிவிக்கும் காரியம். உலகத்தில் இருக்கும் நாட்களில் நாம் எதிர்கொள்ளும் போராட்டங்களையும் சோதனைகளையும் மேற்கொள்ளும்படியாக மட்டுமே தேவனுடைய வல்லமை வெளிப்படுகிறது என்பதல்ல, ஒரு பாவ மனிதனுக்கு புதிய ஜீவனைக் கொடுக்கவும் அந்த வல்லமையினால் கூடும்.

கிறிஸ்துவை உயிர்ப்பித்த அந்த வல்லமை மரித்தோர் அத்தனை பேரையும் உயிர்ப்பிக்கப் போதுமானதாய் இருக்கிறது. "தேவன் கர்த்தரை எழுப்பினாரே, நம்மையும் தமது வல்லமையினாலே எழுப்புவார்" *(1கொரி 6:16)* என்கிறார் பவுல். "கர்த்தராகிய இயேசுவை எழுப்பினவர் எங்களையும் இயேசுவைக் கொண்டு எழுப்பி, உங்களுடனே கூடத் தமக்கு முன்பாக நிறுத்துவாரென்று அறிந்திருக்கிறோம்" *(2கொரி 4:14)*. ஒவ்வொரு விசுவாசியும் அந்த உயிர்த்தெழுதலின் வல்லமையை நிச்சயமாகவே அனுபவிப்பார்கள். ரோமர் 6:4,5 இந்த சத்தியத்தை இவ்விதமாக விளக்குகிறது, "பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்." அல்லேலூயா!

இந்த மேன்மையான சத்தியத்தை நாம் அறியக்கூடிய விதத்தில் நாம் பிரகாசமான மனக்கண்களைப் பெறவேண்டும் என்று பவுல் ஜெபிக்கிறார். கண்களின் மூலமாகத்தான் நாம் வெளியே நடக்கும் காரியங்களைப் பார்க்கிறோம். பவுல் குறிப்பிடுவது நம்முடைய மாமிசக் கண்களை அல்ல, மனக்கண்களையே நம்முடைய

ஆவிக்குரிய கண்களை. 17வது வசனத்தில் நாம் பார்த்தபடி "ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவி" நம்மில் செயல்படும்போது தேவனால் நமக்கென்று ஆயத்தமாக்கப்பட்ட வல்லமையை நம்முடைய ஆவிக்குரிய கண்கள் மூலமாகமட்டுமே நாம் கண்டுகொள்ளமுடியும். "எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை" *(1கொரி 2:9)*. அவ்வளவு மகத்துவமான காரியங்களை நாம் சுதந்தரிக்கப்போகிறோம்.

எபேசு சபையார், தலைசிறந்த ஊழியக்காரரான பவுல் மூலமாக தேவனுடைய வார்த்தையைக் கேட்டு இரட்சிப்படைந்த விசுவாசிகளாகவும், பரிசுத்தவான்களாகவும் இருக்கிறார்கள் என்பது உண்மைதான் *(எபே 1:1)*. ஆவிக்குரிய சபை ஆசீர்வாதங்களையும் பெற்றவர்கள்தான் *(வ 3)*, கிறிஸ்துவுக்குள் தெரிந்துகொள்ளப்-பட்டவர்கள்தான் *(வ 4)*, சுவிகார புத்திரராகும்படி முன்குறிக்கப்-பட்டவர்கள்தான் *(வ 6)*, ஆனாலும் தேவனுடைய வல்லமையை முழுமையாக அறிந்துகொள்ளும்பொருட்டு பிரகாசமான மனக்கண்கள் அவர்களுக்கு அருளப்படவேண்டியதாய் இருக்கிறது. எம்மாவு சீஷர்கள் வருடக்கணக்கில் கிறிஸ்துவோடு வல்லமையான ஊழியத்தைச் செய்தவர்கள்தான், "ஆனாலும் அவரை (கிறிஸ்துவை) அறியாதபடிக்கு அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்தது" என்று லூக்கா *24:16*ல் வாசிக்கிறோம்.

இன்றும் அநேக ஊழியக்காரர்களின் நிலைமை இப்படித்தான் இருக்கிறது. பிலேயாம் தீர்க்கதரிசியின் கழுதை உருவிய பட்டயத்தோடு பாதை அருகே நிற்கும் கர்த்தருடைய தூதனைப் பார்க்கிறது. ஆனால் பிலேயாமின் மனக்கண்களோ பொருளாசையினால் அடைக்கப்பட்டிருந்தது. அந்த தீர்க்கதரிசியின் கண்களை தேவனே திறக்கவேண்டியதிருந்தது *(எண் 22:31)*. "கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும்" *(2இராஜா 6:17)* என்று எலிசா ஜெபித்தபின்தான் அவருடைய

வேலைக்காரனால் தேவனுடைய அக்கினிமயமான குதிரைகளையும் இரதங்களையும் காணமுடிந்தது. மத் 13:16, அப் 26:18 வாசித்துப் பாருங்கள்.

இன்று உங்களுடைய மனக்கண்கள் எந்த நிலையில் இருக்கிறது என்பதை சற்று யோசித்துப் பாருங்கள். தேவன் உங்களுக்காக ஆயத்தம் பண்ணியிருக்கும் வல்லமையின் மகாமேன்மையான மகத்துவத்தை நீங்கள் கண்டுகொண்டிருக்கிறீர்களா? பவுலோடு இணைந்து பிரகாசமான மனக்கண்கள் தந்தருளப்படவேண்டும் என்று ஜெபியுங்கள். ஆசீர்வாதத்தைத் தேடி அங்கும் இங்கும் ஓடாதிருங்கள். கிறிஸ்துவுக்குள் தேவன் நம்மை ஆசீர்வதித்துவிட்டார் என்பதை நம்புங்கள். தேவனுடைய வார்த்தையே அவர் நமக்குக் கொடுத்த விலையேறப்பெற்ற ஆசீர்வாதம். வேதத்தை எடுக்கும்போதெல்லாம் "உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு என் கண்களைத் திறந்தருளும்" (சங் 119:18) என்று ஜெபியுங்கள்.

**எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக (எபே 1:20)**

முந்தின 19வது வசனத்துடன் பவுலின் ஜெபம் முடிவடைந்துவிட்டது என்று சில வேதபண்டிதர்கள் கருதினாலும் 20 முதல் 23 வரையுள்ள வசனங்களில் வெற்றிசிறந்த ஆண்டவராகிய இயேசுவை போற்றி மகிமைப்படுத்தும் ஆராதனை ஜெபம் காணப்படுகிறது.

கர்த்தத்துவம், துரைத்தனம், அதிகாரம் முதலிய வார்த்தைகள் கொலோ 1:16லும், துரைத்தனம், அதிகாரம் என்ற வார்த்தைகள் கொலோ 2:10லும், துரைத்தனம் அதிகாரம் என்ற வார்த்தைகள் எபே 3:10லும் பவுலால் உபயோகப்படுத்தப்படுவதைப் பார்க்கிறோம். இவை தேவனுக்கும், தேவனுடைய பிள்ளைகளுக்கும் விரோதமாக

செயல்படும் அந்தகார வல்லமைகளாகவே கருதப்படுகின்றன. எபேசியர் *6:12*ல் பவுல் சொல்கிறபடி, "மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும்" நமக்குப் போராட்டம் உண்டு". கிறிஸ்து இந்த "சகல துரைத்தனத்தையும், சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார்" *(1கொரி 15:24)* என்று சொல்லப்பட்டிருக்கிறது.

துரைத்தனம் (Principality), அதிகாரம் (Authority), வல்லமை (Power), கர்த்தத்துவம் (Domination) என்ற வார்த்தைகள் வானத்திலும், பூமியிலும் இருந்து செயல்படும் விழுந்துபோன தூதர்களைக் குறிப்பிடுவதாகவும் சொல்லப்படுகிறது. பவுலின் நாட்களில் யூதர்கள் இவர்களை மிகுந்த பெலனுள்ளவர்களாகவும், ஆராதனைக்குப் பாத்திரர்களாகவும் கருதினார்கள். இவர்கள் மகிமையான பெயர்களுடன் அழைக்கப்பட்டவர்கள்தான். ஆனால் அவர்களுக்கும் மேலான நாமத்தை உடையவர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே என்பதை பவுல் நிலைநாட்ட விரும்புகிறார். ஏனென்றால், "இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" *(பிலிப் 2:10, 11)*. இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும், அதாவது அவருடைய வருகைக்குப்பிறகும் அவருடைய நாமம் உயர்த்தப்பட்டதாகவே இருக்கும். இந்த கிருபையின் நாட்களில் மாத்திரமல்ல, வரப்போகிற உபத்திரவ காலத்திலும், ஆயிரவருஷ அரசாட்சியின்போதும், பிதாவின் யுகாயுகங்களின் போதும் அவருடைய நாமம் மகிமையாயும், கனமுள்ளதாயும் இருக்கும்.

யோவான் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, பிதாவாகிய தேவனுடைய சிங்காசனத்தைச் சூழ்ந்திருக்கும்

ஜீவன்களையும், மூப்பர்களையும், பதினாயிரம் பதினாயிரமாகவும் ஆயிரமாயிரமாகவும் இருந்த தூதர்களைப் பார்க்கிறார். "அவர்களும் மகா சத்தமிட்டு: அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார் என்று சொன்னார்கள். அப்பொழுது, வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுளடங்கிய வஸ்துக்கள் யாவும்: சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியான-வருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக்கேட்டேன்" (வெளி *5:12,13*) என்கிறார். ஏனென்றால் அவருடைய நாமம் அவ்வளவு மகத்துவமானது.

**அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து (எபே 1:21)**

எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தையுடைய ஆண்டவராகிய இயேசு, தன்னுடைய மீட்பின் கிரியையை நிறைவேற்றும்படியாக கல்வாரி சிலுவையில் மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்த இயேசு, "அவர்கள் (அப்போஸ்தலர்கள்) பார்த்துக்கொண்டிருக்கையில் உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்" (அப் *1:9*) என்று வாசிக்கிறோம். "அவர்களை ஆசீர்வதிக்கையில் அவர்களை விட்டுப் பிரிந்து பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்" (லூக்கா *24:51*). "பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார்" (மாற்கு *16:19*). மூன்று வசனங்களிலுமே கிறிஸ்து பரலோகத்துக்குப் போனார் என்று சொல்லப்படவில்லை. பிதாவாகிய தேவனே அவரை ஒரு நோக்கத்தோடு எடுத்துக்கொண்டார். ஏனென்றால் பிதா அவருடைய நாமத்தை "மகிமைப்படுத்தினேன், இன்னமும் மகிமைப் படுத்துவேன்" (யோவான் *12:28*) என்று வாக்குப்பண்ணியிருக்கிறார்.

அங்கே பிதாவாகிய தேவன் அவரை உன்னதங்களில் தன்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படி செய்தார் என்று இந்த வசனம் அறிவிக்கிறது. சங்கீதம் *110:1*ல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம் இவ்விதமாக நிறைவேறுகிறது. "நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும், நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் அவர் சொன்னதுண்டா?" *(எபி 1:13)* என்ற கேள்வியை எழுப்புகிறார் பவுல். பேதுரு சொல்கிறார், "அவர் பரலோகத்துக்குப் போய் தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார்; தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது" *(1பேதுரு 3:22)*. "கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்" *(ரோமர் 8:34)*. ஆலோசனைச்சங்கத்தில் விசாரணைக்கைதியாக நிற்கும்போது இயேசு சொல்கிறார், "இதுமுதல் மனுஷகுமாரன் சர்வவல்லமையுள்ள தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பார்" *(லூக்கா 22:69)*. *அப் 2:35, மத் 26:64, அப் 7:55, கொலோ 3:1, எபி 1:3, 8:1, 10:12, 1பேதுரு 3:22* வாசித்துப் பாருங்கள்.

"உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு" என்று *சங் 16:11*ல் சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்து "தமக்கு முன்வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்" *(எபி 12:2)* என்று சொல்லும்போது அவருடைய கீழ்ப்படிதலினிமித்தம் பிதாவாகிய தேவன் எவ்வாறு கனம்பண்ணினார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. எபிரெயர் *1:3* சொல்கிறது "இவர் (கிறிஸ்து), அவருடைய (பிதாவுடைய) மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார்". அல்லேலூயா!

இன்னொரு காரியத்தையும் நாம் அறிந்துகொள்ளவேண்டும். வானத்தையும் பூமியையும், அதில் உள்ள சகலத்தையும் ஆண்டுகொள்ளவேண்டும் என்பதற்காக மட்டும் குமாரனாகிய இயேசுகிறிஸ்து சிங்காசனத்தில், பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கவில்லை. நாம் பாவமன்னிப்பைப் பெற்று, தேவகோபாக்கினையிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்பதற்காகவும் பிதாவின் சமுகத்தில் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். இந்த மேலான சத்தியம் தீர்க்கதரிசனமாக சகரியா *6:13*ல் இவ்வாறு சொல்லப்படுகிறது. "அவர் (கிறிஸ்து), மகிமை பொருந்தினவராய், தம்முடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து, ஆளுகை செய்வார்; தம்முடைய சிங்காசனத்தின்மேல் ஆசாரியராயும் இருப்பார்; இவ்விரண்டின் நடுவாகச் சமாதானத்தின் ஆலோசனை விளங்கும்". எபிரெயர் *7:1*ன் படி "மெல்கிசேதேக்கு சாலேமின் ராஜாவும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமாயிருந்தான்" என்று பார்க்கிறோம்.

**ஆளுகை செய்யும் ஒரு ராஜாவாகவும், அதே நேரத்தில் பரிந்துபேசும் ஒரு ஆசாரியராகவும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து செயல்படுவார்.** அதை எபிரெயர் *8:1,2* அழகாக விவரிக்கிறது: **"பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறவருமாய், பரிசுத்த ஸ்தலத்திலும், மனுஷரால் அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியஞ் செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு".** அவருடைய மெல்கிசேதேக்கு முறையிலான ஆசாரிய ஊழியம் எபி *4:14, 7:24,25; 8:1-6; 9:11-15, 24-26; 10:19-22* ஆகிய வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி (எபே 1:22)**

சகலமும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தப்படும் என்கிறார் பவுல். சங் *8:6* சொல்கிறது,

"உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்". எபி 2:5-10 இந்த வசனத்தின் விளக்கவுரையாக அமைகிறது. 1கொரி 15:27 சொல்கிறது, "சகலத்தையும் அவருடைய பாதத்திற்குக் கீழ்ப்படுத்தினாரே". இந்த வசனத்தில் சகல சிருஷ்டிகளின்மேல் மனிதனுக்கு தேவன் கொடுத்த அதிகாரத்தைக் குறிப்பிடுவதாக இருந்தாலும், அதை பவுல் கிறிஸ்துவுக்குப் பொருந்தும்படியாக பயன்படுத்துகிறார். தானியேல் 7:14ல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம் இங்கே நிறைவேறுகிறது. அது சொல்கிறது, "சகல ஜனங்களும், ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்கு கர்த்தத்துவமும், மகிமையும், ராஜரிகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்".

சகலமும் இயேசுவினுடைய பாதங்களுக்கு அவருடைய ஆளுகைக்குக் கீழ்ப்பட்டிருந்தே ஆகவேண்டும். "ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது" (கொலோ 1:16,17). கொலோ 2:10 சொல்கிறது, "சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிறார்". பிலிப்பியர் 2:9-11 சொல்கிறது, "தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்".

**எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார். (எபே 1:23)**

எல்லா நாமத்துக்கும் மேலான நாமம் ஆண்டவராகிய இயேசுவுக்கு கொடுக்கப்பட்டது என்பது மட்டுமல்ல, பிதாவாகிய தேவன் அவரை சரீரமாகிய சபைக்கு, அதை ஆளுகை செய்யும் தலையாகக் கொடுத்திருக்கிறார். கிறிஸ்தவர்களாகிய நாம் "கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயு-மிருக்கிறீர்கள்" *(1கொரி 12:27)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. "அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்" *(ரோமர் 12:5)*. சரீரமாகிய சபையைக் குறித்து *1கொரி 10:17.* எபே *4:12*, கொலோ *1:24, 2:18*லும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த சபையை தன்னுடைய இரத்தத்தினால் மீட்டுக்கொண்டபடியினால் அதை ஆண்டுகொள்ளும் தலையாக கிறிஸ்து குறிப்பிடப்படுகிறார். எபே *5:23*ல் பவுல் சொல்கிறார், "கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்".

அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்" (கொலோ *1:18)*. "கணுக்களாலும் கட்டுகளாலும் உதவிபெற்று இணைக்கப்பட்டு, தேவவளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீரமுழுவதையும் ஆதரிக்கிற தலை" (கொலோ *2:18)* என்று கிறிஸ்து குறிப்பிடப்படுகிறார். அதனால்தான் பவுல் கேட்கிறார், "உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா" *(1கொரி 6:15)* ஒரு மனிதனுடைய சரீரத்தின் அவயவங்களும், அவனுடைய தலையும் ஒருங்கிணைந்து, ஒன்றோடு ஒன்று ஐக்கியத்தோடு செயல்படவேண்டும். சரீரமில்லாமல் தலை செயல்படாது, தலை இல்லாமல் சரீர அவயவங்கள் செயல்படாது. தலை பல காரியங்களைத் தீர்மானிக்கலாம், திட்டமிடலாம், ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்த சரீரம் தேவை. சரீரத்துக்கு எந்த அளவு தலை தேவையோ, அந்த அளவுக்கு தலைக்கு சரீரம் தேவை. மணவாட்டி இல்லாத ஒருவன் மணவாளன் என்று

அழைக்கப்படமுடியாது. கொடிகள் இல்லாத திராட்சச்செடியினால் எந்த நன்மையும் இல்லை. ஆடுகள் இல்லாத ஒருவன் மேய்ப்பன் என்று அழைக்கப்படமுடியாது. மனிதஇனத்துக்கு சமாதானத்தை அருளும்படியாக தலையாகிய கிறிஸ்து வந்தார் என்றால், அதை தன்னுடைய சரீரமாகிய சபையின் மூலமாகத்தான் நடப்பிக்கமுடியும். அவர் கொண்டுவந்த ஒப்புரவாகுதலின் நற்செய்தியை உலகத்துக்கு அறிவிப்பதே சபையின் நோக்கமாகிறது.

சபை என்ற வார்த்தை (கிரேக்கபதம் Eklesia) "வெளியே அழைக்கப்பட்டவர்கள்" என்று பொருள்படும். இந்த நிருபத்தில் ஒன்பது இடங்களில் பயன்படுத்தப்படும் இந்த வார்த்தை உலகில் இருந்து தேவனுக்கென்று வேறுபிரித்தெடுக்கப்பட்டவர்களைக் குறிப்பிடுகிறது. உலகத்து மனிதர்களாயிருந்த சிலரை தேவன் தனக்கென்று வேறுபிரித்து, ஒரே சரீரத்தின் அவயவங்களாக ஒன்றோடோன்று இணைத்திருப்பாரானால், அதை ஆளுகை செய்ய ஒரு தலையை உருவாக்கியிருப்பாரானால், அந்த சரீரத்தை கிறிஸ்துவுக்கென்று ஊழியம் செய்யும்படியாக வைக்கவும் அவரால் முடியும். இதைத்தான் எபேசியர் *4:12,13* இவ்விதமாகச் சொல்கிறது, "பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்".

எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவர் என்று கிறிஸ்து குறிப்பிடப்படுகிறார். "நான் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர்" (எரே *23:24*) என்கிறார் கர்த்தர். அவரால் நிரப்பப்படாத நிலையில் ஒன்றும் செயல்படுவதில்லை. ஏனென்றால் "அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது" (கொலோ *1:16*) என்று பார்த்தோம். "சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்" (கொலோ *2:10*) என்கிறார் பவுல். அவருக்குள் நிலைத்திராத நிலையில் ஒரு

மனிதனாலும் ஒரு காரியமும் செய்யமுடியாது (யோவான் 6:56, 1யோவான் 3:24). யோவான் 15:4,5ல் அவர் சொல்கிறார், "நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனி கொடுக்கமாட்டீர்கள். நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது".

எபேசியர் 1:19 முதல் 23 வரையுள்ள வேதபகுதியில் பிதாவாகிய தேவன் தன்னுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு நடப்பித்த ஐந்து மகத்துவமான காரியங்களை பவுல் அறிவிக்கிறார்.

| | | |
|---|---|---|
| வசனம் 19 | : | மரித்தோரிலிருந்து எழுப்பினார் |
| வசனம் 20 | : | எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தைத் தந்தருளினார் |
| வசனம் 21 | : | தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படி செய்தார் |
| வசனம் 22 | : | எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினார் |
| வசனம் 23 | : | சரீரமாகிய சபைக்குத் தலைவராக்கினார் |

# அதிகாரம் 2

ஒரு விசுவாசியின் வாழ்க்கை இரட்சிக்கப்படுவதற்கு முன்பு எப்படி இருந்தது என்பதையும், இரட்சிப்புக்குப்பின்பு அவனில் உண்டாகும் மாற்றம் என்ன என்பதைப் பற்றியும் பவுல் இந்த அதிகாரத்தில் விளக்குகிறார். “கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்” என்ற ஆழமான சத்தியம் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருப்பதினால் இது வேதப்புத்தகத்திலுள்ள மிகவும் முக்கியமான அதிகாரங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

கிறிஸ்து அல்லாத வாழ்க்கை எப்படிப்பட்டது என்பதை முதல் மூன்று வசனங்களில் பவுல் அறிவிக்கிறார். அவன் மரித்தவனாக கருதப்படுகிறான். அடுத்ததாக அவனுடைய வாழ்க்கையில் தேவனுடைய இரக்கத்தின் செயலாற்றல் சொல்லப்படுகிறது (வசனம் 4-7). இதன் விளைவாக, உயிர்ப்பிக்கப்பட்ட அந்த மனிதன் தேவனோடு உன்னதங்களில் வீற்றிருக்கிறான். **கிரியை அல்ல, கிருபையே விசுவாசத்தின் மூலமாக ஒரு மனிதனை இந்த மகிமைக்குள் பிரவேசிக்கச் செய்கிறது.** அந்த மனிதனிடமிருந்து நற்கிரியைகள் வெளிப்பட்டாலும், அவற்றை தேவனே ஆயத்தப்படுத்தியிருப்பதால் அதைக்குறித்து அவன் தன்னை பெருமைபாராட்டிக்கொள்ள ஒன்றும் இல்லை (வசனம் 8-10) என்பதும் அறிவிக்கப்படுகிறது.

மனிதனுக்கும் தேவனுக்குமிடையே கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக சமாதானம் உண்டாகிறது. யூதர்களுக்கும்

புறஜாதியார்களுக்கும் இடையே பகையை உருவாக்கிய பிரிவினைச் சுவரை அவருடைய சரீர மரணம் உடைத்து அப்புறப்படுத்துகிறது. இரண்டு ஜாதியாரும் பரிசுத்த ஆவியினாலே ஒருங்கிணைக்கப்படும்போது திருச்சபை என்ற அமைப்பு உருவாகிறது (வசனம் 11-18). யூதர், புறஜாதியார் என்ற வித்தியாசம் முற்றிலுமாக மறைகிறது.

சபையைக் குறித்த வெளிப்பாடுகளை மீதியான 19-22 வசனங்களில் பவுல் அறிவிக்கிறார். சபை ஒவ்வொரு நாளும் வளர்ச்சி அடைந்து, பரிசுத்த ஆலயமாகவும், தேவனுடைய வாசஸ்தலமாகவும் மாறுகிறது என்கிறார்.

## கிருபையினால் உண்டாகும் இரட்சிப்பு (2:1-10)

**அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். (எபே 2:1)**

இரட்சிக்கப்படுவதற்குமுன் ஒரு மனிதன் மரணத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறான் என்றும் தேவன் அவனை உயிர்ப்பித்தார் என்றும் பவுல் இந்த வசனத்தில் அறிவிக்கிறார். உயிரோடிருக்கும் ஒரு மனிதன் எப்படி மரித்தவனாகவும் இருக்கமுடியும் என்ற கேள்வி எழும்புகிறது. வேதத்தில் மரணம் என்ற வார்த்தை பிரிவினை (Separation) என்று பொருள்படும். ஒருவனுடைய ஆத்துமா அவனுடைய சரீரத்தைவிட்டு பிரிந்துபோகிற அனுபவமே மரணம். இது சரீர மரணம். தேவனிடம் ஐக்கியங்கொண்டு உறவாடும்படியாக சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் அந்த உறவின் மேன்மையை இழந்துபோனபோது அவரிடமிருந்து பிரிக்கப்பட்டு மரித்தவன் என்று குறிப்பிடப்படுகிறான். இது ஆவிக்குரிய மரணம். முதல் பாவம் மனிதனை தேவனிடமிருந்து பிரித்தது என்றால் இரண்டாவது பாவம் மனிதனை தன் சொந்த சகோதரனிடமிருந்து பிரித்தது (ஆதி 3:8-10, 4:8,9).

வேதத்தில் மூன்று வகையான மரணங்கள் குறிப்பிடப்படுகின்றன. முதலாவது, சரீர மரணம். அதாவது சரீரத்தைவிட்டு ஆவி

பிரிந்து செல்வதால் இது சம்பவிக்கிறது. எபி 9:27 சொல்கிறது, "ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது". 1கொரி 15:21,22 வாசித்துப்பாருங்கள்.

ஒருவன் சரீரத்தில் உயிரோடிருக்கும்போதே, ஆவியில் தேவனிடத்திலிருந்து பிரிந்திருக்கமுடியும். அவனுடைய அக்கிரமமும், பாவமும் அவனை தேவனிடமிருந்து பிரிப்பதன்மூலமாக தன்னுடைய ஆவியில் மரணமடைகிறான். இதுவே இரண்டாவது வகை மரணம் ஆகும். "சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள்" (1தீமோ 5:6) என்ற வசனம் இந்த மரணத்தைக் குறிப்பிடுகிறது. கெட்டகுமாரன் என்று (தவறாக) அழைக்கப்படும் இளையகுமாரனைப் பற்றி தகப்பன் சொல்கிறார், "உன் சகோதரனாகிய இவனோ மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்" (லூக்கா 15:32). சர்தை சபையின் தூதனிடம் இயேசு சொல்கிறார், "நீ உயிருள்ளவனென்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாயிருகிறாய்" (வெளி 3:2).

வேதம் அறிவிக்கும் மூன்றாவது வகை மரணம் நித்திய மரணம். இந்த மரணம் ஒருவனுடைய ஆவிக்குரிய மரணத்தில் துவங்கி சம்பந்தப்பட்ட மனிதனுடைய சரீர மரணம் வரை பாவத்தில் நிலைத்திருப்பதால் மூன்றாவது மரணம் அல்லது நித்திய மரணம் என்று அழைக்கப்படுகிறது (வெளி 20:6, 20:14). இவர்களுடைய முடிவு அக்கினிக்கடல்.

எபேசு சபையார் கிறிஸ்துவை அறிந்து அவரை தங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொள்வதற்குமுன் மரித்தவர்களாகத்தான் இருந்தார்கள். அவர்களில் இருந்த அக்கிரமங்களும் பாவங்களுமே அதற்குக் காரணமாகச் சொல்லப்படுகிறது. அக்கிரமம் என்ற வார்த்தைக்குப் பயன்படுத்தப்படும் Paraptôma (trespass) என்ற கிரேக்கபதம் மீறுதல் என்று பொருள்படும். தேவனுடைய அழைப்பிலிருந்து விலகிச்செல்லுதல், தவறிவிழுதல், சரியான பாதையைப் புறக்கணித்து தவறான வழியைத் தேர்ந்தெடுத்தல் போன்றவை பவுல் குறிப்பிடும் அக்கிரமங்களின் பல்வேறு அம்சங்களாகக் கருதப்படலாம். பாவம் என்ற வார்த்தை (கிரேக்கபதம்

hamartia) நமக்கென்று நியமிக்கப்பட்ட இலக்கிலிருந்து விலகிச் செல்லுவதைக் குறிப்பிடுகிறது. இதன் விளைவாக அவன் தேவ சித்தத்தை அறிந்துகொள்ளக் கூடாதவனாகிறான். தேவன் எதிர்பார்க்கும் பூரணத்துவத்தை இழந்துவிடுகிறான். "எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகிறார்கள்" (ரோமர் 3:23) என்கிறார் பவுல்.

பாவம் என்றால் என்ன என்பது 1யோவான் 3:4ல் இவ்விதமாகச் சொல்லப்படுகிறது. "பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்". நியாயப்பிரமாணம் என்ற வார்த்தைக்குப் பயன்படுத்தப்படும் Torah (Law) என்ற வார்த்தை வேதத்தின் முதல் ஐந்து புத்தகங்களில் தேவனால் வழங்கப்பட்ட கற்பனைகள், போதனைகள், அறிவுரைகள், ஆலோசனைகள், ஒழுங்குமுறைகள் ஆகியவற்றைக் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளலாம். மோசே மூலமாக சீனாய் மலையில் மொத்தம் 613 பிரமாணங்களை தேவன் இஸ்ரவேலருக்கு கொடுத்திருக்கிறார். புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களிலும் பல்வேறு பாவக்கிரியைகள் பட்டியலிடப்பட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன. ரோமர் 1:29-31, மாற்கு 7:21,22, கலா 5:19-21, 1தீமோ 1:9,10, 2தீமோ 3:2-5, எபே 4:25-32 வாசித்துப்பாருங்கள்.

வெளிப்படையான பாவக்கிரியைகளான கொலை, விபசாரம், திருட்டு ஆகியவைதான் பாவம் என்பதல்ல. இச்சை (யாத் 20:17), தவறான பார்வை (மத் 5:28), வைராக்கியம், கோபம், சண்டை, பிரிவினை (கலா 6:20) ஆகியவை கிரியைகளில் வெளிப்படாமலேயே பாவமாயிருக்கலாம். **நம்முடைய வாழ்க்கையில் தேவனை மையமாகக் கொள்ளாமல் நம்மை மையமாக்கிக்கொண்டு செயல்படும்போது நாம் தேவனுடைய பார்வையில் பாவிகளாகிறோம்.** தேவனுடைய முத்திரை மோதிரமாகவும் பூரண அழகுள்ளவனாகவும், சிருஷ்டிக்கப்பட்டு அபிஷேகம் பண்ணப்பட்ட கேரூப் (எசே 28:12,14) தன்னை பெருமையினால் மகிமைப்படுத்த விரும்பிய அதே வேளையில், அந்த பாவத்தினிமித்தம் அகாதமான பாதாளத்தில் தள்ளப்பட்டான் (ஏசாயா 14:15). தேவசாயலில் சிருஷ்டிக்கப்பட்ட, பாவமே அறியாத ஆதாம் தன்னை மையமாக்கி

செயல்படத் தீர்மானித்தபோது ஏதேனுக்கு வெளியே துரத்தப்பட்டான்.

**நாம் செய்கின்ற பாவ கிரியைகளின் விளைவாகத்தான் நாம் பாவிகளாகிறோம் என்பதல்ல.** ஆதாம் என்ற முதல் மனுஷனுடைய கீழ்ப்படியாமை என்ற பாவம் அவனுடைய சந்ததியார் அத்தனை பேரையுமே பாவிகளாக்கிவிட்டது (*ரோமர் 5:19*). "நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம்" (*1யோவான் 1:8*). "நாம் பாவஞ்செய்யவில்லையென்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம்" (*வசனம் 10*). "பாவஞ்செய்யாத மனுஷன் இல்லையே" (*1இராஜா 8:46*) என்கிறார் சாலொமோன்.

*அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் எபேசு சபையார் மாத்திரமல்ல, மனிதஇனமே மரித்தநிலையில் இருக்கிறது* (*எசேக் 37:1-14, ரோமர் 7:10,24, கொலோ 2:13*). நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" (*ஆதி 2:17*) என்பதுதான் தேவன் மனிதனுக்கு வழங்கிய முதலாவது பிரமாணம். ஆதாமின் ஆவி விலக்கப்பட்ட கனியை புசித்தபோதே செத்துவிட்டது. ஏனென்றால், தேவனோடு கொண்டிருந்த ஐக்கியத்தை அவன் இழந்து விடுகிறான். அவனுடைய சரீரத்தையும் அந்த நாளிலேயே மரணம் ஆளுகை செய்யத் துவங்கிவிட்டது. அவனின் சரீர மரணமோ 930 ஆண்டுகளுக்குப் பிறகு சம்பவிக்கிறது. "பாவத்தின் சம்பளம் மரணம்" (*ரோமர் 6:23*) என்று சொல்லப்பட்டிருக்கிறது. "ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது" (*யாக் 2:26*). "தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருக்கும் (*எபே 4:18*) அனுபவமே ஆவிக்குரிய மரணமாகிறது. "பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்" (*எசேக் 18:20*). நீதிமொழிகள் 21:16 சொல்கிறது, "விவேகத்தின் வழியை விட்டுத் தப்பி நடக்கிற மனுஷன் செத்தவர்களின் கூட்டத்தில் தாபரிப்பான்".

"மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்" என்று பவுல் திட்டவட்டமாக அறிவிப்பதைக் கவனியுங்கள். **பாவத்தின் விளைவாக ஆத்துமாவிலும் ஆவியிலும் மரித்தவனா-**

யிருக்கும் ஒருவனை உயிர்ப்பிக்கும் அனுபவமே இரட்சிப்பு என்று அழைக்கப்படுகிறது. "என் ஆத்துமா மண்ணோடு ஒட்டிக்கொண்டிருக்கிறது; உமது வசனத்தின்படி என்னை உயிர்ப்பியும்" *(சங் 119:25)* என்கிறார் சங்கீதக்காரர். எபேசு சபையார் மாத்திரம் அல்ல, ஆதாமின் மீறுதல் நிமித்தமாகவும், நாம் செய்த பாவங்கள் நிமித்தமாகவும் கிறிஸ்தவர்களாகிய நாம் எல்லாருமே மரித்தவர்களாகவே இருந்தோம்.

ஆனால் கொலோ *2:13* சொல்கிறபடி "உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடேகூட (கிறிஸ்துவோடே கூட) உயிர்ப்பித்தார்". எபே *2:5* இந்த சத்தியத்தை இவ்வாறு உறுதிப்படுத்துகிறது: "அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்". ஏனென்றால் நம்முடைய அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் நாம் நமக்கென்று நியமித்திருக்கும் மரணத்தை நமது சார்பில், நம்முடைய பிரதிநிதியாகவும், நம்முடைய பிணையாளியாகவும், நம்முடைய மத்தியஸ்தராகவும் கிறிஸ்து கல்வாரி சிலுவையில் ஏற்றுக்கொண்டுவிட்டார். "நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைக்கும்படிக்கு, *(எபே 5:14, யோவான் 3:3, 5:24)* அவர்தாமே தமது சரீரத்திலே தம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்" *(1பேதுரு 2:24)*.

இதனால்தான் பவுல் ஆலோசனை கூறுகிறார், "நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்" *(ரோமர் 6:11)*. மரித்தவர்களாகிய நம்மை தேவன் உயிர்ப்பித்தார் என்று பவுல் மூலமாக வெளிப்படுத்தப்படும் தேவனுடைய வார்த்தையை அப்படியே விசுவாசித்து, ஏற்றுக்கொண்டு, அறிக்கையிடுங்கள். அதில் தேவன் பிரியப்படுகிறார். மனிதர்களுடைய விசுவாசம் அவரைக் கனம்பண்ணுகிறதாக இருக்கிறது.

**அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப்பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள். (எபே 2:2)**

எபேசு சபையைச் சேர்ந்த புறஜாதி விசுவாசிகளின் முற்கால வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருந்தது என்பதை பவுல் அறிவிக்கிறார். சுருக்கமாகச் சொல்வதானால் அவர்கள் பாவத்தில் வாழ்ந்தவர்கள். இந்த உலகம் வாழ்கிறபடியெல்லாம் அவர்கள் வாழ்ந்துவந்தார்கள். தேவனுக்குக் கீழ்ப்படிய மறந்த இந்த உலகத்து மக்களை ஆட்கொண்டு நடத்தும் ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய சாத்தானுடைய ஆவியைப் பிரியப்படுத்தி வாழ்ந்து வந்தார்கள்.

முந்தின வசனத்தின்படி அக்கிரமங்களும் பாவங்களும் ஆவியில் அவர்களை மரிக்கச்செய்திருந்தது. அப்போது அவர்களுடைய மாம்சத்தில் வெளிப்படையான நடத்தை எப்படிப்பட்டதாக இருக்கிறது என்பதை பவுல் இங்கே அறிவிக்கிறார். இது எபேசு சபையாருக்கு மட்டுமல்லாது, கிறிஸ்துவை அறிந்து ஏற்றுக்கொண்ட எல்லா பரிசுத்தவான்களுக்கும் பொருந்துவதாக இருக்கிறது.

"நடந்துகொண்டீர்கள்" என்ற பவுலின் அறிவிப்பு அவர்களுடைய வெளிப்படையான வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருந்தது என்பதை எடுத்துக்காட்டுகிறது (எபே 2:10, 4:1, ரோமர் 6:4, 2கொரி 10:2). ஒரு மனிதனுடைய நடத்தை முற்போக்கானதாகவும் இருக்கலாம். பிற்போக்கானதாகவும் இருக்கலாம். முந்தின வசனத்தின்படி அக்கிரமத்தினாலும் பாவத்தினாலும் மரித்திருக்கும்போது நிச்சயமாகவே அவர்களுடைய நடத்தை பின்னோக்கியதாகவும், நரகத்தை நோக்கியதாகவும்தான் இருந்திருக்கமுடியும். அவர்களுடைய நடத்தையைக் குறித்து, இந்த வசனத்தில் இரண்டு காரியங்களையும், அடுத்த வசனத்தில் மற்ற இரண்டு காரியங்களையும் பவுல் அறிவிக்கிறார்.

1. இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடி தேவனற்றவர்களாய் நடந்தார்கள் (வசனம் 2).

2. மனிதர்களை ஆண்டுகொள்ளும் சாத்தானின் ஆவிக்கேற்றபடி நடந்தார்கள் (வசனம் 2).

3. தங்கள் மாம்சஇச்சைகளை நிறைவேற்றுகிறவர்களாய் நடந்தார்கள் (வசனம் 3).

4. கோபாக்கினையின் பிள்ளைகளாக, தங்களுடைய மாம்சமும் மனதும் விரும்புகிறபடியெல்லாம் நடந்தார்கள் (வசனம் 3).

எபேசு சபையார் "முற்காலத்தில்" அப்படி நடந்துகொண்டிருந்ததைப்பற்றி பிரச்சினை ஒன்றும் இல்லை. கலாத்தியர் 4:3 சொல்கிறபடி, "நாமும் சிறுபிள்ளைகளாயிருந்த காலத்தில் (அறியாதவர்களாய் இருந்தபோது) இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு அடிமைப்பட்டவர்களாயிருந்தோம்". அதன் விளைவாக இவ்வுலக வழக்கத்தின்படியும், உலகத்தின் அதிபதியாகிய சாத்தானின் ஆவிக்கேற்றபடியும் நடந்துகொண்டோம். ஆனால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை அறிந்து ஏற்றுக்கொண்டபின் அந்த அடிமைத்தனம் முற்றிலும் நம்மைவிட்டு நீக்கப்பட்டாயிற்று. எபே 5:8 சொல்கிறபடி, "முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்". எபே 4:1ல் பவுல் "நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாக நடந்துகொள்ளுங்கள்", எபே 5:2ல் "அன்பிலே நடந்துகொள்ளுங்கள்" என்கிறார்.

நம்முடைய நடத்தை முற்காலத்தில் இந்த உலக வழக்கத்தின்படி இருந்தது என்பது மட்டுமல்ல, ஆகாயத்து அதிகாரப்பிரபுவின் ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள் என்று பவுல் குற்றஞ்சாட்டுகிறார். இந்த அதிகாரப்பிரபு யாரிடம் கிரியை

செய்கிறான் என்பதையும் பவுல் அறிவிக்கத்தவறவில்லை. அந்த ஆவி இப்போது தேவனுக்குக் கீழ்ப்படியாதவர்களின் உள்ளத்தில் கிரியை நடத்திக்கொண்டே இருக்கிறது. "கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்" என்ற வார்த்தை எபே 5:6, கொலோ 3:6 ஆகிய இடங்களிலும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. தேவனுக்கு கீழ்ப்படிய மறுத்து அவரை எதிர்த்த முதல் ஆவி சாத்தான் என்பதை நாம் அறிவோம். கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் உபாகமம் 32:20ல் "மாறுபாடுள்ள சந்ததி; உண்மையில்லாத பிள்ளைகள்" என்றும், ஏசாயா 57:4ல் துரோகம் பண்ணுகிற பிள்ளைகள், கள்ளச்சந்ததியார் என்றும், ஏசாயா 30:9ல் கலகமுள்ள ஜனங்கள், பொய்பேசுகிற பிள்ளைகள், கர்த்தருடைய வேதத்தைக் கேட்க மனதில்லாத புத்திரர் என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

ஆகாயத்து அதிகார பிரபு என்று சாத்தான் அழைக்கப்படுவதைக் கவனியுங்கள். அவன் "உலகத்தின் அதிபதி" (யோவான் 12:31, 14:30, 16:11). "இப்பிரபஞ்சத்தின் தேவன்" (2கொரி 4:4), "உலகத்தின் ஆவி" (1கொரி 2:12), "இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதி" (எபே 6:12) என்றெல்லாம் அழைக்கப்பட்டாலும், இன்று அவனுடைய தலைமைச்செயலகம் ஆகாயத்தில்தான் இருக்கிறது. அதனால்தான் "வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு" (எபே 6:12) என்கிறார் பவுல்.

உபத்திரவ காலத்தின் மத்தியில் மிகாவேலுடன் சாத்தான் யுத்தம் செய்து, அதில் தோற்கடிக்கப்பட்ட பிறகுதான் அவன் வானமண்டலத்திலிருந்து தன்னுடைய தூதர்களுடன் கீழே தள்ளப்படுவான். வெளி 12:8,9 சொல்கிறது, "வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற்போயிற்று. உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது. அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச் சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்".

**அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே, மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம் (எபே 2:3).**

முந்தின வசனத்தில், நீங்கள் முற்காலத்தில் உலக வழக்கத்தின்படியும், ஆகாயத்து அதிகாரப்பிரபுவின் ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள் என்று பவுல் சொல்லும்போது, "நீங்கள்" என்ற வார்த்தை எபேசுவில் இருந்த கிரேக்க மற்றும் புறஜாதி கிறிஸ்தவர்களைக் குறிப்பிடுகிறதாகவும், இந்த வசனத்தில் "நாமெல்லாரும்" என்று சொல்லும்போது தன்னைப்போன்ற யூத கிறிஸ்தவர்களை புறஜாதியாரோடு இணைத்துக்கொண்டு பேசுவதாகவும் எடுத்துக்கொள்ளவேண்டும். தன்னையும், யூத இனத்தைச் சேர்ந்த மற்ற விசுவாசிகளையும் ஒரே நிலையில் வைத்து, மாம்ச இச்சையின்படி நடந்தவர்களாகவும், உடலும் மனதும் விரும்பினவைகளைச் செய்தவர்களாகவும், எல்லாரையும் போலவே தேவகோபாக்கினைக்குப் பாத்திரர்களாக இருந்ததாக பவுல் அறிவிக்கிறார் (*ரோமர் 3:9,23*).

இரட்சிக்கப்படுவதற்கு முன்பு ஒரு மனிதனுடைய ஆவிக்குரிய நிலை எப்படி இருந்தது என்பதை பவுல் இந்த வசனத்தில் அறிவிக்கிறார். இதில் யூதர்கள், அல்லது புறஜாதியார் என்ற வித்தியாசம் ஏதும் இல்லை. மனித இனம் முழுவதுமே தேவகோபாக்கினையின் பிள்ளைகளாகத்தான் இருந்தது. முதலாவதாக நம்முடைய நடத்தை மாம்ச இச்சையின்படி இருந்தது. இரண்டாவதாக நாம் நம்முடைய மாம்சமும் மனதும் விரும்பினதையெல்லாம் செய்தோம். "மாம்ச சிந்தை மரணம்" (*ரோமர் 8:6*). "மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்க மாட்டார்கள்" (*ரோமர் 8:8*). தேவனுக்கு விரோதமாகப் பேசினோம், தேவனுக்கு விரோதமாக செயல்பட்டோம், தேவனைப் புறக்கணித்தோம், தேவனை மறுதலித்தோம், தேவனை சபித்தோம், தேவனுக்கென்று எதுவும் செய்யாதிருந்தோம், தேவனை

ஏற்றுக்கொள்ளாதிருந்தோம், தேவனை அறிக்கையிடாதிருந்தோம், தேவனைத் துதிக்காமல் இருந்தோம், தேவனுக்கு நன்றி சொல்லாதிருந்தோம். தேவனுக்கென்று ஊழியம் செய்யாதிருந்தோம், தேவனைக் கனம்பண்ணாதிருந்தோம். இப்படிப்பட்டவர்களாகிய நாம் நம்மையே தேவனாக்கிக்கொள்கிறோம். நம்முடைய முடிவு என்ன? தேவனுடைய பிள்ளைகளாயிராமல் தேவ கோபாக்கினையின் பிள்ளைகளாகிறோம்.

மாம்ச இச்சையின்படி நடப்பதும், மாம்சமும் மனசும் விரும்புகிறதைச் செய்வதும் நம்மை எங்கே கொண்டுபோய் நிறுத்துகிறது என்பதை அறிந்துகொள்ளவேண்டும். "மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்" *(1யோவான் 2:16)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. "மாம்சத்திற்கேற்ற ஞானத்தோடே" *(2கொரி 1:12)* நடப்போமேயானால், "பாரம்பரிய நியாயத்தையும் உலக வழிபாடுகளையும்" *(கொலோ 2:8)* அனுசரித்துக்கொண்டிருப்போமேயானால், "முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையிலிருந்து" *(1பேதுரு 1:18)* விலகாமல் அல்லது விடுபடாமல் இருப்போமேயானால் ஒருநாளும் நாம் தேவனுடைய பிள்ளைகளாகவே முடியாது. இரட்சிக்கப்பட்ட நம்முடைய வாழ்க்கையில் ஒரு மாற்றம் வேண்டும். மனந்திரும்புதல்வேண்டும். அது இல்லாமல் நாம் ஜெபிப்பதாலோ, உபவாசிப்பதாலோ, காணிக்கை கொடுப்பதாலோ எவ்விதப் பிரயோஜனமும் இல்லை.

"சுபாவத்தினாலே நாம் கோபாக்கினையின் பிள்ளைகள்" என்று சொல்லும்போது தன்னையும் அப்போஸ்தலனாகிய பவுல் வாசகர்களோடு இணைத்துக்கொள்வதைக் கவனியுங்கள். சுபாவத்தினாலே என்ற வார்த்தை (by nature) இயல்பாகவே என்று பொருள்படும். "அசுத்தமானதிலிருந்து சுத்தமானதைப்

பிறப்பிக்கத்தக்கவன் உண்டோ" (யோபு14:4) என்ற வசனத்தின்படி, நாம் பிறப்பிலிருந்தே கோபாக்கினையின் பிள்ளைகள். "என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" (சங் 51:5) என்கிறார் தாவீது. இந்த கோபாக்கினையின் பிள்ளைகளுடைய செயல்பாடுகள் எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை ரோமர் 3:10-18 வாசித்து அறிந்துகொள்ளுங்கள். அவர்களுடைய எண்ணங்கள், ஆலோசனைகள், திட்டங்கள், செயல்பாடுகள், தீர்மானங்கள், பேச்சு, ஆசை எல்லாவற்றிலும் அவர்கள் கோபாக்கினையின் பிள்ளைகளாகவே நிலைத்திருப்பார்கள். "தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" (யோ 3:36) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே (எபே 2:4)**

இந்த அதிகாரத்தின் முதல் மூன்று வசனங்களில் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத மனித இனத்தின் பரிதாபத்துக்குரிய நிலையை அறிவித்த பவுல், அடுத்த நான்கு வசனங்களில் (4-7) கிறிஸ்துவுக்குள் மனிதன் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதத்தின் மேன்மை என்ன என்பதையும் அறிவிக்கிறார். மனிதனுக்கு விரோதமாக அடியிற்கண்ட மூன்று வல்லமையான சக்திகள் செயல்பட்டன என்பது உண்மைதான்.

1. **உலக வழக்கங்கள்** (பாரம்பரியம்) - வசனம் 2

2. **பிசாசு** (ஆகாயத்து அதிகார பிரபு) - வசனம் 2

3. **மாமிசம்** (மாம்ச இச்சை, மனசு) - வசனம் 3

இந்த மூன்று சக்திகளையும் மேற்கொள்வதற்காக தேவனிடமிருந்து மூன்று வல்லமைகள் வெளிப்பட்டன. இதன் விளைவாகவே இரட்சிப்பு உருவானது. அவையாவன:

1. இரக்கத்தில் ஐசுவரியம் - வசனம் 4

2. மிகுந்த அன்பு - வசனம் 4

3. கிருபை - வசனம் 5

நாம் தியானிக்கும் இந்த 4வது வசனத்தில் பவுல் தன்னுடைய நிருபத்தின் மையப்பொருளை அறிவிப்பதாக வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள். தேவனுடைய அளவற்ற இரக்கமும், அவரிடமிருந்து வெளிப்பட்ட மிகுந்த அன்புமே மனிதனுடைய இரட்சிப்புக்குக் காரணமாக அமைகிறது.

"தேவனோ" என்று இந்த வசனம் துவங்குவதைக் கவனியுங்கள். மனிதனின் ஆவிக்குரிய நிலை என்ன என்பதை முந்தின வசனங்களில் விவரித்த பவுல் உடனடியாக நம்முடைய கவனத்தை தேவன் பக்கமாகத் திருப்புகிறார். "நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறார்" என்று எபிரெயர் 12:29ல் வாசிக்கிறோம். எனவே, "கீழ்ப்படியாமையின் பிள்ளைகளின்மேல் தேவகோபாக்கினை" (எபே 5:6) நிச்சயிக்கப்பட்டிருக்கிறது என்பதும் உண்மைதான். ஆனால் தேவனுடைய இரக்கமும் அவர் கொண்டிருந்த மிகுந்த அன்பும் நம்முடைய சார்பில் செயல்படுவதை இங்கே பவுல் அறிவிக்கிறார். இரட்சிப்பின் தீர்மானம் பிதாவாகிய தேவனுடையது என்பதை "தேவனோ" என்ற வார்த்தை உறுதிப்படுத்துகிறது. பிதாவானவர் திட்டமிட்ட மனித இரட்சிப்பை குமாரனாகிய இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையிலே நிறைவேற்றினார். இவ்வாறு மனித இனத்துக்கு அருளப்பட்ட இலவச இரட்சிப்பை பரிசுத்த ஆவியானவராகிய தேவன் முன்குறிக்கப்பட்ட தேவபிள்ளைகளுக்குப் பகிர்ந்தளித்தார். திருத்துவதேவன் மனித இரட்சிப்பில் செயல்படுகிறார்.

நம்முடைய தேவன் இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவர் என்பது மனித இரட்சிப்பின் முதலாவது காரணமாகச் சொல்லப்படுகிறது. எபேசியர் நிருபத்தில் ஆறு இடங்களில் தேவனுடைய ஐசுவரியம்

குறிப்பிடப்படுகிறது *(1:7,18, 2:4,6, 3:8,19)*. இரக்க குணம் என்பது மற்றவர்களுக்காக பரிதாபப்படுவதோடு நின்றுவிடுவதில்லை, அவர்களுக்காக தன்னால் முடிந்த நன்மைகளைச் செய்வதில்தான் இரக்கம் நிறைவடைகிறது. **மற்றவர்களுடைய தேவையை அறிந்துகொள்வது மட்டுமல்ல, அந்த தேவையை சந்திப்பதில்தான் உண்மையான இரக்கம் வெளிப்படுகிறது.** மனித இனத்தைப் பொறுத்தவரை தேவன் அதை எவ்வாறு செய்கிறார்? முதலாவது அவர் தன்னுடைய நியாயத்தீர்ப்பை நிறுத்திக்கொள்கிறார். இரண்டாவதாக அந்த மனிதன் இரட்சிப்படைய தான் செய்யவேண்டியதைச் செய்கிறார். சங்கீதம் 103:8 சொல்கிறது, "கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்". அவர் "இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறார்" *(2கொரி 1:3)*.

அவர் பாவமனிதன்மேல், அன்புகூர்ந்தார் என்று மட்டும் சொல்லாமல் மிகுந்த அன்பு கூர்ந்தார் என்கிறார் பவுல். ஏனென்றால், "தேவன் அன்பாகவே இருக்கிறார்" *(1யோவான் 4:8,18)*. அன்பு என்பதற்குப் பயன்படுத்தப்படும் agape என்ற கிரேக்க வார்த்தை சுயநலமற்ற, பிரதிபலன் எதிர்பார்க்காத, தியாகம் நிறைந்த அன்பைக் குறிப்பிடுகிறது. அதனால்தான் எவ்விதத்திலும் தகுதியில்லாத மனிதனையும்கூட தேவனால் நேசிக்கமுடிகிறது. "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" *(ரோமர் 5:8)*. "நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில்" *(ரோமர் 5:10)* அவர் நம்மை நேசித்தார்.

தேவன் நம்மை எவ்வளவாக நேசித்தார் என்பது யோவான் 3:16ல் சொல்லப்பட்டிருக்கிறது. பாவிகளாகிய நாம் "கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்". பவுல் சொல்கிறபடி, "மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச்

சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்" (*ரோமர் 8:38,39*).

மிகுந்த அன்பினாலே தேவன் நம்மில் அன்பு கூர்ந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவருடைய அன்பு குறைவுபட்டதல்ல. எரேமியா *31:3*ல் தேவன் சொல்கிறார், "அநாதி சிநேகத்தால் உன்னை சிநேகித்தேன்". பாவமனிதன்மேல் தேவன் பாராட்டும் அன்பின் மேன்மையை மனித ஞானத்தால் விளங்கிக்கொள்ளமுடியாது. தன்னுடைய அன்பினிமித்தம் அவர் கதறுகிறார், "எப்பிராயீமே, நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்? இஸ்ரவேலே, நான் உன்னை எப்படி ஒப்புக்கொடுப்பேன்? . . . என் இருதயம் எனக்குள் குழம்புகிறது; என் பரிதாபங்கள் ஏகமாய்ப் பொங்குகிறது" (*ஓசியா 11:8*). எரேமியா *31:20*ல் அவர் சொல்கிறார், "எப்பிராயீம் எனக்கு அருமையான குமாரன் அல்லவோ? அவன் எனக்குப் பிரியமான பிள்ளையல்லவோ? அவனுக்கு விரோதமாய்ப் பேசினதுமுதல் அவனை நினைத்துக்கொண்டே இருக்கிறேன்; ஆகையால் என் உள்ளம் அவனுக்காகக் கொதிக்கிறது; அவனுக்கு உருக்கமாய் இரங்குவேன்". தேவனுடைய மிகுந்த அன்பை இந்த இரண்டு வசனங்களும் உறுதிப்படுத்துகின்றன.

**அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். (எபே 2:5)**

"பாவத்தின் சம்பளம் மரணம்" (*ரோமர் 6:23*) என்ற வசனத்தின் அடிப்படையில் ஏதோ ஒரு நாளில் நாம் மரிப்போம் என்று பவுல் சொல்லவில்லை. ஏற்கெனவே நாம் மரித்தவர்களாயிருக்கிறோம் என்று சொல்லி மரித்தவர்களில் ஒருவராக தன்னையும் சேர்த்துப் பேசுகிறார். மரித்த ஒரு மனிதனால் எதையுமே நடப்பிக்கமுடியாது. தன்னை உயிர்ப்பித்துக்கொள்ள அவனாலும் முடியாது, வைத்தியர்களாலும் முடியாது. அதாவது தேவன் ஒருவரால்தான் புதிய ஜீவனைக் கொடுத்து, அவனை உயிர்ப்பிக்கமுடியும். மரித்தவர்களாகிய நம்மை

தேவன் உயிர்ப்பித்தார் என்றால் அது எவ்வளவு பெரிய சிலாக்கியம். அதுவும் கிறிஸ்துவுக்குள் உயிர்ப்பித்தார் என்று சொல்வது எவ்வளவு மகத்துவமான மேன்மை! **நமக்கு தேவன் தரக்கூடிய சகல ஆசீர்வாதங்களும் கிறிஸ்துவுக்குள் மட்டுமே அடங்கியிருக்கிறது என்பதை அறிந்துகொள்ளுங்கள்.**

கிறிஸ்துவுக்குள் நாம் உயிர்ப்பிக்கப்படுவது எவ்வாறு சாத்தியமாகும்? இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அவர் மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்து விட்டாரே என்ற கேள்வி எழும்பக்கூடும். தேவன் மனிதன்மேல் கொண்டிருந்த அன்பின் நிமித்தம் அவனை இரட்சிக்க விரும்பினார் என்றாலும், அவனுடைய பாவம் அதற்கு ஒரு தடையாக இருந்தது. அதனால்தான் பாவமே இல்லாத மனிதனாக குமாரனாகிய இயேசுகிறிஸ்து வெளிப்படவேண்டியது இருந்தது. மனிதனுடைய பாவத்தினால் உண்டான மரணம் என்ற தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பை கல்வாரி சிலுவையில் மனிதனுடைய ஸ்தானத்தில் கிறிஸ்து ஏற்றுக்கொண்டார்.

அவரிடத்தில் எந்த ஒரு பாவமும் இல்லாதபடியாலும் தன்னுடைய பிதாவுக்கு மரணபரியந்தம் அவர் கீழ்ப்படிந்ததின் விளைவாகவும் மரணம் அவரை எந்த விதத்திலும் மேற்கொள்ளமுடியவில்லை. 2தீமோ 1:10 வாசித்துப் பாருங்கள். கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒவ்வொருவரும் இந்த வல்லமையைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்பதால் நாமும் கிறிஸ்துவுக்குள் உயிர்ப்பிக்கப்பட்டவர்கள் ஆகிறோம். விசுவாசத்தினால் மட்டுமே இது சாத்தியமாகிறது. ஒரு மனிதன் கிறிஸ்துவை தன்னுடைய ஆண்டவராகவும் இரட்சகராகவும் விசுவாசித்து, ஏற்றுக்கொண்டு, அதை அறிக்கையிடும்போது பிதாவாகிய தேவன் அதை கவனிக்கிறார். தேவன் எவ்வளவுதூரம் தன்னுடைய குமாரனை நேசிக்கிறார் என்றால், அறிக்கையிடும் பாவமனிதனை கிறிஸ்துவுக்குள்ளாக இணைத்து, மரித்த நிலையில் இருப்பவனை உயிர்ப்பித்து கனம் பண்ணுகிறார்.

"கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்" என்று வேதத்தின் மிக முக்கியமான வசனங்களில் ஒன்றாகக் கருதப்படும் இந்த 5வது வசனத்தை பவுல் நிறைவு செய்கிறார். ஏற்கெனவே கிருபையைக்குறித்த சில காரியங்களை எபே 1:5,7,8 ஆகிய வசனங்களை தியானிக்கும்போது பார்த்தோம். புதிய ஏற்பாட்டில் சுமார் 150 இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கும் இந்த வார்த்தையை அப்போஸ்தலனாகிய பவுல் 100 தடவைக்குமேல் பயன்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ரோமர் 3:24ல் அவர் சொல்கிறார், "இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்". கிருபை வழங்கப்படாத நிலையில் எந்த மனிதனாலும் தேவனிடம் திரும்பவும், அவரை விசுவாசிக்கவும் முடியாது. மார்ட்டின் லூத்தர் சொல்வதுபோல் தேவகிருபை ஒருவனை தேவனிடம் இழுத்துக்கொள்ளாத நிலையில் ஒரு உலர்ந்துபோன மரக்கட்டையோ, அல்லது ஒரு கல்லோ தேவன் பக்கம் திரும்பிவிடக்கூடும், நிச்சயமாக மனிதனால் முடியாது.

"கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்" என்று பவுல் சொல்லும்போது, நம்முடைய இரட்சிப்பு ஏற்கெனவே நடந்து முடிந்த காரியம் என்பது தெளிவாகிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும், சாத்தானிடமிருந்தும், பாவம், மரணம் என்ற பிரமாணங்களிலிருந்தும் இரட்சிக்கப்பட்டு விட்டோம். 4வது வசனத்தில் தேவனுடைய இரக்கத்தின் ஐசுவரியத்தினால் உண்டான தேவ அன்பைக்குறித்து பேசிய பவுல் இங்கே கிருபையின் செயலாற்றல் என்ன என்பதை அறிவிக்கிறார். இரக்கத்தின் விளைவாகவே தேவன் பாவமனிதன்மேல் பரிதாபப்படுகிறார். ஆனால் தேவகிருபையோ நமக்கு பாவமன்னிப்பைக் கொண்டுவருகிறது. இரக்கத்தின் செயல்பாட்டுக்கும் கிருபையின் செயல்பாட்டுக்கும் வித்தியாசம் உண்டு.

"கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்" என்ற வசனத்தின் எதிர்மறையான (opposite) வார்த்தை நீதியின் அடிப்படையில்

இரட்சிக்கப்பட்டீர்கள் என்பது. தன்னுடைய நீதியின் அடிப்படையில் இரட்சிக்கப்படக்கூடிய ஒருவர் உண்டானால் அவர் இயேசுகிறிஸ்து ஒருவரே. நாமோ கிருபையினால் இரட்சிக்கப்படுகிறோம். அதாவது பாவத்தின் ஆளுகைக்கும், தேவகோபாக்கினைக்கும் நாம் தப்புவிக்கப்பட்டாயிற்று.

**கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகாமேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச்செய்வதற்காக (எபே 2:6)**

அடுத்த ஏழாவது வசனத்தில் "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்" என்று வாசிக்கிறோம். அந்த மகா பெரிய மேன்மையை தேவன் வழங்கியிருக்கிறார் என்றால் அதற்கான இரண்டு காரணங்கள் இந்த வசனத்தில் சொல்லப்படுகிறது.

1. கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடம் வைத்த தயவு (kindness)

2. தன்னுடைய கிருபையின் மேன்மையை (riches of His grace) பின்வரும் சந்ததியாரும் விளங்கிக்கொள்ள வேண்டும் என்ற அவருடைய விருப்பம்.

பிதாவாகிய தேவன் மனிதன்மேல் தயவுள்ளவராய் இருக்கிறார் என்ற சத்தியத்தை அறிவிக்கும் அதேவேளையில், அது கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக மனிதன்மேல் வைக்கப்பட்ட ஒரு காரியம் என்பதும் உறுதிப்படுத்தப்படுகிறது. "அவர் தம்முடைய இரக்கங்களின்படியும், தம்முடைய திரளான தயவுகளின்படியும்" *(ஏசாயா 63:7)* இஸ்ரவேல் வம்சத்தாருக்கு நன்மை செய்தார் என்று பார்க்கிறோம். "அவர் ஆயிரம் தலைமுறைமட்டும் உடன்படிக்கையையும் தயவையும் காக்கிற உண்மையுள்ள தேவன்" *(உபா 7:9)* என்று அழைக்கப்படுகிறார். இந்த வாக்கின் அடிப்படையில்தான் சங்கீதக்காரன் ஜெபிக்கிறார், "கர்த்தாவே,

உம்முடைய வாக்கின்படி, உமது தயவும், உமது இரட்சிப்பும் எனக்கு வருவதாக" *(சங் 119:41). சங் 30:5, 69:16, நீதி 12:2, தானி 1:9* வாசித்துப்பாருங்கள்.

அடுத்ததாக தம்முடைய கிருபையின் மேன்மையைக்குறித்த காரியங்களை வருங்காலங்களில் விளங்கப்பண்ணவேண்டும் என்பது தேவனுடைய நோக்கமாகவும், மனவிருப்பமாகவும் இருந்தது என்று பவுல் அறிவிக்கிறார். மனிதனை தன்னுடைய குமாரனது மரணத்தால் இரட்சிப்பதின் மூலமாக தேவன் மகிமைப்படவிருக்கிறார். மனித இரட்சிப்பின் நோக்கம் மனிதனையும் கடந்து செல்லும் காரியமாக இருக்கிறது. அது இரட்சிக்கப்பட்ட மனிதனோடு முடிவடைவ-தில்லை. வருங்காலங்களில், எத்தனையோ நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கழிந்தபின்னும் பின்வரும் சந்ததியாரிலும் இரட்சிக்கப்படக்கூடிய ஆத்துமாக்களும் அவருடைய விலையேறப்பெற்ற ஐசுவரியங்களாகவே கருதப்படவிருக்கிறார்கள்.

ஒரு கோடீஸ்வரத் தாயிடம், "உங்களுடைய பொக்கிஷங்கள் எங்கே இருக்கிறது?" என்று ஒருவர் கேட்டபோது அந்த ஸ்திரீ தன் இரண்டு பிள்ளைகளைச் சுட்டிக்காட்டி "இவர்கள்தான் என் பொக்கிஷம்" என்று சொன்னார்களாம். இதைப்போலவே, வரும் நாட்களில், நித்தியத்தில் தேவனால் மீட்கப்பட்டவர்கள் தேவனுடைய மகாமேன்மைக்கு ஜீவனுள்ள சாட்சிகளாய் இருப்பார்கள். "அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள்" *(எபே 1:14)* பார்த்தோம். அவர்களுக்காக தேவனிடமிருந்து புறப்பட்டுச்சென்ற தயவும் கிருபையும் இயேசுகிறிஸ்துவுக்கு சதாகாலமும் மகிமையைச் சேர்ப்பித்துக்-கொண்டே இருக்கும். "நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள்" *(மத் 13:43)* என்று எவ்வளவு பெருமையோடு இயேசு கூறுகிறார்.

**கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார். (எபே 2:7)**

5வது வசனத்தில் "அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மை கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்" என்று அறிவித்த பவுல் இங்கே பிதாவாகிய தேவன் நமக்குச் செய்த மகத்துவமான காரியம் ஒன்றை அறிவிக்கிறார். "நம்மை அவரோடேகூட எழுப்பி உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்" என்கிறார். உயிர்த்தெழுந்த இயேசு "அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், உயர எடுத்துக் கொள்ளப்பட்டார்" *(அப் 1:9)* என்று வாசிக்கிறோமல்லவா? எவ்வாறு அவர் "வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ" *(வசனம் 11)* அவ்வாறே நாம் அவரோடேகூட வானத்துக்கு எழும்புவோம். அதுமட்டுமல்ல, எவ்வாறு கிறிஸ்து உன்னதங்களில் பிதாவின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்தாரோ, அவ்வாறே, அதே மகிமையிலும் மகத்துவத்திலும் நம்மை அவரோடு உட்காரவும் செய்வார் என்று பவுல் அறிவிக்கிறார். எபே *1:3*ல் சொல்லப்பட்ட உன்னதங்களிலே ஆவிக்குரிய ஆசீர்வாதங்களில் இதுவே மேன்மையானதாகக் கருதப்பட வேண்டும். அதனால்தான் பவுல் "நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளையே தேடுங்கள்" *(கொலோ 3:1)* என்கிறார். **தேடுவது நம்முடைய கடமை. அதை நடப்பிப்பது பிதாவாகிய தேவனுடைய கிருபை.**

பவுல் என்ன சொல்கிறார் என்பதைக் கவனியுங்கள். அவரோடேகூட உட்காரச் செய்வார் என்று எதிர்காலத்தில் நடக்கப்போகிற ஒரு நிகழ்ச்சியாக சொல்லப்படவில்லை. ஒருவேளை உட்காரச்செய்வார் என்று சந்தேகத்துடனும் சொல்லப்படவில்லை. நாம் உட்கார்ந்திருப்பது ஏற்கெனவே நடந்து முடிந்த நிகழ்ச்சியைப்போல பவுல் பேசுகிறார். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தன்னுடைய பாடுமரணத்துக்கு முந்தின நாளில் தன் பிதாவிடம் சொல்கிறார், "நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்" *(யோவான் 17:22)*. கொடுக்கப்போகிறேன் என்றோ, கொடுப்பேன் என்றோ, கொடுத்தாலும் கொடுப்பேன் என்றோ பிதாவிடம் அறிவிக்கவில்லை. இப்படிப்பட்ட நிச்சயத்தோடு பவுல் எழுதியிருக்கிறார். இயேசு

ஜெபிக்கிறார், "நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனே கூட இருக்கவிரும்புகிறேன்" *(யோவா 17:24)*. தன்னுடைய ஒரேபேறான குமாரனின் வேண்டுதலை பிதா நிச்சயமாக ஏற்றுக்கொண்டிருப்பார் என்ற நிச்சயத்தால் பவுல், "நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்" என்கிறார். "அவரோடே கூட" என்று இரண்டு முறை பவுல் குறிப்பிடுவதைக் கவனியுங்கள்.

கடைசிகால சபையான லவோதிக்கேயா சபையின் தூதனிடம் உயிர்த்தெழுந்த இயேசு என்ன சொல்கிறார் என்பதைக் கவனியுங்கள், "நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்" *(வெளி 3:21)*. "அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்" *(2தீமோ 2:12)* என்று சொல்லப்பட்டிருக்கிறது அல்லவா? நம்மால் முழுமையாக விளங்கிக்கொள்ளமுடியாவிட்டாலும், ஏதோ ஒரு பரிமாணத்தில் உன்னதங்களில் கிறிஸ்துவோடுகூட உட்கார்ந்திருந்து ஆளுகைசெய்துகொண்டிருக்கிறோம் என்பதை நம்புங்கள்.

இந்த மேன்மையான மகத்துவங்கள் எல்லாம் "கிறிஸ்து இயேசுவுக்குள்" மட்டுமே சாத்தியமாகிறது என்பதை பவுல் வசனத்தின் துவக்கத்திலேயே வலியுறுத்துகிறார். நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் வெற்றி நாம் எந்த அளவுக்கு கிறிஸ்துவைச் சார்ந்திருக்கிறோம் என்பதைப் பொறுத்தது என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ளவேண்டும். ஊழியக்காரர்கள் எந்த அளவு பிரபலமானவர்களாக இருந்தாலும் சரி, எவ்வளவு வல்லமையுடையவர்களாக இருந்தாலும் சரி, அவர்களோடு உங்களை இணைத்துக்கொள்வீர்கள் என்றால் ஏமாற்றம் ஒன்றுதான் மிஞ்சியிருக்கும். நாம் கிறிஸ்துவோடு குற்றஞ்சாட்டப்பட்டோம்.

கிறிஸ்துவோடு நியாயந்தீர்க்கப்பட்டோம். கிறிஸ்துவோடு அடக்கம் பண்ணப்பட்டோம் (*ரோமர் 6:4-8,8:17, கொலோ 2:12, 2தீமோ 2:11*).

“அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்” (*ரோமர் 6:4,5*). “கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோமானால், அவருடனே கூட பிழைத்தும் இருப்போம்” (*வசனம் 8*). “அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள்” (*வசனம் 11*). கொலோசெயர் 2:12 சொல்கிறபடி “ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாயும் இருக்கிறீர்கள்”.

கிறிஸ்துவோடு எழுப்பப்பட்ட நாம் ஏற்கெனவே உன்னதங்களில் (in heavenly places) இருப்பதாகப் பவுல் எழுதுகிறார். நாம் சரீரத்தில் இந்த உலகத்தில்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்றாலும் ஆவிக்குரிய ரீதியில் பரலோகத்தில் இருக்கிறோம். நாம் இரண்டு உலகத்துக்குச் சொந்தமானவர்கள். உலகத்தோடும் நமக்கு உறவு உண்டு, பரலோகத்திலும் நமக்கு ஐக்கியம் உண்டு. அதனால்தான் “பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே” (*எபி 3:1*) என்று சபையாரை பவுல் அழைக்கிறார். இந்த பரம அழைப்பு அவர்களை உன்னதங்களுக்கு அழைத்துச் செல்கிறது. (*ரோமர் 6:5, 8:17, கொலோ 2:13, 3:1-3, 2தீமோ 2:12, வெளி 20:4*).

எபேசியர் 1:21 வது வசனத்தின்படி “அவரை (கிறிஸ்துவை) உன்னதங்களில் தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படி” செய்தார் என்பது உண்மையானால், கிறிஸ்தவர்களாகிய நம் ஒவ்வொருவரையும் தன்னுடைய குமாரனுக்குள் பார்ப்பதால்

"நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையில் வெளிப்படுவீர்கள்" *(கொலோ 3:4)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்து "எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" *(பிலிப் 3:21)*. **யாருடைய சரீரத்திற்கு ஒப்பாக நாம் மாறுவோம் என்பதை சற்று கற்பனை செய்து பாருங்கள்.** யோவான் தைரியமாகச் சொல்கிறார், "பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்" *(1யோவான் 3:2)*. நீங்களும் நானும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்பாயிருப்போம் என்பதை வேதவசனத்தின் ஆதாரத்தில் நம்புங்கள். அவருக்கு ஒப்பாயிருப்பதால்தான் உன்னதங்களில் அவரோடு உட்கார்ந்திருக்கமுடிகிறது.

**கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; (எபே 2:8)**

*5*வது வசனத்தில், "கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்" என்ற அறிவிப்போடு முடித்துக்கொண்ட பவுல் இரட்சிப்பில் கிருபையோடு இணைந்து செயல்படும் விசுவாசத்தின் பங்கு என்ன என்பதை அறிவித்துவிட்டு *(ரோமர் 3:22, 25, கலாத் 2:15, 1பேதுரு 1:5)*, அந்த விசுவாசம் தேவனால் வழங்கப்படும் ஈவு என்பதையும் வெளிப்படுத்துகிறார். எபேசு சபையார் தாங்கள் இரட்சிக்கப் படுவதற்கென எதையாவது செய்திருந்தால் அவர் தங்களுக்கு வழங்கப்பட்ட சுவிசேஷத்தைக்கேட்டு, அதை விசுவாசித்து, தங்களை முற்றிலுமாக இரட்சகரின் கையில் ஒப்புக்கொடுத்ததுதானேயன்றி வேறு எதையுமே அவர்கள் செய்யவில்லை. தேவனுக்கு முன்பாக தங்களை நீதிமான்கள் என்றோ, நல்லவர்கள் என்றோ காட்டிக்கொள்ள

அவர்களிடம் எதுவும் இல்லை. எவ்வித நற்கிரியைகளும் அவர்களிடம் காணப்படவில்லை. அவர்கள் கிறிஸ்துவை விசுவாசித்தார்கள் என்பது உண்மைதான். ஆனால் இந்த விசுவாசத்தை இலவச ஈவாக, நன்கொடையாக அவர்களுக்கு அருளிச்செய்தவர் தேவனே. தேவனுடைய வார்த்தையே மரித்த நிலையில் இருக்கும் ஒருவனை எழுப்பி அவனை உயிர்ப்பித்து, சத்தியத்தை அறிந்து கொள்ளச் செய்து, அவரை விசுவாசிக்கும்படியான தூண்டுதலை உண்டாக்கி, அவனில் இரட்சிப்பை உண்டாக்குகிறது. அல்லேலூயா!

இரட்சிப்பு இலவசமானது என்பது மட்டுமல்ல, அது முற்றிலுமாக தேவனுடையது என்ற சத்தியத்தை இந்த வசனம் இரத்தினச் சுருக்கமாக அறிவிக்கிறது. தேவனே தன்னுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இரட்சகராகக் கொடுத்தார். இரட்சிப்பின் செய்தியை கிருபையாக, இலவசமாக அவர்களுக்குத் தன்னுடைய ஊழியர்கள் மூலமாகக் கொண்டுவந்தார். எல்லாவற்றுக்கும் மேலாக அதை நம்பி ஏற்றுக்கொள்ளக்கூடிய விசுவாசத்தையும் கொடுத்தார். இதன்மூலமாக

1. நாம் பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுகிறோம். மத்தேயு 1:21 சொல்கிறபடி, "அவர் (கிறிஸ்து) தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்".

2. சாபங்களில் இருந்து இரட்சிக்கப்படுகிறோம். கலாத்தியர் 3:13 சொல்கிறபடி, "கிறிஸ்து நமக்காக சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்".

3. கோபாக்கினையிலிருந்து இரட்சிக்கப்படுகிறோம். 1தெச 1:10 சொல்கிறபடி, "இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவர்".

இந்த வசனத்தில் "இரட்சிக்கப்பட்டீர்கள்" என்று பவுல் சொல்வதைக் கவனியுங்கள். இரட்சிப்பு ஏற்கெனவே நடந்துமுடிந்த

செயலாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதில் கிருபையின் பங்கு என்ன என்பதை 5வது வசனத்தில் ஏற்கெனவே தியானித்துவிட்டோம் என்பதால் விசுவாசத்தின் மூலமாக உண்டாகும் இரட்சிப்பைக் குறித்து இப்போது பார்க்கலாம். ரோமர் *10:9*ல் பவுல் சொல்கிறார், "கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினால் அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்!" **கிருபையைத் தொடர்ந்து நம்மிடமிருந்து வெளிப்படும் விசுவாசமே மனித இரட்சிப்புக்குக் காரணமாக அமைகிறது.** ஏனென்றால் விசுவாசம் சர்வவல்லமையுள்ள தேவனை சந்தோஷிப்பிக்கிறது. தன்னுடைய பிள்ளைகள் தன்மேல் விசுவாசமுள்ளவர்களாய் தன்னையே நம்பியிருப்பதைப் பார்க்கும்போது அவர் மனமகிழ்ச்சியடைகிறார். "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" *(யோவான் 3:16)* என்று எழுதப்பட்டிருக்கிறது.

கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப் படுவதாக பவுல் அறிவிக்கிறார். இரட்சிப்பு தேவ கிருபையின் செயலாற்றல்.

1. ஏனென்றால் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போது இரட்சிக்கப்பட்டோம். *(ரோமர் 5:6)*

2. நாம் அக்கிரமக்காரராக இருந்தபோது இரட்சிக்கப்பட்டோம். *(ரோமர் 5:6)*

3. பாவிகளாயிருக்கும்போது இரட்சிக்கப்பட்டோம். *(ரோமர் 5:8)*

4. தேவனுடைய சத்துருக்களாயிருக்கும்போது இரட்சிக்கப்பட்டோம். *(ரோமர் 5:10)*

தன்னை இரட்சித்துக்கொள்ள எந்த ஒரு மனிதனாலும், எந்த ஒரு காரியத்தையும் செய்யமுடியாது. இரட்சிப்பை ஒருவனால் சம்பாதிக்கமுடியாது. இரட்சிப்புக்குத் தன்னைத் தகுதிப்படுத்திக் கொள்ள முடியுமா? அதுவும் முடியாது. அவன் செய்யக்கூடிய ஒரே ஒரு காரியம் தன்னை இரட்சிப்பதாக தேவன் அறிவிக்கும் வார்த்தையை விசுவாசித்து ஏற்றுக்கொள்வதுதான். ரோமர் *4:5* சொல்கிறபடி, "ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்". அந்த நீதியே அவனுக்கு இரட்சிப்பை அருளிச் செய்கிறது.

ஒருவனுடைய தகுதியின் அடிப்படையில் கிருபை கொடுக்கப்படுவதில்லை. ஆனாலும் பிதாவாகிய தேவன் தன்னுடைய ஒரே குமாரனை கிருபையாக நம்மை இரட்சிக்கும்படியாக பாடு மரணத்துக்கு ஒப்புக்கொடுத்தார். அவர் நினைத்திருந்தால் ஒரே வினாடியில் பாவமனிதனை நிர்மூலமாக்கியிருக்கலாம். தேவன் அதைச் செய்யவில்லை. ரோமர் *3:23,24* சொல்கிறபடி, "எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்".

விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் என்று பவுல் சொல்லும்போது அவர் அறிவிக்கும் காரியம், கிறிஸ்து நமக்காக கல்வாரி சிலுவையில் மரித்தார் என்பதே. நம்முடைய பாவங்களையும், அதற்கான தண்டனையையும் தன்மேல் கிறிஸ்து ஏற்றுக்கொண்டார். கிறிஸ்து நமக்காக மரித்தார் என்பதை நாம் விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும்போது, தேவன் ஒரு மகத்துவமான காரியத்தை நம்மில் நடப்பிக்கிறார். கிறிஸ்து நமக்காகவே மரித்தார் என்பதாக தேவன் எடுத்துக்கொள்கிறார். நம்முடைய விசுவாசம் அவருடைய ஒரே பேறான குமாரனை கனம் பண்ணுவதாக இருப்பதால், கிறிஸ்துவின் மரணத்தை நம்முடைய மரணமாக ஏற்றுக்கொள்கிறார். கிறிஸ்துவின் மரணத்தோடு

இவ்வாறு நாம் ஐக்கியம் கொண்டவர்களாகிறோம். நம்முடைய பாவத்துக்கான தண்டனையை நாம் அனுபவித்து தீர்த்துவிட்டதாக தேவன் நம்மை அங்கீகரிக்கிறார். "ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்" (ரோமர் 5:19) என்ற வசனத்தின்படி கிறிஸ்துவினுடைய கீழ்ப்படிதல் நம்முடைய கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. நாம் கிறிஸ்துவைப் போலாகிறோம். ரோமர் 8:29 அதைத்தான் சொல்கிறது, "தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ, அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்".

வசனத்தின் முடிவாக "இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு" என்கிறார் பவுல். "இது" என்ற வார்த்தை நம்மில் இரட்சிப்பை உருவாக்கும் விசுவாசத்தைக் குறிப்பிடுகிறது என்பதில் யாருக்கும் எந்த சந்தேகமும் இல்லை. கிருபையினால் மட்டும் ஒரு மனிதன் இரட்சிக்கப்படுவதில்லை என்று பார்த்தோம். அவனுக்கு விசுவாசமும் தேவைப்படுகிறது. **விசுவாசமில்லாத கிருபை வீணடிக்கப்படுகிறது. கிருபை இல்லாத விசுவாசம் பெலனில்லாமல் போகிறது.** "நம்முடைய பாவங்களை மட்டுமல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" (1யோவான் 2:2) என்று பாவநிவாரண பலியாகிய கிறிஸ்துவைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அவர் மூலமாக "எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகியும்" (தீத்து 2:11) மனிதர்களில் பெரும்பாலானோர் இரட்சிக்கப்படவில்லை என்றால் அதற்குக் காரணம் அவர்களிடம் போதுமான விசுவாசம் இல்லாததுதான். அதனால்தான் தேவன் தன்னால் முன்குறிக்கப்பட்ட பரிசுத்தவான்களுக்கு, தேவகிருபையை ஏற்றுக்கொள்ளக்கூடிய விசுவாசத்தை ஈவாக, நன்கொடையாகக் கொடுக்கச் சித்தமானார். இந்த விசுவாசத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் மட்டுமே தங்களுக்கென்று வெளிப்பட்ட தேவகிருபையை ஏற்றுக்கொண்டு இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

கிறிஸ்துவின் மரணத்தையும் உயிர்தெழுதலையும் ஏற்றுக்கொள்ளும் விசுவாசம் உங்களுக்கு இருக்குமானால் அது தேவன் கொடுத்த ஈவு என்பதை அறிந்துகொள்ளுங்கள். உங்களிடம் விசுவாசம் காணப்படுமேயானால் அதுகுறித்து மேன்மை பாராட்ட உங்களில் ஒன்றுமில்லை என்பதைத்தான் இந்த வசனம் அறிவிக்கிறது. அது தேவன் உங்களுக்குக் கொடுத்த ஈவு. "ஈவு" என்ற வார்த்தை எந்த கிரையமும் கொடுக்காமல், எந்த பிரதிபலனும் செலுத்தாமல் ஒருவன் இலவசமாகப் பெற்றுக்கொள்ளும் ஒரு மேன்மை அல்லது வரம். இந்த ஈவு எல்லாருக்கும் வழங்கப்படுவதில்லை. சாலொமோனுடைய மண்டபத்தில் தன்னைச் சூழ்ந்துகொண்டு கேள்விகளைக் கேட்கும் யூதர்களிடம் கிறிஸ்து சொல்கிறார், "நான் உங்களுக்குச் சொன்னபடியே, நீங்கள் என் மந்தையின் ஆடுகளாயிராதபடியினால் விசுவாசியாமலிருக்கிறீர்கள்" *(யோவான் 10:26)*. அவருடைய மந்தையின் ஆடுகளாக முன்குறிக்கப்பட்டவர்களால்தான் விசுவாசிக்கமுடியும்.

இன்னொரு காரியத்தையும் நாம் அறிந்துகொள்ளவேண்டும். ஒரு நண்பர் ஈவாக, இலவசமாக, நன்கொடையாக ஒரு பொருளை உங்களுக்குக் கொடுக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவருக்கு நன்றி சொல்லி, அதை ஏற்றுக்கொள்ளும்போது அல்லது நம்முடையதாக அதை அங்கீகரிக்கும்போதுதான் அது நமக்குச் சொந்தமாகிறது. எனக்கு அது வேண்டாம் என்று சொல்லவோ, அது எனக்குத் தேவையில்லை என்று சொல்லவோ உங்களுக்கு உரிமை உண்டு. இவ்வாறு பலர் தேவன் தரும் விசுவாசத்தை ஏற்றுக்கொள்ளாமல் போகிறார்கள். இரட்சிக்கப்படாமல் ஆக்கினைத் தீர்ப்பை நோக்கிப்போகிறார்கள்.

**ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல. (எபே 2:9)**

தேவனுடைய கிருபையும், தேவனிடமிருந்து மனிதன் ஈவாகப் பெற்றுக்கொள்ளும் விசுவாசமுமே பாவ மனிதனின் இரட்சிப்புக்குக் காரணமாக அமைகிறது என்பதை அறிவித்த பவுல், இரட்சிப்புக்கும்

மனிதன் நடப்பிக்கும் நற்கிரியைக்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்பதையும் அறிவிக்கிறார். கிரியை என்ற வார்த்தை நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்படியும் நற்கிரியைகளையே குறிப்பிடுகிறது. ஓய்வுநாளை அனுசரித்தல், விருத்தசேதனம் செய்தல், உணவு சம்பந்தமான விதிமுறைகள், பலி மற்றும் ஆராதனை காரியங்களுக்கடுத்த சட்டதிட்டங்களை குறிப்பிடுகிறது. இந்த கிரியைகள் நீதியானவைகளாகவே இருந்தாலும் அதனால் இரட்சிப்பு உண்டாவதில்லை என்ற சத்தியத்தை பவுல் வெளிப்படையாக அறிவிக்கிறார். ஒருவன் தன்னுடைய நற்கிரியைகளின் மூலம் இரட்சிக்கப்படுவானேயாகில் அதைக்குறித்து அவன் மேன்மை பாராட்ட இடம் உண்டு என்பதை திட்டவட்டமாக பவுல் வெளிப்படுத்துகிறார். ரோமர் 4:4ல் அவர் சொல்கிறார், "கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபையென்றெண்ணப்படாமல், கடனென்றெண்ணப்படும்". நம் தேவன் யாருக்கும் எந்த விதத்திலும் கடன்படுபவர் அல்ல. எந்த ஒரு மனிதனுக்கும் தான் ஒரு நன்மையைச் செய்தே ஆகவேண்டும் என்ற கட்டாயத்தில் தேவன் இல்லை. தேவனுக்கு எந்த ஒரு நன்மையையும் செய்யக்கூடிய அந்தஸ்தில் எந்த மனிதனும் இல்லை என்பதையும் அறிந்துகொள்ளவேண்டும்.

அடுத்ததாக நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால், அதாவது தேவன் மோசே மூலமாக சீனாய் மலையில் அருளிச் செய்த பிரமாணங்களுக்கு கீழ்ப்படிவதன் மூலமாக ஒரு மனிதன் இரட்சிக்கப்படமுடியுமா என்ற கேள்வி எழும்பக்கூடும் என்பதை பவுல் அறிந்தவராய் இரட்சிப்பு கிரியைகளினால் உண்டாவதில்லை என்று திட்டவட்டமாக அறிவிக்கிறார். பிலிப் 3:9ல் அவர் சொல்கிறார், "நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும், விசுவாச மூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவன்." ஒருமனிதனை இரட்சிப்பது சுயநீதி அல்ல. தேவனுடைய நீதி. மோசே மூலமாக வழங்கப்பட்ட 613 பிரமாணங்களையும் ஒரு மனிதன் கீழ்ப்படியும்போது அதனிமித்தம் அவன் ஒருவேளை நீதிமானாகக்

கருதப்படக்கூடும். ஆனால் கிரியைக்கு முக்கியத்துவம் கொடுத்துப்பேசும் யாக்கோபு என்ன சொல்கிறார்? "ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான். ஏனென்றால், விபசாரஞ்செய்யாதிருப்பாயாக என்று சொன்னவர் கொலை செய்யாதிருப்பாயாக என்றும் சொன்னார்; ஆதலால் விபசாரஞ்செய்யாமலிருந்தும் கொலை செய்தாயானால் நியாயப்பிரமாணத்தை மீறினவனாவாய்" *(யாக் 2:10,11)*. "நியாயப் பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லை" *(கலாத் 3:11)*.

தசமபாகம் கொடுக்கவேண்டும் என்பது போன்ற நியாயப்பிரமாண விதிமுறைகளை வலியுறுத்தும் ஊழியக்காரர்கள் இன்று அதிகமாகக் காணப்படுகிறார்கள். "நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்; நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே" *(கலா 3:10)*. ரோமர் *3:20, 28, 4:1-5*, 2தீமோ *1:9*, தீத்து *3:5* வாசித்துப்பாருங்கள். "நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே" *(கலா 2:21)*. தன்னுடைய குமாரனை சிலுவை மரணத்துக்கு ஒப்புக்கொடுக்காமலேயே மனிதனை தேவன் நீதிமானாக்கி இரட்சித்திருக்கலாமே. "விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்" *(ரோமர் 10:4)* என்று சொல்லப்பட்டிருக்க, அவர் முடித்துவைத்ததை நாம் ஏன் துவக்கவேண்டும்? "அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்" *(1கொரி 1:31)*.

லூக்கா *18:9-14*ல் நாம் சந்திக்கும் ஆயக்காரன் நல்லமனிதனாக இருந்து நற்கிரியைகளையே செய்துவந்தான். அவன் பறிகாரன் அல்ல, அநியாயக்காரன் அல்ல, விபச்சாரக்காரன் அல்ல. அது மட்டுமல்ல, தேவனை ஸ்தோத்திரிக்கிறவன், வாரம் இரண்டு தடவை

உபவாசிப்பவன். தசமபாகம் கொடுக்கிறவன். ஜெபம் பண்ணுகிறவன். ஒரு சபையின் மூப்பராகச் செயல்படக்கூடிய எல்லா தகுதிகளும் அவனுக்கு இருந்தது. ஆனால் அவன் நீதிமானாக்கப்படவில்லை என்று 14வது வசனத்தில் இயேசு சொல்கிறார். இதன் அடிப்படையில்தான் பவுல் தைரியமாகச் சொல்கிறார், **"நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுகிறதில்லையே"** *(கலா 2:16)*

இயேசுவின் நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தவர்கள், அவருடைய நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினவர்கள், அவருடைய நாமத்தினாலே அற்புதங்களைச் செய்தவர்கள் நிச்சயமாகவே வல்லமையான ஊழியக்காரர்களாகத்தான் கருதப்பட்டிருப்பார்கள். அவர்களுடைய ஊழியத்தின் மூலமாக பலர் இரட்சிக்கப்பட்டிருப்பார்கள். ஆனாலும் நற்கிரியைகளை நடப்பித்த அவர்களை ஆண்டவர் "அக்கிரமக்காரர்" என்று அழைப்பதோடு நிறுத்திக்கொள்ளாமல், "என்னைவிட்டு அகன்றுபோங்கள்" என்கிறார் *(மத் 7:22,23)*. ஒரு காரியத்தை அறிந்து கொள்ளுங்கள். **தங்களுடைய நற்கிரியைகளினால் தங்களை இரட்சித்துக்கொள்ள விரும்புகிறவர்கள் தங்களையே இரட்சகராக்கிக்கொள்ளப் பார்க்கிறார்கள்.** தேவன் இதை ஒருபோதும் அனுமதிப்பதில்லை. அவர் தன்னுடைய மகிமையை ஒருவருக்கும் கொடுப்பதில்லை *(ஏசாயா 42:8, 48:11)*. தன்னுடைய ஊழியக்காரர்களோடுகூட அவர் அதைப் பகிர்ந்துகொள்வதில்லை.

**ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார். (எபே 2:10)**

C.L.T. மொழிபெயர்ப்பு இவ்வாறு சொல்கிறது, "நாம் கடவுளின் கைவேலைப்பாடு, நற்செயல்கள் புரிவதற்கென்று கிறிஸ்து இயேசுவோடு இணைக்கப்பட்டவர்களாய் உண்டாக்கப் பட்டிருக்கிறோம். நாம் அவ்வாறு நற்செயல்கள் புரிந்து வாழும்படி

கடவுள் முன்கூட்டியே ஏற்பாடு செய்திருக்கிறார்". முந்தின வசனம்அறிவித்தபடி நற்கிரியை செய்வதால்மட்டும் நாம் இரட்சிக்கப்படுவதில்லை. இந்த வசனமோ நற்கிரியைகள் செய்யும்படியாக நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்கிறது. **கிறிஸ்தவர்களாகிய நாம் இரட்சிக்கப்படுவதற்கென்று நற்கிரியைகள் செய்வதில்லை. இரட்சிக்கப்பட்டபின் அதன் விளைவாக நற்கிரியைகளை நடப்பிக்கிறோம்.**

நற்கிரியைகளைச் செய்கிறதற்கு, கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் என்பதுதான் பவுல் அறிவிக்கும் முதலாவது காரியம். நம்முடைய வருங்கால வாழ்க்கையில் நாம் செய்யப்போகிற காரியங்களைக் குறித்த வரைபடம் தேவனிடத்தில் இருக்கிறது. நாம் என்னவெல்லாம் நடப்பிப்போம், எப்போது நடப்பிப்போம் என்பதை அவரே திட்டமிட்டிருக்கிறார். நம்முடைய நற்கிரியைகள் நாம் பெற்றுக்கொண்ட இரட்சிப்பை உறுதிப்படுத்துவதாக மட்டுமே இருக்கிறது. இன்னொரு விதத்தில் சொல்வதானால் **தேவனுடைய பிள்ளைகளாகும்படி நாம் நற்கிரியைகள் செய்வதில்லை. ஏற்கெனவே அவருடைய பிள்ளைகளாக இருப்பதினால் நற்கிரியைகள் செய்கிறோம். பரலோகத்துக்குப் போகவேண்டும் என்பதற்காக நற்கிரியைகளைச் செய்வதில்லை. பரலோகத்துக்கு போய்க் கொண்டிருப்பதால் நற்கிரியைகளைச் செய்கிறோம்.** அந்த நற்கிரியைகளை தேவனே நிர்ணயம் பண்ணியிருப்பதால் அவைகளை நடப்பிப்பது நம்முடைய இயல்பான சுபாவமாகிவிடுகிறது. வேறு எந்தக் காரியத்தையும் நம்மால் செய்யமுடியாது என்று ஆகிவிடுகிறது. "நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது" (*மத் 7:18*) என்ற வசனத்தின்படி இது நடக்கிறது என்பதால் பவுல் சொல்கிறார், "உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவாரென்று நம்பி, நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்" (*பிலிப் 1:5,6*).

நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாக இருக்கிறோம் (அவருடைய கைவேலைப்பாடாக இருக்கிறோம்) என்பது பவுல் அறிவிக்கும் இரண்டாவது காரியம். கிறிஸ்துவுக்குள் சிருஷ்டிக்கப்படுவது என்பது மறுபடியும் பிறத்தல் என்ற ஆவிக்குரிய பிறப்பைக் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளலாம். பிதாவாகிய தேவன் தன்னுடைய குமாரனுக்குள் நம்மை புதிதாக உருவாக்கியுள்ளார். அதன் விளைவாக நம்முடைய ஆவி உயிர்ப்பிக்கப்படுகிறது. "அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்" (எபே 2:5) என்ற வசனத்தை தியானித்தோம். இதன் விளைவாக மூன்று காரியங்கள் நடக்கின்றன.

1. தேவனுடைய தெய்வீக திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகிறோம் (2பேதுரு 1:4).

2. கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாகிறோம் (2கொரி 5:17).

3. மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டவர்களாகிறோம் (எபே 4:24).

இந்த மூன்று ஆவிக்குரிய அனுபவங்களைக் குறித்தே பவுல் நாம் தேவனுடைய செய்கைகளாயிருக்கிறோம் என்று சுருக்கமாகச் சொல்கிறார். ஏனென்றால் எந்த ஒரு மனிதனும் தன்னுடைய முயற்சியினால் அல்லது திறமையினால் இவைகளை தன்னில் உருவாக்கிக்கொள்ள முடியாது.

நற்கிரியைகளில் நாம் நடக்கவேண்டும் என்பதற்காக அவைகளை தேவனே ஆயத்தம் பண்ணியிருக்கிறார் என்கிறார் பவுல். **நாம் தேவனுடைய செய்கைகளாக இருப்பதால் நம்முடைய கிரியைகளும் தேவனால் திட்டமிடப்பட்டிருக்கிறது.** அவற்றை நடப்பிக்கும்படியாக நித்தியத்திலேயே தேவன் தீர்மானித்து வைத்திருக்கிறார். ஏற்ற நேரத்தில் நாம் அவற்றைச் செய்யும்படியாக

அவை நமக்கென்று காத்திருக்கின்றன. அவரால் திட்டமிடப்பட்ட நற்செயல்களை நடப்பிக்கவேண்டும் என்ற மனவிருப்பத்தையும் தேவன் நமக்கு ஈவாகத் தந்திருக்கிறார். அவற்றில் சிலவற்றைச் செய்யலாம், சிலவற்றைச் செய்யாதிருக்கலாம் என்று நாம் முடிவு செய்வதில்லை. முடிவு செய்யவும் முடியாது. ஏனென்றால் 2கொரி *5:5* சொல்கிறபடி, "இதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறவர் தேவனே". நாம் நற்கிரியைகளை செய்யவேண்டும் என்பதற்காகவே நமக்கு ஆவிக்குரிய கனிகள் வழங்கப்பட்டுள்ளன *(கலா 5:22,23)*. அந்தக் கனிகளே கிரியைகளாக வெளிப்படுகிறது.

அதேநேரத்தில் இன்னொரு காரியத்தையும் அறிந்துகொள்ள வேண்டும். தேவனுடைய பிள்ளைகளான நாம் பூரணமானவர்களல்ல. நற்கிரியை செய்கிற காரியத்தில் சிலவேளைகளில் நாம் தோல்வியடையலாம். அதனிமித்தம் விரக்தி அடையலாம். தேவனிடம் மன்னிப்பைக் கேட்டு ஒத்தாசையை வேண்டும்போது மீண்டுமாக நம்மை நற்கிரியைகளை நடப்பிக்க பெலப்படுத்துவார். இயேசு சொல்லியிருக்கிறார், "மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" *(மத் 5:16)*. நற்கிரியைகளைச் செய்யும்படியாக நாம் தேவனுடைய செய்கையாயிருந்தாலும், அவற்றை தேவனே நமக்காக ஆயத்தம் பண்ணியிருந்தாலும், அந்த நற்கிரியைகளை நடப்பிக்கும் பொறுப்பு நம்முடையது.

நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் என்று பவுல் அறிவிப்பது நம்முடைய இரட்சிப்பைக் குறித்த நிச்சயத்தை அறிவிக்கிறது. "நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார்; நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம்" *(சங் 100:3)* என்று வாசிக்கிறோம். "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" *(2கொரி 5:17)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. "சிருஷ்டிக்கப்படும் ஜனம் கர்த்தரைத் துதிக்கும்" *(சங் 102:18)* என்று

பார்க்கிறோம். தன்னைத் துதிக்கும்படியாகவே தேவன் நம்மை சிருஷ்டித்தார். "இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லிவருவார்கள்" *(ஏசாயா 43:21)* என்று வாசிக்கிறோம். இதுவே நம்மைக் குறித்த தேவனுடைய சித்தமாய் இருக்கிறது.

## சமாதான காரணராகிய கிறிஸ்து (2:11-22)

**ஆனபடியினால் முன்னே மாம்சத்தின்படி புறஜாதியாராயிருந்து, மாம்சத்தில் கையினாலே செய்யப்படுகிற விருத்தசேதன முடையவர்களால் விருத்தசேதனமில்லாதவர்களென்னப்பட்ட நீங்கள், (எபே 2:11)**

"நீங்கள்" என்று பவுல் இந்த வசனத்தில் இந்த நிருபத்தை வாசிக்கும் புறஜாதிக் கிறிஸ்தவர்களுடன் நேரடியாகப் பேசுகிறார். இவர்கள் மாம்சத்தின்படி புறஜாதியார்கள் என்று அழைக்கப் படுகிறார்கள். ஏனென்றால் அவர்களின் சரீரத்தில் விருத்தசேதனம் செய்யப்படவில்லை. அவர்களைக் குறித்து பிரமாணத்தின்படி தங்கள் மாம்சத்தின் நுனித்தோலை நீக்கி விருத்தசேதனம் செய்துகொண்ட யூதர்கள் மட்டமாக நினைக்கிறார்கள் என்பதை பவுல் அறிவிக்கிறார். ஏனென்றால் விருத்தசேதனம் தேவன் மனிதர்களோடு செய்த உடன்படிக்கைக்கு வெளிப்படையான அடையாளமாகக் கருதப்பட்டது. நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு சுமார் 400 ஆண்டுகள் முன்பே தேவன் ஆபிரகாமிடம் சொல்கிறார், "எனக்கும் உங்களுக்கும், உனக்குப்பின்வரும் உன் சந்ததிக்கும் நடுவே உண்டாகிறதும், நீங்கள் கைக்கொள்ள வேண்டியதுமான என் உடன்படிக்கை என்னவென்றால், உங்களுக்குள் பிறக்கும் சகல ஆண்பிள்ளைகளும் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும்; உங்கள் நுனித்தோலின் மாம்சத்தை விருத்தசேதனம் பண்ணக்கடவீர்கள்; அது எனக்கும் உங்களுக்குமுள்ள உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும்" *(ஆதி 17:10,11)*. இந்தக் கட்டளையின் அடிப்படையில் ஆபிரகாம், இஸ்மவேல், மற்றும் ஆபிரகாமின் வேலைக்காரர்

முதலாவது விருத்த சேதனம் செய்துகொண்டார்கள் *(ஆதி 17:23,24)*. ஈசாக்கு பிறந்த எட்டாவது நாளில் விருத்தசேதனம் செய்யப்பட்டார் *(ஆதி 21:4)*.

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து கானானுக்குள் இஸ்ரவேலரை அழைத்துக்செல்லும்போது, தேவன் சீனாய் மலையிலே அவர்களுக்குத் தன்னுடைய நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார். அவைகளில் ஒரு முக்கியமான பிரமாணமாக விருத்தசேதனம் வலியுறுத்தப்பட்டது. லேவியர் 12:3ல் அவர் சொல்கிறார், "எட்டாம் நாளிலே அந்தப் பிள்ளையினுடைய நுனித்தோலின் மாம்சம் விருத்தசேதனம் பண்ணப்படக்கடவது". இஸ்ரவேலரோடு உறவுகொள்ளும் புறஜாதியாரும், அவர்களுடைய வேலையாட்களும் விருத்தசேதனம் செய்துகொள்ளும்படியாகப் பணிக்கப்பட்டார்கள் *(யாத் 12:44,48)*. விருத்தசேதனத்தை எந்தஅளவுக்கு யூதர்கள் வலியுறுத்தினார்கள் என்றால் அந்தியோகியா பட்டணத்தில் பவுலும் பர்னபாவும் புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்துகொண்டிருந்த போது, எருசலேம் ஆதி அப்போஸ்தல சபையிலிருந்து ஊழியத்தை மேற்பார்வையிட வந்த ஊழியக்காரர்கள் "நீங்கள் மோசேயினுடைய முறைமையின்படியே விருத்தசேதனமடையாவிட்டால், இரட்சிக்கப்படமாட்டீர்கள் என்று சகோதரருக்குப் போதகம் பண்ணினார்கள்" *(அப் 15:1)* என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் பவுல் திட்டவட்டமாகச் சொல்கிறார், "மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனை செய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மை பாராட்டுகிற நாமே விருத்த சேதனமுள்ளவர்கள்" *(பிலிப் 3:3)*.

தாங்கள் பெற்றுக்கொண்ட மாம்ச விருத்தசேதனத்தைக் குறித்து தங்களை மேன்மைப்படுத்திக்கொள்ளும் சுபாவம் இயல்பாகவே யூதர்களிடம் காணப்பட்டது. கோலியாத்தைக் குறித்து தாவீது சொல்கிறார், "ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்தசேதனம் இல்லாத இந்த பெலிஸ்தன் எம்மாத்திரம்" *(1சாமு 17:26)*. ஆனால் மேலான வெளிப்பாடுகளை தேவனிடமிருந்து

பெற்றுக்கொண்ட பவுல் சொல்கிறார், "புறம்பாக யூதனானவன் யூதனல்ல, புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல. உள்ளத்திலே யூதனானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகாமல் ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம்" *(ரோமர் 2:28,29)*.

நியாயப்பிரமாணத்தை யூதருக்கு அறிவித்த மோசே உபாகமம் *10:16*ல் சொல்கிறார், "இனி உங்கள் பிடரியைக் கடினப்படுத்தாமல், உங்கள் இருதயத்தின் நுனித்தோலை விருத்தசேதனம் பண்ணுங்கள்". உபாகமம் *30:6*, லேவியர் *26:41*, எசேக்கியேல் *44:7*, எரேமியா *4:4* இருதயத்தில் செய்யப்படவேண்டிய விருத்தசேதனத்தைப் பற்றி பேசுகிறது. கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தைக் குறித்து கொலோ *2:11* பேசுகிறது. பவுலின் தீர்ப்பு இதுதான். "விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறதே காரியம்" *(1கொரி 7:19)*.

**அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக்கொள்ளுங்கள். (எபே 2:12)**

"அக்காலத்திலே" என்று இந்த வசனம் துவங்குகிறது. எபேசு சபை விசுவாசிகள் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக எப்படி இருந்தார்கள் என்பதை பவுல் இந்த வசனத்தில் படம்பிடித்துக் காட்டுகிறார். அவர்களுடைய ஆவிக்குரிய நிலை எவ்வாறு இருந்தது என்பதை அறிவிக்கிறார்.

1. கிறிஸ்துவைச் சேராதவர்கள் - கிறிஸ்து இல்லாமல் இருந்தார்கள்.

2. காணியாட்சிக்குப் (citizenship) புறம்பானவர்கள் - இஸ்ரவேலின் மக்களோடு தொடர்பில்லாதவர்கள்.

3. வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைக்கு (covenents of the promise) அந்நியர் - தேவன் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் பங்கு இல்லாதவர்கள்.

4. நம்பிக்கை அற்றவர்கள் (no hope) - தேவன் தரும் மீட்பின் மேல் நம்பிக்கை இல்லாதவர்கள்.

5. இவ்வுலகில் தேவனற்றவர்கள் (without God) மெய்தேவனை அறியாதவர்கள்.

*1.* புறஜாதியாராகிய எபேசியர் கிறிஸ்துவைச் சேராதவர்களாயிருந்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. தேவனால் அபிஷேகிக்கப்பட்ட மேசியா என்ற இரட்சகர் தோன்றுவார் என்று அவர்களுக்கு அறிவிக்கப்படவில்லை. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உலகத்துக்கு வந்து ஊழியம் செய்த நாட்களிலும் இரட்சிப்பின் சுவிசேஷம் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி மற்றபடியல்ல" *(மத் 15:24)* என்றுதான் கிறிஸ்து தன் சீஷர்களிடம் அறிவித்தார். மத்தேயு *10:5,6* வாசித்துப் பாருங்கள். மரித்து உயிர்த்தெழுந்த பின்புதான் "மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது" *(லூக்கா 24:47)* என்று கிறிஸ்து சுவிசேஷத்தின் வாசலை புறஜாதியாருக்கு திறந்துவைத்தார். புறஜாதியாரின் அப்போஸ்தலனாக பவுலை தெரிந்துகொண்டார் *(அப் 9:15)*.

2. இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்கள் (aliens) என்ற முறையில் புறஜாதியார் இஸ்ரவேல் தேசத்தின் பிரஜைகளாக ஒருபோதும் கருதப்படுவதில்லை. ஒருவேளை இஸ்ரவேல் தேசத்தில் அவர்கள் குடியிருக்கலாம். ஆனால் எந்தவிதமான பிரஜாஉரிமையும்

அவர்களுக்கு இல்லை. ஞானதிருஷ்டியடைந்தவனாய், பரலோக தரிசனங்களைப் பெற்று புறஜாதியார் தேவனால் அங்கீகரிக்கப்பட்டதை உணர்ந்துகொண்டபின்னுங்கூட (அப் 10:1-48), பேதுரு புறஜாதியாரோடு ஐக்கியங்கொள்ளவிரும்பவில்லை என்று பார்க்கிறோம் (கலா 2:11-14). வரம் பெற்றுக்கொண்டவர்களாய் வல்லமையாக ஊழியம் செய்கிறவர்களும் தவறு செய்யக்கூடும் என்பதை அறிந்துகொள்ளுங்கள். "பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துகொண்டேன்" (ஆமோஸ் 3:2) என்று தேவன் இஸ்ரவேல் புத்திரரிடம் பேசியதினிமித்தம் இஸ்ரவேலுடைய காணியாட்சி வேறு எந்த ஜாதியாருக்கும் போய்விடக்கூடாது என்பதில் யூதர்கள் தீவிரமாயிருந்தார்கள். இஸ்ரவேலின் மேன்மையைக் குறித்து பவுல் சொல்வதை ரோமர் 9:4,5 வாசித்து அறிந்துகொள்ளுங்கள். சங் 147:20, உபா 32:10-14, 33:27-29 ஆகிய வசனங்களில் சொல்லப்படும் ஆசீர்வாதங்களில் எதுவுமே புறஜாதியாருக்காக ஆயத்தமாக்கப்-படவில்லை.

3. எபேசு சபையார் வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியர் என்று அடுத்ததாக அறிவிக்கப்படுகிறது. வாக்குத்தத்தம் (Promise) என்பது ஒருமையிலும், உடன்படிக்கை (Covenents) என்பது பன்மையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. "நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்" (ஆதி 12:2) என்பதுதான் ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தம். இந்த வாக்குத்தத்தத்தை ஆபிரகாம் உறுதியாக நம்பவேண்டும் என்பதற்காக அவனோடு அவர் உடன்படிக்கை செய்துகொள்ளும் காரியம் ஆதியாகமம் 15:18-21 ல் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குமுன் தேவன் ஆதாமுடன் ஒரு உடன்படிக்கை செய்திருந்தார் என்றாலும் (ஓசியா 6:7) எந்த வாக்குத்தத்தத்தின் அடிப்படையில் செய்யப்பட்டது என்பது சொல்லப்படவில்லை. ஆபிரகாமுடன் தேவன் செய்துகொண்ட உடன்படிக்கை அவருடைய சந்ததியாரான இஸ்ரவேலரோடு தொடர்கிறது (ஆதி 17:7, 26:1-5, 28:10-17). லேவியர் 26:42ல் தேவன்

சொல்கிறார், "நான் யாக்கோபோடே பண்ணிய என் உடன்படிக்கை-யையும், ஈசாக்கோடே பண்ணின என் உடன்படிக்கைகளையும், ஆபிரகாமோடு பண்ணின என் உடன்படிக்கையையும் நினைப்பேன்".

உடன்படிக்கை என்பது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நபர்கள் தங்களுக்குள் முடிவுசெய்துகொண்ட ஒரு காரியத்தை குறித்த நிச்சயத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் காரியம். கிரியைகளை அதாவது கீழ்ப்படிதலை அடிப்படையாகக் கொண்ட உடன்படிக்கையை தேவன் இஸ்ரவேலரோடு யாத் *20:1-17*ல் சீனாய் மலையில் செய்துகொள்கிறார். தான் செய்துகொள்ளப்போகும் புதிய உடன்படிக்கையை தேவன் எரேமியா *31:31-34*ல் பேசுகிறார். புறஜாதியாரோடு தேவன் எந்தவிதமான உடன்படிக்கையும் செய்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

4. எபேசு சபையில் இருந்த புறஜாதியார் நம்பிக்கை இல்லாதவர்களாக இருந்தார்கள் என்று பவுல் அறிவிக்கிறார். யோபுவைப்போல அவர்கள் தவிக்கிறார்கள். "என் நம்பிக்கை இப்போது எங்கே? நான் நம்பியிருந்ததைக் காண்பவன் யார்?" *(17:15)*. அதற்குக் காரணம் தேவன் அவர்களோடு எந்த உடன்படிக்கையும் செய்துகொள்ளவில்லை. வாக்குத்தத்தத்தையும் கொடுக்கவில்லை என்பதே. அவர்களுடைய வாழ்க்கையைக் குறித்தும், எதிர்காலத்தைக் குறித்தும், நித்தியத்தைக் குறித்தும் அவர்களுக்கு எந்த நம்பிக்கையும் இல்லாதிருந்தது. "ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன" *(கலா 3:16)*. புறஜாதியாரைக்குறித்து அவ்விதமாக எதுவும் சொல்லப்படவில்லை. எதைக்குறித்த நிச்சயமும் அவர்களுக்கு இல்லை.

5. இந்த உலகில் புறஜாதியார் தேவனற்றவர்களாய் இருந்தார்கள் என்பது கடைசியாகச் சொல்லப்படுகிறது. "வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் உண்டு; இப்படி அநேக தேவர்களும் அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும்" *(1கொரி 8:5)*, பிதாவாகிய மெய்தேவனை அவர்கள் அறிந்துகொள்ளாதவர்களாகவே இருந்தார்கள். அவர்களிடம் பவுல் சொல்கிறார், "நீங்கள் தேவனை

அறியாமலிருந்தபோது, சுபாவத்தின்படி தேவர்களல்லாதவர்களுக்கு அடிமைகளாயிருந்தீர்கள்" (கலா 4:8). அப் 14:15ல் பல தேவர்களை வணங்கிக்கொண்டிருந்த லீஸ்திரா பட்டணத்தாரிடம் பவுல் சொல்கிறார், "நீங்கள் இந்த வீணான தேவர்களை விட்டு, வானத்தையும், பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்பவேண்டுமென்று உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம்".

**முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள். (எபே 2:13)**

எபேசு பட்டணத்திலிருந்த புறஜாதி மனிதர்கள் முன்பு தூரமாயிருந்தவர்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் (அவருடைய மரணம்) அவர்களை சமீபமானவர்களாக மாற்றிவிட்டது. "தூரமாயிருக்கிறவர்களுக்கும் சமீபமாயிருக்கிறவர்களுக்கும் சமாதானம் சமாதானம் என்று கூறும் உதடுகளின் பலனைச் சிருஷ்டிக்கிறேன்" என்று ஏசாயா 57:19ல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலை இங்கு பார்க்கிறோம். முந்தின வசனத்தில் நாம் பார்த்தபடி அவர்கள் கிறிஸ்துவைச் சேராதவர்களாகவும், காணியாட்சிக்குப் புறம்பானவர்களாகவும், உடன்படிக்கைக்குள் இல்லாதவர்களாகவும், நம்பிக்கையற்றவர்களாகவும், தேவனற்றவர்களாகவும் இருந்தபடியால் அவர்கள் தேவனுடைய ஜனங்களாகிய யூதர்களுக்கு தூரமாயிருந்தார்கள் என்பது மட்டுமல்ல, மெய் தேவனாகிய இயேசு கிறிஸ்துவுக்கும் தூரமாக இருந்தார்கள். "இப்பொழுது" அந்த நிலைமை முற்றிலுமாக மாறிவிட்டது. "வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது" (அப் 2:39) என்கிறார் பேதுரு. தூரத்திலுள்ள புறஜாதியார் இந்த நெருக்கத்தை உருவாக்கிக்கொள்ளவில்லை. "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்ளுவேன்" (யோவான் 12:32) என்ற கிறிஸ்துவின்

அறிக்கையின்படி முதலாவதாக கிறிஸ்து இயேசுவுக்கு அவர்கள் சமீபமானார்கள். இரண்டாவதாக கிறிஸ்துவின் இரத்தத்தினாலே நெருக்கமானார்கள்.

ஆதாமின் பாவத்தினாலும், தனிப்பட்ட வாழ்க்கையில் ஒவ்வொருவரும் செய்யும் பாவங்களினாலும் மனிதன் தேவனிடமிருந்து தொலைவில் இருக்கிறான். பாவத்தின் மூலமாக மனிதர்களும் ஒருவருக்கொருவர் ஐக்கியம் இல்லாதவர்களாகவே இருந்தார்கள். ஆனாலும் பாவ மனிதனை பரிசுத்தமான தேவனுடன் இணைக்கும்படியாகவும், ஒருவரோடு ஒருவர் சமாதானம் நிறைந்த வாழ்க்கையை உருவாக்கும்படியாகவும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பூமிக்கு இறங்கி வந்தார். ஆனால் இந்த காரியத்தை நிறைவேற்றும்படியாக அவர் தன்னுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தைக் கிரையமாக செலுத்தவேண்டியதிருந்தது. பரிசுத்தமான தேவன் மனித இனத்தின் பாவங்களையெல்லாம் கிறிஸ்துவின்மேல் சுமத்தி அவரைத் தண்டித்தார். அது மட்டுமல்ல, எந்த மனிதன் தேவனுடைய குமாரனை தனது சொந்த இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்கிறானோ, அவனை தேவன் கிறிஸ்துவுக்குள் வைக்கிறார். கிறிஸ்துவின் இரத்தத்தினால் அவர்கள் தேவனுக்கு சமீபமாகிவிட்டார்கள். பேதுரு சொல்கிறபடி, “நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்” *(1பேதுரு 2:9)*.

பழைய ஏற்பாட்டு நாட்களில் மோசேயின் பிரமாணங்களின்படி ஆடு, மாடு மற்றும் மிருகங்களின் இரத்தம் சிந்தப்பட்டதின் விளைவாக யூதர்களின் பாவங்கள் மூடப்பட்டது (Covered) என்றால், கல்வாரியில் சிந்தப்பட்ட கிறிஸ்துவின் இரத்தம் பாவங்களிலிருந்து நம்மைச் சுத்திகரிக்கிறது. (Cleansed). “அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச்

சுத்திகரிக்கும்" *(1யோவான் 1:7)*. மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருப்பதினால் வேதத்தில் கிறிஸ்துவின் இரத்தம் என்ற வார்த்தை அவருடைய சிலுவை மரணத்துக்கு அடையாளமாகவும், அவருடைய மரணத்தை உறுதிப்படுத்துவதாகவும் இருக்கிறது. "இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது" *(எபி 9:22)*. இரத்தத்தினால் நாம் பெறும் ஆசீர்வாதங்கள் :

1. பாவமன்னிப்பு *(எபே 1:7, எபி 9:26, 1யோ 1:7)*
2. நித்திய மீட்பு *(எபி 9:12)*
3. தேவனோடு சமாதானம் *(கொலோ 1:20)*
4. நீதிமானாக்கப்படுதல் *(ரோமர் 5:9)*
5. மனச்சாட்சியில் சுத்திகரிப்பு *(எபி 9:14)*

**எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து (எபே 2:14)**

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் நமக்கு சமாதானம் கிடைத்திருக்கிறது என்கிறார் பவுல். மனித இனத்துக்கு சமாதானத்தை அருளும்படியாகவே அவர் வந்தார் *(லூக்கா 2:14)*. அவர் யூதர்களையும், யூதரல்லாதவர்களாகிய புறஜாதியாரையும் ஒரே இனத்தவராக்கினார். இவர்களுக்கிடையே ஒரு பிரிவினைச் சுவர் இருப்பதுபோல் பிரிக்கப்பட்டவர்களாக இருந்தார்கள். அதன் விளைவாக ஒருவரை ஒருவர் வெறுத்து வந்தார்கள். ஆனாலும் சிலுவை மரணத்தில் தன்னுடைய சரீரத்தைக் கொடுத்து அவர்களை பிரித்துவைத்திருந்த பகை என்ற நடுச்சுவரை உடைத்தெறிந்தார் இயேசுகிறிஸ்து.

கிறிஸ்து நம்முடைய சமாதான காரணர் என்று சொல்லும்போது நாம் அனுபவிக்கும் சமாதானத்துக்கு அவரே காரணமாகிறார் *(மீகா 5:5)* என்று பொருள் கொள்ளவேண்டும். "நமக்குச் சமாதானத்தை

உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது" *(ஏசாயா 53:5)* என்று அவரைக் குறித்து தீர்க்கதரிசனமாய் அறிவிக்கப்பட்டிருந்தது. பிறப்பதற்கு சுமார் 600 வருடங்களுக்கு முன்பே அவர் "சமாதான பிரபு" *(ஏசாயா 9:6)* என்று அழைக்கப்பட்டார். "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்" *(யோவான் 14:27)* என்று அவர் சொல்லியிருக்கிறார். *யோவான் 16:33, 20:19, ஆகாய் 2:9, சகரி 9:10* வாசித்துப்பாருங்கள்.

அந்த நாட்களில் எருசலேம் தேவாலயத்துக்குள் வெளிப் பிரகாரத்தைத் தாண்டி புறஜாதியார் வருவதைத் தடைசெய்யும் வகையில் ஆறுஅடி உயரமுள்ள சுவர் ஒன்று கட்டப்பட்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது. புறஜாதியார் அதை மீறி உள்ளே போவார்களேயானால் கொலை செய்யப்படுவார்கள் என்ற அறிவிப்பு கல்வெட்டில் எழுதப்பட்டு சுவரில் பதிக்கப்பட்டிருந்ததாகவும், அது சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. கிறிஸ்து மரித்தபோது "தேவாலயத்தின் திரைச்சீலை மேல் தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது" என்று *மத்தேயு 27:51*ல் வாசிக்கிறோம். அதன்விளைவாகவே புறஜாதியாரை தேவனண்டையில் வராமல் தடைசெய்யும் நடுச்சுவர் (middle wall, கிரேக்கமொழியில் mesotoichon - இந்த வார்த்தை புதிய ஏற்பாட்டில் வேறு எந்த இடத்திலும் பயன்படுத்தப்படவில்லை) தகர்க்கப்பட்டது.

கிறிஸ்துவின் மரணத்துக்குப்பின் தேவனுடைய பார்வையில் யூதர், புறஜாதியார் என்ற வித்தியாசம் முற்றிலுமாகக் காணப்படுவதில்லை. ஏனென்றால் இருதிறத்தாருமே கிறிஸ்துவின் இரத்தத்தினால் உண்டாகும் ஒரே மீட்பைத்தான் பெற்றிருக்கிறார்கள். *யோவான் 10:16, 17:11, 1கொரி 10:17, 12:13* வாசித்துப் பாருங்கள். ஒரு யூதன் கிறிஸ்துவிடம் வரும்போது எவ்வாறு கிறிஸ்துவுக்குள் வைக்கப்படுகிறானோ, அவ்விதமாகவே புறஜாதியான் கிறிஸ்துவிடம் வரும்போதும் கிறிஸ்துவுக்குள் வைக்கப்படுகிறான். யூதனானாலும் சரி, புறஜாதியாரானாலும் சரி, தங்களுடைய தகுதியின்மையை அறிக்கையிட்டு, தன்னில் ஒன்றும் இல்லை என்ற உணர்வோடும், கிறிஸ்துவின் இரத்தத்தில் மட்டுமே தன்னுடைய நம்பிக்கையை

வைத்து அவரிடம் வரும்போது மட்டுமே அவன் பிதாவாகிய தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுகிறான். கலாத்தியர் 3:28 சொல்கிறபடி, "யூதனென்றும், கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்". அவர்கள் எல்லாருமே கிறிஸ்துவுக்குள் "கிறிஸ்தவர்கள்" ஆகிறார்கள். கிறிஸ்துவின் சரீரமாகிய சபை ஆகிறார்கள். பவுல் சொல்கிறார், "அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்" (ரோமர் 12:5). இந்த "சரீரம் முழுவதையும் ஆதரிக்கிற தலை" (கொலோ 2:18) கிறிஸ்து.

**சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி (எபே 2:15)**

சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணம் என்று பவுல் சொல்லும்போது மோசே மூலமாக சீனாய் மலையிலே வழங்கப்பட்ட 613 சட்டதிட்டங்களைக் குறிப்பிடுகிறார். இந்த நியாயப்பிரமாணத்தின் மூலமாக மனித இனத்திலிருந்து தேவன் தனக்கென்று இஸ்ரவேலரை வேறுபிரித்தார். அவர்கள் அனுசரிக்கவேண்டிய பலிகள் சம்பந்தமான விதிமுறைகள், பண்டிகை அனுசரிப்பு விதிகள், உணவு சம்பந்தமான சட்டதிட்டங்கள், ஓய்வுநாள் மற்றும் பண்டிகை அனுசரிப்பு, ஆராதனை முறைகள், விருத்தசேதன பிரமாணம் ஆகியவை அவர்களை புறஜாதியாரிடமிருந்து வேறுபிரித்தது. இப்படி பரிசுத்தமும், நீதியும், நன்மையும் உருவாக்கும் கற்பனைகளை (ரோமர் 7:12) தேவன் வேறு எந்த மனிதர்களுக்கும் கொடுக்கவில்லை என்பதனால் யூதர்கள் தங்களை மிகுந்த மேன்மையுள்ளவர்களாய் கருதினார்கள். மேலும் புறஜாதியாரை மிகவும் கேவலமானவர்களாகக் கருதினார்கள்.

இந்த நிலையில் யூதர் புறஜாதியார் என்ற இருதிறத்தாரையும் ஒன்றிணைத்து, கிறிஸ்துவின் சரீரமாகிய சபை என்ற அமைப்புக்குள் ஒரு புதிய மனிதனாகச் சிருஷ்டிக்கவேண்டும் என்ற தீர்மானத்தைச்

செயல்படுத்த தீர்மானித்தபோது, சகல பிரிவினைகளுக்கும் காரணமாக இருந்த நியாயப்பிரமாணத்தின் சட்டதிட்டங்களையும் ஒழிக்கும்படியாக தன்னுடைய சரீரத்தை சிலுவையிலே ஒப்புக்கொடுத்த காரியம் இந்த வசனத்தில் சொல்லப்படுகிறது. நியாயப்பிரமாணத்தை மீறுகிறவர்கள் தங்களை பிரமாணத்தின் சாபங்களுக்கு உட்படுத்திக் கொள்கிறார்கள். அந்த சாபங்கள் உபாகமம் *28:15-68*ல் பட்டியலிடப்பட்டுள்ளன. எல்லாப் பிரமாணங்களுக்கும் பூரணமான முறையில் கீழ்ப்பட்டிருந்ததின் மூலமாக (மத் *5:17*) நியாயப்பிரமாணத்தின் சாபங்கள் கிறிஸ்துவின்மேல் செயல்படமுடியாது. ஆனாலும் அவருடைய மாம்சமாகிய சரீரம் நமக்காக சாபமாகி சிலுவையில் மரணத்தை சந்தித்தது. இவ்வாறு "கிறிஸ்து நமக்காக சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்" (கலா *3:13*). கிறிஸ்துவுக்குள் நியாயப்பிரமாணத்தின் சாபமே நம்மிடமிருந்து நீக்கப்பட்டிருக்குமே-யானால் மனிதர்களின் சாபத்தைக் குறித்து எந்த விதத்திலும் பயப்படாமல் இருப்போமாக. "உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்" (ஆதி *12:3*) என்று சொல்லியிருக்கிறாரல்லவா?

இந்த சத்தியம் கொலோசெயர் *1:20,21*ல் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. "அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று. முன்னே அந்நியராயும், துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும், குற்றமற்றவர்களாகவும் தண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன்நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்". கிறிஸ்துவின் மாம்ச சரீரத்தில் அடைந்த மரணம் மூலமாகவே இந்த சமாதானம் சாத்தியமாயிற்று.

யூதர், புறஜாதியார் என்ற இருதிறத்தாரும் கிறிஸ்துவுக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாக - சபையாக சிருஷ்டிக்கப்பட்டதாக பவுல் அறிவிக்கிறார். நியாயப்பிரமாணத்தின் *613* பிரமாணங்களும் "உன்,

தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக.... உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" *(மத் 22:37-39)* என்ற இரண்டு கற்பனைகளில் உள்ளடங்கியிருப்பதாகச் சொல்லப்பட்டது. கிறிஸ்து சொல்கிறார், "இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது" *(வசனம் 40)*. "பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்" *(ரோமர் 13:8)*. "உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக, என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும்" *(கலா 5:14)*. லூக்கா *10:25-28*, ரோமர் *13:8-10* வாசித்துப் பாருங்கள். ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்பது "புதிதான கட்டளையாக" *(யோவான் 13:34)* கொடுக்கப்பட்டது. கிறிஸ்துவின் அன்பின் பிரமாணம் கல்வாரியில் கிறிஸ்து இயேசு இரத்தம் சிந்தியபோது உறுதிப்படுத்தப்பட்டது.

சபை என்ற புதிய மனிதன் சிருஷ்டிக்கப்பட்டதன் விளைவாகவே சமாதானம் உருவாகிறது என்கிறார் பவுல். எபே *4:24*ல் பவுல் சொல்கிறார், "மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்". அப்படிச் செய்யும்போது "கிரேக்கனென்றும் யூதனென்றுமில்லை; விருத்தசேதனமுள்ளவனென்றுமில்லை, புறஜாதியானென்றும் புறதேசத்தானென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை; கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார்" *(கொலோ 3:11)*.

**பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார்.** (எபே 2:16)

முந்தின வசனத்தில் சொல்லப்பட்ட சத்தியம் மீண்டுமாக வலியுறுத்தப்படுகிறது. சிலுவை மூலமாக பகை கொலை செய்யப்படுகிறது என்று பவுல் துவக்கத்தில் சொல்கிறார். பொதுவாக

மனிதர்களிடம் காணப்படும் பகைதான் கொலைக்குக் காரணமாயிருக்கும். யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் இடையே உள்ள பகையை கிறிஸ்துவின் சிலுவை மரணம் முற்றிலுமாக நீக்குகிறது. அவர்கள் இருவரும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையாக ஒன்றிணைக்கப்படுகிறார்கள் என்பது மட்டுமல்ல, அவர்கள் தேவனோடு ஒப்புரவாகிறார்கள். இரண்டுவிதமான ஒப்புரவாகுதல்கள் இங்கே காணப்படுகிறது. கிறிஸ்து மூலமாக மனித இனம் தேவனோடு ஒப்புரவாகிறது. தேவனோடு ஒப்புரவான மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் ஒப்புரவாகிறார்கள்.

ஒப்புரவாகுதல் (Reconcile) என்பதற்குப் பயன்படுத்தப்படும் apocatalaxe என்ற கிரேக்கபதம் புதிய ஏற்பாட்டில் 14 இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. நெடுநாட்களாய் விரோதிகளாய் இருந்தவர்கள் தங்கள் பகையை மறந்து நட்புநிலைக்கு வருவதையே ஒப்புரவாகுதல் என்கிறோம். ரோமர் 5:10 சொல்கிறது, "நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே, அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே". இந்த ஒப்புரவே இரட்சிப்பாக மாறுகிறது. கொலோ 1:20, 21 வாசித்துப் பாருங்கள். **கிறிஸ்துவின் மரணத்தைத் தவிர தேவனுடன் ஒப்புரவாக மனிதனுக்கு வேறு மார்க்கம் ஒன்றுமில்லை.** தனக்காக கிறிஸ்து மரித்தார் என்று ஒரு மனிதன் விசுவாசிக்கும்போது மூன்று காரியங்கள் சம்பவிக்கின்றன.

1. பிதாவாகிய தேவன் தன்னுடைய குமாரனின் மரணத்தை பாவமனிதனின் மரணமாக ஏற்றுக்கொள்கிறார்.

2. மனிதன் செய்த பாவங்கள் தன்மேல் சுமத்தப்படுவதை இயேசு ஏற்றுக்கொள்கிறார்.

3. கிறிஸ்து சிலுவையில் பெற்றுக்கொண்ட ஆக்கினைத்

தீர்ப்பை பாவமனிதன் அடைந்த ஆக்கினைத் தீர்ப்பாக பிதா ஏற்றுக்கொள்கிறார்.

இதன் விளைவாக பாவமனிதன் செய்த பாவத்திலிருந்தும், அதற்கான தண்டனையிலிருந்தும் முற்றிலுமாக விடுவிக்கப்படுகிறான். ஏனென்றால் மனிதன் செய்த பாவமும், அதற்கான தண்டனையும் கிறிஸ்துவின் மேல் சுமத்தப்பட்டாயிற்று.

பாவமனிதன் எந்த விதத்திலும் தன்னை தேவனோடு ஒப்புரவாக்கிக்கொள்ள முடியாத அவல நிலையில் இருக்கிறான் என்பதை அறிந்துகொள்ளவேண்டும். பரிசுத்தமும் நீதியும் நிறைந்த தேவனுடைய அங்கீகரிப்பை எந்தவிதத்திலும் அவனால் பெறமுடியாது. எனவே தேவனே மனிதனோடு ஒப்புரவாக முன்வருகிறார். **ஒப்புரவாகுதல் முற்றிலுமாக தேவனுடைய செயல்பாடு. அதை மனிதன் ஏற்றுக்கொள்கிறான் என்பதைத் தவிர அதில் அவனுக்கு வேறு எந்த பங்கும் இல்லை.** பவுல் சொல்கிறபடி. "இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசு கிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்" *(2 கொரி 5:18)*. இந்த ஒப்புரவாக்குதலை அறிவிப்பதுதான் ஊழியக்காரர்களின் கடமை.

பகையை (தேவனுக்கும் மனிதனுக்குமிடையே இருந்த பகை) சிலுவையில் கொன்றதின் நிமித்தமாக யூதர், புறஜாதியார் என்ற இரண்டு பிரிவினரையும் ஒரே சரீரமாக்கி (கிறிஸ்துவின் சரீரமாகிய சபை) தேவனோடு ஒப்புரவாக்கினார் என்கிறார் பவுல். கல்வாரி சிலுவையில் தன்னுடைய இரண்டு கைகளையும் நீட்டியவராய் தொங்கியதன் விளைவாக யூதர்களும் தேவனோடு ஒப்புரவாகிறார்கள். புறஜாதியாரும் ஒப்புரவாகிறார்கள். அவரோடு சிலுவையில் அறையப்பட்ட கள்ளர்கள் யூத இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களில் ஒருவன் கிறிஸ்துவை விசுவாசித்து தேவனோடு ஒப்புரவாகிறான் *(லூக்கா 23:43)*. தேசாதிபதியினால் காவல் பணியில் நியமிக்கப்பட்ட

ரோமதேசத்து நூற்றுக்கு அதிபதியாகிய புறஜாதி மனிதனும் கொல்கொதாவில் கிறிஸ்துவை அறிக்கையிட்டு, தேவனை மகிமைப்படுத்தியதின் விளைவாக தேவனோடு ஒப்புரவானான் (லூக்கா 23:47) மனித இனம் முழுவதுமே தேவனோடு ஒப்புரவாகி விட்டது. 1கொரி 10:17, 12:13, கொலோ 3:15 வாசித்துப் பாருங்கள்.

**அல்லாமலும் அவர் வந்து, தூரமாயிருந்த உங்களுக்கும், சமீபமாயிருந்த அவர்களுக்கும், சமாதானத்தைச் சுவிசேஷமாக அறிவித்தார். (எபே 2:17)**

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சமாதான காரணர் (வசனம் 14) என்பதையும், சமாதானம் பண்ணினார் (வசனம் 15) என்பதையும் அறிவித்த பவுல், இந்த வசனத்தில் சமாதானத்தைச் சுவிசேஷமாக அறிவித்தார் என்கிறார். தொலைவிலிருந்த யூதரல்லாதராகிய எபேசு பட்டணத்தாருக்கும், அருகில் எருசலேம் பட்டணத்திலிருந்த யூத மக்களுக்கும் சமாதானம் உண்டாயிற்று என்ற நற்செய்தி அறிவிக்கப்பட்டது. இது குறித்த தீர்க்கதரிசன வெளிப்பாடு ஏசாயா 57:19ல் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. "தூரமாயிருக்கிறவர்களுக்கும், சமீபமாயிருக்கிறவர்களுக்கும் சமாதானம் சமாதானம் என்று கூறும் உதடுகளின் பலனைச் சிருஷ்டிக்கிறேன்".

கல்வாரி சிலுவையில் இந்த சமாதானத்தை உண்டாக்கியவரும் கிறிஸ்து. அந்த சமாதானத்தை அறிந்து, தங்களுடைய இருதயத்தில் அனுபவிக்கவேண்டும் என்பதற்காக நற்செய்தியாக அறிவித்தவரும் கிறிஸ்து. உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டன. நியாயப்பிரமாணத்தின் சாபங்கள் நீக்கப்பட்டன. தேவ கோபாக்கினையின் நாட்கள் முடிந்துவிட்டன என்பதே அந்த நற்செய்தி. எபேசு பட்டணத்தில் சுவிசேஷ ஊழியத்தை நிறைவேற்றியவர் அப்போஸ்தலனாகிய பவுலாக இருக்கலாம். ஆனாலும் வேதம் என்ன சொல்கிறது? "இரண்டு வருஷகாலம் இப்படி நடந்ததினாலே ஆசியாவில் குடியிருந்த யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள்"

(அப் 19:10). பவுல் எபேசு பட்டணத்தில் பல ஆண்டுகள் தங்கியிருந்து இயேசுவின் வசனத்தையே சுவிசேஷமாக அறிவித்தார்.

இவ்வாறு தூரமாயிருந்த புறஜாதியாரும் சமீபமாயிருந்த இஸ்ரவேலரும் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டவர்களாய் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்ற அறிவிப்பு பழைய ஏற்பாட்டு நாட்களிலேயே சொல்லப்பட்டிருந்தது. ஆதி 22:18, சங் 22:27,28, ஏசாயா 60:3 வாசித்துப்பாருங்கள். தாவீது ஜெபிக்கிறார், "ஆண்டவரே, நீர் உண்டாக்கின எல்லா ஜாதிகளும் வந்து, உமக்கு முன்பாகப் பணிந்து, உமது நாமத்தை மகிமைப்படுத்துவார்கள்" (சங் 86:9). அதனால்தான் உயிர்த்த இயேசு தன் அப்போஸ்தலர்களிடம் சகல ஜாதிகளையும் சீஷராக்கும்படியாகக் கட்டளையிட்டார் (மத் 28:19). யோவான் அவரைக் குறித்து, "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1:29) என்றார். யோவான் 11:51,52 வாசித்துப்பாருங்கள்.

**அந்தப்படியே நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய்ப் பெற்றிருக்கிறோம். (எபே 2:18)**

யூதர்கள், புறஜாதியார் என்ற இருதிறத்தாருமே ஒரே ஆவிக்குள் பிதாவாகிய தேவனிடம் வருவதற்கு உரிமை பெற்றவர்களாகிறார்கள். சேரும் சிலாக்கியம் (access, prosagõgés) என்ற வார்த்தை அந்த நாட்களில் ஒரு தேசத்தின் மன்னன் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் கொலுமண்டபத்துக்குள் "பிரவேசிக்கும் சிலாக்கியத்தை" (ரோமர் 5:2) குறிப்பிடுகிறது. ஒரு சாதாரண மனிதனால் அரண்மனைக்குள்ளேயே பிரவேசிக்கமுடியாது என்றிருக்கும்போது அரசனுடைய கொலுமண்டபத்துக்குள் பிரவேசிப்பது என்பது எளிதான காரியம் அல்ல. ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக எல்லா பரிசுத்தவான்களுக்கும் அந்த உரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

அவருடைய பாடுமரணத்தின் மூலமாக மட்டுமே நாம் பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்

என்பதை எபிரெயர் *10:19,20* இவ்விதமாக அறிவிக்கிறது, "நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறது". கிறிஸ்து மரித்த அதே வேளையில் "தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது" (*மத் 27:51*). அவருடைய மரணத்தின் மூலமாக மட்டுமே மகாபரிசுத்த ஸ்தலத்திலிருக்கும் பிதாவாகிய தேவனைக் கிட்டிச்சேரும் சிலாக்கியம் பாவமனிதனுக்கு உண்டாகியிருக்கிறது என்பதையே இது அறிவிக்கிறது. அவருடைய மரணத்துக்கு முன் பாவ நிவாரண பலியைச் செலுத்தும் பிரதான ஆசாரியர்கள் கூட வருடத்தில் ஒருமுறைதான் (*யாத் 30:10*) மகாபரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்க அனுமதி பெற்றிருந்தார்கள். பயத்தோடும் நடுக்கத்தோடும் அவர்கள் பிரவேசித்து வந்தார்கள்.

பிதாவிடம் சேரும் சிலாக்கியம் கிறிஸ்து மூலமாக மட்டுமே நமக்கு உண்டாகியிருக்கிறது என்பதை பவுல் வலியுறுத்துகிறார். ஏனென்றால் "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை" (*அப் 4:12*). யோவான் *3:16-18, 10:9* வாசித்துப் பாருங்கள். ரோமர் *5:1* சொல்கிறது, "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்". இயேசு சொல்கிறார், "என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (*யோவான் 14:6*). "அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்குத் தைரியமும் திடநம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது" (*எபே 3:12*) என்று பார்த்தோம்.

ஒரே ஆவியினாலே பிதாவிடம் சேருகிறோம் என்று பவுல் சொல்லும்போது, பிதாவிடம் சேரும் சிலாக்கியத்தில் பரிசுத்த ஆவியானவரின் செயல்பாட்டையும் பவுல் நினைவுபடுத்துகிறார். மகாபரிசுத்த ஸ்தலத்துக்குள் நாம் பிரவேசிக்கும்படியாக மாம்சமாகிய

திரையின் வழியாக ஒரு பாதையை கிறிஸ்து திறந்துகொடுத்திருக்கிறார் என்றாலும், அதற்குள் பிரவேசிக்கும் தைரியம் நமக்கு இல்லை. ராஜாவின் கொலுமண்டபத்துக்குள் நம்மை கரம்பிடித்து அழைத்துச் செல்பவர் பரிசுத்த ஆவியானவரே. "எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்" *(ரோமர் 8:14)* என்று வாசிக்கிறோம். "அப்பா, பிதாவே" என்று தேவனைக் கூப்பிடும் சிலாக்கியம் அவர் மூலமாகவே உண்டாயிருக்கிறது *(கலா 4:6)*. அவரே நம்முடைய தேற்றரவாளராக இருந்து, கிறிஸ்துவின் வார்த்தைகளை நமக்கு நினைப்பூட்டுகிறவர் *(யோவான் 14:26)*. "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார்" *(ரோமர் 8:16)*. ரோமர் *8:15*ல் பவுல் சொல்கிறார், "நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்". இன்று நமக்குள் வாசமாயிருந்து, ஒவ்வொருநாளும் நம்முடைய கவனத்தை தேவனுக்கு நேராக செலுத்துபவர் பரிசுத்த ஆவியானவரே.

**ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து (எபே 2:19)**

"நீங்கள்" என்று குறிப்பிட்டு எபேசு சபையில் உள்ள யூதர் அல்லாத புறஜாதி கிறிஸ்தவர்களோடு பவுல் மீண்டுமாக பேசுகிறார். நீங்கள் அந்நியர் (strangers) அல்ல, பரதேசிகள் (foreigners, குடியுரிமை இல்லாதவர்கள்) அல்ல என்கிறார். தேவனுடைய வீட்டார் (household of God), ஒரே நகரத்தார் (fellow citizens) என்கிறார். தேவனுடைய அரசிலும், தேவனுடைய நகரமாகிய எருசலேமிலும் முழு உரிமை பெற்றவர்கள். யூதர்களைக் குறித்துப் பேசும்போது அவர்கள் கிறிஸ்துவை புறக்கணித்து அவரை கொலைசெய்தவர்கள் என்ற குற்றச்சாட்டை யாரும் மறுக்கவேமுடியாது. புறஜாதியாரோ தேவனுக்கு விரோதமாக இந்தக் குற்றத்தைச் செய்யாதவர்கள்.

தேவனுடைய சபையைச் சேர்ந்தவர்கள் என்ற அங்கீகாரத்தை அவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

சபையைக் குறித்த ஆறுகாரியங்கள் 19 முதல் 22 வரையுள்ள வசனங்களில் படம்பிடித்துக் காட்டப்படுகின்றன.

*1. ஒரே நகரத்தார் (வசனம் 19)*

*2. ஒரே வீட்டார் (வசனம் 19)*

*3. ஒரே கட்டிடம் (வசனம் 20)*

*4. வளர்ந்துவரும் மாளிகை (வசனம் 21)*

*5. பரிசுத்த ஆலயம் (வசனம் 21)*

*6. தேவனுடைய வாசஸ்தலம் (வசனம் 22)*

புறஜாதிக் கிறிஸ்தவர்களாகிய நாமும் எபேசு சபையாரைப் போல் அந்நியராகவும், பரதேசிகளாகவும் இருந்தோம் என்ற உண்மையை எபி 11:13, 1பேதுரு 2:11 உறுதிப்படுத்துகிறது. தேவனுடைய ராஜ்யத்தில் குடியுரிமை இல்லாத நிலைமையில் எந்தவிதமான உரிமையும் இல்லாதவர்களாகவே நாம் வாழ்ந்துவந்தோம். தேவனுக்கும், தேவனுடைய ராஜ்யத்துக்கும் புறம்பானவர்களாக இருந்தோம். தேவனால் அறியப்படாதவர்களாகவும், தேவனுடைய ராஜ்யத்தின் அங்கீகாரத்தைப் பெறாதவர்களாகவும் இருந்தோம். தேவனுக்கும் தேவனுடைய ராஜ்யத்துக்கும் சொந்தமானவர்களாக ஒருபோதும் இருந்ததில்லை. தேவனிலும், தேவனுடைய ராஜ்யத்திலும் நமக்கு எந்த உரிமையும் இருந்ததில்லை. தேவனுடைய ராஜ்யத்தின் பிரஜைகளுக்குரிய எந்த அதிகாரமும் நமக்கு வழங்கப்படவில்லை.

ஒரு தேசத்தில் பரதேசிகளாகக் கருதப்படுவது பரிதாபத்துக்குரிய, வேதனையான காரியமாகக் கருதப்பட்டது.

மீதியான் தேசத்தில் இருந்த மோசே, "நான் அந்நிய தேசத்தில் பரதேசியாய் இருக்கிறேன்" (யாத் 2:22) என்று சொல்லி வேதனைப்படுவதைப் பார்க்கிறோம்.

கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு புறஜாதியார் தேவனுடைய வீட்டாராகவும், அவருடைய குடும்பத்தில் ஒருவராகவும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இதன்விளைவாக அவர்களுடைய நிரந்தரமற்ற நிலை எவ்வளவு பரிதாபத்துக்குரியதாக இருந்தது என்பதை எபேசியர் 2:12ல் தியானித்ததை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். ஆனால் இன்று தேவனுடைய குடும்பத்தில் ஒருவராக மாறிவிட்டார்கள். அதனால் அவர்கள் பெறும் சிலாக்கியங்களைத்தான் பவுல் இந்த அதிகாரத்தின் மீதியுள்ள வசனங்களில் வெளிப்படுத்துகிறார். இந்த சிலாக்கியங்கள் கிறிஸ்தவர்களாகிய நம் ஒவ்வொருவருக்கும் சொந்தமானதாகிறது. தேவனுடைய வீட்டார் என்ற முறையில் தேவனுடைய பாதுகாப்பு, அன்பு, நட்பு, உதவி, ஐக்கியம், வழிநடத்துதல், உறவு, கரிசனை, அக்கறை எல்லாவற்றுக்கும் பாத்திரராகிவிட்டோம். ஆதி 6:8ல் "நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது" என்று வாசிக்கிறோம். "கர்த்தர் நோவாவை நோக்கி, நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள்" (ஆதி 7:1) என்று சொல்லும்போது அந்த கிருபை அவருடைய வீட்டாருக்கும் கிடைக்கிறது.

**அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; (எபே 2:20)**

யூதர்களும், புறஜாதியாரும் கிறிஸ்து மூலமாய் ஆவியானவரின் ஒத்தாசையால் தேவனுடைய வீட்டாராகும் மகிமையை முந்தின வசனங்களில் அறிவித்த பவுல், அவர்கள் தேவனுடைய வாசஸ்தலமாக கட்டப்பட்டு வருகிறார்கள் என்பதை பின்வரும் வசனங்களில் அறிவிக்கிறார். சபையின் விசுவாசிகள் கட்டிடம் கட்டப்பயன்படும் ஜீவனுள்ள கற்களைப் போன்றவர்கள் (1பேதுரு 2:5) என்கிறார் பேதுரு.

இந்த ஊழியத்தில் செயல்படும் அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் கட்டிடத்தின் அஸ்திபாரமாகக் கருதப்படுகிறார்கள். ஏனென்றால் கிறிஸ்துவின் இரகசியங்களைக் குறித்த பிரத்தியேகமான வெளிப்பாடுகளை ஆவியானவர் அவர்களுக்கு வழங்கியிருக்கிறார் *(எபே 3:5,6)*. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே கட்டிடத்தின் முழு பாரத்தையும் சுமக்கும் மிக முக்கியமான மூலைக்கல் என்ற சத்தியம் இங்கே அறிவிக்கப்படுகிறது.

வேதத்தில் பல இடங்களில் தேவன் கன்மலை என்று குறிப்பிடப்படுகிறார். *உபா 32:4,31, 1சாமு 2:2, 2சாமு 22:47, சங்18:31, 28:1, 62:2, 94:22.* "நீங்கள் வெட்டி எடுக்கப்பட்ட கன்மலையையும், நீங்கள் தோண்டி எடுக்கப்பட்ட துரவின் குழியையும் நோக்கிப்பாருங்கள்" *(ஏசாயா 51:1)* என்று சொல்லும்போது விசுவாசிகளாகிய நாம் கன்மலையில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட கற்களாகிறோம். இதைவைத்து ஒரு பிரமாண்டமான மாளிகை எழுப்பப்பட்டு வருகிறது. *மத்தேயு 16:18, 1கொரி 3:10* வசனங்களில் சபை ஒரு கட்டிடமாக உருவகப்படுத்தப்படுகிறது.

அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் சபையின் அஸ்திபாரமாக அடித்தள கற்களாகக் குறிப்பிடப்படுகிறார்கள். *வெளி 21:10ல்* யோவான் "தேவனுடைய மகிமையை அடைந்த எருசலேமாகிய பரிசுத்தநகரம் பரலோகத்தைவிட்டுத் தேவனிடத்திலிருந்து இறங்கிவருகிறதை" காண்கிறார். "நகரத்தின் மதிலுக்குப் பன்னிரண்டு அஸ்திபாரக் கற்களிருந்தன; அவைகள்மேல் ஆட்டுக்குட்டியானவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலரின் பன்னிரண்டு நாமங்களும் பதிந்திருந்தன" *(வசனம் 14)* என்கிறார் யோவான். *1கொரி 3:11ல்* "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது" என்று பவுல் சொன்னாலும் அவரே கட்டிடத்தின் மூலைக்கல்லாக, முதன்மையான அடித்தளமாக இருக்கிறார் என்கிற மேன்மை இந்த வசனத்தில் அறிவிக்கப்படுகிறது. புதிய ஏற்பாட்டு நாட்களில் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள்,

சுவிசேஷகர், மேய்ப்பர், போதகர் என்ற ஐந்து வகையான ஊழியங்களை தேவன் நியமித்திருந்தாலும் (எபே *4:13*) முதல் இரண்டு ஊழியங்கள் மட்டும் முன்னிலையில் நிற்கின்றன. அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், ஆசாரியர் ஆகியோரின் ஊழியம், உழைப்பு, பராமரிப்பு, பரிந்து பேசும் ஜெபம், தியாகம் ஆகிய அடித்தளங்களின்மேல் எபேசு சபையும், மற்ற சபைகளும் மேற்கட்டுமானமாக ஒரு பிரமாண்டமான மாளிகையாக அமைக்கப்பட்டன என்று சொன்னால் மிகையாகாது.

சபையோடு இணைக்கப்படும் ஒவ்வொரு ஜீவனுள்ள கற்களாகிய விசுவாசிகளையும், அவர்களை நிலைப்படுத்தும் அஸ்திபாரமாகிய ஊழியக்காரர்களையும் ஒருசேரத்தாங்கி நிற்கிற மூலைக்கல்லாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இருக்கிறார். ஒரு கட்டிடத்தில் முதலாவது பூமியில் போடப்படும் கல் மூலைக்கல். மற்ற எல்லாம் மூலைக்கல்லைச் சார்ந்தே வடிவமைக்கப்படுகின்றன. அதனால்தான் கர்த்தர் சொல்கிறார், “இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக் கல்லாயிருக்கும்” (*ஏசாயா 28:16*).

ஆனாலும் அந்த மூலைக்கல் யூதர்களால் புறக்கணிக்கப்பட வேண்டியதிருக்கும் என்ற அறிவிப்பு சங் *118:22,23*ல் இவ்வாறு சொல்லப்படுகிறது, “வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று. அது கர்த்தராலே ஆயிற்று”. இந்த வசனம் தன்னையே குறிப்பிடுகிறது என்பதை மாற்கு *12:10*, மத்தேயு *21:42*ல் இயேசு சொல்வதைக் கவனியுங்கள். பேதுரு “பரிசுத்த ஆவியினாலே நிறைந்து” (*அப் 4:8*) எருசலேமில் பிரதான ஆசாரியனாகிய அன்னா, காய்பா மற்றும் அவர்களின் குடும்பத்தாரிடம் சொல்கிறார், “வீடு கட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே

அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" *(அப் 4:12)*. மேலும் அவர் சொல்கிறார், "தெரிந்துகொள்ளப்பட்டதும், விலையேறப்பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்; அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை" *(1பேதுரு 2:6)*.

சபையின் பிரதான மூலைக்கல்லாக ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இருப்பதால் இந்த இரண்டாயிரம் ஆண்டுகால சபைவரலாற்றில் எத்தனையோ வல்லமையான சக்திகள் சபைக்கு விரோதமாக எழும்பி வந்தும் சபையை மேற்கொள்ளமுடியால் தோல்வியை சந்தித்தன. மூலைக்கல்லாகிய கிறிஸ்துவை எந்த மனிதனும் மேற்கொள்வதில்லை என்பதால் சபையை யாராலும் அசைக்கமுடியாது. அப்போஸ்தலனாகிய பேதுருவிடம் இயேசு சொல்கிறார், "பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் (மூலைக்கல்) என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" *(மத் 16:18)*. இந்தக் கல் என்று அவர் சொல்லும்போது பேதுருவை அல்ல, தன்னையே குறிப்பிடுகிறார்.

**அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது. (எபே 2:21)**

அவர்மேல், மூலைக்கல்லாகிய கிறிஸ்துவின்மேல் மாளிகை போன்ற பிரமாண்டமான அமைப்பாக, தேவன் வாசம் செய்யும் பரிசுத்த ஆலயமாக அந்த கட்டிடம் எழும்பி வருகிறது. சபை என்பது தொடர்ச்சியாக வளர்ந்துகொண்டே இருக்கும் அமைப்பு. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் இடம்பெற்று இசைவாய் இணைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு அவயவமும் வளர்ச்சியடைந்து கொண்டே இருக்கிறது. உலகமெங்கும் சென்று அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் ஊழியம் செய்வதனிமித்தம் மிகுந்த ஆத்தும ஆதாயம் நடைபெறுவதால் ஆண்டவருடைய வருகையின் நாள்வரை பரிசுத்த ஆலயமாகிய சபை வளர்ச்சியடைந்துகொண்டே இருக்கும்.

நாம் தியானித்த சத்தியங்களை பேதுரு இவ்வாறு அறிவிக்கிறார், "மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப் பட்டதும், விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும், ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள். அந்தப்படியே: இதோ, தெரிந்துகொள்ளப் பட்டதும், விலையேறப்பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்; அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை என்று வேதத்திலே சொல்லியிருக்கிறது" *(1பேதுரு 2:4-6)*. கிறிஸ்து ஜீவனுள்ள கல்லாக இருப்பதால் சபையின் வளர்ச்சியை யாராலும் தடைசெய்யமுடியாது.

**அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டுவருகிறீர்கள். (எபே 2:22)**

இந்த அதிகாரத்தின் கடைசி வசனமாக இது காணப்பட்டாலும், நிச்சயமாகவே மிகுந்த ஆறுதலையும், தைரியத்தையும் நமக்கு வழங்குவதாக அமைந்திருக்கிறது. "அவர்மேல்" என்ற முதலாவது வார்த்தையை முந்தின வசனத்தின் ஆதாரத்தின்படி கிறிஸ்துவின்மேல் இசைவாய் இணைக்கப்பட்டதால் என்று பொருள்கொள்ளலாம். உலகமெங்கும் இருக்கிற வெவ்வேறு ஜாதிஜனங்களையும், தேசத்தாரையும் தேவன் கிறிஸ்துவோடு இசைவாய் இணைத்து, அவர்களுக்கு பரிசுத்த ஆவியானவரை வழங்குகிறார். அதன் விளைவாக அவர்கள் தேவனுடைய வாசஸ்தலமாக கட்டப்பட்டு வளர்ந்துகொண்டே இருக்கிறார்கள்.

*1கொரிந்தியர் 3:16, 17ல் பவுல் சொல்கிறார், "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ... தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த*

ஆலயம்". 1கொரிந்தியர் 6:19ல் சொல்கிறார், "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?" இரண்டு வசனங்களுமே நம்முடைய சரீரம் தேவனுடைய வாசஸ்தலமாக வேண்டும் என்றால் ஆவியானவர் அங்கே வாசமாயிருக்கவேண்டும் என்ற சத்தியத்தையே வலியுறுத்துகின்றன. பாரம்பரியம் நிறைந்த யூதர்களானாலும் சரி, புதிதாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட புறஜாதி மனிதர்களானாலும் சரி, ஆவியானவரின் ஒத்தாசையினாலேயே அவர்கள் தேவனுடைய வாசஸ்தலமாகிறார்கள். "அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்" (யோவான் 14:17) என்று இயேசு சொல்லியிருக்கிறார்.

அப்போஸ்தலர் 17:24 சொல்கிறது, "உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால், கையினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை". ஸ்தேவான் சொல்கிறார், "சாலொமோனோ அவருக்கு ஆலயத்தைக் கட்டினான். ஆகிலும் உன்னதமானவர் கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாயிரார்" (அப் 7:47,48). "வானம் எனக்குச் சிங்காசனம், பூமி எனக்குப் பாதப்படி; நீங்கள் எனக்குக் கட்டும் ஆலயம் எப்படிப்பட்டது? நான் தங்கியிருக்கும் ஸ்தலம் எப்படிப்பட்டது?" (ஏசாயா 66:1) என்ற கேள்வியை தேவன் நம் முன்பாக வைக்கிறார். ஏசாயா 57:15ல் அவர் சொல்கிறார், "நித்தியவாசியும், பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்: உன்னதத்திலும், பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம் பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம் பண்ணுகிறேன்".

தேவனுடைய வாசஸ்தலத்திலே "கிரேக்கனென்றும் யூதனென்றுமில்லை, விருத்தசேதனமுள்ளவனென்றும் விருத்தசேதனமில்லாதவனென்றுமில்லை, புறஜாதியானென்றும், புறதேசத்தானென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை; கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார்" *(கொலோ 3:11)*. "நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடம்" *(ஏசாயா 57:15)* தேவன் வாசம் செய்கிறார் என்று பார்த்தோம். விசுவாசிகளாகியிருக்கிற நாமே *(1கொரி 3:16,17)* தேவனுடைய ஆலயமாயிருக்கிறோம் என்பதையும் பார்த்தோம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன்னுடைய பிதாவை வேண்டிக்கொள்வதினிமித்தமாகவே பரிசுத்த ஆவியானவர் நமக்குத் தந்தருளப்பட்டார் *(யோவான் 14:16)*. "அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவரை (பரிசுத்த ஆவியானவரை) அறிவீர்கள்" *(வசனம் 17)* என்கிறார் இயேசு. இவ்வாறு ஆவியானவர் நமக்குள் வாசம் செய்வதனால் மட்டுமே நாம் தேவனுடைய வாசஸ்தலமாகக் கட்டப்பட்டு வருகிறோம். "நான் அவர்களுக்குள்ளே வாசம் பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே" *(2கொரி 6:16)* என்கிறார் அப்போஸ்தலனாகிய பவுல்.

# அதிகாரம் 3

"இதினிமித்தம்" என்று இந்த அதிகாரம் துவங்குகிறது. முந்தின அதிகாரத்தில் பவுல் கடைசியாக அறிவித்த சத்தியத்தை தொடர்புபடுத்தி பவுல் பேசுகிறார் என்று பார்க்கிறோம். யூதர் மற்றும் புறஜாதியாரை உள்ளடக்கிய மனித இனம் தேவனோடும், தங்களுக்குள் ஒருவரோடொருவர் ஒப்புரவானவர்களாய், கிறிஸ்து என்ற மூலைக்கல்லின்மேல் பரிசுத்த ஆலயமாக வளர்ச்சி அடைந்து, தேவனுடைய வாசஸ்தலமாக கட்டப்பட்டு வருவதால், அவர்களைப் பற்றிய பிதாவாகிய தேவனுடைய நித்திய நோக்கம் என்ன என்பதை பவுல் இந்த அதிகாரத்தில் அறிவிக்கிறார்.

இந்த மூன்றாம் அதிகாரத்தை இரண்டு பகுதிகளாக பிரித்து, பவுல் அறிவிக்கும் காரியங்களை அறிந்துகொள்ளலாம். *1* முதல் *13* வரையுள்ள வசனங்களில் சபை உருவாக்கப்பட்டதன் உன்னதமான நோக்கம், பூமியில் அவருக்கென்று வேறுபிரிக்கப்பட்டு, அவரை மட்டுமே நேசிக்கும் யூதர்களையும் புறஜாதியாரையும் உள்ளடக்கிய ஒரு கூட்ட ஜனங்களை ஆயத்தப்படுத்துவதுதான் என்ற சத்தியம் அறிவிக்கப்படுகிறது. இது ஒரு இரகசியம் என்று பவுல் குறிப்பிடுகிறார். முந்தின நாட்களில் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளுங்கூட இதை அறியாமல் இருந்தார்கள். மேலான வெளிப்பாடுகளையும் தரிசனங்களையும் பெற்றுக்கொண்ட தானியேலுக்கு மேசியா சங்கரிக்கப்படுவதையும், பரிசுத்த ஸ்தலமாகிய எருசலேம் ரோமர்களால் அழிக்கப்படுவதையும் தேவன் அறிவிக்கிறார் *(தானி 9:26)*. இதற்கு அடுத்த வசனம் அந்திக்கிறிஸ்துவைப் பற்றிய

உபத்திரவ காலத்தையும் மகாபெரிய உபத்திரவகாலத்தையும் பற்றியதுமாக இருக்கிறது. இந்த இரண்டு வசனங்களுக்கும் இடைப்பட்ட காலமாகிய சபையின் காலம் தானியேலுக்கே வெளிப்படுத்தப்படவில்லை.

அதிகாரத்தின் இரண்டாவது பகுதியின் *(3:14-21)* துவக்கத்திலும் "இதினிமித்தம்" என்ற வார்த்தை காணப்படுகிறது *(வசனம் 14)*. மனித இரட்சிப்பின் நோக்கம் சபையோடு இணைக்கப்படும் ஒவ்வொருவரும், (யூதரானாலும் சரி, புறஜாதியாரானாலும் சரி) கிறிஸ்துவுக்குள் முழு வளர்ச்சியடைந்தவர்களாய், கிறிஸ்துவின் அன்பின் மேன்மையை உணர்ந்து கொண்டவர்களாய் இருப்பதுதான் என்கிறார் பவுல். இந்த ஜெபக்குறிப்பை முன்வைத்து பவுல் முழங்கால்படியிட்டு தேவனை நோக்கி வேண்டுதல் செய்வதையும் இந்த வேதபகுதியில் பார்க்கிறோம்.

## புறஜாதியாரின் அப்போஸ்தலன் (3:1-13)

**இதினிமித்தம், பவுலாகிய நான் புறஜாதியாராயிருக்கிற உங்கள் பொருட்டுக் கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டுண்டவனாயிருக்கிறேன். (எபே 3:1)**

அப்போஸ்தலனாகிய பவுலின் முதலாவது சிறையிருப்பு நாட்களில் (கி.பி. 60-63) இந்த நிருபம் எழுதப்பட்டது என்பதை அறிவோம் *(அப் 28:16,30,31)*. தான் கட்டுண்டவனாய் இருப்பதற்குக் காரணம் அவரில் காணப்பட்ட எந்த குற்றத்தின் நிமித்தமும் அல்ல, உண்மையான காரணம் என்ன என்பதை பவுல் இங்கே அறிவிக்கிறார்.

1. புறஜாதியார் பொருட்டு *(3:1,13)*

2. கிறிஸ்து இயேசுவின் நிமித்தம் *(3:1)*

எருசலேமில் பவுல் சிறைப்பிடிக்கப்படுவார் என்ற தீர்க்கதரிசனம், தன்னுடைய மூன்றாவது மிஷனரி பயணத்தை (கி.பி. 53-58) முடித்துவிட்டு எருசலேமுக்குத் திரும்பும் வழியில் செசரியா

பட்டணத்தில் பிலிப்புவின் வீட்டில் தங்கியிருந்தபோதே அகபு என்ற தீர்க்கதரிசியினால் பவுலுக்குச் சொல்லப்பட்டிருந்தது (அப் 21:8-13). அதையும் மீறி எருசலேம் வந்த பவுலை சபையின் மூப்பர்கள் உற்சாகமாக ஏற்றுக்கொண்டாலும் (வசனம் 17), நியாயப்பிரமாணத்து கிரியைகளை நான்கு யூதர்கள் நிறைவேற்றுவதற்கு பவுல் உதவி செய்யவேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள் (வசனம் 23,24). அதற்குக் கீழ்ப்படிந்து அவர்களுடைய சுத்திகரிப்பு நாட்களை நிறைவேற்றும்படியாக பவுல் தேவாலயத்துக்குள் பிரவேசிக்கும்போது புறஜாதியாரை தேவாலயத்துக்குள் கூட்டிவந்து பரிசுத்தஸ்தலத்தை தீட்டுப்படுத்தியதாக பவுல்மேல் யூதர்கள் குற்றம் சுமத்துகிறார்கள். அதனால் பெரிய கலவரம் உண்டாகி பவுல் கைதுசெய்யப்படுகிறார் (வசனம் 27-33).

இந்த வழக்கு விசாரணை எருசலேம் ஆலோசனை சங்கத்திலும், செசரியாவிலும் நடந்து முடிந்தபின் பவுல் இராயனுக்கு அபயமிட்டதினிமித்தம் (அப் 25:12) ரோமாபுரிக்கு விசாரணைக்கைதியாகக் கொண்டுவரப் படுகிறார். அதனால்தான் புறஜாதியார் நிமித்தமாய் கட்டுண்டவனாயிருப்பதாக பவுல் அறிவிக்கிறார். “உங்கள் நிமித்தம் நான் அநுபவிக்கிற உபத்திரவம்” (எபே 3:13) என்று அதை பவுல் மீண்டுமாக குறிப்பிடுகிறார்.

இரண்டாவதாக தான் கிறிஸ்துவினிமித்தம் கட்டுண்டவனாயிருப்பதாக பவுல் அறிவிக்கிறார். தன்னுடைய ஊழியத்தில் தனக்கு நேர்ந்த நிந்தனை, பாடுகள், துயரம், சிறையிருப்பு, காவல், கட்டுகள் எல்லாமே, தன்னைப்பற்றிய தேவனுடைய அனாதி திட்டத்தில் அடங்கியவை என்று பவுல் சாதிக்கிறார். யூதரல்லாத மக்களை இரட்சிப்புக்குள் கொண்டுவரவேண்டும் என்பதற்காக பவுலைத் தெரிந்து கொண்டவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. அனனியா என்ற தன்னுடைய சீஷனிடம் கர்த்தர் சொல்கிறார், “அவன் (பவுல்) புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்” (அப் 9:15). எருசலேம் தேவாலயத்தில் ஜெபித்துக்கொண்டிருந்த பவுலிடம் சொல்கிறார், “நான் உன்னைத்

தூரமாய்ப் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன்" (அப் 22:21). கலாத்தியர் 2:8ல் பவுல் சொல்கிறார், "விருத்தசேதனமுள்ளவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி பேதுருவுக்குக் கையளிக்கப்பட்டதுபோல, விருத்தசேதனம் இல்லாதவர்களுக்குப் பிரசங்கிக்கும்படி அது எனக்கும் கையளிக்கப்பட்டது". 1கொரி 9:21,22, 1தீமோ 2:7, ரோமர் 11:13, 15:15, அப் 13:4-7 வாசித்துப் பாருங்கள்.

தான் "கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டப்பட்டவன்" என்பதை பிலேமோன் 1,8, 2தீமோ 1:8, எபே 4:1 ஆகிய இடங்களிலும் பவுல் குறிப்பிடுகிறார். 2தீமோ 2:9ல் "சுவிசேஷத்தினிமித்தம் நான் பாதகன்போலக் கட்டப்பட்டு, துன்பத்தை அநுபவிக்கிறேன்" என்கிறார். ரோம அரசாங்கம் அவரைச் சிறைப்படுத்தி வைத்திருக்கிறது என்பதல்ல, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே அவரை சிறைப்படுத்தி வைத்திருக்கிறரர். அதன் விளைவாகவே அங்கிருந்து எழுதப்பட்ட விலையேறப்பெற்ற எபேசியர், கொலோசெயர், பிலிப்பியர், பிலேமோன் என்ற நான்கு நிருபங்கள் சபைக்கு இன்றும் ஆசீர்வாதமாக இருக்கின்றன.

"I, Paul, the Prisoner of Christ Jesus" என்று ஆங்கில மொழிபெயர்ப்பில் அதிகாரத்தோடு பவுல் பேசுவதைக் கவனியுங்கள். சபையாருக்கு ஆலோசனை சொல்லும்போது, புத்தி சொல்லும்போது (2கொரி 10:1), எச்சரிக்கும்போது (கலா 5:1-2, எபேசியர் 4:1), ஏதேனும் ஒரு முக்கியமான காரியத்தைக் குறித்து உறுதி அளிக்கும்போது (பிலே 19, 1தெச 2:18) மட்டுமே "பவுலாகிய நான்" என்று தன் சுயஅபிப்பிராயத்தை பவுல் நிலைநிறுத்துவதைப் பார்க்கிறோம்.

**உங்களுக்காக எனக்கு அளிக்கப்பட்டிருக்கிற தெய்வ கிருபைக்குரிய நியமமும் இன்னதென்று கேட்டிருப்பீர்களே. (எபே 3:2)**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினிமித்தம் ரோமாபுரியில் கட்டுண்ட நிலைமையில் இருப்பதைக் குறித்து பவுல் எந்த விதத்திலும் சோர்வடையவில்லை என்பது மட்டுமல்ல, தன்னுடைய

அப்போஸ்தல ஊழியத்தின் மேன்மையை சபையார் அறிந்து கொள்ளவேண்டும் என்று விரும்புகிறார். தேவன் அவருக்குக் கிருபையினால் ஒரு உக்கிராணக்காரன் (Steward) என்ற முறையில் அதை நடப்பித்து வருவதால் *1கொரி 9:16,17ல்* அவர் சொல்கிறார், "சுவிசேஷத்தை நான் பிரசங்கித்துவந்தும், மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ. நான் உற்சாகமாய் அப்படிச் செய்தால் எனக்குப் பலன் உண்டு; உற்சாகமில்லாதவனாய்ச் செய்தாலும், உக்கிராண உத்தியோகம் எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதே". *1கொரி4:1ல்* தன்னை "தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரன்" என்கிறார். "சுவிசேஷத்தை எங்களிடத்தில் ஒப்புவிக்கத்தக்கதாய், தேவன் எங்களை உத்தமரென்றெண்ணினார்" *(1தெச 2:4)* என்று அந்த அழைப்பின் மேன்மையை பவுல் குறிப்பிடுகிறார். *1 தீமோ 1:12ல்* சொல்கிறார், "என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன்". கொலோ *1:25,26*, கலா *2:8,9* வாசித்துப் பாருங்கள்.

"தெய்வகிருபைக்குரிய நியமம்" நியாயப்பிரமாணத்தின் நியமம் முடிந்ததும் துவங்கிய கிருபையின் காலத்தைக் குறிப்பிடுகிறது. மனித இனத்தின் சரித்திரம் தேவனுடைய கண்ணோட்டத்தில் ஒன்பது காலக்கட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு காலக்கட்டத்திலும் அதற்கென்று வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய தயவுள்ள சித்தத்துக்கு மனிதன் எவ்வாறு கீழ்ப்படிகிறான் என்பதைப் பொறுத்து தேவன் மனிதனை நியாயந்தீர்க்கிறார். சிருஷ்டிப்பின் நாள் துவங்கி அடியிற்கண்டவாறு ஒன்பது நியமங்கள் (காலக்கட்டங்கள், dispensation, oibononia) தேவனுடைய தீர்மானத்தின்படி ஒன்றன்பின் ஒன்றாக அமலுக்கு வருகின்றன. இந்த வெளிப்பாடு பவுலுக்கு தந்தருளப்பட்டது என்பதை எபே *1:9,10ல்* இவ்விதமாக சொன்னதை தியானித்தோம். "காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிற

வைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டுமென்று தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார்".

1. **பாவமற்ற காலம்:**
   சிருஷ்டிப்பின் நாள்துவங்கி
   பாவத்தில் ஆதாம் விழும்வரை — ஆதி 1:26-3:6

2. **மனச்சாட்சியின் காலம்:**
   ஏதேன் பாவம் துவங்கி
   ஜலப்பிரளயம் வரை — ஆதி 3:7 - 6:7

3. **மனித ஆளுகையின் காலம்:**
   ஜலப்பிரளயம் துவங்கி
   பாபேலின் தாறுமாறு வரை — ஆதி 6:8 - 11:9

4. **முற்பிதாக்களின் காலம் :**
   பாபேல் துவங்கி — ஆதி 11:10
   சீனாய் மலை வரை — - யாத் 18:27

5. **நியாயப்பிரமாணத்தின் காலம் :**
   சீனாய் துவங்கி — யாத் 19:1 -
   பெந்தெகொஸ்தே நாள் வரை — அப் 1:26

6. **கிருபையின் காலம் :**
   பெந்தெகொஸ்தே துவங்கி — அப் 2:1 -
   கிறிஸ்துவின் இரகசிய வருகைவரை — வெளி 5:14

7. **உபத்திரவ காலம் :**
   இரகசிய வருகை துவங்கி
   இரண்டாவது வருகை வரை — வெளி 6:1 - 20:3

8. **ஆயிரவருஷ அரசாட்சியின் காலம் :**
இரண்டாவது வருகை துவங்கி
வெள்ளை சிங்காசன
நியாயத்தீர்ப்புவரை — வெளி *20:4 - 20:15*

9. **யுகாயுகங்களின் காலம் :**
வெள்ளை சிங்காசனம் துவங்கி
நித்திய நித்தியமாக. — வெளி *21:1 - 22:21*

இதில் 6வதாக குறிப்பிடப்படும் கிருபையின் காலத்தில் நாம் இருக்கிறோம். இதுவே சபையின் காலமாகவும் கருதப்படுகிறது. பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர்களும் சீஷர்களும் எருசலேமில் ஒன்றுகூடி ஜெபித்துக்கொண்டிருந்தபோது பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்ட நிகழ்ச்சி அப்போஸ்தலர் 2ல் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நாளில்தான் நியாயப்பிரமாணத்தின் காலம் முடிவடைந்து கிருபையின் காலம் உதயமாகிறது. அந்த நாள் துவங்கி தேவன் மனிதர்களுடன் வித்தியாசமான விதத்தில் செயல்பட ஆரம்பிக்கிறார். மூன்று விதங்களில் தேவகிருபை வெளிப்பட ஆரம்பிக்கிறது.

1. சபைகளை ஸ்தாபித்து கிருபையின் உபதேசத்தை அறிவிக்க தேவனால் அழைக்கப்பட்ட பவுல் கிருபையினால் மட்டுமே தெரிந்துகொள்ளப்பட்டார். *(ரோமர் 12:3,6)*

2. பவுல் அறிவிக்கும் சுவிசேஷம் கிருபையினால் உண்டாகும் இரட்சிப்பை மட்டுமே முக்கியப் படுத்துகிறது. *(எபே 2:8, ரோமர் 11:6, அப் 15:11)*

3. இந்த நற்செய்தியை ஏற்றுக்கொள்ளும் யூதர்களும் புறஜாதியாரும் கிருபையின் அடிப்படையினால் மட்டுமே தேவனைக் கிட்டிச்சேருகிறார்கள். *(அப் 13:43, 14:26)*

**அதென்னவெனில் புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன்பங்காளிகளுமாயிருக்கிறார்களென்கிற இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார். (எபே 3:3)**

ஆமோஸ் சொல்கிறார், "கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்" *(3:7)*. இரகசியம் (Mystery) என்றால் தேவனால் மறைத்துவைக்கப்பட்ட ஒரு சத்தியம் என்று பொருள் கொள்ளவேண்டும். தன்னுடைய ஞானத்தினால் அதை எந்த ஒரு மனிதனாலும் அறிந்துகொள்ளமுடியாது. சபை என்ற அமைப்பில் யூதர்களுடன் புறஜாதியாரை இணைக்க வேண்டும் என்ற தேவனுடைய தீர்மானம் பழைய ஏற்பாட்டு காலக்கட்டத்தில் தீர்க்கதரிசிகளுக்குக்கூட முழுமையாக அறிவிக்கப்படவில்லை என்று பார்த்தோம். தனக்கு எவ்விதமாக கிருபையின் அடிப்படையில் இந்த இரகசியங்கள் வெளிப்படுத்தப் பட்டன என்பதை இந்த அதிகாரத்தின் 11வது வசனம் வரை பவுல் அறிவிக்கிறார்.

தனக்கு வெளிப்படுத்தப்பட்ட கிருபையின் வெளிப்பாடு என்ன என்பதை சுருக்கமாக இந்த வசனத்தில் பவுல் அறிவிக்கிறார். இந்த வெளிப்பாடுகள் எவ்வாறு, எங்கே வழங்கப்பட்டன என்ற விபரம் சொல்லப்படவில்லை.

1. புறஜாதியார் தேவனுடைய சகல ஆசீர்வாதங்களுக்கும் உடன் சுதந்தரர் (Fellow heirs)

2. புறஜாதியார் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரத்துக்குள்ளானவர்கள் (Fellow members)

3. புறஜாதியார் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கும் உடன்பங்காளிகள் (Fellow partakers of promises)

சுருக்கமாகச் சொல்வோமேயானால், இரட்சிக்கப்பட்ட ஒரு புறஜாதியானுக்கும் இரட்சிக்கப்பட்ட ஒரு யூதனுக்குமிடையே எந்த வித்தியாசமும் இல்லை. கலா *3:28,29*ல் பவுல் சொல்கிறபடி, "யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும், பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்".

புறஜாதியார் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டதால் மட்டுமே உடன் சுதந்தரராகிறார்கள் என்பதை பவுல் அறிவிக்கிறார். எபேசியர் *1:12*ல் "நாங்கள் (யூதர்களாகிய நாங்கள்) முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரராகும்படி தெரிந்துகொள்ளப் பட்டோம்" என்று பெருமைப்பட்டுக்கொண்ட பவுல், இந்த வசனத்தில் சுவிசேஷத்தினால் புறஜாதியார் உடன் சுதந்தரராகி விட்டார்கள் என்பதை **முதலாவது** அறிவிக்கிறார். பெற்றோரின் ஐசுவரியங்களை பெற்றுக்கொள்ளும் பிள்ளைகளே சுதந்தரவாளிகள் என்று குறிப்பிடப்படுகிறார்கள். "நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்கள்" *(கொலோ 3:23)* என்கிறார் பவுல். "நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே" *(ரோமர் 8:17)* என்ற வசனம் பிதாவாகிய தேவன் தன் குமாரனுக்கு வழங்கும் சகல மேன்மைகளிலும் சபையாராகிய நமக்கு இருக்கும் உரிமையை உறுதிப்படுத்துகிறது. "இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்து மூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்" *(கலா 4:7)*

இரண்டாவதாக புறஜாதியார் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரத்துக்குள்ளானவர்கள் என்பதை பவுல் அறிவிக்கிறார். எபே **2:16**ல் "பகையை சிலுவையினால் கொன்று அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார்" என்ற பவுலின் அறிவிப்பைத் தியானித்தோம். "இரட்சிப்பு யூதர்கள் வழியாய்

வருகிறது" (யோவான் 4:22) என்கிற நிலை இப்போது முற்றிலுமாக மாறிவிட்டது. யூத வழிபாட்டு முறைகளையும் சடங்காச்சாரங்களையும் ஏற்றுக்கொள்வதன் மூலமாகத்தான் ஒருவன் இரட்சிக்கப்படவேண்டும் என்பதில்லை. எந்த ஜாதியாரும், இனத்தாரும், தேசத்தாரும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையோடு ஐக்கியப்படும்போது, ஒரே சரீரத்துக்குள்ளாகிறார்கள். 1கொரி 12:27 சொல்கிறது, "நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்". ரோமர் 12:5 சொல்கிறது, "அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்". யோவான் 17:21ல் அவர் தன் பிதாவிடம் இவ்விதமாக ஜெபிக்கிறார், "நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் (சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டவர்கள்) நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்". இதன் விளைவாகவே புறஜாதியாரும் ஒரே சரீரத்துக்குள்ளானவர்கள் ஆகிறார்கள் என்று எடுத்துக்கொள்ளலாம்.

மூன்றாவதாக புறஜாதியார் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு உடன்பங்காளிகள் என்ற சத்தியம் அறிவிக்கப்படுகிறது. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கு முன் "இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியர்களாகவும்" (எபே 2:12) இருந்தார்கள் என்பது உண்மைதான். ஆபிரகாமுக்கு பிதாவாகிய தேவன் "இந்த தேசத்தை (கானான்) உன் சந்ததிக்குக் கொடுத்தேன்" என்று வாக்கு கொடுத்த நிகழ்ச்சி ஆதி 15:21ல் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வாக்குத்தத்தத்தின் அடிப்படையில்தான் இன்றும் இஸ்ரவேலர் பாலஸ்தீன தேசத்தை தங்களுடையது என்று போராடிக்கொண்டிருக்கிறார்கள். கானான் என்பது பரம கானானாகிய பரலோகத்துக்கும், புதிய வானம் புதிய பூமிக்கும் நிழலாட்டமாக இருக்கிறது. கிறிஸ்துவின் சிலுவை மரணத்துக்கு முன்புவரை ஒரு புறஜாதியான் நித்தியஜீவனுக்குள் பிரவேசிக்கவேண்டுமானால் விருத்தசேதனம் செய்துகொண்டு, முதலில் தன்னை ஒரு யூதனாக மாற்றிக்கொள்ள

வேண்டும். இன்றோ முற்பிதாக்களுக்கு வாக்குபண்ணப்பட்ட பரமகானானுக்கு புறஜாதியார் கிறிஸ்து மூலமாய் உடன்பங்காளிகளா-யிருக்கிறார்கள். அவர்கள் காணியாட்சிக்குப் புறம்பானவர்கள் அல்ல. உடன்படிக்கைகளுக்கு அந்நியரும் அல்ல.

மனிதஇனம் பெற்றுக்கொண்ட மிகப்பெரிய பிதாவின் வாக்குத்தத்தம் யோவேல் *2:28*ல் இவ்விதமாகச் சொல்லப்படுகிறது, "நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்". உயிர்த்தெழுந்த இயேசு தன் அப்போஸ்தலர்களிடம் இதை நினைவுபடுத்தி, "நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப்போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்" *(அப் 1:5)* என்றார். பெந்தெகொஸ்தே நாளில் கூடியிருந்த யூதர்கள் எவ்விதமாக ஆவியானவரைப் பெற்றுக்கொண்டார்களோ, அவ்விதமாகவே சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்ட சகல புறஜாதியாரும் வாக்குப் பண்ணப்பட்ட ஆவியானவரைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

இதுகுறித்து சந்தேகப்பட்ட எருசலேம் ஆதி சபையில் அப்போஸ்தலர்களுக்கும் மூப்பர்களுக்கும் பேதுரு அறிவிக்கிறார், "இருதயங்களை அறிந்திருக்கிற தேவன் நமக்குப் பரிசுத்த ஆவியைத் தந்தருளினதுபோல அவர்களுக்கும் (புறஜாதியாருக்கும்) தந்தருளி, அவர்களைக் குறித்து சாட்சி கொடுத்தார்" *(அப் 15:8)*. "ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக்குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று" *(கலா 3:14)*.

**இதைக் குறித்து நான் முன்னமே சுருக்கமாய் எழுதியிருக்கிறேன். (எபே 3:4)**

பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவை-களுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று

தேவன் தீர்மானித்திருந்த சித்தத்தின் இரகசியம் தனக்கு அறிவிக்கப்பட்ட காரியத்தை எபே *1:9,10*ல் பவுல் எழுதியிருந்ததை தியானித்தோம். *ரோமர் 11:25, 1கொரி 2:7; 15:51,52, எபே 5:32; 6:20, கொலோ 1:25,27; 2:2; 4:3, 2தெச 2:7, 1தீமோ 3:16* ஆகிய வசனங்களிலும் தேவனால் பவுலுக்கு வெளிப்படுத்தப்பட்ட இரகசியங்களாக இவை அறிவிக்கப்படுகின்றன.

**அதை நீங்கள் வாசிக்கையில் கிறிஸ்துவின் இரகசியத்தைக் குறித்து எனக்கு உண்டாயிருக்கிற அறிவை அறிந்துகொள்ளலாம். (எபே 3:5)**

கிறிஸ்துவுக்குள் புறஜாதியார் சுவிசேஷத்தினாலே உடன்சுதந்தரருமாய், ஒரே சரீரத்துக்குள்ளானவர்களுமாய், அவருடைய வாக்குத்தத்தத்துக்கு உடன்பங்காளிகள் என்ற இரகசியம் 3வது வசனத்தில் அறிவிக்கப்பட்டதைப் பார்த்தோம். தன்னால் தெரிந்துகொள்ளப்பட்ட யூத ஜனங்களுக்குக் கொடுத்த அத்தனை ஆசீர்வாதங்களையும் யூதர் அல்லாத புறஜாதியாருக்கும் தேவன் கொடுப்பார். யூதர்களும் யூதர் அல்லாதாரும் ஒரே குழுவில் சேர்ந்து இருப்பார்கள். தேவன் கிறிஸ்துவுக்குள் செய்த சகல வாக்குறுதிகளிலும் யாவரும் பங்கு பெறுவார்கள் என்கிற இரகசியத்தைக் குறித்த தேவனுடைய நேரடியான வெளிப்பாடு பவுலுக்கு வழங்கப்பட்டிருந்தது என்பதை எபேசியர் நிருபத்தை வாசிக்கும் ஒவ்வொருவரும் அறிந்துகொள்வார்கள் என்கிறார். தனக்கு உண்டாயிருந்த அறிவைக் குறித்த பெருமை பவுலுக்கு இருந்தது *(2கொரி 11:5)* என்று பார்க்கிறோம்.

"கிறிஸ்துவின் இரகசியம்" என்று பவுல் சொல்லும்போது *கொலோ 1:27*-ஐ மனதில் வைத்துக்கொண்டு பவுல் பேசுவதாகக் கருதப்படுகிறது. "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் (புறஜாதி சபையாருக்குள்) இருப்பதே அந்த இரகசியம்". "ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியமாகிய தேவ வசனம்" *(வசனம் 25)* என்று

இதை பவுல் குறிப்பிடுகிறார். இந்த சத்தியத்தை யூதர்கள் எளிதில் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று தாம் அறிந்திருந்த படியால் அடிக்கடி அதை வலியுறுத்திப் பேசவேண்டிய கட்டாயத்தில் பவுல் இருக்கிறார்.

**இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது போல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை.** (எபே 3:6)

*முற்காலங்களில் ("சென்ற காலங்களில்" அப் 14:16)* புறஜாதியார் இவ்விதமான மேன்மைகளைப் பெறுவார்கள் என்ற சத்தியம் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படாமல் இரகசியமாக வைக்கப் பட்டிருந்தது. "ஆதிகாலமுதல் அடக்கமாயிருந்து, இப்பொழுது தீர்க்கதரிசன ஆகமங்களினாலே அநாதி தேவனுடைய கட்டளையின்படி வெளியரங்கமாக்கப்பட்டதும், சகல ஜாதிகளும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படியும்படிக்கு அவர்களுக்கு அறிவிக்கப் பட்டதுமாயிருக்கிற இரகசியம்" *(ரோமர் 16:25)* என்று பவுல் இந்த இரகசியத்தைக் குறிப்பிடுகிறார். "மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்" *(உபா 29:29)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. "காரியத்தை மறைப்பது தேவனுக்கு மேன்மை" *(நீதி 25:2)*. எனவே முற்காலங்களில் அது மனிதர்களுக்கு முழுமையாக அறிவிக்கப்படவில்லை. புறஜாதியாருக்கு வழங்கப்படும் இரட்சிப்பைக்குறித்து ஆதி *22:18; 26:5; 28:14*, ஏசாயா *11:10; 49:6; 54:1-3; 60:1-3*, மல்கியா *1:11* ஆகிய வசனங்களில் சில வெளிப்பாடுகள் தேவனாலும், அவருடைய தீர்க்கதரிசிகளினாலும் நிழலாட்டமாகவும், மறைமுகமாகவும் சொல்லப்பட்டிருந்தாலும், இப்பொழுது அப்போஸ்தலர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தியதுபோல் அவை அமையவில்லை. மேசியாவின் வருகையை அவர்கள் அறிந்திருந்தாலும், அவருடைய மரணத்தாலும் பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்படுவதினாலும் உலகமெங்கும் சபை என்ற அமைப்பு உருவாகும் என்பதைக் குறித்து அவர்கள்

அறியவில்லை. அதனால்தான் "உங்களுக்கு உண்டான கிருபையைக்குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினார்கள்" (1பேதுரு 1:10) என்கிறார் பேதுரு. அதற்குக் காரணம், அவர்களால் இந்த சத்தியத்தை விளங்கிக்கொள்ளமுடியவில்லை என்பதுதான்.

**தேவனுடைய பலத்த சத்துவத்தால் எனக்கு அளிக்கப்பட்ட வரமாகிய அவருடைய கிருபையினாலே, இந்தச் சுவிசேஷத்துக்கு ஊழியக்காரனானேன். (எபே 3:7)**

நிருபத்தின் முதல் வசனத்தில் "தேவனுடைய சித்தத்தினாலே இயேசுகிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுல்" என்று தன்னை அறிமுகப்படுத்திய பவுல் இந்த வசனத்தில் "அவருடைய கிருபையினாலே இந்த சுவிசேஷத்துக்கு ஊழியக்காரனானேன்" என்கிறார். தேவகிருபை என்பது தேவனுடைய சித்தத்தின் அடிப்படையில் மட்டுமே வெளிப்படுகிறது. தேவனுடைய பலத்த சத்துவம், அவருக்கு வழங்கப்பட்ட வரமாகிய கிருபைக்குக் காரணமாக இருந்தது. அவருடைய தெய்வீக சத்துவத்தால்தான் தமஸ்குவுக்குப் போகும் வழியில் தான் பாவி என்பதை பவுல் கண்டுகொண்டார். தன்னுடைய வாழ்க்கை முழுவதிலும் தேவன் செயலாற்றிய வல்லமையைக் கண்டு அனுபவித்திருக்கிறார். தேவன் தன்னுடைய பிள்ளைகளுக்கு விரோதமான பவுலின் பாவங்களை அந்த நாளிலே மன்னித்தார் என்பது மட்டுமல்ல, அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும் ஊழியக்காரனாகவும் பவுலையே தேவன் நியமித்தார். இது தேவனுடைய சுத்த கிருபையே.

கொலோ 1:23ல் பவுல் சொல்கிறார், "அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது; அதற்கென்றே பவுலாகிய நான் ஊழியக்காரனானேன்". 2கொரி 3:6ல் சொல்கிறார், "புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்". கொலோ 1:26ல் சொல்கிறார், "உங்கள்பொருட்டுத்

*தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே நான் அந்தச் சபைக்கு ஊழியக்காரனானேன்". 2கொரி 6:3ல் சொல்கிறார், "எவ்விதத்தினாலேயும், எங்களைத் தேவஊழியக்காரராக விளங்கப்பண்ணுகிறோம்".*

*இந்த சுவிசேஷத்துக்கு ஊழியக்காரனானேன் என்கிறார் பவுல். ஊழியக்காரன் (Servant), என்றால் பணிவிடைக்காரன் என்று பொருள்படும். தான் அறிவிக்கும் சுவிசேஷத்தை "என் சுவிசேஷம்" (ரோமர் 2:16) என்று உரிமை பாராட்டும் பவுல் 1கொரி 9:16ல் சொல்கிறார், "சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என் மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ."*

**பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. (எபே 3:8)**

*மகத்துவமான தேவன் தன்னுடைய சத்துவத்தை பயன்படுத்தி, தேவகிருபையினால் ஊழியத்துக்கு அழைத்ததாக முந்தின வசனத்தில் குறிப்பிட்ட பவுல், தான் தேவனுடைய பரிசுத்தவான்களின் முக்கியத்துவத்தில் சிறியவன் (மிகக் குறைந்தவன்) என்கிறார். 1தீமோ 1:15ல் சொல்கிறார், "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான்". 1கொரி 15:8ல் தன்னை, "அகாலப்பிறவி" என்று அழைத்துவிட்டு அடுத்த வசனத்தில் சொல்கிறார், "நான் அப்போஸ்தலரெல்லாரிலும் சிறியவனாயிருக்கிறேன்; தேவனுடைய சபையைத் துன்பப்படுத்தினதினாலே, நான் அப்போஸ்தலனென்று பேர்பெறுவதற்கும் பாத்திரன் அல்ல". சபையைத் துன்பப்படுத்தினதினிமித்தம் தேவனுக்கு ஊழியம் செய்ய தகுதி*

இல்லை என்பதை கலா 1:13-15, 1தீமோ 1:12-14 ஆகிய வசனங்களிலும் பவுல் அறிக்கையிடுகிறார்.

கிறிஸ்துவில் காணப்பட்ட மனத்தாழ்மையைக் குறித்து பவுல் பிலிப்பியர் 2:6-8ல் அருமையாக எழுதியிருப்பதை வாசித்துப் பாருங்கள். "சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" என்கிறார். தேவனால் வல்லமையாகப் பயன்படுத்தப்படும் ஊழியக்காரர்களிடம் இந்த மனத்தாழ்மை குறைய ஆரம்பிக்கும்போது அவர்களுடைய வல்லமையும் குறைவுபட ஆரம்பிக்கிறது. அதன்விளைவாக தங்களிடம் தாழ்மை இருப்பதுபோலவும் வல்லமை இருப்பதுபோலவும் சபையாருக்கு முன்பாக அவர்கள் நடிக்கவேண்டியதிருக்கிறது.

"பார்வோனிடத்துக்குப் போகவும், இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்துவரவும் நான் எம்மாத்திரம்" (யாத் 3:11) என்று சொல்லும் தாழ்மை மோசேயிடம் இருந்தது. "தூளும், சாம்பலுமாயிருக்கிற அடியேன்" (ஆதி 18:27) என்று சொல்லும் தாழ்மை, விசுவாசிகளின் தகப்பனாகக் கருதப்படும் ஆபிரகாமிடம் இருந்தது. "ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை" (மத் 11:11) என்று இயேசுவே சொல்லியிருக்கிறார். ஆனால் யோவான் தன்னைப் பற்றி என்ன சொல்கிறார், "அவருடைய பாதரட்சைகளின் வாரைக் குனிந்து அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல" (மாற்கு 1:7). பெருமையின் ஆவியை உடையவர்கள் நான்-நான் என்று பேசிய சாத்தானின் ஆவியை உடையவர்களாகிறார்கள் (ஏசாயா 14:14).

தேவன் தனக்குத் தந்தருளின கிருபையின் நோக்கம் என்ன என்பதை பவுல் இந்த வசனத்தில் அறிவிக்கிறார். "புறஜாதிகளிடத்தில் கிறிஸ்துவின் அளவற்ற ஐசுவரியத்தைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக என்கிறார். 1கொரி 15:10ல் சொல்கிறார், "நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன்; அவர் எனக்கு அருளின கிருபை விருதாவாயிருக்கவில்லை; அவர்களெல்லாரிலும்

நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்; ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவகிருபையை அப்படிச் செய்தது". "இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரனும், அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனும், தேவனுடைய சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவனாகிய பவுல்" என்று தன்னை ரோமர் *1:1*ல் அறிமுகப்படுத்துகிறார். *1*கொரி *1:1*, *2*கொரி *1:1*, கலா *1:1* வாசித்துப்பாருங்கள். தன்னுடைய சுவிசேஷத்தை புறஜாதியாருக்கு அறிவிக்கும்படியாக தேவன் பவுலுக்கு அருளிச்செய்த கிருபையை *(அப் 9:15, 22:21, 26:17,18)*, பவுல் வெற்றிகரமாக பயன்படுத்தியதை அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்திலிருந்து அறிந்துகொள்கிறோம்.

**தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே (எபே 3:9)**

அநாதி தீர்மானம் (eternal purpose) என்று பவுல் சொல்லும்போது அது உலகத்தோற்றத்துக்கு முன்பே, நித்தியத்திலேயே உதயமானது என்று பொருள்கொள்ளலாம். உலக சரித்திரத்தில் சம்பவிக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியின் பின்னணியிலும் தேவனுடைய நித்திய தீர்மானமே செயல்படுகிறது. தேவன் நித்தியவாசியாக இருப்பதால் அவருடைய தீர்மானங்களும் நித்தியமானதாய் இருக்கிறது. அவ்வப்போது திட்டமிட்டு தேவன் ஒரு காரியத்தையும் செய்வதில்லை. இதையே "உலகத்தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டது-மாயிருந்த இரகசியம்" என்று *1*கொரி *2:7* குறிப்பிடுகிறது. தேவனுடைய அநாதி தீர்மானம். எபே *3:11*ல் "ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம்" என்று குறிப்பிடப்படுகிறது. 2தீமோ *1:9* சொல்கிறது, "தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்". தேவனுடைய அநாதி தீர்மானம் ஆதாம் சிருஷ்டிக்கப்பட்ட பாவமற்ற காலம் துவங்கி, கடைசி யுகாயுகங்கள் காலம்வரை எந்தவிதமான மாற்றமுமின்றி செயல்பட்டுக்கொண்டே இருக்கிறது.

யூதரானாலும் சரி, புறஜாதியாரானாலும் சரி, அவர்களை கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குள் இணைத்து, தன்னுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் சாயலுக்குள்ளாக்கி, அவருடைய மணவாட்டியாக அங்கீகரிக்கும் தேவனுடைய தீர்மானம் நித்தியமானது என்பது மட்டுமல்ல, அது எவராலும் மாற்றப்படக்கூடாதது. "சேனைகளின் கர்த்தர் இப்படி நிர்ணயித்திருக்கிறார், யார் அதை வியர்த்தமாக்குவான்? அவருடைய கை நீட்டப்பட்டிருக்கிறது. யார் அதைத் திருப்புவான் "(ஏசாயா 14:27). நாசியில் சுவாசமுள்ள மனிதர்களுடைய தீர்மானம் எதுவுமே நிலைத்திருப்பதில்லை. ஒரு காரியத்தை அறிந்துகொள்ளுங்கள். **தேவனுடைய தீர்மானம் மாறுவதில்லை என்பதில் மட்டுமே நம்முடைய இரட்சிப்பைக் குறித்த நிச்சயம் நமக்கு உண்டாயிருக்கிறது.**

தேவனுடைய அநாதி தீர்மானத்தைக் குறித்து இன்னொரு காரியமும் இந்த வசனத்தில் சொல்லப்படுகிறது. அது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் உலகத்தோற்றத்துக்கு முன் அவரோடு கலந்து தேவன் முடிவுசெய்த ஒரு தீர்மானம். அந்த தீர்மானத்தின் அடிப்படையில்தான் திருத்துவத்தின் இரண்டாவது நபராகிய இயேசுகிறிஸ்து உலகத்தில் ஒரு மனிதனாய் பிறந்து, கல்வாரி மரணத்தைச் சந்தித்து, அடக்கம்பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, இன்று பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருந்து, நமக்காக பரிந்துபேசிக்கொண்டிருக்கிறார். இந்த இரட்சிப்புக்கடுத்த தீர்மானம் தேவகுமாரன் ஒருவரையே மையமாகக் கொண்டிருக்கிறது. நம்முடைய "ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது" (கொலோ 3:3). அவருடைய தீர்மானத்தின் அடிப்படையில் நாம் எதைச் செய்யவேண்டும் என்ற ஆலோசனையை ரோமர் 6:11ல் தருகிறார், "உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்".

"இயேசுகிறிஸ்துவுக்குள்" மட்டுமே நாம் இந்த மேலான சிலாக்கியங்களைப் பெறுகிறோம். கிறிஸ்துவுக்குள் இருப்பவன் என்ன செய்வான் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

1. இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிப்பான்.

2. அவரை ஆண்டவராகவும் சொந்த இரட்சகராகவும் ஏற்றுக்கொள்வான்.

3. தேவனுடைய வார்த்தையின்படி தன் ஜீவியத்தை அமைத்துக்கொள்வான்.

4. அவருடைய வார்த்தையையும் வாக்குத்தத்தங்களையும் விசுவாசிப்பான்.

5. சகவிசுவாசிகளோடும் மற்றவர்களோடும் அன்போடும் சமாதானத்தோடும் ஜீவிப்பான்.

**உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய், இப்பொழுது தெரியவரும் பொருட்டாக (எபே 3:10)**

8-வது வசனத்தில் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தை புறஜாதியாருக்கு சுவிசேஷமாக அறிவிக்கும்படியாக தேவன் விசேஷித்த கிருபையை தனக்குத் தந்தருளினார் என்பதை அறிவித்த பவுல், இந்த வசனத்தில் உன்னதங்களில் (வானமண்டலங்களில்) உள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் (பலவகையான, பலவிதமான வல்லமைகள், திறமைகள் நிறைந்த தேவதூதர்களுக்கு) தேவனுடைய அநந்த (பலவகைப்பட்ட) ஞானத்தைப் போதிக்கும் பொறுப்பும் தனக்கு இருப்பதாக அறிவிக்கிறார்.

தேவனுடைய சபைமூலமாகவே இந்த காரியம் நடைபெறும் என்பதையும் பவுல் அறிவிக்கிறார். தன்னுடைய இரத்தத்தை சிந்தி சபையை தேவன் ஸ்தாபித்தார் என்றால் அதன் நோக்கம் அதன் மூலமாக தேவன் இந்த பூமியில் மட்டுமல்ல, பரலோகத்திலும் மகிமைப்படவேண்டும் என்பதே ஆகும். சபையின் மூலமாக வெளிப்படும் தேவ ஞானத்தையும் அவருடைய பலத்த

கிரியைகளையும் தேவதூதர்கள் காணும்போது மனமகிழ்ச்சியோடு, இன்னும் கூடுதலாக தேவனை ஆராதிப்பார்கள் என்றும், அதனிமித்தம் தேவன் மகிமைப்படுவார் என்றும் பவுல் எதிர்பார்க்கிறார். அதற்காகவே தேவன் தனக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும் கிருபையை அளித்திருப்பதாக வசனம் *11*-ன் இறுதியில் சொல்கிறார்.

எபே *1:20*, கொலோ *1:16; 2:15* ஆகிய இடங்களில் உன்னதங்களிலுள்ள துரைத்தனங்கள், அதிகாரங்கள் என்ற வார்த்தைகள் தேவதூதர்களையும் குறிப்பிடுவதாக சில வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள். எபே 6:12ல் பவுல் சொல்கிறார், "மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு". ஆனாலும் நாம் தியானிக்கும் இந்த வசனத்தில் நல்ல தூதர்களே குறிப்பிடப்படுகிறார்கள் என்று கால்வின், ஹாட்ஜ், லென்ஸ்கி ஆகிய வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள். இந்த பூமியில் தேவனுடைய பிள்ளைகளுக்கு நடக்கும் காரியங்களை "உற்றுப்பார்க்க தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்" *(1பேதுரு 1:12)* என்று வாசிக்கிறோம். லூக்கா *15:10* சொல்கிறது, "மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது" *(லூக்கா 15:10)*. 1கொரி *11:10*, வெளி *5:11* வாசித்துப் பாருங்கள். இந்த வசனங்கள் கேருபின், சேராபீன் உள்ளிட்ட நல்ல தேவதூதர்களையே குறிப்பிடுகிறது.

தேவனுடைய அநந்த ஞானத்தை சபையின் மூலமாக தேவதூதர்கள் அறிந்து கொள்வார்கள் என்கிறார் பவுல். அநந்த என்பதற்கு பயன்படுத்தப்படும் Polupoikilos என்ற கிரேக்கபதம் வேதாகமத்தில் வேறு எந்த இடத்திலும் பயன்படுத்தப்படவில்லை. தேவனுடைய பலவகைப்பட்ட (Manifold, Multifaceted) ஞானத்தை பவுல் குறிப்பிடுகிறார். தேவன் வெளிப்படுத்தாத நிலையில் **மனித ஞானத்தினாலும், தேவதூதர்களின் ஞானத்தினாலும் தெய்வீக அநந்த ஞானத்தை அறிந்துகொள்ளமுடியாது.**

ரோமர் 11:33ல் பவுல் சொல்கிறார், "தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்". "அவருடைய ஞானத்தினாலே ஆழங்கள் பிரிந்தது" (நீதி 3:20). தானியேல் சொல்கிறார், "ஞானமும் வல்லமையும் அவருக்கே உரியது". சங் 147:5 சொல்கிறது, "அவருடைய அறிவு அளவில்லாதது".

பரலோகத்தின் தேவன் பூமியிலுள்ள தன்னுடைய சபையில் தான் செய்துகொண்டிருக்கும் மகத்துவமான கிரியைகளை வியப்போடும் ஆச்சரியத்தோடும் அவரே உற்றுநோக்கிக்கொண்டிருப்பதைக் கவனித்து பவுல் எழுதுவதுபோல் தெரிகிறது. தகுதியில்லாத மனிதர்கள் சிலரை தேவன் தனக்கென்று தெரிந்துகொண்டு, அவர்களுடைய பாவ வாழ்க்கையை மாற்றி அமைத்து, அவர்களுடைய சகல அடிமைத்தனங்களில் இருந்தும் விடுவித்து, இரட்சிக்கும் ஞானத்தை தேவதூதர்கள் வியந்து பாராட்டுகிறார்கள். தன்னுடைய பேரன்பையும் அநந்த ஞானத்தையும உலகத்தார் மட்டுமல்ல, பரலோகவாசிகளும் அறிந்துகொள்ளவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். "தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை" (1கொரி 2:9). கிறிஸ்துவின் சரீரமாகிய சபை உருவாக்கப்படாத நிலையில் உன்னதங்களில் உள்ள துரைத்தனங்களினாலும் அதிகாரங்களினாலும் தேவனுடைய மனதில் இருந்த நித்திய நோக்கத்தை அறிந்து அவரை மகிமைப்படுத்தமுடியாது என்பதையே பவுல் இந்த வசனத்தின்மூலம் அறிவிக்கிறார்.

**இயேசு கிறிஸ்துவைக் கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு, இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. (எபே 3:11)**

எல்லாவற்றையும் பிதாவாகிய தேவன் தன்னுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைக்கொண்டு, அவர் மூலமாக, அவருக்காக சிருஷ்டித்தார் என்ற சத்தியம் இந்த வசனத்தில் முதலாவது அறிவிக்கப்படுகிறது. "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை" *(யோவான் 1:3)* என்று வாசிக்கிறோம். "இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்" *(1கொரி 8:6)*. கொலோ *1:16* சொல்கிறது, "அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது", "இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்" *(எபி 1:2)*.

எல்லாவற்றையும் கிறிஸ்துவைக் கொண்டே சிருஷ்டித்த தேவன், ஆதிகாலங்கள் முதல்கொண்டு யூதர்கள், புறஜாதியார் மத்தியில் சபையின் மூலமாக உண்டாகப்போகும் ஐக்கியத்தைக் குறித்த உபதேசத்தை இரகசியமாகவே வைத்திருந்தார் என்கிறார் பவுல். எவ்வாறு கிறிஸ்துவின் மூலம் உலகமும் அதில் அடங்கிய சகலமும் சிருஷ்டிக்கப்பட்டதோ, அவ்விதமாகவே கிறிஸ்துவைக் கொண்டும், கிறிஸ்து மூலமாகவும் இந்த ஐக்கியம் உருவாகவேண்டும் என்பதே தேவனுடைய தீர்மானம். இந்த இரகசியத் திட்டத்தை இதுவரை மறைத்து வைத்திருந்த தேவன், அதை வெளிப்படையாக அறிவிக்கும் பொறுப்பை, கிருபையாக பவுலிடம் ஒப்படைத்திருக்கிறார் என்பதே இந்த வசனத்தின் பின்பகுதியில் அறிவிக்கப்படுகிறது.

"இரகசியத்தின் ஐக்கியம்" (Fellowship of the mystery) என்று பவுல் குறிப்பிடுவதைக் கவனியுங்கள். இது ஆதிகாலங்கள் முதற்கொண்டு தேவனுக்குள் மறைந்திருந்தது. கிருபையினால் மட்டுமே இரட்சிப்பு இலவசமாக உண்டாகிறது என்பதுதான் மறைவாயிருந்த தெய்வீகத் திட்டம்.

இந்த திட்டத்தை நிறைவேற்றும்படியாகவே பிதா தன்னுடைய குமாரனை பாடுமரணத்துக்கு ஒப்புக்கொடுத்தார். குமாரனும் மனமகிழ்ச்சியோடு தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றினார். இவ்விதமாக பிதாவும் குமாரனும் இந்த காரியத்தில் ஒருமனதுடையவர்களாக செயல்பட்டார்கள் என்பதையே இரகசியத்தின் ஐக்கியமாக (koinõnia) பவுல் குறிப்பிடுகிறார். இந்த பூர்வீக இரகசியத்தை யூதர்களுக்கும் யூதர் அல்லாதவர்களுக்கும் விளக்கமாக அறிவிக்கும் தேவனுடைய கருவியாக பவுல் இங்கே செயல்படுகிறார்.

இந்த அழைப்பை தமஸ்குவுக்கு போகும் வழியில் பவுல் பெற்றுக்கொள்கிறார். கிறிஸ்துவிடம் பவுல் பேசிய முதல் வார்த்தை "நீர் யார்" *(அப் 9:5)* என்பது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தான் யார் என்பதை அறிவிக்கிறார். 6-வது வசனம் இவ்வாறு சொல்கிறது, "அவன் (பவுல்) நடுங்கித் திகைத்து, ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்" என்கிறார். இந்த நாட்களில் ஊழியக்காரர்களிடம் தேவனைக் குறித்த நடுக்கமும் இல்லை, திகைப்பும் இல்லை, முக்கியமாக அவருடைய சித்தத்தை அறிந்துகொள்ளும் விருப்பமும் இல்லை. தேவனுடைய சித்தம் தங்களுடைய சித்தத்தோடு ஒத்துக்போகாது என்பதை அவர்கள் நன்றாகவே அறிவார்கள். ஊழியத்துக்கு வரும்படியாக யாரும் பவுலை வற்புறுத்தவில்லை. தேவனிடமிருந்து தான் பெற்றுக்கொண்ட அழைப்பை தன்னுடைய மிகப்பெரிய சிலாக்கியமாக பவுல் கருதி அவராக ஊழியம் செய்ய முன்வருகிறார். அதைத்தான் 8-வது வசனத்தில் பார்த்தோம்.

**அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்குத் தைரியமும் திடநம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது. (எபே 3:12)**

"அவரைப் பற்றும் விசுவாசத்தால்" என்று பவுல் சொல்வதைக் கவனியுங்கள். கிறிஸ்து என்கிற நபரின்மேல் நம்முடைய விசுவாசத்தை வைக்கும்படியாக அழைக்கப்பட்டிருக்கிறோம். ஒரு மதத்தின்மேலோ, மதத்தின் சட்டதிட்டங்கள் மேலோ, சபையின் மேலோ,

ஊழியக்காரர்கள் மேலோ, நம்முடைய விசுவாசத்தை வைப்போமானால் ஏமாற்றம்தான் மிஞ்சும். நம்முடைய விசுவாசத்தின் மூலமாகத்தான் நாம் அவரைப் பற்றிக்கொள்ளமுடியும். அவரைப் பற்றிக்கொள்ள வேறு எந்த வழியும் வேதத்தில் சொல்லப்படவில்லை.

விசுவாசத்தின் மூலமாக கிறிஸ்தவர்களாகிய நாம் மூன்று முக்கியமான நன்மைகளை பெற்றுக்கொள்கிறோம்.

1. தைரியம் (Boldness)

2. நம்பிக்கை (Confidence)

3. தேவனிடம் சேரும் சிலாக்கியம் (Access)

இந்த மூன்றையுமே அவருக்குள், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் மட்டுமே பெற்றுக்கொள்கிறோம்.

சீனாய் மலையில் தேவன் வெளிப்பட்டபோது இஸ்ரவேலர்கள் எந்த அளவுக்கு தைரியமற்றவர்களாக இருந்தார்கள் என்பதை யாத் *19:9-18* வாசித்து அறிந்துகொள்ளுங்கள். மலையின் அடிவாரத்தை தொடுவதற்குக்கூட அவர்களுக்குத் தடை உண்டாகியிருந்தது. ஆனால் இன்று கிறிஸ்துவுக்குள்ளாக நமக்கு மிகுந்த தைரியம் உண்டாகியிருக்கிறது. எபி *4:16* சொல்கிறது, "நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயங்களில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக் கடவோம்". பவுல் சொல்கிறார், "மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள்" *(எபி 10:35)*.

கிறிஸ்தவர்களாகிய நாம் தைரியமும் திடநம்பிக்கையுமுடையவர்களாக இருக்கும்படியாக அழைக்கப்பட்டிருக்கிறோம். "நாம் தைரியங்கொண்டு: கர்த்தர் எனக்கு சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே" எபி *13:6* என்ற வசனம் நம்முடைய நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. "அப்பா பிதாவே" *(ரோமர் 8:15)* என்று சர்வவல்லமையுள்ள தேவனை

அழைக்கும் சிலாக்கியம் நமக்கு உண்டாகியிருக்கிறது. நாம் கிறிஸ்துவினுடையவர்களாகவும், ஆபிரகாமின் சந்ததியாராயும் வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறோம் (கலா 3:29). தேவனுடைய புத்திரனாயும் கிறிஸ்து மூலமாய் தேவனுடைய சுதந்தரனுமாயும் இருக்கிறோம் (கலா 4:7). தேவனுடைய பிள்ளைகளாயும், சுதந்தரருமாயும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாயுமிருக்கிறோம் (ரோமர் 8:17).

நம்முடைய விசுவாசத்தின் மூலமாக தேவனிடத்தில் சேரும் சிலாக்கியம் உண்டாயிருக்கிறது. யோவான் 1:12 சொல்கிறது, "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய், அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்". நாம் தேவனுடைய பிள்ளைகள் என்கிற அதிகாரம் ஏற்கனவே கொடுக்கப்பட்டாயிற்று.

"ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர்மூலமாய்ப் பெற்றிருக்கிறோம்" (எபே 2:18) என்ற வசனம் தேவனிடத்தில் சேருவதில் ஆவியானவரின் செயல்பாட்டை அறிவிக்கிறது. ரோமர் 5:1,2 சொல்கிறது, "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். அவர்மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மை பாராட்டுகிறோம்". ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்பாயிருக்கும் மேன்மை நமக்கு வழங்கப்பட்டிருப்பதை 1யோவான் 3:1,2 வாசித்து அறிந்துகொள்ளுங்கள்.

**ஆகையால் உங்கள் நிமித்தம் நான் அநுபவிக்கிற உபத்திரவங்களினால் நீங்கள் சோர்ந்துபோகாதிருக்க வேண்டிக்கொள்ளுகிறேன்; அவைகள் உங்களுக்கு மகிமையாயிருக்கிறதே. (எபே 3:13)**

அதிகாரத்தின் முதல் வசனத்தில் "பவுலாகிய நான் புறஜாதியாராயிருக்கிற உங்கள்பொருட்டுக் கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டுண்டவனாயிருக்கிறேன்" என்று எழுதியிருந்ததை தியானித்தோம். புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்வது கடினமான காரியம் என்பதை தேவன் பவுலை அழைக்கும்போதே அனனியாவிடம் அறிவித்தார் என்று பார்க்கிறோம் (அப் 9:15,16). தான் சந்தித்த உபத்திரவங்களை பவுல் 2 கொரி 11:24-28ல் விளக்கமாக அறிவிப்பதை வாசித்துப்பாருங்கள். அப் 13:50; 14:5,19; 16:22, 23; 18:12; 21:36; 22:22; 23:10, 1கொரி 4:12, 2கொரி 4:9, 2தீமோ 2:9, 3:11 ஆகிய வசனங்களிலும் அவை குறிப்பிடப்படுகின்றன. அவைகளினிமித்தம் பவுல் எந்த விதத்திலும் சோர்வடையாமல் தைரியமாகச் சொல்கிறார், "இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்" (கொலோ 1:24). "நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது" (மத் 5:10) என்று நம் ஆண்டவர் சொல்லியிருக்கிறார் அல்லவா.

தன்னுடைய பாடுகளினிமித்தம் எபேசு சபையார் சோர்ந்து போய்விடக்கூடாது என்று பவுல் அவர்களைக் கேட்டுக்கொள்கிறார். பவுலின் உபத்திரவங்கள் அவர்களுக்கு மகிமையைக் கொண்டுவரும் என்ற நிச்சயத்தோடு பவுல் பேசுகிறார். 2கொரி 4:17ல் சொல்கிறார், "அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது". அந்த மகிமை எவ்வாறு உருவாகும் என்பதை பிலிப்பியர் 1:14ல் அறிவிக்கிறார், "சகோதரரில் அநேகர் என் கட்டுகளாலே கர்த்தருக்குள் திடன்கொண்டு, பயமில்லாமல் திருவசனத்தைச் சொல்லும்படி அதிகமாய்த் துணிந்திருக்கிறார்கள்". 2கொரி 1:6ல் பவுல் சொல்கிறார், "நாங்கள் உபத்திரவப்பட்டாலும் அது உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும்". 1பேதுரு 1:7 வாசித்துப்பாருங்கள், "கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும்,

செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்" (யோவான் 12:24) என்கிறார் இயேசு.

தன்னுடைய உபத்திரவத்தினிமித்தம் எபேசு சபையார் சோர்ந்து போகாதிருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளும் பவுல் தானும் அது குறித்து சோர்வடையப்போவதில்லை என்கிறார். 2கொரி 4:1ல் அவர் சொல்கிறார், "இப்படிப்பட்ட ஊழியத்தை உடையவர்களாகிய நாங்கள் இரக்கம் பெற்றிருப்பதால் சோர்ந்துபோகிறதில்லை". கலாத்தியர் 6:9ல் சொல்கிறார், "நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்". 2தெச 3:13ல் பவுல் சொல்கிறார், "சகோதரரே, நீங்கள் நன்மை செய்வதிலே சோர்ந்துபோகாதிருங்கள்". மனச்சோர்வடைவதால் யாருக்கும் எந்த நன்மையும் உண்டாவதில்லை.

## எபேசியருக்காக பவுலின் ஜெபம் (3:14-21)

**இதினிமித்தம், நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராகிய (எபே 3:14)**

முதல் அதிகாரத்தில் 15 முதல் 23 வரை எழுதப்பட்டிருக்கும் பவுலின் ஜெபத்தை ஏற்கெனவே தியானித்திருக்கிறோம். அதன் தொடர்ச்சியாக இந்த ஜெபம் அமைந்திருக்கிறது. பவுல் முந்தின வசனத்தோடு உபதேசத்துக்கடுத்த மூல சத்தியங்களை அறிவித்து முடித்து விட்டார். இந்த இரண்டாவது ஜெபத்தைத் தொடர்ந்து அடுத்த அதிகாரத்திலிருந்து கிறிஸ்தவர்களாகிய நம்முடைய அனுதின வாழ்க்கைக்குத் தேவையான ஆலோசனைகளையும் அவர் வழங்கவிருக்கிறார். ஆனால் அதற்குமுன்பாக அப்போஸ்தலனாகிய பவுல் சபையாருக்காக ஊக்கமாக ஜெபிக்கிறார். யோவான் 17-வது அதிகாரத்தில் நாம் வாசிக்கும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஜெபத்துக்கு அடுத்தபடியாக இதுவே வேதத்திலுள்ள மிகவும் மேன்மையான ஜெபமாகக் கருதப்படுகிறது. இப்படிப்பட்ட ஜெபத்தை வழக்கமான ஞாயிறு ஆராதனைகளிலோ, அல்லது கிறிஸ்தவ கூட்டங்களிலோ நாம் கேட்க முடிவதில்லை. நம்முடைய

ஆவிக்குரிய அனுபவங்கள் மிகவும் குறைவுபட்டதாக உள்ளது என்பதையே இது வெளிப்படுத்துகிறது.

"இதினிமித்தம்" (For this cause) என்று பவுல் சொல்லும்போது தன்னை ஜெபிக்கும்படியாக தூண்டிய காரியம் என்ன என்பதை அறிவிக்க விரும்புகிறார் என்பது தெரிகிறது. 12-வது வசனத்தில் அது சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய விசுவாசத்தின்மூலமாய் தைரியத்தோடும் நம்பிக்கையோடும் தேவனிடம் வந்துசேரும் சிலாக்கியம் உண்டாகியிருப்பதன் நிமித்தம் பவுல் தேவனை ஸ்தோத்திரித்து ஜெபிக்க விரும்புகிறார்.

எபே 2:1 முதல் 3:12 வரை தேவன் நடப்பித்த இரண்டு மகத்துவமான செயல்பாடுகளை பவுல் அறிவித்ததைப் பார்த்தோம். எபே 2:1 முதல் 10 வரை மனித இனத்துக்கு தேவன் அருளிச்செய்த இரட்சிப்பைக் குறித்த உபதேசத்தை அறிவித்த பவுல், எபே 2:11 முதல் 3:12 வரை கிறிஸ்துவின் பாடுமரணத்தின் மூலம் யூதர்களையும் புறஜாதியாரையும் ஒற்றுமைப்படுத்தியதால் உருவான திருச்சபை என்ற அமைப்பு எவ்வாறு மனித இனத்தை தேவனுடைய வீட்டாராக்கியது என்பதையும் அறிவித்தார். இதனிமித்தமும் பவுல் ஜெபிக்கிறார்.

தன்னுடைய ஜெபத்தில் பவுல் பிதாவை "பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணர்" என்று குறிப்பிடுகிறார். "பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டுமென்று" (எபே 1:9) பிதா தீர்மானித்திருந்தார். பரலோகத்திலிருக்கிறவர்களுக்கும், பூலோகத்திலுள்ள பரிசுத்தவான்களுக்கும், பிதாவாகிய தேவன் ஒருவரே தகப்பனாக இருக்கிறார். "நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்" என்று 2கொரி 6:18ல் வாசிக்கிறோம். கலாத்தியர் 4:6,7 சொல்கிறது, "நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள்

இருதயங்களில் அனுப்பினார். ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால் கிறிஸ்து மூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்". நாம் தேவனுடைய வீட்டார் என்பதை எபே *2:19*ல் பார்த்தோம்.

பரலோகத்திலிருந்தாலும் சரி, பூலோகத்திலிருந்தாலும் சரி நாம் தேவனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அது நம் தகப்பனுடைய குடும்பம். அவரை "அப்பா, பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியை" (*ரோமர் 8:15*) நாம் பெற்றிருக்கிறோம். நம்மை சகோதரர் என்று சொல்ல ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வெட்கப்படவில்லை (*எபி 2:11*). இவ்வாறு விசுவாசிகள் அத்தனைபேருக்கும் தேவன் தகப்பனாக இருக்கிறபடியால் அவருடைய நாமம் (குடும்ப பெயர், Family name) முழுக்குடும்பத்தைச் சேர்ந்த நம் அத்தனை பேருக்கும் சொந்தமானதாகிவிடுகிறது. அவரே விண்ணிலும் மண்ணிலுமுள்ள அனைத்து குடும்பங்களும் ஒன்றுபட்டு ஒரே குடும்பமாக விளங்குவதற்குக் காரணமாயிருக்கிறார்.

**நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு (எபே 3:15)**

பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணர் என்று பவுல் குறிப்பிடுவது பிதாவை அல்ல, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத்தான் என்று பார்க்கிறோம். அவருடைய பிதாவை நோக்கி பவுல் முழங்கால்படியிட்டு ஜெபிக்கிறார். "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்" (*எபே 1:3*) என்று பவுல் இந்த நிருபத்தைத் துவங்கினார் என்று பார்த்தோம்.

தேவனுடைய எல்லா கிருபைகளும் இரக்கங்களும் குமாரன் மூலமாகவே நம்மை வந்தடைகிறது. நம்முடைய எல்லா ஜெபவிண்ணப்பங்களும் குமாரன் மூலமாகவே பிதாவை சென்றடைகிறது. உலக இரட்சகரின் தகப்பனாக தேவன் இருப்பதால்தான் அவர் அனைத்து இரட்சிக்கப்பட்டவர்களுக்கும்

தகப்பனாகிறார். யோவான் 20:17ல் உங்கள் பிதா, என் பிதா என்று கிறிஸ்து குறிப்பிட்டு இந்த உறவுமுறையில் உள்ள வித்தியாசத்தை வெளிப்படுத்துகிறார். பிதாவாகிய தேவனுக்கும் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்கும் இடையே உள்ள ஐக்கியத்தையும் மேன்மையையும் மனித ஞானத்தால் விளங்கிக்கொள்ளமுடியாது.

சிறையில் அடைக்கப்பட்டிருந்த நிலையிலும் தான் முழங்கால்படியிட்டு ஜெபிப்பதாக பவுல் அறிவிக்கிறார். சாலொமோன் ராஜா தேவாலய பிரதிஷ்டை செய்தபோது சபையார் எல்லாருக்கும் முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபித்தார் என்று 2நாளா 6:13ல் பார்க்கிறோம். ஜெபத்துக்கு தரியு ராஜாவினால் தடைவிதிக்கப்பட்டிருந்த நாட்களிலும் தானியேல் "தான் முன்பு செய்துவந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்" (தானி 6:10). இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும் (பிலிப் 2:10) என்று சொல்லப்பட்டிருக்கிறது. சங் 95:6 சொல்கிறது, "நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக்கடவோம்". ஒலிவமலையில் கெத்சமனே தோட்டத்தில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணினார் (லூக்கா 22:41).

நின்று கொண்டு ஜெபிக்கும் பழக்கம் அந்த நாட்களில் யூதர்கள் மத்தியில் காணப்பட்டது (மாற்கு 11:25, லூக்கா 18:11,13) என்றாலும் முழங்காற்படியிடும் மனிதன் தேவனுக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்துகிறான். தேவனைக் கனம் பண்ணுகிறான். தேவனை மட்டுமே சார்ந்திருக்கிறான் என்பதை உறுதிப்படுத்துகிறான். "கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்" (யாக் 4:10) என்று சொல்லப்பட்டிருக்கிறது. "பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்" (1பேதுரு 5:5). சரீர ரீதியாக நாம் முழங்கால்படியிட்டு நம்மைத் தாழ்த்தலாம். நம்முடைய இருதயத்திலோ மனமேட்டிமை குடியிருக்கலாம். அவர்

"இருதயங்களையும் உள்ளிந்திரியங்களையும் சோதித்தறிகிறவர்" *(சங் 7:9)* என்பதால் ஜெபிக்கும்போது நம்முடைய இருதயம் தேவசமுகத்தில் முழங்காற்படியிட்டிருக்கிறதா என்பதைக் கவனிக்கவேண்டும்.

**நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும் (எபே 3:16)**

ஆறு ஜெபக்குறிப்புகளோடு பவுல் முழங்காற்படியிட்டு பிதாவாகிய தேவனிடம் ஜெபிக்கிறார். அவையாவன.

1. பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு விசுவாசியின் உள்ளான மனிதனையும் பலப்படுத்த *(வசனம் 16)*
2. கிறிஸ்து அவர்களுடைய இருதயத்தில் வாசமாயிருந்து அவர்களை ஆளுகை செய்ய *(வசனம் 17)*
3. விசுவாசிகள் ஒவ்வொருவரும் ஒருவரோடொருவர் அன்பில் நிலைத்திருக்க *(வசனம் 17)*
4. விசுவாசிகள் சபையாக கிறிஸ்துவின் அன்பின் மேன்மையை அறிந்துகொள்ள *(வசனம் 18,19)*
5. சபையார் தேவனுடைய சகல பரிபூரணங்களினாலும் நிறையப்பட *(வசனம் 19)*
6. சபையார் தேவனுடைய மகிமையின் ஐசுவரியத்தைப் பெற்றுக்கொள்ள *(வசனம் 19)*

முதலாவது ஜெபக்குறிப்பு இந்த வசனத்தில் சொல்லப்படுகிறது. பிதாவாகிய தேவன், அவருடைய பரிசுத்த ஆவியானவர் மூலமாக ஒவ்வொரு விசுவாசியினுடைய உள்ளான மனிதனில், (மெய்யான ஆள்தத்துவத்தில், அவனுடைய இருதயத்தில், ஆத்துமாவின் ஆழத்தில், தேவனால் வழங்கப்பட்டு, இப்பொழுது

புதுப்பிக்கப்பட்டிருக்கும் மனிதனுடைய ஆவியில்) பரிசுத்த ஆவி வல்லமையாய் பலப்படவேண்டும் என்று ஜெபிக்கிறார். வழக்கமாக ஏறெடுக்கப்பட்டு நாம் கேட்கும் ஜெபங்களுக்கும் பவுலின் ஜெபத்துக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைக் கவனியுங்கள். நம்முடைய ஜெபமோ ஊழியக்காரர்களாக இருந்தாலும் சரி, விசுவாசிகளாக இருந்தாலும் சரி, உலகரீதியான ஆசீர்வாதங்களின் கண்ணோட்டத்தில்தான் அமைந்திருக்கிறது. அவ்வப்போது பாவத்தினால் உண்டாகும் ஆக்கினைத்தீர்ப்பிலிருந்து விடுதலை பெறுவதற்காகவும், நாமும் நம்மைச் சேர்ந்தவர்களும் நித்திய ஜீவனைப் பெற வேண்டும் என்ற குறிப்புக்காகவும் ஜெபிக்கிறோம். ஆனால் பவுலின் ஆறு ஜெபக்குறிப்புகளுமே நாம் இந்த உலகத்தில் இருக்கும் நாட்களில் பெற்றுக்கொள்ளவேண்டிய ஆவிக்குரிய மேன்மைகளுக்காகவும், தேவ ஐக்கியத்துக்காகவும் மட்டுமே என்று பார்க்கிறோம்.

கிறிஸ்தவர்களாகிய நாம் இன்று புதிய ஜீவனை உடையவர்களாய் இருக்கிறோம் என்றால் அதற்குக் காரணம் நம்முடைய உள்ளான மனிதனில் வாசமாயிருக்கும் பரிசுத்த ஆவியானவரே *(யோவான் 14:17)*. ஜலத்தினாலும், ஆவியினாலும் மறுபடியும் பிறந்த அனுபவத்தை உடையவனே மெய்யான கிறிஸ்தவன் *(யோவான் 3:5,6)*. அவர் வாசமாயிருக்கும் இடமே நம்முடைய உள்ளான மனிதனாகிய ஆத்துமாதான். உள்ளான மனிதன் பலனடைந்தால் மட்டுமே நம்மை எதிர்கொள்ளும் பாவத்தையும், சோதனைகளையும் மேற்கொள்ளமுடியும். மாம்சத்தின்மேல் ஜெயங்கொண்டு, எபேசியர் முதல் மூன்று அதிகாரங்களில் சொல்லப்பட்டிருக்கும் தேவனுடைய நித்திய நோக்கங்களை உலகில் நிறைவேற்ற முடியும்.

*கலாத்தியர் 4:6 சொல்கிறது, "நீங்கள் புத்திரராயிருக்கிற படியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்". 1கொரி 12:13 சொல்கிறது, "நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும் எல்லாரும் ஒரே ஆவியினாலே*

ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்". ரோமர் 8:16 சொல்கிறது, "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார்". ரோமர் 8:9 சொல்கிறது, "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல". **பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையில்லாமல் எந்த ஒரு மனிதனாலும் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழமுடியாது.**

நம்முடைய உள்ளான மனிதனைப் பலப்படுத்த பரிசுத்த ஆவியானவரால் மட்டுமே முடியும். அவர் நமக்குள் வாசமாயிருந்து கிரியை நடத்தும்போது "எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது" (2கொரி 4:16). புறம்பான மனிதன் என்பது நம்முடைய சரீரத்தைக் குறிப்பிடுகிறது. சத்தான உணவுவகைகளை உண்பதாலும், ஆரோக்கியமும் பெலனும் தரக்கூடிய சரீர அப்பியாசங்களினாலும் மருந்து மற்றும் டானிக்குகளை சாப்பிடுவதாலும் நம்முடைய சரீரம் பெலனடைகிறது.

புறம்பான மனிதன் அழிந்துகொண்டிருக்கிறான் என்று சொல்லும்போது ஒவ்வொரு நாளும் அவனுடைய மரணநாள் நெருங்கிக்கொண்டிருக்கிறது என்று பொருள்கொள்ளலாம். இந்த புறம்பான மனிதனுக்கு எதிர்மறையாக உள்ளான மனிதன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. உள்ளான மனிதன் சரீரக் கண்களினால் காணப்படக்கூடாதவன். உள்ளான மனிதன் என்ற வார்த்தை சிருஷ்டிப்பின் நாளில் ஒரு மனிதனில் பதிப்பிக்கப்பட்ட தேவனுடைய சாயல் என்று ஒரு வேத பண்டிதர் குறிப்பிடுகிறார். எபே 4:24ல் உள்ளான மனிதன் புதிய மனுஷன் என்று குறிப்பிடப்படுகிறான். உள்ளான மனிதன் என்ற வார்த்தை உள்ளான வாழ்க்கை என்றும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. எபே 4:22ல் அவன் பழைய மனுஷன் என்று குறிப்பிடப்படுகிறான். அந்த வசனத்தைத் தியானிக்கும்போது அந்த காரியங்களைக் கூடுதலாக அறிந்துகொள்ளலாம்.

உள்ளான மனிதனில் பலப்படவேண்டும் என்று மட்டும் பவுல் ஜெபிக்கவில்லை. வல்லமையாய் (With power, dunamis) பலப்படவேண்டும் என்கிறார். தன்னுடைய முந்தின ஜெபத்தில் "தம்முடைய வல்லமையின் மகாமேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கும், அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டும்" (எபே *1:19*) என்று ஜெபித்ததைப் பார்த்தோம். கொலோ *1:11*ல் சொல்கிறார், "மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம்". தாவீது ஜெபிக்கிறார், "என் ஆத்துமாவிலே பெலன் தந்து என்னைத் தைரியப்படுத்தினீர்" (*சங் 138:3*). ஏசாயா சொல்கிறார், "சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார்" (*40:29*). மீகா சொல்கிறார், "கர்த்தருடைய ஆவி அருளிய பலத்தினாலும், நியாயத்தினாலும் பராக்கிரமத்தினாலும் நிரப்பப்பட்டிருக்கிறேன்" (*3:8*). ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஊழியம் செய்த நாட்களில் அவருக்கு ஆவியானவருடைய பெலன் தேவைப்பட்டது என்று பார்க்கிறோம் (லூக்கா *4:14*). பவுல் சொல்கிறார், "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்கு பெலனுண்டு" (பிலிப் *4:13*).

**விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி (எபே 3:17)**

இரண்டு ஜெபக்குறிப்புகள் இந்த வசனத்தில் காணப்படுகின்றன. துவக்கத்தில் பவுல் சொல்கிறார், "கிறிஸ்து உங்கள் இதயத்தில் விசுவாசத்தின்மூலம் வாழ நான் பிரார்த்தனை செய்கிறேன்" (பரிசுத்த பைபிள் மொழிபெயர்ப்பு) என்பதே இரண்டாவது ஜெபக்குறிப்பு, ஒரு மனிதன் இன்னொருவருடைய இருதயத்தில் வாசமாயிருக்கிறான் என்று சொல்லும்போது, இந்த இருதயத்துக்குச் சொந்தக்காரர் எவ்வளவு தூரம் அவரை நேசிக்கிறார் என்பதையும், அவருக்கு

எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார் என்பதையும் அறிந்துகொள்ளலாம். நம் தேவன் பரலோகத்தில் வாசமாயிருக்கிறவர் (சங் 123:1). இஸ்ரவேலில் வாசமாயிருப்பவர் (எண் 35:34). சீயோனில் வாசமாயிருக்கிறவர் (சங் 9:11). 2நாளா 6:18ல் சாலொமோன் கேட்கிறார், "தேவன் மெய்யாக மனுஷரோடே பூமியிலே வாசம்பண்ணுவாரோ? இதோ, வானங்களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே". ஏசாயா 57:15ல் இவ்வாறு வாசிக்கிறோம், "நித்தியவாசியும், பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்கிறார்: உன்னதத்திலும், பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம் பண்ணுகிறேன்". சர்வவல்லமையுள்ள தேவன் நமக்குள் வாசமாயிருக்கிறார் என்பது எவ்வளவு பெரிய சிலாக்கியம் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

கிறிஸ்து தான் இந்த உலகில் இருந்த நாட்களில் இந்த மேன்மையை நமக்கு வாக்குபண்ணியிருக்கிறார். யோவான் 14:23ல் அவர் சொல்கிறார், "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்". வெளி 3:20ல் அவர் சொல்கிறார், "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்." இந்த அனுபவத்தையே பவுல், "கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" (கலா 2:20) என்று குறிப்பிடுகிறார். "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்" (கொலோ 1:27). 1யோவான் 3:24 சொல்கிறது, "அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான், அவரும் அவனில் நிலைத்திருக்கிறார், அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே அறிந்திருக்கிறோம்".

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சபையாரின் இருதயத்தில் வாசமாயிருக்கவேண்டுமென்று பவுல் ஜெபிக்கிறார். இருதயம் என்ற வார்த்தை நம்முடைய மார்புக்குள் இருந்து ஒவ்வொரு வினாடியும் துடித்துக்கொண்டு இரத்தக்குழாய்கள் மூலமாக இரத்தத்தை சரீரத்தின் ஒவ்வொருபகுதிக்கும் அனுப்பிக்கொண்டிருக்கும் பந்துபோன்ற சரீர உறுப்பை அல்ல, ஒரு மனிதனுடைய நினைவுகள், சித்தம், உணர்ச்சிகள், எண்ணங்கள், விருப்பு வெறுப்புகள் உள்ளடக்கிய ஆள்தத்துவத்தைக் குறிப்பிடுகிறது.

"வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும்; அவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலை பாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டு வரும்" *(மத் 15:18,19)*. ஒரு மனிதன் எவ்வாறு வாழ்கிறான் என்பதை அவனுடைய இருதயமே நிர்ணயம் பண்ணுகிறது என்பதால்தான் தாவீது ஜெபிக்கிறார், "தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்". எரேமியா *32:40* வாசித்துப் பாருங்கள். ஒருவனுடைய இருதயமே அவனுடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் மையமாக அமைகிறது *(பிலிப் 1:7, 1தீமோ 1:5)*. இருதயத்தில் விசுவாசிப்பதால் மட்டுமே இரட்சிப்பு உண்டாகிறது *(ரோமர் 10:8,9)*. மத்தேயு *22:37*ல் கிறிஸ்து முழு இருதயத்தோடு தேவனில் அன்புகூரும்படியாகச் சொல்கிறார். சங் *51:17* சொல்கிறது, "நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை தேவன் புறக்கணிப்பதில்லை".

கிறிஸ்து நம்முடைய இருதயங்களில் வாசமாயிருப்பதை நம்முடைய சரீர கண்களினால் காணமுடியாது. ஆனால் விசுவாசத்தின்மூலமாக தேவன் நமக்குள் வாசமாயிருப்பதை நாம் அறிந்துகொள்ளமுடியும் என்பதாக பவுல் பேசுகிறார். விசுவாசம் "காணப்படாதவைகளின் நிச்சயம்" *(எபி 11:1)* விசுவாசம் என்பது ஒரு தனிமனிதன் தன்னை சிருஷ்டித்த சர்வவல்லமையுள்ள தேவனோடு கொண்டுள்ள நெருக்கமான உறவாகும்.

எபேசு சபையார் அன்பில் வேரூன்றி நிலைபெற்றவர்களா-யிருக்கவேண்டும் என்பது பவுலின் **மூன்றாவது** ஜெபக்குறிப்பு. விசுவாசத்தின் மேன்மையைக் குறிப்பிட்ட பவுல் உடனடியாக அன்பைப் பற்றி பேசுகிறார். ஏனென்றால் அன்பின் மூலமாக மட்டுமே விசுவாசம் செயல்படவேண்டும் என்பது தேவனுடைய நியதி. பவுல் சொல்கிறார், "விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்" *(கலா 5:6)*. "மலைகளைப் பேர்க்கத்தக்கதாகச் சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும் அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை" *(1கொரி 13:2)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. **கிறிஸ்தவனுடைய வாழ்க்கை அன்பினால் கட்டப்பட்டு எழுப்பப்படவேண்டும் என்பது மட்டுமல்ல, அதில் வேரூன்றியிருக்கவேண்டும்.** அன்பு ஒரு மேலோட்டமான அனுபவமாக இராமல் ஆழமான, உறுதியான, நிலையான அனுபவமாக இருக்கவேண்டும். ஒரு மரத்தின் வேர் எந்த அளவு ஆழத்தில் பிரவேசித்திருக்கிறதோ, அந்த அளவுக்கு அதின் வளர்ச்சி உண்டாகியிருக்கும். ஒரு மனிதன் இரட்சிக்கப்பட்டதும் அவனுடைய வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் விளைவிக்கும் முதல் கனி அன்பு *(கலா 5:22)*. தேவனுடைய அன்பைக்குறித்து ஏற்கெனவே எபே 2:4,5ல் தியானித்திருப்பதை நினைவுபடுத்திக்கொள்ளுங்கள். தேவனிடமும் நாம் அன்பு செலுத்தவேண்டும். நம்மோடிருக்கும் சகோதர சகோதரிகளோடும் அன்புள்ளவர்களாயிருக்கவேண்டும்.

"நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது" என்று தன்னிடம் வந்து கேட்ட நியாயசாஸ்திரியிடம் கிறிஸ்து சொல்கிறார், "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக. இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது" *(மத் 22:37-40)*. பவுல்

சொல்கிறார், "உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக, என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும்" (கலா 5:14). மாற்கு 12:28-34, லூக்கா 10:25-28 வாசித்துப் பாருங்கள். "பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான். எப்படியென்றால், விபசாரம் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக, இச்சியாதிருப்பாயாக என்கிற இந்தக் கற்பனைகளும், வேறே எந்தக் கற்பனையும் உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்கிற ஒரே வார்த்தையிலே தொகையாய் அடங்கியிருக்கிறது" (ரோமர் 13:8,9).

1யோவான் 3:16ல் யோவான் தேவனுடைய அன்பையும், நாம் ஒருவர்மேல் ஒருவர் பாராட்டவேண்டிய அன்பையும் குறித்து இவ்வாறு சொல்கிறார், "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்". யோவான் 3:16, எரே 31:3, யோவான் 15:9 வாசித்துப் பாருங்கள்.

1யோவான் 4:8-11 சொல்கிறது, "அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார். தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. பிரியமானவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம்".

அன்பின் மேன்மையை அறிவிக்கும் 1கொரிந்தியர் 13-வது அதிகாரத்தின் கடைசி வசனம் இவ்வாறு சொல்கிறது, "இப்பொழுது

விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது". "தேவன் அன்பாகவே இருக்கிறார்" *(1யோவான் 4:8,16)* என்பதால் அன்பைவிட வல்லமையான சக்தி உலகில் இருக்கமுடியாது.

**சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து (எபே 3:18)**

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் அன்பின் மேன்மையையும் மகத்துவத்தையும் எபேசு சபையார் அறிந்துகொள்ளவேண்டும் என்பதுதான் பவுலின் நான்காவது ஜெபக்குறிப்பு. அந்த அன்பு நம்முடைய ஞானத்தினால் அறிந்துகொள்ளக்கூடாதது என்பது அடுத்த வசனத்தின் துவக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் அன்பின் அகலம், நீளம், ஆழம், உயரம் ஆகிய பரிமாணங்களை பரிசுத்தவான்களோடு (தனிப்பட்ட விதத்தில் மட்டுமல்ல) எபேசு சபையார் அறிந்துகொள்வது அவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும் என்பதே பவுலின் நம்பிக்கை.

தன்னுடைய அன்பைக் குறித்து கிறிஸ்து யோவான் 15:9ல் இவ்வாறு பேசுகிறார், "பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்". எனவே கிறிஸ்துவின் சம்பூரணமான அன்பை உணர்ந்துகொள்கிறவர்கள் தேவனை நிச்சயமாக அறிந்துகொள்ள முடியும். சகல பரிசுத்தவான்களோடு அவருடைய அன்பை அறிந்துகொள்ளவேண்டும் என்கிறார் பவுல். கிறிஸ்தவம் என்பது இரகசியமாகவோ, தனிப்பட்ட விதத்திலோ, ஒரு குடும்பம் என்ற அமைப்புக்குள்ளோ இருந்துகொண்டு, தேவனுடன் கொண்டிருக்க வேண்டிய ஐக்கியம் அல்ல. சகல பரிசுத்தவான்களோடும் ஒருவரோடொருவர் அன்பில் ஐக்கியங் கொண்டவர்களாய் தேவனுடைய அன்பை அறிந்து உணர்ந்து கொள்ளவேண்டும். சபை ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கம் அதுதான். அதனால்தான் சபைகூடுதலை விட்டுவிடாமல் இருக்கவேண்டும் என்ற ஆலோசனை

தரப்பட்டிருக்கிறது (எபி 10:25). சபையாராக, கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்களாக மட்டுமே கிறிஸ்துவின் அன்பை முழுமையாக அறிந்துகொள்ள முடியும். அதை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தவும் முடியும். அன்பற்ற சபை தேவனுடைய சபையாக இருக்கமுடியாது.

எபே 1:4ல் நாம் பார்த்தபடி "உலகத் தோற்றத்துக்கு முன்பே" கிறிஸ்துவின் அன்பு நமக்காக வெளிப்பட்டது. அந்த அன்பு நித்தியம் வரை, உன்னதங்களில் அவரோடு நாம் உட்காரும் வரை நிலைத்திருக்கிறது. அவருடைய அன்பின் பரிமாணங்களாக அகலம், நீளம், ஆழம், உயரம் ஆகியவற்றை அளந்துகொள்ளும்படியாக பவுல் சொல்லவில்லை, உணர்ந்துகொள்ளும்படியாக மட்டுமே சொல்கிறார். ஏனென்றால் யாராலும் தேவனுடைய அன்பை அளக்க முடியாது.

தேவனுடைய மகிமையை அடைந்து, பரலோகத்திலிருந்து இறங்கிவரும் புதிய எருசலேம் நீளமும் அகலமும் உயரமும் பன்னீராயிரம் ஸ்தாதி (1500 மைல்) இருந்ததாக அளவிடப்பட்டு வெளி 21:16ல் சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் அன்புக்கு ஆழம் என்ற நான்காவது பரிமாணமும் சேர்த்துச் சொல்லப்படுகிறது என்பது மட்டுமல்ல, அந்த நான்கு பரிமாணங்களும் எவ்விதத்திலும் அளவிடப்படவில்லை. அவை அளவிடப்படமுடியாதவை. தேவனுடைய அந்தரங்க ஞானத்தை அளவிடமுடியாது என்பதால் நாகமாத்தியனாகிய சோப்பார் சொல்கிறார், "அது வானபரியந்தம் உயர்ந்தது, ... அது பாதாளத்திலும் ஆழமானது ... அதின் அளவு பூமியைப்பார்க்கிலும் நீளமும், சமுத்திரத்தைப் பார்க்கிலும் அகலமுமாயிருக்கிறது" (யோபு 11:8,9). அவருடைய அன்பும் வானபரியந்தம் உயர்ந்ததாயும், பாதாளத்திலும் ஆழமானதாயும், பூமியைப் பார்க்கிலும் நீளமானதாயும், சமுத்திரத்தைப் பார்க்கிலும் அகலமானதாயும் இருக்கும் என்று நிதானிக்கலாம்.

யோவான் 3:16ல் தேவனுடைய அன்பு இவ்விதமாய் சொல்லப்படுகிறது. "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய்

உலகத்தில் அன்பு கூர்ந்தார்". இந்த வசனத்தில் "இவ்வளவாய் அன்புகூர்ந்தார்" என்ற பகுதி தேவனுடைய அன்பின் அகலத்தையும், "தன் ஒரே பேறான குமாரன்" என்கிற பகுதி அவருடைய அன்பின் நீளத்தையும், "விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல்" என்ற வேதபகுதி அந்த அன்பின் ஆழத்தையும், "நித்திய ஜீவனை அடையும்படிக்கு" என்ற வேதபகுதி அவருடைய அன்பின் உயரத்தையும் குறிப்பிடுவதாக இருக்கிறது என்று ஒரு வேதபண்டிதர் தெரிவிக்கிறார்.

*1யோவான் 4:10ல் இவ்விதமாக வாசிக்கிறோம், "நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது".* எப்பிராயீமை அவர் தன்னுடைய சொந்தக் குமாரன் என்ற முறையில் நேசித்தார். அவனோ தேவனைப் புறக்கணித்து அசீரியரோடும் எகிப்தியரோடும் ஐக்கியம் கொள்ள ஆரம்பித்தான். உபா 21:18 ன்படி கீழ்ப்படியாமலும் அடங்காததுமான துஷ்டப்பிள்ளைகள் கல்லெறிந்து கொல்லப்படவேண்டும். தன்னுடைய மிகுந்த அன்பினிமித்தம் அவனைத் தண்டிக்க விரும்பாமல் தேவன் புலம்புகிறார், *"எப்பிராயீமே, நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்? இஸ்ரவேலே, நான் உன்னை எப்படி ஒப்புக்கொடுப்பேன்? நான் உன்னை எப்படி அத்மாவைப் போலாக்குவேன்? உன்னை எப்படி செபோயீமைப் போல வைப்பேன்?" (அத்மாவும், செபோயீமும் கானான் எல்லையிலிருந்த பட்டணங்கள்-ஆதி 10:19. சோதோம் கொமோராவை கர்த்தர் கந்தகத்தாலும் அக்கினியாலும் அழித்தபோது இந்த பட்டணங்களும் முற்றிலுமாக நிர்மூலமாக்கப்பட்டன-உபா 29:23). "என் இருதயம் எனக்குள் குழம்புகிறது; என் பரிதாபங்கள் ஏகமாய்ப் பொங்குகிறது" (ஓசியா 11:8).*

*எரேமியா 31:20ல் தேவன் வேதனையோடு பேசுகிறார், "எப்பிராயீம் எனக்கு அருமையான குமாரன் அல்லவோ? அவன் எனக்குப் பிரியமான பிள்ளையல்லவோ? அவனுக்கு விரோதமாய்ப்*

பேசினது முதல் அவனை நினைத்துக்கொண்டே இருக்கிறேன்; ஆகையால் என் உள்ளம் அவனுக்காகக் கொதிக்கிறது; அவனுக்கு உருக்கமாய் இரங்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்". இத்தகைய அன்பை இந்த நாட்களில் நம்முடைய குடும்பங்களில் காணமுடிகிறதா என்பதை யோசித்துப் பாருங்கள். மகத்துவமான இந்த தெய்வீக அன்பை அனுதினமும் தியானிக்க இன்று ஒரு தீர்மானம் எடுப்பீர்களா? தேவனுடைய அன்பை உணர்ந்து கொள்ளாத நிலையில் ஒருவனாலும் தேவனை அறிந்துகொள்ள முடியாது.

**அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தினாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டு-மென்று வேண்டிக்கொள்ளுகிறேன். (எபே 3:19)**

அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாக வேண்டும் என்பது முந்தின வசனத்தில் சொல்லப்பட்ட நான்காவது ஜெபக்குறிப்பின் தொடர்ச்சியாக அமைகிறது. அறிவுக்கெட்டாதது என்று சொல்லும்போது விளங்கிக்கொள்ள முடியாத, புரிந்துகொள்ள முடியாத ஒரு காரியம் என்று பொருள் கொள்ளவேண்டும். மனித அறிவு குறைவுபட்டது. அதனால் கிறிஸ்துவின் அன்பை முழுமையாக நாம் அறிந்துகொள்ள முடிவதில்லை என்பது ஒரு காரணம். அவருடைய அன்பைச் சொல்வதற்கு ஆயிரம் நாவுகள் போதாது, அந்த அன்பை ஆராய்ந்து அறிய ஆயிரம் ஆண்டுகள் போதாது என்கிறார் ஒரு பரிசுத்தவான்.

பலவேளைகளில் நம்மால் நம்மேல் அன்புகூறவே முடியாமல் இருக்கிறது. அப்படி இருக்கும் நிலையில் சர்வ வல்லமையுள்ள தேவன் நம்மேல் அன்பு கூற வேண்டிய அவசியம் என்ன என்பதை நாம் புரிந்துகொள்ள முடியாதவர்களாக இருக்கிறோம். 1யோவான் 4:19 சொல்கிறது, "அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம்". அவர் முந்தி நம்மில் அன்புகூரவேண்டிய அவசியம் என்ன என்பது நம்முடைய

அறிவுக்கெட்டாத காரியமாக இருக்கிறது. யோவான் 13:1 சொல்கிறது, "இயேசு இவ்வுலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும் படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்த படியே, முடிவு பரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார்". இவ்வாறு கிறிஸ்து முடிவுபரியந்தம் ஏன் அன்பு கூர்ந்தார் என்பது அறிவுக்கெட்டாத இரண்டாவது காரியமாய் இருக்கிறது.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் அன்பின் மேன்மையை வார்த்தைகளில் விவரிக்கவே முடியாது. அவர் நம்மேல் வைத்திருக்கும் அன்பை எந்த வல்லமையினாலும் மாற்ற முடியாது. நாம் நம்மை எந்த அளவுக்கு நேசிக்கிறோமோ அதைவிட பலகோடி மடங்கு அதிகமாக அவர் நம்மை நேசிக்கிறார். அந்த அன்பினிமித்தமே, நம்மை மீட்டுக்கொள்ளும்படியாக "தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரண பரியந்தமும், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" (பிலிப் 2:7,8). அப்படியிருந்தும் மனித இனம் அவருடைய அன்பை அங்கீகரிக்கவில்லை. மனிதர்கள் அவரை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பது மட்டுமல்ல, அவரைப் புறக்கணித்து, வெறுப்பார்கள் என்பதையும் அவர் அறிவார். அதினிமித்தம் அவர்கள் தனக்கு என்னவெல்லாம் செய்வார்கள் என்பதையும் அவர் அறிவார். "அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்" (ஏசாயா 53:3) என்று வாசிக்கிறோம். அவரை நாம் அசட்டை பண்ணினோம். அவரைப் புறக்கணித்தோம். ஆனாலும் அவருடைய அன்பு குறைவுபடவில்லை. இந்த அளவுக்கு அவர் ஏன் அன்பு கூர்ந்தார் என்பது அறிவுக்கெட்டாத மூன்றாவது காரியமாய் இருக்கிறது.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நமக்காக அனுபவித்த பாடுகளை சற்று நினைவுபடுத்திப் பாருங்கள். கெத்செமனே தோட்டத்தில் அதனிமித்தம் "திகிலடையவும், மிகவும்

வியாகுலப்படவும் தொடங்கினார்" (மாற்கு 14:33) என்று வாசிக்கிறோம். "என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது" (மத் 26:38) என்பது சர்வவல்லமையுள்ள தேவகுமாரனுடைய வார்த்தை. அவர் ஜெபம் பண்ணும்போது "அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது" (லூக்கா 22:44). அவரோடிருந்த சீஷனால் முப்பது வெள்ளிக்காசுக்காக காட்டிக்கொடுக்கப்பட்டு, ஒரு கள்ளனைப்போல இயேசுகிறிஸ்து சிறைப்பிடிக்கப்பட்டார். ஏசாயா 53:7 சொல்கிறது, "அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்".

"அவருடைய முகத்தில் துப்பினார்கள். அவரைக் குட்டினார்கள். அவரை கன்னத்தில் அறைந்தார்கள்" (மத் 26:67) வாரினால் அடித்தார்கள் (மத் 27:26). வஸ்திரங்களைக் கழற்றி, சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, முள்ளுகளினால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின்மேல் வைத்து, அவர் வலதுகையில் ஒரு கோலைக் கொடுத்து பரியாசம் பண்ணினார்கள் (மத் 27:28,29). இரண்டு கள்ளர்களோடு சிலுவையில் அறைந்து அவருடைய வஸ்திரங்களைப் பங்குபோட்டுக்கொண்டார்கள் (மத் 27:35). "நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கி வா என்று அவரை தூஷித்தார்கள்" (மத் 27:40). மனித இனத்தின் பாவங்களைத் தன்மேல் ஏற்றுக்கொண்டதனிமித்தம் பிதாவாகிய தேவனால் கைவிடப்பட்டார் (மத் 27:46). இவைகள் மத்தியிலும் அவர் பிதாவிடம் ஜெபிக்கிறார், "பிதாவே இவர்களுக்கு மன்னியும்" (லூக்கா 23:34) இந்த அறிவுக்கெட்டாத அன்பை சபையாராகிய நாம் அறிந்து கொள்ள வல்லவர்களாக வேண்டுமென்றுதான் பவுல் ஜெபிக்கிறார்.

ஐந்தாவது ஜெபக்குறிப்பு இந்த வசனத்தில் சொல்லப்படுகிறது. சபையார் தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவேண்டும் என்று பவுல் ஜெபிக்கிறார். "அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபை

பெற்றோம்" (யோவான் 1:16) என்று வாசிக்கிறோம். கிறிஸ்துவினுடைய அறிவுக்கெட்டாத அன்பை அறிந்துகொள்ள வேண்டுமானால் ஒருவன் தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் (Fullness of God) நிறையப்பட்டிருக்கவேண்டும். தேவனுடைய சகல பரிபூரணமும் என்று பவுல் சொல்லும்போது, பிதா குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய திருத்துவதேவன் ஒரு விசுவாசிக்குள் வாசமாயிருக்கும் அனுபவத்தைக் குறிப்பிடுவதாக வேத பண்டிதர்கள் கருதுகிறார்கள்.

"நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்" (யோவான் 14:16) என்கிறார் இயேசு. நம்முடைய வேண்டுதலின் பேரில் அல்ல, நம்முடைய தகுதியின் அடிப்படையில் அல்ல, நாம் எதையோ செய்யப்போகிறோம் என்பதால் அல்ல, கிறிஸ்துவின் ஜெபத்தினால் என்றென்றைக்கும் ஆவியானவர் நமக்குள் வாசமாயிருக்கிறார். அதே அதிகாரம் 23வது வசனத்தில் கிறிஸ்து சொல்கிறார், "அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்". எவரும் காணக்கூடாத ஒளியில் வாசமாயிருக்கும் பரிசுத்த பிதா நமக்குள் வாசமாயிருக்கிறார். தன் ஒரே பேறான குமாரன்மேல் மனித இனத்தின் பாவம் சுமத்தப்பட்டபோது அவரைக் கைவிட்டு (மத் 27:46), தன்னுடைய முகத்தை மறைத்துக்கொண்ட தேவன் நீசபாவிகளாகிய நமக்குள் தன்னுடைய குமாரனின் நிமித்தம் வாசம் பண்ணுகிறார்.

ஏற்கெனவே 16-வது வசனத்தில் முதலாவது ஜெபக்குறிப்பாக பரிசுத்த ஆவியானவரால் உள்ளான மனிதன் வல்லமையாய் பலப்படவேண்டும் என்றும் 17-வது வசனத்தில் இரண்டாவது குறிப்பாக கிறிஸ்து இருதயங்களில் வாசமாயிருக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டதைப் பார்த்தோம். பிதாவாகிய தேவனும் கிறிஸ்துவோடு இணைந்து ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் கிரியை நடத்தும்போது மட்டுமே சகல சம்பூரணங்களின் நிறைவும் உண்டாகிறது. கொலோ 2:9ல் "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக

அவருக்குள் (கிறிஸ்துவுக்குள்) வாசமாயிருக்கிறது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. கொலோ 1:19ம் இதை உறுதிப்படுத்துகிறது. கிறிஸ்துவுக்குள் ஒவ்வொரு விசுவாசியும் இந்த மேன்மையைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று பவுல் வாஞ்சிக்கிறார்.

தேவனுடைய சகல பரிபூரணத்தினாலும் நிறையப்பட வேண்டுமானால், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் நமக்குள் வாசமாயிருக்கவேண்டுமானால், நம்முடைய பாத்திரத்தைக் காலியாகவும், பரிசுத்தமாகவும் வைத்துக்கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. அதை பாவம், அசுத்தம், அவிசுவாசம், பெருமை முதலியவற்றால் நிரப்பி வைத்திருப்போ-மானால் தேவனுடைய பரிபூரணங்களை அனுபவிக்கமுடியாது. ஜெபத்திலும், வேத வசனங்களைத் தியானிப்பதன் மூலமாகவும், சாட்சியின் ஜீவியத்தினாலும் நம்முடைய ஆவி ஆத்துமா சரீரம் பரிசுத்தமாக காத்துக்கொள்ளப்படவேண்டும். தன்னுடைய மலைப்பிரசங்கத்தில் இயேசு சொல்கிறார், "நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தி-யடைவார்கள்" (மத் 5:6). நீதியின்மேல் நாம் எந்த அளவுக்கு வாஞ்சையாயிருக்கிறோமோ அந்த அளவுக்கு தேவனுடைய சகல பரிபூரணங்களினாலும் நிரப்பப்படுவோம். "மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்" (2கொரி 3:18) என்று பவுல் இந்த அனுபவத்தைக் குறிப்பிடுகிறார்.

ஆறாவது ஜெபக்குறிப்பாக பவுல், தேவன் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படி (Riches of His Glory) சபையாருக்கு அனுக்கிரகம் பண்ணவேண்டுமென்று ஜெபிக்கிறார். நம்முடைய ஜெபத்தை தேவன் கேட்டு அதற்கு பதில் தருவார் என்று நமக்கு எப்படி தெரியும்? தேவன் நம்முடைய பெலவீன நேரத்தில் தன்னுடைய வல்லமையைத் தருவார் என்று நமக்கு எப்படி தெரியும்? இந்த வசனத்தின்படி தேவனுடைய மகிமையின் ஐசுவரியம் நமக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிறது. "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே

பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" *(எபே 1:7)* என்று பார்த்தோம். "அவருடைய தயவு, பொறுமை, நீடிய சாந்தம் இவைகளின் ஐசுவரியத்தைக்" குறித்து ரோமர் *2:4*ல் சொல்லப்பட்டிருக்கிறது. அதனால்தான் பிலிப் *4:19*ல் பவுல் ஜெபிக்கிறார், "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்".

**நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு (எபே 3:20)**

அப்போஸ்தலனாகிய பவுல், சபையாருக்காக தேவனிடம் வேண்டுதல் செய்த ஆறு ஜெபக் குறிப்புகளையும் இதுவரை தியானித்தோம். நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் மிகவும் அதிகமாக கிரியை நடத்த தேவனுடைய வல்லமை போதுமானதாக இருக்கிறது என்று பவுல் இங்கே சொல்கிறார். அதுமட்டுமல்ல, சில காரியங்களை வேண்டிக்கொள்ள தயக்கமுடையவர்களாய் அதை நம்முடைய மனதில் வைத்துக்கொண்டிருப்போம். வெளியே சொல்லமாட்டோம். சர்வ வல்லமையுள்ள தேவன் நம்முடைய நினைவுகளையும் அறிவார். தாவீது சொல்கிறார், "என் நாவில் சொல் பிறவாததற்கு முன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர்" *(சங் 139:4)*.

நம்முடைய நினைவுகளை அறிந்த தேவன் அதை நிறைவேற்ற வல்லவர். யோபு சொல்கிறார், "தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர், நீர் செய்ய நினைத்தது தடைபடாது. என்பதை அறிந்திருக்கிறேன்" *(42:2)*. "வானத்திலும் பூமியிலும் சமுத்திரங்களிலும், எல்லா ஆழங்களிலும் கர்த்தர் தமக்குச் சித்தமானதையெல்லாம் செய்கிறார்" *(சங் 135:6)*. அவர் "நம்மை ஸ்திரப்படுத்த வல்லவர்" *(ரோமர் 16:26)*. "தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை" *(லூக்கா 1:37)*.

பவுலின் ஜெபத்தைத் தொடர்ந்து அதிகாரத்தின் கடைசி இரண்டு

வசனங்களும் பவுலின் புகழ்பாடலாக (doxology) அமைகிறது. தேவனைப் புகழ்ந்து பாடியதைத் தொடர்ந்து அடுத்த அதிகாரம் துவங்கி தான் இதுவரை போதித்த சத்தியத்தை சபையார் எவ்வாறு தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் நடத்திக்காட்டவேண்டும் என்ற ஆலோசனைகள் வழங்கப்படுகிறது. சத்திய உபதேசங்களையும், ஆலோசனைகளையும் அறிந்திருந்தால் மட்டும் போதாது. அவற்றை மேடைகளில் இருந்து மற்றவர்களுக்குப் போதித்தால் மட்டும் போதாது. அவற்றை வாழ்ந்து காட்டவேண்டும்.

ஐந்து முக்கியமான சத்தியங்களை இந்த வசனம் அறிவிக்கிறது.

1. நாம் வேண்டிக்கொள்ளுவதை எல்லாம் செய்ய தேவனால் முடியும்.

2. நாம் வேண்டிக்கொள்ள தைரியம் இல்லாதவர்களாய் மனதில் கற்பனை செய்யும் காரியங்களையும் தேவனால் செய்ய முடியும்.

3. அதற்கும் அதிகமாக செய்யவும் தேவனால் முடியும்.

4. அதற்கும் மிகவும் அதிகமாயும் செய்யும் வல்லமையும் அவருக்கு உண்டு.

5. ஏனென்றால் அவர் நமக்குள்ளே நம் உள்மனதில் கிரியை செய்கிற தேவன்.

எபே *1:19*ல் "தமது பலத்த சத்துவத்தின் வல்லமையின்படியே" என்று எழுதிய பவுல் இங்கே இந்த வசனத்தில் "நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே" என்று சொல்வதைக் கவனியுங்கள். அந்த வல்லமை நமக்கு வெளியே இருந்து வருவதில்லை. இந்த வல்லமை நமக்குள் வாசமாயிருக்கும் பரிசுத்த ஆவியானவரையே குறிப்பிடுகிறது. "வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை

மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவர்" (யூதா 24) என்று அவர் குறிப்பிடப்படுகிறார். அவர் கிறிஸ்துவின் ஜெபத்தின் அடிப்படையில் நம்மிடம் வாசம் பண்ணி நமக்குள்ளே கிரியை நடத்திக்கொண்டு இருக்கிறார் (யோவான் 16:14, 16,17). அவருடைய வல்லமையை வார்த்தையினால் விவரிக்கமுடியாது. சொல்லப் போனால் கற்பனை செய்துகூட பார்க்கமுடியாது. சிம்சோனின் கையிலிருந்த கழுதையின் தாடையெலும்பினால் ஆயிரம் பெலிஸ்தரைக் கொல்லும் வல்லமை அவரிடமிருந்து வெளிப்பட்டது என்று பார்க்கிறோம் (நியா 15:15). மோசேயின் கையிலிருந்த கோலை (யாத் 4:2) செங்கடலை இரண்டாகப் பிளக்கும் வல்லமையை உடையதாக தேவன் மாற்றினார் (யாத் 14:16). தாவீதின் கையில் வெளிப்பட்ட கூழாங்கல் பெலிஸ்திய தேசத்து கோலியாத்தை ஒரு நிமிடத்தில் முகங்குப்புற விழவைத்தது (1சாமு 17:49).

**சபையிலே இயேசு கிறிஸ்துவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென். (எபே 3:21)**

பிதாவாகிய தேவன் ஏன் நம்முடைய ஜெபத்தைக் கேட்கிறார். நாம் வேண்டிக்கொள்வதற்கும் நினைக்கிறதற்கும் மேலாக நம்மில் கிரியை நடத்துகிறார் என்பதற்கான காரணம் இந்த வசனத்தில் சுருக்கமாக அறிவிக்கப்படுகிறது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் அவருடைய திருச்சபையில் தலைமுறை தலைமுறையாக, நித்தியம் நித்தியமாக அவர் மகிமைப்படவேண்டும் என்பதற்காகவே. சபையானது ஒருவகையில் தேவனுடைய மணிமகுடமாக இருக்கிறது. அந்த சபையிலே கிறிஸ்து மூலமாக உண்டாகும் மகிமையை மட்டுமே தேவன் ஏற்றுக்கொள்கிறார், அதனால் மகிமைப்படுகிறார் (யோவான் 13:31).

தேவன் ஒருவரே சகல மகிமைக்கும் பாத்திரர். "அவருடைய மகிமை பூமிக்கும், வானத்திற்கும் மேலானது" (சங் 148:13) என்பதால் அந்த சங்கீதக்காரன் அதில் தேவனுடைய தூதரையும், சேனைகளையும், சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும், வானங்களையும்,

தண்ணீரையும், மிருகங்களையும், மச்சங்களையும், அக்கினியையும், கல்மழையையும், உறைந்த மழையையும், மூடுபனியையும், பெருங்காற்றையும், மலைகளையும், மேடுகளையும், மரங்களையும், காட்டு மிருகங்களையும், நாட்டு மிருகங்களையும், ஊரும் பிராணிகளையும், பறவைகளையும், பூமியின் ராஜாக்களையும், ஜனங்களையும், பிரபுக்களையும், நியாயாதிபதிகளையும், வாலிபரையும், கன்னிகைகளையும், முதிர்வயதுள்ளோரையும் தேவனை மகிமைப்படுத்தித் துதிக்கும்படியாகச் சொல்கிறார்.

நாசியில் சுவாசமுள்ள பாவமனிதனை, நித்தியவாசியும், பாவத்தை அறியாதவருமாகிய இயேசு கிறிஸ்துவோடு சபை என்ற அமைப்புக்குள் கொண்டு வந்து இணைத்த காரியமே நித்திய நித்தியமாக பிதாவாகிய தேவனுக்கு மகிமையைக் கொண்டு வருவதாக இருக்கிறது.

# அதிகாரம் 4

எபேசியர் 4-வது அதிகாரத்தின் துவக்கத்திலிருந்து நிருபத்தின் இரண்டாவது பகுதிக்குள் நாம் பிரவேசிக்கிறோம். நம்முடைய அழைப்பையும் விசுவாசத்தின் மூலமாய் கிருபையினால் உண்டான மேன்மையான இரட்சிப்பைக்குறித்த சத்தியங்களையும் இதுவரையிலும் அறிவித்த பவுல், கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய அனுதின வாழ்க்கையில் எவ்வாறு நடக்கவேண்டும் என்பதையும், சபையிலும், சமுதாயத்திலும், குடும்பத்திலும், வேலைஸ்தலத்திலும் நாம் அனுசரிக்கவேண்டிய விதிமுறைகள் என்ன என்பதைப் பற்றியும் இந்த அதிகாரம் துவங்கி அறிவிக்கிறார். முதல் வசனத்திலேயே "நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரராக நடந்து" ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்ளவேண்டும் என்கிறார். விசுவாசிகளின் "நடத்தையைக்" குறித்து இந்த நிருபத்தில் ஏழு இடங்களில் பவுல் பேசுவதைப் பார்க்கிறோம் *(2:2,10; 4:1,17; 5:2,8,15)*.

மறுபடியும் பிறந்து இரட்சிக்கப்பட்டு, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அங்கமாகிவிட்ட நாம் உடனடியாக பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. அவ்வாறு நாம் எடுத்துக்கொள்ளப்-படக்கூடாது என்பதுதான் கிறிஸ்துவின் ஜெபம். யோவான் 17:15 வாசித்துப் பாருங்கள். ஏனென்றால் நாம் அவருடைய ஊழியத்தை இங்கிருந்தவாறு செய்யவேண்டுமென்பதே தேவனுடைய விருப்பம்.

1. *அவருடைய அழைப்புக்குப் பாத்திரராக நல்நடத்தையுள்ளவர்களாய் காணப்படவேண்டும் (எபே 4:1-6).*

2. *தேவன் தந்த கிருபைகளையும் வரங்களையும் பயன்படுத்தி நடக்கவேண்டும் (எபே 4:7-16).*

3. *தேவனற்ற புறஜாதியாரைப்போல் வீணான சிந்தையோடு நடக்கக்கூடாது (எபே 4:17-21).*

4. *பழைய மனிதனைக் களைந்துபோட்டு புதிய மனிதனைத் தரித்துக்கொண்டவர்களாய் நடக்கவேண்டும் (எபே 4:22-32).*

5. *தேவனை மட்டுமே பின்பற்றி நடக்கவேண்டும் (எபே 5:1-7).*

6. *வெளிச்சத்தின் பிள்ளைகளாக நடக்கவேண்டும் (எபே 5:8-14).*

7. *ஞானமற்றவர்களாக நடவாமல், கவனமாய் ஸ்தோத்திரத்தோடும் தெய்வபயத்தோடும் நடக்க வேண்டும் (எபே 5:15-21).*

8. *குடும்பத்தில் கணவனும் மனைவியும் ஒருவரில் ஒருவர் அன்புகூர்ந்து நடக்கவேண்டும் (எபே 5:22,23).*

9. *பெற்றோரும் பிள்ளைகளும் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் (எபே 6:1-4).*

10. *வேலை ஸ்தலத்தில் வேலை செய்கிறவர்களும் எஜமானர்களும் கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் என்ற முறையில் நடக்கவேண்டும் (எபே 6:5-9).*

சுருக்கமாகச் சொல்வதானால், கிறிஸ்தவர்களாகிய நம்முடைய வாழ்க்கையில் நாம் பெற்றுக்கொண்ட இரட்சிப்பின் விளைவாக ஒரு மாற்றம் இருக்கவேண்டும். கிறிஸ்துவுக்குள் வருவதற்குமுன் நாம் எவ்வாறு இருந்தோம், கிறிஸ்துவுக்குள் வந்தபின் நாம் எவ்வாறு இருக்கிறோம் என்ற வித்தியாசத்தை நம்மைச் சுற்றியிருப்பவர்கள் உணரும்படியாக இருக்கவேண்டும். இந்த வித்தியாசத்தை உருவாக்குவது எப்படி என்ற ஆலோசனையைதான் 4;5,6 ஆகிய அதிகாரங்களில் பவுல் கொடுக்கிறார்.

## கிறிஸ்துவின் சரீரமாகிய சபை (4:1-16)

**ஆதலால், கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து (எபே 4:1)**

"உங்கள் பொருட்டுக் கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டுண்டவனாயிருக்கிறேன்" என்று முந்தின அதிகாரத்தின் முதல் வசனத்தில் அறிவித்த பவுல் இங்கே தான் "கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவன்" என்கிறார். கட்டுண்ட நிலையிலும் பவுல் வேதவசனத்தின் மூலமாக சபையாருக்கு புத்திசொல்ல விரும்புகிறார். 2தீமோ 2:9ல் "இந்தச் சுவிசேஷத்தினிமித்தம் நான் பாதகன்போலக் கட்டப்பட்டு, துன்பத்தை அநுபவிக்கிறேன்; தேவ வசனமோ கட்டப்பட்டிருக்கவில்லை" என்கிறார். அவருடைய சரீரம் மட்டுமே சிறைச்சாலையில் கட்டப்பட்டிருந்தது. ஆவி, ஆத்துமாவிலோ அவர் விடுதலையோடு செயல்பட்டார். எனவேதான், சிறைச்சாலையில் இருக்கும் அவர் என் விடுதலைக்காக ஜெபம் பண்ணுங்கள் என்றோ, என்னை விடுவிக்க முயற்சி பண்ணுங்கள் என்றோ, சொல்லவில்லை. நான் உங்களுக்கு புத்திசொல்கிறேன் என்கிறார். "எந்த மனுஷனையும் கிறிஸ்துஇயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்தி சொல்லி, எந்த

மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்" (கொலோ 1:28) என்கிறார். 2கொரி 5:20 வாசித்துப் பாருங்கள்.

மனித இரட்சிப்பு தேவனுடைய அழைப்பையே ஆதாரமாகக் கொண்டது. நாம் பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்கள் என்று எபி 3:1ல் வாசிக்கிறோம். "அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும் நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்" (2தீமோ 1:9). அழைப்பு என்ற வார்த்தை பவுலின் நிருபங்களில் 33 இடங்களில் பயன்படுத்தப்பட்டிருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

1. கிறிஸ்தவர்களாகிய நாம் நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படியாக அழைக்கப்பட்டிருக்கிறோம் (1தீமோ 6:12).

2. ஆசீர்வாதத்தைச் சுதந்தரிக்கும்படி அழைக்கப் பட்டிருக்கிறோம் (1பேதுரு 3:9).

3. சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம் (கலா 5:13).

4. பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம் (1கொரி 1:2, 1தெச 4:7).

5. கிறிஸ்துவோடு ஐக்கியம் கொள்ளும்படியாக அழைக்கப்பட்டிருக்கிறோம் (1கொரி 1:9).

வானத்தையும் பூமியையும், அதில் உள்ள சர்வசிருஷ்டிகளையும் தன்னுடைய வார்த்தையினாலே உருவாக்கிய தேவன் நம்மை அழைத்தார் என்பது நாம் பெற்றுக்கொண்ட மிகப்பெரிய மேன்மை. அவருடைய அழைப்பின் நோக்கத்தை நிறைவேற்றும் பொறுப்பையும் கடமையையும் தேவன் நம்மிடம் ஒப்புவித்திருக்கிறார். அதனால்தான் பவுல் சொல்கிறார்,

"எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்துகொள்ளுங்கள்" *(பிலிப் 1:27)*. யோவான் சொல்கிறார், "அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும்" *(1யோவான் 2:6)*. "சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடக்க" *(கொலோ 1:10)* முயற்சிக்கும்போது மட்டுமே நம்முடைய அழைப்பு உறுதிப்படுத்தப்படுகிறது.

**மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி (எபே 4:2)**

இந்த அதிகாரத்தின் முதல் மூன்று வசனங்களில் கிறிஸ்தவ ஜீவியத்தின் அஸ்திபாரமாக அமைந்திருக்கும் ஏழு குணாதிசயங்கள் குறிப்பிடப்படுகின்றன. எபேசியர் நிருபத்தோடு இணைந்து எழுதப்பட்ட கொலோசெயரிலும் இதே காரியங்கள் *3:12-15*ல் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

1. *அழைப்பில் நடத்தல் (வசனம் 1)* - Walking worthily

2. *மனத்தாழ்மை (வசனம் 2)* - Lowliness

3. *சாந்தம் (வசனம் 2)* - Meekness

4. *நீடிய பொறுமை (வசனம் 2)* - Long suffering

5. *அன்பு (வசனம் 2)* - Love

6. *சமாதானம் (வசனம் 3)* - Bond of Peace

7. *ஆவியின் ஒருமை (வசனம் 3)* - Unite of the spirit

தேவனுடைய அழைப்புக்குப் பாத்திரராய் நடக்கும்போது முதலாவதாக நம்மில் மிகுந்த மனத்தாழ்மை உருவாகிறது. அப் 20:19ல் "வெகு மனத்தாழ்மையோடு" தான் தேவனை சேவித்ததாக எபேசு சபையின் மூப்பரிடம் பவுல் அறிவிக்கிறதைப் பார்க்கிறோம். "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்" (மத் 11:29) என்கிறார் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் முதலாவது தேவனுக்கு முன்பாகவும், நம்முடைய அயலாருக்கு முன்பாகவும் மனத்தாழ்மையுள்ளவர்களாய் இருக்கவேண்டும். "உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்" என்கிறார் மீகா (6:8).

அடுத்ததாக சபையில் ஒருவரோடு ஒருவர் மனத்தாழ்மையோடு செயல்படவேண்டும். பிலிப்பியர் 2:3 சொல்கிறது, "ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்". இந்த ஆலோசனை விசுவாசிகளுக்கும் பொருந்தும். ஊழியக்காரர்களுக்கும் பொருந்தும். "தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார்" (நீதி 3:34) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏசாயா 66:2ல் கர்த்தர் சொல்கிறார், "சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன்". 1பேதுரு 5:5, ஏசாயா 57:15 வாசித்துப் பாருங்கள்.

தொடர்ச்சியாக பவுல் நம்மிடம் காணப்படவேண்டிய சாந்த குணத்தைப் பற்றிப் பேசுகிறார். கலா 5:23ல் சாந்தம் ஆவிக்குரிய கனிகளில் ஒன்றாகக் குறிப்பிடப்படுகிறது. சாந்த குணமுள்ள ஒரு மனிதன் தன்னுடைய உரிமையை விட்டுக்கொடுக்கவும் ஆயத்தமானவனாக இருக்கிறான். தேவ சமுகத்தில் எதிலும் தனக்கு உரிமையில்லை என்ற மனப்பாங்குடையவனாக இருக்கிறான். ஆபிரகாம் லோத்துக்கு தனக்குரியதை முழுமனதோடு விட்டுக்கொடுக்கும் நிகழ்ச்சி ஆதி 13:7-13ல் சொல்லப்பட்டிருக்கிறது. இதினிமித்தம் தேவனாகிய கர்த்தர் உடனடியாக வந்து ஆபிரகாமை

ஆசீர்வதித்தார் என்று பார்க்கிறோம் (வசனம் 14-17). "மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான்" (எண் 12:3) என்று சொல்லப்பட்டிருக்கிறது. 1கொரிந்தியர் 6:7ல் பவுல் சொல்கிறார், "நீங்கள் ஒருவரோடொருவர் வழக்காடுகிறது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது. அப்படிச்செய்கிறதை விட நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகித்துக் கொள்ளுகிறதில்லை, ஏன் நஷ்டத்தைப் பொறுத்துக் கொள்ளுகிறதில்லை?"

ஏசாயா 53:7ல் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிடம் காணப்பட்ட சாந்தகுணம் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது, "அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார். ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை". மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொள்ளும்படியான ஆலோசனை கொலோ 3:12ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. தீத்துவிடம் பவுல் சொல்கிறார், "ஒருவனையும் தூஷியாமலும், சண்டை பண்ணாமலும், பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும் சாந்த குணத்தைக் காண்பிக்கவும் அவர்களுக்கு நினைப்பூட்டு" (3:2). "அழியாத அலங்கரிப்பாகிய சாந்தம்" (1பேதுரு 3:4) ஸ்திரீகளின் ஆபரணங்களில் ஒன்றாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அடுத்ததாக ஆவியின் கனியாகிய நீடிய பொறுமை (கலா 5:22) கிறிஸ்தவர்களாகிய நம் ஒவ்வொருவரிடமும் காணப்படவேண்டும். தேவனுடைய தயவு, பொறுமை, நீடிய சாந்தம் ஆகியவற்றைக் குறித்து ரோமர் 2:4ல் வாசிக்கிறோம். அழிவுக்கு எத்தனமாக்கப்பட்ட கோபாக்கினைப் பாத்திரங்கள்மேலும் மிகவும் நீடிய சாந்தத்தோடும் பொறுமையாயும் தேவன் இருக்கிறார் என்று ரோமர் 9:23ல் வாசிக்கிறோம். பேதுரு சொல்கிறார், "ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராய் இருக்கிறார்" (2பேதுரு 3:9). பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம் பண்ணும் நாட்களிலே தேவன் நீடிய பொறுமையோடு காத்திருந்ததாக பேதுரு சொல்கிறார் (1பேதுரு 3:20).

தேவன் நீடிய பொறுமையுள்ளவராக இருப்பதால் அவருடைய பிள்ளைகளாகிய நமக்கும் நீடிய பொறுமை அவசியப்படுகிறது. ஒரு மனைவி நீடிய பொறுமையுள்ளவளாய் இரட்சிக்கப்படாத கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்போது அவனை ஆதாயப்படுத்திக்கொள்ள முடியும் என்கிறார் பேதுரு (1பேதுரு 3:1,2, கொலோ 3:12, 1கொரி 7:13,14). நம்மைச் சுற்றியிருப்பவர்கள் நமக்கு எதிராக மதியற்றவர்களாகச் செயல்படும்போது, நாம் எந்த விதத்திலும் நம்முடைய நிதானத்தை இழந்துவிடாமல் அமைதியோடும் சாந்தத்தோடும் நடந்துகொள்வதே நீடிய பொறுமையாகும். நம்மில் நீடிய பொறுமை உண்டாகவேண்டுமானால் நாம் அறிந்து உணர்ந்து கொள்ளவேண்டிய காரியம் இதுதான். கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றவர்கள். நம் ஒவ்வொருவருக்காகவும் கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்டிருக்கிறது என்பதால் நாம் கிறிஸ்து என்ற ஒரே எஜமானனின் ஊழியக்காரராக இருக்கிறோம். அப்படி இருக்கும்போது நம்முடைய உறவுமுறைகளில் நீடிய பொறுமை வெளிப்பட்டே ஆகவேண்டும். புதிய ஏற்பாட்டில் நீடிய பொறுமை என்ற வார்த்தை 14 இட்ங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. பவுல் மட்டும் 10 இடங்களில் அதை பயன்படுத்துகிறார் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

அடுத்ததாக அன்பினால் ஒருவரை ஒருவர் தாங்குவதைக் குறித்து பவுல் பேசுகிறார். "ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின்மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள்" (கொலோ 3:13,14) என்கிறார் பவுல். நம்மிலிருந்து வெளிப்படும் அன்பினால் மட்டுமே (எபே 3:17) நாம் மற்றவர்களை அவர்களின் சகலவிதமான பெலவீனங்கள் மற்றும் குறைகள் மத்தியிலும் தாங்கமுடியும். அவர்களை கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்த முடியும். 1கொரி 9:22ல் பவுல் சொல்கிறார், "பலவீனரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப் போலானேன்; எப்படியாகிலும் சிலரை

இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்". மகத்துவமான அப்போஸ்தல ஊழியத்தை உலகமெங்கும் செய்துவந்த பவுல் இவ்வாறு தன்னை தாழ்மைப்படுத்திப் பேசுகிறார். அன்பின் மேன்மையைக் குறித்து ஒரு முழு அதிகாரத்தையும் பவுல் எழுதியிருப்பதை வாசியுங்கள் *(1கொரி 13)*.

**சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். (எபே 4:3)**

"தேவன் கலகத்துக்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார்; பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லா-வற்றிலேயும் அப்படியே இருக்கிறது" *(1கொரி 14:33)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. பரிசுத்தவான்களுடைய சபையில் சமாதானக் கட்டு காணப்படவேண்டும். யூதர்களுக்கும் புறஜாதியாருக்குமிடையே மிகப்பெரிய பிரிவினையும், பகையும் ஆதிமுதற்கொண்டு இருந்து வந்தது என்பதை அறிவோம். ஆனால் திருச்சபையை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஸ்தாபித்தபோது அவர் நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சமாதானம் பண்ணி, பகையை சிலுவையினால் கொன்று, சமாதானத்தைச் சுவிசேஷமாக அறிவித்தார் *(எபே 2:14-17)* என்பதைப் பார்த்தோம். சமாதானம் சபையார் அத்தனைபேரையும் ஒன்றிணைக்கவேண்டும்.

இந்த சமாதானக் கட்டை உருவாக்க சபையில் ஆவியின் ஒருமையை உருவாக்கி அதைக் காத்துக்கொள்வது அவசியமாகிறது. அதற்கு நாம் செய்யவேண்டிய காரியம் என்ன என்பது 1கொரி 1:10ல் சொல்லப்பட்டிருக்கிறது. "சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்". இன்று சபைகளில் காணப்படும் சமாதானக் குறைவு நிச்சயமாகவே நம்முடைய சாட்சியைக் கெடுப்பதாகவும், தேவனை வேதனைப்படுத்தும்

காரியமாகவும் இருக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை. *2கொரி 13:11*ல் பவுல் சொல்கிறார், "கடைசியாக சகோதரரே, சந்தோஷமாயிருங்கள், நற்சீர் பொருந்துங்கள், ஆறுதலடையுங்கள், அப்பொழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் உங்களோடேகூட இருப்பார்." அப்பொழுதுதான் சமாதானத்தின் தேவன் நம்மோடு இருக்கமுடியும் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

இறுதியில் பவுல் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்ள ஜாக்கிரதையாயிருங்கள் என்கிறார். ஜாக்கிரதையாயிருங்கள் என்று சொல்லும்போது பரிசுத்த ஆவியானவர் அருளியிருக்கும் ஒருமைப்பாட்டை விடாமுயற்சியோடு காத்துக்கொள்ளுங்கள் என்று பவுல் சொல்வதாக எடுத்துக்கொள்ளலாம். இந்த ஒருமைப்பாடு மனிதர்களின் முயற்சியில் உருவாகுவதில்லை என்றாலும், ஆவியானவர் தரும் இந்த ஒற்றுமையில் சேதம் உண்டாக நாம் காரணமாயிருக்கலாம். ஆவிக்குரிய சபையாகிய கொரிந்துவில் சிலர் பவுலைச் சேர்ந்தவனென்றும், சிலர் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும், சிலர் கேபாவைச் சேர்ந்தவனென்றும் சொல்லி ஆவியின் ஒருமையைச் சேதப்படுத்தினார்கள் என்பதைப் பார்க்கிறோம் *(1கொரி 1:12)*. ஆவியில் ஒருமை இல்லாவிட்டால் சபையின் வளர்ச்சி பாதிக்கப்படும் என்பதால் ரோமர் *12:16*ல் பவுல் இவ்வாறு ஆலோசனை தருகிறார், "ஒருவரோடொருவர் ஏகசிந்தையுள்ளவர்களாயிருங்கள்; மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்; உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள்".

*1பேதுரு 3:8,9* ல் இவ்வாறு வாசிக்கிறோம், "நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதர சிநேகமுள்ளவர்களும், மனஉருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருந்து, தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்". ஆசீர்வாதங்களுக்காகக் காத்திருக்கும் நாம், மற்றவர்களை

மனப்பூர்வமாக ஆசீர்வதிக்க அறிந்துகொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதன்மூலமாக மட்டுமே ஆவியின் ஒருமை காத்துக்கொள்ளப்படும். ஒரு காரியத்தை அறிந்து கொள்ளவேண்டும். கிறிஸ்து மூலமாக தேவனிடம் வரும் ஒரு மனிதன், அவ்வாறு வரும் வேறு எந்த ஒரு மனிதனையும் விட மேலானவனும் அல்ல, கீழானவனும் அல்ல. தேவசமுகத்தில் ஒரு மனிதனுடைய பின்னணி, அந்தஸ்து, படிப்பு, குடும்ப பாரம்பரியம், பொருளாதார நிலை, செல்வாக்கு, தாலந்து ஆகியவற்றுக்கு எந்த முக்கியத்துவமும் கொடுக்கப்படுவதில்லை. **எல்லா மனிதர்களையும் சுத்திகரித்து இலவசமான இரட்சிப்பை வழங்குவது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் மட்டுமே.** இதை அறிந்து உணர்ந்துகொண்டால்மட்டுமே சபைகளில் சமாதானக்கட்டு உண்டாகியிருக்கும். ஆவியின் ஒருமை காத்துக்கொள்ளப்படும்.

**உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும் ஒரே ஆவியும் உண்டு. (எபே 4:4)**

அதிகாரத்தின் முதல் வசனத்திலேயே நாம் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாக நடக்கவேண்டும் என்று பவுல் அறிவித்ததைப் பார்த்தோம். முந்தின வசனத்தில் சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமை காத்துக்கொள்ளப்படவேண்டும் என்று பார்த்தோம். அதற்கான ஏழு காரணங்கள் 4 முதல் 6 வரை உள்ள வசனங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

1. *நமக்கு ஒரே நம்பிக்கை உண்டு (வசனம் 4)*

2. *நமக்கு ஒரே சரீரம் உண்டு (வசனம் 4)*

3. *நமக்கு ஒரே ஆவி உண்டு (வசனம் 4)*

4. *நமக்கு ஒரே கர்த்தர் உண்டு (வசனம் 5)*

5. *நமக்கு ஒரே விசுவாசம் உண்டு (வசனம் 5)*

6. நமக்கு ஒரே ஞானஸ்நானம் உண்டு (வசனம் 5)

7. நமக்கு ஒரே தேவனும் பிதாவும் உண்டு (வசனம் 6)

முதலாவதாக சபையாராகிய நாம் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை பவுல் சுட்டிக்காட்டுகிறார். "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதி" (எபி 11:1) என்று சொல்லப்பட்டிருப்பதால், நம்பிக்கை இல்லாத நிலையில் விசுவாசம் உருவாகுவதில்லை. ஒரு நபரைக் குறித்த, அல்லது ஒரு காரியத்தைக் குறித்த நிச்சயமே நம்பிக்கை. அதுவே நம்முடைய ஆத்துமாவின் நங்கூரமாயிருக்கிறது. எபேசியர் 1:18ல் தேவன் "நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை" என்ன என்பதைக் குறித்து பவுல் குறிப்பிட்டார். கொலோ 1:22ல் "சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையை விட்டு அசையாமல்" இருக்கவேண்டும் என்கிறார். ஏனென்றால் "அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்" (ரோமர் 8:24). பவுல் தொடர்ந்து சொல்கிறார், "காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கை அல்ல; ஒருவன் தான் காண்கிறதை நம்பவேண்டுவதென்ன". "நாம் காணாததை நம்பினோமாகில் அது வருகிறதற்குப் பொறுமையோடே காத்திருப்போம்" (வசனம் 24,25). ரோமர் 5:2ல் பவுல் சொல்கிறார், "தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம்".

கிறிஸ்துவோடு, கிறிஸ்துவைப் போல், கிறிஸ்துவின் மகிமையில் நிரந்தரமாக பங்குகொள்வோம் என்ற நம்பிக்கை நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிறது. 1யோவான் 3:2ல் "அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போம்" என்கிற நம்பிக்கை சொல்லப்பட்டிருக்கிறது. அவருக்கு ஒப்பாயிருக்கிறது எவ்வளவு பெரிய மேன்மை என்பதை யோசித்துப் பாருங்கள். "இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல, தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான்"

*(வசனம் 3)*. "நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்" *(ரோமர் 12:12)* என்கிறார் பவுல்.

நமக்கு ஒரே சரீரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது இரண்டாவதாகச் சொல்லப்படுகிறது. சபையாகிய கிறிஸ்துவின் சரீரத்தில் யூதர்களானாலும் சரி, புறஜாதியாரானாலும் சரி, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஒன்றாக இணைந்துவிடுகிறார்கள். கொலோ *3:15* சொல்கிறது, "தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்". "நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராததுபோல, அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்" *(ரோமர் 12:4,5)*. *1*கொரி *12:27*ல் பவுல் சொல்கிறார், "நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும் தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்". "அவயவங்கள் அநேகமாயிருந்தும் சரீரம் ஒன்றே" *(வசனம் 20)*.

சபையை இவ்விதமாக ஒரே சரீரமாக ஸ்தாபிக்கவேண்டும் என்பதுதான் தேவனுடைய நோக்கம். விசுவாசிகளுக்குள் பிரிவினைகள், வேறுபாடுகள் இருக்கக்கூடாது. அவர்களுக்குள் முழுமையான ஐக்கியம் உருவாகவேண்டும் என்பதற்காகத்தான் தேவன் ஒவ்வொரு விசுவாசியையும் மறுபடியும் பிறக்கச் செய்து (யோவான் *3:3-6; 1:12,13*, தீத்து *3:5*, *1*பேதுரு *1:23*, *1*யோவான் *5:1*), புதிய சிருஷ்டியாக்குகிறார் (*2*கொரி *5:17*), புதிய மனுஷனாக்குகிறார் (எபே *4:24*, கொலோ *3:10*). ஒவ்வொருவரையும் தன்னுடைய திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாக்குகிறார் (*2*பேதுரு *1:4*). அவர்களுடைய சரீரத்தை தான் வாசம் செய்யும் ஆலயமாக்குகிறார் *(யோவான் 14:16-17, 1கொரி 3:16, 6:19, 20)*.

நம்முடைய ஆவியின் ஒருமையை காத்துக் கொண்டு, சபையாரை சமாதானக் கட்டில் நிலைத்திருக்கச் செய்வதில் பரிசுத்த ஆவியானவருக்கு பெரும்பங்கு உண்டு என்பதினால் ஒரே ஆவி நமக்கு உண்டு என்பதை **மூன்றாவது** காரியமாக பவுல் இந்த வசனத்தில்

குறிப்பிடுகிறார். 1கொரி 12:13 சொல்கிறது, "நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும் எல்லாரும் ஒரே ஆவியினாலே, ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்". பல்வேறு கிரியைகளை சபையில் ஆவியானவர் நடப்பிக்கிறார் என்றாலும் ஒரே ஆவியானவர்தான் அவைகளை செயல்படுத்துகிறார். பவுல் சொல்கிறபடி, "வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே" *(1கொரி 12:4)*. ஒரே தேவனுடைய ஆவி நம்மில் வாசமாயிருப்பதினால்தான் நாம் தேவனுடைய ஆலயமாயிருக்கிறோம் *(1கொரி 3:16, 6:19, ரோமர் 8:9, 11)*.

பழைய ஏற்பாட்டு நாட்களில் மோசே மூலமாக மூப்பராகிய எழுபதுபேர் மேலும் *(எண் 11:25)*, பிலேயாம் மேலும் *(எண் 24:2)*, ஒத்னியேல் மேலும் *(நியா 3:9)*, கிதியோன் மேலும் *(நியா 6:34)*, சிம்சோன் மேலும் *(நியா 14:6)*, சவுல் மேலும் *(1சாமு 10:10)*, தாவீது மேலும் *(1சாமு 16:13)* இறங்கி கிரியை நடப்பித்த அதே ஆவியானவர்தான் புதிய ஏற்பாட்டு நாட்களில் பெந்தெகொஸ்தே நாளில் காத்திருந்த யூதர்களான சீஷர்கள்மேல் *(அப் 2:1-4)* இறங்கினார். புறஜாதி மனிதனாகிய கொர்நேலியு வீட்டாரையும் நிரப்பினார் *(அப் 10:44, 45)*. நம்மையும் நிரப்புகிறார்.

**ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும் (எபே 4:5)**

1கொரி 8:5,6 ல் பவுல் சொல்கிறார், "வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறர்கள் உண்டு; இப்படி அநேக தேவர்களும் அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும் பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு. அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்". கர்த்தர் என்ற வார்த்தைக்குப் பயன்படுத்தப்படும் Lord என்ற வார்த்தை

அதிகாரம் உள்ளவர், ஆளுகை செய்கிறவர் என்று பொருள்படுவதால் ஆண்டவர் என்றும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (மாற்கு 2:28, மத் 12:8). "நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்" (உபா 6:4) என்ற மோசேயின் வார்த்தையை இயேசு மாற்கு 12:29ல் மீண்டுமாக உறுதிப்படுத்துகிறார். "கர்த்தாதி கர்த்தா" (வெளி 19:16) என்ற நாமத்துடன்தான் அவர் வருகையில் வெளிப்படுவார். ஒரு குடும்பத்தில் ஒரு தலைவன் தான் இருக்கமுடியும், ஒரு தேசத்துக்கு ஒரு ராஜாதான் இருக்கமுடியும் என்பதுபோல் பூமி அனைத்துக்கும் ஒரு கர்த்தர்தான் இருக்கமுடியும். 1தீமோ 6:15 வாசித்துப் பாருங்கள்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை பவுல் பல இடங்களில் கர்த்தர் என்று குறிப்பிடுவதைப் பார்க்கிறோம். எபே 1:2,3,15,17, 2:21, 3:15, 4:1, 1கொரி 6:14, 7:23, 12:3,5. பிலிப்பியர் 2:11ல் பவுல் சொல்கிறார், "பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்". ரோமர் 14:9 சொல்கிறது, "கிறிஸ்துவும் மரித்தோர் மேலும் ஜீவனுள்ளோர் மேலும் ஆண்டவராயிருக்கும் பொருட்டு, மரித்தும், எழுந்தும், பிழைத்துமிருக்கிறார்". ஒரே கர்த்தர் என்பது சபையின் ஒருமையைக் காத்துக்கொள்ளும் **நான்காவது** காரியமாக சொல்லப்படுகிறது.

சபையில் சமாதானக் கட்டை உருவாக்கும் **ஐந்தாவது** காரியமாக விசுவாசம் இந்த வசனத்தில் சொல்லப்படுகிறது. மனித இனத்தின் மீட்புக்கென்று வழங்கப்பட்ட இயேசுவை கர்த்தராக ஏற்றுக்கொண்டு அவர் மூலமாக உண்டான இரட்சிப்பை விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படிகிறவனே கிறிஸ்தவன் என்று அழைக்கப்படமுடியும். விசுவாசம் இல்லாத நிலையில் இரட்சிப்பு உண்டாவதில்லை. ரோமர் 3:30ல் பவுல் சொல்கிறார், "விருத்தசேதனமுள்ளவர்களை விசுவாசத்தினாலும், விருத்தசேதனமில்லாதவர்களை விசுவாசத்தின் மூலமாயும் நீதிமான்களாக்குகிற தேவன் ஒருவரே". விருத்தசேதனத்தை வலியுறுத்தும் நியாயப்பிரமாணம் மாம்சத்துக்குரியது. அது மோசே

மூலமாக சீனாய் மலையில் வழங்கப்பட்ட ஏற்பாடு. அது ஆகாருக்குள் ஒருவனை அடிமைத்தனத்துக்குள் வழிநடத்துகிறது. சத்திய பிரமாணமோ, "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" (யோவான் 14:6) என்று சொன்ன கிறிஸ்துவால் வழங்கப்பட்ட ஏற்பாடு, சத்திய பிரமாணமாகிய விசுவாசம் ஆவிக்குரியது. இது சுயாதீனமுள்ள மேலான எருசலேமுக்கு அடையாளமாயிருக்கிறது. விருத்தசேதனம் செய்துகொள்ளாத ஒருவன் பரலோகத்துக்குப் போகமுடியும். விசுவாசமில்லாதவனால் முடியாது. கலாத்தியர் 4:22-26, 6:15, 16 வாசித்துப் பாருங்கள். "புறஜாதியாரில் பிறந்த பாவிகளாயிராமல், சுபாவத்தின்படி யூதராயிருக்கிற நாமும் இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலேயன்றி, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே மனுஷன் நீதிமானாக்கப்படுவதில்லையென்று அறிந்து, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலல்ல, கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கும்படிக்குக் கிறிஸ்து இயேசுவின்மேல் விசுவாசிகளானோம்" (கலா 2:15).

"பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசம்" என்று யூதா 3ல் சொல்லப்பட்டிருக்கிறது. பரிசுத்தவான்கள் என்ற வார்த்தை கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும் யூதர்கள், புறஜாதியார், கிரேக்கர், ரோமர், அடிமைகள், சுயாதீனர் என்று மனித இனத்தைச் சேர்ந்த அத்தனை பிரிவினரையும் உள்ளடக்கியது. முந்தின வார்த்தை "ஒரே கர்த்தரும்" என்று இருப்பதால் ஒரே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்மேல் வைக்கும் விசுவாசம் என்றும் எடுத்துக்கொள்ளலாம். நாம் சில சத்தியங்களையோ, உபதேசங்களையோ, சட்டதிட்டங்களையோ, பிரமாணங்களையோ விசுவாசியாமல், கிறிஸ்து என்று அழைக்கப்படும் ஒரு நபரை மட்டும் விசுவாசிக்கிறோம் என்பதுதான் உண்மை. பவுல் சொல்கிறார், "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் (வருகையின் நாள்) காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்" (2 தீமோ 1:12).

சபையில் ஆவியின் ஒருமையைப் பாதுகாக்கும் ஆறாவது காரியம் அவர்கள் தங்கள் விசுவாசத்தை உறுதிப்படுத்தும் விதத்தில் பகிரங்கமாகப் பெற்றுக்கொள்ளும் ஞானஸ்நானம். பலவகையான ஸ்நானங்கள் வேதத்தில் சொல்லப்படுகின்றன (லேவி *8:6, 14:8, 16:26, 17:16*, எண் *19:7,8,19*). புதிய ஏற்பாட்டு நாட்களிலும் "யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றா, மனுஷரால் உண்டாயிற்றா" *(மாற்கு 11:30, லூக்கா 20:4)* என்ற கேள்வி எழும்பியதைப் பார்க்கிறோம். யோவான் மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானம் கொடுத்தார் என்பது உண்மைதான். ஆனால் அவர் கொடுத்த ஞானஸ்நானம் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் கொடுக்கப்படவில்லை. மேலும் கிறிஸ்துவின் மரணத்துக்கு முன்பாக, அதாவது மனித இனத்துக்குப் பாவமன்னிப்பு உண்டாவதற்கு முன்பு கொடுக்கப்பட்டது. அது சத்திய பிரமாணமாகிய விசுவாசத்தை அடிப்படையாகக் கொள்ளவில்லை. "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" *(மாற்கு 16:16)* என்கிறார் இயேசு. குழந்தை ஞானஸ்நானத்தில் விசுவாசத்துக்கு இடமில்லை.

மரித்து உயிர்த்தெழுந்த இயேசு, தான் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு சற்று முன்பாக இவ்வாறு சொல்கிறார், "நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" *(மத் 28:19,20)*. இன்று ஊழியர்கள் ஞானஸ்நானம் கொடுக்கும்போது ஞானஸ்நானம் பெற வந்திருப்பவர்கள் சீஷர்களாகிவிட்டார்களா என்பதை கவனிப்பதில்லை. தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்கிறவர்கள், சத்திய உபதேசத்தை அறிந்தவர்கள், **கிறிஸ்துவின் சீஷர்கள் என்ற அங்கீகாரத்தைப் பெற்றவர்கள் மட்டுமே புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானத்தைப் பெறத் தகுதி உள்ளவர்கள்.**

*எபேசு சபையார் மனந்திரும்பாமல், சத்தியத்தை அறியாமல், சீஷராகாத நிலையில் எடுத்துக்கொண்ட தவறான ஞானஸ்நானத்தைக் குறித்து அப் 19:1-5ல் வாசித்துப் பாருங்கள். "அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம்பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்" (ரோமர் 6:4,5). கொலோ 2:12 இந்த மகத்துவமான சத்தியத்தை உறுதிப்படுத்துகிறது. பவுல் திட்டவட்டமாக அறிவிக்கிறார், "உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" (கலா 3:27).*

**எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர். (எபே 4:6)**

நமக்கு ஒரே தேவனும் பிதாவும் இருக்கிறார் என்பது சபையின் ஒருமையை உறுதிப்படுத்தும் ஏழாவது காரியமாகச் சொல்லப்படுகிறது. முந்தின வசனத்தில் ஒரே கர்த்தர் என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து குறிப்பிடப்பட்டதைப் பார்த்தோம். இந்த வசனத்தில் பிதாவாகிய தேவன் ஒருவரே என்பதை பவுல் அறிவிக்கிறார். *"சகலமும் அவராலும், அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது" (ரோமர் 11:36).* மோசே சொல்கிறார், *"இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்" (உபா 6:4).* மல்கியா கேட்கிறார், *"நம்மெல்லாருக்கும் ஒரே பிதா இல்லையோ? ஒரே தேவன் நம்மைச் சிருஷ்டித்ததில்லையோ?" (2:10).* பழைய ஏற்பாட்டு காலத்தில் இஸ்ரவேலர் தேவனை பிதாவாக அன்பு நிறைந்த தகப்பனாகப் பார்க்கவில்லை. பயங்கரமும், பராக்கிரமும் நிறைந்தவராக மட்டுமே அவரை அறிந்திருந்தார்கள். அவர் *"திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பன்" (சங் 68:5)* என்று அவர்கள் அறிந்திருந்தார்கள் என்பது உண்மைதான். *"கர்த்தாவே, நீர்*

எங்களுடைய பிதா" *(ஏசாயா 64:8)* என்றும் அவரை அழைத்தார்கள். மோசே அவர்களிடம் தேவன் பிதாவாகக் கருதப்படவேண்டும் என்று இவ்வாறு பேசுகிறார், "உன்னை ஆட்கொண்ட பிதா அவரல்லவா? உன்னை உண்டாக்கி உன்னை நிலைப்படுத்தினவர் அவரல்லவா?" *(வசனம் 6)*. ஆனாலும் "அவர்கள் அவருடைய பிள்ளைகள் அல்ல; இதுவே அவர்கள் காரியம்; அவர்கள் மாறுபாடும் தாறுமாறுமுள்ள சந்ததியார்" *(உபா 32:5)* என்று இஸ்ரவேலரைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.

தீர்க்கதரிசிகளும் தேவனை பிதா என்று அறிமுகப்படுத்த தயங்கியபோது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உலகத்துக்கு வந்து அவர் நம்முடைய தகப்பன் என்பதை உறுதிப்படுத்தினார். மத் *23:9*ல் அவர் சொல்கிறார், "பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள்; பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார்". "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே" *(மத் 6:9)* என்று உரிமையோடும் அன்போடும் தேவனை அழைக்கக் கற்றுக்கொடுத்தார். அவர் பூமியில் இருந்த நாட்களில் அவர் பேசிய முதல் பேச்சிலும் *(லூக்கா 2:49)*, கடைசி பேச்சிலும் *(அப் 1:5-7)* பிதா என்ற வார்த்தை காணப்படுகிறது. **கிறிஸ்து குமாரனாக பூமியில் வெளிப்பட்டதன் நோக்கம் தேவனை நம்முடைய பிதாவாக வெளிப்படுத்தவேண்டும் என்பதற்காகவே.**

"தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் (மூத்தமகன்) பொருட்டு" *(ரோமர் 8:29)* நம்மை முன்குறித்திருந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எபிரெயர் *2:10* வாசித்துப் பாருங்கள். தேவனை "அப்பா, பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவி" *(ரோமர் 8:15)* நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது. "பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு" *(1கொரி 8:6)* என்கிறார் பவுல். "எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்" *(ரோமர் 8:14)*. "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்" *(வசனம் 16)*.

ஒரே தேவனும், நம்முடைய தகப்பனுமாகிய பிதாவைக் குறித்து இன்னொரு காரியத்தையும் பவுல் இந்த வசனத்தில் அறிவிக்கிறார். அவர் எல்லார்மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர். எல்லார் மேலும் இருக்கிறவர் என்பதினால் அவர் எல்லாவற்றையும் ஆளுகை செய்கிறவர் என்று பொருள் கொள்ளலாம். எல்லாரோடும் இருக்கிறவர் என்பதினால் எல்லாவற்றிலும் இருப்பவர் என்று பொருள் கொள்ளலாம். 4வது வசனத்தில் பரிசுத்த ஆவியானவரையும், 5வது வசனத்தில் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவையும், 6வது வசனத்தில் பிதாவாகிய தேவனையும் பவுல் மகிமைப்படுத்திப் பேசுவதைப் பார்க்கிறோம். திருத்துவத்தின் தேவன் ஒருவராக இருப்பதை *1கொரி 12:4-6* உறுதிப்படுத்துகிறது, "வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே. கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும், எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே".

சபையின் நாட்களில் பிதாவாகிய தேவன் திருத்துவத்தின் மூன்றாவது நபராகிய பரிசுத்த ஆவியானவர் மூலமாகவே எல்லார் மேலும், எல்லாரோடும், எல்லாருக்குள்ளும் இருக்கிறார். பேதுரு சொல்கிறார், "தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள் மேல் தங்கியிருக்கிறார்" *(1பேதுரு 4:14)*. ஆவியானவரைக் குறித்து இயேசு இவ்வாறு சொல்கிறார், "நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார் ... அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்" *(யோவான் 14:16,17)*. ஆவியானவர் நமக்குள் வாசம் பண்ணாத நிலையில் நாம் அவரை முழுமையாக அறிந்துகொள்ள முடியாது.

**கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது. (எபே 4:7)**

சமாதான கட்டும் ஆவியின் ஒருமையும் (வசனம் 3) உள்ளவர்களாய், சபையின் விசுவாசிகளும் ஊழியக்காரர்களும் செயல்படும்போது மட்டுமே சுவிசேஷம் உலகமெங்கும் அறிவிக்கப்பட்டு தேவனுடைய நாமம் மகிமைப்படும். அதை வலியுறுத்தும்படியாக, ஒரே நம்பிக்கை, ஒரே சரீரம், ஒரே ஆவி, ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரே தேவனாகிய பிதா நமக்குக் கொடுக்கப்பட்டிருப்பதை 4,5,6 ஆகிய வசனங்களில் பவுல் அறிவித்ததைப் பார்த்தோம்.

அதைத் தொடர்ந்து ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஒவ்வொரு விசுவாசிக்கும் கொடுத்துள்ள விசேஷித்த ஈவு (வரம், நன்கொடை, சிறப்புப் பரிசு, Gift) என்ன என்பதை பவுல் அறிவிக்கிறார். அது தேவனுடைய கிருபை என்று இங்கே சொல்லப்பட்டிருந்தாலும், அடுத்த வசனத்தில் வரங்கள் (Gifts) என்று சொல்லப்பட்டிருக்கிறது. தேவனிடமிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் விலையேறப்பெற்ற ஈவு பரிசுத்த ஆவியானவரும் ஆவிக்குரிய வரங்களும் தான் (யோவான் 14:16,17). கிறிஸ்து ஒவ்வொருவருக்கும் எதைக் கொடுக்க விரும்புகிறாரோ, எவ்வளவு கொடுக்க விரும்புகிறாரோ, அதைத்தான் நாம் பெற்றுக்கொள்ளமுடியும்.

ஒரு விசுவாசியோ அல்லது ஊழியக்காரனோ பெற்றுக்-கொள்ளும் வரங்கள் அல்லது தாலந்துகள் தேவனுடைய கிருபையை மட்டுமே ஆதாரமாகக் கொண்டுள்ளது. அவனுடைய முயற்சியையோ, திறமையையோ அல்ல. **கிறிஸ்து நிர்ணயம் பண்ணியதற்கு மேலாகவும் ஒருவனும் பெறுவதில்லை. குறைவாகவும் ஒருவனும் பெறுவதில்லை.** அதனால்தான் ரோமர் 12:3ல் பவுல் சொல்கிறார், "உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத் தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்".

நாம் பெற்றுக்கொண்ட ஆவிக்குரிய வரங்கள் நமக்குச் சொந்தமானவை அல்ல என்பதால் சபையின் ஆசீர்வாதத்துக்காகவும்,

பக்திவிருத்திக்காகவும் தேவனை மகிமைப்படுத்துவதற்காகவும் மட்டுமே அவை செலவிடப்படவேண்டும். அவரே அவருடைய ஈவின் அளவுக்குத் தக்கதாக யாருக்கு எந்த அளவு வரங்களும், கிருபைகளும் கொடுக்கவேண்டும் என்பதை தீர்மானிக்கிறார். "நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினால்" *(ரோமர் 12:6)* என்ற வசனத்திலும் கிருபையையும் வரங்களையும் இணைத்துப் பேசுவதைக் கவனியுங்கள். "இவைகளையெல்லாம் (வரங்கள்) அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்" *(வசனம் 11)*. எனவே தான் பெற்றுக் கொண்டிருக்கும் கிருபைவரங்களைக் குறித்து எந்த மனிதனும் பெருமை பாராட்ட முடியாது.

இந்த வேதபகுதியில் இருந்து நாம் கீழ்க்கண்ட காரியங்களை அறிந்துகொள்ளலாம்.

1. ஒவ்வொரு விசுவாசிக்கும் வரங்கள் கொடுக்கப் பட்டிருக்கிறது *(வசனம் 7)*. எல்லா வரங்களையும் உடைய ஒரு மனிதனும் பூமியில் இருந்ததில்லை.

2. இவ்வாறு வரங்களைக் கொடுக்க தேவன் மிக்பெரிய கிரையம் கொடுக்கவேண்டியதிருந்தது *(வசனம் 8-10)*

3. எல்லா வரங்களும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை மட்டுமே மையமாகக் கொண்டது *(வசனம் 11)*

4. பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்படியாக, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காக, சபை பக்தி விருத்தியடைய என்ற மூன்று காரியங்களுக்காக மட்டுமே வரங்கள் கொடுக்கப்படுகின்றன *(எபே 4:12)*.

**ஆதலால், அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் என்று சொல்லியிருக்கிறார். (எபே 4:8)**

அப்போஸ்தலனாகிய பவுல் சங்கீதம் 68:18ல் தாவீது சொல்லியிருக்கும் காரியத்தை இந்த வசனத்துக்கு ஆதாரமாக எடுத்துக்கொள்கிறார். இந்த வசனம் சொல்கிறது, "தேவரீர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கிக்கொண்டு போனீர்; தேவனாகிய கர்த்தர் மனுஷருக்குள் வாசம்பண்ணும் பொருட்டு, துரோகிகளாகிய மனுஷர்களுக்காகவும் வரங்களைப் பெற்றுக்கொண்டீர்".

ஒரு அரசகுமாரன் தனக்கு விரோதமாக செயல்படும் எதிரியை யுத்தத்தில் சந்திக்க வருகிறார். அந்த எதிரி அரசகுமாரனின் மனிதர்களை தன்வசப்படுத்தி வைத்திருந்தான். அவர்கள் அவனிடம் சிறைப்பட்டவர்களாக இருக்கிறார்கள். சத்துருவாகிய சாத்தான் பாவங்களினிமித்தம் மனிதர்களைச் சிறைப்படுத்தி வைத்திருந்ததாக எடுத்துக்கொள்ளலாம். தன்னுடைய மரணத்தின்மூலம் சாத்தான்மேல் ஜெயங்கொண்ட கிறிஸ்து, அவனால் சிறைப்படுத்தப்பட்டிருந்தவர்களை விடுவித்து, தனக்கென்று அடிமைப்படுத்திக் கொள்கிறார். தான் அவர்களுக்குள் வாசம் பண்ணவேண்டும் என்று விரும்புகிறபடியால் மீண்டும் சாத்தான் அவர்களை வஞ்சித்து சிறைப்படுத்திவிடக்கூடாது என்பதற்காக அவர்களை தன்னுடைய கைதிகளாக்கி, தான் தன்னுடைய அரண்மனைக்கு போகும்போது அந்த வெற்றிப்பவனியில் அவர்களை அழைத்துக்கொண்டு செல்கிறார். அவர்களை ராஜாவாகிய தன் தகப்பனுக்கு அறிமுகப்படுத்தி, அவர்கள் தன்னுடைய அன்பில் நிலைத்திருக்கவேண்டும் என்பதற்காக, அவரிடமிருந்து வரங்களைப் (கிருபை) பெற்றுக்கொண்டு அவர்களுக்கு அருளிச் செய்கிறார். யோவான் 14:12ல் கிறிஸ்து சொல்கிறார், "நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரிகைகளையும் செய்வான்".

நாம் தியானிக்கும் 8-வது வசனத்தில் "மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால்

சங்கீதம் 68:18ல் "துரோகிகளாகிய மனுஷர்களுக்காகவும் வரங்களைப் பெற்றுக்கொண்டீர்" என்று வாசிக்கிறோம். அந்த நாட்களில் யுத்தத்தின் முடிவில் வெற்றி பெற்ற மன்னன் தான் தோற்கடித்த தேசத்திலுள்ள தங்கம், வெள்ளி போன்ற விலை உயர்ந்த பொக்கிஷங்களை அபகரித்து, தன்னுடைய வெற்றிப் பவனியில் பங்குகொள்ளும் தன்னுடையவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கும் சம்பிரதாயம் இருந்து வந்தது. 1சாமு 30:26-31, நியாயாதிபதிகள் 5:30 வாசித்துப்பாருங்கள். இங்கே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தன்னுடைய பிதாவிடம் இருந்து கிருபை வரங்களைப் பெற்றுக்கொண்டு, தன்னால் சிறையாக்கப்பட்டு, தனக்கு உண்மையாயிருக்கும் தன்னுடைய-வர்களுக்கு தாராளமாய் வழங்குவதாக எடுத்துக்கொள்ள வேண்டும். ஏசாயா 53:12ல் தேவன் சொல்கிறார், "அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக் கொள்வார்".

அப்போஸ்தலனாகிய பவுலை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். தேவனுக்கு விரோதியாக செயல்பட்டு வந்தவரை கிறிஸ்து தன்னுடைய அன்பினால் சிறைப்படுத்தினார் என்பது மட்டும் அல்ல, விசேஷித்த கிருபை வரங்களை வழங்கி, அநேகரை இரட்சிப்புக்குள் வழிநடத்தும்படியாக தன்னுடைய ஊழியக்கார-ராக்கினார். பவுல் சொல்கிறார், "கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" (2கொரி 2:14).

கிறிஸ்து உன்னதத்திற்கு ஏறினார் என்ற சம்பவம் அப்போஸ்தலர் 1:9ல் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது, "இவைகளை அவர் (கிறிஸ்து) சொன்னபின்பு, அவர்கள் (அப்போஸ்தலர்கள்) பார்த்துக் கொண்டிருக்கையில் உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது".

**ஏறினார் என்பதினாலே அவர் அதற்குமுன்னே பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார் என்று விளங்குகிறதல்லவா? (எபே 4:9)**

கிறிஸ்து மேலே ஏறிச் சென்றார் என்றால் நாம் அறிந்து கொள்ளவேண்டியது என்ன? அவர் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் பூமிக்கு இறங்கிவந்தார் என்பதுதான். நித்திய நித்தியமாக அவர் பரலோகத்தில் தன்னுடைய பிதாவின் அருகில் செல்லப்பிள்ளையாக இருந்த கிறிஸ்து (நீதி *8:25-30*), தன்னை பாவ நிவாரண பலியாக ஒப்புக்கொடுக்கும்படியாக பூமியின் தாழ்விடங்களில் இறங்கிவந்தார். சிலுவையின் மரணபரியந்தமும் தம்மைத்தாமே தாழ்த்தியதன் நிமித்தமாகவே (பிலிப் *2:8*) சிறைப்பட்டவர்களை தமக்குள்ளாக்கி அவர்க[illegible]வரால் வரங்களைக் கொடுக்கமுடிந்தது.

[illegible]யின் தாழ்விடம் என்ற வார்த்தை எதைக் குறிப்பிடுகிறது என்பதில் வேதபண்டிதர்களிடம் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. தாழ்விடம் என்பது கிறிஸ்து பூமியில் அடக்கம் பண்ணப்பட்ட கீழான பகுதியான கல்லறையைக் குறிப்பிடுகிறது என்று பெரும்பாலோர் கருதுகிறார்கள். சிலர் தாழ்விடம் என்பது மகிமை நிறைந்த பரலோகத்தைவிட்டு தம்மைத் தாழ்த்தி இந்த பூமியில் 33 1/2 ஆண்டுகள் வாழ்ந்தார் என்பதை காட்டுகிறது என்றும் கருதுகிறார்கள். அவர் ஏறினார் என்பதால் அதற்குமுன்பாக இறங்கியிருக்கவேண்டும் என்று பவுல் சொல்கிறார். "எலியா சுழல் காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான்" (2இராஜா *2:11*) என்று சொல்லப்பட்டிருப்பதால் அவர் பரலோகத்திலிருந்து இறங்கிவந்தவர் என்று சொல்லமுடியாது. ஆனால் "நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்" (மல்கியா *4:5*) என்ற வசனத்தின்படி எலியா யோவான் ஸ்நானனாக அனுப்பப்பட்டு பூமிக்கு இறங்கி வருகிறார். இதை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தன்னிடம் யோவானைப் பற்றி விசாரிக்கிறவர்களிடம் இவ்விதமாக உறுதிப்படுத்துகிறார், "நீங்கள் ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தால், வருகிறவனாகிய எலியா இவன்தான்" (மத் *11:14*).

ஏறுவதும் இறங்குவதும் ஒரு தொடர் கிரியையாக மட்டுமே கருதப்படவேண்டும் என்றும் சில வேதபண்டிதர்கள் சொல்கிறார்கள், யாக்கோபு கண்ட சொப்பனத்தில் ஒரு ஏணி பூமியில் வைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறார். "அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது, அதிலே தேவதூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள்" *(ஆதி 28:12)* என்று வாசிக்கிறோம். இதற்கு ஒரே ஒரு விதிவிலக்கு உண்டு. "நான் வானத்துக்கு ஏறுவேன்" *(ஏசாயா 14:13)* என்றவன் அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டு போனான் *(வசனம் 15)*. வானத்துக்கு ஏறுவேன் என்று சவாலிட்டுப் பேசிய சாத்தான் ஏறமுடியாமல் போனது என்பது மட்டுமல்ல, தான் இருந்த இடத்திலிருந்து கீழே பாதாளத்துக்கு தள்ளுண்டு போனான் அல்லவா?

"பூமியின் தாழ்விடங்களிலே இறங்கினார்" என்ற பவுலின் அறிவிப்பினிமித்தம் சில குழப்பமான விளக்கங்கள் *1பேதுரு 3:18,19,20*ன் அடிப்படையில் கொடுக்கப்பட்டு வருகின்றன. பேதுரு சொல்கிறார், "அவர் (கிறிஸ்து) மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார். அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார். (அவருடைய அடக்கத்துக்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில்). அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம் பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற் போனவைகள்". தாழ்விடங்களில் காவல் வைக்கப்பட்டிருந்த இவர்களுக்கு சுவிசேஷம் சொல்லப்பட்டதாக சில வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள்.

இன்னும் சிலர் தாழ்விடம் என்பது நரகத்தைக் குறிப்பிடுகிறதாகச் சொல்கிறார்கள், முந்தின வசனத்தின்படி மனிதர்களுக்கு வரங்களைக் கொடுக்க கிறிஸ்து நரகத்தையே அனுபவிக்கவேண்டியதிருந்தது என்றும் சிலர் சொல்கிறார்கள். நாம் எல்லாரும் அறிந்திருக்கிறபடி, "அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே

தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தார், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" *(பிலிப் 2:8-11)*.

**இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக, எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார். (எபே 4:10)**

யோவான் *3:13* சொல்கிறபடி, "பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை". ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இறங்கினார் என்று சொல்லும்போது அவர் மகிமையான வானமண்டலங்களிலிருந்து இறங்கி பூவுலகில் ஒரு மனிதனாக அவதரித்தார் என்பதையும், முந்தின வசனத்தின்படி பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார் என்று சொல்லும்போது மரித்து அடக்கம்பண்ணப்பட்டார் என்பதையும் நினைவில்கொள்ள வேண்டும்.

மரணத்தை மேற்கொண்டு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்த இயேசு "பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்" *(எபி 9:24)*. "அவர் பரலோகத்திற்குப் போய், தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார்; தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது" *(1பேதுரு 3:22)*. மாற்கு *16:19* சொல்கிறது, அவர் "பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார்". "அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்" *(எபி 12:2)*. எபிரெயர் நிருபத்தில் மூன்று வசனங்களில்

*(1:3, 8:1, 10:12)* உன்னதத்தில் தேவனுடைய வலதுபாரிசத்தில் கிறிஸ்து உட்கார்ந்திருப்பது சொல்லப்பட்டிருக்கிறது. எபேசியர் *1:20-23* ல் நாம் தியானித்த காரியங்களை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

இறங்கின கிறிஸ்து எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக உன்னதத்திற்கு ஏறினதாக நாம் தியானிக்கும் வசனத்தில் குறிப்பிடப்படுகிறார். எரே *23:24*ல் தேவன் சொல்கிறார், “நான் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர் அல்லவோ”. அவர் எல்லா இடங்களிலும் இருப்பதால் தாவீது சொல்கிறார், “உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர்” *(சங் 139:7,8)*. உபாகமம் *4:39* சொல்கிறது, “உயர வானத்திலும் தாழ பூமியிலும் கர்த்தரே தேவன், அவரைத் தவிர ஒருவரும் இல்லை”. அவர் சொல்கிறார், “வானம் எனக்கு சிங்காசனம், பூமி எனக்குப் பாதப்படி” *(ஏசாயா 66:1)*.

எல்லாவற்றையும் நிரப்புகிறவர் என்று சொல்லும்போது தேவனே சகலவற்றையும் ஆளுகை செய்கிறவர் என்றும், சகலவற்றையும் போஷிக்கிறவர் என்றும் பொருள் கொள்ளலாம். சபைக்குத் தேவையான சகல ஆசீர்வாதங்களும், மேன்மைகளும் அவர் மூலமாயும், அவர் வழியாகவும் மட்டுமே வருகிறது என்பதை பின்வரும் வசனங்களின் மூலமாக அறிந்துகொள்கிறோம். எபேசியர் *1:23* சொல்கிறபடி, “எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு, அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்”. கொலோ *1:16* வாசித்துப் பாருங்கள்.

**மேலும், நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும், ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும் வரைக்கும் (எபே 4:11)**

தொடர்ந்து வரும் 13வது வசனத்தில் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை வளர்ச்சியடையவேண்டும் என்பதற்காக தேவனால் நியமிக்கப்பட்ட அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், மேய்ப்பர், போதகர் என்ற ஊழியங்கள் குறிப்பிடப்படுகின்றன. அவர்களுக்கு கொடுக்கப்படும் கடமைகளும் பொறுப்பும் 11,12 வசனங்களில் சொல்லப்படுகின்றன. கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் விசுவாசத்திலும், அறிவிலும் பூரணபுருஷராக வேண்டும் என்பதே பவுலின் எதிர்பார்ப்பு. அதாவது நாம் கிறிஸ்துவுக்குள் முழுமை பெற்றவர்களாக மாறவேண்டும். அந்த முழுமை எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும் என்பதையும் பவுல் அறிவிக்கிறார். "கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்க" என்கிறார் பவுல்.

நமக்கு முன்பாக ஒரு இலக்கு வைக்கப்படுகிறது. **நாம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப் போல ஆகும்வரை வளரவேண்டுமாம்.** இந்த மகத்துவமான மேன்மையைப் பெற இரண்டே இரண்டு காரியங்கள்தான் தேவைப்படுகின்றன. 1. விசுவாசம், 2. அறிவு. நாம் அனைவரும் "தேவனுடைய குமாரனை"ப் (தேவனுடைய குமாரன் என்ற பதம் இங்கேயும் ரோமர் 1:5, கலா 2:20, 1தெச 1:10 ஆகிய நான்கு இடங்களில் மட்டுமே பவுல் குறிப்பிடுகிறார்) பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்படவேண்டும் என்கிறார் பவுல். 1தெச 3:10ல் அதற்காக அவர் இவ்வாறு ஜெபிக்கிறார், "உங்கள் விசுவாசத்தின் குறைவுகளை நிறைவாக்கும்பொருட்டு, இரவும் பகலும் மிகவும் வேண்டிக்கொள்ளுகிறோம்". நாம் அனைவரும் என்று சொல்லி இந்த நிருபத்தை வாசித்து தியானிக்கும் உங்களுடனும் என்னுடனும் பவுல் தன்னை இணைத்துக் கொள்வதைக் கவனியுங்கள். கிறிஸ்தவர்களாகிய நமக்குள் ஒரு ஒருமைப்பாடு அவசியம் தேவைப்படுகிறது. ஏனென்றால் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கென்றும் தேவன் ஒரு ஊழியத்தை நியமித்திருக்கிறார்.

பாவ மனிதர்களாகிய நாம் கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியை அடைய முடியுமா என்ற ஒரு கேள்வி எழும்பக்கூடும்.

"ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரபிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது" *(கொலோ 2:9)* என்று வாசிக்கிறோம். பிரசங்கி திட்டவட்டமாகச் சொல்கிறார், "ஒரு பாவமும் செய்யாமல் நன்மையே செய்யத்தக்க நீதிமான் பூமியிலில்லை" *(7:20)*. "நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன்" *(பிலிப் 3:12)* என்று அப்போஸ்தலனாகிய பவுலினாலேயே சொல்லமுடியவில்லையே. ஆனால் அந்த அதிகாரத்தின் கடைசிவசனத்தில் பவுல் அறிவிக்கும் அறிக்கை என்னவென்று பாருங்கள். "அவர் (கிறிஸ்து) எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" *(பிலிப் 3:21)*. தேவனுடைய வல்லமையான செயலாற்றலினால் மட்டுமே இது சாத்தியமாகும்.

கொலோ *3:4*ல் நிச்சயத்தோடு பவுல் சொல்லும் அறிக்கையைப் பாருங்கள். "நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்". இயேசு சொல்கிறார், "நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப் போலப் பிரகாசிப்பார்கள்" *(மத் 13:43)*. "நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்" *(2கொரி 3:18)*. இந்த அனுபவத்தையே 1யோ *3:2* இவ்விதமாகச் சொல்கிறது, "அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்".

இந்த கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியை அடைவது எப்படி என்பதையும் பவுல் இந்த வசனத்திலேயே அறிவிக்கிறார். தேவகுமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாக வேண்டும் என்கிறார். விசுவாசமும் அறிவும் நம்மில் எப்போதும் காணப்படவேண்டும். இவை இரண்டுமே

பேதுருவிடம் இருந்ததினால்தான் தன்னுடைய வீழ்ச்சியின் மத்தியிலும் நிலைநிறுத்தப்பட்டார் என்று பார்க்கிறோம். அவர் கிறிஸ்துவிடம் சொல்கிறார், "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும், அறிந்தும் இருக்கிறோம்" (யோ 6:69). சமாரிய ஸ்திரீயிடம் அந்த பட்டணத்தார், "அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலக ரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம்" என்றார்கள் (யோ 4:42). **நாம் நன்றாக அறிந்துகொண்ட காரியத்தைத்தான் விசுவாசிக்கமுடியும். நாம் விசுவாசிக்கும் காரியத்தைத்தான் அறிந்துகொள்ள முடியும்.**

கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்கதாக நாம் பூரணபுருஷராக முடியும் என்ற நிச்சயம் நம்மை சிருஷ்டித்த தேவனிடம் இருந்ததால்தான் அவர் சொல்கிறார், "கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக" (லேவி 20:26). **நம்மால் செய்யக்கூடாத ஒரு காரியத்தைச் செய்யும்படி தேவன் ஒருபோதும் சொல்லமாட்டார்.** கிறிஸ்து சொல்கிறார், "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது-போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" (மத் 5:48).

நம்மை பூரண புருஷராக்கும் பொறுப்பை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து எடுத்துக்கொண்டிருப்பதை யோவான் 17:19ல் பார்க்கிறோம். அவர் தன் பிதாவிடம், தான் உலகில் இருந்த கடைசி நாட்களில் இவ்விதமாக வேண்டுதல் செய்கிறார், "அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்". பாவமே இல்லாத கிறிஸ்து நம்மை பூரண புருஷராக்கும் ஒரே காரணத்துக்காக தம்மையே பரிசுத்தப்படுத்துகிறார் என்று எடுத்துக்கொள்ளலாம்.

**பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும் (எபே 4:12)**

*"அவர் (கிறிஸ்து) உன்னதத்துக்கு ஏறி சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார்" என்று 8வது வசனத்தில் பார்த்தோம். அடியில் கண்ட மூன்று காரணங்களுக்காக மட்டுமே தேவன் வரங்களைக் கொடுக்கிறார்.*

1. ***பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டாக***
   (perfecting of the saints - katartismos)

2. ***சுவிசேஷ ஊழியம் நடைபெறும்படியாக***
   (work of the minisitry - diakonia)

3. ***சபை பக்திவிருத்தியடையும்படியாக***
   (edifying of the body of Christ - oikodomé)

*இந்த வரங்களை செயல்படுத்தும் ஊழியக்காரர்கள் யார் என்பது அடுத்த வசனத்தில் சொல்லப்படுகிறது.*

*முதலாவதாக தேவனுடைய பரிசுத்தவான்கள் சீர்பொருந்தப்பட வேண்டும் என்கிற காரியம் சொல்லப்படுகிறது. தேவன் "உங்களை சீர்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக" (1பேதுரு 5:10) என்று ஜெபிக்கிறார் பேதுரு. பவுல் ஜெபிக்கிறார், "நீங்கள் தம்முடைய சித்தத்தின்படி செய்ய உங்களைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குவாராக" (எபி 13:21).*

*தன்னுடைய சபையில் பலவிதமான வரங்களுடனும், கிருபைகளுடனும் தேவன் பரிசுத்தவான்களை நியமித்திருக்கிறார். அவர்கள் ஒருவரோடொருவர் சீர்பொருந்தி செயல்படவேண்டும். ஒரு கடிகாரத்தில் பல வித்தியாசமான இயந்திர பாகங்கள் தனித்தனியே பூரணமுள்ளவைகளாக இருந்தாலும் அவை எல்லாம் ஒன்றோடொன்று சீர்பொருந்தும் வகையில் இணைக்கப்பட்டிருந்தால் மட்டுமே கடிகாரம் சரியான நேரத்தைக் காட்டமுடியும். தேவனுடைய ஊழியக்காரர்கள் சீர்பொருந்தி ஒருவரோடு ஒருவர் ஐக்கியத்தோடு*

செயல்படவேண்டும். அவர்களில் காணப்படும் மனமேட்டிமை, பெருமை, பொருளாசை, மற்றவர்களிலும் தங்களை மேன்மையானவர்களாய் கருதும் மனப்பான்மை சபையின் வளர்ச்சியில் பெரிய பாதிப்பை உண்டாக்குவதைப் பார்க்கிறோம்.

இரண்டாவதாக சுவிசேஷத்தின் வேலைக்காக வரங்கள் கொடுக்கப்படுகிறது. தேவ வசனத்தைப் போதித்து (அப் 6:4) மனிதர்களை இரட்சிப்புக்குள் வழிநடத்துவதே சுவிசேஷ ஊழியம். அற்புத அடையாளங்களைச் செய்வதும், பிசாசுகளைத் துரத்துவதும், வியாதியஸ்தரைச் சொஸ்தமாக்குவதும் சுவிசேஷ ஊழியத்தின் ஒரு பகுதியாகவே கருதப்படவேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஊழியம் தேவனுடைய வார்த்தையையே மையமாகக் கொண்டிருந்தது. “அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது; அதற்கென்றே பவுலாகிய நான் ஊழியக்காரனானேன்” (கொலோ 1:23). “கிறிஸ்துவினுடைய நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி நாடுகிறேன்” (ரோமர் 15:21) என்று தன் வாஞ்சையை தெரியப்படுத்துகிறார் பவுல். “சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ” (1கொரி 9:16) என்கிறார்.

தேவனுடைய பரிசுத்தவான்கள் சீர்பொருந்தினவர்களாய் சுவிசேஷ ஊழியத்தை நிறைவேற்றும்போது பவுல் அறிவிக்கிற மூன்றாவது காரியம் இயல்பாகவே நடக்கிறது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைகிறது. பவுல் சொல்கிறார், “நம்மில் ஒவ்வொருவனும் பிறனுடைய பக்திவிருத்திக்கேதுவான நன்மையுண்டாகும்படி அவனுக்குப் பிரியமாய் நடக்கக்கடவன்” (ரோமர் 15:2). மற்றவர்கள் இடறல் அடைய நாம் காரணமாக இருக்கக்கூடாது. “சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக்கடவோம்” (ரோமர் 14:19). “சகலமும் பக்திவிருத்திக்கேதுவாகச் செய்யப்படக்கடவது”

*(1கொரி 14:26)*. கிறிஸ்தவர்களாகிய நாம் அனுதினமும் பக்தியில் விருத்தியடைந்துகொண்டே இருக்கவேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம்.

**அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். (எபே 4:13)**

6வது வசனத்தில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் என்று பார்த்தோம். இந்த அதிகாரத்தில் ஆவிக்குரிய வரங்களாக எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதால் இந்த வசனம் குறிப்பிடும் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், மேய்ப்பர், போதகர்களே (apostles, prophets, evangelists, pastors, teachers) சபையின் வளர்ச்சிக்காக தேவன் தந்தருளிய வரங்களாகக் கருதப்பட வேண்டும் என்று சில வேதபண்டிதர்கள் கூறுகிறார்கள். அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், மேய்ப்பர், போதகர் என்ற ஐந்து ஊழியங்கள் இங்கே குறிப்பிடப்படுகின்றன என்றாலும் சபையின் மேய்ப்பர்களே அந்த சபைக்குப் போதகர்களாக செயல்படவேண்டும் என்பதால் இந்த இரண்டு உத்தியோகங்களும் ஒருங்கிணைத்துச் சொல்லப்பட்டிருப்பதாக சில வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள். *1கொரி 12:28*லும் ஊழியர்களின் பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

எபேசியர் *2:20*ல் "அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்" என்று எழுதப்பட்டிருந்ததைப் பார்த்தோம். எல்லா ஊழியங்களிலும் இவை இரண்டுமே முக்கியமானவையாகக் கருதப்படுவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. கிறிஸ்துவிடமிருந்து நேரடியாக அழைப்பைப் பெற்று, அவரோடு இணைந்து, அவரால் பயிற்றுவிக்கப்பட்டவர்களே அப்போஸ்தலர்கள் என்று அழைக்கப்பட முடியும் என கருதப்படுகிறது *(மத் 10:1-4, மாற்கு 3:13, 14, லூக்கா 6:13, அப் 9:15)*.

யூதாசின் மரணத்துக்குப் பின் ஆதி சபை சீட்டுபோட்டு மத்தியா என்பவரை அப்போஸ்தலராக தெரிந்து கொண்டாலும் *(அப் 1:26)* தேவனிடமிருந்து நேரடியாக அப்போஸ்தல அழைப்பைப் பெற்றுக்கொண்டவர் பவுல். மகாபிரதான அப்போஸ்தலருக்கும் தான் எவ்வளவும் குறைந்தவனில்லை என்று பேசும் பவுல் *(2கொரி 12:11)*, "அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவிதமான பொறுமையோடும், அதிசயங்களோடும், அற்புதங்களோடும், வல்லமைகளோடும் உங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டதே" *(2கொரி 12:12)* என்று தன்னுடைய உன்னதமான அழைப்பை நிருபிக்கிறார். நிருபங்களில் தான் "அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவன்" *(ரோமர் 1:1)* என்று தன்னை பலமுறை அறிமுகப்படுத்துகிறார்.

அப்போஸ்தலர் என்றால் அனுப்பப்பட்டவர் என்று பொருள்படும். அனுப்பப்பட்ட ஒருவர் அனுப்பினவரின் அதிகாரத்தை உடையவராக இருக்கிறார். அனுப்பினவரின் சார்பில் செயல்படுகிறார். கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபு *(கலா 1:19)*, பவுலுடன் காவலில் கட்டுண்டவர்களாயிருந்த அன்றோனீக்கு, யூனியா *(ரோமர் 16:7)*, பர்னபா *(அப் 14:14)*, சில்வான் *(1தெச 2:6, 1:1)*, இன்னும் பெயர் குறிப்பிடப்படாத சிலர் *(1கொரி 15:7)* வேதாகம நாட்களிலேயே அப்போஸ்தலர்கள் என்று குறிப்பிடப்படுகிறார்கள். இந்த நாட்களிலும் பல ஊழியக்காரர்கள் தங்களை அப்போஸ்தலர்கள் என்று அழைத்துக்கொள்வதைப் பார்க்கிறோம். வேதாகம நாட்களிலும் அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக்கொண்ட போலி அப்போஸ்தலர்கள் இருந்திருக்கிறார்கள் *(2கொரி 11:13)* என்றால் கடைசி நாட்களில் ஊழியக்காரர்களின் செயல்பாடுகளைக் குறித்து அதிக எச்சரிக்கையுடன் இருக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது.

மனித இனத்துக்கு தேவனுடைய வார்த்தையைக் கொண்டுவருகிறவர்களே தீர்க்கதரிசிகள். கத்தோலிக்க வேதாகமத்தில் அவர்கள் "இறைவாக்குரைப்போன்" என்று அழைக்கப்படுகிறார்கள். பழைய ஏற்பாட்டில் ஐந்தில் ஒரு பகுதி தீர்க்கதரிசன வார்த்தையாக இருக்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றி மொத்தம் 333 தீர்க்கதரிசனங்கள் வேதத்தில் இருக்கின்றன. "ஞானதிருஷ்டிக்காரன்"

(1சாமு 9:9) என்றும் அழைக்கப்படும் இவர்கள் வருங்காரியங்களைக் குறித்த வெளிப்பாடுகளைத் தேவனிடமிருந்து பெற்று சபைக்கு அறிவித்தார்கள் (அப் 11:28, 21:9,11). "கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்" (எசே 46:1) என்று அதிகாரத்தோடு பேசும் அதிகாரத்தை தேவன் இவர்களுக்குக் கொடுத்திருந்தார்.

அநேக கள்ளத்தீர்க்கதரிசிகள் பழைய ஏற்பாட்டு நாட்களிலும், புதிய ஏற்பாட்டு நாட்களிலும் இருந்தார்கள். இன்றைய நாட்களிலும் இருக்கிறார்கள். குறிசொல்வதுபோல தீர்க்கதரிசனம் அறிவிக்கும் ஊழியக்காரர்கள் பெருகிவரும் கடைசிநாட்களில் நாம் இருக்கிறோம். "தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ மனுஷருக்குப் பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசுகிறான்" (1கொரி 14:3) என்கிறார் பவுல். இவற்றை நாம் தீர்க்கதரிசனமாகக் கருதுவதில்லை. குறிசொல்லுவது போல் சொல்லப்படும் தீர்க்கதரிசனங்களை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதில்லை.

"உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" (1யோவான் 4:1) என்கிறார் யோவான். சொல்லப்படும் தீர்க்கதரிசனங்களை நிதானிக்கும் அதிகாரம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது (1கொரி 14:29). தீர்க்கதரிசிகளைக் குறித்து எரேமியா 23:16, 21-26 ல் ஆவியானவர் என்ன சொல்கிறார் என்பதை வாசித்துப் பாருங்கள். "ஒரு தீர்க்கதரிசி கர்த்தரின் நாமத்தினாலே சொல்லும் காரியம் நடவாமலும், நிறைவேறாமலும் போனால், அது கர்த்தர் சொல்லாத வார்த்தை; அந்தத் தீர்க்கதரிசி அதைத் துணிகரத்தினால் சொன்னான்; அவனுக்கு நீ பயப்படவேண்டாம்" (உபா 18:22).

மூன்றாவதாக சுவிசேஷகருடைய ஊழியத்தை பவுல் குறிப்பிடுகிறார். கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாகும் இரட்சிப்பை தேவனை அறியாதவர்களுக்கு அறிவிப்பதே சுவிசேஷகரின் வேலை. ஆதிசபையின் நாட்களில் தேவனால் வல்லமையாக

பயன்படுத்தப்பட்ட சுவிசேஷகன் பிலிப்பு (அப் 8:26-40, 21:8). தீமோத்தேயுவிடம் பவுல் சொல்கிறார், "சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று" (2தீமோ 4:5).

சுவிசேஷகர்கள் தேசம் எங்கும் சென்று சத்தியத்தை அறிவித்து ஆதாயப்படுத்திக்கொண்ட ஆத்துமாக்களை, திருச்சபை என்ற அமைப்புக்குள் கொண்டு வந்து அவர்களைக் கட்டிக்காப்பது மேய்ப்பரின் கடமையாகிறது. "நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறது போலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதைப் போலவும், நான் என்னுடையவைகளை அறிந்தும், என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்" (யோ 10:14,15) என்கிறார் இயேசு. சபையின் மேய்ப்பனுக்கும் சபையின் விசுவாசிகளுக்குமிடையே இருக்கவேண்டிய நெருக்கமான உறவு இங்கே வலியுறுத்தப்படுகிறது. எபி 13:20ல் அவர் பெரிய மேய்ப்பன் என்றும் 1பேதுரு 5:4ல் பிரதான மேய்ப்பன் என்றும் அழைக்கப்படுகிறார். 1பேதுரு 5:2-4 வாசித்துப் பாருங்கள். அப் 20:28 சொல்கிறது, "உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்". சிதறடிக்கிற மேய்ப்பர்களைக் குறித்தும், அவர்கள் பெறவிருக்கும் தண்டனையைக் குறித்தும் எரே 23:1,2 ல் வாசித்துப் பாருங்கள்.

கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைவதில் போதகர்களின் பங்கு முக்கியமானது. 1கொரி 12:28ல் சொல்லப்படும் ஊழியர்களின் பட்டியலில் பவுல் போதகர்களுக்கு மூன்றாவது இடத்தைக் கொடுக்கிறார். "தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்.

போதகர்களின் பணி என்ன என்பது நெகேமியா *8:8*ல் இவ்வாறு சொல்லப்படுகிறது, "அவர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணப் புஸ்தகத்தைத் தீர்க்கமாக வாசித்து, அர்த்தஞ்சொல்லி, வாசித்ததை அவர்களுக்கு விளங்கப்பண்ணினார்கள்". இந்த நாட்களில் உபதேசிக்கிற ஊழியத்தின் மேன்மையை சபை அறிந்துகொள்ளத் தவறியதால்தான் பல கள்ள உபதேசங்களை சத்துரு சபைகளில் விதைத்திருக்கிறான். வஞ்சிக்கிற ஊழியர்களும் பெருகிவருகிறார்கள். *1*தீமோ *5:17* சொல்கிறது, "திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை இரட்டிப்பான கனத்துக்குப் பாத்திரராக எண்ணவேண்டும்". "ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்தி சொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக் கடவன்" (ரோமர் *12:7,8*) என்கிறார் பவுல்.

"ஏற்படுத்தினார்" என்று இந்த வசனம் முடிவடைகிறது. சில மொழிபெயர்ப்புகள் இந்த ஊழியங்களை "தந்தருளினார்" என்று சொல்கின்றன. இந்த ஊழியங்களை தேவனே திட்டமிட்டு சபைக்கு வழங்கினார் என்பதை அறிந்து கொள்ளுங்கள். மத்தேயு *9:37, 38*ல் இயேசு சொல்கிறார், "அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி வேண்டிக்கொள்ளுங்கள்".

கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் தனித்தனியே அப்போஸ்தலர்களாகவும், தீர்க்கதரிசிகளாகவும், சுவிசேஷகர்-களாகவும், மேய்ப்பர்களாகவும், போதகர்களாகவும் இருக்கிறோம். அப்போஸ்தலர் என்ற முறையில் தேவன் நமக்கு அருளிச் செய்திருக்கும் வரங்களின் மூலம் புது இடங்களில் ஆத்தும அறுவடை செய்யவேண்டும். தேவனுடைய வார்த்தையை அறிவிப்பதன் மூலம் நாம் தீர்க்கதரிசிகள் ஆகிறோம். கிறிஸ்துவைப்பற்றிய சாட்சியை அவரை அறிந்துகொள்ளாதவர்-களுக்கு சொல்வதால் சுவிசேஷகர்கள் ஆகிறோம். பெலவீனமான விசுவாசிகளை விசாரித்து போஷிப்பதன்மூலம் மேய்ப்பர்கள் ஆகிறோம். ஆழமான தெய்வீக

சத்தியத்தை அவர்களுக்கு விளங்கும்படியாகச் சொல்வதன்மூலமாக போதகர்கள் ஆகிறோம். ஒரு காரியத்தை திட்டவட்டமாக அறிந்துகொள்ளுங்கள். அன்பு, இரக்கம், மனத்தாழ்மை, உண்மை, பொறுமை, தேவபயம், பொருளாசை இல்லாமை, பெருமை இல்லாமை ஆகியவை இருந்தால் மட்டுமே நாம் தேவனுக்கு உகந்த ஊழியத்தைச் செய்யமுடியும்.

**நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்-களாயிராமல் (எபே 4:14)**

இனி நாம் குழந்தைகளைப் போல் இருக்கக்கூடாது என்று சொல்லும்போது பவுல் எதை அறிவுறுத்துகிறார் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். குழந்தைகளைப்போல் இருப்பது ஒருவகையில் மேன்மையான காரியம். ஏனென்றால் அவர்கள் பாவம் செய்வதில்லை. "புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்" *(1பேதுரு 2:3)* என்கிறார் பேதுரு. ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைக்கப்பட்ட காரியங்கள் பாலகருக்கு வெளிப்படுத்தப்-பட்டதனிமித்தம் கிறிஸ்து தேவனை ஸ்தோத்திரிப்பது மத் *11:25*ல் சொல்லப்பட்டிருக்கிறது. "மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்" *(மத் 18:3)* என்கிறார் இயேசு. மேலும் சொல்கிறார், "சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள், அவர்களை தடை பண்ணாதிருங்கள்; பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது" *(மத் 19:14)*.

குழந்தைகள் வளர்ச்சியடையாமல் குழந்தைகளாகவே இருந்தால் அவர்கள் எளிதில் வஞ்சிக்கப்படுவார்கள் என்பதைத்தான் பவுல் இந்த வசனத்தில் குறிப்பிடுகிறார். அப்போஸ்தலனாகிய பவுலும் ஆவியில் ஒருகாலத்தில் குழந்தையாக இருந்தவர்தான். அவர் சொல்கிறார், "நாமும் சிறுபிள்ளைகளாயிருந்த காலத்தில்

இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு அடிமைப்பட்டவர்களாயிருந்தோம்" (கலா 4:3). 1கொரி 14:20ல் சொல்கிறார், "சகோதரரே, நீங்கள் புத்தியிலே குழந்தைகளாயிராதேயுங்கள்; துர்க்குணத்திலே குழந்தைகளாயும், புத்தியிலோ தேறினவர்களாயுமிருங்கள்".

குழந்தைகள் என்று பவுல் முதிர்ச்சியடையாத கிறிஸ்தவ விசுவாசிகளை மட்டுமே குறிப்பிடுகிறார். இப்படிப்பட்டவர்களைக் குறித்து எபி 5:12,13 இவ்வாறு சொல்கிறது, "நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள். பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான்". புட்டிப்பால் குடிக்கும் ஆவிக்குரிய குழந்தைகள் இந்த நாட்களிலே சபைகளில் அதிகமாகக் காணப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்களிடம் பவுல் சொல்கிறார், "நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல், மாம்சத்துக்குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேசவேண்டியதாயிற்று" (1கொரி 3:1).

இந்த ஆவிக்குரிய குழந்தைகளுக்கு சம்பவிப்பதை பவுல் வசனத்தின் பின்பகுதியில் அறிவிக்கிறார். இவர்கள் மனிதர்களுடைய சூதினாலும், வஞ்சனையும், தந்திரமும் நிறைந்த போகத்தினாலும் அகப்படுகிறார்கள். ஒரு கப்பல் எவ்வாறு காற்றினாலும், அலைகளினாலும் அலைக்கழிக்கப்படுகிறதோ அவ்வாறு நிலைதடுமாறுகிறார்கள். பொங்கி எழும்பும் அலைகளினால் உண்டாகும் ஆபத்து எத்தகையது என்பதை பலமுறை கடற்பயணம் மேற்கொண்ட பவுல் நன்றாகவே அறிவார் (அப் 27:14-44). யாக்கோபு 1:6 சொல்கிறது, "சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்". "இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்" (வசனம் 8). இப்படிப்பட்டவர்களின் விசுவாசமும் அன்பும் எளிதில் நிலைதடுமாறிவிடுகிறது. இவர்களைக் குறித்து தேவன் வேதனையோடு சொல்கிறார், "உங்கள் பக்தி காலையில் காணும் மேகத்தைப் போலவும், விடியற்காலையில் தோன்றும் பனியைப் போலவும் ஒழிந்து போகிறது" (ஓசியா 6:4).

பவுல் சொல்வதுபோல், இந்த கடைசிநாட்களில் தந்திரமுள்ள, யாரையும் எளிதில் விழத்தட்டக் கூடிய தவறான போதனைகள் உலகமெங்கும் பரவிக்கொண்டிருப்பதை நாம் காணமுடிகிறது. "சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்தது" *(2கொரி 11:3)* என்று வாசிக்கிறோம். இவை சூதும் வஞ்சிக்கிறதிற்கேதுவானதுமாயும் இருப்பதால்தான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, "கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ பட்சிக்கிற ஓநாய்கள்" *(மத் 7:15)* என்று நம்மை எச்சரிக்கிறார். எபேசு சபையின் மூப்பர்களிடம் பவுல் சொல்கிறார், "நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்". உங்கள் சபைகளிலிருந்தே பலர் சத்தியத்துக்கு விரோதமாக எழும்பக் கூடும் என்கிறார் பவுல். "லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" *(கொலோ 2:8)* என்கிறார்.

கடலின்மேல் காற்று அடிக்கும்போது அலைகள் உயரத்துக்கு ஏறுவதும், உடனடியாக ஆழத்துக்கு இறங்குவதுமாயிருக்கும். **ஆவிக்குரிய குழந்தைகளின் விசுவாசமும் ஏறி இறங்கும் தன்மையுடையது.** பேதுருவை உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள். கடலின்மேல் நடந்துவரும் இயேசுவிடம், "நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும்" *(மத் 14:28)* என்று உரிமையோடு சொல்லும் விசுவாசம் பேதுருவிடம் இருந்தது. ஜலத்தின்மேல் நடந்து வந்த பேதுருவின் விசுவாசம் காற்று பலமாயிருப்பதைக் கண்டபோதோ நிலைதடுமாறுகிறது *(வசனம் 30)*. "அற்பவிசுவாசியே" *(வசனம் 31)* என்று இயேசு அவரை அழைக்கிறார்.

"நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசு" *(மத் 16:16)* என்ற மகத்துவமான விசுவாச அறிக்கையிட்ட பேதுரு, இயேசு

தன்னுடைய பாடுமரணத்தைப் பற்றி பேசியதும் அவிசுவாச அறிக்கையிடுகிறார், "இது உமக்குச் சம்பவிப்பதில்லை" *(வசனம் 22)*. "உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன்" *(யோவான் 13:37)* என்று உற்சாகமாக பேசிய பேதுரு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை மறுதலிக்க அதிக நாட்கள் எடுக்கவில்லை. காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களுக்கு உண்டாகும் ஆபத்தை நன்றாக அறிந்து கொள்ளுங்கள்.

**அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். (எபே 4:15)**

13வது வசனத்தின்படி தேவன் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரை தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பர்களாகவும் போதகர்களாகவும் நியமித்தார் என்றால் அதற்குக் காரணம் என்ன என்பது தொடந்துவரும் வசனங்களில் சொல்லப்படுகிறது.

1. தவறான போதனைகளில் இருந்து தப்பித்துக்கொள்ள *(வசனம் 14)*

2. அன்புடன் சத்தியத்தைக் கைக்கொள்ள *(வசனம் 15)*

3. தலையாகிய கிறிஸ்துவுக்குள், அவரைப்போல் வளரும்படியாக *(வசனம் 15)*

கிறிஸ்தவர்களாகிய நாம் சத்தியத்தைக் கைக்கொள்ளவேண்டும் என்பது மட்டுமல்ல, அந்த முயற்சியில் நம்முடைய அன்பு வெளிப்படவேண்டும். அன்பின் மேன்மையை சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் பவுல் வலியுறுத்துவதைப் பார்க்கிறோம் *(1:4, 3:17, 4:2, 5:2)*. **அன்பு இல்லாத நிலையில் சத்தியத்தை கைக்கொள்வது** கூடாத காரியம். ஏனென்றால் அப்படிச் செய்யும்போது நாம் மற்றவர்களைப் பயமுறுத்துகிறவர்களாகத்தான் இருப்போம். சத்தியத்தைக் கைக்கொள்ளாமல் அன்பை மட்டும்

பிரசங்கிப்போமானால் அதனால் யாருக்கும் இரட்சிப்பு உண்டாவதில்லை.

இயேசு நேசிக்கிறார், இயேசு அழைக்கிறார் என்று கிறிஸ்துவின் அன்பை மட்டுமே பிரபலப்படுத்தும் ஊழியங்கள் இந்த நாட்களில் பெருகி வருகின்றன. சத்தியம் வலியுறுத்தப்படாத நிலையில் யாருக்கும் எந்த நன்மையும் இல்லை. **மக்கள் எதைக் கேட்க விரும்புகிறார்களோ அதையே நாம் பிரசங்கிப்போமானால் நமக்கு ஐயோ!** அவர்கள் விரும்புகிறார்களோ இல்லையோ, சத்தியம் அவர்களுக்குச் சொல்லப்படவேண்டும். இயேசு சொல்கிறார், "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (*யோவான் 8:32*). "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" (*யோவான் 17:17*). தேவனுடைய வார்த்தையாகிய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவர்களே சத்தியத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள்.

மூன்றாவதாக தலையாகிய கிறிஸ்துவுக்குள் கிறிஸ்தவர்களாகிய நாம் எல்லாவற்றிலும் வளரவேண்டும் என்று சொல்லப்படுகிறது. நாம் பார்த்தபடி "எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" (*எபே 1:23*). "அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்" (*கொலோ 1:18*). நாம் எல்லாவற்றிலும் வளரவேண்டுமானால் என்ன செய்யவேண்டும்? "கணுக்களாலும், கட்டுகளாலும் உதவி பெற்று, இணைக்கப்பட்டு, தேவவளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீரமுழுவதையும் ஆதரிக்கிற தலையை" பற்றிக்கொள்ளவேண்டும் (*கொலோ 2:18*). தலையாகிய கிறிஸ்துவைப் பற்றிக்கொள்வதின் மூலமாகவே நாம் ஆவியில் வளரமுடியும்.

நாம் ஆவிக்குரிய ரீதியாக வளர்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை நிருபிக்கும் ஒரே காரியம் நம்மிலிருந்து வெளிப்படும் கனிகள். கொடிகள் திரட்சைச்செடியைப் பற்றிக்கொண்டிருந்தால்தான் அதிலிருந்து கனிகள் உருவாகும். கிறிஸ்து சொல்கிறார், "நானே

*திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்" (யோவான் 15:5).*

**அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது. (எபே 4:16)**

*இந்த வசனம் அறிவிக்கும் காரியம் இதுதான். நம்முடைய முழு சரீரமும், அதில் காணப்படும் எல்லா அவயவங்களும் தேவனைச் சார்ந்தது. இந்த அவயவங்கள் ஒவ்வொன்றும் கணுக்களின் மூலமாக ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டு அதற்கென்று நியமிக்கப்பட்ட வேலையைச் செய்து வருகிறது. அதன் விளைவாக முழு சரீரமும் வளர்ச்சி அடைகிறது என்பது மட்டுமல்ல, அன்பையும் பக்திவிருத்தியையும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு வழங்குகிறது. சபையை உயிர்ப்பிக்கும் வல்லமையும், அதை ஓங்கி வளரச்செய்யும் வல்லமையும் தலையாகிய கிறிஸ்துவிடமிருந்து மட்டுமே வருகிறது. எவ்வாறு சரீரத்தின் ஒவ்வொரு உறுப்புக்கும், தலைக்கும் இடையே நெருக்கமான தொடர்பு இருக்கிறதோ, அவ்வாறு சபையின் ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவுடன் நேரடியான தொடர்புடையவர்களாய் இருக்கவேண்டும். தலையானவராகிய கிறிஸ்து ஒவ்வொரு அவயவத்துக்கும் தேவையான உயிரையும், பெலனையும் வழங்கிக்கொண்டே இருக்கிறார்.*

*ரோமர் 12:4,5 இந்த சத்தியத்தை இவ்விதமாக விளக்குகிறது. "நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராததுபோல, அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்". "சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும்,*

சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது" *(1கொரி 12:12)*. கண், காது, மூக்கு, கை, கால், விரல்கள், கழுத்து போன்ற அவயவங்களை நாம் வெளிப்படையாகக் கண்டு உணரமுடிகிறது. இருதயம், ஈரல், சிறுநீரகம், கணையம், குடற்பை போன்ற பல அவயவங்களை நாம் காணமுடியாது. ஆனால் அவை எல்லாமே தலையோடு இணைக்கப்பட்டதன் விளைவாக தனக்கென்று நியமிக்கப்பட்ட வேலையைச் செய்து வருகின்றன. இதையே பவுல், தன்தன் அளவுக்குத் தக்கதாய் கிரியை நடத்துவதாக குறிப்பிடுகிறார்.

அன்பினால் பக்திவிருத்தி உண்டாக்குவதைக் குறித்து பவுல் பேசும்போது சபையார் ஒருவர்மேல் ஒருவர் கொண்டிருக்கவேண்டிய அன்பும், கரிசனையும், அக்கறையும் வெளிப்படுத்தப்படுகிறது. அவயவங்கள் தன்தன் அளவுக்குத் தக்கதாய் கிரியை செய்யவேண்டும் என்பதையும் பவுல் பேசுகிறார். சரீரத்தின் ஒரு அவயம் தன் அளவுக்கு மேலாக வளரும்போது அது புற்றுநோய் என்று அழைக்கப்படுகிறது.

## கிறிஸ்தவ நடத்தை (எபே 4:17-4:24)

**ஆதலால், கர்த்தருக்குள் நான் உங்களுக்குச் சாட்சியாகச் சொல்லி எச்சரிக்கிறது என்னவெனில், மற்றப் புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறதுபோல நீங்கள் இனி நடவாமலிருங்கள். (எபே 4:17)**

"ஆதலால்" என்று இந்த வேதபகுதி துவங்குகிறது. ஆதலால் என்பதற்குப் பயன்படுத்தப்படும் 'Lego' என்ற கிரேக்க பதம் புதிய ஏற்பாட்டில் 180 இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. முந்தின வசனத்தோடு இந்த வேதபகுதியை இணைக்கும்படியாக பவுல் இந்த பதத்தைப் பயன்படுத்துகிறார். சரீரமாகிய சபையின் ஒவ்வொரு அவயவமும் தலையாகிய கிறிஸ்துவுடன் இசைவாகக்கூட்டி இணைக்கப்பட்டிருப்பதால், விசுவாசிகளாகிய நாம் நம்முடைய அன்றாட வாழ்க்கையில் எவ்வாறு நடக்கக்கூடாது, எவ்வாறு நடக்கவேண்டும் என்பது இந்த வேதபகுதியில் சொல்லப் பட்டிருக்கிறது. பவுல் அறிவிக்கும் மூன்று காரியங்கள்

1. நாம் சுயத்தை மேற்கொள்ளவேண்டும் (வசனம் 17-24)

2. நாம் சாத்தானை மேற்கொள்ளவேண்டும் (வசனம் 25-27)

3. நாம் பாவத்தை மேற்கொள்ளவேண்டும் (வசனம் 4:28-5:4)

"கர்த்தருக்குள் நான் சாட்சியாகச் சொல்லி எச்சரிக்கிறது என்னவென்றால்" என்று இந்த வேதபகுதியை பவுல் துவங்குகிறார். கலாத்தியர் 5:3லும் பவுல் தன்னை சாட்சியாக வைத்துப் பேசுவதைப் பார்க்கிறோம். அப் 20:27ல் சபையாரையும், தேவனையும் சாட்சியாக வைத்து, தான் அறிவிக்கும் காரியத்தின் முக்கியத்துவத்தை பவுல் உறுதிப்படுத்துவதைப் பார்க்கிறோம்.

மற்ற புறஜாதியார் (தேவனை அறியாதவர்கள்) தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறதுபோல எபேசு சபையார் நடக்கக்கூடாது என்பதுதான் பவுலின் நோக்கம். **இரட்சிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைக்கும், இரட்சிக்கப்படாதவர்களின் வாழ்க்கைக்கும் வித்தியாசம் இருக்கவேண்டும்.** இரட்சிக்கப்படாதவர்களின் நடத்தை எப்படிப்பட்டதாக இருக்கிறது? அவர்கள் தங்கள் சுபாவத்தின்படி வீணான சிந்தையிலே நடக்கிறார்கள். தங்கள் தாகத்தினிமித்தம் வெறிக்கக் குடித்து மன இஷ்டப்படி நடக்கிறார்கள் (உபா 29:19). தங்கள் பொல்லாத இருதயத்தின் யோசனையின்படியும் கடினத்தின்படியும் நடக்கிறார்கள் (எரே 7:24). ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய சாத்தானின் ஆவிக்கேற்றபடியாக நடக்கிறார்கள் (எபே 2:2). வேறுவிதமாய் நடக்கிறார்கள் (பிலிப் 3:18). புறஜாதிகளுடைய இஷ்டத்தின்படி நடக்கிறார்கள் (1பேதுரு 4:3). அசுத்த இச்சையோடே மாம்சத்திற்கேற்றபடி நடக்கிறார்கள் (2பேதுரு 2:10). தங்கள் சுயஇச்சையின்படி நடக்கிறார்கள் (2பேதுரு 3:3). துன்மார்க்கமான இச்சையின்படி நடக்கிறார்கள் (யூதா 18).

ஒரு மனிதனில் உருவாகும் சிந்தனைகள் அவனுடைய ஆத்துமாவின் ஆளுகைக்குள்ளாக இருக்கிறது. (மனிதன் ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற முப்பரிமாண நிலையில் சிருஷ்டிக்கப்பட்டவன் என்பதை நாம் அறிவோம்). ரோமர் 1:21ன்படி சிந்தனைகளினாலே

வீணராகும்போது அவர்களுடைய இருதயம் இருளடைந்து விடுமாம். அவர்களை இன்னும் கேடான சிந்தைக்கு தேவனே ஒப்புக்கொடுப்பார் *(ரோமர் 1:28)*. "மாம்ச சிந்தை மரணம்" *(ரோமர் 8:6)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. தன் மாம்ச சிந்தையினாலே வீணாய் இறுமாப்புக் கொண்டிருக்கிற எவனும் தன் பந்தயப் பொருளை இழந்துபோவது நிச்சயம் *(கொலோ 2:19)*.

அதனால்தான் பவுல் பிலி *2:5*ல் "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது" என்கிறார். கிறிஸ்துவின் சிந்தை என்ன என்பதை பிலி *2:6,7,8* ஆகிய வசனங்களில் பவுல் அறிவிக்கிறார். தேவனுடைய ரூபமாயிருந்தும், தம்மைத் தாமே வெறுமையாக்கி, சிலுவை மரணபரியந்தம் தாழ்த்தியதே அவருடைய சிந்தை. இந்த தாழ்மையான சிந்தை நம்மில் காணப்படுகிறதா என்பதை சற்றே யோசித்துப் பாருங்கள். பெருமை, வைராக்கியம், உலக ஆசை, கசப்பு, பொருளாசை, மற்றவர்களைக் குற்றப்படுத்தும் தன்மை, மற்றவர்களோடு ஒப்பிட்டு தன்னை மேன்மையாகப் பேசும் பழக்கம், வீண் பேச்சு, மற்றவர்களை சபிக்கும் மனப்பாங்கு, லௌகீக சிந்தைகள் போன்றவை கிறிஸ்தவர்களாகிய நம்மில் காணப்படுமேயானால் தேவனற்றவர்களுக்கும் நமக்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்றுதான் பொருள்.

நாம் என்ன பேசுகிறோம், என்ன பிரசங்கிக்கிறோம் என்பதை உலகம் பார்ப்பதில்லை. நாம் எவ்வாறு நடக்கிறோம், நம்முடைய அனுதின வாழ்க்கை எப்படி இருக்கிறது என்பதை நம்மைச் சுற்றியிருப்பவர்கள் கவனித்துக் கொண்டே இருக்கிறார்கள். மோசே தேவனோடு நடந்தார் என்பதால் மட்டுமே தேவனுடைய பிரசன்னம் அவரிடம் காணப்பட்டது. அதன் விளைவாகத்தான் அவருடைய முகம் பிரகாசமடைந்தது *(யாத் 34:29,30)*. நம்மில் காணப்படும் பிரச்சனை என்னவென்றால், நமக்கு அடுத்த வீட்டில் இருப்பவர்கள், நம்முடைய தெருவில் குடியிருப்பவர்கள், நம்மோடு அலுவலகத்தில் வேலை செய்பவர்கள் - நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவருக்குள் வந்தபின்னும் நம்முடைய நடத்தையில் எந்த வித்தியாசத்தையும் காணமுடிவதில்லை.

எத்தனையோ மகத்துவமான நிருபங்களை எழுதிய பவுல் கொரிந்து சபையாரைப் பார்த்து என்ன சொல்கிறார் என்று பாருங்கள், "சகல மனுஷராலும் அறிந்தும் வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே. ஏனெனில் நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்களென்று வெளியரங்கமாயிருக்கிறது" *(2கொரி 3:2,3).* **நம்மைப் பார்க்கிறவர்கள், நம்மோடு பழகுகிறவர்கள் நம்மில் கிறிஸ்துவின் சாயலைப் பார்க்கிறார்களா என்பதை யோசித்துப் பாருங்கள்.** அல்லது உலகத்து மனிதர்களைப் போல் இன்னும் பழைய வீணான சிந்தையிலே நடந்துகொண்டிருக்கிறோமா? "உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" *(மத் 5:16)* என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொல்லியிருக்கிறாரே. நம்மிலிருந்து வெளிப்படுகிறது வெளிச்சமா, இருளா என்பதை யோசித்துப் பாருங்கள்.

**அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதயக்கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து (எபே 4:18)**

புறஜாதியாரின் சிந்தனைகள் பயனற்றவை. எனவே கிறிஸ்தவர்களாகிய நாம் அவர்களைப் போல் நடக்கக்கூடாது என்று முந்தின வசனத்தில் பவுல் அறிவித்ததைப் பார்த்தோம். அவர்களுடைய வீணான சிந்தை அவர்களை எங்கே வழிநடத்தியது என்பதை இந்த வசனத்திலும் அடுத்த வசனத்திலும் அறிவித்து சபையை பவுல் எச்சரிக்கிறார்.

1. புத்தியில் அந்தகாரம் *(வசனம் 18,* darkened understanding*)*
2. இருதயக்கடினம் *(வசனம் 18,* blindness of heart*)*
3. அறியாமை *(வசனம் 18,* ignorance*)*

4. தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராகும் நிலைமை (வசனம் 18, alienation from the life of God)

5. உணர்வில்லாத நிலைமை (வசனம் 19, without feelings)

6. சகல அசுத்தங்களையும் நடப்பிக்கும் தன்மை (வசனம் 19, working all uncleanness)

7. காமவிகாரம் (வசனம் 19, lasciviousness)

முதலாவதாக புறஜாதியாரின் வீணான சிந்தை அவர்களுடைய புத்தியை அந்தகாரப்படுத்துகிறது. அந்தகாரம் என்ற வார்த்தை இருளைக் குறிக்கிறது. "தரிசனங்களைக் காணக்கூடாத இராத்திரியும், குறிசொல்லக்கூடாத அந்தகாரமும் உங்களுக்கு வரும்; தீர்க்கதரிசிகளின்மேல் சூரியன் அஸ்தமித்து, அவர்கள்மேல் பகல் காரிருளாய்ப் போகும்" என்கிறார் மீகா (3:6). வீணான சிந்தையிலே நடக்கும் தீர்க்கதரிசிகளின் நிலை பரிதாபத்துக்குரியதாகிவிடுகிறது. அவர்கள் தங்கள் புத்தியில் இருளடைகிறார்கள். புத்தி என்பதற்கு பயன்படுத்தப்படும் Dianoia என்ற கிரேக்க வார்த்தை வேதத்தில் 53 இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கண்களில் பார்வை குறைவதால் உண்டாகும் அந்தகாரத்தை விட இது மிகவும் கொடுமையானது. ஏனென்றால் ஒரு குருடன் தான் குருடன் என்பதை அறிந்தவனாக இருப்பான். புத்தியில் அந்தகாரப்பட்டவர்களோ தங்களுடைய பரிதாபத்துக்குரிய நிலையை அறியாதவர்களாக தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொண்டு இருப்பார்கள்.

கிறிஸ்துவின் நாட்களில் பரிசேயரின் நிலை இப்படி இருந்ததால்தான் அவர்களைப் பார்த்து, "நீங்கள் குருடராயிருந்தால் உங்களுக்குப் பாவமிராது; நீங்கள் காண்கிறோம் என்று சொல்லுகிறபடியினால் உங்கள் பாவம் நிலைநிற்கிறது" (யோவான் 9:41) என்று இயேசு சொல்கிறார். புத்தியில் அந்தகாரப்பட்ட ஒருவனுக்குள் சுவிசேஷ ஒளி பிரவேசிப்பதில்லை. அவர்கள் அந்தகாரத்தில் வாசம் செய்கிறார்கள் என்பதல்ல, அந்தகாரம் அவர்களில் வாசம் செய்கிறது.

இரண்டாவதாக அவர்களுடைய இருதயம் கடினப்படுகிறது. புத்தியில் உண்டான அந்தகாரம் அவர்களுடைய உள்ளான ஆள்தத்துவமான இருதயத்தைத் தாக்க ஆரம்பிக்கிறது. "அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது" (மத் 15:8) என்கிறார் இயேசு. பார்வோன் எவ்வாறு தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்தினான் என்பதை யாத் 8:15,19ல் வாசித்துப் பாருங்கள். தேவனுக்கு விரோதமாக தன் இருதயத்தை ஒரு மனிதன் ஒரேநாளில் கடினப்படுத்தாமல், படிப்படியாக கடினப்படுத்துகிறான் (மாற்கு 6:52, 8:17). அதன்பின் தேவனே அவனைக் கடினப்படுத்தி புறம்பே தள்ளிவிடுகிறார். பார்வோனைக் குறித்து யாத் 10:2ல் அவர் சொல்கிறார், "நானே கர்த்தர் என்பதை நீங்கள் அறியும்படிக்கும், நான் அவன் இருதயத்தையும் அவன் ஊழியக்காரரின் இருதயத்தையும் கடினப்படுத்தினேன்".

தேவனை அறிந்தும் அவரைத் தேவனென்று மகிமைப் படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்த மனிதர்களைக் குறித்து பவுல் பேசுகிறார், "தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது" (ரோமர் 1:21). இதன் விளைவாகவே தேவன் அவர்களை அசுத்தத்துக்கும், இச்சை ரோகங்களுக்கும், கேடான சிந்தைக்கும் ஒப்புக்கொடுத்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது (வசனம் 24,25,26).

மூன்றாவதாக பவுல் தேவனை அறியாத புறஜாதியாரில் காணப்படும் அறியாமையைக் குறித்துப் பேசுகிறார். தங்களுடைய வீணான சிந்தையிலே நடந்துகொண்டிருக்கும் புறஜாதி மனிதர்கள் "தேவனை நோக்கி: எங்களை விட்டு விலகியிரும், உம்முடைய வழியை அறிய விரும்போம்" (யோபு 21:14) என்று சொல்கிறவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தேவனை அறிய விரும்புவதில்லை என்பதால்தான் தங்கள் அறியாமையில் நிலைத்திருக்கிறார்கள். "அவர்கள் கர்த்தருடைய நினைவுகளை அறியாமலும், அவருடைய யோசனையை உணராமலும் இருக்கிறார்கள்" (மீகா 4:12). தேவனுடைய நீதியை அவர்கள் அறிவதில்லை (ரோமர் 10:3). "கர்த்தருடைய வழியையும், தங்கள் தேவனுடைய நியாயத்தையும்

அறியாதிருக்கிறார்கள்" (எரே 5:4). அறியாமை ஒரு மனிதனை நித்திய நரகத்துக்கு நேராகவே வழிநடத்தும்.

புறஜாதியாரைக் குறித்த **நான்காவது** காரியத்தை பவுல் தொடர்ந்து அறிவிக்கிறார். அவர்கள் தேவனுடைய ஜீவனுக்கு அந்நியர். அந்நியர் என்ற வார்த்தையை அயலார் அல்லது அறிமுகம் இல்லாதவர் என்று பொருள்கொள்ளாமல், விரோதிகள் என்று பொருள்கொள்ளவேண்டும். தேவனோடு இல்லாதவன் தேவனுடைய விரோதியாகிறான். எபேசியர் 2:12ல் "வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியர்" என்று குறிப்பிட்டிருந்ததைப் பார்த்தோம். தேவன் ஒருவரே தன்னில்தானே ஜீவனை உடையவராயிருக்கிறார் என்பதால் இவர்கள் தங்களுடைய ஜீவனை இழந்துவிடுகிறார்கள்.

இவர்களுடைய முடிவு என்ன என்பதை நீதி 21:16 இவ்விதமாகச் சொல்கிறது, "விவேகத்தின் வழியைவிட்டுத் தப்பி நடக்கிற மனுஷன் செத்தவர்களின் கூட்டத்தில் தாபரிப்பான்". இவர்களின் மரணத்துக்கு இவர்களே காரணமாக இருக்கிறார்கள். ஏனென்றால் மனித இனத்துக்கு ஜீவனைக் கொடுக்கும்படியாக, தன்னுடைய ஜீவனையே தியாகபலியாக ஒப்புக்கொடுத்த ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை அறிந்துகொள்ள அவர்கள் முன்வரவில்லை. அவருடைய வழியில் நடவாமல் தங்களுடைய வீணான சிந்தையிலேயே நடக்கத் துணிந்தார்கள். இதன்விளைவாக தேவன் அருளுகின்ற நித்திய வாழ்வில் அவர்களுக்கு பங்கு இல்லாமற்போகிறது.

**உணர்வில்லாதவர்களாய், சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களைக் காமவிகாரத்திற்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார்கள். (எபே 4:19)**

முதலாவது நூற்றாண்டில் தேவனுடைய வழியைப் புறக்கணித்து, தங்களுடைய வீணான சிந்தையில் நடந்து கொண்டிருந்தவர்களின் மோசமான நிலைமை எப்படி இருந்தது என்பதைக் குறித்து பவுல் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார். இந்த

திடுக்கிடச்செய்யும் வார்த்தைகள் இன்றைய 21-வது நூற்றாண்டுக்கு கூடுதல் பொருத்தமுடையதாகவே இருக்கிறது. அவர்களைக் குறித்து பவுல் சொல்லும் ஐந்தாவது காரியம் அவர்களுக்கு உணர்வு இல்லை என்பது. தங்களுக்கு எதிராக தேவனுடைய நியாயத்தீர்ப்பு வருவதைக்கூட அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. ஏசாயா 42:25 சொல்கிறபடி, "இவர்கள்மேல் அவர் தமது கோபத்தின் உக்கிரத்தையும், யுத்தத்தின் வலிமையையும் வரப்பண்ணி, அவர்களைச்சூழ அக்கினிஜுவாலைகளைக் கொளுத்தியிருந்தும் உணராதிருந்தார்கள்". "என்னை அடித்தார்கள், எனக்கு நோகவில்லை; என்னை அறைந்தார்கள், எனக்குச் சுரணையில்லை" (நீதி 23:35) என்று சொல்லும் குடிகாரனைப் போல, உணர்வில்லாத நிலைமையில் இவர்கள் காணப்படுகிறார்கள். "இவர்கள் காதாரக்கேட்டும் உணராதிருப்பார்கள், கண்ணாரக் கண்டும் பாராதிருப்பார்கள்" (அப் 28:26) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

உணர்வில்லாத இவர்கள் சகலவிதமான அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிப்பார்கள் என்பதை ஆறாவது காரியமாக பவுல் அறிவிக்கிறார். "கடைசிக் காலத்திலே தங்கள் துன்மார்க்கமான இச்சைகளின்படி நடக்கிற பரியாசக்காரர் தோன்றுவார்கள்" (யூதா 18) என்று எழுதப்பட்டிருக்கிறது. இவர்கள் "வெறிக்கக் குடித்து, மன இஷ்டப்படி நடந்தாலும் எனக்கு சுகமுண்டாயிருக்கும்" (உபா 29:19) என்று தைரியமாகச் சொல்வார்களாம். "இவர்கள் துணிகரக்காரர், அகங்காரிகள், மகத்துவங்களைத் தூஷிக்க அஞ்சாதவர்கள்" என்கிறார் பேதுரு (2பேதுரு 2:10). அசுத்தங்களை ஆவலோடு நடப்பிக்கும் "அவர்களுடைய முடிவு அழிவு. அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்" (பிலிப் 3:19) என்கிறார் பவுல். விரோதம், வைராக்கியம், கோபம், வாக்குவாதம், புறங்கூறுதல், கோட்சொல்லுதல், இறுமாப்பு, கலகங்கள் என்ற அசுத்தங்களின் பட்டியல் 2கொரி 12:20ல் சொல்லப்பட்டிருக்கிறது. ரோமர் 1:29-31 வாசித்துப் பாருங்கள். கிறிஸ்தவர்கள் மத்தியிலும் இத்தகைய அசுத்தங்கள் பெருகி வருகின்றன என்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம்.

புறஜாதியார் தங்களை காமவிகாரத்தில் (Lewdness, impurity) நடக்கும்படியாக தங்களை ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள் என்பதை ஏழாவது குறிப்பாக பவுல் அறிவிக்கிறார். சபைக்கு இந்த காரியத்தில் பவுல் கொடுக்கும் ஆலோசனை ரோமர் *13:13*ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. "களியாட்டும் வெறியும், வேசித்தனமும், காமவிகாரமும், வாக்குவாதமும், பொறாமையும் உள்ளவர்களாய் நடவாமல், பகலிலே நடக்கிறவர்கள்போலச் சீராய் நடக்கக்கடவோம்".

கலா *5:19-21*ல் பதினேழு மாம்சத்தின் கிரியைகளை பவுல் அறிவிக்கிறார். அவற்றில் முதல் நான்கு இவைதான்: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம். இவை எல்லாமே காமவிகாரத்தோடு சம்பந்தப்பட்டவைதான். எபி *13:4* சொல்கிறது, "வேசிக்கள்ளரையும், விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்". ஆவிக்குரிய வரங்களுக்கு பெயர்பெற்ற கொரிந்து சபையிலும் அசுத்தம், வேசித்தனம், காமவிகாரம் பரவலாகக் காணப்பட்டது என்பது பரிதாபத்துக்குரிய காரியம் *(2கொரி 12:21)*. ரோமர் *1:26,27*லும் காமவிகார பாவகிரியைகள் அறிவிக்கப்படுகின்றன. சோதோம் கொமோரா பட்டணங்களில் காணப்பட்ட காமவிகார பாவங்களினிமித்தம் தேவன் "வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப்பண்ணி அந்தப் பட்டணங்களின் எல்லாக் குடிகளையும், பூமியின் பயிரையும் அழித்துப் போட்டார்" *(ஆதி 19:24,25)* என்பதை கிறிஸ்தவர்களாகிய நாம் எல்லாருமே அறிந்திருக்கிறோம்.

**நீங்களோ இவ்விதமாய்க் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை. (எபே 4:20)**

முந்தின இரண்டு வசனங்களில் புறஜாதியார் மத்தியில் காணப்பட்ட பாவ சுபாவங்களைக் குறித்துப் பேசிய பவுல் இந்த வசனத்தில் எபேசு சபையாரின் கவனத்தை தனக்கு நேராகத் திருப்பி, அவர்களுடன் நேரடியாகப் பேசுகிறார். நீங்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல என்று நேரடியாகச் சொல்லாமல், நீங்கள்

இயேசுவைக் அறிந்துகொண்ட விதம் வித்தியாசமானது என்கிறார். **கிறிஸ்துவைக் கற்றுக்கொள்வது வேறு, கிறிஸ்துவைப் பற்றிக் கற்றுக்கொள்வது வேறு.** கிறிஸ்துவைப் பற்றிய போதனைகளை மட்டும் எபேசு சபையார் அறிந்திருக்கிறார்கள் என்பதல்ல, கிறிஸ்து என்ற உலக இரட்சகரை தங்களுடைய இருதயத்துக்குள் பிரவேசிக்கச் செய்து அவரைக் கற்றுக்கொண்டு வருகிறார்கள். இரட்சிக்கப்பட்ட ஒரே நாளில் யாரும் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்வதில்லை. கிறிஸ்துவிடமிருந்து தொடர்ந்து அவர்கள் போதனைகளைப் பெற்றுக்கொண்டே இருக்கவேண்டும். வேத வசனங்களை தியானித்துக் கொண்டே இருக்கவேண்டும். அதன்விளைவாக அனுதினமும் போதிக்கப்பட்டுக் கொண்டே வரவேண்டும் என்பதைத்தான் பவுல் இந்த வசனத்தில் அறிவிக்கிறார்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொல்கிறார், "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்" *(மத் 11:29)*. **அவருடைய நுகத்தை ஏற்றுக்கொள்ளாத நிலையில் எந்த ஒரு மனிதனாலும் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளமுடியாது** என்பதை அறிந்துகொள்ளுங்கள். வேதாகமக் கல்லூரிகளும், வேதபண்டிதர்களும் வேதத்தின் மகத்துவத்தை உங்களுக்குக் கற்றுத்தரலாம். ஆனால் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ள அவரோடு நெருக்கமான ஐக்கியம் கொள்ளவேண்டும். அவரே வார்த்தையாயிருப்பதால் *(யோவான் 1:1)* இந்த நிருபத்தைப் படித்து அதைத் தியானிக்கும் ஒவ்வொருவரும் அவரைக் கற்றுக்கொண்டிருக்கிறீர்கள்.

**இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே. (எபே 4:21)**

"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" *(யோவான் 14:6)* என்ற இயேசுவின் வார்த்தையின்படி அவரே சத்தியமாயிருக்கிறார். அவரிடத்திலிருந்த சத்தியமே வேதவசனமாக

வெளிப்பட்டது. அந்த சத்தியத்தின்படி எபேசு சபையார் கிறிஸ்துவிடமிருந்து கேட்டறிந்து, கிறிஸ்துவாலே போதிக்கப்பட்டதாக பவுல் அறிவிக்கிறார்.

எபேசு பட்டணத்துக்கு சுவிசேஷ சத்தியத்தைக் கொண்டு சென்று அவர்களுக்கு அறிவித்தவர் அப்போஸ்தலனாகிய பவுல் என்பதை அறிவோம். முதல்முறையாக பவுல் பிரிஸ்கில்லா ஆக்கில்லாவுடன் எபேசு பட்டணத்துக்கு வந்து ஜெபஆலயத்தில் யூதருடன் பேசிவிட்டு உடனடியாக எருசலேமுக்குப் புறப்படும் நிகழ்ச்சி அப் 18:19-21ல் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டாவது முறையாக பவுல் எபேசுவுக்கு வரும்போது 2 1/2 ஆண்டுகள் அங்கு தங்கியிருந்து ஊழியம் செய்த காரியம் அப். 19வது அதிகாரத்தில் சொல்லப்பட்டி-ருக்கிறது. எபேசு சபையின் மூப்பர்களிடம் அவர் சொல்கிறார், "பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்து வைக்காமல், வெளியரங்கமாக வீடுகள்தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து, உபதேசம் பண்ணி, தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக்குறித்தும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதைக் குறித்தும், நான் யூதருக்கும் கிரேக்கருக்கும் சாட்சியாக அறிவித்தேன்" (அப் 20:20,21).

ஆனால் பவுல் இந்த வசனத்தில் எபேசு சபையார் தன்னால் அல்ல, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவால் போதிக்கப்பட்டதாகச் சொல்கிறார். **நாம் சுவிசேஷத்தை அறிவிக்கும்போதெல்லாம் தேவனே நம்மூலமாக ஆத்துமாக்களுடன் பேசுகிறார்.** இயேசு சொல்லியிருக்கிறார், "பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்" (மத் 10:20). "நீங்கள் என்ன பேசுவோமென்று முன்னதாகக் கவலைப்படாமலும் சிந்தியாமலுமிருங்கள்; அந்நாழிகையிலே உங்களுக்கு எது அருள் செய்யப்படுமோ அதையே பேசுங்கள்; ஏனெனில் பேசுகிறவர்கள் நீங்களல்ல, பரிசுத்த ஆவியே பேசுகிறவர்" (மாற்கு 13:11). 1கொரிந்தியர் 2:13 வாசித்துப் பாருங்கள்.

இயேசுகிறிஸ்து "தேவனிடத்திலிருந்து வந்த போதகர்"

*(யோவான் 3:2)* என்று அழைக்கப்படுவதைக் கவனியுங்கள். "என் சிறுவயது முதல் எனக்குப் போதித்து வந்தீர்" *(சங் 71:17)* என்கிறார் சங்கீதக்காரர். எபேசு சபையாருக்கு மட்டுமல்ல, இன்றும் இயேசுவே தன்னுடைய வார்த்தையின்மூலம் நமக்குப் போதித்துக் கொண்டுதான் இருக்கிறார். கிறிஸ்து தரும் உலகரீதியான ஆசீர்வாதங்கள் இந்த உலகத்தோடு முடிந்துவிடும். அவர் தரும் போதனைகள் மட்டுமே நம்மை பரலோகத்துக்குத் தகுதி உள்ளவர்களாக்கும்.

**அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப் போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு (எபே 4:22)**

எபேசு சபையார் மனிதன் மூலமாகவும் அல்ல, ஒரு மனிதனாலும் அல்ல, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் போதிக்கப்பட்டவர்கள். அதினிமித்தம் அவர்கள் பழைய மனிதனைக் களைந்து போடவேண்டும் என்று இந்த வசனத்திலும், புதிய மனிதனை தரித்துக்கொள்ளவேண்டும் என்று 24வது வசனத்திலும் பவுல் ஆலோசனை தருகிறார். பழைய மனிதனாக ஆதாமும் அவனுடைய சுபாவங்களும், புதிய மனிதனாக ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் சித்தரிக்கப்படுகிறார்கள். எபேசு சபையார் தங்கள் பழைய வாழ்க்கை முறைகளை, ஒரு மனிதன் எவ்வாறு தான் அணிந்திருக்கும் அழுக்கான ஆடைகளைக் களைந்து போடுகிறானோ அவ்வாறே அவற்றைத் தன்னுடைய சரீரத்தில் இருந்து நீக்கிவிட்டு, கிறிஸ்து என்ற பரிசுத்தமான வஸ்திரத்தைத் தரித்துக் கொண்டு புதிய வாழ்க்கைக்குள் பிரவேசிக்கவேண்டும் என்று பவுல் ஆலோசனை தருகிறார்.

இந்த வேதபகுதியில் பவுல் அறிவிக்கும் மூன்று காரியங்கள்:

1. நம்முடைய பழைய மனிதன் களைந்து போடப்பட வேண்டும் *(வசனம் 22 - put off the old man)*

2. நாம் உள்ளத்தில் ஆவியில் புதுப்பிக்கப்பட வேண்டும் *(வசனம் 23 - Be renewed in the spirit)*

*3. நாம் புதிய மனிதனைத் தரித்துக் கொள்ள வேண்டும் (வசனம் 24* - put on the new man*)*

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளுமுன்பு ஒருவன் எப்படிப்பட்டவனாக இருக்கிறான் என்பதையே பழைய மனிதன் என்ற வார்த்தை குறிப்பிடுகிறது. அதை ஆதாமின் சுபாவம் என்றும் குறிப்பிடலாம் என்று பார்த்தோம். ஆதாமின் சந்ததியார் ஒவ்வொருவரும் அவனுடைய வித்தாக, அவனுடைய சுபாவத்தின்படியே பிறந்து, வளர்ந்து, இறுதியில் மரணமடைகிறார்கள். நாமோ கிறிஸ்துவினால் போதிக்கப்பட்டவர்கள் என்று பார்த்தோம். ஆதாமின் பாவ வாழ்க்கையையும் அதனால் வரும் நித்திய மரணத்தையும் இயேசுவினிடத்தில் உள்ள சத்தியம் நமக்கு தெரிவிக்கிறது. அவருடைய வாழ்க்கையில் பாவம் இல்லை என்பது மட்டுமல்ல, பரிசுத்தம் மட்டுமே காணப்பட்டது. "அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்" (யோவான் 17:19) என்று சொல்லியிருக்கிறார் அல்லவா. நமக்குத் தேவையான பரிசுத்தத்தை நாம் சம்பாதிக்கவேண்டும் என்பதல்ல, கல்வாரி சிலுவையில் அதை நமக்காக கிறிஸ்து ஆயத்தப்படுத்தி விட்டார். நாம் செய்யவேண்டிய ஒரே காரியம், நாம் அணிந்துகொண்டிருக்கும், அதாவது நாம் சுமந்துகொண்டிருக்கும் பழைய மனிதனைக் களைந்து போட வேண்டியதுதான். ஏனென்றால் அவன் இனி நமக்குத் தேவையில்லை.

"கெட்டுப்போகிற பழைய மனிதன்" என்று பழைய மனிதன் குறிப்பிடப்படுவதைக் கவனியுங்கள். நித்திய மரணம் அவனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. மரணத்தை நோக்கியே அவன் தன் வாழ்க்கையில் அனுதினமும் நடந்துகொண்டிருக்கிறான். எனவே அவன் கெட்டுப்போகிறவனாகக் குறிப்பிடப்படுகிறான். அவனுக்குள் இருக்கும் ஆதாமின் வித்து அவனில் மோசம் போக்கும் இச்சைகளை (Deceitful lusts) போதுமான அளவு விதைத்திருக்கிறது. மோசம் போக்கும் என்றால் ஏமாற்றும் தன்மையுள்ள என்று பொருள்கொள்ள வேண்டும் (ரோமர் 7:11, எபி 3:13). அவன் நம்மை வஞ்சித்து

நம்முடைய முந்தின நடக்கைக்கு (பாவம் நிறைந்த வாழ்க்கைக்கு) கொண்டுபோக முயற்சிக்கிறான்.

இன்னொரு வகையில் சொல்வதானால், ஆதாமுக்குள் நான் யாராக இருந்தேனோ, அதுதான் என்னுடைய பழைய மனிதன். கிறிஸ்துவுக்குள் நான் யாராக இருக்கிறேனோ, அதுதான் என்னுடைய புதிய மனிதன். 2கொரி 4:16ல் பழைய மனிதன் புறம்பான மனிதன் என்றும் புதிய மனிதன் உள்ளான மனிதன் என்றும் குறிப்பிடப்படுகிறார்கள். இந்த பழைய மனிதனில் முந்தின நடக்கைக்குரிய (நாம் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு நம்மில் இருந்த பாவ சுபாவம், ஒழுக்கக் குறைவு, அசுத்தம், இச்சை, கோபம் மற்றும் சகல தவறான மனப்பாங்குகள், மோசம் போக்கும் (ஏமாற்றி அழிவுக்குள் வழிநடத்தும்) இச்சைகள் (மாம்சரீதியான பாவங்கள்) காணப்படலாம். அதைக்குறித்து இப்போது நாம் பயப்பட வேண்டியதில்லை. ஏனென்றால் ரோமர் 6:6ல் பவுல் சொல்கிறபடி, "நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்".

கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒரு மனிதனுடைய பழைய மனிதன், இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே மரித்துவிட்டான் என்பதை இந்த வசனத்தின்படி நம்புங்கள். அவனை நாம் ஏற்கெனவே களைந்தும் போட்டுவிட்டோம் என்பதையும் நம்புங்கள். கொலோ 3:9-10 சொல்கிறது, "பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்து போட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே". பழைய மனிதனுடைய பாவக்கிரியைகள் எல்லாம் முற்றிலுமாக நீக்கப்பட்டுவிட்டன. "எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது" (2கொரி 4:16) என்று வாசிக்கிறோம். இவ்விதமாக ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் பாவத்தின் வல்லமைகள் எல்லாம் படிப்படியாக நிர்மூலமாக்கப்பட்டு விடுகின்றன. பாவத்தின் அடிமைத்தனத்தில் நாம் இல்லை என்பதை

அறிந்துகொள்ளுங்கள். "நீ ஒரு பாவி" என்று சொல்லும் சாத்தானின் வார்த்தையை நம்பாதீர்கள்.

**உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி (எபே 4:23)**

உங்கள் மனதில் உள்ள ஆவியில் புதுப்பிக்கப்படுங்கள் என்கிறது ஆங்கில மொழிபெயர்ப்பு - "And, be renewed in the spirit of your mind". "நீங்கள் உங்கள் இருதயத்தில் புதியவர்களாகும்படி கற்பிக்கப்பட்டிருக்கிறீர்கள்" என்கிறது பரிசுத்த வேதாகமம் மொழிபெயர்ப்பு. முந்தின வசனத்தின்படி பழைய மனிதனைக் களைந்து போடும்போது நம்முடைய இருதயத்தில் புதிதான ஆவியைப் பெற்றுக்கொள்கிறோம்.

பழைய சுபாவங்களை, அல்லது வெளிப்படையான கிரியைகளை நாம் மாற்றினால் மட்டும் போதாது. உள்ளான ஆள்தத்துவமான இருதயம் புதுப்பிக்கப்படவேண்டும். நம்முடைய உள்ளான மனதில் மாற்றம் உருவாகவேண்டும். கிறிஸ்தவ வாழ்க்கை என்பது உங்களைச் சுற்றியிருக்கும் உலகத்தை மாற்றும் முயற்சி அல்ல. உங்களுடைய வாழ்க்கையை உங்களுக்குள் மாற்றுவதே கிறிஸ்தவ வாழ்க்கை. தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறது. உங்களுடைய உள்ளான வாழ்க்கை தேவனுக்கேற்ற விதத்தில் அமைந்திருக்கிறதா என்பதில் மட்டும் கவனமாயிருங்கள். அப்படிச் செய்யும்போது உங்களில் உண்டாயிருக்கும் புதிய ஆவியை இந்த உலகம் கண்டுகொள்ளும். தேவன் மகிமைப்படுவார்.

ஒரு மனிதன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது அவர் அவனுடைய உள்ளத்திலே பிரவேசிக்கிறார். கிறிஸ்துவின் ஆவியாகிய பரிசுத்த ஆவியானவர் அவனுக்குள் வாசம் செய்ய ஆரம்பிக்கிறார். அவனுடைய மனதில் மிகப்பெரிய மாற்றம் உண்டாகிறது. நம்வாழ்வில் நாம் பெற்ற எல்லாவற்றிற்கும் அதிமேலான ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நம்முள் வரும்போது, உலகப்பிரகாரமான ஆடை ஆபரணங்கள் , அணிகலன்களின் ஆர்வம் தானாகவே நம்மைவிட்டு வெளியேறி-

விடும். இதை கிறிஸ்தவர்களாகிய நாம் உணர்ந்து கொண்டபின்பு வெளிப்படையான மாற்றம் பெற்றால் அது ஆண்டவருக்கு மகிமையை சேர்ப்பதோடு நமக்கும் மிகுந்த நன்மை பயக்கும். மாறாக கிறிஸ்தவர்களாகிய நாம் உலகத்தாருக்கு வித்தியாசமாகத் தெரியவேண்டும் என்பதற்காக சுயமாகவோ மற்றவர்களுடைய ஆதிக்கத்தின்பேரிலோ நடிப்போமானால் அது ஆண்டவருக்கு மகிமையை கொண்டு சேர்ப்பதாக அமையாது.

புதிதான ஆவியைப் பெற்றுக்கொள்ளும் மனிதன், முதலாவது மறுபடியும் பிறந்தவனாகிறான் (யோவான் 3:3-8, 1பேதுரு 1:23). புதிய மனிதனை தரித்துக் கொண்டவனாகிறான் (எபே 4:24, கொலோ 3:10). புதிய சிருஷ்டியாகிறான் (2கொரி 5:17). கிறிஸ்துவின் சிந்தை அவனில் உருவாகிறது (1கொரி 2:16). அவனுடைய கவனமெல்லாம் தேவன்மேலும், அவருடைய வார்த்தையின் மேலும் வைக்கப்படுகிறது. உலகத்துக்கடுத்த காரியங்களில் அவனுக்கு ஆர்வம் குறைவுபட ஆரம்பிக்கிறது. ஆவிக்குரிய கனிகள் அவனிடமிருந்து வெளிப்படுகிறது. வேத வாசிப்பு, ஜெபம் ஆகியவற்றில் ஈடுபாடு அதிகரிக்கிறது. புதிய சுபாவம் உள்ளவனாக, புதிய எதிர்பார்ப்பை உடையவனாக, வித்தியாசமான குணநலன்களை உடையவனாக அவன் படிப்படியாக மாறிவருகிறான். இதையே உள்ளத்தில் புதிதான ஆவியுள்ளவர்களாகும் அனுபவமாக எடுத்துக்கொள்ள வேண்டும். "உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" (ரோமர் 12:2) என்று இதையே பவுல் குறிப்பிடுகிறார்.

**மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள். (எபே 4:24)**

பழைய மனிதனைக் களைந்து (22வது வசனம்) போட்டால் மட்டும் போதாது. புதிய மனிதனைத் தரித்துக் கொள்ளவேண்டும். புதிய மனிதனும் பழைய மனிதனும் ஒருவன் அணிந்து கொள்ளும், அல்லது கழற்றிப் போடும் ஆடையாக உருவகப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். வேதத்தில் ஒருவன் அணிந்து கொள்ளும் ஆடை

அவனுடைய நடத்தை, பழக்கவழக்கம், மற்றும் பொதுவான சுபாவத்தைக் குறிப்பிடுவதைப் பார்க்கிறோம். அது நலமானதாக இருக்கலாம் (யோபு 29:14, சங் 132:9, ஏசாயா 11:5, 61:10) அல்லது துன்மார்க்கமானதாக இருக்கலாம் (சங் 73:6, 35:26, 109:29).

நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் நலமானதைத் தரித்துக்கொள்ளவேண்டுமானால் முதலாவது தீமையானதைக் களைந்துபோட ஆயத்தமாயிருக்க வேண்டும். **நற்கிரியைகளை நடப்பிக்கும் நாம் துர்க்கிரியைகளை நடப்பிக்காமல் இருக்க கற்றுக்கொள்ளவேண்டும்**. உதாரணமாக ரோமர் 13:14ஐ எடுத்துக் கொள்ளுங்கள். "துர்இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுங்கள்". முதலாவது காரியத்தைச் (எபே 4:22) செய்யக்கூடாது, இரண்டாவது காரியத்தைச் (எபே 4:24) செய்யவேண்டும். நாம் தரித்துக்கொள்ளவேண்டிய புதிய மனிதன் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து என்பதை இந்த வசனம் உறுதிப்படுத்துகிறது.

நாம் தியானிக்கும் வசனத்தின் இணைவசனமாகிய கொலோ 3:9,10 இவ்விதமாகச் சொல்கிறது, "பழைய மனுஷனையும், அவன் செய்கைகளையும் களைந்து போட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே". இந்த புதிய மனிதனே நாம் தியானிக்கும் எபேசியர் நிருபத்தில் "மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷன்" என்று குறிப்பிடப்படுகிறார். பழைய மனிதனாகிய ஆதாமின் சுபாவங்கள் சந்ததி சந்ததியாக மனித இனத்துக்குள் ஊடுருவி வந்து கொண்டிருக்கிறது என்பதைப் பார்த்தோம். மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும், தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்டவர் புதிய மனிதனாகிய இயேசு ஒருவரே. கலா 3:27ம் இந்த சத்தியத்தை உறுதிப்படுத்துகிறது. பவுல் சொல்கிறார், "உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே".

கிறிஸ்தவர்களாகிய நாம் எந்த அளவுக்கு பழைய மனிதனைக் களைந்து போடுகிறோமோ, அந்த அளவுக்கு புதிய மனிதனைத் தரித்துக் கொள்ளமுடியும். பழையதை களைந்து போடாமல் புதியதைத் தரித்துக்கொள்ள முடியாது. "நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு" *(ரோமர் 12:21)* என்று சொல்லப்பட்டிருக்கிறது அல்லவா! பழைய மனிதனாகிய ஆதாமும் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டவன்தான் *(ஆதி 1:26)*. தேவன் அவனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி தன்னுடைய சாயலை அருளிச் செய்தார். ஆனால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவோ மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்டு புதிய மனிதனாக வானத்திலிருந்து இறங்கி வந்தவர். இந்த புதிய மனிதனாகிய இயேசுகிறிஸ்துவை நாம் தரித்துக்கொள்ளும்போது நம்மில் என்ன மாற்றம் உண்டாகிறது என்பதைக் கவனித்தீர்களா? நாமும் புதிய மனிதனாகிவிடுகிறோம். ஏனென்றால் *1யோ 4:17* சொல்கிறது, "அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்". அவருடைய சாயல் நம்மில் உருவாகிறது. அப்பொழுது பவுலைப் போல் நாமும் தைரியமாகச் சொல்லமுடியும். "இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" *(கலா 2:20)*.

## கிறிஸ்துவுக்குள் புதுவாழ்வு (4:25-4:32)

**அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயி-ருக்கிறபடியால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன். (எபே 4:25)**

எபே *1:23* மற்றும் *4:12*ல் சபையானது கிறிஸ்துவின் சரீரமாக உருவகப்படுத்தப்பட்டதை ஏற்கெனவே தியானித்திருக்கிறோம். இதன் அடிப்படையில் "அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்" *(ரோமர் 12:5)*. 1கொரி *12:27*ல் பவுல் சொல்கிறார், "நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களா-

யுமிருக்கிறீர்கள்". விசுவாசிகளாகிய நாம் "ஒரே சரீரத்துக்குள்ளானவர்கள்" (எபே 3:3). கிறிஸ்துவே சபையாகிய சரீரத்தின் தலையாக இருக்கிறார் (கொலோ 1:18). விசுவாசிகள் கிறிஸ்துவின் சரீரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் வித்தியாசமான உறுப்புகள். விசுவாசிகள் ஒவ்வொருவருக்குமிடையே நெருக்கமான உயிருள்ள தொடர்பு உண்டாகியிருக்கிறது. எனவே நாம் பொய் சொல்லும்போது ஒரு விசுவாசிக்குத் தீங்கு செய்கிறோம் என்பது மட்டுமல்ல, நம்மிலும் தீங்கை வருவிக்கிறவர்களாக இருக்கிறோம். முழு சரீரமும் இதனால் பாதிப்படைகிறது. அதோடு நாம் பரிசுத்த தேவனை அசட்டை பண்ணுகிறவர்களாகவும் இருப்போம்.

பவுல் அறிவிக்கிற காரியம் இதுதான். நாம் பழைய மனிதனைக் களைந்து போடுவதுபோல், பொய்யைக் களைந்து போடவேண்டும். புதிய மனிதனைத் தரித்துக் கொள்ளவேண்டும். பத்துக் கற்பனைகளில் ஒன்பதாவது கட்டளையாக பொய் சொல்வது தடை செய்யப்பட்டிருக்கிறது. லேவியர் 19:11 சொல்கிறது, "நீங்கள் களவுசெய்யாமலும், வஞ்சனை பண்ணாமலும், ஒருவருக்கொருவர் பொய் சொல்லாமலும் இருங்கள்". பொய் சொல்லுகிறவன் என் கண்முன் நிலைப்பதில்லை" (சங் 101:7). "பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள்" (நீதி 12:22). "பொய் நாவினால் பொருளைச் சம்பாதிப்பது சாவைத் தேடுகிறவர்கள் விடுகிற சுவாசம் போலிருக்கும்" (நீதி 21:6). கொலோ 3:9ல் பவுல் சொல்கிறார், "ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்". மற்றவர்களுக்கு பாதிப்பு உண்டாக்கக்கூடிய விதத்தில் பேசாதிருங்கள் என்றும் பொருள் கொள்ளலாம். சில காரியங்களை மிகைப்படுத்திப் பேசுவது, மாய்மாலமாகப் பேசுவது, புகழ்ந்து பேசுவது, பேசவேண்டிய இடத்தில் பேசாமல் இருப்பது முதலானவைகளும் பொய்யாகத்தான் கருதப்படவேண்டும்.

கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்களாகிய சபை விசுவாசிகளிடம் மட்டுமல்ல, அயலாருடனும் பொய் பேச நமக்கு அனுமதியில்லை. ஏனென்றால் சகரியா 8:16 சொல்கிறது, "அவனவன் பிறனோடே உண்மையைப் பேசுங்கள்; உங்கள் வாசல்களில்

சத்தியத்துக்கும் சமாதானத்துக்கும் ஏற்க நியாயந்தீருங்கள்". பொய்யைக் களைந்து போட ஒரே ஒரு வழிதான் உண்டு. அது மெய்யைத் தரித்துக் கொள்வதுதான். "தீட்டுள்ளதும், அருவருப்பையும், பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் (பரலோகத்திலிருந்து இறங்கி வரும் எருசலேமாகிய பரிசுத்த நகரம்) பிரவேசிப்பதில்லை" என்று வெளி 21:27ல் சொல்லப்பட்டிருக்கிறது. நீதிமொழிகள் 12:19 சொல்கிறது, "சத்திய உதடு என்றும் நிலைத்திருக்கும்; பொய் நாவோ ஒரு நிமிஷமாத்திரம் இருக்கும்".

தொடர்ந்து வரும் வசனங்களிலும் நம்முடைய பழைய மனிதனில் இருந்து களைந்து போடப்படவேண்டிய வஸ்திரங்கள் சொல்லப்படுகின்றன. கீழ்க்கண்ட ஆறு வஸ்திரங்களை நாம் களைந்து போடவேண்டியதிருக்கிறது.

*1. பொய் என்ற வஸ்திரம் (வசனம் 25)*

*2. கோபம் என்ற வஸ்திரம் (வசனம் 26,27)*

*3. திருட்டு என்ற வஸ்திரம் (வசனம் 28)*

*4. பிரயோஜனமற்ற பேச்சு என்ற வஸ்திரம் (வசனம் 29)*

*5. ஆவியைத் துக்கப்படுத்தும் வஸ்திரம் (வசனம் 30)*

*6. துர்க்குணம் என்ற வஸ்திரம் (வசனம் 31)*

**நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ் செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது. (எபே 4:26)**

கிறிஸ்தவர்களாகிய நாம் களைந்து போடவேண்டிய இரண்டாவது வஸ்திரம் கோபம். கோபம் கொள்வது மனித சுபாவம்தான். கோபமே இல்லாத மனிதர்கள் யாரும் பூமியில் இருந்ததில்லை. "தன் சகோதரனை நியாயமில்லாமல்

கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்" (மத் 5:22) என்று இயேசு சொல்வதில் இருந்து நியாயமுள்ள கோபத்தை தேவன் அங்கீகரிப்பது போல் தெரிகிறது. ஆனால் பொதுவான தேவஆலோசனை இதுதான், "கோபத்தை நெகிழ்ந்து, உக்கிரத்தை விட்டுவிடு; பொல்லாப்புச் செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம்" (சங் 37:8). "முற்கோபி மதிகேட்டைச் செய்வான்" (நீதி 14:17) என்றும், "மூடரின் நெஞ்சிலே கோபம் குடிகொள்ளும்" (பிர 7:9) என்றும், "பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்" (யாக் 1:19) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய கோபத்தை தாமதப்படுத்தும்போது நம்முடைய நிதானத்தை இழந்து தவறு செய்வதைத் தவிர்க்கமுடியும். சில காரியங்களில் நாம் கோபப்படாமல் இருக்கமுடிவதில்லை என்பது உண்மைதான். ஆனால் நாம் கோபப்படும்போது அதன் விளைவாக பாவம் செய்யாமலிருக்க மிகுந்த எச்சரிக்கையோடு இருக்கவேண்டியது அவசியமாகிறது.

வேதத்தில் காயீன் (ஆதி 4:5), சவுல் (1சாமு 18:8), நாகமான் (2இராஜா 5:12), ஆசா (2நாளா 16:10), ஆமான் (எஸ்தர் 3:5) ஆகியோர் கோபப்பட்டவர்கள் என்று குறிப்பிடப்படுகிறார்கள். இவர்கள் எல்லாருமே துன்மார்க்கர்கள் என்றும் நியாயமில்லாமல் கோபித்துக்கொண்டவர்கள் என்றும் பார்க்கிறோம்.

மனிதர்களுக்கு எதிராக தேவகோபம் வெளிப்பட்ட நிகழ்ச்சிகள் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. தேவனுடைய ஊழிய அழைப்பை மோசே புறக்கணித்தபோது தேவன் மோசேயின்மேல் கோபம் மூண்டார் என்று யாத் 4:14ல் வாசிக்கிறோம். பிலேயாமின் கீழ்ப்படியாமையினிமித்தம் தேவன் கோபமடைந்தார் (எண் 22:22). இஸ்ரவேலரின் நாற்பது ஆண்டுகால பிரயாணத்தின்போது அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் தேவகோபம் பற்றியெரிந்த நிகழ்ச்சி வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது (எண் 11:1, 12:9, 25:3, 32:13, உபா 9:19,20, யோசுவா 7:1). இஸ்ரவேல், யூதா என்பவர்களின் இலக்கம் பார்த்ததினிமித்தம் தான் நேசித்த தாவீது மேல் தேவன் கோபமடைகிறார் (2சாமு 24:1). சாலொமோன் தன்னுடைய அந்நிய

ஜாதியாரான மனைவிகளைப் பின்பற்றி விக்கிரக ஆராதனைக்குள் பிரவேசிக்கும்போதும் தேவன் சினமடைகிறார் (1இராஜா 11:10).

சங்கீதம் 7:11 சொல்கிறது, "அவர் நாள்தோறும் பாவியின்மேல் சினங்கொள்ளுகிற தேவன்". அதினிமித்தம் ஆசாப் ஜெபிக்கிறார், "எதுவரைக்கும் கர்த்தாவே! நீர் என்றைக்கும் கோபமாயிருப்பீரோ? உம்முடைய எரிச்சல் அக்கினியைப் போல் எரியுமோ?" (சங் 79:5). ஒரு காரியத்தை நாம் திட்டவட்டமாக அறிந்துகொள்ளவேண்டும். தேவனுடைய கோபம் அவருடைய நீதியை மட்டுமே ஆதாரமாகக் கொண்டது. எனவே அது யாரையும் பாவத்துக்கு நேராக வழிநடத்துவதில்லை. மனிதனுடைய கோபம், சுயம், சுயநலம், போட்டி, பொறாமை, பெருமை, பேராசை, பழிவாங்கும் உணர்வு, வெறுப்பு, இச்சை, பகை, மன்னிக்காத தன்மை ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டிருப்பதால் அது பாவத்தைப் பிறப்பிக்கிறது.

நீதிமொழிகள் 21:24 சொல்கிறபடி, "அகங்காரமும், இடும்புமுள்ளவனுக்குப் பரியாசக்காரனென்று பெயர், அவன் அகந்தையான சினத்தோடே நடக்கிறான்". இவற்றினால் உண்டாகும் மனிதர்களுடைய கோபம் பாவமாகக் கருதப்படவேண்டும். பாவத்தின்மேலும், மனந்திரும்பாத பாவிகள் மேலும், சுயநலவாதிகள் மேலும், கோபப்படுவது பாவமாகக் கருதப்படமுடியாது. சூம்பிய கையையுடைய மனிதனை ஓய்வு நாளில் சொஸ்தமாக்கியதினித்தம் யூதர்கள் கிறிஸ்துவைக் குற்றப்படுத்திய போது அவர் "அவர்களுடைய இருதயக் கடினத்தினிமித்தம் அவர் விசனப்பட்டு, கோபத்துடனே சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்தார்" என்று மாற்கு 3:5ல் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த கோபத்தின் மூலமாக தேவநீதி மட்டுமே வெளிப்பட்டது. மற்றபடி தன்னுடைய பிதாவின் வீட்டை வியாபார வீடாக்கியவர்கள் நிமித்தம் கயிற்றினால் சவுக்கையுண்டுபண்ணி ஆடுமாடுகளை தேவாலயத்துக்குப் புறம்பே துரத்தியபோதுகூட அவர் கோபமடைந்ததாகச் சொல்லப்படவில்லை (யோவான் 2:14-16). நியாயமான காரணத்துக்காகக்கூட நாம் கோபப்படாமல் இருக்கவேண்டும் என்பதுதான் தேவ ஆலோசனை.

கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருப்பது எப்படி என்ற ஆலோசனை, ஏற்கெனவே தாவீதினால் கொடுக்கப்பட்டிருக்கிறது. சங்கீதம் 4:4ல் அவர் சொல்கிறார், "நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; உங்கள் படுக்கையிலே உங்கள் இருதயத்தில் பேசிக்கொண்டு அமர்ந்திருங்கள்". படுக்கைக்குப் போகும்போது அதுகுறித்து சிந்தித்துக் கொண்டிருங்கள். அப்போது கோபம் மறைந்து அமைதி உண்டாகும் என்பதுதான் அவர் தரும் நல்ல பயனுள்ள ஆலோசனை. இதையே சற்று மாற்றி பவுல், "சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னால் உங்கள் எரிச்சல் தணியக்கடவது" என்கிறார். அந்த நாளில்தானே உங்கள் கோபத்தின் காரண காரியங்களை நிதானிப்பீர்கள் என்றால் தவறு யாருடையது என்பதை உணர்ந்தவர்களாய் ஒருவரோடு ஒருவர் ஒப்புரவாகிக்கொள்ள சந்தர்ப்பம் உண்டாகி விடும். இவ்வாறு உங்கள் கோபத்தை தாமதமின்றி தணித்துக் கொள்ளலாம். மறுநாளைக்கும் கோபத்துக்குக் காரணமாயிருக்கும் எரிச்சலை கொண்டுசெல்வீர்களானால் பிரச்சனை இன்னும் பெரிதாகிக் கொண்டே இருக்கும். அதன்விளைவாக இருதரத்தாரும் தீமையைத்தான் சந்திக்கவேண்டியதிருக்கும். தீமையை தேவன் வெறுக்கிறார் என்பதை அறிவோம் (நீதி 8:13, சங் 97:10, ரோமர் 12:9).

இந்த வசனத்தின் அடிப்படையில் சூரியன் அஸ்தமிக்குமுன்பு எரிச்சலைத் தணித்துக்கொள்ளக் கூடுமானால் நாம் கோபப்படலாம் என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. யூதர்களைப் பொறுத்தவரை சூரியன் மறையும்போதுதான் அவர்களுக்கு அந்த நாள் முடிவடைந்து புதிய நாள் ஆரம்பமாகிறது. எனவே உங்களுடைய கோபம் கோபப்பட்ட அந்த நாளில்தானே மறையக்கடவது. அது ஒரு புதிய நாளுக்குள் பிரவேசித்து அந்த நாளையும் கெடுத்துவிட அதைப் பேணி வளர்த்துவிடக் கூடாது என்று பவுல் சொல்வதாக எடுத்துக்கொள்ள வேண்டும். இப்படிச் செய்யும்போது இராக்காலத்தில் நன்றாக உறங்கவும் முடியும். "அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்" (மத் 6:34) என்று சொல்லப்பட்டிருக்கிறதல்லவா?

பவுல் சொல்கிறார், "ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள். கூடுமானால், உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்" *(ரோமர் 12:17-18)*. "கோபமும், மூர்க்கமும், பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும், வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள்" *(கொலோ 3:8)*.

**பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள். (எபே 4:27)**

முந்தின வசனத்தின் தொடர்ச்சியாக பவுல் பேசுகிறார். உங்கள் கோபத்தையும் எரிச்சலையும் புதிய நாளுக்குள் பிரவேசிக்க நீங்கள் அனுமதித்து விட்டீர்கள் என்றால் நீங்கள் உங்கள் மனக்கதவைத் திறந்து பிசாசுக்கு இடங்கொடுத்துவிட்டீர்கள் என்றுதான் பொருள். மனிதர்களுடைய சுயநலமான கோபத்தை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வதில் அவன் திறமை வாய்ந்தவன். பிசாசு என்பதற்கு பொதுவாக "Satnas" என்ற கிரேக்க பதத்தையே பயன்படுத்தும் பவுல் இந்த இடத்திலும் எபே 6:11லும் மட்டும் "Diabolos" என்ற வார்த்தையை பயன்படுத்துகிறார். அதற்கு அவதூறு சொல்கிறவன், குற்றப்படுத்துகிறவன் என்று பொருள். யாக்கோபு சொல்கிறார், "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான் *(4:7)*. பிசாசை எதிர்த்து நிற்க என்ன செய்யவேண்டும்? "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்" *(எபே 6:11)*. அடுத்ததாக நாம் செய்யவேண்டியது விழித்திருப்பது. "விழித்திருங்கள்; ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்" *(1பேதுரு 5:8)*. அவன் உண்மையில் சிங்கம் அல்ல, சிங்கத்தைப் போல நடிக்கிறான். ஆவியில் விழித்திருந்தீர்களானால் அதை எளிதில் இனங்கண்டு கொள்ளமுடியும்.

**திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து, பிரயாசப்படக்கடவன். (எபே 4:28)**

*நாம் களைந்து போடவேண்டிய மூன்றாவது வஸ்திரம் திருடும் சுபாவம். "களவு செய்யாதிருப்பாயாக" (யாத் 20:15) என்கிற பிரமாணம் பத்துக்கற்பனைகளில் ஒன்றாக கொடுக்கப்பட்டிருக்கிறது. வேலைக்காரர் "திருடாமலிருந்து, சகலவிதத்திலும் நல்லுண்மையைக் காண்பிக்கவும் புத்திசொல்லு" (தீத்து 2:10) என்கிறார் பவுல். பேதுரு சொல்கிறார், "உங்களில் ஒருவனும், கொலைபாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக் கொண்டவனாயாவது, பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது" (1பேதுரு 4:15). திருடுகிறவர்கள்மேல் இரத்தப்பழி உண்டாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது" (ஓசியா 4:2). தன் தகப்பனுடைய சுரூபங்களைத் திருடிச் சென்ற ராகேல், ஆயி பட்டணத்திலிருந்து பாபிலோனிய சால்வை மற்றும் சில பொருட்களைத் திருடிய ஆகான் முதலியோர் ஆசீர்வதிக்கப்படவில்லை என்று பார்க்கிறோம்.*

*"திருடியவன் இனித் திருடாமல்" என்று கடந்த காலத்தில் சொல்லாமல், "திருடுகிறவன் இனித் திருடாமல்" என்று நிகழ்காலத்தில் சொல்வதிலிருந்து எபேசு போன்ற ஆவிக்குரிய சபைகளிலும் திருடர்கள் இருக்கிறார்கள் என்பதை பவுல் ஒப்புக்கொள்வதுபோல் தெரிகிறது. சபையில் பெரியபதவிகளில் இருப்பவர்கள் தவறானகணக்குகளைக் காட்டி சட்டத்தின் உதவியோடு திருடிக்கொண்டிருக்கிற காரியங்கள் இன்றும் சபைகளில் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் கிறிஸ்துவின் ஆலோசனை என்ன? "உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்" (மத் 19:21).*

கடன் வாங்கிவிட்டு அதைத் திருப்பிச் செலுத்தாமல் இருப்பதும் ஒருவகையில் திருட்டுதான். வியாபாரத்தில் கள்ளத்தராசு பயன்படுத்துவதும் திருட்டுதான் (நீதி 11:1). மற்றவர்களுடைய நேரத்தை வீணாக்குவதும், கள்ளக்கணக்குகளின் உதவியோடு அரசாங்கத்தை ஏமாற்றுவதும் திருட்டுதான். தனக்கு தேவைப்படாதவற்றை பதுக்கிவைத்துக்கொள்வதும் திருட்டுதான். தேவன் கொடுத்திருக்கும் கிருபை வரங்களை சுயநல நோக்கத்தோடு பயன்படுத்துவதும் திருட்டுதான். **எந்த ஒரு அரசாங்க சட்டத்தையும் மீறாமலேயே திருட்டுச்செயல் நடைபெறக்கூடும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.** சிலவேளைகளில் சட்டதிட்டங்களைப் பயன்படுத்தியேகூட திருடமுடியும். நம்முடைய தேவைக்கு அதிகமாக பொருள், வீடு வாசல், சொத்துக்களைச் சேர்த்து வைப்பவர்களும் தேவனுடைய பார்வையில் திருடர்களே.

தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்கக்கூடாதவர்களின் பதினொருபேர் அடங்கிய பட்டியல் ஒன்று 1கொரி 6:9-10ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் திருடர்கள் ஏழாவது இடத்தைப் பெறுகிறார்கள். எனவே பவுல் அவர்களுக்கு இனி திருடக்கூடாது என்று மட்டும் ஆலோசனை தரவில்லை. குறைச்சல் உள்ளவர்களுக்குக் கொடுக்கத்தக்கதாக அவர்கள் தங்கள் கைகளினால் வேலைசெய்து உழைக்கவேண்டும் என்கிறார். ஒரு மனிதன் தன்னுடைய குறைச்சலினிமித்தமாகத்தான் திருட ஆரம்பிக்கிறான். எனவே, இப்படியாக குறைச்சலினிமித்தம் திருட ஆரம்பிக்கும் ஏழைகளுக்கு தங்களுடைய வருமானத்தைப் பகிர்ந்து கொடுத்து, அவர்களது வறுமையில் உதவி, அவர்களுக்கு நன்மைசெய்து, அவர்கள் திருடர்களாக மாறிவிடாதபடி மாஜிதிருடர்களை பவுல் கேட்டுக்கொள்கிறார்.

மற்றவர்களுக்குக் கொடுப்பது என்பது ஒரு ஆசீர்வாதமான காரியம். "உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ, அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்" (நீதி 11:25).

லூக்கா 6:38ல் இயேசு சொல்கிறார், "கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்". "சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்" (2கொரி 9:6).

இயேசு சொல்கிறார், "நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு. அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்" (மத் 19:21). இன்று பலர் பூலோகத்தில் பொக்கிஷம் உண்டாக்குவதிலேயே குறியாயிருக்கிறார்கள். "என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன்" (லூக்கா 19:8) என்ற அறிவிப்புடன் தன்னிடம் வந்த சகேயுவிடம் கிறிஸ்து சொல்கிறார், "இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது" (வசனம் 9).

திருடி, எளிதான முறையில் பொருளீட்டிக் கொண்டிருந்த திருடர்களிடம் பவுல் கைகளில் நலமான வேலைசெய்து பிரயாசப்படும்படியாக ஆலோசனை தருகிறார். கிறிஸ்துவுக்கென்று மகத்துவமான ஊழியத்தை பூமியில் நிறைவேற்றிய பவுல் தன்னுடைய சுகத்தையும் வசதியையும் பெருக்கிக்கொள்ள எந்த விதத்திலும் ஆசைப்படவில்லை. "உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு, இரவும் பகலும் நாங்கள் வேலைசெய்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களிடத்தில் பிரசங்கித்தோம்" (1தெச 2:9) என்ற பவுலின் அறிவிப்பு இன்றைய ஊழியக்காரர்களுக்கு பைத்தியகாரத்தனமாகத் தோன்றும். அவர் சொல்கிறார், "ஒருவனுடைய வெள்ளியையாகிலும், பொன்னையாகிலும், வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை. நீங்கள் அறிந்திருக்கிறபடி, எனக்கும் என்னுடனேகூட இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலைசெய்தது. இப்படிப் பிரயாசப்பட்டு, பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும்

*வேண்டுமென்று எல்லாவிதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன்" (அப் 20:33-35).*

**கெட்டவார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள். (எபே 4:29)**

*இந்த அதிகாரத்தின் கடைசி வேதபகுதியில் அன்றாட வாழ்க்கையில் கிறிஸ்தவ செயல்முறைக்கடுத்த ஆலோசனைகள் பலவற்றை பவுல் அறிவிப்பதைப் பார்க்கிறோம். சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் எதைச் செய்யக்கூடாது (விலக்கு) என்றும், எதைச் செய்யவேண்டும் (விதி) என்றும் பவுல் அறிவிக்கிறார். 25வது வசனத்தில் பொய் பேசக்கூடாது என்ற எச்சரிப்போடு மெய்யைப் பேசவேண்டும் என்ற ஆலோசனையும், 28வது வசனத்தில் திருடக்கூடாது என்ற எச்சரிப்போடு, திருடியவர்கள் இனி கொடுக்கவேண்டும் என்ற ஆலோசனையும், இந்த 29வது வசனத்தில் கெட்டவார்த்தை பேசக்கூடாது என்ற எச்சரிப்புடன், நல்ல வார்த்தைகளைப் பேசவேண்டும் என்ற ஆலோசனையும் கொடுக்கப்படுகிறது.*

*நாம் களைந்து போடவேண்டிய பழைய மனிதனுக்குரிய* **நான்காவது** *வஸ்திரம் பிரயோஜனமற்ற பேச்சு, நம்முடைய பழைய மனிதனிடமிருந்து கெட்ட வார்த்தை மட்டுமே வெளிப்பட முடியும். இயேசு சொல்கிறார், "நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்" (மத் 12:34). தொடர்ந்து அவர் சொல்கிறார், "நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான். மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் (பொல்லாத வார்த்தைகள் மட்டுமல்ல) யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே*

கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்" *(வசனம் 35-37)*. திருடுவது, கொலை செய்வது, விபசாரம் செய்வது போன்றவை மட்டும்தான் பாவம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். வீண்வார்த்தைகள் பேசுவதும் பாவம்.

கெட்ட வார்த்தை ஒன்றும் நம் வாயிலிருந்து வரக்கூடாது என்பது ஆலோசனையாக அல்ல, கட்டளையாக இங்கே தரப்படுகிறது. அசிங்கமான, அருவருப்பான, மற்றவர்களை வேதனைப்படுத்துகிற, வெறுப்பை உண்டாக்குகிற, பழிசொல்கிற, துக்கப்படுத்துகிற, அவமானப்படுத்துகிற, சபிக்கிற வார்த்தைகள் கிறிஸ்தவர்களிடமிருந்து வெளிப்படக்கூடாது. அப்படி வருமானால் அவர்களுடைய உள்ளான இருதயத்தில் சுத்தம் இல்லை என்று அர்த்தம். கிறிஸ்து சொல்லியிருக்கிறபடி, "வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும்; அவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்" *(மத் 15:18)*. வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் எபேசியர் 5:4ல் தகாதவைகளாக குறிப்பிடப்படுகின்றன. சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லும்படியாக பவுல் ஆலோசனை தருகிறார் *(எபே 5:19)*.

கெட்ட வார்த்தைகள் பேசுகிறவர்களைக் குறித்து பவுல் ரோமர் 3:13,14ல் இவ்வாறு பேசுகிறார். "அவர்கள் தொண்டை திறக்கப்பட்ட பிரேதக்குழி, தங்கள் நாவுகளால் வஞ்சனை செய்கிறார்கள்; அவர்களுடைய உதடுகளின் கீழே பாம்பின் விஷம் இருக்கிறது; அவர்கள் வாய் சபிப்பினாலும் கசப்பினாலும் நிறைந்திருக்கிறது". இத்தகைய வார்த்தைகளைத் தவிர்த்துவிடவேண்டும் என்பதுதான் பவுலின் ஆலோசனை. அப்போஸ்தலனாகிய பேதுரு கிறிஸ்துவின் சீஷனாக இருந்தும் தனக்கு ஆபத்து உண்டாகும் என்று பயந்து "சபிக்கவும் சத்தியம் பண்ணவும் தொடங்கினான்" *(மத் 26:74)* என்று பார்க்கிறோம்.

"கோபமும், மூர்க்கமும், பொறாமையும் உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள்" *(கொலோ 3:8)*. பக்திவிருத்திக்கு ஏதுவான *(எபே 4:29)* வார்த்தைகள் உங்களிடத்தில் உண்டாயிருக்குமானால் அதையே பேசுங்கள் இல்லாவிட்டால் ஒன்றுமே பேசாதிருங்கள் என்கிற தொனியில் பவுல் பேசுகிறார். அதையும் கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனம் உண்டாகும்படி பேசுங்கள் என்கிறார். மற்றவர்களுக்கு பயன்தரத்தக்கதும் அவர்களை பலமுள்ளவர்களாக்குபவைகளும், அவர்களில் பக்திவிருத்தி உண்டாக்குவதுமான வார்த்தைகளையே பேச நாம் அனுமதிக்கப்பட்டிருக்கிறோம். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வாயிலிருந்து கிருபையுள்ள வார்த்தைகளே வெளிப்பட்டது *(லூக்கா 4:22)*. "உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தியதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக" *(கொலோ 4:6)* என்கிறார் பவுல். "ஏற்ற காலத்தில் சொன்ன வார்த்தை எவ்வளவு நல்லது" *(நீதி 15:23)* என்கிறார் சாலொமோன். கிறிஸ்தவர்களாகிய நாம், நாம் பேசும் வார்த்தைகளைக் குறித்து எச்சரிக்கையாயிருப்போம்!

**அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். (எபே 4:30)**

திருத்துவத்தின் மூன்றாவது நபராகிய பரிசுத்த ஆவியானவரைக் குறித்து பவுல் மீண்டுமாகப் பேசுகிறார். எபே *1:13*ல் "வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்" என்ற வசனத்தில் ஏற்கெனவே தியானித்ததை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். திருச்சபையின் வரலாற்றை நாம் ஆராய்ந்து பார்ப்போமானால் பாரம்பரிய சபைகளில் பிதாவாகிய தேவனுக்கும் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கும் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் ஆவியானவருக்குக் கொடுக்கப்படவில்லை. ஆவியானவரின் முக்கியத்துவத்தையும் மேன்மையையும் பவுல் அறிந்திருந்தார். பரிசுத்த ஆவி என்ற வார்த்தை பவுலின் நிருபங்களில்

முப்பது தடவையும் ஆவி (pneuma) என்ற வார்த்தை எழுபது தடவைக்கு மேலாகவும் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். இந்த கடைசி நாட்களில் ஆவியானவரின் செயல்பாடுகளை சபை ஓரளவு அறிந்துகொண்டதால் ஒரு எழுப்புதல் உலகமெங்கும் உருவாகியுள்ளதைப் பார்க்கிறோம். இந்த ஆவியானவரைத் துக்கப்படுத்தும் காரியம் நாம் களைந்துபோட வேண்டிய ஐந்தாவது வஸ்திரம்.

மீட்கப்படும் நாள் என்று பவுல் இயேசு கிறிஸ்துவின் வருகையின் நாளைக் குறிப்பிடுகிறார். "கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள்மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்" *(1தெச 4:16,17)* என்று மீட்பின் நாள் குறிப்பிடப்படுகிறது. நாம் எப்பொழுதும் கர்த்தருடன் இருக்கும் நாள்தான் மீட்பின் நாளாக இருக்கமுடியும். தேவன் நம்மை ஒரு நாளிலே நிச்சயமாக மீட்டுக்கொள்வதை உறுதிப்படுத்தும்படியாகவே முத்திரையாக பரிசுத்த ஆவியானவரை என்றென்றும் நமக்குள் வாசமாயிருக்கும்படியாக *(யோவான் 14:16,17, 1கொரி 3:16, 6:19)* நமக்கு வழங்கியிருக்கிறார்.

யாக்கோபு சொல்கிறார், "நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறார்" *(4:5)*. இயேசுவை ஏற்றுக்கொண்டதால் நாம் பெற்றுக்கொண்ட இரட்சிப்பை இழந்துபோகாதபடி நம்மைப் பாதுகாக்கும் பொறுப்பு அவருடையதாக இருக்கிறது. அவர் அன்பு நிறைந்தவர் *(ரோமர் 15:32)* என்பதால் நாம் பாவக்கிரியைகளை நடப்பிக்கும்போது அவர் துக்கமடைகிறார். பொய், கோபம், திருட்டு, கெட்ட வார்த்தைகள் *(வசனம் 25-29)* போன்ற பாவங்கள் மூலமாக நாம் பரிசுத்த

ஆவியானவரைத் துக்கப்படுத்திவிடக் கூடாது என்ற ஆதங்கத்தில் பவுல் பேசுகிறார்.

*அனனியா, சப்பீராள் பாவம் செய்தபோது பேதுரு என்ன சொல்கிறார் என்பதைக் கவனியுங்கள். "பரிசுத்தஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன" (அப் 5:3). "நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய் சொன்னாய்" (வசனம் 4). நம்முடைய பாவம் திருத்துவத்தின் மூன்றாவது நபராகிய பரிசுத்த ஆவியானவரை எந்த அளவு துக்கப்படுத்துகிறது என்பதை அறிந்துகொள்ளுங்கள். ஏசாயா 63:10 சொல்கிறது, "அவர்களோ கலகம்பண்ணி, அவருடைய பரிசுத்த ஆவியை விசனப்படுத்தினார்கள்". பரிசுத்த ஆவியானவரை அவித்துப் போட நம்மால் முடியும் என்பதால்தான் "ஆவியை அவித்துப் போடாதிருங்கள்" (1தெச 5:19) என்று சொல்லப்பட்டிருக்கிறது.*

கீழ்க்கண்டவாறு நான்கு விதங்களில் நாம் பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்துகிறோம்.

*1. அசுத்தமான காரியங்கள் நம்முடைய வாழ்க்கைக்குள் நேரடியாகவும், சிந்தனையிலும் பிரவேசிக்க அனுமதிக்கும்போது (ரோமர் 8:5-7)*

*2. ஆவியானவரின் சுபாவத்துக்கு விரோதமான கிரியைகளில் நாம் ஈடுபடும்போது (ரோமர் 8:8-10, எபே 4:25-29)*

*3. மாம்சரீதியாய் சரீரத்தில் கிரியை நடத்தும்போது (ரோமர் 8:12,13)*

*4. மாய்மாலமாக அநீதியாய் செயல்படும்போது (அப் 5:3,4)*

**சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது. (எபே 4:31)**

ஆறாவதாக துர்க்குணம் என்கிற வஸ்திரம் களைந்து போடப்படவேண்டும் என்று பவுல் குறிப்பிடுகிறார். கசப்பு, கோபம், மூர்க்கம், கூக்குரல், தூஷணம் என்று நான்கு துர்க்குணங்களை குறிப்பிட்டுப் பேசும் பவுல், மற்ற எந்தத் துர்க்குணமும் என்ற வார்த்தையையும் சேர்த்துக் கொள்கிறார். கசப்பு என்ற வார்த்தை நஞ்சான பானத்தைக் குறிப்பிடுகிறது. ஒருவன் பேசும் கசப்பான வார்த்தைகள் மற்றவர்களைப் புண்படுத்துவதாக அமைந்திருக்கும். கோபம் என்ற வார்த்தை மனதில் பதுங்கியிருந்து, திடீரென்று வெளிப்படும் எரிச்சலையும் ஆங்காரத்தையும் குறிப்பிடுகிறது. மூர்க்ககுணமுள்ள மனிதர்கள் தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை அறியாமல் முட்டாள்தனமாக செயல்படுவார்கள். கூக்குரலிட்டுப் பேசுகிறவர்கள் தாங்கள் என்ன பேசுகிறோம் என்பதை அறியாமலிருப்பார்கள். தூஷணம் என்பது நியாயமில்லாத முறையில் மற்றவர்களை இழிவுபடுத்திப் பேசும் காரியம் ஆகும். இந்த ஆறு குணாதிசயங்களுமே ஒன்றோடு ஒன்று சம்பந்தப்பட்டவை என்பது மட்டுமல்ல, ஒன்றில் இருந்து ஒன்றை வேறுபிரித்துக் காட்டுவதும் கடினமான காரியம். இவை எல்லாமே பழையமனிதனுக்கு சொந்தமானவை. இவற்றுக்கும் புதிய மனிதனுக்கும் சம்பந்தம் இருக்கமுடியாது. இருக்கக்கூடாது.

தன்னுடைய சகோதரன் ஆபேலின் காணிக்கையை கர்த்தர் அங்கீகரித்ததன் விளைவாக காயீனில் உருவான மனக்கசப்பு அவனுடைய வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்தது (ஆதி *4:1-8*). வேதத்தில் சவுல் மிகுந்த கோபமும், மூர்க்கமும், கூக்குரலும் நிறைந்த மனிதனாக சித்தரிக்கப்படுகிறான் (*1*சாமு *18:5-9*). தூஷணத்துக்கும் துர்க்குணத்துக்கும் உருவகமாக சீமேயியைச் சொல்லலாம் (*2*சாமு *16:5-12*). புதிய ஏற்பாட்டு நாட்களில் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டவர்களிடமே விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், வாக்குவாதங்கள், புறங்கூறுதல், கோட்சொல்லுதல், இறுமாப்பு, கலகங்கள், அசுத்தம், வேசித்தனம், காமவிகாரம் (*2*கொரி *12:20,21*) ஆகியவை காணப்படுவதைக் கண்டு பவுல் துக்கமடைவதைப் பார்க்கிறோம். கொரிந்து சபையின் நிலையே

அப்படி இருக்குமானால் தற்போதைய கடைசிகாலத்து சபை எப்படி இருக்கும் என்பதை யோசித்துப் பாருங்கள்.

பவுல் சொல்கிறபடி, "மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவைகளாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே" *(கலா 5:19-21)*. மற்ற எந்த துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது என்று பவுல் சொல்லும்போது இவை எல்லாவற்றையும் மனதில் வைத்துப் பேசுவதாக எடுத்துக்-கொள்ளலாம்.

**ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். (எபே 4:32)**

இந்த வேதபகுதியில் இதுவரை நாம் களைந்து போடவேண்டிய பழைய மனிதனின் வஸ்திரங்களைப் பற்றி பேசிய பவுல், இந்த வசனத்தில் நாம் தரித்துக்கொள்ள வேண்டிய புதிய மனிதனுக்குரிய வஸ்திரம் என்ன என்பதை அறிவிக்கிறார். கொலோ *3:12-14*ல் அவர் சொல்கிறார், "நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும், பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு, ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின் மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக் கொள்ளுங்கள்". இப்படிப்பட்ட அற்புதமான ஆழமான தெய்வீக ஆலோசனைகள் அடங்கிய வேதவசனங்களை நம்முடைய வேதத்தில் தேவன் எழுதித் தந்திருக்கிறார். அதை உணர்ந்து, வாசித்து

அதன்படி நடக்க எப்போதாவது ஒப்புக்கொடுத்திருக்கிறோமா என்பதை யோசித்துப் பாருங்கள். இவற்றை யாரும் பிரசங்கிப்பதும் இல்லை. பிரசங்கித்தால் அவர்களுடைய மனச்சாட்சியே அவர்களைக் குற்றப்படுத்தும் என்று பயப்படுகிறார்களோ?

ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருக்கும்படியாக பவுல் ஆலோசனை தருகிறார். தயவு என்பது உதவி செய்வது, ஒருவரோடு ஒருவர் மரியாதையோடு நடந்துகொள்வது, கரிசனையோடு நடந்துகொள்வது, மற்றவர்களை அனுசரித்து நடப்பது ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. சுருக்கமாகச் சொல்வதானால், விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் ஒருவருக்கொருவர் சகோதரர்கள் என்ற உணர்வோடு செயல்படும்போது நம்முடைய தயவு வெளிப்படுகிறது. நம் தேவன் தயவு நிறைந்தவர் என்பதை அறிவோம் (ரோமர் *2:4, 11:22*). அவருடைய பிள்ளைகளாகிய நாம் தயவுள்ளவர்களாக இருக்க-வேண்டுமல்லவா?

ரோமர் *12:10*ல் பவுல் சொல்கிறார், “சகோதர சிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்”. மனதுருக்கத்தைக் குறித்து பேதுரு சொல்கிறார், “நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதர சிநேகமுள்ளவர்களும், மன உருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருந்து, தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து ஆசீர்வதியுங்கள்” *(1பேதுரு 3:8-9)*.

மனதுருக்கம் உள்ள மனிதனில் இருந்து எல்லா வேளைகளிலும் அன்பு, இரக்கம், பாசம் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். மற்றவர்களுடைய கஷ்டம், பாடுகள், வேதனை, பிரச்சனைகள் ஆகியவற்றை தன்னுடையவைகளாகப் பாவித்து அவற்றை நிவர்த்தி செய்ய தன்னால் முடிந்ததைச் செய்துகொண்டே இருப்பான். “இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம்

பெறுவார்கள்" (மத் 5:7) என்ற வசனத்தின்படி மனஉருக்கம் உள்ளவர்கள் நிச்சயமாக தேவனால் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

"தேவன் உங்களை மன்னித்தது போல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" என்ற வசனத்துடன் 4வது அதிகாரம் முடிவடைகிறது. நமக்கு எதிராக தவறு செய்தவர்களை நாம் மன்னிக்கவேண்டும். நமக்கு எதிராக பேசியவர்களை நாம் மன்னிக்கவேண்டும். நம்மை வேதனைப்படுத்தியவர்களை நாம் மன்னிக்கவேண்டும். பவுல் சொல்கிறார், "ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (கொலோ 3:13).

நாம் ஏன் மன்னிக்கவேண்டும்? பிதாவாகிய தேவன் கிறிஸ்துவுக்குள் நம்மை மன்னித்தார். கல்வாரி சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்தபோதும்கூட அவர் சொல்கிறார், "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" (லூக்கா 23:34). மற்றவர்கள் நமக்கு எதிராக செய்த காரியங்களோடு நாம் தேவனுக்கு எதிராக செய்யும் முரட்டாட்டங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நம்முடைய பாவம் எவ்வளவு கொடூரமானது என்பதை நாம் எளிதில் உணர்ந்துகொள்ள முடியும்.

கிறிஸ்துவுக்குள் தேவன் நம்மை மன்னித்தார் என்பதையும் பவுல் அறிவிக்கிறார். நம்முடைய பாவங்களுக்காக கிறிஸ்து மரித்ததன் மூலமாக மட்டுமே நாம் பாவமன்னிப்பைப் பெற்று தேவனுடைய பிள்ளைகள் என்ற அங்கீகாரத்தைப் பெறுகிறோம். அதனிமித்தம் நாம் ஒருவருக்கொருவர் மன்னிக்கவேண்டும் என்று அவர் கட்டளையிட்டிருக்கிறார். "என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால் நான் எத்தனை தரம் மன்னிக்கவேண்டும்? ஏழுதரம் மட்டுமோ" என்ற பேதுருவின் கேள்விக்கு இயேசு சொல்கிறார், "ஏழுதரம் மாத்திரம் அல்ல, ஏழெழுபது தரமட்டும்" (மத் 18:21, 22). தொடர்ந்து 23 முதல் 34 வரை அவர் சொல்லும் உவமையை

வாசித்துப் பாருங்கள். உவமையின் முடிவில் அவர் எச்சரிக்கிறார், "நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னிக்காமற் போனால் என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்" (வசனம் 18). மற்றவர்களை மன்னிக்காத பட்சத்தில் தேவன் உங்களை மன்னிப்பதில்லை என்பதை தெளிவாக அறிந்துகொள்ளுங்கள். லூக்கா 17:3,4ல் அவர் சொல்கிறார், "உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தால், அவனைக் கடிந்துகொள்; அவன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாயாக. அவன் ஒரு நாளில் ஏழுதரம் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து, ஏழுதரமும் உன்னிடத்தில் வந்து: நான் மனஸ்தாபப்படுகிறேன் என்று சொன்னால் அவனுக்கு மன்னிப்பாயாக".

நாம் எந்த அளவுக்கு மற்றவர்களை மன்னிக்கிறோமோ அந்த அளவுக்கு மட்டுமே நம்முடைய பாவங்கள் தேவனால் மன்னிக்கப்படும். கிறிஸ்து திட்டமாகச் சொல்லியிருக்கிறார், "மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கு மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்" (மத் 6:14,15). "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்" (மத் 6:12) என்று உற்சாகமாக ஜெபிக்கிறோம். அதின் பொருள் என்ன தெரியுமா? நாம் மற்றவர்களை மன்னியாதிருந்தால், ஆண்டவரே நீர் எங்களை தயவுசெய்து மன்னியாதிரும் என்பதுதானே! நாம் தேவனுடன் பேசும்போது நம்முடைய வார்த்தைகளைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

# அதிகாரம் 5

இந்த அதிகாரமும் முந்தின அதிகாரத்தின் தொடர்ச்சியாக கிறிஸ்தவ வாழ்க்கை எப்படி இருக்கவேண்டும் என்பதையே போதிக்கிறது. விசுவாசிகளாகிய நாம் எவ்வாறு நடக்கவேண்டும், எப்படி நடக்கக்கூடாது என்பதை அறிவித்த பவுல் இந்த அதிகாரத்தின் முதல் வசனத்திலேயே நாம் தேவனுடைய பிரியமான பிள்ளைகள் என்பதை வலியுறுத்தி, அதனிமித்தம் நாம் அவரைப் பின்பற்றுவது நம்முடைய கடமை என்கிறார். சிறுபிள்ளைகள் தங்களுடைய பெற்றோரை தங்களுக்கு முன்மாதிரியாக வைத்து, சகல காரியங்களிலும் அவர்களையே பின்பற்றிவருவதை நாம் பார்த்திருக்கிறோம்.

ஒரு காலத்தில் நாம் கிறிஸ்துவைச் சேராதவர்களாகவும், அந்நியராகவும், தேவனற்றவர்களாகவும் இருந்தோம் என்பது உண்மை தான் (எபே 2:12). ஆனால் இன்று தேவன் நம்மை அவருடைய குடும்பத்தில் தத்தெடுத்து சேர்த்துக் கொண்டுள்ளார். நாம் அவருடைய பிள்ளைகள் என்ற அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிறோம். எனவே அவரைப் பின்பற்றி, அவரைப் போல் நடக்கவேண்டும் என்பது பவுலின் எதிர்பார்ப்பு.

பரிசுத்தமான தேவனைப் பின்பற்றி நடப்பது எவ்வாறு சாத்தியமாகும் என்ற கேள்வி எழும்பலாம். சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று அறிவித்துக் கொண்டிருக்கும் சேராபீன்களே தங்கள் முகங்களையும் கால்களையும்

செட்டைகளினால் மூடிக்கொண்டிருந்தன என்று (ஏசாயா *6:2,3*) பார்க்கிறோம். ஆனாலும் நாம் அவருடைய சொந்த பிள்ளைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டபடியால் அவரைப் பின்பற்றி நடக்க நம்மால் இயலும். பழைய ஏற்பாட்டு பரிசுத்தவானாகிய ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்தார் (ஆதி *5:24*).

நோவாவும் தேவனோடு சஞ்சரித்தார் (ஆதி *6:9*). ஆபிரகாம் தேவனுடைய சிநேகிதர் என்று அழைக்கப்பட்டார் என்று மூன்று வேதவசனங்கள் (2நாளா *20:7*, ஏசாயா *41:8*, யாக் *2:23*) குறிப்பிடுகின்றன. "ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவதுபோல, கர்த்தர் மோசேயோடே முகமுகமாய்ப் பேசினார்" என்று யாத் *33:11*ல் வாசிக்கிறோம். எண் *12:7,8* வாசித்துப் பாருங்கள். புதிய ஏற்பாட்டு காலத்தில், இன்று நாம் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் உறுப்புகளாக இருக்கிறோம் (எபே *4:16,25*). நமக்கு அவரே தலையாக இருக்கிறார். அவருடைய விலையேறப்பெற்ற இரத்தம் நமக்காக சிந்தப்பட்டாயிற்று. பரிசுத்த ஆவியின் முத்திரை நம்மேல் போடப்பட்டிருக்கிறது. எனவே அவருடைய சொந்த பிள்ளைகள் என்ற முறையில் நிச்சயமாகவே நாம் அவரைப் பின்பற்றிநடக்க முடியும்.

## தேவனைப் பின்பற்றி நடக்கவேண்டும் (5:1-7)

**ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப் போலத் தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி (எபே 5:1)**

நாம் நம்முடைய நடத்தையில் தேவனைப் பின்பற்றி நடக்கவேண்டும் என்பதற்காகவே அவருடைய பிள்ளைகள் என்ற அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிறோம் என்பதாக பவுல் பேசுகிறார். தேவனை அறியாத புறஜாதியார் தங்கள் வீணான சிந்தையிலே எவ்வாறு நடக்கிறார்கள் என்பதைப் பார்த்தோம் (எபே *4:17-19*). அதைத் தொடர்ந்து விசுவாசிகளாகிய நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாக இருப்பதால் எப்படிப்பட்ட உறவை நிலைநிறுத்திக் கொள்ள

வேண்டும் என்று பவுல் அறிவித்த காரியங்களையும் தியானித்தோம் (எபே 4:25-32).

நாம் தியானிக்கும் இந்த வேதபகுதியில் (1-7) புறஜாதியாரோடு, தேவனை அறியாத உலகத்து மக்களோடு எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதைக் குறித்து பவுல் கூடுதலாக அறிவிக்கிறார். ஆறுகாரியங்கள் இங்கே சொல்லப்படுகின்றன.

1. தேவனைப் பின்பற்றுங்கள் (வசனம் 1)

2. கிறிஸ்துவைப்போல அன்பு கூருங்கள் (வசனம் 2)

3. பரிசுத்தத்தைக் கடைப்பிடியுங்கள் (வசனம் 3)

4. பேச்சில் கவனமாயிருங்கள் (வசனம் 4)

5. பாவத்தைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் (வசனம் 5,6)

6. துன்மார்க்கரோடு உறவு கொள்ளாதிருங்கள் (வசனம் 7).

முதலாவது கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற முறையில் அவரையே, அவரை மட்டுமே பின்பற்றவேண்டும். "என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" (1கொரி 4:16) என்று பவுல் சொன்னாலும் எந்த அடிப்படையில் அதை அறிவிக்கிறார் என்பது 1கொரி 11:1ல் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது, "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்". "நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்" (1பேதுரு 2:21) என்று வாசிக்கிறோம். எங்களையும் கர்த்தரையும் பின்பற்றவேண்டும் என்ற ஆலோசனையை 1தெச 1:6ல் பவுல் கொடுக்கிறார். தேவனுடைய உண்மையான பரிசுத்தவான்களைப் பின்பற்றும்படியாக எபி 6:11ல் பவுல் அறிவிக்கிறார். அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றும்படியாக

எபி 13:7ல் சொல்கிறார். யோவான், "நீ தீமையானதைப் பின்பற்றாமல், நன்மையானதைப் பின்பற்று, நன்மைசெய்கிறவன் தேவனால் உண்டாயிருக்கிறான்; தீமைசெய்கிறவன் தேவனைக் காணவில்லை" *(3யோவான் 11)* என்கிறார்.

பொதுவாக ஒரு குடும்பத்தில் பிள்ளைகள் தங்களுடைய தகப்பனை முன்மாதிரியாக வைத்து அவரைப் பின்பற்றுகிறவர்களாக இருப்பார்கள். நாம் யாரை முழுமையாக நம்புகிறோமோ அவர்களையே பின்பற்றத் தீர்மானிப்பதுதான் மனித இயல்பு. நம்மை நேசித்து நமக்காக இரத்தம் சிந்தி மரித்த ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை நாம் முழுமையாக நம்பலாம் என்பதால் அவரைப் பின்பற்ற நாம் சிறிதும் யோசிக்கவேண்டியதில்லை. **கிறிஸ்துவைப் பின்பற்றும்போது நாம் அவரைப் போல் மாறிவிடுவது நிச்சயம்.**

இயேசு சொல்கிறார், "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" *(மத் 5:48)*. நாம் பூரண சற்குணராயிருக்க முயற்சி செய்யும்போது தேவனைப் பின்பற்றுகிறவர்களாக இருப்போம். "உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறது போல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்" *(லூக்கா 6:36)*. நாம் இரக்கமுள்ளவர்களாயிருக்க முயற்சி செய்யும்போது அவரைப் பின்பற்றுகிறவர்களாக இருப்போம். "நான் பரிசுத்தர். ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" *(லேவி 19:2)* என்கிறார் தேவன். நாமும் பரிசுத்தமாயிருக்க முயற்சி செய்யும்போது அவரைப் பின்பற்றுகிறவர்களாக இருப்போம். எபே 4:32 சொல்கிறது, "கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்". நாம் மற்றவர்களை மன்னிக்க முயற்சி செய்யும்போது தேவனைப் பின்பற்றுகிறவர்களாக இருப்போம்.

**கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும், பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள். (எபே 5:2)**

*நாம் தேவனைப் பின்பற்றவேண்டும் என்று முந்தின வசனத்தில் ஆலோசனை சொன்ன பவுல், கிறிஸ்து தன்னுடைய அன்பின் நிமித்தம் தியாக பலியாக ஒப்புக் கொடுத்த காரியத்தை நம்முடைய நினைவுக்குக் கொண்டுவருகிறார். எனவே கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாக நாம் அன்பில் நடந்துகொள்ள வேண்டும் என்கிறார். நம்முடைய நடத்தையைக் குறித்து பவுல் அறிவிக்கும்* ***இரண்டாவது*** *காரியம் இது. பிதாவாகிய தேவனும் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் வித்தியாசமான ஆள்தத்துவத்தோடு செயல்படுகிறவர்களாக இருந்தாலும் இருவருமே ஒன்றாயிருக்கிறார்கள். கிறிஸ்து சொல்லியிருக்கிறார், "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்". யோவான் 10:30, 14:9,10, 17:21 வாசித்துப் பாருங்கள். திருத்துவத்தின் இரண்டாவது நபராகிய கிறிஸ்துவைப் பற்றி பவுல் சொல்கிறார், "என்னில் அன்புகூர்ந்து, எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரன்" (கலா 2:20). ஒப்புக்கொடுத்தார் என்ற வார்த்தை அவருடைய பாடுமரணத்தை மட்டும் குறிப்பிடவில்லை. கிறிஸ்து நம்முடைய சார்பில், நம்முடைய பிரதிநிதியாக அவர் மரித்தார் என்பதையும் குறிப்பிடுகிறது. யோவான் 6:51ல் அவர் சொல்கிறார், "நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றைன்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே".*

*ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மேல் கொண்டிருந்த அன்பின் நிமித்தம் பிதாவாகிய தேவனிடமிருந்து நம்முடைய பாவத்தினிமித்தம் வெளிப்பட்ட கோபாக்கினையில் இருந்து விடுவிக்கும்படியாக தன்னை இரண்டு விதங்களில் ஒப்புக் கொடுத்ததாக பவுல் அறிவிக்கிறார்.*

*1. சுகந்த வாசனையுள்ள காணிக்கையாக*

*2. பலியாக*

முதலாவது நாம் அறிந்து கொள்ளவேண்டிய காரியம் குமாரனாகிய இயேசுவே தன்னை ஒப்புக்கொடுத்தார் என்பதை. சிலுவை மரணத்தை ஏற்றுக்கொள்ளும்படியாக யாரும் அவரை நிர்ப்பந்தம் பண்ணவில்லை. அவராக முன்வந்து அதை ஏற்றுக்கொண்டார். யோவான் 10:11ல் அவர் சொல்கிறார், "நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்". "ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்" (வசனம் 15) என்கிறார். தேவனுக்கு நாம் கொடுப்பது எல்லாமே காணிக்கை என்று அழைக்கப்படும். ஆனால் பலி என்று சொல்லும்போது அது ஒரு மிருகமோ அல்லது பறவையோ இரத்தம் சிந்தும்படியாக கொல்லப்பட்டு தேவசமுகத்தில் அர்ப்பணிக்கப்படுவதைக் குறிப்பிடுகிறது. "இரத்தஞ் சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது" (எபி 9:22) என்று வாசிக்கிறோம்.

ரோமர் 3:26ல் பவுல் சொல்கிறார், "கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார்". "அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது" (1யோவான் 4:10). 1யோவான் 2:2ல் இவ்வாறு வாசிக்கிறோம், "நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்". நியாயப்பிரமாண விதிமுறைகளின்படி மாட்டு மந்தையிலிருந்தாவது ஆட்டு மந்தையிலிருந்தாவது ஒரு மிருகம் கொல்லப்பட்டு, அதன் இரத்தம் பலிபீடத்தின்மேல் தெளிக்கப்பட வேண்டும். மிருகத்தை சந்து சந்தாகத் துண்டித்து அவற்றை பலிபீடத்தின்மேல் தகனிக்கவேண்டும். "இது சர்வாங்க தகனபலி; இது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி" (லேவி 1:13).

“ஆட்டுக்கடா முழுவதையும் பலிபீடத்தின்மேல் தகித்து விடுவாயாக; இது கர்த்தருக்குச் செலுத்தும் சர்வாங்க தகனபலி; இது சுகந்த வாசனையும் கர்த்தருக்குச் செலுத்தும் தகனபலியுமாய் இருக்கும்” (யாத் 29:18). சுகந்த வாசனை என்பது பலி தகனிக்கப்படும்போது வெளிப்படும் நறுமணத்தைக் குறிப்பிடுகிறது. நோவா தகனபலிகளை பலியிட்டபோது, “சுகந்த வாசனையைக் கர்த்தர் முகர்ந்தார்” என்று ஆதி 8:21ல் சொல்லப்பட்டிருக்கிறது.

நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்யும்படியாகவே கிறிஸ்து நம்மில் அன்பு கூர்ந்தார். அதேபோன்ற அன்பு நம்மிடமிருந்தும் வெளிப்படவேண்டும் என்கிறார் பவுல். யோவான் 15:12,13ல் இயேசு சொல்கிறார், “நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை”. யோவான் 13:34,35ல் அவர் சொல்கிறார், “நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்”.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நம்மில் அன்பு கூர்ந்ததன் நிமித்தம் என்ன செய்தார் என்பதை யோசித்துப் பாருங்கள். அவர் நம்முடைய பாவங்களை மன்னித்தார். நம்முடைய தேவைகளைச் சந்திக்கிறார், நம்மை ஆறுதல்படுத்துகிறார், நம் ஜெபத்துக்குப் பதில் தருகிறார். நமக்கு சமாதானத்தைத் தருகிறார். நம்மை பெலப்படுத்துகிறார். நமக்கு நித்திய ஜீவனை வழங்கும்படியாக தன்னுடைய ஜீவனையே கொடுத்தார். “அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே, அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்” (1யோவான் 3:16). இந்த அன்பின் நிமித்தம் நாம் அன்பில் நடந்துகொள்வது எப்படி? முதலாவது நாம் நம்முடைய சரீரங்களை பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான

ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து (ரோமர் 12:1), இழந்துபோன ஆத்துமாக்களுக்கு சத்தியத்தை அறிவித்து, அவர்களையும் கிறிஸ்துவின் அன்புக்குள்ளாக வழிநடத்துவதுதான்.

**மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர் முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது. (எபே 5:3)**

பரிசுத்தத்தை கடைப்பிடித்து நடக்கவேண்டும் என்ற காரியம் மூன்றாவதாகச் சொல்லப்படுகிறது. வேசித்தனம், அசுத்தம், பொருளாசை என்ற மூன்று காரியங்களை விலக்கவேண்டும் என்று சொல்வதோடு மட்டும் பவுல் நிறுத்திக்கொள்ளவில்லை. இவை பரிசுத்தமான தேவனுடைய பிள்ளைகளுக்கு ஏற்றதல்ல என்பதால் அவைகளின் பேர்முதலாய் சொல்லப்படக்கூடாது என்கிறார். அதாவது இந்த மூன்று காரியங்களும் விசுவாசிகளிடமும் தேவனுடைய ஊழியக்காரர்களிடம் இருக்கக்கூடும் என்ற சந்தேகம் உருவாகக்கூட நம்முடைய நடத்தை காரணமாக இருக்கக்கூடாது. அந்த அளவுக்கு அவர்கள் தங்களுடைய பரிசுத்தத்தை தீட்டுப்படாமல் காத்துக்கொள்வது அவசியமாயிருக்கிறது என்கிறார் பவுல். சீசரின் மனைவி சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவளாக இருக்கவேண்டும் என்பது அந்த நாட்களில் சொல்லப்பட்ட ஒரு பழமொழி. இந்த பாவங்களிலிருந்து நாம் அவ்வளவுதூரம் விலகியிருக்க வேண்டும். அந்த பாவங்களுடன் நம்மை சம்பந்தப்படுத்தி யாரும் பேசக்கூட இடங்கொடுக்கக்கூடாது.

வேசித்தனம் தேவனால் அருவருக்கப்படும் ஒரு காரியம். "விபசாரம் செய்யாதிருப்பாயாக" (யாத் 20:14, உபா 5:18) என்பது பத்துக் கற்பனைகளில் ஒன்றாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்து தன்னுடைய மலைப்பிரசங்கத்தில் சொல்கிறார், "விபசாரம் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று" (மத் 5:27,28). "நீங்கள்

வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து, தேவனை அறியாத அஞ்ஞானிகளைப் போல மோகஇச்சைக்குட்படாமல், உங்களில் அவனவன் தன்தன் சரீரபாண்டத்தைப் பரிசுத்தமாயும், கனமாயும் ஆண்டுகொள்ள வேண்டும்" என்று 1தெச 4:3-5ல் பவுல் ஆலோசனை தருகிறார். அசுத்த இச்சையோடே மாம்சத்திற்கேற்றபடி நடந்து கொள்கிறவர்கள் கர்த்தத்துவத்தை அசட்டை பண்ணுகிறார்கள் என்கிறார் பேதுரு (2பேதுரு 2:10). "வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்" என்று எபி 13:4ல் வாசிக்கிறோம்.

எந்த விதமான அசுத்தமான காரியமும் தேவனுடைய பரிசுத்தவான்களிடம் காணப்படக்கூடாது என்கிறார் பவுல். ஏனென்றால், "தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல, பரிசுத்தத்துக்கே அழைத்திருக்கிறார்" (1தெச 4:7). சில அசுத்தமான கிரியைகளைக் குறிப்பிட்டு பவுல் அறிவிக்கிறார், "வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசீனரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை" (1கொரி 6:9,10). இப்படி அசுத்தத்தால் தீட்டுப்பட்டவர்களுக்கு பவுல் தரும் ஆலோனை ரோமர் 6:19ல் சொல்லப்பட்டிருக்கிறது, "அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்ததுபோல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள்".

இந்தக் காரியத்தில் கிறிஸ்துவின் சகோதரனாகிய யாக்கோபுவின் ஆலோசனை யாக் 1:21ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. "எல்லாவித அழுக்கையும், கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும், உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்". நம்முடைய உடலுறுப்புகளை நீதிக்குக் கீழ்ப்படியச் செய்வதாலும், தேவனுடைய வார்த்தையை

ஏற்றுக்கொள்வதாலும் மட்டுமே சகலவிதமான அசுத்தங்களிலிருந்தும் நாம் விடுதலை பெறமுடியும்.

அடுத்ததாக பொருளாசையைக் குறித்து பவுல் பேசுகிறார். ஆகானின் பொருளாசையினிமித்தம் இஸ்ரவேலர் ஆயி பட்டணத்துக்கு எதிரான யுத்தத்தில் மிகப்பெரிய தோல்வியைச் சந்தித்தார்கள் (யோசுவா *7:21, 7:4*). முப்பது வெள்ளிக்காசுக்காக யூதாஸ் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுத்தான் (மத் *26:15,16*). பொருளாசையினாலேயே தீர்க்கதரிசியான பிலேயாம் தன்னுடைய அழைப்பை இழந்து போனான் (2பேதுரு *2:15,16*). தீர்க்கதரிசியான சாமுவேலின் பிள்ளைகளைக் குறித்து ஆவியானவர் வேதனையோடு குறிப்பிடுகிறார், "அவனுடைய குமாரர் அவன் வழிகளில் நடவாமல், பொருளாசைக்குச் சாய்ந்து, பரிதானம் வாங்கி, நியாயத்தைப் புரட்டினார்கள்" (1சாமு *8:3*). நீதிமொழிகள் *15:27* எச்சரிக்கிறது, "பொருளாசைக்காரன் தன் வீட்டைக் கலைக்கிறான்; பரிதானங்களை வெறுக்கிறவனோ பிழைப்பான்". எரேமியா சொல்கிறார், "சிறியோர் முதல் பெரியோர் மட்டும், ஒவ்வொருவரும் பொருளாசைக்காரர்" (*6:13*). தேசத்தின் தலைவர்கள் மற்றும் பிரபலமாயிருக்கும் ஊழியக்காரர்களின் இன்றைய நிலை என்ன என்பதைப் பாருங்கள். "அதின் தலைவர்கள் பரிதானத்துக்கு நியாயந்தீர்க்கிறார்கள்; அதின் ஆசாரியர்கள் கூலிக்கு உபதேசிக்கிறார்கள்; அதின் தீர்க்கதரிசிகள் பணத்துக்குக் குறிசொல்லுகிறார்கள்; ஆகிலும் அவர்கள் கர்த்தரைச் சார்ந்துகொண்டு: கர்த்தர் எங்கள் நடுவில் இல்லையோ? தீங்கு எங்கள்மேல் வராது என்கிறார்கள்" (மீகா *3:11*).

தேவன் அருவருக்கும் அசுத்தமான பாவக்கிரியைகளைக் குறித்து ரோமர் *1:18-32*, 1கொரி *5:9-11, 6:9,10*, கலா *5:19-21*, கொலோ *3:5-9*, 1தெச *4:3-7*, 1தீமோ *1:9,10*, 2தீமோ *3:2-5*, தீத்து *3:3* ஆகிய வசனங்களிலும் பவுல் சொல்கிறார். கொலோ *3:5*ல் அவர் சொல்கிறார், "விபசாரம், அசுத்தம், மோகம், துர் இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டு பண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப் போடுங்கள்". கிறிஸ்து சொல்கிறார். "உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால்,

அதைப் பிடுங்கி எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும்" (*மத் 5:29*). அடுத்த 30வது வசனத்தையும் வாசித்துப் பாருங்கள்.

**அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்; ஸ்தோத்திரஞ் செய்தலே தகும். (எபே 5:4)**

தேவனுடைய குடும்பத்தார் தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்ற அறிவுரைகளைத் தொடர்ந்து பவுல் சொல்லிக்கொண்டிருக்கிறார். முந்தின வசனத்தில் வேசித்தனம், அசுத்தம், பொருளாசை என்ற மூன்று பாவங்களின் பேர்முதலாய் சபையார் வாயாலும் உச்சரிக்கக்கூடாது என்று பவுல் அறிவித்ததைப் பார்த்தோம். நான்காவது ஆலோசனை இந்த வசனத்தில் சொல்லப்படுகிறது. வாயின் வார்த்தை பிறப்பிக்கும் வம்புப் பேச்சு, புத்தியீனமான பேச்சு, பரியாசப் பேச்சு ஆகிய மூன்றும் சபையாரிடமிருந்து விலக்கப்படவேண்டும் என்கிறார். கொலோ *3:8*ல் சொல்கிறார், "கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும், வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள்". ஏற்கெனவே "கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்" (எபே *4:29*) என்ற வசனத்தைத் தியானித்ததை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். கொலோ *3:8*ல் பவுல் சொல்கிறார், "உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள்".

வாயின் வார்த்தைகளைக் குறித்து ஏன் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்? இயேசு மத் *12:34*ல் இவ்வாறு சொல்கிறார், "நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்". "மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே

கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்" *(வசனம் 36, 37)*. நீதி *10:18-20*ல் இவ்வாறு வாசிக்கிறோம், "புறங்கூறுகிறவன் மதிகேடன். சொற்களின் மிகுதியில் பாவமில்லாமற்போகாது; தன் உதடுகளை அடக்குகிறவனோ புத்திமான். நீதிமானுடைய நாவு சுத்தவெள்ளி".

வம்புப் பேச்சு, புத்தியீனமான பேச்சு, பரியாசப் பேச்சு என்ற மூன்று தவறான சம்பாஷணைகளை பவுல் இந்த வசனத்தில் குறிப்பிடுகிறார். "பிரயோஜனமில்லாத வார்த்தைகளாலும், உபயோகமில்லாத வசனங்களாலும் தர்க்கிக்கலாமோ" *(யோபு 15:3)* என்கிறார் எலிப்பாஸ். பிரசங்கி *5:3* சொல்கிறது, "வார்த்தைகளின் திரட்சியினால் மூடனுடைய சத்தம் பிறக்கும்". "அவன் வாய்மொழிகளின் துவக்கம் மதியீனமும், அவன் வாக்கின் முடிவு கொடிய பைத்தியமுமாம், மூடன் மிகுதியாய்ப் பேசுகிறான்" *(பிர 10:13,14)*.

இந்தக் கடைசி நாட்களில் தங்கள் வயிற்றுக்கு ஊழியம் செய்கிறவர்கள் தங்கள் "நயவசனிப்பினாலும், இச்சகப் பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்" *(ரோமர் 16:18)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. தேவனுடைய ஊழியத்தைச் செய்கிறவர்கள் தங்கள் வாயின் வார்த்தையில் வம்பு, புத்தியீனம், பரியாசம் இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். மல்கியா *2:7* சொல்கிறது, "ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக் காக்கவேண்டும்; வேதத்தை அவன் வாயிலே தேடுவார்களே". "உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக" *(கொலோ 4:6)*.

மூன்று வகையான பேச்சுக்களை தகாதவை என்று அறிவித்த பவுல் ஸ்தோத்திரம் செய்வதே தகும் என்கிறார். ஸ்தோத்திரம் செய்யும் மனிதன், தான் தேவனிடம் பெற்றுக்கொண்ட நன்மைகளினிமித்தம்

அவருடைய சமுகத்தில் தன்னைத் தாழ்த்தி அவருக்கு நன்றி சொல்கிறவனாக இருக்கிறான். "எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரிக்கும்படியாக (எபே 5:20) பவுல் ஆலோசனை தருகிறார். "அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்" என்று எபி 13:15ல் வாசிக்கிறோம். "சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப், புத்தி சொல்லிக்கொண்டு, உங்கள் இருதயங்களில் கர்த்தரைப் பக்தியுடன் பாடி, வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்" (கொலோ 3:16,17). பிலி 4:6ல் பவுல் சொல்கிறார், "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடேகூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்". "எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது" (1தெச 5:18).

**விபசாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக் காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே. (எபே 5:5)**

விபசாரம், அசுத்தம், பொருளாசை விசுவாசிகளுக்குள் இருக்கக்கூடாது என்று எபே 5:3ல் ஏற்கெனவே சொல்லியிருந்தும் மீண்டுமாக அந்த மூன்று பாவங்களையும் பவுல் அறிவிக்கிறார். ஆங்கில மொழிபெயர்ப்பில் "அறிந்திருக்கிறீர்களே" (This ye know) என்று இந்த வசனம் துவங்குகிறது. ஒரு நல்ல ஆசிரியரைப் போல அடிப்படையான சத்தியங்களை மீண்டும் மீண்டும் வலியுறுத்தும்போதுதான் அவை மாணவர்களின் மனதில் பதிந்திருக்கும் என்ற கருத்தோடு பவுல் எழுதுவதுபோல் தெரிகிறது.

உண்மையான மனந்திரும்புதலோடு, பாவத்தை விட்டு விலகி, விசுவாசத்தின் மூலமாக தேவனைத் தேடி வருகிறவனுக்கு மட்டுமே கிறிஸ்துவின் ராஜ்யத்தின் கதவுகள் திறக்கப்படும். அவன் மட்டுமே அங்குள்ள ஆசீர்வாதங்களைச் சுதந்தரிக்கமுடியும். *ரோமர் 1:18-32* வாசித்துப் பாருங்கள்.

முந்தின வசனத்தில் இவைகளின் பேர்முதலாய் கிறிஸ்தவர்களுக்குள்ளே சொல்லப்படக்கூடாது என்று அறிவித்த பவுல் இங்கே ஐந்தாவது ஆலோசனையாக இந்த பாவங்களுக்கு விரோதமாக இன்னும் கடினமாகப் பேசுகிறார். இவர்கள் தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை என்கிறார். மத்தேயு *5:20*ல் இயேசு சொல்கிறார், "வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்". மத் *18:3*ல் சொல்கிறார், "நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்". *1*கொரி *15:50*ல் பவுல் சொல்கிறார், "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது". வெளி 21:27 சொல்கிறது, "தீட்டுள்ளதும், அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள்".

"தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யம்" என்ற வாக்கியம் வேதத்தில் இந்த ஒரு இடத்தில்தான் சொல்லப்பட்டிருக்கிறது. *1*கொரி *4:20*ல் பவுல் சொல்கிறார், "தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது". "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்" (யோவான் *3:5*) என்கிறார் இயேசு. பவுல் திட்டவட்டமாகச் சொல்கிறார், "அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப் படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும்,

திருடரும், உதாசினமும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை" *(1கொரி 6:9,10)*.

"தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமு-மாயிருக்கிறது" *(ரோமர் 14:17)* என்று வாசிக்கிறோம். எனவே தேவனுடைய ராஜ்யம் என்பது உலகத்து ராஜ்யத்திலிருந்து வித்தியாசமானது. இயேசு சொல்கிறார், "இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே" *(லூக்கா 17:21)*. தேவனுடைய ராஜ்யம் ஆவிக்குரியதாக இருக்கிறது. தேவன் வாசம் செய்து ஆளுகை செய்யும் இடமே தேவனுடைய ராஜ்யமாகிறது.

உபத்திரவ காலத்தின் கடைசி நாட்களில் உலகத்து ராஜ்யங்கள் அத்தனையும் கிறிஸ்துவின் ராஜ்யமாக உருவாகிறது என்பதை வெளி *11:15* இவ்வாறு விளக்குகிறது, "ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார்". இந்த ராஜ்யத்துக்குள் பிரவேசிக்கும் பாக்கியம் தனக்கு உண்டு என்ற நிச்சயத்தோடு பவுல் சொல்கிறார், "கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து, தம்முடைய பரம ராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார்" *(2தீமோ 4:18)*. இந்த சிலாக்கியம் தேவனுடைய பிள்ளைகள் எல்லாருக்கும் வழங்கப்படும் என்பது 2பேதுரு *1:11*ல் உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது. "இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்".

ஆனாலும் இந்த ராஜ்யம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவால் பிதாவாகிய தேவனுக்கு ஒப்புக்கொடுக்கப்படும் என்கிற இரகசியம் 1கொரி *15:24*ல் அறிவிக்கப்பட்டிருக்கிறது. 1கொரி *15:22-28* வாசித்துப் பாருங்கள். யுகாயுகங்கள் என்ற ஆட்சியின் காலம் அப்பொழுது

உதயமாகிறது. பிதாவாகிய "தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்" (வசனம் 28). இந்த ஆளுகை குறித்து மேற்கொண்டு எதுவும் வேதத்தில் சொல்லப்படவில்லை.

பொருளாசை எவ்வளவு ஆபத்தானது என்பதை சபை அறிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக அது விக்கிரக ஆராதனையாகக் கருதப்படவேண்டும் என்று பவுல் குறிப்பிடுவதைக் கவனியுங்கள். பாபிலோனிய சிறையிருப்பு நாட்களுக்குப் பின் யூதர்கள் சிலைவழிபாட்டை மிகப்பெரிய பாவமாகக் கருதினார்கள். தன்னுடைய முதல் நிருபத்தை "நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக் கொள்வீர்களாக" என்று யோவான் முடிக்கிறார். கொலோ *3:5* லும் "விக்கிரகாராதனையான பொருளாசை" என்று பவுல் குறிப்பிடுகிறார். பொருளாசையுள்ள மனிதன் ஜீவனுள்ள தேவனை நம்புவதற்குப் பதிலாக தன்னுடைய ஐசுவரியத்தை நம்பி செயல்பட ஆரம்பிக்கிறான். "எந்த ஊழியக்காரனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்யக்கூடாது; ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான். தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது" *(லூக்கா 16:13, மத் 6:24)* என்கிறார் இயேசு. இரண்டு நபர்களுக்கு ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது என்று தேவன் அறிவித்தும், எங்களால் கூடும் என்று முயற்சி செய்யும் மனிதர்களால் ஊழியங்கள் அட்டூழியங்களாக மாறிவருவதை இந்த நாட்களில் பார்க்கிறோம்.

பணஆசை ஒரு மனிதனைப் பற்றிக்கொள்ளும்போது அவனிடமிருந்த எல்லா நற்பண்புகளும் காலதாமதமின்றி விலகிப் போய்விடும். தேவனுடைய மனிதனாகிய எலிசாவின் ஊழியக்காரன் கேயாசியை நினைவுபடுத்திப் பாருங்கள். பணஆசை அவனை நாகமானைத் தேடி ஓடவைத்தது. முடிவில் அவன் பெற்றுக்கொண்டது என்ன? சாபமும், குஷ்டரோகமும் தானே!

**இப்படிப்பட்டவைகளினிமித்தமாகக் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வருவதால், ஒருவனும் உங்களை வீண்வார்த்தைகளினாலே மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.(எபே 5:6)**

தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்தை பாவிகள் சுதந்தரிப்பதில்லை என்று முந்தின வசனத்தில் அறிவித்த பவுல் அதன் காரணத்தை இந்த வசனத்தில் சொல்கிறார். ஏனென்றால் தேவனுடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படியாதவர்கள் நிச்சயமாக தேவகோபாக்கினையைச் சந்தித்தே ஆகவேண்டும். ஒருவராவது அதிலிருந்து தப்பித்துக் கொள்ளமுடியாது.

மோசே இஸ்ரவேல் ஜனங்களை எவ்வாறு எச்சரிக்கிறார் என்பதை கவனியுங்கள். "நான் உங்களுக்குக் கற்பிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தீர்களானால் ஆசீர்வாதமும், எங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாமல், இன்று நான் உங்களுக்கு விதிக்கிற வழியை விட்டு விலகி, நீங்கள் அறியாத வேறே தேவர்களைப் பின்பற்றுவீர்களானால் சாபமும் வரும்" *(உபா 11:27,28)*. சாமுவேல் சொல்கிறார், "நீங்கள் கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படியாமல், கர்த்தருடைய வாக்குக்கு விரோதமாய்க் கலகம் பண்ணினீர்களானால், கர்த்தருடைய கை உங்கள் பிதாக்களுக்கு விரோதமாயிருந்ததுபோல உங்களுக்கும் விரோதமாயிருக்கும்" *(1சாமு 12:15)*.

அன்பும் இரக்கமும் நிறைந்த தேவனிடமிருந்து கோபாக்கினை எப்படி வெளிப்படும் என்று சொல்லி வீண் வார்த்தைகளினாலே யாரும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்கிறார் பவுல். "குமாரன் கோபங்கொள்ளாமலும், நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு, அவரை முத்தஞ்செய்யுங்கள்" *(சங் 2:12)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. யோவான் *3:36* சொல்கிறது, "குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை; தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்". "தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது" *(ரோமர் 1:18)*

என்கிறார் பவுல். "கோபாக்கினை நாளிலே உனக்காகக் கோபாக்கினையைக் குவித்துக் கொள்கிறாயே" *(ரோமர் 2:5)* என்ற எச்சரிப்பைக் கவனியுங்கள்.

அப்படி இருக்கும்போது தேவன் பாவத்தை மட்டுமே வெறுக்கிறார் என்றும் பாவிகளை நேசிக்கிறார் என்றும் மோசக்காரர்கள் தங்களுடைய பொய்யும் தவறும் நிறைந்த வீண் வார்த்தைகளினாலே சபையை தவறான பாதையில் வழிநடத்துவதைக் குறித்து பவுல் இந்த எச்சரிக்கையை இங்கே வழங்குகிறார். "ஒருவனும் நயவசனிப்பினாலே உங்களை வஞ்சியாதபடிக்கு இதைச் சொல்லுகிறேன்" *(கொலோ 2:4)* என்கிறார். "லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டுபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" *(வசனம் 8)* என்கிறார்.

இஸ்ரவேலர்மேல் தேவகோபாக்கினை வெளிப்பட்ட நிகழ்ச்சி எண் *25:1-9*ல் சொல்லப்பட்டிருப்பதை வாசித்துப் பாருங்கள். அவர்கள் சித்தீமிலே தங்கியிருந்த நாட்களில் மோவாபின் குமாரத்திகளோடு வேசித்தனம் பண்ணி, அவர்களது தேவர்களைப் பணிந்துகொள்ள ஆரம்பித்தார்கள். "அதனால் இஸ்ரவேலர்மேல் கர்த்தருடைய கோபம் மூண்டது" *(வசனம் 3)*. அதனிமித்தம் வந்த வாதையினால் இருபத்து நாலாயிரம்பேர் மரணமடைந்தார்கள். சோதோம் கொமோராவின் பாவத்தினிமித்தம் வானத்திலிருந்து வந்த கந்தகத்தினாலும், அக்கினியினாலும் "அந்த பட்டணங்களையும், அந்தச் சமபூமியனைத்தையும், அந்த பட்டணங்களின் எல்லாக் குடிகளையும், பூமியின் பயிரையும் அழித்துப் போட்டார்" *(ஆதி 19:25)* என்று வாசிக்கிறோம். வெளி *21:8* சொல்கிறது, "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்".

**அவர்களுக்குப் பங்காளிகளாகாதிருங்கள். (எபே 5:7)**

இயேசு அன்பாயிருக்கிறார், அவர் உங்களை நேசிக்கிறார். அவர் உங்களை அழைக்கிறார், அவர் உங்களை விடுவிக்கிறார், அவர் உங்கள் மேல் மனதுருகுகிறார். அவர் உங்களை குணமாக்குகிறார் என்பதை மட்டுமே அனைவருக்கும் சுவிசேஷமாகவும், சபையாருக்கு உபதேசமாகவும் அறிவிக்கும் ஊழியங்கள் மட்டுமே பிரபலமாகும் நாட்களில் நாம் இருக்கிறோம். அதனால் தேவனுடைய கோபாக்கினையைக் குறித்தும், அதன் விளைவாக ஒருவன் சந்திக்கவிருக்கும் இரண்டாவது மரணத்தைக் குறித்துப் பேசுவதும் அநாகரிகமான காரியமாகக் கருதப்படுகிறது. ஆனால் பவுல் சொல்லும் **ஆறாவது** ஆலோசனை என்ன? தங்களுடைய வீண்வார்த்தைகளினால் உங்களை மோசம் போக்குகிறவர்களுக்கு பங்காளிகளாகாதிருங்கள். அவர்களுக்கும் உங்களுக்கும் எந்தத் தொடர்பும், ஐக்கியமும், உறவும், நட்பும் இருக்கவேண்டாம் என்கிறார். 1கொரி 5:11ல் திட்டவட்டமாக சொல்கிறார், "சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக்காரனாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாராதனைக்காரனாயாவது, உதாசினனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக்காரனாயாவது இருந்தால் அவனோடே கலந்திருக்கக்கூடாது; அப்படிப்பட்டவனுடனேகூடப் புசிக்கவுங் கூடாது" *(1கொரி 5:11)*. பவுல் இந்தக் காரியத்தை ஒரு ஆலோசனையாகக் கொடுக்காமல், கட்டளையாகக் கொடுக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

துன்மார்க்க மனிதர்களுடைய வீண் வார்த்தைகள் நம்மை மோசம் போக்கிவிடும் என்பதால் அவர்களுடன் எந்தவிதமான ஐக்கியமும் வைத்துக்கொள்ளக்கூடாது என்பதையே பவுல் இந்த வசனத்தில் வலியுறுத்துகிறார். கடைசிநாட்களில் மகாபாபிலோனின் அழிவு தேவனால் நியமிக்கப்பட்டபோது வானத்திலிருந்து வந்த சத்தம் இவ்வாறு அறிவிக்கிறது, "என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்" *(வெளி 18:4)*. இந்த எச்சரிக்கைக்குப் பின்னும் அவளுக்கு

பங்காளிகளாக இருப்பவர்கள் தேவகோபாக்கினையைச் சந்திப்பது உறுதி. நம்முடைய ஐக்கியம் யாரோடு இருக்கிறது என்பதில் மிகுந்த கவனமுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

மோசே மற்றும் ஆரோனுக்கு விரோதமாக கோராகு, தாத்தான், அபிராம் ஒரு கூட்ட ஜனங்களோடு எழும்பி வரும்போது மோசே இஸ்ரவேலரை இவ்விதமாக எச்சரிக்கிறார், "இந்தத் துஷ்ட மனிதரின் சகல பாவங்களிலும் நீங்கள் வாரிக்கொள்ளப்படாதபடிக்கு, அவர்கள் கூடாரங்களை விட்டு விலகி, அவர்களுக்கு உண்டானவைகளில் ஒன்றையும் தொடாதிருங்கள்" *(எண் 16:26)*. கோபாக்கினை துன்மார்க்கர் மேல் இறங்கும்போது, நம்முடைய ஐக்கியம் அவர்களோடு இருந்தால் நாமும் பாதிக்கப்படுவது நிச்சயம். **பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை நம்மில் காணப்படவில்லை என்றால் நாம் இரட்சிக்கப்படவில்லை என்றுதான் அர்த்தம்.** "கர்த்தாவே, கர்த்தாவே" என்று சொல்வதால் மட்டும் பரலோக ராஜ்யத்துக்குள் பிரவேசிக்க முடியாது *(மத் 7:21)*.

## வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடக்கவேண்டும் (5:8-14)

**முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள். (எபே 5:8)**

எபேசு சபையார் சத்தியத்தைக் கேட்டு, கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெறுவதற்கு முன்பு எப்படி இருந்தார்கள் என்பதை பவுல் வசனத்தின் முதல் பகுதியில் விளக்குகிறார். அவர்கள் அந்தகாரமாயிருந்தார்கள், அதாவது இருள் நிறைந்தவர்களாய் இருந்தார்கள். உங்களில் அந்தகாரம் இருந்தது அல்லது உங்களில் இருந்து அந்தகார கிரியைகள் வெளிப்பட்டது என்று சொல்லாமல் நீங்கள் இருளாயிருந்தீர்கள் என்கிறார் பவுல். இருட்டில் திசை தெரியாமல் அங்கும் இங்கும் அலைந்த மக்கள் அல்ல, அவர்கள் தங்களில் தங்களுக்குள் முற்றிலும் இருளாயிருந்தார்கள் என்று பொருள் கொள்ளவேண்டும். அவர்களுடைய வாழ்க்கையே இருளாய் இருந்தது.

மீகா 3:6 வசனத்தை பவுல் நினைவுபடுத்துகிறார். "தரிசனங் காணக்கூடாத இராத்திரியும், குறிசொல்லக்கூடாத அந்தகாரமும் உங்களுக்கு வரும்; தீர்க்கதரிசிகளின்மேல் சூரியன் அஸ்தமித்து, அவர்கள் மேல் பகல் காரிருளாய்ப் போகும்". தீர்க்கதரிசிகளின் நிலைமையே பரிதாபத்துக்குரியதாகிவிடுகிறது. நீதி 4:19ல், "துன்மார்க்கருடைய பாதையோ காரிருளைப் போலிருக்கும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களை அந்தகாரப்படுத்தியது பிசாசு. 2கொரி 4:4 சொல்கிறது, "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்".

**இரட்சிக்கப்படாத, ஒரு மனிதனுடைய கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் எல்லாம் அந்தகாரமாகவே இருக்கிறது.** தான் எங்கிருந்து வந்தான் என்பதும், தான் எங்கே, ஏன் இருக்கிறான் என்பதும், தான் எங்கே போகிறான் என்பதும் அவனுக்குத் தெரியாது. அதனால்தான் கிறிஸ்து சொல்கிறார், "உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு" (லூக்கா 11:35). "உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால் அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்" (மத் 6:23). ஆனாலும் அந்தகாரத்திலிருந்த எபேசு சபையார் இப்பொழுது கர்த்தருக்குள் வெளிச்சமாயிருப்பதை பவுல் சுட்டிக்காட்டுகிறார். "சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவர்" (1தீமோ 6:16) என்று அழைக்கப்படும் தேவனோடு அவர்கள் ஐக்கியம் கொண்டிருக்கிறார்கள். பவுல் சொல்கிறார், "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்" (கொலோ 1:13).

அவர்கள் பெற்றுக்கொண்ட வெளிச்சம் கர்த்தருடையது என்பதால் கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள் என்கிறார். 1யோவான் 1:5 சொல்கிறபடி, "தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை". கிறிஸ்து சொல்கிறார், "நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன்

*இருளில் நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான்" (யோவான் 8:12). "உலகத்திலே வந்து, எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி" (யோவான் 1:9).*

கிறிஸ்துவை ஒருவன் பின்பற்றி நடக்கும்போது அவனிடமிருந்து அவ்வப்போது வெளிச்சம் வெளிப்படுகிறது என்பதல்ல, அவர்கள் வெளிச்சமாகவே மாறிவிடுகிறார்கள். மனிதர்களுடைய அந்தகாரத்தை மாற்றும்படியாக உலகத்துக்கு கிறிஸ்து வரவில்லை. அல்லது அவர்களுக்கு வெளிச்சத்தைக் காட்டும்படியாக மட்டும் வரவில்லை. அவர்களை வெளிச்சமாக்கும்படியாக வந்தார். அதனால்தான் அவர் சொல்கிறார், *"நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" (மத் 5:14). "மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது" (வசனம் 16).* நாம் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறோம் என்பதை நம்புங்கள். ஏனென்றால் கிறிஸ்துவே அதைச் சொல்லியிருக்கிறார்.

*"இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப் பண்ணும் பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்" (2கொரி 4:6)* என்கிறார் பவுல். *"ஒளி உங்களோடிருக்கையில் நீங்கள் ஒளியின் பிள்ளைகளாயிருக்கும் படிக்கு, ஒளியினிடத்தில் விசுவாசமாயிருங்கள்" (யோவான் 12:36)* என்கிறார் இயேசு. "வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்" என்ற ஆலோசனையோடு இந்த வசனம் முடிவடைகிறது.

அந்தகாரமாயிருந்தவர்கள் எப்படி வெளிச்சத்தின் பிள்ளைகளாக முடியும் என்று நாம் யோசிக்க வேண்டியதில்லை. தாவீது வெளிச்சத்தின் பிள்ளையாக இருந்தார் என்பதில் நமக்கு சந்தேகமே இல்லை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே தாவீதின் குமாரன் என்று அழைக்கப்பட்டார். தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவராக தாவீது

இருந்தார் என்பதும் உண்மைதான். இந்த தாவீது முன்னர் எப்படிப்பட்டவராக இருந்தார்? ஒரு கொலைகாரனாக, விபசாரகாரனாக, பொய்பேசுகிறவனாக, தன்னுடைய போர்வீரனுக்கு எதிராக துரோகம் செய்தவனாக. ஆனால் அந்தகாரமாயிருந்த தாவீது வெளிச்சமாக மாற அவர் என்ன செய்தார் என்பது சங் 51ல் சொல்லப்பட்டிருக்கிறது. தாவீது தன்னுடைய பாவத்தை மறைக்காமல் பாவ அறிக்கை பண்ணினார். தன்னுடைய பாவ கிரியைகளுக்கான தண்டனைகளை அவர் சந்திக்க வேண்டியது இருந்தது என்றாலும் மனந்திரும்புதலினிமித்தம் பாவமன்னிப்பின் நிச்சயத்தை பெற்றுக்கொண்டார். அதன்பின்னும் சிலவேளைகளில் அவரில் பாவம் காணப்பட்டது என்றாலும் திரும்ப திரும்ப பாவம் செய்து கொண்டிருக்கவில்லை. தன்னுடைய தவறுகளுக்கேற்ற மனந்திரும்புதல் அவருடைய வாழ்க்கையில் காணப்பட்டது. வெளிச்சத்தின் பிள்ளையாக மாறினதினிமித்தம் அற்புதமான சங்கீதங்களை அவரால் எழுதமுடிந்தது. அவரிடமிருந்து வெளிப்பட்ட வெளிச்சம் இன்னும் கோடிக்கணக்கான ஆண்களையும் பெண்களையும் வெளிச்சத்துக்குள் வழிநடத்திக் கொண்டிருக்கிறது.

**ஆவியின் கனி, சகல நற்குணத்திலும், நீதியிலும், உண்மையிலும் விளங்கும். (எபே 5:9)**

"ஆவியின் கனி" என்ற வார்த்தை "வெளிச்சத்தின் கனி" என்று மொழிபெயர்க்கப் பட்டிருக்கவேண்டும் என்று சில வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள். ஒரு மனிதனுடைய இருதயத்தில் வெளிச்சம் என்ற விதை விதைக்கப்படும்போது அது வளர்ந்து நற்குணம், நீதி, உண்மை என்ற கனிகளை பிறப்பிக்கிறது. கசப்பு, கோபம், மூர்க்கம், கூக்குரல், தூஷணம் போன்ற துர்க்குணங்கள் நீக்கப்படுகின்றன (எபே *4:31*). அந்தகாரத்தில் இருப்பவர்கள் கனிகொடுப்பதில்லை. வெளிச்சம் இல்லாத நிலையில் செடிகளோ, மரங்களோ கனி கொடுக்கமுடியாது.

ஒருவன் அந்தகாரத்தில் இல்லை என்பதை நிரூபிப்பது அவனிடமிருந்து வெளிப்படும் கனிகளே. வரங்கள் அல்ல. வரங்களை செயல்படுத்துகிறவர்களை கிறிஸ்து புறக்கணிக்கக்கூடும் (மத் *7:22, 23*).

கனிகளை உடையவர்களையோ அவர் அங்கீகரித்து ஏற்றுக்கொள்வார். "இயேசு கிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகள்" (பிலிப் 1:10) ஆவியின் கனிகளாக அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சை அடக்கம் கலாத்தியர் 5:22,23ல் குறிப்பிடப்படுகின்றன. இயேசு சொல்கிறார், "நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது, .... அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" (மத் 7:18-20). இந்த வசனத்தில் நற்குணம், நீதி, உண்மை என்ற மூன்று கனிகள் மட்டுமே குறிப்பிடப்படுகின்றன. இந்தக் கனிகள் உங்களிடம் காணப்படவில்லை என்றால் நீங்கள் இன்னும் அந்தகாரமாய்த்தான் இருக்கிறீர்கள் என்று அர்த்தம்.

முதலாவது கனியாக நற்குணம் குறிப்பிடப்படுகிறது. நற்குணமுடைய மனிதன் தன்னை சிருஷ்டித்த தேவனுடைய சகல குணாதிசயங்களைப் பிரதிபலிக்கிறான். மற்றவர்களுக்கு உதவும் தன்மை, பொது நலத்தைப் பேணி பாதுகாக்கும் தன்மை, மற்றவர்களை மதித்து கனம் பண்ணும் தன்மை, உண்மையாயிருக்கும் தன்மை எதிரிகளையும் நேசிக்கும் தன்மை ஆகியவை அவனில் காணப்படும். மற்றவர்கள் தன்னை எவ்வாறு நடத்தவேண்டும் என்று விரும்புகிறானோ, அவ்வாறே மற்றவர்களை நடத்துவான். ரோமாபுரியாருக்கு பவுல் எழுதுகிறார், "என் சகோதரரே, நீங்கள் நற்குணத்தினால் நிறைந்தவர்களும், சகல அறிவினாலும் நிரப்பப்பட்டவர்களும், ஒருவருக்கொருவர் புத்திசொல்ல வல்லவர்களுமாயிருக்கிறீர்களென்று நானும் உங்களைக் குறித்து நிச்சயித்திருக்கிறேன்" (ரோமர் 15:14). இரட்சிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லும் நம்முடைய வாழ்க்கையில், நடத்தையில், பேச்சில் ஒரு உண்மையான மனந்திரும்புதலும், மாற்றமும் பிறர் காணும்படியாக உண்டாகவில்லை என்றால் எங்கேயோ பிரச்சினை இருக்கிறது.

பவுல் குறிப்பிடும் இரண்டாவது கனி நீதி. நாம் நம்மில்தாமே நீதியுள்ளவர்களாய் இருந்தால் மட்டும் போதாது. நீதியை

நடப்பிக்கிறவர்களாய் இருக்கவேண்டும். நீதியின் கிரியைகள் நம்மில் இருந்து வெளிப்படவேண்டும். தேவன் தன்னுடைய பிள்ளைகளிடமிருந்து உலகத்து மனிதர்களில் இருப்பதைவிட கூடுதலான நீதியை எதிர்பார்க்கிறார். கிறிஸ்து சொல்கிறார், "வேதபாரகர், பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள்" *(மத் 5:20)*. சத்துருவைத் தோற்கடிக்க தேவன் தரும் சர்வாயுதவர்க்கங்களில் ஒன்றாக நீதி என்னும் மார்க்கவசம் எபே *6:14*ல் குறிப்பிடப்படுகிறது. தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசு கிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகும்படி *(பிலிப் 1:10)* பவுல் ஆலோசனை தருகிறார். "நீங்கள் நீதிக்கென்று விதை விதையுங்கள், தயவுக்கொத்ததாய் அறுப்பு அறுங்கள்" என்கிறார் ஓசியா *(10:12)*.

**மூன்றாவதாக** உண்மை என்ற ஆவியின் கனியை பவுல் குறிப்பிடுகிறார். தாவீது சொல்கிறார், "உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர்" *(சங் 51:6)*. ஒரு கிறிஸ்தவனுடைய பேச்சிலும் செய்கைகளிலும் நடத்தையிலும் உண்மை வெளிப்பட வேண்டுமானால் முதலாவது உள்ளத்தில் உண்மை இருக்கவேண்டும். அவன் எல்லாவற்றிலும் நம்பப்படத்தக்கவனாய் இருக்கவேண்டும். நீதி *12:22* சொல்கிறது, "பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள்; உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம்". சிமிர்னா சபையின் தூதனிடம் கிறிஸ்து சொல்கிறார், "நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்" *(வெளி 2:10)*. சபைகளில் சாட்சி சொல்லும் போது, நாம் காரியங்களை மிகைப்படுத்திப் பேசுவோமானால் நம்மில் உண்மை இல்லை என்றுதான் அர்த்தம்.

**கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள். (எபே 5:10)**

முந்தின இரண்டு வசனங்களின் தொடர்ச்சியாக இந்த வசனத்தை நாம் பார்க்கவேண்டும். வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து,

ஆவியின் கனிகளை வெளிப்படுத்திக்கொண்டிருக்கும்போது தேவனுக்குப் பிரியமானவர்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொண்டே இருக்கிறோம். உலகின் ஒளியாக வெளிப்பட்ட கிறிஸ்துவின் வெளிச்சத்தில் அவருடைய பிள்ளைகளாக நாம் நடக்கிறோம். அது மட்டும் அல்ல, நமக்குள் வாசமாயிருக்கும் பரிசுத்த ஆவியானவரே நம்மில் ஆவியின் கனிகளை உருவாக்குகிறவர். "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்" *(ரோமர் 8:16)*.

இந்த இரண்டு ஆவிக்குரிய அனுபவங்களையும் உடையவர்கள் நிச்சயமாக தேவனைப் பிரியப்படுத்துகிறவர்களாகத்தான் இருப்பார்கள். "அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம்" *(2கொரி 5:9)* என்கிறார் பவுல். எல்லா மனிதர்களாலும் தேவனைப் பிரியப்படுத்த முடியுமா? "மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்க மாட்டார்கள்" *(ரோமர் 8:8)*. அதனால்தான் பவுல் சொல்கிறார், "நீங்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று... கர்த்தராகிய இயேசுவுக்குள் உங்களை வேண்டிக்கொண்டு புத்தி சொல்லுகிறோம்" *(1தெச 4:1)*. தேவனுக்கு காணிக்கை கொண்டுவந்த ஆபேல், காயீன் இருவரில், "ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரித்தார். காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கீகரிக்கவில்லை" *(ஆதி 4:4,5)*. காயீனில் அவர் பிரியமாயிருக்கவில்லை. தேவன் அவனை புறக்கணிக்கும்போது அவன் கிரியையில் பாவம் செய்யவில்லை. ஆனால் அதற்கான கசப்பு, கோபம், பொறாமை, எரிச்சல், வெறுப்பு, விரோதம் ஆகியவை அவன் இருதயத்தில் இருந்தது. இவை வெளியரங்கமாகத் தெரியாத பாவங்கள். இருதயத்தின் நினைவுகளை தூர இருந்து அறிகிற தேவனால் அவன்மேல் பிரியமாக இருக்கமுடியாது. அவனுடைய இருதயத்தின் கடினத்தையும், தன் சகோதரன்மேல் அவனுக்கிருந்த வெறுப்பையும் தேவன் பார்த்தார். அவன் வெளிச்சத்தின் பிள்ளையாகவும் நடக்கவில்லை. ஆவியின் கனியாகிய அன்பும் அவனில் காணப்படவில்லை. பிதாவாகிய தேவன் தன்னுடைய

குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மேல் பிரியமாயிருந்தார் (*மத் 3:17, 12:18, 17:5*). ஏனென்றால் அவர் தன்னுடைய பிதாவின் சித்தத்தை மட்டுமே நிறைவேற்றி வந்தார் (*மத் 3:17, 12:18, 17:5, மாற்கு 1:11*).

இந்த வசனம் அறிவிக்கும் இரண்டு காரியங்கள்:

1. **தேவனுக்குப் பிரியமானதைச் செய்யவேண்டும்.**

2. **தேவனுக்குப் பிரியமில்லாததைச் செய்யாமல் இருக்கவேண்டும்.**

தேவனுக்குப் பிரியமானது எது, பிரியமில்லாதது எது என்பதைக் கண்டுகொள்ளவேண்டுமானால் அது குறித்த தேவனுடைய சித்தம் என்ன என்பதை அறிந்து கொள்ளவேண்டும். தேவனுடைய சித்தம் என்ன என்பதை நாம் கண்டுகொள்ளவேண்டும் என்பதற்காகவே தேவனுடைய வார்த்தை நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய வசனத்தைத் தியானிப்பதன் மூலமாகவே நாம் அவருடைய சித்தத்தை அறிந்துகொள்ளமுடியும்.

**கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள். (எபே 5:11)**

அந்தகாரக் கிரியைகள் என்று சொல்லும்போது இருளிலும், இரகசியமான முறையிலும் செய்யப்படும் பாவக் கிரியைகளை மனதில் கொள்ளவேண்டும். இருட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் பாவங்களை அது குறிப்பிடுகிறது. அவற்றிலிருந்து கனிகள் உருவாவதில்லை. **கனி என்ற வார்த்தை ஆவியானவரின் ஒத்தாசையால் நாம் வெளிச்சத்தில் நடக்கும்போது நம்மில் உருவாகும் கிறிஸ்துவின் சுபாவங்கள் அல்லது நற்பண்புகள்.** அந்தகார கிரியைகளை நாம் செய்யக்கூடாது என்பது மட்டுமல்ல, அது மற்றவர்களில் காணப்படும்போது அவர்களோடு எந்தவிதமான ஐக்கியமும் கொள்ளாமல் இருக்கவேண்டும். அதன்மூலம் அவற்றின் உண்மைத்தன்மையை அவர்களுக்கு எடுத்துக் காட்டவேண்டும்.

நற்கனிகளைத் தராத இருளின் கிரியைகளின் பட்டியல் ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கிறது.

**உணர்வின்மை, அசுத்தம், காமவிகாரம்** - *(வசனம் 4:19)*

**மோசம் போக்கும் இச்சை** - *(வசனம் 4:22)*

**பொய்** - *(வசனம் 4:25)*

**கோபம்** - *(வசனம் 4:26)*

**திருட்டு** - *(வசனம் 4:28)*

**கெட்ட வார்த்தை** - *(வசனம் 4:29)*

**கசப்பு, மூர்க்கம், கூக்குரல், தூஷணம்** - *(வசனம் 4:31)*

**வேசித்தனம், அசுத்தம், பொருளாசை** - *(வசனம் 5:3)*

**வம்பு, புத்தியீனமான பேச்சு, பரியாசம்** - *(வசனம் 5:4)*

**விபசாரம், அசுத்தம், பொருளாசை** - *(வசனம் 5:5)*

**வீண் வார்த்தை** - *(வசனம் 5:6)*

பொதுவாக இவை மறைவாகச் செய்யப்படுவதால் அந்தகாரக் கிரியை என்று அழைக்கப்படுகிறது. அந்தகாரக் கிரியைகளின் பட்டியல் கலாத்தியர் 5:19-21லும் கொடுக்கப்பட்டிருப்பதை வாசித்துப் பாருங்கள். "இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை" (வசனம் 21). விசுவாசிகளாகிய நாம் இந்த இருளின் செயல்களை நடப்பிப்பவர்களோடு எந்த விதத்திலும் ஐக்கியம் கொள்ளக்கூடாது. அவர்களோடு இணைந்திருக்கவும், உறவு கொள்ளவும் கூடாது. அந்த பாவக்கிரியைகளை நாம் கடிந்துகொள்ள வேண்டும்.

கடிந்து கொள்ளுங்கள் என்பதற்குப் பயன்படுத்தப்படும் Elegcho என்ற கிரேக்க பதம் எதிராகப் பேசு, பொறுத்துக் கொள்ளாதே என்று பொருள்படும். பவுல் சொல்கிறார், "மற்றவர்களுக்குப் பயமுண்டாகும்படி, பாவஞ்செய்தவர்களை எல்லாருக்கும் முன்பாகக் கடிந்து கொள்" *(1தீமோ 5:20)*. "அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்ளக்கடவோம்" *(ரோமர் 13:12)* என்கிறார். அந்தகாரக் கிரியைகளை கடிந்து கொள்ளத் தவறும்போது நாம் அவற்றை அங்கீகரிக்கிறவர்கள் ஆகிறோம். அவர்களோடு எந்த விதத்திலும் ஐக்கியம் கொள்ள நமக்கு அனுமதி இல்லை. 2கொரி 6:14-17ல் இவ்வாறு வாசிக்கிறோம், "நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது?" இவ்வாறு பவுல் சொல்லியிருக்க பகிரங்கமாக விக்கிரக ஆராதனை செய்துகொண்டே நாங்களும் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பவர்களோடு ஐக்கியம் கொள்ளுதல் சாத்தியமாகாது. அவர்களுடைய அந்தகாரக் கிரியைகளை நாம் கடிந்து கொள்ளவேண்டும் என்கிறார் பவுல்.

**அவர்களால் ஒளிப்பிடத்தில் செய்யப்படும் கிரியைகளைச் சொல்லுகிறதும் அவலட்சணமாயிருக்கிறதே. (எபே 5:12)**

இந்த துர்மார்க்கர் மற்றவர்களுக்குத் தெரியாமல் மறைவில் செய்யும் கிரியைகளை வெளியே சொல்வோமானால் அது வெட்கம் என்கிறார் பவுல். எபே 5:3 சில பாவங்களின் "பேர் முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங் கூடாது" என்று பவுல் அறிவித்ததைப் பார்த்தோம். அந்த அவலட்சணமான காரியங்களை வெளியரங்கமாக உச்சரிக்கவும் நாவெடுக்கக் கூடாது என்கிறார். அவற்றைப் பற்றி பேசுவதே ஒரு கேவலமான அசுத்தமான காரியம். அந்த பாவங்களை அவர்கள் ஏன் ஒளிப்பிடத்தில் செய்கிறார்கள் என்பதற்கான காரணம் யோவான் 3:20ல் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது, "பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப்

பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான்".

முந்தின வசனத்தில் அந்தகார கிரியைகள் என்றவர் இங்கே ஒளிப்பிடங்களில் செய்யப்படும் கிரியைகள் என்கிறார். இரண்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது. அந்தகாரக் கிரியைகளை யாவரும் காணக்கூடிய விதத்தில் பகிரங்கமாகவும் செய்யலாம். ஆனால் ஒளிப்பிடங்களில் செய்யப்படும் பாவங்களை யாரும் பார்ப்பதில்லை. அவற்றை சொல்வதே கேவலமான காரியம் என்றால் அவற்றை நடப்பிப்பது எவ்வளவு கொடூரமானது என்பதைக் கற்பனை பண்ணிக் கொள்ளுங்கள். இவர்களைக் குறித்து ஏசாயா சொல்கிறார், "தங்கள் ஆலோசனையைக் கர்த்தருக்கு மறைக்கும்படிக்கு மறைவிடங்களில் ஒளித்து, தங்கள் கிரியைகளை அந்தகாரத்தில் நடப்பித்து: நம்மைக் காண்கிறவர் யார்? நம்மை அறிகிறவர் யார்? என்கிறவர்களுக்கு ஐயோ! *(29:15)*.

வசனத்தின் துவக்கத்தில் "அவர்களால்" என்று பவுல் யாரைக் குறிப்பிடுகிறார் என்பதைக் கண்டுகொள்ள வேண்டும். 6-வது வசனத்தில் குறிப்பிட்ட "கீழ்ப்படியாமையின் பிள்ளைகளை" இது குறிப்பிடுவதாக சிலர் கருதுகிறார்கள். ஆனால் தேவனை அறியாதவர்களையும், புறஜாதியாரையும் மனதில் வைத்துக்கொண்டு பவுல் இவ்விதமாகப் பேசுவதாகத் தெரியவில்லை. ஏனெனில், இந்த துன்மார்க்கர் தங்கள் பாவகிரியைகளை பகிரங்கமாகவே செய்கிறார்கள். அவற்றைக் குறித்து அவர்கள் வெட்கப்படுவது-மில்லை. வேதனைப்படுவதும் இல்லை. எடுத்துக்காட்டாக தாவீதின் மகன் அப்சலோமை சொல்லலாம். அப்சலோம் உப்பரிகையின்மேல் ஒரு கூடாரத்தைப் போட்டு *(2சாமு 16:22)* யாவரும் காணும்படியாகச் செய்த பாவத்தைக் குறிப்பிடலாம். அவர்களால் என்று பவுல் சொல்லும்போது, சத்தியத்தையும், நீதி நியாயங்களையும் அறிந்தும் அதன்படி ஜீவிக்க மனமில்லாத பெயர்க்கிறிஸ்தவர்களை பவுல் மனதில் வைத்துப் பேசுவதாகத் தெரிகிறது. மாய்மாலமான முறையில் பொருளாசையில் நிறைந்தவர்களாய் ஊழியம் செய்யும் துன்மார்க்கர்களைக் குறிப்பிடுவதாக தெரிகிறது. இவர்களே

ஒளிப்பிடத்தில் இரகசியமாக பாவம் செய்துகொண்டு, தேவன் அதைக் காணமாட்டார் என்று நினைக்கிறவர்கள்.

**அவைகளெல்லாம் கடிந்துகொள்ளப்பட்டு வெளிச்சத்தினால் வெளியரங்கமாகும்; வெளியரங்கமாக்குகிறதெல்லாம் வெளிச்சமாயிருக்கிறது. (எபே 5:13)**

வெளிச்சத்துக்கு ஒரு தன்மை உண்டு. அது எதை எல்லாம் தொடுகிறதோ, அதுவெல்லாம் வெளிச்சமாகி விடும். அதுமட்டுமல்ல அது அந்த வெளிச்சத்தைப் பிரதிபலிக்க ஆரம்பித்துவிடும். அந்த பிரதிபலிப்பிலிருந்து வெளிப்படும் வெளிச்சம் இன்னும் பல காரியங்களைத் தொடும். இருளின் ஆதிக்கத்திலிருக்கும் ஒரு மனிதனின் வாழ்க்கையை கிறிஸ்துவின் வெளிச்சம் தொடும்போது அந்த வாழ்க்கை முற்றிலுமாக மாறிவிடுகிறது. முதலாவது இருள் நீங்கி வெளிச்சமாகிறது. "என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான்" *(யோவான் 8:12)* என்கிறார் இயேசு. இதன் விளைவாக அந்த மனிதனில் இருந்து வெளிப்படும் வெளிச்சம் பலருடைய வாழ்க்கையைத் தொட்டு அவர்களுடைய இருளை நீக்குகிறது. இவ்விதமாகவே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உலகின் ஒளியாகிறார்.

வசனத்தின் துவக்கத்தில் "அவைகள்" என்று குறிப்பிடப்படுகிறவை முந்தின வசனத்தில் சொல்லப்பட்ட ஒளிப்பிடத்தில் செய்யப்படும் பாவ கிரியைகளைக் குறிப்பிடுகிறது. தேவனை அறியாத புறஜாதியாரின் பாவம் வெளியரங்கமாகவே இருக்கிறது என்று பார்த்தோம். எனவே அவை ஒளிப்பிடங்களில், மறைவிடங்களில் செய்யப்படவில்லை. சத்தியத்தை அறிந்தபின்பும் பாவத்தின் மீது வெற்றிகொள்ளமுடியாமல் பின்மாற்றத்திலும், மாம்ச இச்சைகளிலும், மாய்மாலமான ஊழியங்களிலும் ஈடுபட்டிருக்கிறவர்களே மறைவான முறையில் பாவ வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். "ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டு வருவார்" *(பிர 12:14)*

என்ற வசனத்தின்படி, தன்னுடைய வார்த்தையாகிய வெளிச்சத்தினால் நிச்சயமாகவே தேவன் இவர்களை நியாயந்தீர்ப்பார்.

"வெளியாக்கப்படாத மறைபொருளுமில்லை, அறியப்படாத இரகசியமுமில்லை" *(லூக்கா 12:2)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஒளிப்பிடத்து பாவங்கள் தேவனால் கடிந்து கொள்ளப்படும் போது *(யோவான் 8:9, 16:8)* வெளிச்சத்தினால் வெளியரங்கமாகும். "அவனுடைய இருதயத்தின் அந்தரங்கங்களும் வெளியரங்கமாகும்; அவன் முகங்குப்புற விழுந்து தேவனைப் பணிந்துகொள்வான்" *(1கொரி 14:25)*. இவ்வாறு வெளியரங்கமாவது வெளிச்சமாக மாறிவிடுகிறது. கிறிஸ்துவின் சுவிசேஷமாகிய வெளிச்சம் இருளில் கிடக்கும் பாவமனிதனை உணர்வடையச் செய்து அவனுடைய இருளை முற்றிலுமாக அகற்றப் போதுமானதாயிருக்கிறது. "முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்" *(எபே 5:8)* என்று பவுல் இந்த மாற்றத்தைத்தான் குறிப்பிடுகிறார். யோவான் *3:20,21* வாசித்துப் பாருங்கள். வெளிச்சத்தின் பிள்ளைகளாக நடந்து கொள்ளும் பொறுப்பு உங்களுடையதும் என்னுடையதுமாயிருக்கிறது.

**ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பாரென்று சொல்லியிருக்கிறார். (எபே 5:14)**

எபேசு சபை அந்த நாட்களில் பிரபலமான ஆவிக்குரிய சபைகளில் ஒன்று. ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள், அப்பொல்லோ, யோவான் முதலிய பிரபலமான வரம்பெற்ற ஊழியக்காரர்கள் அதை பராமரித்து வந்திருக்கிறார்கள். பவுல் பல ஆண்டுகாலம் அங்கு தங்கியிருந்து ஊழியம் செய்திருந்திருக்கிறார் - *அப் 18:18-21, 19:1-7, 19:9-20, 19:23-41*. கடைசியாக எருசலேமுக்குப் பிரயாணப்பட்டு வரும்போது எபேசு சபையின் மூப்பர்களை சந்தித்து ஆலோசனை சொல்லியிருக்கிறார் *(அப் 20:17-35)*. ஆனாலும் சபையாரில் பலர்

தூங்குகிறவர்களாக இருக்கிறார்கள் என்றும் அவர்கள் விழித்துக் கொள்ள வேண்டும் என்கிறார் பவுல். அவர்கள் மரித்தோரைவிட்டு எழுந்திருக்கவேண்டும் என்கிறார்.

ஒருவகையில் பார்த்தால் பாவத்தின் விளைவாக ஆவிக்குரிய மரணத்தில் இருப்பவர்களே தூங்குகிறவர்களாக இந்த வசனத்தில் குறிப்பிடப்படுகிறார்கள். **இன்றும் பல ஆவிக்குரிய சபைகளில், விசுவாசிகள் பலர் கிறிஸ்துவின் வெளிச்சத்தில் நடப்பதற்குப் பதிலாக தூங்கிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.** அதன் விளைவாக அவர்கள் கிறிஸ்துவால் பிரகாசிக்கப்படாதவாறு இருக்கிறார்கள் என்பதை இந்த வசனம் அறிவிக்கிறது. இவ்வாறு அவர்கள் தங்கள் வாழ்நாட்களில் தொடர்ந்து தூங்கிக் கொண்டிருந்தால் நித்திய இருளாகிய அக்கினிக் கடலுக்குள் அவர்கள் பிரவேசிப்பது நிச்சயம். ரோமர் *13:11*ல் பவுல் ஆலோசனை தருகிறார், "நித்திரையை விட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்றென்று, நாம் காலத்தை அறிந்தவர்களாய், இப்படி நடக்கவேண்டும்; நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப் பார்க்கிலும், இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது". "மற்றவர்கள் தூங்குகிறதுபோல நாம் தூங்காமல், விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக் கடவோம்" *(1தெச 5:6)*.

"சொல்லியிருக்கிறார்" என்று இந்த வசனம் முடிவடைகிறது. எனவே சொல்லப்பட்ட காரியம் தன்னுடையது அல்ல என்று பவுல் அறிவிக்கிறார். அப்படியானால் சொன்னது யார் என்பதை நாம் கண்டு கொள்ளவேண்டும். எபே *4:8*லும் "சொல்லியிருக்கிறார்" என்ற வார்த்தை காணப்படுகிறது. அது பிதாவாகிய தேவனுடைய வார்த்தையாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். இந்த வார்த்தைகள் ஏசாயா *60:1,2, 9:2, 52:1*ல் சொல்லப்படும் தேவனுடைய வார்த்தை என்று கருதப்படுகிறது. இந்த வசனங்கள் உள்ளடங்கிய பாமாலைப் பாடல் ஒன்றை ஆதிசபையின் நாட்களில் விசுவாசிகள் ஞானஸ்நானம் எடுக்கும்போது சபையார் பாடுவார்கள் என்றும், அந்த பாடலை சபையார் எல்லாரும் அறிந்திருந்தார்கள் என்பதால் "சொல்லியிருக்கிறார்" என்ற குறிப்போடு பவுல் அறிவிப்பதாகவும்

வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள். உதாரணமாக ஏசாயா 60 முதல் வசனத்துடன் இணைத்துப் பார்ப்போம்.

| ஏசாயா 60:1 | | எபே 5:14 |
|---|---|---|
| எழும்பிப் பிரகாசி | - | தூங்குகிற நீ விழி |
| உள் ஒளி வந்தது | - | மரித்தோரை விட்டு எழுந்திரு |
| கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது | - | கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பார் |

ஏசாயா மற்றும் எபேசியர் வசனங்களுக்கிடையே இருக்கும் ஒற்றுமைகளைக் கவனியுங்கள். இரண்டிலுமே விசுவாசிகள் மரண நித்திரைக்குள் பிரவேசித்தவர்களாய் இருக்கிறார்கள். தேவன் தன்னுடைய வார்த்தையினால் அவர்களை உயிர்ப்பித்து தன்னுடைய ஒளியினால் பிரகாசிக்கப்பண்ணுகிறார்.

இணைவசனமான ஏசாயா 60:2 சொல்கிறது, "இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்; ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார்; அவருடைய மகிமை உன்மேல் காணப்படும்". ஏசாயா 9:2 சொல்கிறது, "இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின் மேல் வெளிச்சம் பிரகாசித்தது". ஏசாயா 26:19 சொல்கிறது, "மரித்த உம்முடையவர்கள் பிரேதமான என்னுடையவர்களோடே கூட எழுந்திருப்பார்கள்; மண்ணிலே தங்கியிருக்கிறவர்களே, விழித்துக் கெம்பீரியுங்கள்; உம்முடைய பனி பூண்டுகளின்மேல் பெய்யும் பனி போல் இருக்கும்; மரித்தோரைப் பூமி புறப்படப் பண்ணும்". ஏசாயா 52:1 சொல்கிறது, "எழும்பு, எழும்பு, சீயோனே, உன் வல்லமையைத் தரித்துக் கொள்". இந்த எல்லா வசனங்களின் பின்னணியில் எபே 4:14 எழுதப்பட்டிருப்பதாக எடுத்துக் கொள்ளலாம்.

தூங்குகிறவர்கள் மரித்தோர் என்று இரண்டு வகையான மனிதர்களை பவுல் இந்த வசனங்களில் அறிமுகப்படுத்துகிறார். விசுவாசிகளில் பலர் தூங்குகிறவர்களாகத்தான் காணப்படுகிறாரகள். இதன் விளைவாக அவர்களுக்குள் ஜீவன் இருந்தாலும் தங்களைச் சுற்றியிருக்கும் காரியங்களைக் குறித்த உணர்வு இல்லை. அவர்கள் விரைவில் விழித்து எழும்பினால் நலமாக இருக்கும். இல்லாவிட்டால் அவர்கள் மரணத்துக்குள் கடந்துபோக வேண்டியதிருக்கும். அதன்பின் ஜீவனும் இல்லை, உணர்வும் இல்லை. சத்தியத்தை அறியாத நிலையில் மரிப்பார்களானால் எந்த விமோசனமும் இல்லை. கிறிஸ்துவால் பிரசாசிக்கப்படாமலேயே அவர்கள் நித்திய இருளுக்குள் பிரவேசிக்கவேண்டியதிருக்கும். தூங்கிக்கொண்டிருக்கிறவனைக் குறித்து ஒரு நம்பிக்கை இருக்கிறது. அவன் கிறிஸ்துவின் அழைப்பை ஏற்றுக்கொண்டு எழும்பி, அவருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிந்தால் நிச்சயமாக கிறிஸ்துவின் வெளிச்சத்தைப் பெற்று பிரகாசிப்பான்.

தூக்கத்திலிருந்து விழித்துக்கொள்வதும், மரித்தோரை விட்டு எழுந்திருப்பதும் நம்முடைய கடமையாயிருக்கிறது. “மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள்” *(யோவான் 5:25)* என்கிறார் இயேசு. அதனால்தான் பவுல் சொல்கிறார், “மற்றவர்கள் தூங்கிறது போல நாம் தூங்காமல், விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக் கடவோம்” *(1தெச 5:6)*, விழித்து எழுந்திருந்த நம்மை பிரகாசிக்கச் செய்வது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்ற சத்தியத்தை பவுல் வசனத்தின் பின்பகுதியில் தெளிவுபடுத்துகிறார்.

உன்னை நீயே பிரகாசிக்கப்பண்ண முடியாது. உன்னுடைய சபையார் உன்னைப் பிரகாசிக்கப்பண்ண முடியாது. உன்னுடைய சபை போதகர் உன்னைப் பிரகாசிக்கப்பண்ண முடியாது. நீ நம்பியிருக்கும் ஊழியக்காரர்களும், தீர்க்கதரிசிகளும் உன்னைப் பிரகாசிக்கப்பண்ண முடியாது. சூரியனாலும், சந்திரனாலும் உன்னை பிரகாசிக்கப்பண்ண

முடியாது. வெளி *22:5* சொல்கிறபடி, "விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார்". வெளி *21:23* சொல்கிறபடி, "சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை; தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது; ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு". சங் *112:4* சொல்கிறபடி, "செம்மையானவர்களுக்கு இருளிலே வெளிச்சம் உதிக்கும்". "உம்முடைய பாதைகளில் வெளிச்சம் பிரகாசிக்கும்" *(யோபு 22:28)*. "நீர் பூமியின் கடைசி பரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன்" *(அப் 13:47)* என்ற வாக்குத்தத்தம் இப்படியாக நிறைவேறும்.

## ஞானமுள்ளவர்களாய் நடக்கவேண்டும் (5:15-21)

**ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப் போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போலக் கவனமாய் நடந்துகொள்ளப்பார்த்து (எபே 5:15)**

நம்முடைய அனுதின வாழ்க்கை எப்படி இருக்கிறது என்பதையே நம்முடைய நடத்தை வெளிப்படுத்துகிறதாய் இருக்கிறது. எனவேதான் பவுல் இந்த வசனத்தில் நாம் எவ்வாறு நடக்கக்கூடாது என்பதையும் எவ்வாறு நடக்கவேண்டும் என்பதையும் ஒரே வசனத்தில் சுருக்கமாக அறிவிக்கிறார்.

இந்த உலகில் ஞானமில்லாத மனிதர்கள்தான் பெருமளவில் காணப்படுகிறார்கள். அவர்களைப் போல் நாம் வாழக்கூடாது. ஞானமில்லாதவன் தன்னுடைய வாழ்க்கையில் எந்த இலட்சியமும், எதிர்பார்ப்பும், குறிக்கோளும், நோக்கமும் இல்லாதவனுமாய் இருக்கிறான். தான் எங்கே போய்க்கொண்டிருக்கிறான் என்பதை அறியாதவனாய் இருக்கிறான். தேவனைக் குறித்தோ, தன்னுடைய எதிர்காலத்தைக் குறித்தோ எந்த உணர்வும் இல்லாதவனாய் ஒரு மிருகத்தைப் போல் வாழ்ந்து கொண்டிருக்கிறான். கல்லறையைக் கடந்த வாழ்வு ஒவ்வொரு மனிதனுக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது

என்பதை அறியாதவனாக இருக்கிறான். அவ்வப்போது தேவனைத் தேடுவதாலும், கூட்டத்தோடு கூட்டமாய் தேவனை ஆராதிப்பதாலும், ஊழியக்காரர்களுக்கு காணிக்கை கொடுப்பதாலும் தன்னுடைய ஆவிக்குரிய கடமைகளை நிறைவேற்றிவிட்டோம் என்று நினைத்துக் கொள்கிறான். "ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" (மத் 7:14) என்பதை அறியாதவனாக இருக்கிறான்.

ஞானமுள்ளவர்களோ ஆவிக்கேற்றபடி நடந்துகொள்வதால் (கலா 5:16) தங்களுடைய நடத்தையில் கவனமுள்ளவர்களாய் இருக்கிறார்கள். தாம் எந்த திசையில் போய்க்கொண்டிருக்கிறோம் என்பதில் மிகுந்த எச்சரிக்கையுள்ளவர்களாக இருப்பார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் தேவபயமும், பக்தியும் இருப்பதால் அது நீதி நிறைந்ததாக இருக்கும். தேவனை அறிந்தவர்களாயும், அவரால் அறியப்பட்டவர்களாயும் இருப்பார்கள். ஆவிக்கேற்றபடி நடந்துகொள்பவர்களுக்கு மட்டுமே தேவன் தன்னுடைய ஞானத்தைக் கொடுத்திருக்கிறார் (எபே 1:8). ஞானத்தையும், தெளிவையும் அளிக்கிற ஆவியானவர் அவர்களுக்கு மட்டுமே தந்தருளப்பட்டிருக்கிறார் (எபே 1:17). தேவனுடைய அநந்த ஞானம் அவர்களுக்கு உண்டாகியிருக்கிறது (எபே 3:10).

கொலோ 1:10 சொல்கிறபடி, "சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராக நடந்து" கொள்கிறவர்களே ஞானமாய் நடப்பவர்கள். இவர்களே இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெறுவார்கள். "ஞானமாய் நடக்கிறவனோ இரட்சிக்கப்படுவான்" (நீதி 28:26) என்று வாசிக்கிறோம்.

நாம் தியானிக்கும் வேதபகுதியில் (எபே 5:15-21) கிறிஸ்தவ நடத்தையைக் குறித்த ஏழு காரியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

1. ஞானமுள்ளவர்களாய் கவனமாய் நடத்தல் (வசனம் 15, Walking circumspectly)

2. காலத்தைப் பிரயோஜனப்படுத்தி நடத்தல்
(வசனம் 16, Redeeming time)

3. கர்த்தரின் சித்தத்தை உணர்ந்து நடத்தல்
(வசனம் 17, Understanding the will of Lord)

4. ஆவியினால் நிறைந்து நடத்தல்
(வசனம் 18, Filled with the spirit)

5. ஒருவருக்கு ஒருவர் புத்தி சொல்லி நடத்தல்
(வசனம் 19, Speaking to one another)

6. கர்த்தரைப் பாடி கீர்த்தனம் பண்ணி நடத்தல்
(வசனம் 19, Singing and making melody)

7. பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து நடத்தல்
(வசனம் 20, Giving thanks unto God)

**நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள். (எபே 5:16)**

முந்தின வசனத்தின்படி ஞானமாய் நடந்து, அதே வேளையில் காலத்தைப் பிரயோஜனம் பண்ணுவதையும் இணைத்து பவுல் கொலோ 4:5ல் இவ்விதமாகச் சொல்கிறார், “புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து, காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்”. ஞானமாய் நடக்கிறவர்கள்தான் காலம் எவ்வளவு முக்கியமானது என்பதை அறிந்து கொள்வார்கள். காலம் என்பது தேவன் நமக்கு இலவசமாய்க் கொடுத்திருக்கும் ஒரு ஈவு. அதை பிரயோஜனப்படுத்துங்கள் என்று பவுல் அறிவிப்பதை, காலத்தை வீணாக்காதிருங்கள் என்று சொல்வதாக எடுத்துக்கொள்ளலாம்.

காலத்தையும் நேரத்தையும் பிரயோஜனப்படுத்துவதும் வீணாக்குவதும் நம்முடைய கரத்தில்தான் இருக்கிறது. நாம் வீணாக்கிவிட்ட காலத்தையும் நேரத்தையும் ஒருவராலும்

மீட்டுக்கொள்ளவே முடியாது என்பதை அறிந்து கொள்ளுங்கள். மோசே, காலத்தின் மதிப்பை அறிந்தவராய் சங் 90:12ல் ஜெபிக்கிறார், "நாங்கள் ஞான இருதயமுள்ளவர்ளாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்". இனி வரும் காலம் குறுகினது என்கிறார் பவுல் (1கொரி 7:29). "காலத்தை அறிந்தவர்களாய், இப்படி நடக்கவேண்டும்; நாம் விசுவாசிகளான போது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப் பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது" (ரோமர் 13:11).

நாம் எவ்வாறு நடக்கவேண்டும் என்பதை பவுல் அறிவிக்கிறார், "இரவு சென்று போயிற்று, பகல் சமீபமாயிற்று; ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக்கடவோம். களியாட்டும்; வெறியும், வேசித்தனமும் காமவிகாரமும், வாக்குவாதமும், பொறாமையும் உள்ளவர்களாய் நடவாமல், பகலிலே நடக்கிறவர்களைப் போலச் சீராய் நடக்கக்கடவோம்" (வசனம் 12, 13). **காலத்தையும் நேரத்தையும் வீணாக்குகிற ஒரு மனிதன் தேவகிருபையை வீணாக்குகிறான்.**

காலத்தை நாம் ஏன் பிரயோஜனப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதையும் பவுல் அறிவிக்கிறார் - நாட்கள் பொல்லாதவை என்கிறார். பவுலின் நாட்களிலேயே நாட்கள் பொல்லாதவை என்பதை ரோமர் 1:18-32 வாசித்து அறிந்து கொள்ளுங்கள். தாவீதின் நாட்களில் நாட்கள் எவ்வளவு பொல்லாதவை என்பதை சங் 12:1,2 வாசித்து அறிந்துகொள்ளுங்கள். கடைசி காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நம்முடைய நாட்களோ இன்னும் பல மடங்கு பொல்லாதவைகள் ஆகிவிட்டன. பவுல் எச்சரிக்கிறார், "கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்க-

மில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப் பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து, அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்" *(2தீமோ 3:1-5)*.

நாட்கள் எவ்வளவு பொல்லாதவை என்றால் "நியாயம் பின்னிட்டு அகன்றது; நீதி தூரமாய் நின்றது; சத்தியம் வீதியிலே இடறி, யதார்த்தம் வந்து சேரமாட்டாமற் போகிறது. சத்தியம் தள்ளுபடியாயிற்று; பொல்லாப்பை விட்டு விலகுகிறவன் கொள்ளையாகிறான்" *(ஏசாயா 59:14,15)*. "தேசத்தில் பக்தியுள்ளவன் அற்றுப் போனான்; மனுஷரில் செம்மையானவன் இல்லை; அவர்களெல்லாரும் இரத்தஞ்சிந்தப் பதிவிருக்கிறார்கள்; அவனவன் தன் தன் சகோதரனை வலையிலே பிடிக்க வேட்டையாடுகிறான். பொல்லாப்புச்செய்ய அவர்கள் இரண்டு கைகளும் நன்றாய்க் கூடும்; அதிபதி கொடு என்கிறான்; நியாயாதிபதி கைக்கூலி கேட்கிறான்; பெரியவன் தன் துராசையைத் தெரிவிக்கிறான்; இவ்விதமாய்ப் புரட்டுகிறார்கள்" *(மீகா 7:2,3)*.

**ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல் கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள். (எபே 5:17)**

நாம் தியானித்த 15-வது வசனத்தில் ஞானமற்றவர்கள், ஞானமுள்ளவர்கள் என்று இரண்டு வகையான மனிதர்களை பவுல் அறிமுகப்படுத்தினார். ஞானமற்றவர்களை மதியற்றவர்கள் என்று இந்த வசனத்தில் குறிப்பிட்டு, அவர்களுடைய குணாதிசயம் என்ன என்பதை பவுல் அறிவிக்கிறார். **கர்த்தருடைய சித்தம் என்ன என்பதை அறியாதவர்களே மதியற்றவர்கள்.** அதனிமித்தமாகவே அவர்கள் வேதத்தில் மூடர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். தேவனுடைய சித்தத்தைப் புறக்கணித்துவிட்டு "தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன்; ஞானமாய் நடக்கிறவனோ இரட்சிக்கப்படுவான்" *(நீதி 28:26)*. "மூடனுடைய முகத்துக்கு விலகிப்போ; அறிவுள்ள உதடுகளை அங்கே காணாய். தன்

வழியைச் சிந்தித்துக்கொள்வது விவேகியின் ஞானம்; மூடர்களுடைய வஞ்சனையோ மூடத்தனம்" *(நீதி 14:7,8)*.

தேவனுடைய சித்தம் என்றால் என்ன என்பதை அறிந்துகொள்ளவேண்டும். நம்மை ஆசீர்வதிப்பதே தேவனுடைய சித்தம் - நமக்கு வெற்றியைத் தருவதே தேவனுடைய சித்தம் - நாம் ஐசுவரியவான்களாக இருப்பதே தேவனுடைய சித்தம் - நாம் ஆரோக்கியமாய் இருப்பதே தேவனுடைய சித்தம் என்றெல்லாம் பேசி ஊழியக்காரர்கள் தேவனுடைய சித்தத்தை எளிதில் விளங்கிக்கொள்ளக் கூடிய ஒரு காரியமாக்கி விட்டார்கள்.மேலே குறிப்பிட்டவை மாத்திரமே தேவனுடைய சித்தமாகிவிடாது. அப்படி இருக்குமானால் பரிசுத்தவானாகிய யோபுவின் வாழ்க்கையில் மற்றும் தாவீதின் வாழ்க்கையின் பெரும்பாலான நாட்களில் தேவசித்தம் ஏன் வித்தியாசமாக செயல்பட்டது.

பூமியில் தேவன் சிருஷ்டித்த ஒவ்வொரு மனிதனைக் குறித்தும் தேவன் ஒரு சித்தத்தை வைத்திருக்கிறார். ஏதோ ஒரு நோக்கத்தோடு அவர் நம்மை உருவாக்கி, அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான தாலந்துகளையும், திறமைகளையும், கிருபைகளையும் கொடுத்திருக்கிறார். அதற்கேற்ற சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் உருவாக்கியிருக்கிறார். **நம் ஒவ்வொருவரைக் குறித்த தேவனுடைய விருப்பமும், நோக்கமுமே தேவனுடைய சித்தம். ஒரு காரியத்தைக் குறித்த அவருடைய அனாதி தீர்மானமே அவருடைய சித்தமாகும்.** அதனால்தான் சில மொழிபெயர்ப்புகளில் சித்தம் என்ற வார்த்தை திருவுளம் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

பவுல் எபி *13:21*ல் இவ்விதமாக ஜெபிக்கிறார், "இயேசு கிறிஸ்துவைக் கொண்டு தமக்கு முன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படி செய்ய உங்களைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குவாராக". இன்னொரு விதமாகச் சொல்வோமானால் தன்னுடைய மனவிருப்பங்களையும் சித்தத்தையும் நம்மூலமாக தேவன் பூமியில்

நடப்பிக்க விரும்புகிறார். அதனால்தான் "கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப் பாருங்கள்" (எபே 5:10) என்று பார்த்தோம். 1தெச 4:3ல் "நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது" என்று வாசிக்கிறோம். "அவருடைய சித்தம் நன்மையும், பிரியமும் பரிபூரணமுமானது" (ரோமர் 12:2).

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தன்னுடைய வாழ்க்கையில் தன்னுடைய பிதாவின் சித்தத்துக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார் என்பதை மத் 26:39,42ல் அறிந்துகொள்கிறோம். அவர் மூன்று முறை இவ்வாறு ஜெபித்தார் என்று பார்க்கிறோம், "என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படிச் செய்யும்; ஆயினும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது". மாற்கு 14:36, லூக் 22:42 வாசித்துப் பாருங்கள்.

யோவான் 4:34ல் இயேசு சொல்கிறார், "நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது". யோவான் 6:38ல் சொல்கிறார், "என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன்". "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான்" (மத் 12:50) என்கிறார். "உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக" (மத் 6:10) என்று தான் அவர் நமக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுத்தார்.

நம்முடைய ஜெபங்களில் எப்பொழுதாவது எங்கேயாவது அவருடைய சித்தம் முதன்மைப்படுத்தப் படுகிறதா என்பதை சற்று யோசித்துப் பாருங்கள். கொலோசெயருக்காக பவுல் ஜெபிக்கும்போது அவருடைய முதல் ஜெபக்குறிப்பு அவர்கள் தேவனுடைய சித்தத்தை அறிகிற ஆவியினால்

நிரப்பப்படவேண்டும் என்பதுதான் (*கொலோ 1:9*). அவருடைய சித்தத்தின்படி ஜெபிக்கும்போதுதான் நாம் அவரிடமிருந்து பதிலைப் பெறமுடியும். யோவான் சொல்கிறார், "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்" (*1யோவான் 5:14*).

நம்மைக் குறித்த, நம்முடைய எதிர்காலத்தைக் குறித்த தேவனுடைய சித்தம் என்ன என்பதை அவருடைய பிள்ளைகளாகிய நாம் நிச்சயமாகவே அறிந்து கொள்ளமுடியும். எந்த ஒரு தகப்பனும் தங்கள் பிள்ளைகளைக் குறித்த அவர்களுடைய எதிர்பார்ப்புகள் என்ன என்பதை அவர்களுக்கு மறைத்து வைத்திருக்கமாட்டான். "உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன்; உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக" (*சங் 143:10*) என்று ஜெபித்துக் கேட்கும்போது பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய சித்தத்தை நமக்கு வெளிப்படுத்துவார். தன்னுடைய வேத வார்த்தையின் மூலம் தேவன் தனிப்பட்ட விதத்தில் பேசி தன்னுடைய சித்தத்தை அறிவிப்பார். தீர்க்கதரிசனங்கள் மற்றும் தரிசனங்கள் மூலமாக பேசுவார். நாம் சந்திக்கும் சந்தர்ப்ப சூழ்நிலைகள் மூலமாக பேசி தன்னுடைய சித்தத்தை அறிவிப்பார். அதற்கு நாம் செய்யவேண்டிய ஒரு காரியம் ரோமர் 12:2ல் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது, "தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமான சித்தமும் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்".

**துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து (எபே 5:18)**

மது அருந்தி வெறி கொள்வதை நிறுத்தும்படியாக வசனத்தின் முதல்பகுதியில் ஆலோசனை தரும் பவுல் தேவனுடைய ஆவியானவரால் நிறைந்தவர்களாக இருக்கும்படியாகச் சொல்கிறார். மூலகிரேக்க மொழியின் அடிப்படையில் இந்த வார்த்தை "ஆவியினாலே நிரப்பப்பட்டு நிறைந்து கொண்டிருங்கள்" என்று

மொழிபெயர்க்கப்பட்டிருக்கவேண்டும் என்று வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள். தினமும், ஒவ்வொரு வேளையிலும், தொடர்ச்சியாக நாம் ஆவியானவரால் நிரப்பப்பட்டுக்கொண்டே இருக்கவேண்டும். ஆவியின் நிறைவைப் பெறுகிறவர்களின் கிரியைகளும் செயல்பாடுகளும், மதுபானம் எடுத்தவர்களின் கிரியைகளைப் போல சிலசமயம் காணப்படுகிறது என்பதால் பவுல் இந்த இரண்டு காரியங்களையும் இணைத்துப் பேசுகிறார் என்று எடுத்துக்கொள்ளலாம். பெந்தெகொஸ்தே நாளில் ஆவியில் நிறைந்தவர்களாய் களிகூர்ந்து பேசியதைக் கேட்ட ஜனங்கள் "இவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்களென்று பரியாசம் பண்ணினார்கள்" என்று அப் *2:13*ல் சொல்லப்பட்டிருக்கிறதல்லவா? மதுபான வெறி ஒரு மனிதனை துன்மார்க்கத்துக்கு நேராக வழிநடத்தும் என்பதால் அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை *(1கொரி 6:10)*. ஆவியின் நிறைவைப் பெற்றவர்கள் எதற்கு நேராக வழிநடத்தப்படுவார்கள் என்பதை பவுல் அடுத்த வசனத்தில் எழுதியிருக்கிறார்.

திராட்சைரசம் அருந்தும் பழக்கம் அந்த நாட்களில் இஸ்ரவேலரிடம் பொதுவாகக் காணப்பட்டது. நசரேயவிரதம் அனுசரிப்பவர்கள் மற்றும் சில பொருத்தனைகளைச் செய்து கொண்டிருந்தவர்களே அதை எடுத்துக் கொள்வதில்லை. சிம்சோனின் தாயாரிடமும் தூதன் இவ்வாறு அறிவிக்கிறார், "நீ திராட்சரசமும், மதுபானமும் குடிக்காமலும் தீட்டானது ஒன்றும் புசியாமலும் இரு" *(நியா 13:7)*. *14*ம் வசனம் திராட்சச் செடியிலே உண்டாகிறதொன்றும் சாப்பிடாமலும், திராட்ச ரசமும் மதுபானமும் குடிக்கத் தடைசெய்கிறது. மற்றபடி இஸ்ரவேலர் திராட்ச ரசம் குடித்து வந்தார்கள் என்பதால்தான் கானாவூர் திருமணத்தின்போது இயேசு தண்ணீரை திராட்ச ரசமாக மாற்றிக் கொடுத்தார் என்று பார்க்கிறோம் *(யோவான் 2:1-11)*. கர்த்தருடைய இராப்போஜனத்தின்போது திராட்சைப்பழ இரசம் பரிமாறப்பட்டது *(மாற்கு 14:23-25)*. தீமோத்தேயுவிடம் பவுல் சொல்கிறார், "நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல் உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி

நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள்" *(1தீமோ 5:23)*. "கொஞ்சம்" என்று பவுல் சொல்வதைக் கவனியுங்கள். அளவு மிஞ்சி குடிப்பது பாவமாகவே கருதப்பட்டது. மதுபான பிரியர்கள் சபையின் கண்காணியானவனாயிருக்க அனுமதி இல்லை *(1தீமோ 3:3,8, தீத்து 1:7. 23)*. "சென்ற வாழ்நாட் காலத்திலே நாம் ... மதுபானம் பண்ணி, களியாட்டுச் செய்து, வெறி கொண்டு, அருவருப்பான விக்கிரகாராதனையைச் செய்துவந்தோம்" *(1பேதுரு 4:3)* என்று இரட்சிக்கப்படுவதற்கு முன்பிருந்த நம்முடைய பழைய வாழ்க்கையை பேதுரு நினைவுபடுத்துகிறார்.

நீதிமொழிகள் 20:1 சொல்கிறது, "திராட்சரசம் பரியாசஞ் செய்யும். மதுபானம் அமளி பண்ணும்; அதினால் மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல". நீதி 23:20,21 சொல்கிறது, "மதுபானப்பிரியரையும், மாம்சப் பெருந்தீனிக்காரரையும் சேராதே. குடியனும் போஜனப் பிரியனும் தரித்திரராவார்கள்". நீதி 23:29-35 வாசித்துப் பாருங்கள். மதுபானம் ஒரு மனிதனை வஞ்சித்து, சகலவிதமான சண்டைகளுக்கும், புலம்பலுக்கும், காயங்களுக்கும், இரத்தம் கலங்கின கண்களுக்கும் காரணமாகி, அவனை பாம்பைப் போல கடித்து, விரியனைப் போல் தீண்டி, தாறுமாறான காரியங்களைப் பேச வைத்து விபசார பாவத்துக்குள் வழிநடத்தும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அதனால்தான் சகோதரனென்னப்பட்ட ஒருவன் குடிவெறியனாக இருந்தால் "அவனோடே கலந்திருக்கக்கூடாது; அப்படிப்பட்டவனுடனே கூடப் புசிக்கவுங் கூடாது" *(1கொரி 5:11)* என்கிறார் பவுல். "சாராயத்தை நாடி அதிகாலமே எழுந்து, மதுபானம் தங்களைச் சூடாக்கும்படி தரித்திருந்து, இருட்டிப்போகுமளவும் குடித்துக் கொண்டேயிருக்கிறவர்களுக்கு ஐயோ" *(ஏசாயா 5:11)*. கர்த்தருடைய கண்களில் கிருபையைப் பெற்றவன் *(ஆதி 6:8)* என்று சொல்லப்பட்ட நோவா, "திராட்சரசத்தைக் குடித்து, வெறிகொண்டு, தன் கூடாரத்தில் வஸ்திரம் விலகிப் படுத்திருந்தான்" *(ஆதி 9:21)*. நாபால் *(1சாமு 25:36-38)*, இஸ்ரவேலின் ராஜாவாகிய ஏலா *(1இராஜா

*16:9,10)*, சிரியாவின் ராஜாவாகிய பெனாதாத் *(1இராஜா 20:16)* தங்களுடைய குடிப்பழக்கத்தால் அழிவைச் சந்தித்தார்கள்.

மதுபான வெறிகொள்ளாமல் ஆவியினால் நிறையும்படியாக பவுல் ஆலோசனை தருகிறார். மதுபானம் ஒருவனை ஆளுகை செய்வதுபோல் ஆவியானவரும் ஒருவனை ஆளுகை செய்கிறார். மதுபானம் அருந்துகிறவன் அது தனக்கு பெலனையும் மனமகிழ்ச்சியையும் தருவதுபோல உணர்கிறான். ஆனால் ஆவியின் நிறைவைப் பெறும் மனிதனோ உண்மையான உன்னத பெலனையும் மனமகிழ்ச்சியையும் பெறுகிறான். மதுபானம் அருந்துகிறவன் தன்னுடைய கட்டுப்பாட்டை இழந்துவிடுவதுபோல் ஆவியின் நிறைவைப் பெற்றவர்களும் தங்கள் செயல்நிலையை சிலசமயம் இழந்துவிடுகிறார்கள். குடிக்கிற ஒரு மனிதன் எவ்வளவுதான் குடித்தாலும் அதில் திருப்தி அடையாமல் மேலும் குடிக்க ஆசைப்படுவதுபோல், ஆவியின் நிறைவைப் பெற்றவன் மேலும் மேலும் அவரை அனுபவிக்க விரும்புவான்.

நிரப்பப்படுதல் என்பது ஒரு தொடர் அனுபவம் என்பதைப் பார்த்தோம். பெந்தெகொஸ்தே நாளில் ஆவியானவர் ஊற்றப்பட்டதன் விளைவாக பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொண்ட 120 பேர் முதல்முறையாக "பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு" *(அப் 2:4)* பாஷைகளிலே பேசத் துவங்கினார்கள் என்று பார்க்கிறோம். அப் *4:8*ல் பேதுரு பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்று அதிகாரிகளுடன் பேசுகிறார். அடுத்ததாக அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு தேவ வசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள். அப் *9:17, 11:24, 13:52* வாசித்துப் பாருங்கள். பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம் பெறும் அனுபவம் *(1கொரி 12:13)*, ஆவியானவர் நமக்குள் வாசமாயிருக்கும் அனுபவம் *(யோ 14:16)*, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் *(1யோ 2:27)*, அவரால் முத்திரை போடப்படும் அனுபவம் *(எபே 1:13)* ஆகியவற்றை ஒரு முறை மட்டுமே விசுவாசிகளாகிய நாம் பெறுகிறோம். ஆனால் நிரப்பப்படுதல் அவ்வப்போது நம்முடைய வாழ்க்கையில்

தொடர்கிரியையாக நடந்து கொண்டே இருக்கவேண்டும். நம்முடைய சரீரங்களை ஜீவபலியாக தேவனுக்கென்று ஒப்புக்கொடுக்கும்போது (ரோமர் 12:1,2), தேவனுடைய வார்த்தையை வாசித்து, தியானித்து அதற்குக் கீழ்ப்படியும்போது, நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு, அவருடைய இரத்தத்தால் உண்டாகும் சுத்திகரிப்பைப் பெற்றுக்கொள்ளும் போது (1யோ 1:5-9) ஆவியின் நிறைவை நாம் முழுமையாக அனுபவிக்க முடியும். அதன்மூலமாக சகல சத்தியங்களுக்குள்ளும் நடத்தப்பட முடியும் (யோவான் 14:26, 16:13).

**சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டு-களினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனைபண்ணி (எபே 5:19)**

மதுபான வெறிகொண்டவர்களின் கிரியை என்ன என்பதை துன்மார்க்கத்துக்குள் பிரவேசிப்பார்கள் என்று ஒரே வசனத்தில் முடித்த பவுல் ஆவியின் நிறைந்தவர்கள் செய்யும் பல்வேறு கிரியைகளை தொடர்ந்து விளக்குகிறார்.

1. ஆவியினால் நிரப்பப்பட்டவன் சங்கீதம் பாடும் ஆவியை உடையவனாய் இருக்கிறான் (வசனம் 19)

2. ஆவியினால் நிரப்பப்பட்டவன் ஸ்தோத்திரிக்கும் ஆவியை உடையவனாய் இருக்கிறான் (வசனம் 20)

3. ஆவியினால் நிரப்பப்பட்டவன் கீழ்ப்படிதலின் ஆவியை உடையவனாய் இருக்கிறான் (வசனம் 21)

இணை வசனமான கொலோ 3:16,17ல் பவுல் இவ்வாறு பேசுகிறார், "சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி, வார்த்தையினாலாவது கிரியையினாலாவது நீங்கள்

எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்".

பரிசுத்த ஆவியானவரின் நிறைவினால் விசுவாசிகள் ஒருவரோடு ஒருவர் ஐக்கியம் கொண்டவர்களாய் தேவனைப் புகழ்ந்து பாடுகிறார்கள். சங்கீதம் 81:1 சொல்கிறது, "நம்முடைய பெலனாகிய தேவனைக் கெம்பீரமாய்ப் பாடி, யாக்கோபின் தேவனைக் குறித்து ஆர்ப்பரியுங்கள்". சங்கீதம் 95:2 சொல்கிறது, "துதித்தலுடனே அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து, சங்கீதங்களால் அவரை ஆர்ப்பரித்துப் பாடக்கடவோம்". யாக்கோபு சொல்கிறார், "உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக் கடவன்" (5:13). நான்கு ஜீவன்களும் இருபத்து நான்கு மூப்பர்களும் புதிய பாடலைப் பாடினார்கள் என்று வெளி 5:8-10ல் பார்க்கிறோம். சீயோன் மலையில் 1,44,000 பேரும் வெளி 14:3ல் பாடுகிறார்கள்.

சங்கீதம் (Psalms), கீர்த்தனை (புகழ்பாடல், Hymns), ஞானப்பாடல் (Spiritual songs) என்று மூன்று வகையான பாடல்களை பவுல் குறிப்பிடுகிறார். சங்கீதம் என்பது பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலின் பேரில் தாவீது, ஆசாப் (சங் 75), மோசே (சங் 90) முதலிய பரிசுத்தவான்களால் பலவிதமான வாத்தியங்களின் உதவியில் இராகத்தலைவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்டு பாடப்பட்ட பாடல்களைக் குறிப்பிடுகிறது. புதிய ஏற்பாட்டிலும் இப்படிப்பட்ட சங்கீதங்கள் இடம் பெறுகின்றன (லூக்கா 1:46-55, 68-79, 2:29-32). கீர்த்தனைகளில் ஆராதனையும், துதியும் இடம் பெற்றாலும், அவை சபைகளிலும், தேவ ஐக்கியங்களிலும் பாடப்பட்டாலும், அவற்றில் ஆவியானவரின் ஏவுதலைக் குறித்த உறுதிப்பாடு இல்லை என்பதால் அவை வேதத்தில் இடம்பெறவில்லை. ஞானப்பாடல்களில் ஆவிக்குரிய காரியங்கள் பல காணப்பட்டாலும் அவை ஆராதனைப் பாடல்களாக அங்கீகரிக்கப்படவில்லை. இராப்போஜனத்துக்குப் பின் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் அப்போஸ்தலர்களும் ஸ்தோத்திரப் பாட்டைப் பாடிய பின்பே ஒலிவமலைக்குப்

புறப்பட்டுப் போனார்கள் என்று பார்க்கிறோம் (மாற்கு 14:26). செங்கடலில் தாங்கள் பெற்றுக் கொண்ட இரட்சிப்பினிமித்தம் மோசேயும், இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தரைப் புகழ்ந்து பாடின பாட்டு யாத்திராகமம் 15:1-19ல் சொல்லப்பட்டிருக்கிறது.

விசுவாசிகளாகிய நாம் ஒன்றிணைந்து பாடுவதோடு நிறுத்திவிடாமல் ஒருவருக்கு ஒருவர் புத்தி சொல்லவேண்டும் என்கிறார் பவுல். இது கிறிஸ்தவ கடமைகளில் முக்கியமானதாகக் கருதப்படவேண்டும். "கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வார்கள்; கர்த்தர் கவனித்துக் கேட்பார்" (மல் 3:16) என்று வாசிக்கிறோம். இவ்வாறு பேசி, புத்தி சொல்வதன்மூலமாக அவர்கள் விசுவாசத்தில் பெலனடைந்து வளர்ச்சி அடைவார்கள். இந்த புத்திமதிகள் நம் வீட்டாருக்கும் தேவைப்படும். தேவனுடைய வார்த்தைகளை உன் பிள்ளைகளுக்குப் போதித்து வீட்டில் உட்கார்ந்திருக்கும்போதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக் கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிற போதும் அவைகளைக் குறித்து கவனமாகப் பேசவேண்டும் என்று மோசே இஸ்ரவேலருக்கு ஆலோசனை தருகிறார் (உபா 6:7). பேதுரு சொல்கிறார், "உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும், வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்" (1பேதுரு 3:15). ரோமர் 15:9 வாசித்துப் பாருங்கள்.

உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனை பண்ணவேண்டும் என்கிறார் பவுல். "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்" (மத் 12:34) என்று சொல்லப்பட்டிருக்கிறது. தேவனைத் துதிக்கும்போது அந்த வார்த்தைகள் வெளியரங்கமாக வாயில் இருந்து அல்ல, உள்ளான இருதயத்திலிருந்து வரவேண்டும். மாயக்காரர்களைக் குறித்து கிறிஸ்து சொல்கிறார், "இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது" (மத் 15:8, மாற்கு 7:6).

தேசமெங்கும் துதி ஆராதனைகள் பெருகி வருகின்றன. லூசிபரும் ஆராதனை வீரன்தான் என்பதை நாம் மறந்துவிட்டோம். அலங்காரமான மேடைகளில் பெந்தெகொஸ்தே ஊழியர்களும், நடிகர்களை மிஞ்சுமளவுக்கு ஆடைகளை அணிந்துகொண்டு, துள்ளிக் குதித்து, பெண்களுடன் சேர்ந்து நடனமாடி திரளான கூட்டத்தைச் சேர்த்துக்கொண்டு ஆராதனை முகாம்கள் நடத்துவதைப் பார்க்கிறோம். தொலைக்காட்சிகளில் கிறிஸ்தவ நிகழ்ச்சிகளைப் பார்த்தால் ஆடை அலங்காரத்தோடு கடற்கரைகளிலும், மலைப்பிரதேசங்களிலும் காமிராவுக்கு முன் அங்கும் இங்கும் அசைந்தாடிக்கொண்டு பாடும் நடிகர் நடிகைகளைப் பார்க்கிறோம். நாள்தோறும் வித்தியாசமான புதுமுகங்கள் அறிமுகப்படுத்தப்படுகிறார்கள். இவர்கள் தங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடுகிறார்களா என்பது புதிராக இருக்கிறது. ஆனால் சிறைச்சாலையின் உட்காவலறையில் கால்கள் தொழுமரத்தில் மாட்டி வைக்கப்பட்டிருந்த நிலையில் பவுலும் சீலாவும் "தேவனைத் துதித்துப் பாடினார்கள்" *(அப் 16:25)* என்று ஆவியானவர் எழுதி வைத்திருக்கிறார் அல்லவா? இதுதான் இருதயத்தில் கர்த்தரைப் பாடும் அனுபவம்.

**நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து, (எபே 5:20)**

ஆவியின் நிறைவைப் பெற்றவர்கள் பாடல்களைப் பாடுவார்கள் என்றும், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொள்வார்கள் என்றும் பார்த்தோம். நாம் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டிருக்கிறோம் என்பதை உறுதிப்படுத்தும் இன்னொரு காரியம் நம்மில் இருந்து வெளிப்படும் ஸ்தோத்திரபலி. தேவனை ஸ்தோத்திரிக்கும் மனிதன் அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காகவும், ஆசீர்வாதங்களுக்காகவும் தேவனுக்கு நன்றி சொல்கிறான். ஆவியானவர் நம்மை ஆண்டு கொண்டிருக்கும்போது நம்மில் நன்றியுணர்வு பெருகிக் கொண்டே இருக்கும். சங்கீதம் *107:22* சொல்கிறது, *"ஸ்தோத்திரபலிகளைச் செலுத்தி, அவருடைய கிரியைகளை ஆனந்த சத்தத்தோடே விவரிப்பார்களாக"*. *சங். 100:4*

சொல்கிறது, "அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்". தாவீது சொல்கிறார், "எந்நாளும் ஆண்டவருக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக" *(சங் 68:19)*.

"எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது" *(1தெச 5:18)*. எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரிக்கவேண்டும் என்கிறார் பவுல். நாம் தேவனால் ஆசீர்வதிக்கப்படும்போதும், அவரிடமிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொண்டிருக்கும்போதும், நாம் விரும்பும் காரியங்கள் எல்லாம் நடந்து கொண்டிருக்கும்போதும் தேவனை ஸ்தோத்திரிப்பது என்பது எளிதான காரியம்தான். அதுமட்டும் போதாது. கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய அனுதின வாழ்க்கையில் கஷ்டங்கள், போராட்டங்கள், வியாதி வருத்தங்கள், பெலவீனங்கள் ஆகியவற்றைச் சந்திக்க வேண்டியதிருக்கும். "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு" *(யோவான் 16:33)* என்று இயேசு சொல்லியிருக்கிறார் அல்லவா! அந்த உபத்திரவ வேளைகளிலும் நாம் தேவனை ஸ்தோத்திரிக்கிறவர்களாக இருக்கவேண்டும். நாம் சந்திக்கும் போராட்டங்கள், வேதனை வருத்தங்களையும் கூட, நம்மை நேசித்து, நமக்காக ஜீவனையே கொடுத்த கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடமிருந்து அதாவது அவருடைய அனுமதியின்பேரில் வருபவை என்பதை நாம் உணர்ந்தால்மட்டுமே எப்பொழுதும், எல்லாவற்றிற்காகவும் தேவனை ஸ்தோத்திரிக்க முடியும்.

சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த நிலையிலும் பவுலும் சீலாவும் தேவனைத் துதித்துப் பாடினார்கள் என்று பார்த்தோம் *(அப் 16:25)*. மீனின் வயிற்றில் இருந்த யோனா, "துதியின் சத்தத்தோடே உமக்குப் பலியிடுவேன்" *(2:9)* என்றார். யுத்த களத்தில் இருந்த யோசபாத் தேவனை ஸ்தோத்திரித்து துதித்தார் *(2நாளா 20:21)*. ஸ்தோத்திரம் ஒரு மனிதனுடைய இருதயத்தில் இருந்து வெளிப்பட வேண்டும். மற்றபடி ஆயிரமல்ல, இலட்சம் ஸ்தோத்திர பலிகளை

எழுதிவைத்து வாசிப்பதாலோ, தொலைக்காட்சியில் பார்ப்பதாலோ நமக்கு எந்த நன்மையும் இல்லை.

யாரை ஸ்தோத்திரிக்க வேண்டும், யார் மூலமாக ஸ்தோத்திரிக்க வேண்டும் என்பதையும் பவுல் இங்கே அறிவிக்கிறார். "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது" *(யாக் 1:17)* என்பதால் பிதாவாகிய தேவனையே நாம் ஸ்தோத்திரிக்கவேண்டும். நம்முடைய ஜெபமும் இவ்வண்ணமாகவே அமைந்திருக்கவேண்டும். "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே" *(மத் 6:10)* என்று ஜெபிக்கும்படியாகத்தான் இயேசு கற்றுக்கொடுத்தார். நாமோ "அன்புள்ள இயேசு சுவாமி" என்று ஜெபிக்கக் கற்றுக்கொண்டோம்.

கிறிஸ்துவின் நாமத்தினாலே நாம் பிதாவை அணுகவேண்டும். அவர் வழியாகவே ஆசீர்வாதத்தைப் பெறவேண்டும். நம்முடைய தகுதியின் அடிப்படையில் பிதாவை அணுகும் துணிவு நமக்கு ஒருநாளும் ஏற்படக்கூடாது. "வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலேயே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்" *(கொலோ 3:17)*. அவருடைய நாமம் அவ்வளவு வல்லமை நிறைந்தது. அவர் சொல்லியிருக்கிறார், "என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்" *(யோவான் 14:14)*.

**தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள். (எபே 5:21)**

பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட ஒரு மனிதன் தேவனை ஸ்தோத்திரிக்கிறவனாக இருப்பான் என்று பார்த்தோம். அது மட்டும் அல்ல, அவனிடம் தெய்வபயம் காணப்படுவதால் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து நடக்கும் சுபாவமுள்ளவனாகவும் இருப்பான். தெய்வ பயம் இல்லாத மனிதன் கிறிஸ்தவனாக இருக்க முடியாது.

பேதுரு சொல்கிறார், "எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன்" (அப் 10:35). கர்த்தருக்குப் பயந்து அவரை உத்தமமும் உண்மையுமாய் சேவிக்கும்படியாக யோசுவா சொல்கிறார் (24:14). தாவீது சொல்கிறார், "கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் எவனோ அவனுக்குத் தாம் தெரிந்துகொள்ளும் வழியைப் போதிப்பார்" (சங் 25:12). தேவனுக்குப் பயப்பட வேண்டும் என்ற எச்சரிப்பு பழைய ஏற்பாட்டில்தான் சொல்லப்பட்டிருக்கிறது என்று தவறாகக் கருதக்கூடாது. அந்த ஆலோசனை புதிய ஏற்பாட்டிலும் தொடர்கிறது. மத் 10:28, லூக்கா 23:40, 1பேதுரு 2:17 வாசித்துப் பாருங்கள்.

அடுத்ததாக பவுல் விசுவாசிகளாகிய நாம் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்கிறார். இந்த நிருபத்தில் கீழ்ப்படிதலைக் குறித்து இருபது முறைக்கும் மேலாக பவுல் பேசுவதைப் பார்க்கிறோம். நம்முடைய கிறிஸ்தவ ஐக்கியங்களில் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்யும் மனப்பான்மை, ஒருவரை ஒருவர் அனுசரித்துப் போகும் தன்மை, மற்றவர்களை உற்சாகப்படுத்தும் வாஞ்சை ஆகியவை இருக்கவேண்டும். பேதுரு சொல்கிறார், "எல்லாரையும் கனம் பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்புகூருங்கள்; தேவனுக்குப் பயந்திருங்கள்" (1பேதுரு 2:17). பவுல் சொல்கிறார், "சகோதரசிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்" (ரோமர் 12:10). "பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள்; அந்நியரை உபசரிக்க நாடுங்கள்" (வசனம் 13). "ஒருவரோடொருவர் ஏக சிந்தையுள்ளவர்களாயிருங்கள்; மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்; உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள். ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள். கூடுமானால், உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்" (வசனம் 16-18).

எபேசியர் நிருபத்தில் ஒரு புதிய பகுதி நாம் தியானிக்கும் 5:22ம் வசனத்தில் துவங்கி 6:9ல் முடிவடைகிறது. ஒரு குடும்பத்தில் கணவன் மனைவிக்கும் இடையில் உள்ள ஐக்கியம் எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும் என்பதை முதலாவது இந்த அதிகாரத்தில் மீதமுள்ள வசனங்களில் பவுல் அறிவிக்கிறார். 22 முதல் 24 வரையுள்ள வசனங்களில் மனைவி தன் கணவனுக்கு கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்பதை அறிவித்துவிட்டு அதிகாரத்தின் மீதமுள்ள பகுதியில் (25-33)கணவன்மாரின் அன்பு எப்படிப்பட்டது என்பதைக் குறித்துப் பேசுகிறார். எபே 6:1-4ல் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையே உள்ள உறவுமுறைகளைப் பற்றி ஆலோசனை தரும் பவுல் 6:5 முதல் 6:9 வரை எஜமானர் மற்றும் தொழிலாளர் ஒருவரோடு ஒருவர் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்ற ஆலோசனையைத் தருகிறார். இதே ஆலோசனைகள் கொலோ 3:18-4:11லும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

## கணவன் - மனைவி உறவுமுறை (5:22-33)

**மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள். (எபே 5:22)**

முந்தின வசனத்தில் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள் என்று அறிவித்த பவுல் அதே ஆலோசனையை தனிப்பட்ட விதத்தில் மனைவிகளுக்குக் கொடுக்கிறார். அடிமைகள் ஒரு எஜமானனுக்குக் கீழ்ப்படிவதுபோல் அல்ல, அன்பினிமித்தம் மனைவிகள் கீழ்ப்படியவேண்டும் என்பதை உணர்த்தும்படியாக, கர்த்தருக்குக் கீழ்ப்படிவதுபோல கீழ்ப்படியவேண்டும் என்கிறார். அவ்வாறு செய்யும்போதுதான் திருமண உறவில் தேவனுடைய சித்தம் நிறைவேறுகிறது. "மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன்" (ஆதி 2:18) என்ற தேவ தீர்மானத்தின் அடிப்படையில் ஏவாள் சிருஷ்டிக்கப்பட்டவள். "அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" (வசனம் 24) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஏற்ற துணை என்ற முறையில் ஆதாமை விட அவள் எந்த விதத்திலும் குறைவானவள் அல்ல. ஏவாள் மூலமாக பாவம் பிரவேசித்ததினிமித்தமே ஆதாமுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்கிற நிலைமை உருவாகிறது. ஆதாமும் ஏவாளும் தேவனுடைய கற்பனையை மீறி பாவத்தில் விழுந்தபின்பே ஒரு சாபமாக கர்த்தர் ஏவாளிடம் சொல்கிறார், "அவன் உன்னை ஆண்டு கொள்வான்"(ஆதி *3:16*). கணவன் ஆண்டு கொள்கிறான் என்றால் மனைவி கீழ்ப்படியவேண்டும் என்பதே தேவனுடைய சித்தம். *1*கொரி *11:3*ல் பவுல் சொல்கிறார், "ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறான்". அவர்கள் தங்கள் புருஷனுக்குப் கீழ்ப்படிகிறவர்களாயிருக்கவேண்டும் என்று தீத்து *2:5*ல் பவுல் சொல்கிறார். பேதுருவோ, "மனைவிகளே, உங்கள் சொந்தப்புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்" (*1*பேதுரு *3:1*) என்கிறார்.

இணைவசனமாகிய கொலோ *3:18*ல் பவுல் சொல்கிறார், "மனைவிகளே, கர்த்தருக்கேற்றபடி உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்". கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் மனைவி உண்மையில் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறாள். கணவனின் அதிகாரத்துக்குக் கீழ்ப்படிவது கர்த்தருக்குள் அவர்கள் செய்யத்தக்க சரியான செயல் என்பது வலியுறுத்தப்படுகிறது. அதுவே குடும்பத்தில் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் நிலைத்திருக்கச் செய்யும் என்பதால் மனைவியின் கீழ்ப்படிதல் குடும்பத்துக்கு ஆசீர்வாதமாயிருக்கும்.

புருஷர்கள் மனைவிகளை தங்களுடைய ஆளுகைக்குள் வைத்து, அவர்களை அதிகாரம் செய்யவேண்டும் என்பதாக எந்த வசனமும் சொல்லவில்லை. அவர்கள் ஒருவரை ஒருவர் சார்ந்து ஒருவரை ஒருவர் அனுசரித்து ஜீவிக்கவேண்டும் என்பதே தேவனுடைய நியமம். பவுல் சொல்கிறபடி, "அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்தப் புருஷனையும் உடையவர்களாயிருக்கவேண்டும். புருஷன் தன் மனைவிக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யக்கடவன்; அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குக்

செய்யக்கடவள். மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி; அப்படியே புருஷனும் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, மனைவியே அதற்கு அதிகாரி" (1கொரி 7:2-4). இருவருமே அதிகாரிகள் என்றாலும் மனைவி தன்னுடைய அன்பினிமித்தம், கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல் கணவனுக்குக் கீழ்ப்படிகிறாள். நம்மை நேசித்து நமக்காக தன் ஜீவனைக் கொடுத்த கர்த்தருக்குக் கீழ்ப்படிவது கடினமான ஒரு காரியம் அல்ல. அவ்வண்ணமாகவே மனைவியின் கீழ்ப்படிதலும் அமைந்திருக்கிறது.

**கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். (எபே 5:23).**

ஒரு மனைவி தன் கணவனுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தம் என்பதை முந்தின வசனத்தில் பார்த்தோம். அவ்வாறு கீழ்ப்படிந்து நடப்பது தேவனுடைய பிரமாணமாகவும் இருக்கிறது என்பதை பவுல் இந்த வசனத்தில் தெளிவுபடுத்துகிறார். குடும்பம் என்ற அமைப்பு வெற்றிகரமாகச் செயல்படவேண்டும் என்றால் அது குறித்த சட்டதிட்டங்களுக்கு சம்பந்தப்பட்டவர்கள் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. அதன் அடிப்படையில் புருஷனே மனைவிக்குத் தலை என்பது தேவனுடைய கற்பனையாய் இருக்கிறது.

வேதத்தில் "தலை" என்ற வார்த்தை ஆளுகை செய்யும் அதிகாரத்தைக் குறிப்பிடுகிறது. உபா 28:14 சொல்கிறது, "கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார், நீ கீழாகாமல் மேலாவாய்". தலை என்ற முறையில் கணவன் தன் மனைவியை ஆண்டுகொள்கிறான். மற்றபடி அவர்களில் ஏற்றத்தாழ்வுகள் இல்லை என்பதை பவுல் 1கொரி 11:11,12ல் இவ்வாறு உறுதிப்படுத்துகிறார், "கர்த்தருக்குள் ஸ்திரீயில்லாமல் புருஷனுமில்லை; புருஷனில்லாமல் ஸ்திரீயுமில்லை. ஸ்திரீயானவள் புருஷனிலிருந்து தோன்றுகிறதுபோல, புருஷனும் ஸ்திரீயினால் தோன்றுகிறான்; சகலமும் தேவனால் உண்டாயிருக்கிறது".

கலா 3:28ல் பவுல் சொல்கிறார், "ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்". ஆனாலும் குடும்ப அமைப்பின் நிர்வாக அதிகாரியாக தேவன் மனிதனையே நியமித்திருக்கிறார். நாம் தியானிக்கும் வசனத்துக்கு இணைவசனமாக 1கொரி 11:3 அமைகிறது, "ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும், நீங்கள் அறியவேண்டுமென்று விரும்புகிறேன்".

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சபையை ஆண்டு கொண்டிருக்கிறார் என்பதைக் காட்ட கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறார் என்ற சத்தியமும் இந்த வசனத்தில் அறிவிக்கப்படுகிறது. எபே 1:23 மற்றும் 4:15ல் நாம் தியானித்ததை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறார் என்பது மட்டுமல்ல, சரீரமாகிய சபைக்கு அவரே இரட்சகராகவும் இருக்கிறார். இரட்சகர் என்ற வார்த்தைக்கு ஒரு பெரிய அழிவில் இருந்து காப்பாற்றுகிறவர் என்று பொருள் கொள்ளவேண்டும். 2இராஜா 13:5, நெகே 9:27, நியா 3:9,15, 1தீமோ 4:10 வாசித்துப் பாருங்கள். புருஷன் மனைவிக்கு இரட்சகராக இருக்கிறான் என்று பவுல் சொல்லவில்லை என்பதைக் கவனியுங்கள். ஏனென்றால் 1கொரி 7:16ல் தேவனுடைய வார்த்தை சொல்கிறது, "மனைவியானவளே, நீ உன் புருஷனை இரட்சிப்பாயோ அல்லவோ உனக்கு எப்படித் தெரியும்? புருஷனே, நீ உன் மனைவியை இரட்சிப்பாயோ அல்லவோ உனக்கு எப்படித் தெரியும்?"

ஆனாலும் மனைவியை போஷித்து, வழிநடத்தி, பாதுகாக்கும் பொறுப்பு கணவனுக்கு உண்டு. பேதுரு சொல்கிறார், "புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராத படிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களான படியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைத் செய்யுங்கள்" (1பேதுரு 3:7).

**ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்த்க் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும். (எபே 5:24)**

மனைவிகள் தங்கள் புருஷர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதற்காக இரண்டு காரணங்கள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளதைப் பார்த்தோம். முதலாவது அதுவே தேவனுடைய சித்தம். இரண்டாவது அது தேவனுடைய பிரமாணம். மூன்றாவது காரணம் இங்கே ஒரு ஆவிக்குரிய இரகசியமாகச் சொல்லப்படுகிறது. ஒரு மனைவியின் கீழ்ப்படிதலை சபையானது கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிவதற்கு ஒத்ததாக இருக்கிறது என்கிறார் பவுல். எவ்வாறு ஒரு ஸ்திரீ கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறாளோ, அவ்வாறு அவள் தன் புருஷனுக்குக் கீழ்ப்படியவேண்டும். கிறிஸ்துவின் அதிகாரத்துக்குள் சபை இருக்கிறது என்பது உண்மையானால் மனைவிகள் கணவனின் அதிகாரத்துக்குள் இருக்கவேண்டும். தன்னுடைய பராமரிப்புக்கும் பாதுகாப்புக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நம்பியிருப்பதுபோல் அவள் தன்னுடைய கணவனையும் நம்பியிருக்கவேண்டும். அப்படி இல்லாவிட்டால் அவள் வஞ்சிக்கப் படுவது நிச்சயம்.

ஏதேன் தோட்டத்தில் தன்னிச்சையாக, கணவனுடைய பாதுகாப்புக்குள் வராமல் செயல்பட்டதன் விளைவாக என்ன நடந்தது என்பதை நம் அறிவோம். ஆனாலும் தேவன் ஸ்திரீகளைப் புறக்கணித்துவிடவில்லை. பவுல் சொல்கிறார், "ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடு கற்றுக் கொள்ளக்கடவள். உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்கவேண்டும். என்னத்தினாலெனில், முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள். மேலும், ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள். அப்படியிருந்தும், தெளிந்த புத்தியோடு விசுவாசத்திலும், அன்பிலும் பரிசுத்தத்திலும்

நிலைகொண்டிருந்தால், பிள்ளைப்பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்" (1தீமோ 2:11-15).

மனைவிகளின் கீழ்ப்படிதலை வலியுறுத்தும் பேதுரு சொல்கிறார், "மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள், அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப் படுத்திக்கொள்ளப்படுவார்கள்" (1பேதுரு 3:1,2). "இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள். அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்" (வசனம் 5,6). திருச்சபை கிறிஸ்துவுக்கு அடங்கியிருப்பதுபோல மனைவியானவள் தன் கணவனுக்கு அடங்கியிருக்கவேண்டும்.

"எந்தக் காரியத்திலேயும்" கீழ்ப்படியவேண்டும் என்று பவுல் சொல்வதைக் கவனியுங்கள். தொடர்ச்சியாக பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படிவதைக் குறித்தும், வேலைக்காரர் எஜமான்களுக்குக் கீழ்ப்படிவதைக் குறித்தும் பவுல் பேசும்போது "எந்தக் காரியத்திலேயும்" என்ற வார்த்தையை பயன்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மனைவியின் கீழ்ப்படிதலை பவுல் கூடுதலாக வலியுறுத்துகிறார் என்று தெரிகிறது.

ஆனால் துன்மார்க்கமான காரியங்களைச் செய்யும்படியாகவோ, அல்லது பாவம் செய்யும்படியாகவோ ஒரு கணவன் வலியுறுத்தும்போது அதற்கு மனைவி கீழ்ப்படியக் கூடாது என்பதே தேவனுடைய நியதி. அடக்குமுறையாகவும், கொடுமையாகவும் ஒரு கணவன் நடந்துகொள்ள வேதம் அனுமதிப்பதில்லை. "மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது" (அப் 5:29) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பேதுருவும், யோவானும் தாங்கள் ஊழியம் செய்ததை ஆலோசனை சங்கத்தார் தடைசெய்தபோது, "தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப் பாருங்கள்" *(அப் 4:19)* என்று தைரியமாகப் பேசுகிறார்கள். தேவசித்தத்துக்கு விரோதமாக நடக்கும்படியாக வற்புறுத்தும் அதிகாரம் எந்த மனிதனுக்கும் அல்லது எந்த வல்லமைக்கும் இல்லை.

**புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து, (எபே 5:25)**

இணைவசனமாகிய கொலோ *3:19* சொல்கிறது, "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்". சாலொமோன் சொல்கிறார், "உன் இளவயதின் மனைவியோடே மகிழ்ந்திரு". முந்தின வசனத்தின்படி ஒரு மனைவி தன் புருஷனுக்கு எந்தக் காரியத்திலும் கீழ்ப்படியவேண்டுமென்றால் நிச்சயமாகவே புருஷன் அவளை நேசிக்கிறவனாக இருக்கவேண்டும். அன்பு கூருங்கள் என்று பவுல் ஒரு ஆலோசனையாகச் சொல்லாமல், ஒரு கட்டளையாகச் சொல்வதைக் கவனியுங்கள். அன்பின் மேன்மையைக் குறித்து அறிந்து கொள்ள *1*கொரி *13*வது அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். அன்பைக் குறித்த பவுலின் இந்த விளக்கத்தைவிட மேலானதாக இதுவரை உலகில் தோன்றிய எந்த ஒரு ஞானியோ அறிவாளியோ கொடுத்ததும் இல்லை. கொடுக்கப்போவதும் இல்லை. வெறுமனே புருஷர்களை அன்புகூர கட்டளையிட்டதோடு பவுல் நிறுத்திக்கொள்ளவில்லை. கிறிஸ்துவின் இணையற்ற அன்புக்கு ஒத்ததாக அது இருக்கவேண்டும் என்கிறார்.

தேவனுடைய அன்பைக் குறித்து ஏசாயா 62:5ல் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. "மணவாளன் மணவாட்டியின்மேல் மகிழ்ச்சியாயிருப்பதுபோல, உன் தேவன் உன்மேல் மகிழ்ச்சியா-யிருப்பார்". தேவனுடைய அன்பு கணவன் மனைவிக்கிடையே இருக்கும் அன்புக்கு ஒத்ததாக இருக்கிறது. தன் ஜீவனையே கொடுக்கும் அன்பு அவரிடமிருந்து வெளிப்பட்டது *(யோவான் 15:13)*.

"அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்" (1யோவான் 3:16). நமக்காக அவர் மரித்தபோது நாம் எப்படிப்பட்டவர்களாக இருந்தோம் என்பதை ரோமர் 5:6-8ல் பவுல் அறிவிக்கிறார்.

1. நாம் பெலனற்றவர்களாய் இருந்தோம்.

2. நாம் அக்கிரமக்காரரர்களாய் இருந்தோம்

3. நாம் பாவிகளாயிருந்தோம்.

அந்த நிலையிலும் கிறிஸ்து நம்மேல் அன்பு கூர்ந்திருப்பாரானால், எல்லா நிலையிலும் புருஷர்கள் தங்கள் மனைவிகளின்மேல் அன்பு கூர்ந்தே ஆகவேண்டும் என்கிறார் பவுல்.

**தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும் (எபே 5:26)**

கிறிஸ்து தன்னுடைய சபையின்மேல் அன்புகூர்ந்தார் என்று சொல்லிய பவுல், தன்னுடைய அன்பினிமித்தம் என்னவெல்லாம் செய்தார் என்பதை அறிவிக்கிறார். இரண்டு காரியங்களை அவர் செய்திருக்கிறார்.

1. சபையை வசனத்தினாலும் தண்ணீர் முழுக்கினாலும் சுத்திகரித்து பரிசுத்தமாக்கினார் (வசனம் 26).

2. சபையை மகிமையாக நிறுத்தும்படி பாடுமரணத்துக்கு ஒப்புக்கொடுத்தார் (வசனம் 27).

கிறிஸ்தவர்களாகிய நாம் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்கள் (1கொரி 1:2). பரிசுத்தமாக்கப்படுதல் என்பது தேவனுடைய உபயோகத்துக்கென்று வேறுபிரிக்கப்படுதலைக் குறிப்பிடுகிறது என்பதைப் பார்த்தோம்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது உடனடியாக நாம் நீதிமானாக்கப்படுகிறோம். நீதிமானாக்கப்படுவது என்பது ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் ஒரே நாளில் ஒரே நேரத்தில் நடந்து முடிகிற ஒரு வேலை. ஆனால் பரிசுத்தமாக்கப்படுவது ஒரு தொடர் கிரியை. அனுதினமும் நாம் பரிசுத்தமாக்கப்பட்டுக்கொண்டே இருக்கவேண்டும். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சபையின்மேல் அன்பு கூர்ந்ததன் நிமித்தம் அனுதினமும் அதைப் பரிசுத்தமாக்கிக் கொண்டே இருக்கிறார்.

தன்னுடைய மரணத்துக்கு சற்று முன்பதாக பிதாவிடம் இவ்வாறு இயேசு ஜெபிக்கிறார், "அவர்களும் (தன்னுடைய வார்த்தையை ஏற்றுக் கொண்டவர்கள்) சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்" (யோவான் 17:19). எபிரெயர் 13:12 சொல்கிறது, "இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகரவாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்". "ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தந் தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்து கொள்ளப்பட்ட பரதேசிகள்" என்று 1பேதுரு 1:2ல் விசுவாசிகள் குறிப்பிடப்படுகிறார்கள். பரிசுத்தமாக்கப்படுதலில் ஆவியானவரின் பங்கை 1கொரி 6:11 இவ்வாறு உறுதிப்படுத்துகிறது, "கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள்".

நம்மைச் சுத்திகரித்து பரிசுத்தப்படுத்தும் காரியங்களாக இரண்டு இந்த வசனத்தில் குறிப்பிடப்படுகின்றன.

1. திருவசனம் (Word)

2. தண்ணீர் முழுக்கு (Washing of water)

திருவசனம் என்று பவுல் தேவனுடைய வார்த்தையை குறிப்பிடுகிறார். யோவான் 15:3ல் கிறிஸ்து சொல்கிறார், "நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்". "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" (யோவான் 17:17). "வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால்தானே" (சங் 119:9).

தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, அதை விசுவாசித்து ஏற்றுக்கொண்டு, தண்ணீரில் முழுகி எடுத்துக்கொள்ளும் ஞானஸ்நானத்தையே தண்ணீர் முழுக்கு என்று பவுல் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளலாம். தீத்து 3:5ல் இதுவே "மறுஜென்ம முழுக்கு" என்று குறிப்பிடப்படுகிறது. தமஸ்கு பட்டணத்துக்குப் போகும் வழியில் கிறிஸ்துவைத் தரிசித்து பார்வை இழந்தவனாக வந்தபோது அனனியா அவரிடம் சொல்கிறார், "நீ எழுந்து, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" (அப் 22:16). இவ்வாறு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரிக்கப்படுவது அவசியமாயிருக்கிறது என்பதால்தான் எசேக்கியேல் 36:25ல் கர்த்தர் சொல்கிறார், "நான் உங்கள்மேல் சுத்தமான ஜலம் தெளிப்பேன்; நான் உங்களுடைய எல்லா அசுத்தங்களையும், உங்களுடைய எல்லா நரகலான விக்கிரகங்களையும் நீக்கி உங்களைச் சுத்தமாக்குவேன், நீங்கள் சுத்தமாவீர்கள்". யூதர்கள் வீட்டுத் திருமணங்களில் மணப்பெண்களை தண்ணீர் முழுக்கினால் புனிதப்படுத்தும் சம்பிரதாயம் இருந்து வந்திருக்கிறது. "ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள்" (வெளி 19:7) என்று வாசிக்கிறோம். ஆயத்தம் பண்ணுவது என்பது இந்த சுத்திகரிப்பையே குறிப்பிடுகிறது.

**கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல், பரிசுத்தமும், பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். (எபே 5:27)**

சபையைக் குறித்த பவுலின் வைராக்கிய வாஞ்சை 2கொரி 11:2ல் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது, "நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காகத் தேவவைராக்கியமான வைராக்கியங் கொண்டிருக்கிறேன்". இப்படிப்பட்ட வைராக்கியம் இந்தக் கடைசி நாட்களில் நம்முடைய ஊழியக்காரர்களிடம் குறைந்துகொண்டே இருக்கிறது. இதன் விளைவாக விசுவாசிகள் மத்தியில் கறை, திரை, பரிசுத்தக் குலைச்சல் அதிகரித்துக்கொண்டே வருகிறது. பரிசுத்தமும், பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக இருக்கவேண்டும் என்பதற்காகவே பவுல் அத்தனை நிருபங்களையும் எழுதியிருக்கிறார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோ சபையில் பரிசுத்தம் உண்டாகவேண்டும் என்பதற்காக தன்னை கொடூரமான சிலுவை மரணத்துக்கே ஒப்புக்கொடுத்தார் என்ற சத்தியம் இந்த வசனத்தில் அறிவிக்கப்படுகிறது. ஒரு கணவனுடைய தியாகம் நிறைந்த அன்பே திருமண உறவை பிழையற்றதாகவும் மகிமையானதாகவும் காத்துக் கொள்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது என்று சொல்லலாம். தன்னுடைய மனைவிக்காக ஜீவனைக் கொடுக்கும் அன்பு வெளிப்படுமானால், அந்த அன்பின் மேன்மையை வார்த்தையால் விவரிக்கவே முடியாது.

இந்த வசனத்தில் சபை மணவாட்டியாக குறிப்பிடவில்லை என்றாலும், ஒரு திருமண வைபவத்தில் மணப்பெண்ணுக்கு செய்யப்படும் மகிமையான ஆடை அலங்காரங்களை மனதில் வைத்துக் கொண்டு பவுல் எழுதுவதுபோல் தெரிகிறது. ராஜாவாகிய அகாஸ்வேருவிடம் சேரும்படியாக எஸ்தர் அழைத்துக்கொண்டு

வருவதற்குமுன்பு அவளுக்குச் செய்யப்பட்ட சுத்திகரிப்புகளைக் குறித்து எஸ்தர் *2:12-16*ல் வாசிக்கிறோம். வெளி *19:7,8*ல் இவ்வாறு வாசிக்கிறோம், "ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன். சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது". தன்னை ஆயத்தம் பண்ணும் பொறுப்பு மணமகளுடையது என்றாலும், சுத்தமும் பிரகாசமும், மெல்லியதுமான வஸ்திரம் மணவாளனுடைய பாடுமரணத்தினால் அவள் பெறும் அன்பளிப்பு.

கறை (Spot), திரை (Wrinkle) என்று இரண்டு காரியங்கள் அந்த வஸ்திரத்தில் காணப்படுவதில்லை என்று பார்க்கிறோம். கறை என்ற வார்த்தை துணியில் காணப்படும் அழுக்கு, தீட்டு முதலானவைகளைக் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ள வேண்டும். தன்னுடைய பாவக்கறைகளோடு ஒரு ஸ்திரீ திருமண ஐக்கியத்துக்குள் பிரவேசிக்கக்கூடாது. கிறிஸ்துவின் இரத்தத்தினால் அவள் சுத்திகரிக்கப்படவேண்டும். அழுக்கு நீங்கும்படியாக சுத்திகரிக்கப்பட்ட மணவாட்டியின் வஸ்திரங்களில் கசக்கி எடுக்கப்பட்டதுபோல மடிப்புகள் (திரை) இருந்தால் அலங்காரம் பூரணப்படாது. இஸ்திரி போட்டு அவை நீக்கப்படவேண்டும். அப்போதுதான் மணவாளனாகிய கிறிஸ்து, "என் பிரியமே! நீ பூரண ரூபவதி; உன்னில் பழுதொன்றுமில்லை" *(உன் 4:7)* என்று அவளைப் புகழ்ந்து பேசுவார்.

எபிரெயர் *10:22* சொல்கிறது, "துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும், விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்". பேதுரு சொல்கிறார், "நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள்" *(2பேதுரு 3:14)*. தேவனே சொல்லியிருக்கிறார், "உங்கள் தேவனும், கர்த்தருமாகிய நான்

*பரிசுத்தர். ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" (லேவி 19:2, 1நாளா 16:29, 1பேதுரு 1:16). "பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லை" (எபி 12:14). எனவே பரிசுத்தமும் பிழையற்றதும் மகிமையுமான சபையை மட்டுமே அவரால் அங்கீகரிக்கமுடியும்.*

**தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான். (எபே 5:29)**

*கிறிஸ்து தன்னுடைய சபையை எவ்விதமாக நேசித்தாரோ, அவ்விதமாகவே ஒரு கணவன் தன்னுடைய மனைவியை நேசிக்கவேண்டும் என்ற கருத்தை பவுல் தொடர்ச்சியாக வலியுறுத்திக் கொண்டிருக்கிறார். சபை கிறிஸ்துவின் சரீரமாகிய சபை என்றும், சபைக்கு (அந்த சரீரத்துக்கு) அவரே தலையாயிருக்கிறார் என்பதையும் பார்த்தோம். ரோமர் 12:5 சொல்கிறபடி, "அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்". இவ்விதமாகவே ஒரு மனைவி கணவனுடைய சரீரமாக இருக்கிறாள். கர்த்தர் எவ்விதமாக தன் சரீரமாகிய சபையை போஷித்து காப்பாற்றுகிறாரோ, அவ்விதமாகவே ஒரு கணவன் தன்னுடைய சரீரமாகிய மனைவியை போஷித்து காப்பாற்றவேண்டும் என்கிறார் பவுல். "அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" (ஆதி 2:24) என்று சொல்லப்பட்டிருக்கிறதல்லவா? எந்த ஒரு மனிதனும் தன்னுடைய சொந்த மாம்சத்தைப் பகைக்கிறதில்லை. ஏவாள் ஆதாமின் விலா எலும்புகளில் இருந்து உருவாக்கப்பட்டவள் என்பதால் ஆதாமின் சொந்த சரீரமாக இருக்கிறாள். "இவள் என் எலும்பின் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்" என்று ஆதி 2:23ல் ஆதாம் அறிக்கையிடுகிறார்.*

*கிறிஸ்துவின் விலா ஈட்டியினால் திறக்கப்பட்டதன் விளைவாக சபை உருவானது. இயேசு கிறிஸ்து தன்னுடைய சரீரமாகிய சபையில் காணப்படும் சகல குறைபாடுகளின் மத்தியிலும்*

அதைப் போஷித்து காப்பாற்றுகிறார். அவருடைய கண்கள் சதா காலங்களிலும் சபையின் மேல் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலருக்கு தேவன் கொடுத்த கானான் தேசத்தைக் குறித்தே உபா *11:12* இவ்விதமாகச் சொல்கிறது, "அது உன் தேவனாகிய கர்த்தர் விசாரிக்கிற தேசம், வருஷத்தின் துவக்கமுதல் வருஷத்தின் முடிவு மட்டும் எப்பொழுதும் உன் தேவனாகிய கர்த்தரின் கண்கள் அதின்மேல் வைக்கப்பட்டிருக்கும்". தன்னுடைய ஜனங்கள் வாசமாயிருக்கும் ஒரு தேசத்தைக் குறித்தே தேவன் அவ்வளவு கரிசனை உள்ளவராக இருந்திருப்பாரானால், சபை உயிர்மீட்சி அடையும்படி தன்னுடைய சொந்த ஜீவனையே மரணத்துக்கு ஒப்புக்கொடுத்தவர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுவது எவ்வளவு நிச்சயம். "கணுக்களாலும், கட்டுகளாலும் உதவிபெற்று, இணைக்கப்பட்டு, தேவ வளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீரமுழுவதையும் ஆதரிக்கிற தலை" *(கொலோ 2:18)* என்று கிறிஸ்து குறிப்பிடப்படுகிறார். இவ்வாறு கிறிஸ்து தன்னுடைய சபைக்குச் செய்த, செய்துகொண்டிருக்கும் காரியத்தை, ஒரு புருஷன், தன்னுடைய மனைவிக்குச் செய்யும்படியாக பவுல் கட்டளையிடுகிறார்.

**நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம். (எபே 5:30)**

வேதத்தில் வேறு எந்த வசனமும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் சபைக்குமிடையே அமைந்திருக்கும் நெருக்கமான உறவையும் ஐக்கியத்தையும் இதைவிட தெளிவாக அறிவிக்கவில்லை என்று சொல்லலாம். "சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப் பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்" *(1கொரி 12:12)*. "சரீரமும் ஒரே அவயவமாயிராமல் அநேக அவயவங்களாயிருக்கிறது" *(வசனம் 14)*. "தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்" *(வசனம் 18)*. "அவயவங்கள் அநேகமாயிருந்தும், சரீரம்

ஒன்றே" *(வசனம் 20).* "ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும். நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்" *(வசனம் 26,27).* "அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்" *(ரோமர் 12:5).*

**இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். (எபே 5:31)**

ஆதியாகமம் *2:24*ல் தேவன் பேசிய வார்த்தையையே பின்னணியாகக் கொண்டு இதுவரை திருமண உறவின் மேன்மையை பவுல் அறிவித்து வந்தாலும், இந்த இடத்தில் எழுத்தின்படி அவர் அந்த வார்த்தையை பயன்படுத்துகிறார். ஒருவன் தன் மனைவியை தள்ளிவிடுவது நியாயமா என்று கேட்டு வந்த பரிசேயர்களிடம் இயேசு, "புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியினால்,அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்" *(மத் 19:5-6).* திருமணத்துக்கு முன் ஒரு மனிதனுடைய நெருக்கமான உறவும் ஐக்கியமும் அவனுடைய பெற்றோருடன் தான் இருந்திருக்கமுடியும். மற்றெல்லாரையும் விட அவர்களுடன்தான் அன்புள்ளவனாகவும், நன்றியுள்ளவனாகவும், கடமையுள்ளவனாகவும் அவன் இருந்திருக்க முடியும். ஆனால் அவன் திருமணம் செய்து கொண்டதும் தன்னுடைய மனைவிக்கே கூடுதலாக கடமைப்பட்டவனாகிறான். அந்த வேளைகளில் பெற்றோர் தங்கள் மகன்மேல் இருக்கும் உரிமைகளை சற்று விட்டுக் கொடுக்கவேண்டும் என்பதும், கணவன் மனைவி ஐக்கியத்தில் தலையிடக்கூடாது என்பதும் இந்த வசனத்தின் மூலமாக அறிவிக்கப்படுகிறது.

அவர்கள் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள் என்பதே இந்த தேவ ஆலோசனைக்கு ஆதாரமாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. ஆதாமின் சரீரத்திலிருந்து சிருஷ்டிக்கப்பட்டதால் ஆதாமுக்கும் ஏவாளுக்குமிடையே நியமிக்கப்பட்ட உறவு வேறு எந்த மனித உறவையும் விட நெருக்கமானதாகிவிடுகிறது. ஆதாமுக்கு தாயும் தந்தையும் இல்லாதிருக்கும்போதே இந்தப் பிரமாணமும் தேவனால் ஏதேன் தோட்டத்தில் கொடுக்கப்பட்டது. பின்சந்ததியாருக்கு ஆலோசனையாக இந்த அறிவுரை வழங்கப்பட்டிருப்பதாக எடுத்துக் கொள்ளவேண்டும்.

தன்னுடைய திருமணத்துக்குப் பின் ஒரு மனிதன் தன் பெற்றோரைப் புறக்கணிப்பதற்கு தேவன் அனுமதி கொடுத்திருப்பதாக இந்தப் பிரமாணத்தினிமித்தம் யாரும் பொருள்கொள்ளக் கூடாது. "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக" *(யாத் 20:12)* என்பது வாக்குதத்தம் உள்ள கற்பனையாயிருக்கிறது. "தன் தகப்பனையும் தாயையும் தூஷிக்கிறவன் சபிக்கப்பட்டவன்" *(உபா 27:16)* என்று வாசிக்கிறோம். *மத் 15:4, நீதி 30:17, 6:20, 23:22* வாசித்துப் பாருங்கள். ஆனாலும் ஒரு மனிதனுடைய திருமணத்துக்குப் பின் பெற்றோரின் முக்கியத்துவத்தில் சிறிய மாற்றம் ஏற்படுவதாகக் கொள்ளலாம். அதற்குக் காரணம் அவர்கள் ஒரே சரீரமாயிருக்கிறார்கள் என்பதுதான். "ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்குத் துரோகம் பண்ணாதபடிக்கு, உங்கள் ஆவியைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன்" *(மல் 2:15,16)* என்கிறார் தேவன்.

**இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப் பற்றியும் சபையைப்பற்றியும் சொல்லுகிறேன். (எபே 5:32)**

இந்த இரகசியம் பெரியது என்று சொல்லும்போது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உண்டாகும் நெருக்கமான திருமண உறவின் மேன்மையை மட்டுமே பவுல் குறிப்பிடுவதாக

எடுத்துக்கொள்ளக் கூடாது. நிச்சயமாகவே திருமணம் என்ற ஆவிக்குரிய ஐக்கியத்தை ஏதேன் தோட்டத்தில் உருவாக்கியவர் தேவன் ஒருவரே. ஆதாம் ஏவாளைத் தேடவில்லை. ஏவாளும் ஆதாமைத் தேடவில்லை. ஆதாம் தனக்குத் துணைவேண்டும் என்று தேவனிடம் கேட்கவில்லை. "மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன்" (*ஆதி 2:18*) என்பது தேவனுடைய தீர்மானம்.

திருமணம் என்பது ஒரு ஆணும் பெண்ணும் ஒருமித்து வாழும்படியாக தங்களுக்குள் உருவாக்கிக்கொள்ளும் ஒப்பந்தம் மட்டுமல்ல. தங்களுக்கென்று ஒரு சந்ததியை உருவாக்கும் ஏற்பாடும் அல்ல. இது சர்வ வல்லமையும், அன்பும் நிறைந்த தேவனுடைய தீர்மானமும் நியமமுமாயிருக்கிறது. "கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாயிருக்கிறார்" (*மல்கியா 2:14*) என்று சொல்லப்பட்டிருக்கிறது. தேவ சமுகத்தில் துவங்கப்படும் இந்த உறவு, ஒவ்வொரு நாளும் அவருடைய வழிநடத்துதலுக்கு அர்ப்பணிக்கப்படும்போது, அந்த ஆவிக்குரிய ஐக்கியத்தின் மகத்துவத்தை வார்த்தையினால் விவரிக்க முடியாது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தன்னுடைய மணவாட்டியாகிய சபையின் மேல் வைத்திருக்கும் அன்பை அறிந்திருப்பவர்களால் மட்டுமே கணவன் மனைவி இருவருக்கிடையே உள்ள அன்பை விளங்கிக் கொள்ளமுடியும். இந்த அன்பின் ஐக்கியத்தையே பவுல் இரகசியம் என்று குறிப்பிடுகிறார்.

இந்த இரகசியம் பெரியது என்று சொல்லும்போது தான் கிறிஸ்துவைப் பற்றியும் சபையைப் பற்றியும் பேசுவதாக உடனடியாக பவுல் அறிவிப்பதன் நோக்கம் அதுதான். இரகசியம் என்றால் என்ன என்பதை ஏற்கெனவே எபே *3:4-6* வசனங்களைத் தியானிக்கும்போது பார்த்திருக்கிறோம். அது ஒரு தேவ இரகசியமாயிருப்பதால் தேவன் வெளிப்படுத்தாத நிலையில் எந்த ஒரு மனிதனும் தன்னுடைய ஞானத்தினாலோ, கல்வி அறிவினாலோ அறிந்துகொள்ளக் கூடாத ஒரு காரியம் அது. எபே *1:10*, *3:3,11,20*, 1கொரி *4:1*, *13:2*, *14:2*, ரோமர் *11:25*, 1கொரி *15:51*, 1தீமோ *3:16* வாசித்துப் பாருங்கள்.

ஒரு கணவன் மனைவி இவர்களுக்குள் காணப்படும் அன்பின் இரகசியத்தை கிறிஸ்துவுக்கும் சபைக்குமிடையே உள்ள அன்பின் இரகசியத்தை விளங்கிக் கொள்வதால் மட்டுமே முழுமையாக விளங்கிக்கொள்ளமுடியும். கிறிஸ்து சபையின்மேல் பாராட்டும் அன்பு ஒரு கணவன் தன் மனைவிமேல் பாராட்டும் அன்புக்கு இணையானது. சபை கிறிஸ்துவின்மேல் பாராட்டும் அன்பு ஒரு மனைவி தன் கணவன்மேல் பாராட்டும் அன்புக்கு இணையானது. ஒவ்வொரு கிறிஸ்தவ இல்லத்தையும் அதன் ஒவ்வொரு காரியத்தையும் தேவன் ஆளுகைக்குள் எடுத்துக்கொண்டிருக்கும்போது மட்டுமே இந்த உறவுமுறை சாத்தியமாகும். அங்கு எடுக்கப்படும் சகல முடிவுகளும், தீர்மானங்களும் உண்மையில் தேவனுடையதாக இருக்கும்போது மட்டுமே இந்த அன்பு நிலைத்திருக்கமுடியும்.

**எப்படியும், உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல, தன் மனைவியினிடத்திலும் அன்பு கூரக்கடவன்; மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்-கடவள். (எபே 5:33)**

ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் கணவன் மனைவி ஆகிய இருவருக்குமிடையே எப்படிப்பட்ட உறவு முறைகள் பற்றி பவுல் பேசிக்கொண்டிருப்பதை இந்த வசனத்தின் மூலம் முடிவுக்குக் கொண்டுவருகிறார். அதுகுறித்து பவுல் பேசும் கடைசி வசனம் இது என்பதால், தான் அறிவித்த சத்தியத்தை இரத்தின சுருக்கமாக ஒரே வசனத்துக்குள் கொண்டுவருகிறார்.

ஏற்கெனவே, "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்" (எபே 5:25) என்றும், புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூரவேண்டும் (எபே 5:28) என்றும் பவுல் அறிவித்ததைப் பார்த்தோம். இந்த வசனத்தில், "அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல தன் மனைவியிடத்திலும் அன்புகூரக்கடவன்" என்று கூடுதலான ஒரு குறிப்பு காணப்படுகிறது. பொதுவாக எல்லா மனிதர்களும் தங்களிடத்தில், தங்களுக்கடுத்த காரியங்களில் அன்பு

கூருகிறவர்களாகத்தான் இருப்பார்கள். "தன் சொந்த மாம்சத்தைப் பகைக்கிறவன் ஒருவனுமில்லையே" (எபே 5:29) என்று பார்த்தோம். எல்லா மனிதர்களும் சுயநலவாதிகளாகவே இருக்கிறார்கள் என்பதால், அவன் நீதிமானாக இருந்தாலும் சரி, துன்மார்க்கனாக இருந்தாலும் சரி, தன்னில் அன்புகூருகிறவனாகத்தான் இருப்பான் என்பதால்தான் பவுல் தன்னில் அன்புகூருவதுபோல் தன் மனைவியிடத்திலும் அன்புகூரக்கடவன் என்கிறார்.

மனைவியோ, புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்க வேண்டும் என்ற ஆலோசனை கொடுக்கப்படுகிறது. ஏற்கெனவே எபே 5:14ல் மனைவிகள் "புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும்" என்பதைப் பார்த்தோம். இந்த வசனத்தில் "பயபக்தி" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மனைவி புருஷனுக்குப் பயப்படவேண்டும் என்று பவுல் அறிவிக்கவில்லை. ஏனென்றால் "அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது; பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல" (1யோவான் 4:18) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ராஜாக்களுக்கும் அதிகாரிகளுக்கும், எஜமான்களுக்கும் பயப்படவேண்டியது அவசியம்தான் (யோசுவா 4:14, நீதி 24:21, 1பேதுரு 2:18). ஆனால் ஒரு மனைவியிடமிருந்து பயங்கலந்த பக்தி வெளிப்பட வேண்டும். ஆங்கிலத்தில் பயபக்திக்கு (Respect) என்ற வார்த்தை பொருத்தமாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

# அதிகாரம் 6

எபேசியர் நிருபத்தின் முதல் பகுதியில் (எபே 1:1 - 5:20) சத்திய உபதேசத்துக்கடுத்த காரியங்களை சபையாருக்கு அறிவித்த பவுல் 5:21 முதல் 6:9 வரை கிறிஸ்தவ விசுவாசிகளின் குடும்ப வாழ்க்கை எவ்வாறு அமைந்திருக்கவேண்டும் என்பதையும், அவர்கள் தங்களுடைய வேலைஸ்தலத்தில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் குறித்த அறிவுரையைக் கூறுகிறார்.

இந்த அதிகாரத்தின் முதல் நான்கு வசனங்களில் பிள்ளைகள் மற்றும் பெற்றோருக்குமிடையே உள்ள உறவு முறைகளைப் பற்றி பேசிவிட்டு 5 முதல் 9 வரையுள்ள வசனங்களில் வேலைக்காரர்கள் மற்றும் எஜமான்கள் சமுதாயத்தில் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பதை பவுல் அறிவிக்கிறார்.

இதைத் தொடர்ந்து 10 முதல் 20 வரையுள்ள வசனங்களில் கிறிஸ்தவர்களாகிய நாம் இந்த உலகில் சந்திக்கும் ஆவிக்குரிய போராட்டத்தில் வெற்றிபெற எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்ற ஆலோசனை கொடுக்கப்படுகிறது. நம்முடைய வெற்றியை உறுதிப்படுத்த தேவன் தன்னுடைய சர்வாயுதவர்க்கத்தை வழங்க ஆயத்தமாயிருக்கிறார் என்கிறார் பவுல். நிருபத்தின் முடிவில் 21 முதல் 24 வரையுள்ள வசனங்களில் எபேசு சபையாருக்கு பவுலின் வாழ்த்துகள் அறிவிக்கப்படுகின்றன.

## பிள்ளைகளும் பெற்றோர்களும் (6:1-4)

**பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். (எபே 6:1)**

ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் மனைவிகளுக்கும் புருஷர்களுக்குமிடையே எத்தகைய உறவுமுறை அமைந்திருக்க வேண்டும் என்பதைக் குறித்து முந்தின அதிகாரத்தில் 22 முதல் 33 வரையுள்ள வசனங்களில் சற்று விளக்கமாக பவுல் அறிவித்த காரியங்களைத் தியானித்தோம். அதைத் தொடர்ந்து ஒரு குடும்பத்தில் பிள்ளைகளுக்கும் பெற்றோருக்குமிடையே உள்ள உறவைக் குறித்து இந்த அதிகாரத்தின் முதல் நான்கு வசனங்களிலும் சமுதாயத்தில் வேலையாட்களுக்கும் எஜமான்களுக்குமிடையே அமைந்திருக்க வேண்டிய உறவைக் குறித்து 5 முதல் 9 வரையுள்ள வசனங்களிலும் பவுல் பேசுகிறார். முந்தின அதிகாரத்தில் கீழ்ப்படிதலின் மேன்மையைக் குறித்து இரண்டுமுறை பேசிய பவுல் (வசனம் 21, 22), இங்கு மீண்டுமாக கீழ்ப்படிதலைக் குறித்துப் பேசுகிறார் (வசனம் 1,5).

இணைவசனமாகிய கொலோ 3:20 சொல்கிறது, "பிள்ளைகளே, உங்களைப் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது". ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நாசரேத்தில் வாசம் பண்ணின நாட்களில், "அவர்களுக்கு (பெற்றோருக்கு) கீழ்ப்படிந்திருந்தார்" என்று லூக்கா 2:51ல் சொல்லப்பட்டிருக்கிறது. சாலொமோன் சொல்கிறார், "என் மகனே, உன் தகப்பன் புத்தியைக் கேள்; உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே" (நீதி 1:8). "என் மகனே, உன் தகப்பன் கற்பனையைக் காத்துக்கொள்; உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே" (6:20). பெற்றோருக்குக் கீழ்ப்படியாத சிம்சோன், அப்சலோம் ஆகியோரைக் குறித்து நியா 14:1-3, 2சாமு 15:11-12, 2சாமு 18:15 வாசித்து அறிந்துகொள்ளுங்கள். நியாயப்பிரமாணத்து விதிமுறைகளின்படி பெற்றோரை கனம் பண்ணாதபடி அவர்களை அடிக்கிறவர்களும், சபிக்கிறவர்களும் கொலை செய்யப்படவேண்டும் (யாத் 21:15,17, லேவி 20:9). மத் 15:4, மாற்கு 7:10 ல் கிறிஸ்து இதை உறுதிப்படுத்துகிறார்.

எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள் என்று சொல்லப்பட்டிருந்தாலும், பெற்றோர் நிமித்தமாக தேவசித்தத்துக்கு விரோதமான காரியங்களைச் செய்ய பிள்ளைகளுக்கு அனுமதியில்லை. அதனால்தான் நாம் தியானிக்கும் வசனத்தில் "கர்த்தருக்குள்" கீழ்ப்படியும்படியாக பவுல் சொல்கிறார். கர்த்தர் நிமித்தமாக கீழ்ப்படியுங்கள் என்று பவுல் சொல்வதாகவும் எடுத்துக் கொள்ளலாம். *1*கொரி *4:15*ன் அடிப்படையில் தகப்பன் என்ற வார்த்தை நமக்கு சத்திய வார்த்தையை போதித்து இரட்சிப்புக்குள் வழி நடத்தும் ஊழியக்காரர்களையும் குறிப்பிடுவதாக எடுத்துக் கொள்ளலாம்.

**உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் (எபே 6:2)**

எபே *6:3*ல் பழைய ஏற்பாட்டுப் பத்துக் கற்பனைகளில் ஐந்தாவது கற்பனையான "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக" என்பதை பவுல் எபேசு சபையாரின் நினைவுக்குக் கொண்டுவருகிறார். எபேசு சபையார் அத்தனை பேரும் யூதரல்லாத புறஜாதியார். பழைய ஏற்பாட்டில் தேவன் வழங்கியிருக்கும் ஆலோசனைகள் புறஜாதியாராக இருந்து இன்று கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருக்கும் புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களாகிய நமக்கும் மிகுந்த ஆசீர்வாதமானது என்பதில் சந்தேகமே இல்லை.

பவுல் அறிவிக்கும் கற்பனை உபா *5:16*ல் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கும், நீ நன்றாயிருப்பதற்கும், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டபடியே, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக". பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியவேண்டும். இதுவே நியாயம் என்று முந்தின வசனத்தில் அறிவித்த பவுல், தங்கள் கீழ்ப்படிதல் மூலம் அவர்கள் சுதந்தரித்துக்கொள்ளும் இரண்டு ஆசீர்வாதங்களைத் தெரிவிக்கிறார்.

முதலாவது அவர்களுக்கு நன்மை உண்டாகியிருக்கும். இரண்டாவது அவர்களுடைய ஆயுசுநாட்கள் கூடுதலாக இருக்கும்.

தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்போது நித்தியத்துக்கடுத்த ஆசீர்வாதங்களை மட்டுமல்ல, இந்த உலகத்துக்கடுத்த ஆசீர்வாதங்களையும் தேவன் தருகிறார். அவைகளில் ஒன்றுதான் நீடித்த ஆயுசு. சாலொமோனிடம் தேவன் சொல்கிறார், "உன் தகப்பனாகிய தாவீது நடந்ததுபோல, நீயும் என் கட்டளைகளையும், என் நியமங்களையும் கைக்கொண்டு, என் வழிகளில் நடப்பாயாகில், உன் நாட்களையும் நீடித்திருக்கப் பண்ணுவேன்" *(1இராஜா 3:14)*. *நீதி 10:27* சொல்கிறது, "கர்த்தருக்குப் பயப்படுதல் ஆயுசுநாட்களைப் பெருகப்பண்ணும்".

**உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாம் கற்பனையாயிருக்கிறது. (எபே 6:3)**

ஒரு குடும்பத்தில் பிள்ளைகளுக்கும் பெற்றோருக்குமிடையே உள்ள உறவு முறைகளைக் குறித்து பவுல் தொடர்ச்சியாகப் பேசிக்கொண்டிருக்கிறார். அவர் சொல்கிற காரியங்கள் :-

1. பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படிவதே நியாயம். *(வசனம் 1)*

2. இந்த கீழ்ப்படிதல் அவர்களுக்கு நன்மையைக் கொண்டு வரும். *(வசனம் 2)*

3. இந்த கீழ்ப்படிதலினால் அவர்களுடைய வாழ்நாள் அதிகரிக்கும். *(வசனம் 2)*

4. பெற்றோரை கனம் பண்ணுகிற பிள்ளைகளுக்கு ஆசீர்வாதம் உண்டு என்பதை எழுத்தின்படி தேவன் வாக்குபண்ணியிருக்கிறார் *(வசனம் 3)*

நாம் முந்தின வசனத்தில் தியானித்த பத்துக் கற்பனைகளில் ஐந்தாவது கற்பனையான யாத் 20:12, மற்றும் உபா 5:16 ஆகியவற்றையே வாக்குத்தத்தமுள்ள முதலாவது கற்பனையாக பவுல் குறிப்பிடுகிறார். மோசேயினால் எழுதப்பட்ட வேதத்தின் முதல் ஐந்து ஆகமங்களில் வாக்குத்தத்தங்கள் அடங்கிய பல கட்டளைகளை தேவன் கொடுத்திருக்கிறார். பத்துக்கற்பனைகளில் இரண்டாவது கற்பனையில் விக்கிரக ஆராதனை செய்யாதவர்களுக்கு "ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ் செய்கிறவராயிருக்கிறேன்" (யாத் 20:6) என்ற வசனம் ஒரு வாக்குத்தத்தம் போல் காணப்பட்டாலும் அது தேவனுடைய ஒரு அறிவிப்பு என்பதாக எடுத்துக்கொள்ளவேண்டும். அப்போதுதான் பெற்றோரை கனம் பண்ணுவது வாக்குத்தத்தமுள்ள முதலாம் கற்பனையாக எடுத்துக்கொள்ளப்படமுடியும்.

1-வது வசனத்தில் பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படியவேண்டும் என்ற பவுல் இங்கே கனம் பண்ணும்படியாகச் சொல்கிறார். "உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக" (மத் 19:19) என்கிறார் இயேசு. மாற்கு 7:10ல் அவர் சொல்கிறார், "உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்றும், தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவன் கொல்லப்படவேண்டும் என்றும், மோசே சொல்லியிருக்கிறாரே". கீழ்ப்படிதல் என்பது சிலசமயம் வெளிப்படையான சடங்காச்சாரமாக அமைந்திருக்கலாம். அன்பினிமித்தம் அல்லாமல் அல்லது மரியாதையினிமித்தம் இல்லாமல் பயத்தினிமித்தம் ஒருவன் தன் பெற்றோருக்குக் கீழ்ப்படியலாம். ஆனால் கனம் பண்ணுவது என்பது ஒருவனுடைய உள்ளத்தின் ஆழத்திலிருந்து மனப்பூர்வமாக வெளிப்படும் காரியம் என்பதால் மேன்மையானதாகக் கருதப்படவேண்டும். பெற்றோரை கனம் பண்ணாதவர்களின் நிலைமை நீதி 30:17ல் இவ்வாறு சொல்லப்படுகிறது, "தகப்பனைப் பரியாசம் பண்ணி, தாயின் கட்டளையை அசட்டைபண்ணுகிற கண்ணை நதியின் காகங்கள் பிடுங்கும், கழுகின் குஞ்சுகள் தின்னும்".

தன் தகப்பனை கனம் பண்ணுகிற ஒரு மனிதன் அவர் தரும் ஆலோசனையை ஏற்றுக்கொள்கிறான். அவருடைய மனவிருப்பத்தை நிறைவேற்றுகிறான். ஒரு நல்ல கிறிஸ்தவ குடும்பத்தில் தகப்பன் ஒரு ஆசாரியனாகவும் (*யாத் 12:3, மாற்கு 9:22-24*), தீர்க்கதரிசியாகவும் (*உபா 11:18-21*), ராஜாவாகவும் (*ஆதி 18:17-19, 1தீமோ 3:4*) இருந்து இந்த மூன்று ஊழியங்களையும் நிறைவேற்றுகிறவனாக இருக்கிறான் என்பதை அறிந்துகொள்ளுங்கள். எனவே நிச்சயமாகவே அவன் தன்னுடைய பிள்ளைகளால் கனம் பண்ணப்படக்கூடிய ஸ்தானத்தில் இருக்கிறான்.

**பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக. (எபே 6:4)**

முதல் மூன்று வசனங்களில் பிள்ளைகளுக்கு தேவ ஆலோசனை வழங்கிய பவுல் ஒரு தகப்பனுக்கு கொடுக்கும் ஆலோசனையை இந்த வசனத்தில் பார்க்கிறோம். தங்களுடைய பிள்ளைகளிடமிருந்து முழுமையான கீழ்ப்படிதலையும், கனத்தையும் எதிர்பார்க்கும் உரிமை பெற்றோருக்கு உண்டு. ஆனாலும் அவர்கள் தன்னிச்சையாகவும், பிள்ளைகளை வேதனைப்படுத்தும் முறையிலும் செயல்பட அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை. கொலோ 3:21ல் பவுல் சொல்கிறார், “பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப் போகாதபடி அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள்”. இவ்வாறு கோபமூட்டுவதால் யாருக்கும் எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை. பெற்றோர்கள் இந்த விசயத்தில் மிகுந்த கவனமுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

பல குடும்பங்களில் பிள்ளைகள் கர்த்தருக்கேற்றபடி வளரவில்லை என்றால் அதற்கு பெற்றோரே காரணமாக அமைகிறார்கள். பிரச்சனைகள் உள்ள தகப்பன் இருக்கும் குடும்பங்களில் பிரச்சனைகள் உள்ள பிள்ளைகள்தாம் உருவாகுவார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. குடும்பத்தில் தாயைவிட தகப்பனே

இத்தகைய பிரச்சனைக்குக் காரணமாக இருப்பதால் பவுலும் "பிதாக்களே" என்று இந்த வசனத்தைத் துவக்குகிறார்.

பிள்ளைகளை கோபப்படுத்தக்கூடாது என்ற பவுல் அதே நேரத்தில் தகப்பனுடைய கடமை என்ன என்பதையும் அறிவிக்கத் தவறவில்லை. பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனைகளிலும் வளர்க்கும் பொறுப்பு அவர்களுடையது. "கர்த்தருக்கு ஏற்ற" என்ற வார்த்தையை கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய விதத்திலும் வேதவசனத்தின் ஆதாரத்தின் அடிப்படையிலும் வளர்ப்பது என்று பொருள் கொள்ளவேண்டும். இரண்டு காரியங்களை ஒரு தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டும்.

1. **சிட்சைகளில் வளர்க்கவேண்டும்.**

2. **நற்போதனைகளைத் தரவேண்டும்.**

சிட்சை என்ற வார்த்தை ஒருவன் தவறுசெய்யும்போது அதைக் கண்டித்து, திருத்தி, அறிவு புகட்டி, நல்வழியில் நடக்கச் செய்வதைக் குறிப்பிடுகிறது. "நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம்" (1கொரி 11:32). பிள்ளைகள் தவறு செய்யும்போது அவர்களைத் தண்டிக்கும் உரிமை தகப்பனுக்கு வழங்கப்படுகிறது. "பிரம்பைக் கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான்; அவன்மேல் அன்பாயிருக்கிறவனோ அவனை ஏற்கனவே தண்டிக்கிறான்" (நீதி 13:24). "பிள்ளையின் நெஞ்சில் மதியீனம் ஒட்டியிருக்கும்; அதைத் தண்டனையின் பிரம்பு அவனைவிட்டு அகற்றும்" (நீதி 22:15). நீதி 23:13,14 சொல்கிறது, "பிள்ளையை தண்டியாமல் விடாதே; அவனைப் பிரம்பினால் அடித்தால் அவன் சாகான். நீ பிரம்பினால் அடிக்கிறதினால் பாதாளத்துக்கு அவன் ஆத்துமாவைத் தப்புவிப்பாயே". "நம்பிக்கையிருக்குமட்டும் உன் மகனைச் சிட்சை செய்" (நீதி 19:18). "பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து,

அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்" (நீதி 22:6). எபி 12:7-8ல் இவ்வாறு வாசிக்கிறோம், "நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்கள்".

நற்போதனைகளை தன் பிள்ளைகளுக்கு வழங்குவதை ஒரு தகப்பனுடைய இரண்டாவது பொறுப்பாக பவுல் அறிவிக்கிறார். "நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்து" (உபா 6:7) பேசும்படியாக மோசே ஆலோசனை தருகிறார். ஆபிரகாம் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டதற்கு பல காரணங்கள் உண்டு என்றாலும் அவைகளில் ஒன்று ஆதி 18:19ல் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது, "அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன்".

பின்வரும் சந்ததியாருக்கு வேதத்தின் அடிப்படையில் தேவனுடைய போதனைகளை சொல்லிக் கொடுப்பது எவ்வளவு முக்கியம் என்பதை அறிந்து கொள்ளுங்கள். பெற்றோரின் சாட்சியற்ற வாழ்க்கையும், வழிநடத்துதலும் எந்த அளவுக்கு பிள்ளைகளில் பாதிப்பை உண்டாக்கும் என்பதை 1இராஜா 22:52,53 வாசித்து அறிந்து கொள்ளுங்கள். ஏலி ஒரு ஆசாரியனாயிருந்தும் தன் பிள்ளைகளுக்கு போதனைகளை வழங்கத் தவறியதால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அந்த குடும்பத்தைத் தாக்கியது (1சாமு 3:13,14). சாமுவேல் தேவனால் வல்லமையாய் பயன்படுத்தப்பட்ட தீர்க்கதரிசியாயிருந்தும், "அவனுடைய குமாரர் அவன் வழிகளில் நடவாமல், பொருளாசைக்குச் சாய்ந்து, பரிதானம் வாங்கி, நியாயத்தைப் புரட்டினார்கள்". (1சாமு 8:3) என்று வாசிக்கிறோம். இன்றைய ஊழியக்காரர்களும், விசுவாசிகளும் இதுகுறித்து எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

## வேலைக்காரரும் எஜமான்களும் (6:5-9)

**வேலைக்காரரே, நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்குப் பயத்தோடும், நடுக்கத்தோடும், கபடற்ற மனதோடும் கீழ்ப்படிந்து (எபே 6:5)**

5 முதல் 9 வரையுள்ள வசனங்களில் வேலைக்காரர்களுக்கும் எஜமான்களுக்குமிடையே இருக்கவேண்டிய உறவுமுறைகளைக் குறித்து பவுல் பேசுகிறார். பவுலின் நாட்களில் எந்த விதமான தொழிலாளர் ஐக்கியங்களோ, அவர்கள் நலனுக்காக செயல்படும் அமைப்புகளோ, யூனியன்களோ இருந்ததில்லை. வேலைக்காரர்களுக்கு எந்தவித உரிமையும் கொடுக்கப்படவில்லை. ரோம சாம்ராஜ்யத்தில் அந்த நாட்களில் ஆறுகோடிக்கும் மேற்பட்ட அடிமைகள் இருந்தார்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ரோம பேரரசின் அங்கீகாரத்தின் அடிப்படையில் தேசமெங்கும் காணப்பட்ட அடிமைத்தனத்துக்கு எதிராக பவுல் நேரடியாக எதுவும் பேசவில்லை என்றாலும், கிறிஸ்துவின் நற்செய்தியை மனிதர்கள் அத்தனைபேருக்கும் பாகுபாடின்றி பிரசங்கித்தார். மனிதர்கள் அடிமைகளாக இருக்கலாம், அடிமைகளின் முதலாளிகளாக இருக்கலாம், கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகள் என்ற முறையில் சகோதர சகோதரிகள் என்பதால் ஒருவரை ஒருவர் மதித்து நடக்கவேண்டும் என்பதே பவுலின் அறிவுரை. முக்கியமாக வேலைக்காரர்கள் தங்கள் எஜமான்களுக்கு கீழ்ப்படிந்தால் மட்டும் போதாது, அதில் பயம், நடுக்கம், கபடமற்ற மனம் காணப்படவேண்டும் என்கிறார் பவுல்.

சரீரத்தின்படிதான் கீழ்ப்படியவேண்டும் என்று பவுல் சொல்வதைக் கவனியுங்கள். இந்த எஜமான்கள் இந்த உலகத்துக்குரியவர்கள், அவர்களுடைய அடக்குமுறைகளும் ஆளுகையும் நீடித்திருப்பதில்லை. நிலைத்திருப்பதில்லை. ஒரு வேலைக்காரனுடைய இருதயத்தையும் ஆன்மாவையும் ஆளுகை செய்ய அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. இணைவசனமாகிய

கொலோ *3:22*லும் பவுல் சொல்கிறார், "வேலைக்காரரே, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களா-யிருக்கிறவர்களுக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்து, நீங்கள் மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாக பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல் தேவனுக்குப் பயப்படுகிறவர்களாகக் கபடமில்லாத இருதயத்தோடே ஊழியஞ் செய்யுங்கள்". பேதுரு சொல்கிறார், "வேலைக்காரரே, அதிக பயத்துடனே உங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; நல்லவர்களுக்கும் சாந்தகுணமுள்ளவர்களுக்கும் மாத்திரம் அல்ல, முரட்டுக் குணமுள்ளவர்களுக்கும் கீழ்ப்படிந்திருங்கள்" *(1பேதுரு 2:18)*.

**மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள். (எபே 6:6)**

இணை நிருபமான கொலோ *3:23,24*ல் இந்த சத்தியம் இவ்விதமாக அறிவிக்கப்படுகிறது. "நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து, எதைச் செய்தாலும் அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்". கர்த்தருக்கென்று நாம் செய்யும் காரியங்கள் நிச்சயமாக ஆசீர்வாதமாகத்தான் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒரு வேலையாள் தன்னுடைய எஜமானனைப் பிரியப்படுத்தும்படியாக அல்ல, தேவனைப் பிரியப்படுத்தும்படியாக வேலை செய்யவேண்டும். ஏனென்றால் உண்மையில் அவன் கிறிஸ்துவுக்குள் அடிமையாயிருக்கிறான். அவர் எல்லா வேளைகளிலும் நம்மை கவனித்துக்கொண்டே இருக்கிறார் என்பதை உணர்ந்தவனாய் முழுமனதோடு, மனப்பூர்வமாய் வேலை செய்யவேண்டும். அதுவே தேவனுடைய சித்தமும் எதிர்பார்ப்புமாக இருக்கிறது. உலகத்து மனிதர்கள் தங்களை எஜமானனின் நேரடியாக

கண்காணிப்பில் இருக்கும்போது உற்சாகமாக வேலை செய்பவர்களாக தங்களைக் காட்டிக்கொள்வார்கள். இதில் எந்த மேன்மையும் இல்லை.

கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய எஜமானர்களுடைய ஊழியக்காரர் அல்ல, கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் என்பதை உணர்ந்தவர்களாக செயல்படவேண்டும் என்று பவுல் விரும்புகிறார். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே "ஊழியங் கொள்ளும்படி வராமல் ஊழியஞ் செய்ய" *(மாற்கு 10:45)* வந்தார் என்று பார்க்கிறோம். அவர் உலகில் இருந்த நாட்களில் எந்த அளவுக்கு தம்மைத்தாமே வெறுமையாக்கி, கீழ்ப்படிந்தவராகி தம்மைத் தாமே தாழ்த்தினார் *(பிலிப் 2:7,8)* என்பதை நாம் அறிவோம். தேவனுடைய சித்தத்துக்கு அவர் மனப்பூர்வமாக, பரிபூரணமாகக் கீழ்ப்படிந்து நடந்தார். "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்" *(சங் 40:8)* என்பதுதான் அவர் தன்னைக் குறித்துச் சொன்ன காரியம். மத்தேயு *12:50*ல் அவர் சொல்கிறார், "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான்".

**அடிமையானவனானாலும், சுயாதீனமுள்ளவனானாலும், அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவானென்று அறிந்து (எபே 6:7)**

கிறிஸ்தவர்களாகிய நாம் அடிமையாக இருக்கலாம் அல்லது சுயாதீனமுள்ளவராக இருக்கலாம். அடிமைகள் என்ற முறையில் எந்த விதமான உரிமைகளும் அதிகாரங்களும் இல்லாதவர்களாகவோ, அல்லது சுயாதீனர் என்ற முறையில் சகல அதிகாரங்களையும் உடையவர்களாகவோ இருக்கலாம். ஆனால் நாம் தேவனுடைய அழைப்புக்குள் இருக்கிறோமா என்பதுதான் முக்கியமான காரியம். ஏனென்றால் பவுல் சொல்கிறபடி "கர்த்தருக்குள் அழைக்கப்பட்ட அடிமையானவன் கர்த்தருடைய சுயாதீனனாயிருக்கிறான்; அப்படியே அழைக்கப்பட்ட சுயாதீனன் கிறிஸ்துவினுடைய அடிமையாயிருக்கிறான். நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்" *(1கொரி 7:22,23)*.

நாம் மனிதர்களுடைய அடிமைகள் அல்ல, தேவனுடைய அடிமைகள். தன்னுடைய இரத்தத்தையே கிரையமாகக் கொடுத்து அவர் நம்மை வாங்கியிருக்கிறார். நம்முடைய கிரியைகளை அவர் கவனித்துக் கொண்டே இருக்கிறார் என்பது மட்டுமல்ல, அதற்கேற்ற பிரதிபலனை அவர் நிச்சயமாகவே தருவார். மத்தேயு *25:31-46* வாசித்துப் பாருங்கள். நம்முடைய வெளிப்படையான கிரியைகளை மட்டும் அல்ல, அதன் நோக்கங்களையும் அறிந்தவராக அதனடிப்படையில் அவர் நியாயந் தீர்ப்பார் (மத் *7:21-23*). பிரசங்கி *12:14* கடைசிவசனம் சொல்கிறபடி, "ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்". இந்த நம்பிக்கையில்தான் போவாஸ் ரூத்திடம் சொல்கிறார், "உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக" (ரூத் *2:12*).

மத் *16:27*ல் இயேசு சொல்கிறார், "மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமைபொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார்; அப்பொழுது அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார்". அதனால்தான் கொலோ *3:24,25*ல் பவுல் சொல்கிறார், "எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள். அநியாயஞ் செய்கிறவன் தான் செய்த அநியாயத்துக்கேற்ற பலனை அடைவான்; பட்சபாதமே இல்லை". பத்மு தீவிலிருந்த யோவானிடம் கிறிஸ்து சொல்கிறார், "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது" (வெளி *22:12*). ஏசாயா *40:10*ல் இவ்வாறு வாசிக்கிறோம், "இதோ, அவர் அளிக்கும் பலன் அவரோடேகூட வருகிறது; அவர் கொடுக்கும் பிரதிபலன் அவருடைய முகத்துக்கு முன்பாகச் செல்லுகிறது". வெளி *2:7,10,11,17,26-28; 3:4,5,9,12*; சங் *19:11, 58:11, 62:12*; எரே *31:16*, மத் *5:12, 6:4* வாசித்துப் பாருங்கள்.

**மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள். (எபே 6:8)**

6-வது வசனத்தில் மனுஷருக்கு முன்பாக நன்கு வேலை செய்கிறவர்களைப்போல் காட்டிக்கொண்டு அவர்களைப் பிரியப்படுத்தும்படியாக பார்வைக்கு ஊழியம் செய்யக்கூடாது என்று அறிவித்த பவுல், உண்மையில் நாம் யாருக்கு ஊழியம் செய்கிறவர்களாக இருக்கவேண்டும் என்பதை இந்த வசனத்தில் அறிவிக்கிறார்.

ஒரு கிறிஸ்தவ வேலைக்காரன், அவன் அடிமையாயிருந்தாலும் சரி, சுயாதீனனாய் இருந்தாலும் சரி, அவனுடைய உண்மையான எஜமானன் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து என்ற ஆழமான சத்தியம் இங்கே அறிவிக்கப்படுகிறது. அவனுடைய ஒவ்வொரு பணிவிடையும் அல்லது வேலையும் தேவனால் அங்கீகரிக்கப்படக்கூடிய விதத்தில் இருக்கிறதா என்று சிந்தித்து செய்யப்படவேண்டும். 2கொரி 5:10ல் பவுல் சொல்கிறார், "சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்". "எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல் கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்" (கொலோ 3:24). ஏனென்றால் அவர் "பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவர்" (1பேதுரு 1:17). "நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்பு-விப்பான்" (ரோமர் 14:12).

கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனுடைய ஊழியக்காரர்களாக இருக்கலாம். அல்லது உலக வேலைகளில் ஈடுபட்டிருக்கலாம். ஒரு ஆசிரியராக அல்லது பள்ளி மாணவனாக இருக்கலாம். தொழிற்சாலைகளில் வேலை செய்துகொண்டிருக்கலாம். அல்லது அலுவலகங்களில் பணிபுரிந்துகொண்டிருக்கலாம். எதுவாக இருந்தாலும் நாம் கர்த்தருக்கென்றே செய்கிறோம், அதை அவர் பரம எஜமானன் என்ற முறையில் சவனித்துக் கொண்டே இருக்கிறார் என்ற

உணர்வோடு நாம் செயல்படவேண்டும். உலகத்து எஜமானனை நாம் ஏமாற்றிவிடலாம். பரலோகத்து எஜமானனை நம்மால் ஏமாற்ற முடியாது. "கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது" *(2நாளா 16:9)* என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**எஜமான்களே, அப்படியே நீங்களும், வேலைக்காரருக்குச் செய்யவேண்டியவைகளைச் செய்து, அவர்களுக்கும் உங்களுக்கும் எஜமானானவர் பரலோகத்தில் இருக்கிறாரென்றும், அவரிடத்தில் பட்சபாதம் இல்லையென்றும் அறிந்து, கடுஞ்சொல்லை விட்டுவிடுங்கள். (எபே 6:9)**

எஜமான் என்ற வார்த்தை அந்த நாட்களில் மனிதர்களை கிரையம் கொடுத்து வாங்கி அடிமைகளைப் போல வேலைவாங்கும் முதலாளிகளை மட்டும் குறிப்பிடாமல் இப்போது இருப்பதுபோல் சம்பளம், கூலி, போனஸ் முதலானவைகளைக் கொடுத்து மனிதர்களை பணியில் அமர்த்தும் முதலாளிகளையும் குறிப்பிடுவதாக எடுத்துக் கொள்ளவேண்டும். எஜமான்களுக்கு பவுல் தரும் ஆலோசனை இந்த ஒரே வசனத்தில் முடிந்துவிடுகிறது என்றாலும் "அப்படியே" என்று வசனம் துவங்குவதைக் கவனியுங்கள். முந்தின நான்கு வசனங்களில் அடிமைகள் மற்றும் பணிவிடைக்காரருக்கும் கொடுக்கப்பட்ட ஆலோசனைகள் இவர்களுக்கும் பொருத்தமானது என்பதையே இந்த வார்த்தை வெளிப்படுத்துகிறது.

கொலோ *4:1*ல் பவுல் சொல்கிறார், "எஜமான்களே, உங்களுக்கும் பரலோகத்தில் எஜமான் இருக்கிறாரென்று அறிந்து, வேலைக்காரருக்கு நீதியும் செவ்வையுமானதைச் செய்யுங்கள்". அவ்வாறு செய்யாமல், தன்னுடைய வேலையாட்களுடைய நியாயத்தை அசட்டை பண்ணும் எஜமான்களுக்கு விரோதமாக தேவன் எழும்பி அதை விசாரிப்பார் என்று யோபு *31:13,14*ல் சொல்லப்பட்டிருக்கிறது. "கூலிக்காரரின் கூலியை அபகரித்துக் கொள்ளுகிறவர்" *(மல்கியா 3:5)* தேவனால் நியாயந்தீர்க்கப் படுவார்கள். அந்த கூலியும் காலதாமதமின்றி ஏற்ற நேரத்தில்

கொடுக்கப்படவேண்டும். உபா *24:15* சொல்கிறது, "அவன் வேலைசெய்த நாளில்தானே, பொழுதுபோகுமுன்னே, அவன் கூலியை அவனுக்குக் கொடுத்துவிடவேண்டும்; அவன் ஏழையும் அதின்மேல் ஆவலுமாயிருக்கிறான்; அதைக் கொடாவிட்டால் அவன் உன்னைக்குறித்துக் கர்த்தரை நோக்கி முறையிடுவான்; அது உனக்குப் பாவமாயிருக்கும்".

லேவி *19:13* சொல்கிறது, "கூலிக்காரனுடைய கூலி விடியற்காலம் மட்டும் உன்னிடத்தில் இருக்கலாகாது". கூலி கொடுப்பதைத் தாமதப்படுத்துகிறவர்கள் தண்டிக்கப்படுவது உறுதி. யாக்கோபு சொல்கிறார், "இதோ ... உங்கள் வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூலி உங்களால் அநியாயமாய்ப் பிடிக்கப்பட்டுக் கூக்குரலிடுகிறது; அறுத்தவர்களுடைய கூக்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில்பட்டது" *(5:4)*.

ஒரு கிறிஸ்தவ வேலையாள் தான் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல் தன்னுடைய எஜமான்களுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்று 5-வது வசனத்தில் அறிவித்த பவுல், அந்த எஜமான்கள் தங்களுக்கு பரலோகத்தில் ஒரு பெரிய முதலாளி இருக்கிறார் என்ற உணர்வோடு கடுஞ்சொல்லை விட்டுவிடும்படியாக ஆலோசனை தருகிறார். கடுஞ்சொல்லைப் பேசுவது முதலாளிகளுடைய பிரத்தியேகமான குணம். பணியாட்களை பயமுறுத்துவது, அதட்டுவது, அவர்களுக்கு எதிராக தூஷணமான வார்த்தைகளைப் பேசுவது போன்றவை தவிர்க்கப்படவேண்டும். ஏனென்றால் தேவனிடத்தில் பட்சபாதம் இல்லை. எலிகூ தேவனைக் குறித்து சொல்கிறார், "பிரபுக்களின் முகத்தைப் பாராமலும் ஏழையைப் பார்க்கிலும் ஐசுவரியவானை அதிகமாய் எண்ணாமலும் இருக்கிறவர்" *(யோபு 34:19)*. பேதுரு சொல்கிறபடி, "தேவன் பட்சபாத-முள்ளவரல்ல" *(அப் 10:34)*. மத்தேயு *5:45*ல் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொல்கிறார், "அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்".

## ஆவிக்குரிய போராட்டம் (6:10-20)

**கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். (எபே 6:10)**

“கடைசியாக” என்ற வார்த்தையுடன் எபேசியர் நிருபத்தின் மிக முக்கியமான கடைசி வேதபகுதியை பவுல் இந்த வசனத்திலிருந்து ஆரம்பிக்கிறார். ஆழமும் மகத்துவமும் நிறைந்த பல சத்தியங்களை பவுல் இதுவரை அறிவித்ததை நாம் தியானித்தோம். கிறிஸ்துவுக்குள்ளாக தேவன் நம்மைக் குறித்து வைத்திருக்கும் நோக்கம் என்ன, அவருடைய அழைப்பினிமித்தம் நாம் பெற்றுக் கொண்ட மகிமை என்ன, என்பதை அறிவித்த பவுல் இவற்றின் அடிப்டையில் நம்முடைய வாழ்க்கை எப்படி இருக்கவேண்டும், நாம் ஒருவரோடு ஒருவர் கொண்டிருக்கவேண்டிய உறவு முறைகள் எதை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும், உண்மையான கிறிஸ்தவ குடும்ப வாழ்க்கையின் மேன்மை என்ன என்பது போன்ற காரியங்களையும் அறிவித்ததைப் பார்த்தோம்.

இந்த மகத்துவத்தையும் மேன்மையையும் எந்த ஒரு மனிதனும் தன்னுடைய முயற்சியினாலோ, திறமையினாலோ, மாமிச பெலத்தினாலோ சுதந்தரித்துக் கொள்ள முடியாது. அவன் அனுதினமும் எதிர்கொள்ளும் ஆவிக்குரிய போராட்டத்தை மேற்கொள்ள வேண்டுமானால் தேவனுடைய சத்துவத்தின் வல்லமை, அவருடைய மிகுந்த ஆற்றல் அவனுக்கு தேவைப்படுகிறது என்பதே இந்த வசனம் அறிவிக்கும் காரியம். தன்னுடைய சத்துவத்தின் வல்லமையினால் எந்த ஒரு மனிதனாலும் வெற்றியுள்ள கிறிஸ்தவ ஜீவியத்தை சுதந்தரித்துக் கொள்ளமுடியாது. இந்த முயற்சியில் ஈடுபடும் ஒரு மனிதன் வாழ்க்கையில் மிகப்பெரிய ஆவிக்குரிய போராட்டத்தைச் சந்திக்க வேண்டியதிருக்கும். அதில் வெற்றிபெற தேவனுடைய சர்வாயுத வர்க்கங்களை நாம் தரித்துக் கொள்ளவேண்டும் (*வசனம் 11*). எபே *3:16*ல் உள்ளான மனுஷனில் வல்லமையாய் பலப்படவேண்டும் என்பதையும் பார்த்தோம். நமக்கு எதிராக யுத்தம் செய்யும் நான்கு

பிரதான வல்லமைகளின் பட்டியல் 12வது வசனத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஒரு மனிதன் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை தன் ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்ட அந்த நாளிலேயே அவனுடைய வாழ்க்கையில் இந்த போராட்டம் ஆரம்பமாகிறது. அதனால்தான் பவுல் சொல்கிறார், "விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு" *(1தீமோ 6:12)*. இந்தப் போராட்டத்தை அப்போஸ்தலனாகிய பவுல் சந்தித்திருக்கிறார். எனவேதான் "நல்ல போராட்டத்தைப் போராடினேன்" *(2தீமோ 4:7)* என்று அவர் சொல்கிறார். "நீங்கள் என்னிடத்திலே கண்டதும் எனக்கு உண்டென்று இப்பொழுது கேள்விப்படுகிறதுமான போராட்டமே உங்களுக்கும் உண்டு" *(பிலிப் 1:30)*. தேவனுக்காக வாழ விரும்புகிறவர்கள் சாத்தானுடைய எதிர்ப்பினால் உண்டாகும் போராட்டத்தைச் சந்தித்தே ஆகவேண்டும்.

எபேசியர் நிருபத்தின் கடைசியில், தன்னுடைய இறுதி ஆலோசனையாக *10* முதல் *20* வரையுள்ள வசனங்களில் கிறிஸ்தவர்களாகிய நாம் எவ்வாறு ஒரு யுத்த வீரனைப்போல் சத்துருவை எதிர்த்து நிற்கவேண்டும் என்பதை அறிவிக்கிறார். இந்த போராட்டத்தில் வெற்றிபெற நாம் செய்யவேண்டிய ஏழு காரியங்கள்:

1. நாம் கர்த்தரிலும் கர்த்தருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பெலப்படவேண்டும் (வசனம் 10)

2. நாம் பிசாசின் தந்திரங்களை எதிர்த்து நிற்கவேண்டும் *(வசனம் 11)*

3. நாம் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்துக்கொள்ள வேண்டும் *(வசனம் 11)*

4. இந்த யுத்தம் முற்றிலுமாக ஆவிக்குரியது (மாம்சத்திற்கு உரியது அல்ல) என்பதை அறிந்து கொள்ளவேண்டும் *(வசனம் 12)*

5. தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை எடுத்துக்கொண்டால் மட்டுமே வெற்றி (வசனம் 13)

6. நாம் அணிந்து கொள்ளவேண்டிய சர்வாயுத போராயுதங்களின் பட்டியல் (வசனம் 14-17)

7. வெற்றியை நிர்ணயிக்கும் ஜெபம் (வேண்டுதல்) என்ற போராயுதம் (வசனம் 18-20)

கர்த்தரிலும், அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படும் விசுவாசிகளை "என் சகோதரரே" என்று பவுல் உரிமையோடு அழைக்கிறார். ஒரு மூத்த சகோதரன் என்ற முறையில் அவர்களுக்கு மட்டுமே தன்னுடைய ஆலோசனையை வழங்குகிறார். நம்முடைய எதிராளியாகிய சாத்தானை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் முறியடித்துவிட்டார் என்பது உண்மைதான். கொலோ 2:14,15 சொல்கிறபடி, "நமக்கு எதிரிடையாகவும், கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து, துரைத்தனங்களையும், அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்". அந்த வெற்றியை நிரந்தரமாக, முறையாக நாம் நமக்குச் சொந்தமாக்கவேண்டும் என்றால் முதலாவது கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படவேண்டும் என்கிறார் பவுல். அதாவது தேவனே நம்முடைய பெலனாயிருக்கவேண்டும்.

மோசே சொல்கிறார், "கர்த்தர் என் பெலனும் என் கீதமுமானவர்" (யாத் 15:2). தாவீது சொல்கிறார், "கர்த்தர் என் பெலனும் என் கேடகமுமாயிருக்கிறார்" (சங் 28:6). "கர்த்தர் அவர்களுடைய பெலன்; அவரே தாம் அபிஷேகம் பண்ணினவனுக்கு அரணான அடைக்கலமானவர்" (சங் 28:8). "தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையுமானவர்" (சங் 46:1). நாம் கர்த்தரில் பலப்படும்போது, அவருடைய சத்துவத்தின்

வல்லமை நமக்கு கிறிஸ்துவுக்குள் அருளப்படுகிறது. நம்முடைய சத்துவம் கிறிஸ்துவுக்குள் அடங்கியிருக்கிறது. நம்முடைய சுயபெலனை நம்பி போர்க்களத்தில் சாத்தானை எதிர்த்து நிற்போமானால் நாம் தோல்வியைச் சந்திப்பது உறுதி. பவுல் சொல்கிறார், "எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவை-களாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ள-வைகளாயிருக்கிறது" (*2கொரி 10:4*). தேவனுடைய சத்துவத்தின் வல்லமையின் மேன்மையை அறிந்த பவுல் ஜெபிக்கிறார், "மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம்" (*கொலோ 1:11*).

"பலப்படுங்கள்" என்பது ஒரு ஆலோசனையாக அல்ல, கட்டளையாகக் கொடுக்கப்படுகிறது. கிறிஸ்துவில் பலப்பட வேண்டும் என்று நாம் தீர்மானம் எடுத்து அந்த பெலனைச் சுதந்தரிந்துக் கொள்ளவேண்டும். ஏனென்றால் தேவன் தன்னுடைய பலத்தை நமக்கு வாக்குப் பண்ணியிருக்கிறார். "பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" (*2கொரி 12:9*) என்ற வாக்குத்தத்தத்தின் ஆதாரத்தில் பவுல் சொல்கிறார், "நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனா-யிருக்கிறேன்" (*வசனம் 10*). "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு" (*பிலி 4:13*) என்கிறார். தீமோத்தேயுவிடம் பவுல் சொல்கிறார், "என் குமாரனே, நீ கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படு" (*2தீமோ 2:1*). தேவனுடைய கிருபை அவருடைய சத்துவத்தின் வல்லமையை நமக்கு வழங்குவதற்குப் போதுமானதாயிருக்கிறது.

**நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். (எபே 6:11)**

கிறிஸ்தவர்களாகிய நாம் அனுதினமும் சந்திக்கும் ஆவிக்குரிய போராட்டத்தில் வெற்றி பெறவேண்டுமானால் முதலாவதாக கர்த்தரிலும், அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும்

பலப்படவேண்டும் என்று முந்தின வசனத்தில் ஆலோசனை கூறிய பவுல், தன்னுடைய இரண்டாவது ஆலோசனையை இந்த வசனத்தில் தருகிறார். தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ள வேண்டும். தேவனுடைய சர்வாயுத வர்க்கம் என்ற வார்த்தை தேவன் அணிந்திருக்கும் படைக்கலங்களைக் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். அல்லது அவர் தன்னுடைய பிள்ளைகளின் பாதுகாப்புக்காக வழங்கும் ஆயுதங்களைக் குறிப்பிடுவதாகவும் எடுத்துக்கொள்ளலாம். இந்த ஆயுதங்களை நாம் இந்த உலகில் இருந்து பெற்றுக்கொள்ள முடியாது. நமக்கென்று அவற்றை உருவாக்கி, ஆயத்தப்படுத்தி வைத்து, நமக்குத் தருபவர் தேவனே. அவற்றை தரித்துக் கொள்வது மட்டுமே நம்முடைய பொறுப்பாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பிசாசை எதிர்த்து நில்லுங்கள் *(1பேதுரு 5:9)* என்று பேதுருவைப்போல் நேரடியாக அறிவிக்காமல் அவனுடைய தந்திரங்களை எதிர்க்கும்படியாக பவுல் சொல்கிறார். "அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே" *(2கொரி 2:11)* என்கிறார் பவுல். *1தீமோ 3:7*ல் தந்திரம் என்பதற்குப் பதிலாக "பிசாசின் கண்ணி" என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. அவனுடைய தந்திரமான கிரியை முதலாவதாக ஏதேன் தோட்டத்தில் வெளிப்பட்டது. "சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்தது" *(2கொரி 11:3)*. ஆதி *3:1*ல் இவ்வாறு வாசிக்கிறோம், "தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப்பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது". தேவனுடைய் வார்த்தையில் சந்தேகத்தை உண்டாக்குவதில்தான் அவனுடைய தந்திரம் அடங்கியிருக்கிறது. இதன் விளைவாக பாவம் என்றால் என்ன என்பதையே அறியாத ஏவாள் "வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள்" *(1தீமோ 2:14)*. வேதவசனத்தைச் சந்தேகிக்க ஆரம்பிக்கும்போதே ஒருவனுடைய வீழ்ச்சி ஆரம்பமாகிவிடும்.

சாத்தான் மிகப்பெரிய தந்திரவாதி என்பதால் அவனுடைய

தந்திரங்களில் இருந்து தப்பித்துக் கொள்ள மிகுந்த கவனமுள்ளவர்களாக இருக்கவேண்டும். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் இருந்த நாட்களில் தேவனுடைய வார்த்தையையே தந்திரமாக உபயோகித்து அவரை மேற்கொள்ள அவன் முயற்சித்ததை நாம் அறிவோம் (மத் 4:1-9). உலகத்தின் சகல ராஜ்யங்களின் மேல் உள்ள உரிமை தன்னிடம் இருப்பதுபோலவும், அதைத் தனக்கு இஷ்டமானவனுக்கு கொடுக்கும் அதிகாரம் தன்னிடம் ஒப்புக்கொடுக்கப்பட்டதுபோலவும் பேசும் சாமர்த்தியம் அவனிடம் காணப்பட்டது (லூக்கா 4:6).

தேவைப்படும்போது ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்துக்கொள்ளுமளவு சாத்தான் வஞ்சனை நிறைந்தவன். "உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு" (வெளி 12:9) என்ற பெயர் அவனுக்கு மிகவும் பொருத்தமானது. உபத்திரவ காலங்களில் சாத்தானுடைய மிகப்பெரிய வஞ்சனை வெளிப்படும் என்பதை 2தெச 2:4 இவ்வாறு அறிவிக்கிறது, "அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்".

அவனுடைய தந்திரங்களை எதிர்த்து நிற்கத் திராணி உண்டாகவேண்டுமானால், தேவனுடைய சர்வாயுதங்கள் நமக்குத் தேவைப்படுகிறது. யாக்கோபு சொல்கிறார், "தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்" (4:7). தேவனுடைய ஆயுதங்களை நாம் அணிந்து கொள்ளும்போது முதலாவது நம்முடைய கீழ்ப்படிதல் வெளிப்படுகிறது. நம்முடைய சொந்த பெலனை நம்பி நாம் நிற்கவில்லை என்பதை நாம் பகிரங்கமாக அறிவிக்கிறோம். ரோமர் 13:12ல் தேவனுடைய சர்வாயுத வர்க்கங்கள் "ஒளியின் ஆயுதங்கள்" என்று அழைக்கப்படுகின்றன. ஏசாயா 59:17 சொல்கிறது, "அவர் நீதியை மார்க்கவசமாக அணிந்து, இரட்சிப்பென்னும் சீராவைத் தமது சிரசில் தரித்து, நீதிசரிக்கட்டுதலென்னும் வஸ்திரங்களை

உடுப்பாக உடுத்து, வைராக்கியத்தைச் சால்வையாகப் போர்த்துக்கொண்டார்".

சாத்தானை மேற்கொள்ளவேண்டுமானால் தேவனுடைய சகல ஆயுதங்களும் நமக்குத் தேவைப்படுகிறது என்பதை அறிந்து கொள்ளுங்கள். அவற்றை அணிந்துகொள்ளும்போதுதான் சாத்தானுக்கு எதிரான யுத்தத்தில் நம்மை தேவனோடு இணைத்துக் கொள்கிறோம். ஒருவகையில் நம்முடைய யுத்தம் தேவனுடையதாகி விடுகிறது. தேவனுடைய சர்வாயுதங்களையும் அணிந்துகொண்டவர்களாக யுத்தகளத்தில் சாத்தானுக்கு எதிராக நிற்கும்போது அவனுக்குமுன் நாம் தேவனைப்போல் காட்சியளிப்பதால் சாத்தான் நடுங்கி ஓடிப்போவான் என்பதில் சந்தேகமே இல்லை. அதனால்தான் ரோமர் 13:14ல் பவுல் சொல்கிறார், "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுங்கள்". சவுல் இராஜாவினால் தாவீதுக்கு வழங்கப்பட்ட ஆயுதவர்க்கங்களும், வஸ்திரமும், பட்டயமும் அவருக்கு பொருத்தமானதாக இருக்கவில்லை என்று 1சாமு 17:38,39ல் வாசிக்கிறோம். ஆனால் தேவனுடைய பிள்ளைகளாகிய நாமோ ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையே தரித்துக்கொள்கிறோம்.

**ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுமுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. (எபே 6:12)**

கிறிஸ்தவர்களாகிய நமக்கு எதிராக செயல்பட்டுக் கொண்டிருக்கும் வல்லமை எப்படிப்பட்டது என்பதையும், எவ்வளவு பயங்கரமானது என்பதையும் சபை அறிந்துகொள்ளவேண்டும் என்று பவுல் விரும்புகிறார். ஒரு போராட்டத்தில் நாம் வெற்றிபெற வேண்டுமானால் நமக்கு விரோதமாக யுத்தம் செய்கிறவர்கள் யார் என்பதையும், அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதையும், அவர்கள் எவ்வாறு செயல்படுகிறார்கள் என்பதையும் அறிந்திருப்பது நல்லது. முந்தின வசனத்தில் படைகளின் தலைவனாகிய பிசாசு ஒரு தந்திரவாதி

என்பதை மட்டும் அறிவித்த பவுல், இந்த வசனத்தில் நம்முடைய போராட்டம் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்ல என்பதை துவக்கத்திலேயே அறிவிக்கிறார்.

மாம்சம், இரத்தம் என்ற வார்த்தை மனிதனுடைய ஆள்தத்துவத்தைக் குறிப்பிடுகிறது. எபி *4:14*, மத் *16:17*, கலா *1:16*, 1கொரி *15:50* ஆகிய வசனங்கள் இதை உறுதிப்படுத்துகின்றன. கிறிஸ்தவர்களாகிய நம்முடைய யுத்தம் மனிதர்களுக்கு எதிரானது அல்ல என்பதை பவுல் உறுதிப்படுத்துகிறார். நாம் பலதரப்பட்ட அசுத்த ஆவிகளுக்கு விரோதமான ஆவிக்குரிய போராட்டத்தை சந்திக்கவேண்டியதிருக்கிறது. மனிதர்கள் மூலமாக நாம் போராட்டத்தைச் சந்திக்கும்போதும் அவர்களுக்குப் பின்னணியில் நிற்கும் சாத்தானையும் நாம் அடையாளங் கண்டுகொள்ளவேண்டும். இவ்வாறு பேதுரு மூலமாக வெளிப்பட்ட சாத்தானைக் கண்டுகொண்ட இயேசு அவரைக் கடிந்துகொண்டு, "பின்னாகப் போ, சாத்தானே" (மாற்கு *8:33*) என்கிறார்.

நான்கு வகையான எதிரிகள் இந்த ஆவிக்குரிய போராட்டத்தில் நமக்கு விரோதமாக அணிவகுத்து நிற்கிறார்கள்.

1. துரைத்தனங்கள் (principalities) - ஆட்சிநடத்தும் ஆவிகள்
2. அதிகாரங்கள் (powers) - அதிகாரம் செலுத்தும் ஆவிகள்
3. இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகள் (rulers of darkness of this world) - இருள் நிறைந்த உலகை ஆளும் சக்திகள்
4. வானமண்டலத்தின் பொல்லாத ஆவிகள் (spiritual wickedness in high places) - வானுலகில் உள்ள பொல்லாத ஆவிகள்

இந்த பேய்க்கூட்டத்தினருக்கு மாம்சமும் இரத்தமும் இல்லை என்பதால் இவர்களை நாம் கண்களால் பார்க்கமுடிவதில்லை. ஆனால்

அவையோ இரவிலும் பகலிலும் எல்லா நேரங்களிலும் நம்மை கண்காணித்துக் கொண்டே இருக்கின்றன. அவர்களுடைய இந்த பிரபஞ்சத்தின் தேவனாகிய *(2கொரி 4:4)* பிசாசின் ஆலோசனையின்படி நமக்கு எதிராக யுத்தம் செய்துகொண்டே இருக்கின்றன. ஒரு விசுவாசியின் சரீரத்துக்குள் பிரவேசித்து அவனில் வாசம் பண்ண இந்த அசுத்த ஆவிகளுக்கு அதிகாரம் இல்லை என்றாலும், அவனுக்குப் புறம்பே இருந்துகொண்டு அவனைத் துன்புறுத்தவும், அவனை விழத்தட்டவும் அவற்றால் முடியும். சுவிசேஷ ஒளி எல்லா மனிதர்களையும் போய்ச்சேராதபடிக்குத் தடை செய்யவும் அவர்களால் முடியும் *(2கொரி 4:4)*. வல்லமையோடும், அடையாளங்களோடும் அற்புதங்களைச் செய்யவும் முடியும் *(2தெச 2:9)*.

இந்த பொல்லாத ஆவிகளோடு நமக்குப் போராட்டம் உண்டு என்கிறார் பவுல். போராட்டம் என்பதற்கு பயன்படுத்தப்படும் wrestle என்ற வார்த்தை எதிரி தூரத்தில் நின்றுகொண்டு குண்டு வீசுவதையோ, அம்பு எய்வதையோ, துப்பாக்கியால் சுடுவதையோ குறிப்பிடாமல் எதிரியோடு நேருக்கு நேர், கையோடு கை கலந்து மற்போர் செய்வதைக் குறிப்பிடுகிறது. அவை வானமண்டலங்களில் உள்ள பொல்லாத ஆவியாக மட்டும் அல்ல, இந்த பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதியாகவும் இருப்பதால், "கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி சுற்றித் திரிகிறான்" *(1பேதுரு 5:8)*.

அந்தகார லோகாதிபதி என்று சொல்லும்போது "இருளில் இருந்து ஆளுகை செய்கிறவன்" என்று பொருள்கொள்ளலாம். அந்தகாரத்தின் கிரியைகளைக் குறித்து லூக்கா *22:53*, ரோமர் *13:12* ல் பார்க்கிறோம். தான் இருளில் இருந்துகொண்டு, "கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்" *(2கொரி 4:4)* என்கிறார் பவுல். இதன் விளைவாக சிலர் "வஞ்சிக்கிற ஆவிகளுக்கும்,

பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள்" *(1தீமோ 4:1)*.

**ஆகையால், தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.** (எபே 6:13)

கிறிஸ்தவர்களாகிய நாம் எதிர்கொள்ளும் ஆவிக்குரிய போராட்டத்தில் முந்தின வசனத்தின்படி வல்லமையான சக்திகளை எதிர்கொள்ளவேண்டியதிருக்கிறது என்பது உண்மைதான். ஆனாலும் அதைக் குறித்து நாம் பயப்படவேண்டியதில்லை. இந்த பேய்க்கூட்டத்தை எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடிக்கும் திராணி உள்ளவர்களாக நிற்கவும் நாம் செய்யவேண்டிய ஒரே காரியம் என்ன என்பதை பவுல் இந்த வசனத்தில் அறிவிக்கிறார். நம்முடைய பெலத்தையோ, புத்திசாலித்தனத்தையோ, வல்லமையையோ நம்பி யுத்தகளத்தில் நிற்காமல் தேவனை நம்பி அவருடைய சர்வாயுத வர்க்கத்தை எடுத்துக்கொண்டால் வெற்றி நிச்சயம். ஏற்கனவே தேவனுடைய சர்வாயுதவர்க்கமாகிய தேவனுடைய படைக்கலங்களை அணிந்துகொள்ளும்படியான ஆலோசனை கொடுக்கப்பட்டதைப் பார்த்தோம். **தேவனுடைய ஆயுதங்களை நாம் எடுத்து பயன்படுத்தும்போது யுத்தம் கர்த்தருடையதாகிறது.**

இஸ்ரவேலின் ராஜாவாகிய சவுலும், அவருடைய படை வீரர்களும் பெலிஸ்தியனாகிய கோலியாத் தன்னுடைய வெண்கலச் சீரா, போர்க்கவசம், கேடகம் ஆகியவற்றுடன் அவர்களுக்கு எதிராக யுத்தம் பண்ண வரும்போது அவனை எதிர்கொள்ள பயந்து நடுங்கினார்கள். தங்களுடைய பெலனும், அவர்களிடமிருந்த ஆயுதங்களும் இந்த சத்துருவை மேற்கொள்ளாது என்பதை அவர்கள் நன்றாகவே அறிந்திருந்தார்கள். ஆனால் இளைஞனாகிய தாவீதுக்கு எந்த பயமும் இல்லை. தேவன் தன்னோடு இருந்து கோலியாத்துக்கு எதிராக யுத்தம் செய்வார் என்ற நம்பிக்கை தாவீதிடம் இருந்ததால் அவர் சொல்கிறார். "நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும்

என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன்" *(1சாமு 17:45)*. தேவனுடைய நாமமே அவருடைய சர்வாயுத வர்க்கமாக கோலியாத்துக்கு எதிராக பயன்படுத்தப்படுகிறது. தாவீதுக்கு வெற்றியைக் கொண்டுவருகிறது.

"தீங்கு நாளிலே" சத்துருவை எதிர்க்கவேண்டும் என்று பவுல் சொல்வதைக் கவனியுங்கள். தீங்கு நாள் என்று ஒரு நாள் நம் ஒவ்வொருவருக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்துகொள்ளுங்கள். சாத்தானுடன் யுத்தம் செய்ய நம்மைப் பழக்குவிக்கும்படியாக தேவன் இந்த நாளை அனுமதிக்கிறார். அதனால்தான் சங் *144:1*ல் தாவீது சொல்கிறார், "என் கைகளைப் போருக்கும் என் விரல்களை யுத்தத்திற்கும் படிப்பிக்கிற என் கன்மலையாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்". தீங்கு நாளிலே வெள்ளம்போல புரண்டு சத்துரு நமக்கு எதிராக புறப்பட்டு வருவான். அவனை எதிர்த்தால் மட்டும்போதாது, சகலத்தையும் செய்து முடித்தவர்களாக நிற்கவேண்டும் என்கிறார் பவுல். அதாவது இந்த யுத்தத்தில் முழுமையான வெற்றிகண்டு, அந்த வெற்றியில் நிலைத்து நிற்கவேண்டும். தற்காலிகமான வெற்றியில் எந்த நன்மையும் இல்லை. "முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்" *(மாற்கு 13:13)* என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்வாறு நிலைநிற்க நாம் செய்யவேண்டிய ஒரே காரியம் தேவன் தரும் ஆயுதங்களை நம்முடைய கரங்களில் எடுத்துக்கொள்வதுதான். அவற்றை ஏற்கனவே தேவன் ஆயத்தப்படுத்தி, நாம் எந்த நேரத்திலும் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில் நம் அருகிலேயே வைத்திருக்கிறார். நாம் வசனத்துக்குக் கீழ்ப்படிந்து அதை பயன்படுத்தும்போது, "கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள்" *(யாத் 14:14)* என்ற வாக்குத்தத்தம் நம்மில் செயல்பட ஆரம்பிக்கிறது. நாம் ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொண்டவர்களாகிறோம் *(ரோமர் 13:12)*. அவைகள் ஆவிக்குரிய ஆயுதங்கள்.

**சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும் (எபே 6:14)**

*14* முதல் *18* வரையுள்ள வசனங்களில் தேவனுடைய சர்வாயுதங்களின் அட்டவணை காணப்படுகிறது. நம்மை எதிர்கொள்ளும் தீங்குநாளுக்கென்று தேவன் ஆயத்தம் பண்ணிவைத்திருக்கும் இந்த படைக்கலங்களை பொல்லாத சேனைகளுக்கு விரோதமாக எவ்வாறு பயன்படுத்தவேண்டும் என்பதையும் பவுல் அறிவித்துக்கொண்டிருக்கிறார்.

1. சத்தியம் என்னும் கச்சை - அரையில் கட்டவேண்டும்
2. நீதி என்னும் மார்க்கவசம் - மார்பில் தரிக்கவேண்டும்
3. சுவிசேஷம் என்னும் பாதரட்சை - கால்களில் தொடுத்துக் கொள்ளவேண்டும் *(வசனம் 15)*
4. விசுவாசம் என்னும் கேடகம் - கையில் பிடித்துக் கொள்ளவேண்டும் *(வசனம் 16)*
5. இரட்சணியம் என்னும் தலைச்சீரா - தலையில் அணிந்துகொள்ளவேண்டும் *(வசனம் 17)*
6. தேவ வசனம் என்னும் பட்டயம் - கையில் எடுத்துக்கொள்ளவேண்டும் *(வசனம் 18)*
7. எல்லாவற்றுக்கும் மேலாக ஜெபம் என்னும் போராயுதம் - ஜெபத்தில் விழித்திருக்கவேண்டும் *(வசனம் 18)*

சர்வாயுதங்களின் அட்டவணையில் முதலிடம் பெறுவது போர்வீரன் இடுப்பில் கட்டவேண்டிய வார்க்கச்சையாகும். பொதுவாக கச்சை (belt) ஒரு போர் ஆயுதமாகக் கருதப்படுவதற்கில்லை என்றாலும், யுத்த நேரத்தில் மார்புக்கவசத்தையும் வாளுறையையும்

போர்வீரனின் உடலோடு இணைத்து மாட்டுவதற்கும், அவனுடைய ஆடைகள் நெகிழ்ந்து போகாதபடிக்கும் அவனுடைய அரையில் கச்சை கட்டப்படவேண்டியது அவசியமாகிறது. இடைக்கட்டுவது என்பது ஒரு மனிதன் ஒரு பிரதானமான காரியத்தை நடப்பிக்குமுன் தன்னைத்தானே அதற்கு ஆயத்தப்படுத்துவதைக் குறிப்பிடுகிறது *(2இராஜா 4:29, 9:1, 1பேதுரு 1:13).*

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றிய தீர்க்கதரிசன வசனம் இவ்வாறு சொல்கிறது, "நீதி அவருக்கு அரைக்கட்டும், சத்தியம் அவருக்கு இடைக்கச்சையுமாயிருக்கும்" *(ஏசாயா 11:5)*. சத்தியம் அவருக்கு இடைக்கச்சையாக இருந்தபடியால்தான் "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" *(யோவான் 14:6)* என்று அவரால் பகிரங்கமாய் அறிக்கையிடமுடிந்தது. உயிர்த்தெழுந்த இயேசு தன்னை "சத்தியமுள்ளவர்" *(வெளி 3:7)* என்று யோவானுக்கு வெளிப்படுத்துகிறார். "சத்தியமாவது என்ன" என்ற பிலாத்துவின் கேள்விக்கு *(யோவான் 18:38)* கிறிஸ்து எந்த பதிலும் சொல்லவில்லை. ஏனென்றால் தனக்கு எதிரில் முகமுகமாக நின்றுகொண்டிருக்கும் சத்தியமாகிய தன்னைக் கண்டுகொள்ள மறுக்கும் பிலாத்துவுக்கு சத்தியத்தைக் குறித்து விளக்கம் தர அவர் ஆயத்தமாயில்லை.

யுத்தகளத்தில் நிற்கும் கிறிஸ்தவ வீரன் முதலாவதாக சத்தியத்தை அறிந்திருக்கவேண்டும். சத்தியம் தேவனுடைய வார்த்தையைக் குறிப்பிடுவதால் திருமறைநூலில் தேர்ச்சியுள்ளவனாய் இருக்க வேண்டும். வேதத்தை நன்றாக தியானிக்க அறிந்திருக்கவேண்டும். அதனால்தான் தன் சீஷர்களுக்காக கிறிஸ்து ஜெபிக்கிறார், "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும், உம்முடைய வசனமே சத்தியம்" *(யோவான் 17:17)*. **தேவனுடைய வார்த்தையை முழுமையாகவும், எழுத்தின்படியும் ஏற்றுக்கொண்டு விசுவாசிக்கத் தவறினால் யுத்தத்தில் தோல்வி நிச்சயம்.** நம்முடைய சத்துரு முதலாவதாக தேவனுடைய வார்த்தையில் சந்தேகத்தை உருவாக்கவே முயற்சி செய்வான் என்பதைப் பார்த்தோம். "நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின்

கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ?" (ஆதி 3:1). இது சாத்தான் இந்த பூமியில் பேசிய முதல் வார்த்தை. தேவனுடைய வசனமாகிய சத்தியத்தில் ஏவாளுக்கு சந்தேகம் வந்த அந்த நேரத்திலேயே அவளுடைய வீழ்ச்சி நிர்ணயிக்கப்பட்டாயிற்று.

சர்வாயுதங்களில் இரண்டாவதாகச் சொல்லப்படுவது நீதி என்னும் மார்க்கவசம். யுத்தத்தில் போர் வீரர்களுக்கு மிகுந்த பாதுகாப்பைத் தருவது மார்க்கவசமே. மனிதனுடைய சரீரத்தின் உயிர்நிலை அவயவங்களான மார்பு, இருதயம், ஈரல், முதுகின் மேற்பாகம் முதலியவற்றுக்குப் பாதுகாப்பைத் தருவது வீரன் அணிந்திருக்கும் மார்க்கவசமே என்பதால் அதை அணிந்து கொள்ளாத நிலையில் எந்த வீரனும் யுத்தகளத்துக்குள் பிரவேசிக்கமாட்டான். கோலியாத்தின் வெண்கலத்தால் செய்யப்பட்ட போர்கவசம் சுமார் 150 பவுண்டு எடை உள்ளது என்று பார்க்கிறோம் (5000 சேக்கல், 1சாமு 17:5)

அநீதி அல்ல, நீதிதான் நாம் அணிந்திருக்கும் மார்க்கவசமாக இருக்கவேண்டும். கோலியாத்தின் மார்க்கவசம் அநீதியானது என்பதால் அக்கவசத்தால் அவனுக்கு எந்த பாதுகாப்பும் இல்லாமல் போகிறது. ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மார்க்கவசத்தைக் குறித்து ஏசாயா 59:16,17 என்ன சொல்கிறது என்று பாருங்கள், "அவருடைய நீதியே அவரைத் தாங்குகிறது. அவர் நீதியை மார்க்கவசமாக அணிந்து, இரட்சிப்பென்னும் சீராவைத் தமது சிரசில் தரித்து, நீதி சரிக்கட்டுதலென்னும் வஸ்திரங்களை உடுப்பாக உடுத்து, வைராக்கியத்தைச் சால்வையாகப் போர்த்துக் கொண்டார்". "நீதி அவருக்கு அரைக்கட்டும், சத்தியம் அவருக்கு இடைக்கச்சையுமாயிருக்கும்" (ஏசாயா 11:5). கிறிஸ்துவுக்கு மட்டுமே சொந்தமான நீதியை பாவ மனிதர்களாகிய நாம் விசுவாசத்தினால் பெற்றுக்கொண்டு நமக்குரியதாக்குகிறோம். ரோமர் 3:22 சொல்கிறபடி, "அது இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவ நீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள் மேலும் அது பலிக்கும், வித்தியாசமே இல்லை". 1தெச 5:8ல் பவுல் சொல்கிறார்,

"விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக்கொண்டிருக்கக் கடவோம்".

உலகத்து மனிதர்கள் தானதர்மங்களைச் செய்தும், கல்வி ஸ்தாபனங்கள், மருத்துவமனைகளை ஸ்தாபித்தும் தங்களில் நீதியை உருவாக்க முயற்சி செய்கிறார்கள். தங்களை நீதியுள்ளவர்களாக காட்டிக்கொள்கிறார்கள். தேவனால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய நீதியை எந்த ஒரு மனிதனும் தன்னுடைய கீழ்ப்படிதலாலும் சுயமுயற்சியினாலும் நற்கிரியைகளினாலும் உருவாக்கிக் கொள்ளமுடியாது. இப்படி உருவாக்கப்படும் நீதி "அழுக்கான கந்தை" *(ஏசாயா 64:6)* என்று அழைக்கப்படுகிறது. மனிதனுடைய நீதியை மகாபரிசுத்தராகிய தேவன் ஒருநாளும் அங்கீகரிக்கமாட்டார்.

தேவன் ஒருவரே நீதிபரர் *(சங் 119:137)*. *சங் 97:2* சொல்கிறது, *"நீதியும் நியாயமும் அவருடைய சிங்காசனத்தின் ஆதாரம்". சங் 48:10* சொல்கிறது, *"உமது வலது கரம் நீதியால் நிறைந்திருக்கிறது"*. ஒரு மனிதன் மனந்திரும்பி ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை தன் ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டு அவருடைய பிள்ளையாக மாறும்போது அவனுக்கு தேவநீதி இலவசமாக வழங்கப்படுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் தான் *"நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும், விசுவாசம் மூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதி"யை உடையவராய்* இருந்ததாக *பிலிப் 3:9ல்* பார்க்கிறோம்.

**சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும் (எபே 6:15)**

யுத்தகளத்துக்குள் பிரவேசிக்கும் போர்வீரனின் மூன்றாவது காரியம் தன் கால்களில் வலிமையான பாதரட்சைகளை அணிந்துகொள்வது. தன்னுடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களை ஊழியம் செய்ய அனுப்பும்போது வழிக்குப் பையையாகிலும்,

அப்பத்தையாகிலும், கச்சையில் காசையாகிலும் எடுத்துக்கொண்டு போகக்கூடாது என்று தடைசெய்த இயேசுகிறிஸ்து பாதரட்சைகளைப் போட்டுக்கொள்ளவேண்டும் என்று கட்டளையிட்டதை மாற்கு 6:8,9ல் பார்க்கிறோம். தகுதியான பாதரட்சைகளை கால்களில் தரித்துக்கொள்ளாமல் வெறுமனே கச்சையைக் கட்டுவதாலோ, மார்க்கவசம் அணிவதாலோ மாத்திரம் பிரயோஜனம் இல்லை. போர்வீரர்கள் சரியான அளவிலும், உறுதியானதுமான காலணிகளை அணிந்திருந்தால் மட்டுமே வேகமாக அணிவகுத்து நடந்து எதிரிகளை மேற்கொள்ளமுடியும். இன்று இராணுவ வீரர்களும், காவல்துறை அதிகாரிகளும் தங்களுடைய காலணிகளின் அடியில் இரும்பு ஆணிகளைப் பதித்து வைத்திருப்பதைப் பார்க்கலாம்.

யுத்தவீரர்கள் அணிந்திருக்கும் பாதரட்சைகள் சமாதான சுவிசேஷத்தின் ஆயத்தம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சுவிசேஷம் என்ற வார்த்தை கிறிஸ்து மூலமாக பாவ மனிதனுக்கு அறிவிக்கப்பட்ட நற்செய்தியாகிய கிருபையினால் உண்டாகும் இரட்சிப்பைக் குறிப்பிடுகிறது என்று பார்த்தோம். "சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி: உன் தேவன் ராஜரிகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன" என்று ஏசாயா 52:7 ல் வாசிக்கிறோம். ரோமர் 10:15 வாசித்துப் பாருங்கள். மனித இனத்தை மீட்கும்படியாக உலகத்துக்கு சமாதானத்தை அறிவித்த முதல் சுவிசேஷகர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்பதை எபேசியர் 2:17ல் தியானித்தோம்.

கிறிஸ்தவர்களாகிய நாம் சாத்தானுக்கு எதிராக யுத்தகளத்தில் நின்றுகொண்டிருந்தாலும், மனித இனத்துக்கு சமாதானத்தைக் கொண்டுவரும் சுவிசேஷத்தை நம்முடைய எதிரியின் சேனைகளிலேயே பறைசாற்றுவதற்கு ஆயத்தமாயிருக்கவேண்டும் என்பதை பவுல் தெளிவுபடுத்துகிறார். "நீங்கள் உலகமெங்கும்போய், சர்வ

சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்கு 16:15) என்பதுதான் நமது மீட்பர் நமக்கு வழங்கியுள்ள பிரதானமான கட்டளை. "சுவிசேஷம்" என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் 76 இடங்களில் காணப்படுகிறது என்றும், அதில் பவுலின் நிருபங்களில் மட்டும் 60 முறை வருகிறது என்றும் கணக்கிட்டிருக்கிறார்கள். "நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷம்" (1கொரி 15:1) என்று சொல்லும் பவுல், அது என்ன என்பதை 3,4,5 வசனங்களில் அறிவிக்கிறார். வேதவாக்கியங்களின்படி கிறிஸ்து மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து பலருக்கு தரிசனமானார் என்ற அறிவிப்பே சுவிசேஷம் ஆகும். இதன் மூலமாகவே தேவனுக்கும் மனிதனுக்குமிடையே சமாதானம் உண்டாகிறது. பவுலின் நிருபங்களில் "சமாதானம்" (Shalom) என்ற வார்த்தை 43 இடங்களில் காணப்படுகிறது.

**பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள். (எபே 6:16)**

யுத்தகளத்தில் அணிவகுத்து நிற்கும் போர் வீரன் பயன்படுத்தும் நான்காவது ஆயுதம் அவனுடைய கேடகம் ஆகும். இரண்டு வகையான கேடகங்களை ரோமவீரர்கள் பயன்படுத்தி வந்தார்கள். வலது கரத்தில் பட்டயத்தை வைத்துக் கொண்டு சண்டையிடும் வீரர்கள், தங்கள் இடதுகையில் இரும்பினால் செய்யப்பட்ட வட்டமான கேடகத்தை வைத்துக்கொண்டிருப்பார்கள். எதிரியின் பட்டயம் அல்லது கத்தி தன்னுடைய சரீரத்தைத் தாக்காமல் தடுக்க வீரன் இதை பயன்படுத்துகிறான்.

ஆனால் இந்த வசனத்தில் பவுல் குறிப்பிடும் கேடகம் சுமார் 5 அடி உயரமும் 3 அடி அகலமும் உள்ளதாகவும், வலுவான பலகையினால் வடிவமைக்கப்பட்டதாக இருக்கும். எதிரியின் அரண்மனையையோ அல்லது கோட்டையையோ பிடிக்கும்படியாக ராணுவம் முன்னேறிச் செல்லும்போது முன்னிலையில் நிற்கும் வீரர்கள்

இந்த கேடகத்தை தங்களுக்கு முன்பாக நிறுத்தியிருப்பார்கள். எதிரிகள் தங்கள் அம்புகளை எண்ணெய் அல்லது கீலில் தோய்த்து, அவற்றின் முனைகளை நெருப்பில் கொழுத்தி எய்யும்போது இந்த வீரர்கள் தங்கள் கேடகத்தைப் பயன்படுத்தி, தங்களுக்கு சேதமில்லாமல் காப்பாற்றி விடுவார்கள். எதிரிகளின் அக்கினியாஸ்திரங்கள் பயனற்றதாகி விடுகிறது.

விசுவாசிகளாகிய நமக்கு எதிராக இத்தகைய அக்கினியாஸ்திரங்களைப் பயன்படுத்துவது பொல்லாங்கன் என்று அழைக்கப்படும் சாத்தான். விசுவாசம் என்னும் கேடகத்தை நாம் பிடித்துக் கொண்டிருப்போமானால் மட்டுமே நமக்கு எந்த பாதிப்பும் உண்டாகாது. எபி 11:1 சொல்கிறது, "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது". தேவனை விசுவாசிக்கும் ஒரு மனிதன் தன்னுடைய வாழ்க்கையில் ஒருநாளும் தோல்வியைச் சந்திப்பதில்லை. தேவனுடைய வாக்குத்தத்தங்களைக் குறித்தும், அவருடைய வார்த்தைகளைக் குறித்தும் நம்முடைய மனதில் சத்துரு உருவாக்கும் சந்தேகங்களே அவனுடைய அக்கினியாஸ்திரமாகக் கருதப்படவேண்டும். நம்முடைய இரட்சிப்பின் நிச்சயத்தைக் குறித்தும், தேவனிடமிருந்து நாம் பெற்றுக் கொண்டிருக்கும் அழைப்பைக் குறித்தும், நம்முடைய ஊழியத் தகுதியைக் குறித்தும் சந்தேகங்களை நம் மனதில் உருவாக்கி சோர்வடையச் செய்வதுதான் அவனுடைய தந்திரம். வேதம் வாசித்து தியானித்துக் கொண்டிருக்கும்போதும், ஆவியில் களிகூர்ந்து தேவனை ஆராதித்துக்கொண்டிருக்கும்போதும்கூட, சற்றும் எதிர்பாராத வேளையில், எதிர்பாராத திசையில் இருந்து நம்மை இந்த அக்கினியாஸ்திரங்கள் தாக்கலாம் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

விசுவாசம் என்னும் கேடகத்தின் உதவியால் மட்டுமே நாம் இந்த அக்கினியாஸ்திரங்களை மேற்கொள்ளமுடியும். நம்முடைய சகல பெலவீனங்களின் மத்தியிலும் இந்த அக்கினியாஸ்திரங்களை அவித்துப்போட தேவனால் முடியும். அதை நிச்சயமாகவே செய்வார் என்ற விசுவாசம் நமக்குள் இருக்கவேண்டும். விசுவாசம் என்பது

**தேவனுடைய வார்த்தையின் மீதும், அவருடைய வாக்குத்தத்தத்தின் மீதும் நாம் கொண்டிருக்கும் அசைக்கமுடியாத நம்பிக்கையாகும்.** "நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" *(1யோ 5:4)* என்று சொல்லப் பட்டிருக்கிறது. விசுவாசத்தின் மேன்மையை வெளிப்படையாக அறிவிக்கும் ரோமர் நிருபத்தில் பவுல் சொல்கிறார், "விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்" *(ரோம 1:17, கலா 3:11, எபி 10:38).* "நீதியுண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும்" *(ரோமர் 10:9)* என்கிறார் இயேசு. "என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்" *(யோவான் 11:25,26).*

நாம் சந்திக்கும் சகல போராட்டத்தின் மத்தியிலும் தேவன் நம்மோடு, நமக்குத் துணையாக நிற்கிறார் என்கிற விசுவாசமே நம்முடைய கேடகமாக நின்று சத்துருவின் சகல தாக்குதலிலும் இருந்து பாதுகாப்பைத் தருகிறது. ஆதி 15:1ல் தேவன் ஆபிரகாமிடம் சொல்கிறார், "நீ பயப்படாதே. நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகாபெரிய பலனுமாயிருக்கிறேன்". தாவீது சொல்கிறார், "நீர் என் கேடகமும், என் மகிமையும் என் தலையை உயர்த்துகிறவருமா-யிருக்கிறீர்" *(சங் 3:3)*, "அவரே நமக்குத் துணையும் நமக்குக் கேடகமுமானவர் *(சங் 33:20)*. 1தெச 5:8ல் விசுவாசத்துடன் அன்பும் கேடகமாக குறிப்பிடப்படுகிறது.

**இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். (எபே 6:17)**

ஏசாயா 59:17ல் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து "இரட்சிப்பென்னும் சீராவை" அவருடைய தலையில் அணிந்துகொண்டிருந்தார் என்பதை 14-வது வசனத்தில் பார்த்தோம். அவரோடு இணைந்து நாமும் சத்துருவுக்கு எதிராக யுத்தம் செய்வதால் **ஐந்தாவது** ஆயுதவர்க்கமாக அந்த தலைச்சீரா நமக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1தெச 5:8ல் "இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக்கொண்டிருக்கக்

கடவோம்" என்கிறார் பவுல். மனிதனுடைய சரீரத்தில் தலை மிகவும் முக்கியமானது. சரீரத்தின் மற்ற பகுதிகளில் அடி அல்லது காயம் ஏற்பட்டால் அதை ஓரளவு தாங்கிக் கொள்ளலாம். தலையில் ஏற்படும் காயம் மூளையை சேதப்படுத்தும் என்பதால்தான் யுத்தத்தில் கலந்துகொள்ளும் போர்வீரர்கள் தலைச்சீரா அணிந்துகொள்வது அவசியமாக இருக்கிறது. இன்றும் இருசக்கர வாகனங்களில் பயணம் செய்பவர்கள், சுரங்கம் மற்றும் தொழிற்சாலைகளிலும் உயரமான கட்டிடங்களில் வேலை செய்பவர்கள் தலையில் கவசம் அணிந்து கொண்டிருக்கவேண்டும் என்று அரசாங்கம் வலியுறுத்தி வருகிறது. வெண்கலத்தினால் செய்யப்பட்ட தலைச்சீராவை கோலியாத் அணிந்திருந்தான் என்று பார்க்கிறோம் *(1சாமு 17:5,38)*.

கிறிஸ்தவர்களாகிய நாம் அணிந்துகொள்ள வேண்டியது இரட்சணியம் என்ற தலைச்சீரா. இரட்சணியம் என்ற வார்த்தை நாம் பெற்றுக்கொண்ட இரட்சிப்பின் நிச்சயத்தைக் குறிப்பிடுகிறது. இரட்சிப்பு தேவன் இலவசமாக வழங்கும் ஈவு. தேவனுடைய கரத்தில் இருந்து நாம் பெற்றுக்கொண்டிருக்கும் இரட்சிப்பு நமக்கு நிரந்தரமான பாதுகாப்பையும், நம்பிக்கையையும் கொடுக்கிறது. இரட்சிக்கப்-பட்ட ஒரு மனிதனால்தான் சத்துருவுக்கு எதிராக திட்டமிட்டு செயல்பட முடியும். தன்னுடைய நினைவுகளையும், சிந்தனைகளையும் பரிசுத்தமாக பாதுகாத்துக்கொள்ள முடியும்.

தேவ வசனமாகிய ஆவியின் பட்டயம் நாம் பயன்படுத்தும் ஆறாவது சர்வாயுத வர்க்கமாக இந்த வசனத்தில் குறிப்பிடப்படுகிறது. இதுவரை சொல்லப்பட்ட கச்சை, மார்க்கவசம், பாதரட்சை, கேடகம், தலைச்சீரா ஆகியவை எதிரியின் தாக்குதலில் இருந்து நமக்குப் பாதுகாப்பைத் தருவதற்காக இருக்கின்றன. ஆனால் சரீரத்தில் காயம் ஏற்படாதபடி நம்மைப் பாதுகாத்துக்கொண்டால் மட்டும் யுத்தத்தில் வெற்றி இலக்கை அடைந்துவிட முடியாது. நாம் எதிரியை மேற்கொண்டு அவனை அழிக்கவேண்டும். அவனுடைய மரணத்தில்தான் நம்முடைய வெற்றி அமைந்திருக்கிறது. பட்டயத்தைப் பயன்படுத்தியே ஒருவீரன் தன் எதிரியை வெட்டி வீழ்த்த

முடியும். எனவேதான் தன்னுடைய வலதுகையில் பட்டயம் இல்லாமல் எந்தவொரு போர்வீரனும் யுத்தகளத்தில் பிரவேசிக்கமாட்டான்.

சாத்தானை மேற்கொள்ள நாம் பயன்படுத்தவேண்டிய பட்டயம் தேவவசனம் என்கிறார் பவுல். எபிரெயர் *4:12* சொல்கிறது, "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்த பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும், ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது".

தன்னுடைய வாயின் வார்த்தையினால் தேவன் சகல எதிரிகளையும் மேற்கொள்வார் என்பதை பல வேத வசனங்கள் அறிவிக்கின்றன. ஏசாயா *11:4* சொல்கிறது, அவர் "பூமியைத் தமது வாக்கின் கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார்". ஓசியா 6:5ல் அவர் சொல்கிறார், "என் வாய்மொழிகளைக் கொண்டு அவர்களை அதம்பண்ணினேன்". வெளி *1:16*ல் இவ்வாறு வாசிக்கிறோம், "அவர் வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது". வெளி *1:16, 2:12, 16* வாசித்துப் பாருங்கள். தன்னுடைய வாயின் வார்த்தையையே கடைசி நாட்களில் வெளிப்படும் அந்திக்கிறிஸ்துவுக்கு எதிராக பயன்படுத்துவார். 2தெச *2:8* சொல்கிறது, "அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான், அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம் பண்ணுவார்".

தேவனுடைய வார்த்தையிலிருந்து வெளிப்படும் வல்லமையை நாம் தெரிந்துகொண்டால் மட்டுமே வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழமுடியும். வேதவசனத்தைப் பேசும் ஒவ்வொரு வேளையிலும் நாம் எதிரிகளை வெற்றிகொள்ளமுடியும் என்பதை நம்புங்கள். ஏனென்றால் தேவனும் தேவனுடைய வார்த்தையும் ஒன்றுதான். யோவான் *1:1* சொல்கிறது, "ஆதியிலே வார்த்தை

இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது". வெளி *19:13* சொல்கிறது, "அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே". தான் பூமியில் இருந்த நாட்களில் சோதனைக்காரனை மேற்கொள்ள "எழுதியிருக்கிறதே" *(மத் 4:4,7,10)* என்று வேதவசனத்தையே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சுட்டிக்காட்டினார் என்பதை அறிவோம்.

ஆவியின் பட்டயம் என்று தேவவசனத்தை பவுல் குறிப்பிடுகிறார். பரிசுத்த ஆவியானவர் மூலமாக தேவனுடைய வார்த்தை வெளிப்படுகிறது. 2தீமோ *3:16* சொல்கிறபடி, "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டி-ருக்கிறது". 2பேதுரு *1:21* சொல்கிறது, "தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்" எபி*3:7, 9:8, 10:15*, 1பேதுரு *1:11* வாசித்துப் பாருங்கள்.

**எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும், ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்-காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள். (எபே 6:18)**

நம்முடைய ஆவிக்குரிய போராட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக தேவன் ஆயத்தம் பண்ணி வைத்திருக்கும் அரைக்கச்சை, மார்க்கவசம், பாதரட்சை, கேடகம், தலைச்சீரா, பட்டயம் என்ற ஆறுவிதமான சர்வாயுத வர்க்கங்களைக் குறித்தும் இதுவரை பார்த்தோம். ஒரு போர்வீரன் ஆயுதங்களை வைத்துக்கொண்டிருப்பதால்மட்டும் வெற்றி பெறுவதில்லை. அவற்றை சரியான நேரத்தில் பயன்படுத்த தைரியமும், மனஉறுதியும் பெற்றிருக்கவேண்டும். போர்வீரன் நடுக்கத்தோடும் பயத்தோடும் இருப்பானேயாகில் எதிரியை மேற்கொள்ள முடியாது. தான் தனித்துவிடப்படவில்லை, தன்னைச் சுற்றிலும் இன்னும் பல

போர்வீரர்கள் நின்று எதிரியை தாக்கிக்கொண்டிருக்கிறார்கள் என்ற நம்பிக்கை அவனுக்கு இருக்கவேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக அவன் யுத்தகளத்தில் இருந்தாலும் தன்னுடைய தலைமை தளபதியுடன் எல்லாவேளைகளிலும் தொடர்பு வைத்திருக்கவேண்டும். அவருடைய ஆலோசனைகளையும், கட்டளைகளையும், அவர் அறிவிக்கும் யுத்த அணுகுமுறைகளையும் அறிந்து செயல்படும்போது மட்டுமே பயமின்றி எதிரிகளை அவனால் வெற்றிகொள்ள இயலும். இந்த தொடர்பை உண்டாக்குவதற்கும் அதில் நிலைத்திருக்கவும் ஜெபம் தேவைப்படுகிறது. தலைமை தளபதியாகிய தேவனுடன் போர்வீரன் வைத்திருக்கும் ஜெபஐக்கியமே அவர் வழங்கியிருக்கும் சர்வாயுத வர்க்கங்களை வெற்றிகரமாக பயன்படுத்தத் தேவையான ஞானத்தையும் திறமையையும் வழங்கும்.

*1தீமோ 2:1*ல் பவுல் சொல்கிறார், "நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்". யுத்தகளத்தில் நிற்கும் போர்வீரன் தனக்காக மட்டுமல்ல, சகபோர்வீரர்களுக்காகவும் தேவசமுகத்தில் ஜெபிக்கிறான். **இன்னொருவர் யுத்தம் செய்யும்படியாக நாம் போராயுதம் அணிய முடியாது. ஆனால் இன்னொருவர், ஜெயம் பெறவேண்டும் என்பதற்காக நம்மால் ஜெபிக்கமுடியும்.** சகல பரிசுத்தவான்களுக்காகவும் ஜெபிக்கவேண்டும் என்பதை நாம் தியானிக்கும் வசனத்தில் பவுல் வலியுறுத்துவதைக் கவனியுங்கள்.

எந்த சமயத்திலும் ஜெபிக்கவேண்டும் என்கிறார் பவுல். "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்" (*கொலோ 4:2*). "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" (*1தெச 5:17*). ஜெபிப்பது என்பது கிறிஸ்தவர்களாகிய நாம் அவ்வப்போது செய்யவேண்டிய ஒரு காரியம் அல்ல. அல்லது காலையில் பத்து நிமிஷம், இரவில் இருபது நிமிஷம் செய்கிற காரியமும் அல்ல. *பிலிப் 4:6,7* சொல்கிறது, "நீங்கள் ஒன்றுக்குங்

கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்".

தான் இந்த உலகத்தில் இருந்த நாட்களில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கே ஜெபம் தேவைப்பட்டது என்பதை அறிந்துகொள்ளுங்கள். கெத்செமனே தோட்டத்தில் ஒரே ஜெபக்குறிப்புடன் மூன்றுமுறை அவர் ஜெபித்த நிகழ்ச்சி மத் *26:39-44*ல் சொல்லப்பட்டிருக்கிறது. எபி *5:7* சொல்கிறது, "அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டார்".

நாம் தியானிக்கும் வசனத்திலும் விண்ணப்பம் என்ற வார்த்தையும் வேண்டுதல் என்ற வார்த்தையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. விண்ணப்பம் என்ற வார்த்தை யுத்த களத்தில் நம்மைப்போல் நிற்கும் சக போர்வீரர்களுக்காக ஜெபிப்பதையும், வேண்டுதல் என்ற வார்த்தை நம்முடைய சொந்த தேவைகளுக்காக ஜெபிப்பதையும் குறிப்பிடுகிறது. சகல பரிசுத்தவான்களுக்காகவும் வேண்டுதல் செய்யவேண்டும் என்கிறார் பவுல். யுத்தகளத்தில் நிற்கும் போர்வீரன் தனக்காகவும், தன்னுடைய பாதுகாப்புக்காகவும் மட்டும் ஜெபித்துக் கொண்டிருந்தால் யுத்தத்தில் வெற்றிபெறமுடியாது. 1கொரி *12:26,27*ல் பவுல் சொல்கிறபடி, "ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும். நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்". சிறையில் அடைக்கப்பட்டிருந்த பேதுருவுக்காக சபையார் ஜெபித்தபோது தேவன் அதைக்கேட்டு தன் தூதனை அனுப்பி பேதுருவை விடுவித்த நிகழ்ச்சி அப் *12:3-10*ல் சொல்லப்பட்டிருக்கிறது. "யோபு தன்

சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார்" என்று 42:10ல் வாசிக்கிறோம்.

ஆவியினாலே ஜெபம் பண்ணவேண்டும் என்ற ஆலோசனையையும் பவுல் கொடுக்கிறார். "நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்" (1கொரி 14:15) என்கிறார். நம்முடைய ஜெபஜீவியம் ஆவியானவரின் ஆளுகைக்குள்ளாக இருக்கவேண்டும் என்பதையே இது குறிப்பிடுகிறது. அப்போது மட்டுமே தேவனுடைய சித்தத்தை அறிந்தவர்களாக நாம் ஜெபிக்கமுடியும். மாம்சத்தில் ஜெபிக்கும்போது தேவசித்தத்தை உணராமல் ஜெபம் பண்ணுகிறவர்களாகத்தான் இருப்போம். ரோமர் 8:26,27ல் இவ்வாறு வாசிக்கிறோம், "நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்". பிதாவாகிய தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளும் காலத்தில் நாம் இருக்கிறபடியால் (யோவான் 4:21-23), பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையின்றி தேவனைக் கிட்டிச்சேர முடியாது.

மிகுந்த மனஉறுதியோடு வேண்டுதல் செய்யவேண்டும் என்கிறார் பவுல். ஆவியானவரின் ஒத்தாசை இல்லாமல் நாம் தேவசமுகத்தில் மனஉறுதியோடு பிரவேசிக்க முடியாது. "நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில், நான் போராடுவதுபோல நீங்களும் என்னோடுகூடப் போராடவேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தமும், ஆவியானவருடைய அன்பினிமித்தமும், உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்" (ரோமர் 15:32). நமக்காக மட்டும் போராடி அதில் திருப்தி அடைந்துவிடாதபடி சகல பரிசுத்தவான்களுக்காகவும் ஜெபிக்கவேண்டியதன் அவசியத்தை பவுல் மீண்டுமாக நினைவுபடுத்துகிறார். எபே 1:16-ல் இடைவிடாமல்

பவுல் எபேசு சபையாருக்காக ஸ்தோத்திரம் பண்ணி தன் ஜெபங்களில் நினைத்துக்கொண்டிருந்தார் என்று அவர் அறிவித்ததைப் பார்த்தோம்.

விழித்திருந்து ஜெபம் பண்ணவேண்டும் என்கிறார் பவுல். மாற்கு *13:33*ல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் அவருடைய வருகையின் காலத்தை ஒருவரும் அறியாதபடியால், "விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்கிறார். "சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணவேண்டும்" *(லூக்கா 18:1)*. கெத்செமனே தோட்டத்தில் இயேசு கிறிஸ்து சொல்கிறார், "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது" *(மத் 26:41)*. மாற்கு *14:38*-லும் இதே காரியம் சொல்லப்பட்டிருக்கிறது.

ஜெபம் செய்வதில் நாம் ஒருபோதும் சோர்வடையக்கூடாது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார், "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்" *(லூக்கா 11:9,10)*.

**சுவிசேஷத்திற்காகச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதியாகிய நான் அதைப் பற்றிப் பேசவேண்டியபடி தைரியமாய்ப் பேசத்தக்கதாக (எபே 6:19)**

எபே *3:1*ல் தன்னை யூதரல்லாதவராகிய உங்கள் பொருட்டுக் கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டுண்டவன் என்றும், *4:1*ல் தன்னை கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவன் என்றும் அறிவித்த பவுல் இந்த வசனத்தில் தன்னுடைய சுவிசேஷ ஊழியத்தினிமித்தம் சங்கிலியால் கட்டப்பட்டிருப்பதை சற்று மனவருத்தத்துடன் அறிவிக்கிறார். மற்றபடி ரோம பேரரசுக்கு விரோதமாகவோ, சமுதாயத்துக்கு விரோதமாகவோ அவர் எந்த தவறும் செய்ததில்லை.

எபேசு சபையாரை தனக்காக ஜெபிக்கும்படியாக 19-21 ஆகிய வசனங்களில் வேண்டிக்கொள்ளும் பவுல், தான் விடுதலை பெறவேண்டும் என்பதற்காக அவர்களை ஜெபிக்கும்படியாக கேட்கவில்லை. காணிக்கை அனுப்பி தன்னையும் சக ஊழியர்களையும் தாங்கும்படியாகவும் வேண்டிக்கொள்ளவில்லை. எல்லாவிதமான எதிர்ப்புகள், அச்சுறுத்தல்கள் மத்தியிலும் தான் சோர்வடையாமல், இன்னும் தைரியமாக சத்தியத்தை சத்தியமாக அறிவிக்கும் பெலன் தனக்கு அருளப்படவேண்டும் என்பதற்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்கிறார். இணை நிருபமான கொலோ 4:3,4ல் சொல்கிறார், "கிறிஸ்துவினுடைய இரகசியத்தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிற நான் அந்த இரகசியத்தைக் குறித்துப் பேசவேண்டிய பிரகாரமாய்ப் பேசி, அதை வெளிப்படுத்துவதற்கு, திருவசனம் செல்லும்படியான வாசலைத் தேவன் திறந்தருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள்".

சுவிசேஷத்தை அறிவிக்கும் ஒரு ஊழியக்காரர் தைரியமாகவும், கலப்படமின்றியும், முழுமையாகவும் சொல்லவேண்டும். சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்றபடி, மக்களை பிரியப்படுத்தும் விதத்தில் போதிக்கும் ஊழியர்கள் இன்று பெருகிவருகிறார்கள். அப் 20:26, 27ல் பவுல் சொல்கிறார், "தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே, எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேனென்பதற்கு உங்களை இன்றையத்தினம் சாட்சிகளாக வைக்கிறேன்". அப் 20:20,21 வாசித்துப் பாருங்கள்.

ரோம சிறையதிகாரிகளால் தான் சங்கிலியால் கட்டப் பட்டிருந்தாலும் தன்னை ஒரு ஸ்தானாபதி என்று அழைக்க பவுல் தயங்கவில்லை. 2கொரி 5:20 அவர் சொல்கிறார், "நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்". ஒரு தேசத்தின் பிரதிநிதியாக, அந்த தேசத்தின் அதிபதியின் சார்பில் இன்னொரு நாட்டில் இருந்து

பணிபுரியும் அதிகாரியே ஸ்தானாபதி (தூதுவன், Ambassador) என்று அழைக்கப்படுகிறார்.

சிறைச்சாலையில் பவுல் சந்திக்கும் பாடுகள் அவருடைய உற்சாகத்தை எந்த விதத்திலும் குறைக்கவில்லை என்று பார்க்கிறோம். மற்றவர்கள் அவரை ஒரு சிறைக்கைதியாகப் பார்க்கலாம். சர்வ வல்லமையுள்ள தேவனுடைய தூதுவனாகவே பவுல் தன்னைப் பார்க்கிறார். அப் 28:20 ல் சொல்கிறார், "இஸ்ரவேலுடைய நம்பிக்கைக்காகவே இந்தச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிறேன்". ரோம சிறைகளில் கைதிகளின் கை விலங்கிடப்பட்டு, அந்த விலங்கு இரும்பு சங்கிலியோடு பொருத்தப்பட்டு, அது காவலறைக்கு வெளியே நிற்கும் அதிகாரியுடன் இணைக்கப்பட்டிருக்குமாம். இந்த நிலையிலும் சுவிசேஷத்தை அறிவிக்கும் வாஞ்சை பவுலுக்கு எந்த விதத்திலும் குறையவில்லை என்பதை அடுத்த வசனத்தில் பார்க்கப்போகிறோம்.

**நான் தைரியமாய் என் வாயைத் திறந்து சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு வாக்கு எனக்குக் கொடுக்கப்படும்படி எனக்காகவும் விண்ணப்பம் பண்ணுங்கள். (எபே 6:20)**

தான் வெகுசீக்கிரத்தில் ரோம பேரரசன் நீரோவின் நியாய சபையில் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்படவிருப்பதை அறிந்தவராக பவுல் பேசுகிறார். அந்த நேரத்தில் தான் எந்தவிதமான பயமும் இன்றி, துணிவோடு சத்தியத்தை அறிவிக்கும் வாக்குத்திறமை தனக்கு தந்தருளப்பட வேண்டும் என்பதே பவுலின் ஜெபக்குறிப்பு. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன்னுடைய ஊழியக்காரருக்கு இந்த உதவியை ஏற்கெனவே மத்தேயு 10:18-2ல் இவ்வாறு வாக்குப் பண்ணியிருக்கிறார், "அவர்களுக்கும் புறஜாதியாருக்கும் சாட்சியாக என்னிமித்தம் அதிபதிகளுக்கு முன்பாகவும், ராஜாக்களுக்கு முன்பாகவும் கொண்டுபோகப்படுவீர்கள். அவர்கள் உங்களை ஒப்புக்கொடுக்கும்போது: எப்படிப் பேசுவோம் என்றும், என்னத்தைப் பேசுவோம் என்றும் கவலைப்படாதிருங்கள்; நீங்கள் பேசவேண்டுவது

அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும். பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்".

நீரோ மன்னனுடைய சபையில் தான் விசாரிக்கப்படும்போதுகூட சுவிசேஷத்தின் இரகசியம் அறிவிக்கப்படவேண்டும் என்பதே பவுலுடைய வைராக்கிய வாஞ்சையாய் இருந்தது. விசாரணையின் முடிவில் தனக்கு என்ன நேரிடும், தான் விடுவிக்கப்படுவோமா அல்லது கொலை செய்யப்படுவோமா என்பது குறித்து அவர் எவ்விதத்திலும் பயப்பட்டதாகத் தெரியவில்லை. தன்னுடைய சாட்சியின் மூலம் ரோம பேரரசனும் மற்றும் அவனுடைய நீதிபதிகளும், அரசாங்க அதிகாரிகளும் சத்தியத்தை அறிந்துகொள்ளவேண்டும் என்பதே பவுலின் வாஞ்சை.

பவுலின் தைரியத்தைவிட கூடுதலான தைரியத்தோடு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை யாரேனும் அறிவித்திருப்பார்களா என்பது சந்தேகம் தான். செசரியா பட்டணத்தில் ஏரோதின் அரண்மனையில் காவலில் வைக்கப்பட்டிருந்தபொழுது பவுலை தேசாதிபதியான பேலிக்ஸ் தன் மனைவி துருசில்லாளுடன் சந்தித்த அந்தவேளையில் தன்னுடைய விடுதலையைக் குறித்து பவுல் எதுவும் பேசாமல் "நீதியையும் இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்து" பேசிய சம்பவம் அப் 24:25ல் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைய ஊழியக்காரர்கள் தன்னுடைய சபை மக்களிடமே இவற்றைக் குறித்து பேசத் தயங்கும் நாட்களில் நாம் இருக்கிறோம்.

அகிரிப்பா ராஜாவும் அவருடைய மனைவி பெர்னீக்கேயாளும் நியாயஸ்தலத்தில் ஆடம்பரத்தோடு பிரவேசித்து சபையார் முன்னிலையில் பவுலை விசாரிக்கிறார்கள். அப் 26:1-27ல் சபையில் நடந்த காரியம் விளக்கப்பட்டிருக்கிறது. சத்தியத்தைக் கேட்ட அகிரிப்பா இறுதியில் சொல்கிறார், "நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய்". அதற்குப் பவுல், "நீர் மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும், கொஞ்சங்குறைய மாத்திரம் அல்ல, இந்தக் கட்டுகள் தவிர, முழுவதும் என்னைப்போலாகும்படி தேவனை வேண்டிக்கொள்ளுகிறேன்"

*(வசனம் 28,29) என்கிறார். பவுலிடம் காணப்பட்ட வைராக்கியத்தில் ஆயிரத்தில் ஒருபகுதி இன்று ஊழியம் செய்கிற நம்மிடம் காணப்படுமானால்கூட இந்திய தேசம் தேவனுக்குச் சொந்தமானதாகியிருக்குமே.*

## பவுலின் வாழ்த்துதல் (6:21-24)

**அன்றியும், எனக்கடுத்த காரியங்களும், என் சுகசெய்திகளும் உங்களுக்குத் தெரியவரும்படிக்கு, அவைகளையெல்லாம் நமக்குப் பிரியமான சகோதரனும், கர்த்தருக்குள் உண்மையுள்ள ஊழியக்காரனுமாயிருக்கிற தீகிக்கு உங்களுக்கு அறிவிப்பான். (எபே 6:21)**

*ரோமாபுரியில் வருடக்கணக்கில் சிறைப்பிடிக்கப்பட்ட நிலையில் இருக்கும் அப்போஸ்தலனாகிய பவுலின் காரியங்களைக் குறித்து அறிந்துகொள்ள அவரால் ஆசியாவின் பல்வேறு பகுதிகளில் ஸ்தாபிக்கப்பட்ட விசுவாசிகளும் சபை மூப்பர்களும் வாஞ்சையுள்ளவர்களாய் இருக்கிறார்கள் என்பதை பவுல் நன்கு அறிவார். பிலிப்பியர் நிருபத்தில் அவர் சொல்கிறார், "சகோதரரே, எனக்குச் சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு, ஏதுவாயிற்றென்று நீங்கள் அறிய மனதாயிருக்கிறேன்" (1:12). தொலைவில் இருக்கும் கிறிஸ்தவர்கள் தன்னைப் பற்றி கொண்டிருக்கும் அன்பை உணர்ந்தவராய் அவர்களுக்கு நன்றி சொல்லும் விதத்தில் தன்னுடைய வாழ்த்துரையோடும், ஆசீர்வாதத்தோடும் இந்த நிருபத்தை பவுல் நிறைவுசெய்கிறார்.*

*பவுலின் மூன்றாவது சுவிசேஷ பயணத்திலும் அதற்குப் பின்னும் தீகிக்கு பவுலுடன் இணைந்து ஊழியம் செய்தவர் என்பதை அப் 20:4ல் இருந்து அறிந்து கொள்ளலாம். எபேசியர், கொலோசெயர் மற்றும் பிலேமோன் நிருபங்களை ரோமாபுரியில் இருந்து இவர் மூலமாக பவுல் சபைகளுக்கு அனுப்பினார் என்று பார்க்கிறோம். தன்னுடைய நிருபங்களை பத்திரமாக எடுத்துச்செல்வான் என்பது மட்டுமல்ல, தீகிக்கு தனக்கு மிகவும் நெருக்கமானவன் என்பதால் தன்னைக் குறித்த*

சகல காரியங்களையும் உண்மையாக அவர்களுக்கு அறிவிப்பான் என்ற முழுநம்பிக்கையும் பவுலுக்கு இருந்தது. கொலோ 4:7ல் அவர் சொல்கிறார், "பிரியமான சகோதரனும், உண்மையுள்ள ஊழியக்காரனும், கர்த்தருக்குள் எனக்கு உடன்வேலையாளுமாயிருக்கிற தீகிக்கு என்பவன் என் செய்திகளையெல்லாம் உங்களுக்கு அறிவிப்பான்".

**நீங்கள் எங்கள் செய்திகளை அறியவும், அவன் உங்கள் இருதயங்களுக்கு ஆறுதல் செய்யவும், அவனை உங்களிடத்தில் அனுப்பினேன். (எபே 6:22)**

2தீமோ 4:12 பவுல் சொல்கிறார், "தீகிக்குவை நான் எபேசுவுக்கு அனுப்பினேன்". தன்னுடைய நிருபங்களை பத்திரமாக எடுத்துச்சென்று சபையாருக்குக் கொடுப்பான் என்பது மட்டுமல்ல, தன்னைப் பற்றிய காரியங்களை அவன் அறிவிப்பதால் அவர்கள் ஆறுதல் அடைவார்கள் என்ற நிச்சயம் பவுலுக்கு இருந்தது.

**பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், சகோதரருக்குச் சமாதானமும் விசுவாசத்தோடு கூடிய அன்பும் உண்டாவதாக. (எபே 6:23)**

20-வது வசனத்தில் தனக்காக வேண்டுதல் செய்யும்படி எபேசு சபையாரைக் கேட்டுக்கொண்ட பவுல் நிருபத்தின் கடைசி இரண்டு வசனங்களில் தன்னுடைய பழக்கத்தின்படி சபையாருக்காக வேண்டுதல் செய்கிறார். பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் அவர்களுக்கு சமாதானமும், விசுவாசத்துடன் கூடிய அன்பும் அருளப்படவேண்டும் என்று ஜெபிக்கிறார்.

இந்த மேலான அருட்பண்புகளை தேவன் ஒருவரால்தான் மனிதனுக்கு வழங்கமுடியும். சமாதானம் என்ற வார்த்தை இந்த நிருபத்தில் 1:2; 2:14, 15, 17; 4:3; 6:15 ஆகிய இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அன்பு என்ற வார்த்தை 1:15, 4:2, 15, 16; 5:25,28,33 போன்றவற்றில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பொதுவான

அன்பைக் குறித்து *1:4; 2:4; 3:19; 5:2* ல் வாசிக்கிறோம். இந்த வசனத்தில் விசுவாசத்துடன் கூடிய அன்பைக் குறித்து பவுல் பேசுகிறார். எபேசு சபையார் ஒவ்வொருவரும் தனிப்பட்ட விதத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் பிதாவாகிய தேவனிடம் கொண்டிருக்கும் விசுவாசத்தின் பிரகாரம் இந்த அன்பு உருவாகிறது. அவர்களில் கிரியை நடத்துகிறது.

**நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் அழியாத அன்புடனே அன்புகூருகிற யாவரோடும் கிருபை உண்டாயிருப்பதாக. ஆமென். (எபே 6:24)**

இணைநிருபமான கொலோசெயர் இந்த வசனத்துடன் நிறைவுபெறுகிறது. "பவுலாகிய நான் என் கையினால் எழுதி, உங்களை வாழ்த்துகிறேன். நான் கட்டப்பட்டிருக்கிறதை நினைத்துக்கொள்ளுங்கள். கிருபை உங்களோடிருப்பதாக" *(4:18)*. எபேசியர் நிருபத்தின் துவக்கத்திலேயே கிருபையை ஆசீர்வாதமாக அறிவித்த பவுல் *(1:2)*, நிருபம் முழுவதும் கிருபையின் உபதேசத்தையே வழங்குகிறார்.

மனித இரட்சிப்பு கிரியைகளினாலே அல்ல, கிருபையினால் உண்டாகிறது என்ற சத்தியம் வேறு எந்த வேதபுத்தகத்திலும் இவ்வளவு வெளிப்படையான முறையில் அறிவிக்கப்படவில்லை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கிருபை என்ற வார்த்தையை ஒருமுறை கூட வேதத்தில் சொல்லவில்லை என்றாலும் அவரிடமிருந்து கிருபையுள்ள வார்த்தைகள் புறப்பட்டன என்று பார்க்கிறோம் *(லூக்கா 4:22)*. நிருபத்தின் முடிவிலும் சபையாருக்கு கிருபையே ஆசீர்வாதமாக அறிவிக்கப்படுகிறது. 2கொரி, கொலோ, கலா, பிலிப், 1தெச, 2தெச, 1தீமோ, 2தீமோ, தீத்து, பிலேமோன், எபிரெயர் ஆகிய நிருபங்களிலும் கடைசி வசனம் கிருபையையே ஆதாரமாகக் கொண்டதாக இருக்கிறது.

## முடிவுரை

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எபேசியர் நிருபத்தின் விளக்கவுரையை வாசித்து, தேவனுடைய வார்த்தையை தியானித்த உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்.

இந்த நிருபம் தேவனை முழுமையாக அறியாத புறஜாதியினருக்கு கிறிஸ்து இயேசுவை மட்டுமே வெளிப்படுத்துவதாக இருக்கிறது. அவருடைய இரத்தத்தினால் மட்டுமே பாவமன்னிப்பாகிய இரட்சிப்பு மனித இனத்துக்கு உண்டானது (1:7). பரலோகத்திலும், பூலோகத்திலும் உள்ள சகலமும் ஏற்றவேளையில் கிறிஸ்துவின் ஆளுகைக்குள் கொண்டுவரப்படும் (1:9). சபையார் தேவனுடைய சுதந்தரராகும்படி கிறிஸ்துவுக்குள் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் (1:12). இன்று தேவன் அவரை எல்லாருக்கும் மேலாக உயர்த்தி, தனது வலதுபாரிசத்தில் உட்காரவைத்திருக்கிறார் (1:20,21). கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு, எல்லாவற்றையும் எல்லாவற்றினாலும் நிரப்புகிற கிறிஸ்துவே தலையாக இருகிறார் (1:23).

தேவனை விட்டு வெகுதொலைவில் இருந்த புறஜாதியாராகிய நாம் கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக பரிசுத்தமான தேவனுடன் உறவு கொள்கிறோம். தன்னுடைய சரீரத்தையே கிறிஸ்து ஒப்புக்கொடுத்ததினால் யூதர்களுக்கும், யூதர் அல்லாதவர்களுக்குமிடையே இருந்த பகை என்ற சுவர் உடைக்கப்பட்டாயிற்று (2:11-18). இதன் விளைவாக உருவாகிய தேவன் வாசம் செய்யும் ஆலயமாகிய திருச்சபைக்கு கிறிஸ்துவே மூலைக்கல்லாக இருக்கிறார் (2:19-22).

இன்று கிறிஸ்துவின் அளவற்ற ஐசுவரியம் சுவிசேஷமாக உலகமெங்கும் அறிவிக்கப்பட்டு வருகிறது (3:8). அவரை விசுவாசிக்கிறவர்கள் தைரியத்தோடும திடநம்பிக்கையோடும் தேவனிடத்தில் சேரமுடியும் (3:12). கிறிஸ்துவின் அன்பின் மேன்மையை மனித ஞானத்தினால் அறிந்து கொள்ளமுடியாது (3:17-19).

தன்னுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக கிறிஸ்து நம் ஒவ்வொருவருக்கும் கிருபையையும் வரங்களையும் அருளிச்செய்கிறார் (4:7-11). நம்முடைய அன்றாட வாழ்க்கையில் அவரே முன்மாதிரியாக இருக்கிறார். ஒரு குடும்பத்தில் கணவன் மனைவி எப்படி இருக்கவேண்டும் (5:22-23), தகப்பன் பிள்ளைகளிடையே உறவுமுறை எப்படி இருக்கவேண்டும் (6:1-4), சமுதாயத்தில் எஜமான், வேலையாட்கள் எவ்வாறு ஐக்கியங் கொண்டிருக்கவேண்டும் (6:5-9) என்பதை பவுல் அறிவிக்கிறார்.

கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய வாழ்க்கையில் எதிர்கொள்ளும் ஆவிக்குரிய போராட்டமும், அதை எதிர்கொள்ளும்விதமும் எபே 6:11-18ல் விவரிக்கப்படுகிறது. இந்த முக்கியமான வேதபகுதியை எழுதிக்கொண்டிருக்கும்போது எங்கள் குடும்பம் எழுத்தின்படி இந்தப் போராட்டத்தைச் சந்தித்தது. ஆனாலும் தேவன் ஆயத்தப்படுத்தி வைத்திருக்கும் சர்வாயுத வர்க்கங்களின் உதவியுடன் பொல்லாத ஆவியின் சேனைகளை ஜெயங்கொள்ள தேவன் உதவிசெய்தார். தேவன் மகிமைப்படுவாராக.

கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாக, ரோமாபுரியில் சிறைச்சாலையில் இருக்கும் வேளையிலும் சபை விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சியில் எந்த அளவுக்கு கரிசனை பவுலுக்கு இருந்தது என்பதைக் கவனியுங்கள். அவர்களுக்காக இடைவிடாமல் ஸ்தோத்திரம் பண்ணி ஜெபிக்கிறார் (1:16), முழங்கால்படியிட்டு ஜெபிக்கிறார் (3:15). அவர்களுடைய உலகரீதியான ஆசீர்வாதங்களுக்காக பவுல் ஜெபிக்கவில்லை என்பதையும் கவனியுங்கள்.

"வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த

நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாயும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தத்துக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" (2தீமோ 3:16,17).

பரிசுத்த ஆவியானவர் இந்த நற்கிரியைகளை நம்மில் நடப்பிக்கவேண்டும் என்றால், வேத வாக்கியங்களை மேலோட்டமாக ஏதோ ஒரு கடமை உணர்வுடன் வாசித்தால் மட்டும் போதாது. அதில் பிரியமாயிருக்கவேண்டும் (சங் 1:2). இரவும் பகலும் அதில் தியானமாயிருக்கவேண்டும் (சங் 1:2). அதை உட்கொள்ளவேண்டும் (எபே 15:16). அதைப் புசிக்கவேண்டும் (எசே 3:1-4). அதைப் போதனையாக ஏற்றுக்கொள்ளவேண்டும் (ரோமர் 15:4). அதைக் கைக்கொண்டு அதின்படி செய்யவேண்டும் (உபா 17:19).

இந்த கடைசிநாட்களில் பல சபைகளில் வேதவசனங்கள் வாக்குத்தத்தங்களாக மட்டுமே அறிவிக்கப்பட்டு வருகின்றன. அது போதாது. "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக" (கொலோ 3:16) என்கிறார் பவுல். அப்போது மட்டுமே நம்முடைய வாழ்க்கையிலும், குணநிலையிலும் மாற்றங்கள் உண்டாகும். பரிசுத்தம், அன்பு, ஒழுக்கம், உண்மை, நேர்மை, பொறுமை, சமாதானம், பணிவு, மேட்டிமையின்மை, ஆடம்பரமின்மை ஆகிய கனிகள் உருவாகும். பிரசங்கிக்கிறவன் அல்ல, பிரசங்கத்தைக் கேட்பவன் அல்ல, கிறிஸ்துவின் வழியில் நடக்கிறவனே கிறிஸ்தவன்.

இந்த விளக்கவுரையை வாசித்து தேவ கிருபையின் செயலாற்றலை உணர்ந்துகொண்டவர்களாய், அநேக காரியங்களைக் கற்றுக்கொண்டிருப்பீர்கள் என்று கிறிஸ்துவுக்குள் நிச்சயித்திருக்கிறேன். கிறிஸ்துவின் இரட்சிப்பின் மேன்மையையும், அதின் நோக்கத்தையும் அறிந்துகொண்ட உங்களுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆசீர்வாதங்கள் உண்டாயிருப்பதாக. ஆமென்.

- பிரிசில்லா தியாகராஜ் -



**Dr. P. V. THIAGARAJ**

சகோதரன் பி.வி. தியாகராஜ் எழுதியிருக்கும் எபேசியர் – விளக்கவுரை என்ற இந்த அருமையான வேத ஆராய்ச்சி நூலை திருச்சபைக்கு அறிமுகப்படுத்துவதில் பெறும் மகிழ்ச்சி அடைகிறேன்.

2தீமோ 2:15ன்படி சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து போதிக்கிற ஊழியத்தை சகோ. பி.வி. தியாகராஜ் இந்த புத்தகத்தில் செய்திருக்கிறார். ஏற்கெனவே அவர் எழுதி வெளியிட்ட வெளிப்படுத்தின விசேஷம், ரோமர் விளக்கவுரைகள், மலைப்பிரசங்கம், 1 யோவான், வேத பாடம், பரிசுத்த ஆவியானவர், முதலிய ஆவிக்குரிய புத்தகங்கள் சபைக்கு மிகுந்த ஆசீர்வாதமாய் அமைந்திருக்கின்றன.

எஸ்ராவைப் போல் வேதத்தை ஆராய்ந்து போதிக்கும் ஊழியர்கள் குறைந்து கொண்டே போகிறார்கள். சகோ. பி.வி. தியாகராஜ் இந்த புத்தகத்தில் எபேசியரில் உள்ள 155 வசனங்களையும் தனித்தனியாக, நிதானமாக, தெளிவாக, யாவரும் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் விளக்கம் தந்திருக்கிறார். ஏசாய 34:16ன்படி சுமார் மூவாயிரம் ஜோடி வசனங்களின் உதவியுடன் சத்திய ஆலோசனைகள் கலப்படமின்றி அறிவிக்கப்படுகிறது. ஆசிரியரின் முயற்சி பாராட்டுக்குரியது.

ஜெபத்தோடு இந்தப் புத்தகத்தை வாசித்து மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துங்கள்.

Rev. சாமுவேல் தினகரன்
நற்செய்தி A.G. சபை, மும்பை – 400 093.

**EPHRATH PUBLICATIONS**

54/A, Lakshmi Apartments, Sangam Colony, Kottivakkam, Chennai - 600 041, India.
Ph. : 044-24925464, Mob. : +91-98415 85547, E-mail : v_thiagaraj@yahoo.com